திருவாசகம் - விளக்கவுரை

(சிவக்குடில் விளக்கம்)



மூன்றும் பகுதி

உரையாசிரியர்
சி.சு. கண்ணுயிரம்

ஸ்ரீ சித்தர் ஞான பாடசாலை வெளியீடு

திருவாசகம் - விளக்கவுரை

(சிவக்குடில் விளக்கம்)

மூன்றும் பகுதி

உரையாசிரியர்
சி.சு. கண்ணுயிரம்

ஸ்ரீ சித்தர் ஞான பாடசாலை வெளியீடு : எண் - 16
முதற்பதிப்பு : 2005

உரையாசிரியர் :
சி. சு. கண்ணுயிரம்

விலை ரூ. **130 /-**

கிடைக்கும் இடம் :
சிவக்குடில்
நேத்தாஜி நகர்
கோவைப்புதூர்
கோயம்புத்தூர் – 641 042

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்



எங்கள் குருதேவர்
கபிலே மாமுனிவர்
சர்வோத்தம சச்சிதானந்த நாதேசுவர சுவாமிகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

திருச்சிற்றம்பலம்

"கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன்
கண்கள் களிகூர
எண்ணா திரவும் பகலும்நான் அவையே
எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன்
கழற்கே புகுமாறும்
அண்ணா எண்ணக் கடவேனோ அடிமை
சால அழகுடைத்தே."

திருச்சிற்றம்பலம்

"கருவெளிக்குப் புறனாகிக் காரணமெலாங் கடந்துநின்ற
பெருவெளிக்கு நெடுங்காலம் பித்தாகித் திரிகின்றோர்
குருவெளிக்கே நின்றுழலக் கோதறநீ கலந்ததனி
உருவெளிக்கே மறைபுகழு முயர்வாத வூர்மணியே"

(இராமலிங்க சுவாமிகள்)

திருச்சிற்றம்பலம்

'சித்தாந்த பானு', 'சிவஞான சரசுவதி', 'சேக்கிழார் பாத சேகரன்', சிவத்திரு சி.சு. கண்ணாயிரம் அவர்கள் எழுதி வரும் 'சிவக்குடில் விளக்கம்' எனும் திருவாசகப் பேருரையின் மூன்றாவது பகுதி இப்பொழுது வெளிவருகின்றது.

சிவபுராணம், கீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல் ஆகியவற்றின் உரை விளக்கங்கள் அடங்கிய முதற்பகுதி 2000-லும், திருச்சதகம் முழுவதற்குமான உரை விளக்கம் 2002-லும் வெளிவந்தன.

மூன்றும் பகுதியில் நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம் ஆகியவற்றின் உரை விளக்கம் அடங்கியுள்ளது.

முதற்பகுதியின் சிறப்பைப் பாராட்டி அன்பர்கள் பலர் எங்களுக்குக் கடிதங்கள் எழுதினர். அவற்றுல் சிலவற்றை வெளியிட்டுள்ளோம். முதற்பகுதியைக் காட்டிலும் இரண்டு, மூன்று பகுதிகளில் உரைவிளக்கம் நுட்பமும் திட்பமும் வாய்ந்து பயில்வோருக்குப் பெரும் பயன் நல்குவதாக அமைந்துள்ளது. வெளிற்றுரைப் பயிற்சியே உடையாருக்கு இவ்வுரையின் நுட்பமும் அகலமும் எட்டற்கு அரிதாகவே இருக்கும். ஆயினும் திருமுறைப் பயிற்சியில் ஈடுபாடும் திருவாசகத்தின் மீது ஆராக்காதலும் வாய்ந்துள்ளோர் இவ்வுரைப் பகுதிகளில் மிக்க ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்த உரையில் முதலிரு பகுதிகளை நாங்கள் திருவாவடுதுறை ஆதீனம் குரு மகா சந்நிதானம் 23-ம் பட்டத்தில் இப்பொழுது அருளாட்சி புரியும் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிகர் அவர்களுக்குச் சமர்ப்பித்திருந்தோம். அவர்கள் உரையாசிரியரையும் அவர் புரிந்து வரும் தமிழ், சைவத் தொண்டுகளையும் முன்பே நன்கு அறிந்திருந்தார்கள். 18.6.2003 -ல் திருப்பேரூர் முகாமில் பேரூர் வேலப்ப தேசிகர் சமாதிக் கோயில் குடமுழுக்கில் நம் உரையாசிரியருக்கு "சேக்கிழார் பாத சேகரன்" என்று பட்டம் வழங்கி வாழ்த்தினுர்கள். எங்கள் வேண்டுகோளுக்கு இரங்கி 19.6.2003-ல் சிவக்குடிலுக்கு எழுந்தருளிச் சிறப்பளித்தார்கள்.

உரையாசிரியர், தம்முடைய விளக்கத்தை அளிப்பதுடன் பிற அறிஞர்களும் பெரியோர்களும் கூறிய பொருள்களையும், விளக்கங்களையும் உரிய இடங்களில் எடுத்துக் காட்டுகின்ருர்.

அவை பொருத்தமில்லாத போது தக்க காரணம் காட்டி "இவ்வுரையை விலக்குக" என அறிவுரை கூறுகின்ருர். பெயர் கூறி உரைப்பொருளுக்கு உடன்படுவதையும் பெயர் கூருமல் மாறுபட்ட உரையை விலக்கி ஒதுக்குவதையும் இவ்வுரையாசிரியர் தம்முடைய நாகரிகமாகக் கொண்டுள்ளார். முன்னேய "சிவக்குடில் விளக்கம்" இருபகுதிகளிலும் இந்த நாகரிகம் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டது. "சிவக்குடில் விளக்கம்" மூன்ரும் பகுதியில் இந்தக் கடைப்பிடி சற்றே நெகிழ்ந்துள்ளது. ஏனேய உரையாசிரியர்கள் மாட்டு இது கடைப்பிடிக்கப்படினும் ஆங்காங்குத் திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியர் டாக்டர். ஜி.யூ. போப் அவர்களின் பெயர் கூறி உரையாசிரியர் மறுக்கின்ருர். அதற்குக் காரணமும் உண்டு. அதைத் தமிழ் உலகம், குறிப்பாகப் போப்பைப் பாராட்டும் சைவர்கள் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

மேலே நாட்டுத் தமிழறிஞர்கள் பல்லோருள்ளும் டாக்டர். ஜி.யூ. போப் அவர்களின் மீது தமிழர்களுக்கு, அதிலும் தமிழ்ச் சைவர்களுக்கு ஒரு பாசம் உண்டு. அதற்குத் தக்க காரணமும் உண்டு. மேலே நாட்டுத் தமிழறிஞர்கள் தங்களுடைய மதத்தினேத் தமிழர்களிடையே பரப்பவே தமிழைப் பயின்றனர். டாக்டர். ஜி.யூ. போப்பும் அவர்களேப் போலவே தமது மதத்தைப் பரப்பவே தமிழ் கற்ருலும், சைவத்தமிழை, குறிப்பாகத் திருவாசகத்தை, மேலே நாட்டவருக்கு அறிமுகப்படுத்திஞர். தமிழகத்தின் உண்மைச் சமயம் சிவநெறியே என்பதைத் திடம்பட எடுத்து மொழிந்தார். ("Caivism is the real religion of the South India and North Ceylon; and the Caiva Siddhanta philosophy has and deserves to have, far more influence than any other") தாம் அறிந்து போற்றும் மேலேநாட்டு மெய்ஞ்ஞானிகளான தவத்திரு. பால், அசிசி நாட்டுத் துறவி தவத்திரு. பிரான்சிஸ் போன்ரேரின் வாழ்வையும், வாக்கையும்

திருவாதவூர்ப் பெருமானிடம் கண்டு வணங்கினர். (In the Whole legendary history of this sage,.... ... ... there stands out a real historical character, which seems to be a mixture of that of St. Paul and of St. Francis of Assisi. Under other circumstances what an apostle of the East might he have become!")

இதுவரைக்கும் தமிழ்ச் சைவர்களுடைய தனிச் சொத்தாக இருந்துவந்த திருவாசக நிதிக்குகையை, போப் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு மேலைநாட்டு தத்துவ அறிஞர்களுக்குத் திறந்து விட்டது என்றும் சொரணை கெட்ட தமிழர்களை வெட்கச் செய்ததென்றும் தங்களுடைய பழமை குறித்து அவர்களைப் பெருமைப்படக் கொள்ளச் செய்தது எனவும் திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் பூரித்து மகிழ்ந்தார். (".. .. the genuine and gigantic efforts of Dr. Pope in uttering 'Open Seasame' to throw open the doors of the Treasure - cave of Thiruvachakam to the cultured Savants of the West/ stung the Tamils of their callousness and startled them into an awakening and appreciation of their past") மேலும், ஆங்கிலம் உலகப் பொது மொழியாதலினுல், போப் அவர்கள் திருவாசகத்தை மொழிபெயர்த்ததின் வாயிலாக நம்முடைய திருவாதவூரடிகளைப் பல நாடுகளிலும் உள்ள பன்மொழி அறிஞர்களுக்கும் அறிமுகப்படுத்தினர் என்றும் இதைக் காட்டிலும் திருவாசகத்தையும் மணிவாசகரையும் உலகறியச் செய்வதற்கு வேறு சிறந்த வழி இல்லை என்றும் கருதினர். ("It has introduced our Saint to a far wide circle of students and a greater variety of nationals than any other effort by anyone else could have possibly ever done")

திருவாசகமணி அவர்கள் மிக்க இறும்பூதுடன் ஒரு நிகழ்ச்சியை நினைவு கொள்ளுகிறார். "என் நல்லூழ் ஏதுவாக "இறைவழிபாடு" (Prayer) என்னும் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் ஒன்றை வாசிக்கும் பேறு கிட்டியது. அந்நூலின் மூலம் செருமானிய மொழி. செருமானிய மொழியிலிருந்த மூல நூலின் ஆசிரியர் ப்ரடெரிக் ஈலர் (Frederich Heiler). என்னுடைய மந்திரமொழியாம் மணிவாசகப் பெருமானுடைய திருநாமம் அந்த நூலில் ஐந்தாறு இடங்களில் எடுத்து ஆளப்படுதலைக் கண்டவுடன் என் மூச்சே நின்றுவிடும் போன்ற இன்பத் திகைப்பு ஏற்பட்டது. அந்தப்புத்தகம் முதல் உலகப் போருக்கு முன் எழுதப்பட்டு, முதல் உலகப் போர் முடியும்போது வெளிவந்தது. அந்த நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு 1932 - ல் தான் வெளிவந்தது. நம் அடிகளை அச்செருமானிய அறிஞருக்கு அறிமுகம் செய்வித்த நூல் எதுவாக இருக்க முடியும்? ஐயத்திற்கு இடமின்றி அது டாக்டர். ஜி.யூ. போப் அவர்களின் திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பே. அந்தக் கிறித்துவ சமய இறைபணியாளர், தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய அருந்தொண்டுக்கு தமிழ்ச் சைவவுலகம் எம்முறையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுவது? அப்பெருந்தகையின் பெயர் தமிழ் மக்களின் நெஞ்சில் நீங்காது நின்று நிலவுவதாக!"

அருட்டிரு. ஜி.யூ. போப் அவர்களின் தமிழ்ப் பணியையும் அதை நினைய திருவாசகமணிக்கு விளையும் உள்ள நெகிழ்ச்சியும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இஃது ஒரு முகம். இந்த முகத்தைக் கண்ட சைவர்களாகிய நாம் இஃதோடு இன்னொரு முகத்தையும் கட்டாயம் காண வேண்டும்.

அருட்டிரு. ஜி.யூ. போப் அவர்கள் நீத்தல் விண்ணப்பத்திற்கு ஓர் அறிமுக உரை வரைந்துள்ளார்கள். நீத்தல் விண்ணப்பம் முழுவதும் ஐம்புல மயக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் தெய்வத்தின் துணை வேண்டி மானுடம் எழுப்பும் உணர்ச்சி

மிகுந்த பாடல்கள் கொண்டது என்று கூறி இவ்வுணர்ச்சி மிக்க பாடல்கள் எழுந்த வரலாற்றைக் கூறத் தொடங்கினுர்.

குருவாக வந்து தம்மை ஆட்கொண்ட சிவன் தம்மை இருத்திப் பிரிந்தமையை ஆற்ருத அடிகள் திருச்சதகம் நூறுபாடல்களேயும் அருளிய பின் பாண்டி நாட்டில் உள்ள சிவத்தலங்களேக் கண்டு வழிபடல் மேற்கொண்டார். முதலில் உத்தரகோசமங்கைக்கு எழுந்தருளினுர். அங்கு நீண்ட காலம் தங்கினுர். திருப்பெருந்துறையிலும் தாம் இங்கு வருவதற்கு முன்பு மதுரையிலும் தாம் அனுபவித்த இறையனுபவத்திற்கு எதிர்விளேவான சோதனேகள் இங்கு அடிகளுக்கு விளேந்தன. இளமையும் பாண்டிய மன்னனின் தனிப்பட்ட பேரன்பும் பெற்றிருந்த அடிகள் இதுவரை செல்வச் செழிப்பில் வளமாக அதிகாரத்துடன் வாழ்ந்திருந்தார். இப்பொழுது அனேத்தையும் துறந்த துறவியின் நிலேயில் இருந்தார். சிவத்தைத் தவிர அனேத்தையும் துறந்து விட்ட சைவ சன்னியாசியாகப் பிச்சையேற்று வாழ்ந்து தனிமையிலும், தியானத்திலும் பகலேயும் இரவையும் கழித்தார். மதுரையில் அமைச்சராக இருந்தபோது பெற்றிருந்த சுகபோக வாழ்க்கை அனுபவ நினேவும் உத்தரகோச மங்கைத் திருக்கோயிலில் இருந்த சூழலும் அடிகளுடைய புதிய தவவாழ்க்கைக்குச் சோதனேயாக இருந்தன. அவர் விரும்பிய உயர்ந்த குறிக்கோளே அங்கு அவர் எட்ட முடியவில்லே.

இன்று உள்ளதைப் போலவே அன்றும் கோயிலின் சூழல் ஒழுக்கக் கேட்டிற்குத் தூண்டுவதாகவே இருந்ததேயன்றி அவருடைய உயர்ந்த பத்திக்கு ஆதரவாக இருக்கவில்லே. நீத்தல் விண்ணப்பத்தில் உள்ள பாடல்களின் அடிப்படையில் அவர் இரு நிலேகளில் வருந்தி வந்தார் என அறிகிருேம். ஒன்று, அந்தக் கோவிலில் கூட்டம் கூட்டமாக இருந்த தேவரடியார்களாகிய பெண்களின் தொடர்புகளால் ஏற்பட்ட கவர்ச்சி; இந்து

உரையாசிரியர்கள் இச்செய்திக்கு வேறு சமாதானம் கூறலாம். ஆனுல் அடிகளே தாம் மேற்கொண்ட உறுதியில் பலமுறை தவறிவிட்டதாகக் கூறி வருந்துகிருர். அடிகள் பட்ட மற்ருெரு வருத்தம், தம்முடைய துயரிலிருந்து விடுதலை அளிக்க இயலாத பொருளற்ற சடங்குகளைச் செய்ய வேண்டியிருந்தது என்பதாம். (From the evidence of these verses, we conclude that there were two things from which he suffered. One of these was the allurements of the female attendants. who in bands pertained to the temple. We have noticed this elsewhere. Hindu commentators will often find mystic meanings, which are harmless, - if unfounded. Again and again in this and other poems he deplores the way in which he has been led to violate his vow. The other difficulty, often reffered to, was the way in which mere ceremonial acts had to be performed, affording no relief to his conscience.) அருட்டிரு. ஜி.யூ. போப்பு அவர்களின் இந்தக் கருத்தை, "தவறுநலம் பொருளின்கட் சார்வாராய்ந் தறிதல்" இலராய், 'பலர்புகழில் ஏத்தும்' சைவப் பெருமக்கள் அறிவரோ? அறிந்தால், 'தமக்கென வொன்றின்றி' அவருக்குப் புகழ்மாலை தொடுத்துத் திருவாதவூரடிகளை இழிவுட்படுத்துவரோ?

இந்த இழிவைப் பிறர் அறியாதொழியினும், தம்முடைய திருவாசகம் - ஆங்கில மொழிபெயர்ப்பைப் போப்பையருக்குக் காணிக்கையாக்கி மகிழ்ந்த திருவாசகமணி அவர்கள் நன்கு அறிந்திருந்தார். ஆனுல் இதைப் பற்றிய ஆய்வு இப்பொழுது வேண்டா எனக் கூறி, இந்துக் கோயில்களில் சில காலங்களுக்கு முன் நிலவி வந்த தேவதாசி முறையின் இழிவு குறித்துத் தம் கருத்தை மொழிந்து ஒதுங்கினுர்.

இறுதியாகத் தம்முடைய கருத்தாகத் திருவாசக மணி ஒன்று குறித்தார். பொதுவான இத்தகை ஒப்புதல் மொழியன்றி, இந்நூலில் எங்காவது, அடிகள் தாம் மேற்கொண்டு ஒழுகிய உறுதியான ஒழுக்க நெறியினின்றும் வழுவியதற்கோ, வழுவியதாக ஒப்புக் கொண்டதற்கோ சான்றுண்டோ? எனில், இல்லவே இல்லை என நாம் தைரியமாகக் கூறலாம் என்றார், (In spite of few roses and jasmines the Doctor has showered on our saint, the fact still remains that he has repeated here also his previous view in the fifth chapter regarding Manickkavasakar's moral slips and violation of vows. We need not now enter into any detailed examination of the correctness or otherwise of his opinion.. .. .. .. "From the evidence of these verses" our Doctor arrives at the conclusion about our saint. But, save those singular words of general confessions of sinfulness which our saint uses here as elsewhere, is there any single evidence to prove that actual victimaisation of our saint by any of the evil forces around him? We dare say, "No".)

நீத்தல் விண்ணப்பம் 2-ஆம் பாடல் உரையில், "கொவ்வைச் செவ்வாய் விள்ளேன் எனினும்" எனும் தொடருக்கு விளக்கம் கூறும் இடத்தில் நம் உரையாசிரியர், போப் கூறும் பழிமொழி பொருளற்ற புறங்கூற்றுதலை நாகரிகமாகச் சுட்டிக் காட்டி ஒதுக்குகிறார். "இது வினைக்கு ஈடாகப் பிறந்து இறந்து உழலும் உலகமக்கள் மகளிர் இன்பத்தில் திளைத்து, பிறவிப் பயனைப் பெறுமல் மேலும் வினைகளை ஈட்டிக் கொள்ளும் இயல்பை நம் அடிகள் தம்மேல் ஏற்றிக் கொண்டு கூறியதாகும். இதற்கு இவ்வாறன்றி, நம் அடிகளே மகளிர் தொடர்பு கொண்டிருந்தார் என்றும் அவ்வாறிருப்பினும் விழுத்தொழும்பில் நின்றதால் தம்மைக் கைவிடலாகாது என்றும் நம் அடிகளார் மனத்தளவில்

மகளிரை நினைந்திருந்தார் என்றும் பல முன்னுரையாளர்கள் உரைத்தனர். அவற்றை எல்லாம் மறுத்து நம் உரையாசிரியர் நம் அடிகள் ஆங்காங்கு மகளிர் தொடர்பு பற்றி கூறிய பற்றை - முன்னம் 44-ம் பாடலுரையில் (பகுதி 2. பக்கம் 230 முதல் 235 முடிய, விளக்கி அமைதிப்படுத்தியுள்ளது நினைக. ஞானாசிரியன் ஆட்கொண்ட பின். உலகியல் அனைத்தையும் துறந்து, பின் அவனை விட்டுப் பிரிந்த பின் உலக வாழ்வையே வெறுத்து வீடு பேறு வேட்டது நம் அடிகளின் நிலை. அதனை அறியாதும் மரபு தெரியாதும் கூறும் இவையெல்லாம் உரைகளல்ல என்று ஒதுக்குக (பக்கம் 7) என நம் உரையாசிரியர் கூறுவது நம்முடைய நிலைப்பாடு ஆகும்.

போப்பின் கருத்து அவருடைய மரபையொட்டி எழுந்ததுவாகும். கிறித்துவ Saint களில் பலர் Sinner களாக இருந்து Saint ஆனவர்களே என்பது அவர்கள் கொள்கை. இந்த மரபில் எழுந்தது தானே "Every Saint had a past and every sinner has a future" (Imitation if Christ) இந்தக் கோட்பாடு நமக்கு ஒவ்வாத ஒன்று. ஆன்மாக்களில் விஞ்ஞானகலர் இரு பிரிவினார். சகலர், பிரளயா கலர்களாகப் படைக்கப் பெற்றுத் தவத்தால் விஞ்ஞானகலராக உயர்ந்தோர் ஒருவகை. அநாதி கேவலத்தினின்றும் முதற் படைப்புக்கு வரும் பொழுதே விஞ்ஞானகலர்களாகவே படைக்கப் பெற்றோர் மற்றொரு வகை. இவர்களுள்ளும் "பக்குவர்", "அபக்குவர்" என இருபிரிவினர் உளர். பக்குவர், படைப்புக்கு வந்த உடனே முத்தியடைவர். அபக்குவர் நாத தத்துவத்திலுள்ள புவனங்களில் தங்கிச் சிவ தீக்கை பெற்று நாதமூர்த்தியை வழிபட்டு வந்து அதிகார மல வாசனையுமின்றிச் சூக்குமலய வாசனை மட்டுமே உள்ளவர்களாகத் தவத்தில் ஈடுபட்டிருந்து அந்த ஊழியின் முடிவில் முத்தியடைவர். இப் "பக்குவர்" "அபக்குவர்" இருவகையினருக்கும் தீவினையாளராக இருந்த இறந்த காலம் எவ்வாறு இருந்திருக்க முடியும்? இனிக் கிருத்துவர்களின் இந்தக் கோட்பாடு அவர்களுக்கேனும் பொருந்துமா? என்று பார்ப்போம். அவர்களில் சிலர் வாழ்நாள் முழுவதும் தீவினையாளர்களாகவே இருந்து இறந்தொழிகின்றனர்.

மறுபிறப்பை மறுக்கும் கிருத்துவக் கோட்பாட்டின்படி இவர்கள் எவ்வாறு எதிர்காலத்திற் saints ஆவர்? வாழ்நாள் முழுவதும் saintsகளாக வாழ்ந்து மறைந்தவர்களுக்குத் தீவினையாளர்களாக வாழ்ந்த இறந்த காலம் எப்போது இருந்திருக்கும்? முற்பிறவி தான் மறுக்கப்பட்டு விட்டதே. எனவே எவ்வாற்ருலும் Dr. G.U. Pope அவர்கள் நம் அடிகள் பற்றிக் கூறிய கருத்து வன்மையாகக் கண்டித்து ஒதுக்கத்தக்கதே. அவ்வாறே ஒதுக்குகின்றேம்.

அண்மைக் காலத்தில் திருமுறைகளைச் சந்தி பிரித்தும் ஒருசொல் நீர்மைத்தாகிய தொகைச் சொற்களைப் பிரித்தும் செய்யுள் யாப்பின் சீர்களைப் பொருட்படுத்தாது சீர்களைச் சொற்களாகப் பிரித்தும் அச்சிட்டு வழங்கும் போக்கு வலிமை பெற்று வருகின்றது. படிப்பவர்களுக்கு இதனுல் எளிதில் பொருள் விளங்கும் எனச் சமாதானம் கூறப்படுகிறது. ஆனுல், இப்பிரிப்பினுல் பொருட் சிதைவும் இலக்கணப் பிழையும் விளைவதை அவர்கள் அறிவதில்லை. "அணுத்தரும் தன்மையிலையோன் காண்க" என்னும் தொடர் "அணுத் தரும் தன்மை இலையோன் காண்க" எனப் பிரித்து அச்சிடப்பட்ட விநோதம் ஆதீனப் பதிப்புக்களிலேயே காணப்படுகின்றது. "நுணுக்கு அரிய நுண் உணர்வே" என்று பிரித்தால், "நுணுக்கரிய" என்பது பாடமா அல்லது அரிய நுண்ணுணர்வே" என்பது பாடமா என்ற குழப்பம் புதிதாகச் சிவபுராணம் பயில்வாருக்கு நேரிடுவது கண்கூடு. மேலும் சந்தியும் சீரும் பிரிப்பதால், கூட்டு வழிபாட்டின் போது யாப்புக்குரிய ஓசை பிழைபடுவதோடு பலரும் பலவிதமாகப் படிக்க நேரிடுகிறது. என்னைக் கை விட்டு விடலாகாது" என்னும் பொருளில் வரும் "விடுதி கண்டாய்" என்னும் சொல், விடுதி என்றும் கண்டாய் என்றும் பிரிக்கப்பட்டு பதிப்பிக்கப்படுதலால், இடையறவுபட உச்சரிக்கப்பட்டுத் தவருன பொருள் தோன்றுவதற்கு இடமளிக்கின்றது.

எனவே "சிவக்குடில் விளக்கத்தில்" சந்தி சீர்கள் பிரிக்கப்படாமல் யாப்புக்குப் பொருத்தமான சீர்களுடன் வழக்கமான தமிழ் எழுத்துக்களில் மூலபாடம் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அன்னுவயத்தில் தொகைச் சொற்கள் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன.

"சிவக்குடில் விளக்கம்" இந்த மூன்றும் பகுதியின் மணிமுடியாக விளங்கும் திருவெம்பாவை இடம் பெறுகின்றது. திருவெம்பாவை தில்லையில் அருளப் பெற்றது. திரு. K. சிவசுப்பிரமணியம் B.Sc. (Agri) உதவி வேளாண் இயக்குநர், கோவை. திருவண்ணமலைப் படங்களையும் பெற்றுத் தந்தார் அவருக்கு எம் நன்றி.

திருவுத்தரகோசமங்கைப் படத்தை உதவியவர். திரு. M.S. சுந்தரேசன் B.Sc. (Agri) உதவி வேளாண் இயக்குநர், பரமக்குடி அவர்கள். இவருடன் தொடர்பு கொண்டு படத்தைப் பெற்று உதவியவர், உரையாசிரியரின் குடும்ப நண்பர் திரு. S.C. இராமலிங்கம் B.Sc. (Agri) வேளாண் அலுவலர், கோவை அவர்கள்.

உரையாசிரியரின் நெருங்கிய உறவினர் திரு. V. முருகன் அவர்கள் (Trichy Trading Company, உரிமையாளர்) சிதம்பரம் திருக்கோயில் படங்களைப் பெற்று உதவினர்.

இவர்கள் அனைவரும் இருமுறைக்கு மேல் படம் எடுப்பவர்களுடன் நேரில் சென்றும் திருக்கோயில் நிருவாகிகளுடன் தொடர்பு கொண்டும், தில்லையில் திருக்கோயில் நிருவாகிகளுக்குக் கணிசமான தொகை கொடுத்து அனுமதி பெற்றும், ஒவ்வொரு தலத்துக்கும் 30 - க்கும் மேற்பட்ட படங்கள் எடுத்து நெகடிவ்வுடன் புகைப்படங்களை அனுப்பினர். ஒவ்வொருவருக்கும் பெருந்தொகை செலவாகியிருக்கும். அதைத் தெரிவிக்கவும், பணம் பெற்றுக் கொள்ளவும் உரிமையுடன் இவர்கள் அனைவரும் மறுத்து விட்டனர்.

உரைக்கும் நூலுக்கும் வனப்பூட்டும் இப்புகைப்படங்களைத் தந்துதவிய அனைவருக்கும் எம்முடைய அன்பான நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இப்பேருரையை அச்சில் கொண்டு வருவதற்குத் திருவுளம் பற்றிய சித்தர் பெருமானுடைய திருவடிகளை வணங்குதலையன்றி வேறு என்ன கைம்மாறு செய்யக் கடவோம்? எண்ணினால் "அடிமைசால அழகுடைத்தே"

சிவக்குடில் விளக்கத்திற்கு விற்பனை விளம்பரமோ, மதிப்புரைகள் வெளியிடுதலோ, புத்தக வணிகர்களின் துணையோ எங்களால் நாடப்படுவதில்லை. இருப்பினும் ஆர்வலர்கள் இந்நூலைக் கேட்டுப் பெற்றுப் படித்து மகிழ்கின்றனர். தங்கள் மகிழ்ச்சியினைக் கடிதத்தின் வாயிலாக உரையாசிரியருக்கும் சிவக்குடிலுக்கும் தெரிவிக்கின்றனர். சிலவிடங்களில் வாரந்தோறும் சிவக்குடில் விளக்கம்-வாசிப்பு அரங்கம் நடைபெற்று வருகின்றது. வெளிநாட்டன்பர்களும் இந்நூலைக் கேட்டுப் பெற்று வருகின்றனர். இவர்களுடைய அன்பு எமக்கு ஊக்கம் அளித்து வருகின்றது.

இந்த மூன்றும் பகுதி முழுவதும் கோவை Eye-Care Opticians உரிமையாளர், கயிலைச் செல்வர் சிவத்திரு. V. சந்திரசேகர் அவர்களின் பொருளுதவியால் வெளிவருகின்றது. அவர்களுக்கு எங்கள் நன்றி. மெய்ப்புக்களைத் திருத்தியும், பலமுறை அச்சகம் சென்று பணியை மேற்பார்வையிட்டு விரைவுபடுத்தியும் உதவிய எம்.ஜி.எம். இராமச்சந்திரன் அவர்களுக்கும் உரிய காலத்தில் நூலை அச்சிட்டுக் கொடுத்த ஏ.வி.எம். அச்சக உரிமையாளர் சிவத்திரு. மு. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் எம்முடைய நன்றி உரித்தாகுக.

வந்தே சுந்தர பரசிவகுடிலம் சித்தேஸ்வரம் சாஸ்வதம்

கோவைப்புதூர்
10 - 5 - 2005


ஸ்ரீ சித்தர் பணியில்
சிவக்குடில் அன்பர்கள்
ஸ்ரீ சித்தர் ஞானபாடசாலை



வாதவூரடிகள்

எழுதரு மறைக டேரு
இறைவனை யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும்
பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமீ தேறத்
துளும்புகண் ணீருள் மூழ்கி
அமுதடி யடைந்த வன்ப
ரடியவர்க் கடிமை செய்வாம்"

- திருவிளையாடற்புராணம்



திருஉத்தர கோசமங்கை

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவாசகம்

6. நீத்தல் விண்ணப்பம்

உத்தரகோசமங்கையில் அருளியது (பிரபஞ்ச வைராக்கியம்)

இறைவன், திருப்பெருந்துறையில் ஞானசிரியனாக எழுந்தருளி நம் அடிகளை ஏற்றுக் கொண்டபின், மதுரை நிகழ்ச்சிகள் நிகழ்ந்து முற்றுப் பெற்றன. பூவுலகிற்குத் தான் எழுந்தருளிய பணி நிறைவுற்றதும் அண்ணல், உடனிருந்த அடியவர்களை அங்குக் குருந்த மரத்தடியில் தான் அமர்ந்திருந்த இடத்தில் ஓர் பீடம் அமைத்து வழிபட்டு வருக என்றும் சில நாட்களில் அங்குள்ள பொய்கையின் நடுவில் ஒரு பேரொளி தோன்றும் என்றும், அதில் அனைவரும் புகுந்து திருக்கயிலை நண்ணுக என்றும் பணித்தருளினான். பின் நம் அடிகளை நோக்கி நீ அவ்விதம் அவர்களுடன் அப்பேரொளியில் புகாது, தல யாத்திரையாகத் தில்லைக்கு வருக என்றும், வழியில் நீ வழிபடும் தலங்களில் எல்லாம், நாம் உனக்குக் குரு வடிவில் காட்சியளிப்போம் என்றும் கூறியருளித் திருக்கயிலைக்கு எழுந்தருளினான்.

இறைவன் பிரிவாற்றாமையால் வருந்திய அடிகள், அவன் பணித்தவாறே தலயாத்திரை தொடங்கி முதலில் உத்தரகோசமங்கையை உற்றார். ஆண்டு இறைவன் காட்சி எய்தப் பெறாமையால் வருந்தி இந்த நீத்தல் விண்ணப்பத்தைத் திருவாய் மலர்ந்தருளினார். பின் இறைவன் ஞானாசிரிய வடிவில் காட்சி நல்கினான். இவை நம் அடிகள் வரலாறு பாடிய கடவுண்மாமுனிவர் நமக்கு அறிவிக்கும் செய்திகளாம்.

நீத்தல் விண்ணப்பம் என்பது "என்னுடன் இருந்த அடியார்கள் அனைவரும் உன் பேரானந்தப் பெருவாழ்வாகிய வீட்டின்பம் நுகர்ந்து திளைக்கின்றார்கள். அடியவனை மட்டும் இவ்விதம் இவ்வுலகில் நீத்துச்

சென்றது முறையாகுமா?" என்று இறைவன்மாட்டு முறையிட்டுக் கொள்ளல் என்னும் பொருளதாம். திருவாசகத்தின் இப்பகுதிக்கு உள்ளுறையாக நம் முன்னோர் அமைத்த உள்தலைப்பு "**பிரபஞ்ச வைராக்கியம்**". இத்தொடரின் பொருள் "உலக வாழ்வில் பற்றறுதல்" என்பதாகும். திருச்சதகத்தின் கருத்துரையாக அமைந்தது "**பத்தி வைராக்கிய விசித்திரம்**". அது பொதுமுறையில் கூறப்பட்டது. அஃதே ஈண்டுச் சிறப்பு முறையில் "**பிரபஞ்ச வைராக்கியம்**" என்று அமைக்கப்பட்டுள்ளது. இதைப் பழைய திருப்பெருந்துறைப்புராணம்:-

" *மித்தை யுலகினை யகற்றி விடாமலெனை யாண்டருளென்*
றத்த ரறிந்திட நீத்தல் விண்ணப்ப மறைந்ததுவாம் "

என்று விளக்குகின்றது.

இப்பகுதி, கட்டளைக்கலித்துறை யாப்பில் அந்தாதித் தொடையில் ஐம்பது பாடல்களால் அமைந்துள்ளது.

கட்டளைக்கலித்துறை

105. கடையவ னேனைக் கருணையி
ஞற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
டாய்விறல் வேங்கையின்றேல்
உடையவ னேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பிரா
னென்னைத் தாங்கிக்கொள்ளே. க

(இ - ள்)

கடைப்பட்டவனாகிய என்னை, நின் பேரருள் காரணமாக உடன் இயைந்து ஆட்கொண்டருளிய ஆனூர்தியினனே, அடியேனைக் கைவிட்டு விடுவாயோ? வலிமை மிக்க வேங்கைப் புலியின் தோலை ஆடையாக உடையவனே, என்றும் நிலைபெற்றுள்ள உத்தரகோசமங்கை என்னும்

தலத்தில் கோயில் கொண்டுள்ள மன்னவனே, சடைமுடியினனே, சோர்வுற்றேன்; எம் தலைவனே, அடியேனைத் தாங்கிக் காத்தருள்க.

(வி - ரை)

இத்திருப்பாடலுக்கு ஆற்றெழுக்காகப் பொருள் காண்க.

கடையவன் - யாவரினும் கிழானவன். நீ ஆண்டுகொள்வதற்குத் தகுதியான தீனத்துவம் உள்ளவன். பற்றுக் கோடின்றித் துன்புற்று வருந்துபவன் என்பது கருத்து. இதுதவிர வேறு தகுதியற்றவன். கடையவனுன என்னை நீ ஆட்கொள்வது உன் பேரருள் திறத்தால் என்றவாறு.

கலந்து ஆண்டு கொண்ட - "ஆண்டு கொண்டு கலந்த" என்று மாற்றுக. கடையனுகிய யான் உன்னைத் தேடிவந்து அடையும் ஆற்றலற்றவன். ஆதலின் உன் பேரருள் காரணமாக நீயே என்னைத் தேடி, இப்பூவுலகில் திருப்பெருந்துறைக்கு வந்து என்னுடனியைந்து என்னை ஆட்கொண்டாய். பின் என் ஊனை உருக்கி உணர்வைப் பெருக்கி உயிரிற் கலந்தாய் என்றவாறு. முன்னரும் திருவண்டப்பகுதி (174 - 175) ல் "அற்புதமான அமுத தாரைகள்; எற்புத்துளைதொறும் ஏற்றினன்" - என்றது நினைக.

விடையவனே - ஆனூர்தியினனே. ஆனூர்தி ஈண்டு அறம். பேரூழிக் காலத்தில் புவனங்கள் எல்லாம் அழிந்த சமயம் அறக்கடவுள், ஆனேறு வடிவில் வந்து சிவபெருமானைச் சரணடைந்தது. இறைவன் அதன் அச்சத்தை நீக்கித் தேற்றித் தன் ஊர்தியாகக் கொண்டு இவர்ந்து வழி நடத்தினுன். எனவே, அறம் இறைவனுல் தேற்றிக் காப்பாற்றப்பட்டு அவனுக்கு ஆதாரமாகி அவனுல் இயக்கப்பட்டு வழிநடக்கலாயிற்று. தன் கொடியில் இருத்தி உயர்த்தினுன். அதனுல் அறம் அண்ணலால் உயர்த்தப்பட்டது மாயிற்று. விடைதேற்றும் பெருமான் என்பது சிவமூர்த்தங்களுள் ஒன்று. இறைவன் விடையின் தாடையைத் தடவிக்கொண்டு நிற்கும் கோலம். திருவாலவாயில் சோமசுந்தரப் பெருமான் இக்கோலத்தில் நிற்கும் சிற்பத்தை இறைவன் சந்நிதியில் இன்றும் காணலாம். அறத்தின் காவலனுகிய நீ, வேறுகதியற்ற கடையவனுன என்னைக் கைவிடுதல் அறமன்று என்பது குறிப்பு.

விட்டிடுதி கண்டாய் - விட்டு விடுவாயோ என்று வினவியவாறு. கைவிடலாகாது என்பது பொருள். விடு - பகுதி; இடு - துணை வினை; இகரம் - எதிர்கால விகுதி; அகரம் - எழுத்துப்பேறு.

"அவற்றுள் முன்னிலைக் கிளவி இ ஐ ஆ யென வரூஉ மூன்று மொப்பத் தோன்று மொருவர்க்கு மொன்றற்கும்"

(தொல்காப்பியம் - சொல்லதிகாரம் வினையியல் - சூத் 223)

இதற்குச் சேனாவரையர் உரையின் பகுதி; "இகரம் தடற ஊர்ந்து எதிர்காலம் பற்றி வரும்" என்பதாம்.

கண்டாய் - முன்னிலையசை "விட்டிடுதி கண்டாய்" "விடுதி கண்டாய்" எனப் பின்வரும் இடங்களிலும் இவ்வாறே கொள்க. "விட்டு விடுகின்றாய்" என நிகழ்காலத்திலும் கொள்ளலாம்.

விறல் வேங்கையின் தோல் உடையவனே - விறல் வேங்கை - விறல் - வலிமை. தாருகா வனத்து முனிவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் பேர்களின் மந்திர ஆற்றலால் அபிசார வேள்வியில் தோன்றியதாகையின் இந்த வேங்கை விறல் வேங்கையாயிற்று. ***வேங்கை*** - வரிப்புலி. முன்னம் 11-ம் திருப்பாட்டில் ***உழுவை*** என்றதன் கீழுரைத்தவை காண்க. வேங்கையின் தோல் கொண்ட விறல் உடையவனே என்று இறைவனுக்கு அடையாக்கி உரைக்கவும் நின்றது. ***உடையவன்*** - தோலை உடையாக அணிந்தவன். தோலை உரித்து உடுத்த வலிமை உடையவன் என்று இரு விதத்திலும் கொள்க. என் ஆணவமலமாகிய வேங்கையை அடர்க்கும் ஆற்றலுள்ளவன் என்பது குறிப்பு.

விறல் வேங்கையின் தோல் உடையவனான வரலாறு - முன்னம் போற்றித் திருவகவல் 32 - ல் 'கானப்புலியுரி அரையோன்' என்றதன் கீழுரைத்தாம். ஆண்டுக் காண்க.

மன்னும் உத்தரகோசமங்கை - "மன்னும்" - நிலைபெற்றிருக்கும். உமையம்மையுடன் அறுபத்து நான்கு முனிவர்களுக்கும் சிவாகமங்களில்

எழுந்த ஐயங்களை இறைவன் ஞானசிரியனாக இத்தலத்தில் அமர்ந்திருந்து மறுமொழியருளிய சிறப்பினால் இத்திருமுறையிலும் சிவபுராணங்களிலும் இந்தப் புண்ணியப்பதி நிலையாக இடம்பெற்று வழுத்தப்பட்டுவரும் சிறப்பினதாயிற்று. இந்த வரலாற்றையும் இத்தலத்தின் சிறப்பையும் கீர்த்தித்திருவகவல் 48-49 உரையில் விளக்கினும் - ஆண்டுக் காண்க.

அரசே - திருக்கூத்தின் அரசன். உத்தரகோசமங்கையில் உள்ள அம்பலவாண மூர்த்தம். இதன் சிறப்பையும் மேற்குறித்த தலவரலாற்றில் காண்க.

சடையவனே - ***சடை*** - ஞானத்தின் சின்னம். இது, பேரருளால் மதியையும், முடிவிலாற்றலால் கங்கையையும் தாங்கியது, புல்லிய எருக்கு, உன்மத்த மலர், நகுதலை ஆகியவற்றையும் தாங்குவதால் இறைவனின் எளிவந்த தன்மையை விளக்குவது. இறைவன் திருவடையாளங்களில் முதன்மை பெறும் சிறப்புநோக்கிச் சடையைக் கூறினர். அதுமுதலாக ஏனைய திருவடையாளங்களையும் உடன் கொள்க. கபர்த்திகே நம; (சடையவனே வணக்கம்) என்பது சிவாஷ்டோத்திர நாமங்களுள் ஒன்று. நான்மறைகளின் பொருள்களாக விரிந்துகிடக்கும் ஆகமங்கள் சடை என்றும், அவ்வாகமப் பொருள்களை விளக்கவல்ல திருவருள் கங்கை என்றும் கூறுவர்.

(பெரியபுராணம் - 808 பாடல்
சிவக்கவிமணி C.K. சுப்பிரமணிய முதலியார் உரை)

தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே - ***தளர்ந்தேன்*** - சிவபரஞ்சுடரின் திருவடியை எய்துதற்கு மிக விரைந்து முற்பட்ட முயற்சி தடைப்பட்டமையால் தளர்ச்சியடைந்தேன். மலவாதனையாகிய உலகப்பற்றினால் தளர்ச்சியுற்றேன் எனலுமாம்.

எம்பிரான் - அடியார்களாகிய எங்களுக்குத் தலைவன் மட்டுமன்றி எங்களைப் பிரியாதவனுமானவன் ஆதலிற் தளர்ச்சியுற்ற என்னைத் தாங்க வேண்டுவது உன் கடமை. தாங்காவிடில் வீழ்ந்தொழிவேன் என்றவாறு.

பிரான் - பிரியாதவன்.

கொள் - தளர்ந்த நிலையில் அடிமையிடம் பணிகோடல் முறையன்ருகலின் தாங்கி அதன் பின் என்னிடம் பணி கொள்க என்றவாறு. "தாங்கிக் கொள்" என ஒரே சொல்லாகக் கொள்ளினும் அமையும்.

ஏ - ஈற்றசை ***எம்பிரான்*** - என்றதனுடன் புணர்த்து.

எம்பிரானே - என விளியாகக் கோடலுமொக்கும்.

இத்திருப்பாடலின்கண் "சடையவனே தளர்ந்தேன்" என்று உலக வாழ்க்கை பற்றிய உவர்ப்பு பெறப்படுதலின் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** என்ற கருத்துப் பெற்ரும்.

106. கொள்ளேர் பிளவக லாத்தடங்
கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளே னெனினும் விடுதிகண்
டாய்நின் விழுத்தொழும்பின்
உள்ளேன் புறமல்லேன் உத்தர
கோசமங் கைக்கரசே
கள்ளே ஞெழியவுங் கண்டுகொண்
டாண்டதெக் காரணமே உ

(இ - ள்)

உத்தரகோசமங்கையின் மன்னவனே, கொள் என்னும் கூலத்தின் பிளவின் அளவும் இடைவெளியற்ற அழகிய அடி அகன்ற கொங்கை-களையுடைய மகளிரின் கொவ்வைக் கனிபோன்ற சிவந்த வாயிதழினின்றும் விலகேன் ஆயினும், நின் சிறந்த தொண்டில் ஈடுபட்டு அதன் அகத்தேயுள்ளேன்; புறம்பானவன் அல்லேன்; ஆதலின் என்னைக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது); வஞ்சகனுகிய நான் நின்னை விட்டு நீங்கிச் செல்லவும் கண்டுபிடித்து ஆளாகக் கொண்டதற்குக் காரணம் என்னையோ?

(வி - ரை)

இத்திருப்பாட்டின் மூன்ரும் அடியிலுள்ள "உத்தரகோசமங்கைக்கு அரசே" என்பதை முதலில் அமைத்துக்கொண்டு பொருள் காண்க.

உத்தரகோசமங்கை - இஃது உமையம்மை சாபம் நீங்கி இறைவனுல் ஆட்கொள்ளப்பட்ட தலம். ஆதலின் என் இழிந்த இயல்புகளேயும் நீக்கி ஆட்கொள்க என்பது குறிப்பு.

அரசு - ஆன்மகோடிகள் அனைத்தையும் ஆள்பவன்.

கொள் பிளவு அகலா ஏர் கொங்கை - என்று மாற்றிக் கொள்க. "***கொள்***" என்னும் கூலத்தில் பிளந்து எடுக்கப்பட்ட ஒரு கூறும்கூட இரு கொங்கைகளுக்கும் இடையில் இடம்பெற இயலாது நெருங்கியுள்ள கொங்கைகள்.

ஏர் கொங்கை - அழகிய கொங்கைகள். இது பெண்களின் இளம் பருவத்தில் உள்ள கொங்கைகளின் அமைப்பு. "ஈர்க்கிடை போகா இளமுலே" (போற்றித் திருவகவல் 34) என்றருளினர் முன்னரும்.

கொவ்வைச் செவ்வாய் - வாயின் செம்மைப் பண்பு காண்டற்கும், வாயிற் பிறக்கும் சொற்கள் கேட்டற்கும், வால் எயிறு ஊறிய நீர் சுவைத்தற்கும், உரியனவாதல் பற்றியும், வாய் ஓரோவழி உயிர்த்தற்கும் உற்றறிதற்கும் இடனுதல் பற்றியும் நினேந்து ஐம்புல நுகர்ச்சிக்கும் இடனுகும் வாயைக் கூறினர்.

விள்ளேன் எனினும் - விட்டு விலகமாட்டேன் என்ருலும் கூட. இது வினைக்கு ஈடாகப் பிறந்து இறந்து உழலும் உலகமக்கள் மகளிர் இன்பத்தில் திளேத்து, பிறவிப்பயனேப் பெருமல் மேலும் வினைகளே ஈட்டிக்கொள்ளும் இயல்பை நம் அடிகள் தம்மேல் ஏற்றிக் கொண்டு கூறியதாகும். இதுபற்றி முன்னம் 44-ம் திருப்பாடலில் விரிவாக விளக்கினும். ஆண்டுக்காண்க. இதற்கு இவ்வாறன்றி நம் அடிகளே மகளிர் தொடர்பு கொண்டிருந்தார் என்றும் அவ்வாறிருப்பினும் விழுத்தொழும்பில் நின்றதால் தம்மைக் கை விடலாகாது என்றும்; நம் அடிகளார் மனத்தளவில் மகளிரை நினேந்திருந்தார் என்றும் பலவாறு உரைத்தனர் முன்னுரையாளர்கள். ஞானசிரியன் ஆட்கொண்ட பின், உலகியல் அனைத்தையும் துறந்து, பின் அவன் விட்டுப்பிரிந்தபின் உலக வாழ்வையே வெறுத்து வீடுபேறு வேட்ட நம் அடிகள் நிலேயறியாதும் மரபுதெரியாதும் கூறும் இவையெல்லாம் உரைகளல்ல என்று ஒதுக்குக. திருவாசகத்தில் இனி இவ்வாறு வரும்

இடங்களில் எல்லாம் இங்ஙனமே கொள்க. முன்னம் 44 - ம் திருப்பாடல் உரையில் விளக்கியவை காண்க.

எனினும் - கொவ்வைச் செவ்வாய் மகளிரை நான் வெறுத்து ஒதுக்கியிருக்கவேண்டும். அவ்வாறு ஒதுக்காமல் அவர்களைப் பிரியாதுள்ளேன் என்றமையில் "உம்மை" எதிர்மறை உம்மையாயிற்று. அவ்வாறு அவர்களைப் பிரியாதுள்ளேனுயினும் என இழிவுகுறித்தலின் இழிவு சிறப்பும்மையுமாம்.

நின் விழுத்தொழும்பின் உள்ளேன் - ***விழுத்தொழும்பு*** - உலகியல் தொண்டுகள் தொண்டுபுரியும் தொண்டர்களின் தலைவருக்கே தொண்டின் பெரும்பகுதிப் பயன் சாரும். இறைபணி அவ்வாறன்றி தொண்டினுல் விளையும் பயன் முற்றிலும் அத்தொண்டைச் செய்த அடியவருக்கே சேரும் ஆதலின் இது விழுத்தொழும்பாயிற்று. இது சிவபுண்ணியமாதலின் "நின் விழுத்தொழும்பு" என்ருர்.

உள்ளேன் புறம் அல்லேன் - உடன்பாட்டிலும் எதிர் மறையிலும் கூறியது வலியுறுத்தற்பொருட்டு. இதைச் செய்யுள் வழக்கில் மட்டுமன்றி உலக வழக்கிலும் காணலாம்.

கள்ளேன் ஒழியவும் - நீ என்னை ஆட்கொள்ளுமுன்பு நான் பொய்யுலக வாழ்வில் ஈடுபட்டிருந்தேன். உன் உடைமைகளாகிய உடல் பொருள் ஆவி அனைத்தும் என்னுடையன என்று கருதி ஒழுகினேன். அது கள்ளச் செயலாகும். நாடகத்தால் உன் அடியார் போல நடித்தேன். நெஞ்சளவில் உன்னைப் பிரிந்து நெடுந்தொலைவு சென்றேன். அவ்வாறு இருந்தும்;

கண்டு கொண்டு ஆண்டது எக்காரணம் - நீ என்னைத் தேடிக் கண்டு பிடித்து உன் அடிமையாகக் கொண்டதற்கான காரணம் யாது?

காரணம் - காரணத்தால் என மூன்றனுருபு விரித்துக் கொள்க. அதற்குக் காரணம் உன் பேரருளுடைமையேயாகும். எனவே அப்பேரருளுடைமை காரணமாகவே இனி நீ என்னைக் கைவிடாமல் இருக்கவும் வேண்டும் என்பது குறிப்பு.

இத்திருப்பாடலில் மகளிர் இன்பம் விட்டொழிக்கப் படவேண்டிய ஒன்று என்பது குறிப்பாற் பெறப்படுவதால் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** பெறப்பட்டது.

107. காருறு கண்ணிய ரைம்புல
ளுற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண்
டாய்விளங் குந்திருவா
ரூருறை வாய்மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க
வென்னை வளர்ப்பவனே. ரு

(இ - ள்)

மிகுந்த புகழால் விளங்கும் திருவாரூர் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ளோனே, நிலைபெற்ற உத்தரகோசமங்கை என்னும் பதிக்கு மன்னவனே, கச்சுப்பொருந்தியனவும் அணிகலன்கள் விளங்குவனவுமான கொங்கைகளையுடைய உமையம்மையை ஒரு கூற்றில் உடையவனே; அடியேனைப் பாதுகாப்பவனே, கருமை நிறமுள்ள கண்களுடைய மகளிரைப் பற்றிய ஐம்புலன்களாகிய ஆற்றங்கரைக்கண் உள்ள மரம் போன்று வேர் ஊன்றி இருப்பேனை விட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

"விளங்கும்" என்பது முதல் இறுதிவரையுள்ள பகுதியை முதலிற் கொண்டு பொருள் காண்க.

விளங்கும் திருவாரூர் உறைவாய் - திருவாரூருக்கு விளக்கமாவது கொடைச்சிறப்பால் உண்டானதாகும். இறைவன் அயிராவணம் ஏறுது ஆனேறேறித் தியாகராசப் பெருமானாகத் திருவாரூரில் எழுந்தருளிச் சோழப் பேரரசனாக முடிசூட்டி உலகாண்டு 360 அருளாடல்களை நிகழ்த்தியதால் வந்த புகழ் விளக்கம் என்றவாறு. அப்புகழ் விளக்கம் எல்லாத் திசைகளிலும் பரவி நிற்பதை;

திருச்சிற்றம்பலம்

"அக்குலா மரையினன்கா ணடியார்க் கென்று
மாரமுதா யண்ணிக்கு மையாற் றுன்காண்
கொக்குலாம் பீலியொடு கொன்றை மாலை
குளிர்மதியுங் கூரரவும் நீருஞ் சென்னித்
தொக்குலாஞ் சடையினன் காண் தொண்டர் செல்லுந்
தூநெறிகாண் வானவர்கள் துதிசெய் தேத்தும்
திக்கெலாம் நிறைந்த புகழ்த் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே."

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-30-2)

எனவரும் நம் அரசுகள் தமிழிற் காண்க. முன்னம் கீர்த்தித் திருவகவல் 73-ல் "திருவாரூர்" என்றதன் கீழுரைத்த தலவிசேடம் காண்க.

உறைவாய் - நிலையான இருப்பிடமாகக் கொண்டவனே. அவ்வாறு அவன் கோயில் கொண்ட தொன்மையை;

திருச்சிற்றம்பலம்

" ஒருவனுய் உலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவ மான நாளோ
கருவனுய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணலழால் விழித்த நாளோ
மருவனுய் மண்ணும் விண்ணும் தெரிந்த நாளோ
மான்மறிக்கை யேந்தியோர் மாதோர் பாகத்
திருவினுள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே"

திருச்சிற்றம்பலம்

திருமுறை (6-34-1)

என்று நம் அரசுகள் அருளிச் செய்வது காண்க.

வார்உறு பூண்முலையாள் பங்க - உமையம்மையின் இளமைக்கோலம் குறித்தவாறு. அம்மை பேரருளின் உருவகம் என்பதும், அவ்வருள் என்றும் மூப்பின்றிக் காலதத்துவம் கடந்து நின்று அத்தத்துவத்தை இயக்குவதென்பதும் முன்னம் விளக்கினும். ***"என்னை வளர்ப்பவனே"*** என்றருளிச் செய்தார். அவ்வாறு வளர்த்தற்குக் காரணமான பேரருளுடன் கூடியவனுய் உள்ள திருக்கோலத்தை வழுத்தினர்.

வளர்ப்பவன் - உடலை வளர்க்கும் உலக அன்னை போலன்றி ஊனினை உருக்கி உள்ளொளியாகிய உணர்வை வளர்ப்பவன். அது வினைப் பயன்களை நுகரச்செய்து மலப்பிணிப்பைப் படிப்படியாகத் தளர்வித்து ஆன்ம முன்னேற்றம் கொடுத்தல்.

கார்உறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்கரை மரமாய் வேர் உறுவேனை - இங்ஙனம் இறைவன் அம்மையப்பனுக எழுந்தருளிவந்து என்னை வளர்க்கமுற்பட்டும், யான் பொய்யுலக வாழ்வில் பொருந்தி உழல்பவனுனேன் என இரங்கியவாறு.

கார் - நிறத்தினுல் கருமையையும் குளிர்ச்சியால் மேகத்தையும் குறித்து நின்றது. ***கார் உறு கண்ணியர்*** - மகளிர் கண்களுக்கு வெண்மை செம்மை நிறங்களிலும் கருமை நிறமே ஆடவரை வயப்படுத்தற்குச் சிறந்த தென்றவாறு. அக்கண்கள் மேகம் போல நீர் துளிப்பது சாகசத்தை விளக்கி நிற்கும். அஃது இறைவனின் வளர்க்கும் தொழிலுக்கு மாருக ஆன்ம வாழ்வை அழிக்கும் தொழிலினதாம். இப்பகுதியில் "நான் காருறு கண்ணியர் தொடக்குடையேன்; நீயும் அவ்வாறே" "வாருறு பூண்முலையாள் பங்கன்" என்ற சமத்காரம் தொனிப்பது கண்டின்புறுக.

ஐம்புலன் ஆற்றங்கரை மரமாய் - ஐம்புலன்களால் மகளிரிடம் துய்க்கும் இன்பம்; புலன்கள் ஈண்டுப் பொறிகளால் நுகரப்படும் விடயங்களைக் குறித்து நின்றன. இங்குக் காம வெள்ளம் பெருகிவரும் ஆறு. அதன் கரையில் நிற்கும் மரம் காமத்திற் கன்றி நிற்கும் உயிர்.

மரமாய் - ஆக்கம் தொழில்பற்றி வந்த உவமை குறித்தது.

வேர் உறுதல் - ஆற்றின் கரையிலுள்ள மரம், மிகுதியான வெள்ள நீராலும் வண்டலாகிய உரத்தாலும் மிக ஆழமாக வேர் ஊன்றி நன்கு செழித்து நிற்கும். ஆயினும் பின்னெரு நாள் அவ்வெள்ளமே கரையைக் கல்லி மரத்தை வேருடன் சாய்த்து அடித்துச் சென்று விடும்.

இதனை;

" ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

(நல்வழி 12)

என ஔவைப்பிராட்டி விளக்குவது காண்க.

அவ்வாறே காமுகரும் முதலில் பெண்ணின்பத்திற் திளைத்து மகிழ்ந்து முடிவில் அழிவர் என்பதறிக.

ஈண்டு நம் அடிகள் கூறவந்தது "இப்பொய்யுலக வாழ்வைப் பற்றிக்கொண்டு அழிந்தொழியும் நிலையில் உள்ள அடியேனைக் கைவிடலாகாது" என்பதாம்.

இப்பாடலில் "ஐம்புலன் ஆற்றங்கரை மரமாய் வேருறுவேனை" இந்நிலையில் கைவிட்டுவிடாமல் காத்தருள வேண்டும் என்று விண்ணப்பம் செய்தலால் "***பிரபஞ்ச வைராக்கியம்***" புலனுதல் காண்க.

108. வளர்கின்ற நின்கரு ணைக்கையில்
வாங்கவு நீங்கியிப்பான்
மிளிர்கின்ற வென்னை விடுதிகண்
டாய்வெண் மதிக்கொழுந் தொன்
றொளிர்கின்ற நீண்முடி யுத்தர
கோசமங் கைக்கரசே
தெளிகின்ற பொன்னுமின் னும்மன்ன
தோற்றச் செழுஞ்சுடரே. ௬

(இ - ள்)

வெள்ளிய திங்களின் இளம்பிறை ஒன்று திகழ்கின்ற நீண்ட சடை முடியினனே; உத்தரகோசமங்கையின் மன்னவனே. குற்றம் அறவே நீங்கிய மாசற்ற செம்பொன்னையும் மின்னலையும் ஒத்த காட்சியுள்ள பேரொளிப்

பிழம்பே; மேலும் மேலும் மிகுகின்ற நின் அருட்கரத்தால் வளைத்து ஈர்க்கவும், அதற்கு அகப்படாமல் விலகி இப் பொய்யுலக வாழ்வில் இறுமாந்து களிக்கின்ற சிறியேனை விட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

"வெண்மதிக் கொழுந்தொன்று" - முதல், இறுதி வரையுள்ள பகுதியை இப்பாடலின் முதலில் வைத்துப் பொருள்கொள்க.

வெண்மதிக் கொழுந்து ஒன்று - சிறுபிறை. சடையை ***நீள்முடி*** என்றதால் பிறைக்கும் அடை கூட்டிக் குறுங்கொழுந்து என்க. ***வெண்மதிக் கொழுந்து*** என்றதால் சடையைப் பொன்னூர் சடைமுடி என்க. ***கொழுந்து*** - இனி வளர்ந்து முழுமதியாக முதிரவுள்ளது என்றவாறு. ***நீண்ட*** சடைமுடிக்கு நிறைந்த அணிகலன்களின்றி ***ஒருகொழுந்து*** அமைவதாயிற்று. ஆயினும் அது நீண்முடிக்கு அணிகலனுவதன்றி அந் நீண்முடியில் அமர்ந்ததால்தான் அழகு பெற்றது.

இனி, ***ஒன்று*** என்பதை வினைச்சொல்லாகக் கொண்டு ***ஒன்று நீள்முடி; ஒளிர்கின்ற நீள்முடி; ஒளிர்கின்ற வெண்மதிக் கொழுந்து ஒன்று*** ***நீள்முடி*** என உரைத்தலுமொன்று. ***ஒன்று*** - பொருந்துகின்ற.
ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

*"**கூனற்றிங்கட் குறுங்கண்ணி** கான்றந்நெடு வெண்ணிலா*
வேனற்பூத்தம் மராங்கோதை யோடும்விரா வுஞ்சடை
வானநாட னமரர்பெரு மாற்கிட மாவது
கானல்வேலி கழிசூழ் கடனைகைக் காரோணமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 2-116-1)

எனவரும் ஞானசம்பந்தப் பெருமான் அமுதவாக்கு நினைக.

வெண்கதிர்ச் செல்வன் நின்னைத் தேடிவந்து புகலடைந்தான். அவனை நீ ஏற்றருள் செய்து நின் முடிக்கு அணியாக்கினுய்; பின்னர் அவன் புறம்போகவில்லை. ஆதலின் என்றும் நின்பாலிருக்கும் பேறுற்றுன். ஆனல், நான் நின்னைத் தேடிவரவில்லை. மாருக நீயே என்னைத் தேடிவந்து நின்

அடிமையாக ஏற்றுக்கொண்டாய் எனினும் நான் புறமே போந்தேன். அது கருதி என்னைக் கைவிட்டுவிடாதே என்றவாறு.

தெளிகின்ற பொன்னும் மின்னும் அன்ன தோற்றச் செழுஞ்சுடரே - ***தெளிகின்ற*** - என்னும் அடையை ***"பொன்" "மின்"*** இரண்டற்கும் புணர்க்க. ***தெளிகின்ற பொன்*** - வேற்று உலோகக் கலப்பாகிய மாசு அறவே நீங்கியதும் மாற்றுயர்ந்ததுமான செம்பொன். இஃது அண்ணலின் திருமேனி வண்ணம் வழுத்தியவாறு.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம்
மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம்
மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண
மாகிய வீசனுக்கே"

திருச்சிற்றம்பலம்

(பொன்வண்ணத்தந்தாதி - *1*)

எனவரும் சேரமான் பெருமாளுயனர் திருவாக்கு நினைக.

மின்னும் - தெளிகின்ற மின்னும் - முகிற்படலம் பனிமூட்டம் முதலியவற்றால் மறைவுபடாத மின்னல். இஃது இறைவன் திருமேனி ஒளிக்கு உவமை. நிறத்துக்குப் பொன்னும், ஒளிக்கு மின்னும் உவமைகள்.

தோற்றம் - கட்பொறியால் வரம்பிட்டுப் பற்ற இயலாத காட்சி. "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலே" (தொல்காப்பியம் உவமஇயல் சூத்-274) என்னும் விதிப்படி உவமம் கூறுதல் இயலாத தொன்றாகலின், காணப்படும் பொருள்களில் சிறந்த பொன்னையும் மின்னையும் கூறினார். ***செழுஞ்சுடர்*** - வந்தடைந்தோர் மாசுகளை எல்லாம் அழித்துத் தூயதாக்குவதன்றித் தான் மாசுறாமையால் ***"செழுஞ்சுடர்"*** என்றார்.

வளர்கின்ற நின் கருணைக் கையால் வாங்கவும் - ஆன்மாக்கள் பின்னடைந்து செல்லச் செல்ல இறைவனின் அருளாகிய கையும் நீண்டு நீண்டு சென்று அவற்றைப்பற்றி ஈர்த்து உய்விப்பதால் ***"வளர்கின்ற கருணைக் கை"*** என்றார். திருவருள் ஈண்டு இறைவன் கையாக உருவகம் செய்யப்பட்டது.

ஈண்டு;

"என்னையிப் பவத்திற் சேரா
வகையெழுத் தென்சித் தத்தே
தன்னைவைத் தருளி னாலே
தாளிணை தலைமேற் சூட்டும்
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய்
மேவிவாழ் மெய்கண் டானூல்
சென்னியிற் கொண்டு சைவத்
திறத்தினைத் தெரிக்க லுற்றாம்"

(சிவஞான சித்தியார் சுபக்கம் முன்னூற் சிறப்பு)

என்றதும் அதற்கு மாதவச் சிவஞான முனிவர் "பவமாயக் கடலிலழுந்துகின்ற என்னை அதன் கண் அழுந்தாவண்ணம் கருணைக் கையாலெடுத்து...." என்று உரை கூறுவதும் நினைக. அடியவர்களுக்கு வழங்க வழங்கக் குறையாது **வளரும் கருணை** என்றவாறு. "எல்லா உயிர்களும் வளரும் இடமாகிய கருணை" என்பர் திரு. முதலியார் அவர்கள். ***"வளர்க்கின்ற"*** என்பது "வளர்கின்ற" என்றாயிற்று என்பது திரு. கா.சு. பிள்ளை அவர்கள் உரைக்குறிப்பு.

இதற்கு இவ்வாறன்றித் "திருவடி ஞானம் பேரன்பாற் கருணை பொழிவதான திருக்கையாற் சீயத்தம் வைத்தும்" என்று உரை கூறுவர் திரு. சீகாழித்தாண்டவராயர். இவர் குறிப்பிடுவது "ஹஸ்தமஸ்தக சம்யோக தீட்சை". ஹஸ்தம் என்பது கை; மஸ்தகம் என்பது தலையும் நெற்றியும் கூடும் பாகம். சம்யோகம் என்பது கையும் தலையின் முன் பகுதியும் சேர்தல். அஃதாவது மாணவன் சென்னியில் ஞானாசிரியன் தன் வலக்கரத்தை வைத்து மந்திரம், பாவனை முதலியவற்றால் மாணவனின் சஞ்சிதகன்மங்களை அழித்து திருவருளைப் பதியும்படி செய்வன். சிவஞான

சித்தியார் எட்டாம் சூத்திரம் முதலதிகரணம் இரண்டாம் செய்யுளில் இது ***பரிசதீட்சை*** என்று கூறப்பட்டுள்ளது. திருப்பெருந்துறையில் நம் அடிகள் இறைவனிடம் பரிச தீட்சை பெற்றபின்பும் புறம்சென்று உலகியலில் உழல்வதானேன் என்று கூறி இரங்கினர் என்பது திரு. காழித்தாண்டவராயர் கொண்ட குறிப்பு.

இறைவன் மாணவன் சென்னியில் தன் திருக்கரம் வைத்துச் செய்யும் பரிச தீட்சையை;

திருச்சிற்றம்பலம்

" தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்
டத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக்
கமருல களிக்கும்நின் பெருமை
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொருத்தருள் செய்யுங்
கைத்தல மடியேன் சென்னிமேல் வைத்தகங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே." *(8)*

"அங்கைகொண் டமரர் மலர்மழை பொழிய
அடிச்சிலம் பலம்பவந் தொருநாள்
உங்கைகொண் டடியேன் சென்னிவைத் தென்னை
உய்யக்கொண் டருளினை! *மருங்கில்*
கொங்கைகொண் டனுங்கும் கொடியிடை காணிற்
கொடியள் என் றவிர்சடை முடிமேற்
கங்கைகொண் டிருந்தகடவுளே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே" *(10)*

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 9- 13)

எனக் கருவூர்த் தேவர் தீட்டும் சொல்லோவியங்களிற் காண்க.

வாங்கவும் - வாங்குதல் - பற்றி இழுத்தல். "முள்வாங்கி" என்பது காண்க. வாங்குதல் என்ற சொல் இப்பொருளில் வருவதை;

"இவனிவ ளைம்பால் பற்றவு மிவளிவன்
*புன்றலை யோரி **வாங்கினள்** பரியவுங்*
காதற் செவிலிநகர் தவிர்ப்பவுந் தவிரா
தேதில் சிறுசெரு வுறுப மன்னோ
நல்லை மன்ற பாலே மெல்லியல்
துணைமலர்ப் பிணைய லன்னவிவர்
மணமகி ழியற்கை காட்டி யோயே."

(குறுந்தொகை - 229)

" பகுவாய் வராஅற் பல்வசி யிரும்போத்து
....
தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது
.... பெரிதே"

(அகநானூறு-36)

வளைத்துப் பிடித்தல் எனலுமாம். எடுக்கவும் என்று பொருள் கொண்டு "பிறவிக் கடலில் வீழ்ந்து பிணியும் காமமுமாகிய சுறுமீன் பற்றவும் ஐம்பொறிகளாகிய அரவுகள் பிடிக்கவும் நான் அலைகின்ற நிலையிலிருந்து மீட்டு எடுக்கவும்" என்றுரைப்பர் திரு. தேசிகரவர்கள். உலகில் ஒருவனை வளைத்துப் பிடித்தல் பெரும்பாலும் அவனைத் துன்புறுத்தற் பொருட்டாகும். ஈண்டு, இறைவன் திருவுள்ளம் அஃதன்று என்பதைப் புலப்படுத்தக் **"கருணைக் கையில் வாங்கவும்"** என்றார். உம்மை, சிறப்புப் பொருட்டு.

நீங்கி இப்பால் மிளிர்கின்ற என்னை - உன் திருவருளை வேட்டுத் தவங்கிடப்போர் எண்ணிலர். நிற்க, உன் பேரருள் காரணமாக நீ என்னை வலிந்து பற்றி இழுக்கவும் நான் என் அறியாமையால் உன் பிடியினின்றும் நீங்கிச் சென்று இப்பொய்யுலக வாழ்வில் உழலலானேன் என்று இரங்கியவாறு.

நீங்கி - உன் பிடியின்றும் நழுவி. **இப்பால்** - இப்பொய்யுலகின்கண். ***மிளிர்தல்*** - மீன் போன்று புரண்டு நழுவுதல். "போக இச்சையாருள் இவன் ஒருவனே" எனக் கருதுமாறு விளங்குகின்ற - என்பர் திரு.பரதியாரவர்கள்.

இத்திருப்பாடலில் "நின் கருணைக் கையில் என்னை வளைத்துப் பற்றவும் நீங்கி, இப்பொய்யுலக வாழ்விற் களிக்கின்றேன்" என்று கூறி இரங்குவதால் "***பிரபஞ்ச வைராக்கியம்***" புலனுதல் பெற்றும்.

109. செழிகின்ற தீப்புகு விட்டிலிற்
சின்மொழி யாரிற் பன்னுள்
விழுகின்ற வென்னை விடுதிகண்
டாய்வெறி வாயறுகால்
உழுகின்ற பூமுடி யுத்தர
கோசமங் கைக்கரசே
வழிநின்று நின்னரு ளாரமு
தூட்ட மறுத்தனனே. ௫

(இ - ள்)

தேன் தோய்ந்த வாயினவாகிய வண்டுகள் கிண்டுகின்ற கொன்றை மலர் மாலையணிந்த முடியினையுடையவனே, உத்தரகோசமங்கைக்கு மன்னவனே; வழியில் என்னை மறித்து நின்று நின் திருவருளாகிய கிடைத்தற்கரிய அமிழ்தத்தை வலிந்து ஊட்டவும் ஏற்றுக் கொள்ளாது மறுத்தேனுகி, மிகுகின்ற நெருப்பின்கண் விழுகின்ற விட்டிற்பூச்சியைப் போலச் சிலவாகிய சொற்களையுடைய மகளிரிடத்துப் பல நாளும் விரும்பிக்கிடக்கின்ற சிறியேனை, விட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

"வெறிவாய்" - என்பது முதல் இறுதி வரையுள்ள பகுதியை முதலில் அமைத்து, இத்திருப்பாடலுக்கு உரை காண்க.

வெறிவாய் அறுகால் உழுகின்ற முடி - ***வெறி*** - ஈண்டுத் தேனையுணர்த்திற்று. ***அறுகால்*** - அன்மொழித் தொகையாக நின்று ஆறு கால்களையுடைய வண்டை உணர்த்திற்று. **வண்டு** - சாதியொருமை. வண்டுகள் என்க. அவை மலர்கள்தோறும் தேனைத்திரட்டி வருதலின் வாயில் எப்பொழுதும் தேனிருப்பது குறிக்க ***"வெறிவாய் அறுகால்"*** என்றார். ***உழுகின்ற*** - தேன் மிகுதிபற்றி இதழ்களை கிளறுதல். ***பூமுடி*** - ***பூ*** - இங்குக் கொன்றை மலரை உணர்த்தி நின்றது. கொன்றை மலர்களாலான கண்ணி மாலையை அணிந்த திருமுடி. அது சிவபெருமான் திருமுடியாகும்.

இப்பகுதிக்கு ***வெறிவாய்***- சிவமணங்கமழும் திருவைந்தெழுத்தைக் கணிக்கும் வாயினராய்; ***அறுகால்*** - ஆறு ஆதாரயோக நிலை வழியே மேலேறி வந்து நிராதார யோகநிலையை எய்தி. ***உழுகின்ற பூ*** - ஆனந்தானுபவம் தொடங்கி ஆனந்த பரவசமும் பின் ஆனந்தாதீதமும் ஆகிய நிலைகளை எய்த, ஓங்கார வடிவமான கொன்றை மலரின் இதழ்களை அகழ்ந்து தவம்செய்கின்ற சிவயோகியர் தலைவனான சிவபெருமான் என்பது தொனிப் பொருளாக அமைந்துள்ளது காண்க.

ஆறு ஆதாரங்களாவன

1. **மூலாதாரம்** - மனித உடம்பில் மலவாய் சிறுநீர் கழிக்கும் உறுப்பு இவற்றுக்கு இடையில் உள்ளது. இறைவன் இங்கு விநாயகர் வடிவில் எழுந்தருளியுள்ளான்.

2. **சுவாதிட்டானம்** - நாபிக்கும் சிறுநீர் கழிக்கும் உறுப்புக்கும் இடையில் உள்ளது. இறைவன் இங்கு நான்முகன் வடிவில் எழுந்தருளியுள்ளான்.

3. **மணிபூரகம்** - நாபியில் அமைந்துள்ளது. இறைவன் இங்குத் திருமால் வடிவில் எழுந்தருளியுள்ளான்.

4. **அனாகதம்** - இதயத்தானத்தில் உள்ளது. இறைவன் இங்கு உருத்திரன் வடிவில் எழுந்தருளியுள்ளான்.

5. **விசுத்தி** - கண்டத்தானத்தில் உள்ளது. இறைவன் இங்கு மகேசுவர வடிவில் எழுந்தருளியுள்ளான்.

6. **ஆஞ்ஞை** - புருவ மத்தியில் உள்ளது. இறைவன் இங்கு பரமேசுவரனாக எழுந்தருளியுள்ளான்.

இவற்றைக் கடந்து தலைக்கு மேல் பன்னிரண்டங்குலத்திற்கு மேலுள்ள இடம் மீதானம். தொடக்க நிலையில் இறைவனை இவ்விடங்களில் வழிபட்டு முன்னேறுதல் ஆதாரயோகம். அது பழகிய பின் தியானத்தில் அமர்ந்த உடனே இவ்வாதாரங்களின்றி மீதானத்தில் இறைவனுடன் திரிபுடியின்றி நிற்றல் நிராதாரயோகம்.

பூ - கொன்றை மலர், இஃது இயற்கையாகவே ஓங்கார வடிவில் பூப்பது. பொன்னிறமுள்ளது. ஓங்காரமாகிய சமட்டி பஞ்சாக்கரத்தின் பொருள் சிவபெருமானே என்பதை முன்னம் சிவபுராணம் - 1ல் "நமச்சிவாய" என்றதன் கீழும் "ஓங்காரமாய் நின்ற" (சிவபுராணம்-33) என்றதன் கீழும் விளக்கினும். அங்குக் காண்க. கொன்றைமலர் சிவபெருமானைப்போன்றே பொன்னிறமுள்ளதும் நினைக. "ஆனந்தத் தழுந்தல்"; "ஆனந்த பரவசம்" "ஆனந்தாதீதம்" என்பவை பற்றித் திருச்சதகம் 8,9,10 பதிகங்களின் உட்டலைப்புகள் பற்றிய உரையில் விளக்கினும். ஆண்டுக் காண்க.

ஈண்டு;

"ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல வுந்தீபற
விமலற் கிடமதென் றுந்தீபற."

(திருவுந்தியார்-8)

என்று நம் ஞானசாத்திரம் நவில்வது காண்க.

வழிநின்று - இவ்வுலக வாழ்க்கையை நோக்கிச் செல்லும் என்வழியில் இடைப்பட்டு என்னை மறித்து நின்று.

நின் அருளார் அமுதை ஊட்ட - உலகில் ஒருவனை வழிமறித்தல் அவனைத் துன்புறுத்தியோ, கொன்றோ அவன் கைப்பொருளைக் கவர்வதற்காகவே பெரும்பாலும் நிகழ்வது. ஆனால் இறைவன் இங்கு வழிமறிப்பது அவன் அருளார் அமுதை ஊட்டுவதற்காக என்றவாறு. **ஊட்ட** - உண்ணும் வண்ணம் கையில் கொடுப்பின் அதைக் கீழே எறிந்துவிட்டு ஓடி விடுவேன் என்று கருதி, நீயே ஊட்டினாய் என்றவாறு.

மறுத்தனனே - அவ்வழியமுதை உண்டு அதனினும் சிறந்த வீட்டமுதை உன்பால் வேண்டாது, வழியமுதையே மறுத்து விட்டேன். ***மறுத்தனன்*** - வினையாலணையும் பெயராகக் கொண்டு மறுத்தவனாகிய என்னை எனலுமாம். ***ஏகாரம்*** - தேற்றம்.

செழிகின்ற தீப்புகு விட்டில் - செழிக்கின்ற என்றது எதுகை நோக்கி ஒற்றிட்டாமல் முடிந்தது. ***செழிக்கின்ற தீ*** - செழித்து வளர்கின்ற பெருநெருப்பு, ***விட்டில்*** - விட்டில் பூச்சி. நெருப்பு, தொலைவில் இருப்பினும் அதன் ஒளியைப் பழம் என்று கருதித் தானே அதன்பாற்சென்று அணையும். சிறிது சூடுண்டு உடலின் ஒருபகுதி ஊறுற்றதும் மீளும். ஆயினும் விரைவில் மறந்து மீண்டும் மீண்டும் விளக்கின் நெருப்பிற் சூடு பட்டுப்பட்டு விலகும். முடிவில் சுடரிலே விழுந்து கருகி இறக்கும். இதனை, "மின்னுபு விளக்கத்து விட்டில் போலவும்" (கோயில் நான்மணி மாலை 28 - 7) என்பர் பட்டினத்தடிகள். ***செழிக்கின்ற தீ*** - என்ற உவம அடையால் வீழ்தற்குரிய காமமும் பெருங் காமமாயிற்று.

சின்மொழியாரின் - சில சொற்களே பேசும் இள மகளிர். இவர்கள் சொற்சுருக்கம் நாணுடைமை காட்டும். இளம் பரத்தையரும் இன்மொழிகளே பேசுவர். அது நாணுடைமை போலக் காட்டி இளைஞரை மயக்குதற்காம். ***இன்*** - இஃது இங்கு ஏழாம் வேற்றுமை உருபுப் பொருளில் நின்றது. இன் மொழியாரிடத்து என்றவாறு. இன் மொழியாருக்கு ஈண்டு செழிக்கின்ற தீ உவமையாயிற்று.

பன்னாள் விழுகின்ற என்னை - பன்னாள் - பல நாட்கள்; பலமுறையும் எனலுமமையும். விட்டில் பூச்சியைப் போலவே காமுகரும் இளம் பரத்தையரின் தோற்றப்பொலிவை இன்ப நுகர்ச்சிக் கிடமாகக் கருதி அவர்களை அடைவர்; அவர்களால் வரும் துன்பம் நுகர்ந்து விலகுவர். அந்நிலையை விரைவில் மறந்து மீண்டும் மீண்டும் அவர்களைச் சார்ந்து துன்புற்றுப் பன்முறை விலகினாலும் முடிவில் அவர்களையே சார்ந்து காமத்தால் அழிவர். ஈண்டு காமுகனுக்கு விட்டில் பூச்சி உவமை; பரத்தை தோற்றப் பொலிவுக்கு செழிக்கின்ற தீ உவமை. பலமுறை காமுகன் பரத்தையார்பால் துன்புற்று விலகலுக்கு விட்டில்பூச்சி பலமுறை சுடரில்

சூடுற்று விலகுதல் உவமை. காமுகன் முடிவில் பரத்தையராலே அழிதலுக்கு விட்டில் பூச்சி முடிவில் நெருப்பில் கருகி இறத்தல் உவமை. ***சின்மொழி பன்னுள்*** என்றது முரண் அணி

வீழ்கின்ற - விரும்புகின்ற. மடிந்து விழுகின்ற எனலுமாம்.

வீடுதி - இப்பெரும் பிழையைத் திருவுள்ளம் கொண்டு என்னைக் கைவிடலாகாது என்றவாறு. விட்டிற் பூச்சி தீச்சுடரில் வீழ்ந்தழிதல் போல, நானும் சின்மொழியாரின் பெருங்காமத்தில் வீழ்ந்து முடிவில் இறக்கவுள்ளேன் என இரங்குவதால் அக்காமம் வெறுத்து ஒதுக்கத்தக்கது என்பது பெறப்பட்டுப் "***பிரபஞ்ச வைராக்கியம்***" புலனுவது காண்க.

110. மறுத்தனன் யானுன் னருளறி
யாமையி லென்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண்
டாய்வினை யின்றொகுதி
ஒறுத்தெனை யாண்டுகொ ளுத்தர
கோசமங் கைக்கரசே
பொறுப்பரன் றேபெரி யோர்சிறு
நாய்கடம் பொய்யினையே ௬

(இ - ள்)

என் மாணிக்க மணியே, உத்தரகோச மங்கையின் மன்னவனே; யான் அறிவின்மையால் நீ ஊட்டிய அருளமுதத்தை உண்ண மறுத்து விட்டேன். அது குறித்து அடியேனை நீ வெறுத்துக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது). கன்மக் குழுவைக் கடிந்து அடியேனை ஆட்கொண்டு அருள்வாயாக; பெரியவராயினுர் இழிந்த நாய்களைப் போன்ற சிறியவர் பொய்மையைப் பொறுத்து அருளுவர் அன்றோ.

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "என் மணியே"; உத்தரகோசமங்கைக்கு மன்னவனே; யான் அறிவின்மையில் உன் அருள் மறுத்தனன்; எனை நீ வெறுத்து விட்டிடுதி கண்டாய்; வினையின் தொகுதி ஒறுத்து எனை ஆண்டு

கொள்; பெரியோர் சிறு நாய்கள் தம் பொய்யினைப் பொறுப்பர் அன்றே - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

என் மணியே - சிவபெருமான் செந்நிறமுள்ளவனுதலின் ஈண்டு ***மணி*** என்றது மாணிக்கமணியைக் குறித்து நின்றது. "என் கண்ணின் மணியாகிய சிவப்பிரகாசம்" என்ருர் சீகாழித் தாண்டவராயர். இவ்வுலக வாழ்விற்குரிய நவமணிகள் தங்கம் நெல் முதலிய பலவகை பொருள்களிலும் மணி சிறந்ததாகலின் ***மணியே*** என்ருர். இவ்வுலகப் பொருள்களாகவும் இறைவன் விளங்குகின்ருன் என்பது குறிப்பு.

யான் அறியாமையில் உன் அருள் மறுத்தனன் - நீ ஊட்டிய அருளமுதத்தின் சிறப்பை நான் அறியாதவன் ஆதலின் மறுத்தனன் என்க.

எனை நீ வெறுத்து விட்டிடுதி கண்டாய் - அந்த அறியாமை காரணமாக என்னை வெறுத்துக் கைவிட்டு விடாதே. ஒறுத்தேனும் நல்வழிப்படுத்து என்றவாறு. ***எனை*** - என்னை என்பதன் ஒற்றிரட்டாமல் முடிந்தது . ★

வினையின் தொகுதி ஒறுத்து எனை ஆண்டுகொள் - உன் அருள் அமுதத்தை நீ என்பால் வந்து ஊட்டியும் யான் அதை வெறுத்ததற்குக் காரணம் என் அறியாமை; அறியாமைக்குக் காரணம் என் வினையின் தொகுதி. ஆதலின் என் வினையின் தொகுதியை ஒறுத்து என்னை ஆட்கொண்டருள்க என்றவாறு.

★ பொறுத்தருள் செய்யற் பாலவே சிவனே
புன்மையேன் முன்னமும் இனியும்
வெறுப்பன செய்த செய்வ எல்லாமும்
அன்றெனில் மிகைசெயு மனமே
ஒறுத்திடற் பால தளவறும் இன்னல்
உற்றுனக் கேபரம் ஆனேன்
அறுத்துற வெனைத்தள் ளுவதழ கன்றுன்
அடிமலர் பிடித்தல றுவனே.

(ஆன்மார்ப்பண துதி 30)
ஸ்ரீ அப்பைய தீட்சதர் - கவியரசு அவர்களின் தமிழாக்கம்.

வினையின் தொகுதி - சஞ்சிதகன்மத்தின் குவியல். ***தொகுதி*** - என்றதால் சஞ்சித கன்ம இருப்பின் மிகுதி காட்டியவாறு. ***ஒறுத்து*** - அழித்து. ***எனை*** - என்னை என்றதன் இடைக்குறை விகாரம்.

சஞ்சித கன்மத்தின் அழிவை;

திருச்சிற்றம்பலம்

"விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே."

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4 - 11 - 3)

எனவரும் அரசுகள் தேவாரத்திற் காண்க.

ஆண்டு கொள் - இங்கு இதனை வியங்கோள் வினைமுற்ருகக் கொண்டு உரை வகுத்தாம்.

கொள் - என்பதை மூன்று காலத்துக்கும் உரிய வினைத்தொகையாகக் கொண்டு, ஈண்டு இறந்தகாலம் குறிப்பதாகத் திருப்பெருந்துறையில் இறைவன் நம் அடிகளை ஆண்டு கொண்ட நிகழ்ச்சியாக உரைவகுத்தார் திரு. தேசிகரவர்கள்.

பெரியோர் சிறு நாய்கள் தம் பொய்யினைப் பொறுப்பர் அன்றே - ***பெரியோர்*** - செயற்கரிய செயல்களைச் செய்பவர். அச்செயல்களில் ஒன்று. சிறியோர் செய்த பெரும் பிழைகளைப் பொறுத்தல். ***சிறுநாய்கள்*** - நாய் போன்று இழிந்தவர்கள். சிறுமையின் இழிவு தோன்றச் ***சிறுநாய்கள்*** என்ருர். "சிறியோர் செய்த பெரும் பிழை எல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே" என்று உலகில் வழங்குவதை ஈண்டுக் கூறினர். ***நாய்கள்*** உவமை ஆகுபெயராய், நாய்கள் போன்றவர்கள் என்ற பொருளில் வந்தது. இது வேற்றுப்பொருள் வைப்பணி.

பொய்யினை- பொய் - உள்ளீடில்லாத பயனற்ற செயல்கள். குற்றங்கள். இவை மனத்தால் வஞ்சித்து, மொழியால் பிறழக் கூறித் தொழிலால் மாறுட்டொழுகும் தீய ஒழுக்கம். ***பொய்யினையே*** - ஏகாரம் தேற்றம்

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"இழைத்தநா ளெல்லை கடப்ப தென்றால்
இரவினொடு நண்பகலு மேத்தி வாழ்த்திப்
பிழைத்ததெலாம் பொறுத்தருள்செய் பெரியோ யென்றும்
பிஞ்ஞகனே மைஞ்ஞவிலுங் கண்டா வென்றும்
அழைத்தலறி யடியேனுன் னரணங் கண்டாய்
அணியாரு ரிடங்கொண்ட வழகா வென்றும்
குழற்சடையெங் கோனென்றுங் கூறு நெஞ்சே
குற்றமிலை யென்மேல் நான் கூறி னேனே."

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 31 - 5)

எனவரும் நம் அரசுகள் தேவாரம் நினைக.

இத்திருப்பாடலில் "உன் அருளமுதை என் அறியாமையால் மறுத்தேன்". அவ்வறியாமைக்குக் காரணம் என் வினைத்தொகுதி; அதை ஒறுத்து ஆட்கொள்ளல் வேண்டும் என்று உலக வாழ்வில் வெறுப்புற்றுக் கூறுதலால் "***பிரபஞ்ச வைராக்கியம்***" புலனாதல் காண்க.

111. பொய்யவ னேனைப் பொருளென
வாண்டொன்று பொத்திக்கொண்ட
மெய்யவ னேவிட் டிடுதிகண்
டாய்விட முண்டமிடற்று

மையவ னேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
செய்யவ னேசிவ னேசிறி
யேன்பவந் தீர்ப்பவனே. எ

(இ - ள்)

நஞ்சை உண்ட களத்தில் கரிய நிறத்தையுடையவனே; நிலைபெற்ற உத்தரகோசமங்கையின் மன்னவனே; சிவந்த திருமேனியுடைவனே மங்கல வடிவினனே, சிறியேனாகிய என் பிறப்பை ஒழிப்பவனே, பொய்யொழுக்கமுடையனாகிய என்னை ஒரு பொருளாக மதித்து ஆண்டருளி ஒப்பற்ற நின் அருட்பெருக்கால் (என் பொய்ம்மையை) மறைத்து என்னை ஏற்றுக்கொண்ட மெய்ப்பொருளே; (என்னைக்) கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை "விடமுண்ட மிடற்று மையவனே, மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே; செய்யவனே. சிவனே, சிறியேன் பவம் தீர்ப்பவனே; பொய்யவனேனைப் பொருள் என ஆண்டு, ஒன்று பொத்திக் கொண்ட மெய்யவனே; விட்டிடுதி கண்டாய்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு உரை காண்க.

விடமுண் மிடற்று மையவனே - விடம் - ஆலகால நஞ்சு. அதை உண்டவன் அது வயிற்றினுள்ளும் செல்லாமல், உமிழப்பட்டும் விடாமல் கழுத்தில் நிறுத்தினான். அதனால் செந்நிறமான அவன் திருமேனியில் கண்டம் மட்டும் கறுப்பு நிறமாக நின்று அவனது முடிவிலாற்றலுடைமையின் சின்னமாயிற்று. தேவர் முதலியோர் நஞ்சால் சாவாமலும், மக்கள் அந்த நீலகண்டத்தை வழிபட்டு உய்யவும் அருளியவாறும்.

மை - கருமை. "நீலகண்டாய நம:" என்பது சிவாஷ்டோத்திர சதநாமங்களில் ஒன்றாவது காண்க. திருநீலகண்ட நாயனார் சரிதம் பார்க்க.

மையவனே - திருமேனி முழுவதும் செந்நிறமாக நிற்கக் கண்டம் மட்டும் கருமை நிறம் கொண்டவனே. **மை** - கரியநிறம். அஃது ஆலகால நஞ்சால் உண்டானது.

சிவபெருமான் ஆலகால நஞ்சுண்ட வரலாறு முன்னம் 8 - ம் திருப்பாடல் உரையில் "நஞ்சம் அஞ்சிய வரலாறு" என்றதன் கீழுரைத்தாம் ஆண்டுக் காண்க.

செய்யவனே - திருத்தம் வேண்டாது செம்மையாக உள்ளவன் எனலுமாம்.

சிவனே-சிவன் - மங்கலம் செய்பவன்; மங்கலமாகவே இருப்பவன். சிவபுராணம் 17-ல் "சிவன்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க. ஆலகால நஞ்சுண்டும் கூட அவன் செம்மையாக உள்ளான். நஞ்சு அவன் கழுத்தில் தன் வலி மடங்கி நிற்கின்றது. ஆணவமலத்துடன் கூடிய பொய்யனுன என்னே அவன் ஏற்றுக்கொண்டால் அம்மலம் வலிமை மடங்கி நிற்கும், என்றவாறு. பதியையும் உயிர்களேயும் போல ஆணவமலமும் நித்தியத்தன்மையுள்ளது என்பது நினேக. சிவபுராணம் 12-ல் "சிவன்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

சிறியேன் பவம் தீர்ப்பவனே - அமுதம் உண்ண அவாவி வந்த தேவர்களுக்கு இடையூருக எழுந்த ஆலகால நஞ்சை அகற்றி அவர்கள் வேட்ட அமுதத்தை அருளியது போல, நின் திருவடி இன்பம் வேட்டுவந்த எனக்கு இடையூருகவுள்ளது பிறவி. அதை நீக்கி, நின் தாள்நிழல் தருக என்றவாறு. **பவம்** - பிறவி.

பொய்யவனேனேப் பொருள் என ஆண்டு. பொய்யவனேனே - பொய்யவனுன என்னேயும் என்று இழிவு சிறப்பும்மை விரித்துக் கொள்க. ***பொய்*** - பொக்கம், உள்ளீடின்மை. ஈண்டு, அன்பாகிய உள்ளீடின்மை குறித்து நின்றது.

பொருள் என ஆண்டு கொண்டு - உள்ளீடாகிய அன்பு உள்ளவன் என ஆண்டு கொண்டு பொய்யனேயும் ஏற்றுக்கொண்டானே என்று உலக மக்கள் இகழும்படி ஆண்டு கொண்டாய் எனலுமொக்கும்.

நீ ஆட்கொள்ளும் பொழுது என்பொய்ம்மையை நீக்கித் தகுதியுடையனாக்கி என்னை ஆட்கொண்டிருத்தல் வேண்டும்; ஆனால் என்னைப் பொய்யுடன் சேர்த்தே ஆட்கொண்டாய். ஆலகால நஞ்சை உண்ணுமுன் அதன் நச்சுத்தன்மையை நீக்கி உண்ணாமல், நச்சுத்தன்மையுடனே உண்டாய். நீ உண்டதால் நச்சுத்தன்மை வலிமடங்கி நிற்க, நஞ்சு உன் கழுத்தில் நிற்கத் தகுதிபெற்றது. அவ்வாறே நீ என்னைப் பொய்ம்மையுடன் ஆட்கொண்டதால் பொய்ம்மை வலிமடங்கி நிற்கும்; நான் இன்புறுவேன் என்றவாறு.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"உளமாம் வகைநம்மை வுய்யவந்
தாண்டுசென் றும்பருய்யக்
களமாம் விடமமிர் தாக்கிய
தில்லைத்தொல் லோன்கயிலை
வளமாம் பொதும்பரில் வஞ்சித்து
நின்றோர்வஞ் சிம்மருங்கு
லிளமான் விழித்ததென் றேவின்றெ
மண்ண லிரங்கியதே" **(22)**

"பொருளா வெனைப்புகுந் தாண்டு
புரந்தரன் மாலயன்பால்
இருளா யிருக்கு மொளிநின்ற
சிற்றம் பலமெனலாம்
சுருளார் கருங்குழல் வெண்ணகைச்
செவ்வாய்த் துடியிடையீர்
அருளா தொழியி னொழியா
தழியுமென் னுருயிரே" **(73)**

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார்)

என்று நம் அடிகளே அருளியுள்ளவை நினைக.

ஒன்று பொத்திக் கொண்ட மெய்யவனே - ஒன்று - ஒப்பற்றதாகிய திருவருள் "***ஒன்ருல்***" - என்புழி மூன்ரும் வேற்றுமை யுருபு தொக்கு நின்றது. என் பொய்யொழுக்கம் என்னை நீ ஆட்கொள்ளத் தகுதியற்றவனுக்கியது. அதுகண்டும் நீ என்னை ஆட்கொண்டாய். அப்பொழுது என் தகுதியின்மையை உன் திருவருளாகிய போர்வையால் போர்த்து மறைத்துக் கொண்டாய். அவ்வாறு மறைத்துக் கொண்டது நின் பேரருளுடைமையாலாம் என்றவாறு. ***ஒன்று*** - ஒப்பற்ற வீட்டுலகம் எனலுமாம் ***பொத்துதல்*** - மறைத்தல். திருப்பெருந்துறையில் இறைவன், நம் அடிகளை ஆட்கொண்ட பின்பும் வீட்டுலகம் நல்காமல் சிலகாலம் இவ்வுலகில் இருக்கும்படியும், தலயாத்திரையாகத் தில்லை வரும்படியும் பணித்த சரித நிகழ்ச்சி நினைக.

ஒன்று பொத்திக் கொண்ட - "ஒப்பற்ற உன் திருமேனியை யானையுரி போர்த்து மறைத்துக் கொண்ட" என்ருர் சீகாழித் தாண்டவராயர்.

மெய்யவனே - உண்மைப்பொருளாக உள்ளவன். தனக்கென ஓர் உடம்பு இல்லாதவன், என்பொருட்டு ஞாஞசிரியனுக மானிட உடம்பு தாங்கி வந்தவன் எனலுமமையும். ***மெய்யவன்*** - உடம்புள்ளவன். மெய்ப்பொருளாக உள்ளவன் என்பது கதிர்மணி விளக்கம்.

ஒன்று - ஒரு பொழுது. ***ஆண்டு*** - திருப்பெருந்துறையில் என்னை ஆட்கொண்டபொழுது. இதற்கு இவ்வாறன்றிப் "***பொருள் ஒன்று எண்***"- என்று கூட்டி "என்னையும் ஒரு பொருளாக எண்ணி" என்றுரைப்பர் திரு.தேசிகரவர்கள்.

இத்திருப்பாடலின்கண், நம் அடிகள் தம்மை இறைவன் திருப்பெருந்துறையில் ஞாஞசிரியனுக வந்து ஆட்கொண்டான். அவ்வாறு ஆட்கொண்டபின் வீட்டுலகம் நல்காமல் இம்மண்ணுலகிலேயே விட்டுச் சென்ருன். அதன் காரணம் தாம் இப் பொய்யுலகில் பற்றுக் கொண்டிருந்ததேயாம் என்று இவ்வுலக வாழ்க்கையை வெறுத்துக் கூறுவதால் "***பிரபஞ்ச வைராக்கியம்***" புலனுதல் காண்க.

112. தீர்க்கின்ற வாறென் பிழையைநின்
சீரரு ளென் கொலென்று
வேர்க்கின்ற வென்னை விடுதிகண்
டாய்விர வார்வெருவ
ஆர்க்கின்ற தார்விடை யுத்தர
கோசமங் கைக்கரசே
ஈர்க்கின்ற வஞ்சொடச் சம்வினை
யேனை யிருதலையே அ

(இ - ள்)

பகைவர் அஞ்சும் வண்ணம் ஒலிக்கின்ற சதங்கை மாலையணிந்த ஆனூர்தி யுடையவனே; உத்தரகோசமங்கைக்கு வேந்தனே. தீவினை யாளனுகிய என்னை ஐம்புலன்களோடு அச்சமும் நின்று இருபுறமும் இழுக்கின்றன; (ஆதலின்) என் குற்றங்களை ஒழிக்கும் விதம் எவ்வாறு என அஞ்சுகின்ற அடியேனைக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை - "விரவார் வெருவ ஆர்க்கின்ற தார் விடை உத்தரகோசமங்கைக்கு அரசே; வினையேனை அஞ்சொடு அச்சம் இருதலை ஈர்க்கின்ற; (ஆதலின்) என் பிழையை; நின் சீரருள் தீர்க்கின்றவாறு என்கொல் என்று வேர்க்கின்ற என்னை விடுதி கண்டாய்" - என்று அன்னுவயம் செய்துகொண்டு பின் உரை காண்க.

விரவார் - உள்ளம் கலவாதவர்கள், பகைவர்கள். இறைவன் யார் மாட்டும் பகைமை கொள்வானல்லன். ஆனல் தீவினைவயத்தால் இறைவனை எள்ளியும் அவன் உண்மையை மறுத்தும் ஒழுகுவோர் இங்குப் பகைவர் என்று குறிபிடப்பட்டனர். உலகாயதரும் புறப்புறச் சமயிகளும் இதில் அடங்குவர். இறைவனை வீரமிக்கவன் என்றும் மகா ருத்திரன் என்றும் மறை மொழியும்.

ஆர்க்கின்ற தார் விடை - ஆர்க்கின்றதார்; ஆர்க்கின்ற விடை என்று தனித்தனியே கூட்டுக.

ஆர்த்தல் - ஒலித்தல். ***தார்*** - மாலே. ஈண்டுச் சதங்கை மாலேயைக் குறித்து நின்றது. இதைக் கிண்ணிமாலே என்பர். இம்மாலேயை ஆனேறுகளுக்குக் கழுத்தில் அணிவித்தலே இன்றும் காணலாம். ***விடை*** - ஈண்டு அறவிடையைக் குறித்து நின்றது. அஃதெப்பொழுதும் மறத்துடன் இகலி ஆரவாரம் செய்யும். இறைவன் கொடியிலுள்ள ஆனேற்றின், காட்சியும் ஊர்தியின் ஆர்ப்பும் ஆகிய இவையே பகைவரை அஞ்சி ஓடச் செய்யும். போர் நிகழாது என்றவாறு.

வினேயேனே அஞ்சொடு அச்சம் இருதலே ஈர்க்கின்ற - ***வினேயேனே*** - ஐம்புலன் வேட்கையால் தாம் துன்புறுதல் தம் பண்டைத் தீவினேயே என்றவாறு. ***அஞ்சொடு*** - ஐம்புலன்களொடு ***அஞ்சு*** - ஐந்து என்பதன் போலி எண்ணுகுபெயராய் ஐம்புலன்களேக் குறித்து நின்றது. ***அஞ்சொடு*** - என்புழி ***ஒடு*** - உடனிகழ்ச்சிப் பொருட்டாயிற்று. அச்சத்தையும் அடக்கும் ஆற்றலுடையது ஐம்புல இன்பமாதலின்

"ஒருவினே யொடுச்சொ லுயர்பின் வழித்தே"

(தொல் - சொல் - வேற்றுமை மயங்கியல் 91)

என்னும் விதிப்படி "***அஞ்சொடு***" என "***ஒடு***" உருபைப்புணர்த்தார். ***அஞ்சு*** - கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புல இன்பங்கள். ***அச்சம்*** - ஐம்புலன்கள் வழிச்சென்ருல் வினேயும் துன்பங்களே நினேந்து வரும் அச்சம். ***இருதலே.*** தமக்குமுன்பு ஐம்புலன்களும், தமக்குப்பின்பு அச்சமும் தம்மைப்பற்றி நேர் எதிரெதிர் திசைகளில் இழுக்க. ***இருதலேயும்*** - என உம்மை விரித்துக் கொள்க. ***ஈர்க்கின்ற*** - ஈர்க்கின்றன என்றதன் அன்சாரியை கெட்டு, ஈர்க்கின்ற என நின்றது. ***ஈர்த்தல்*** - இழுத்தல். ***ஈர்கின்ற*** என்பது எதுகை நோக்கி ***ஈர்க்கின்ற*** என வலித்தல் விகாரமாயிற்று என்று கொண்டு, ஐம்புல வேட்கை ஒருபுறமும், அச்சம் மறுபுறமும் பற்றி என்னே அறுக்கின்றன எனலுமாம். ***ஈர்தல்*** - அறுத்தல்.

விரவார் வெருவ ஆர்க்கின்றதார் விடையாகிய அறக்கடவுள் இருந்தும் ஐம்புலன்கள் அஞ்சாது என்னே இழுக்கின்றனவே எனலுமாம்.

என் பிழையை நின் சீர்அருள் தீர்க்கின்ற ஆறு என் கொல் என்று வேர்க்கின்ற என்னை - என் பிழையை - என் குற்றங்களை. பிராரத்தவினையை எனலுமாம். தம்முடனிருந்த அடியார்கள் அனைவரும் வீடுபேறு எய்தத் தாம்மட்டும் இறைவனால் இவ்வுலகில் இருத்தப்பட்டது தம் வினையெச்சமே என்று நம் அடிகள் உளங்கொண்டார். ***நின்சீர் அருள் தீர்க்கின்ற ஆறு*** - அந்த வினையெச்சத்தைக் களைதற்கு இறைவன் திருவருளையன்றி வேறு துணையின்று என்று முடிவுசெய்த நம் அடிகள் நின்சீரருள் என் வினையெச்சத்தைத் தீர்க்கின்ற வழி யாது என்று உள்ளம் புழுங்கி வருந்துகின்றேன் என்கின்றார். ***சீர் அருள்*** - சிறந்தன எல்லாவற்றிலும் சிறந்த திருவருள். ***தீர்கின்றவாறு*** - வினையெச்சத்தை நான் நுகர்ந்து கழிக்கச்செய்கின்ற வழி. ***என் கொல்*** - எவன்கொல் என்பதால் திரிபு. உன் சீரருள் எப்படித் தீர்க்கப் போகின்றதோ என்றவாறு. ***என்னை*** - மனம்புழுங்கி வருந்துகின்ற என்னை.

இத்திருப்பாடலில் ஐம்புலன்கள் ஒருபுறமும் உலக இன்பத்தால் வரும் துன்பம்பற்றிய அச்சம் மறுபுறமும் தம்மைப்பற்றி எதிரெதிர்த் திசைகளில் இழுக்கின்றன. அதற்குக் காரணம் தம் வினையெச்சமே; அதை இறைவன் சீரருள் எவ்வாறு தீர்க்கப்போகிறதோ என்று உள்ளம் புழுங்குகின்றேன் என்றமையால் உலக வாழ்வை வெறுக்கும் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனாதல் காண்க.

113. இருதலைக் கொள்ளியி னுள்ளெறும்
பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண்
டாய்வியன் மூவுலகுக்
கொருதலை வாமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வல
னேந்திப் பொலிபவனே கூ

(இ - ள்)

மேல் நடு கீழ் என்னும் மூன்று பெரிய உலகங்களுக்கும் ஒப்பற்ற தலைவனே; நிலைபெற்றுள்ள உத்தரகோசமங்கையின் மன்னனே; போர்

புரிதற்குரியதும், மூன்று இலை வடிவினவாகிய நுனிகளுள்ளதுமான சூலப்படையை வலக்கையில் தாங்கித் திகழ்பவனே, இருபுறமும் நெருப்புள்ள ஒரு கொள்ளியின் உட்பகுதியில் அகப்பட்ட எறும்பைப் போன்று நின்னை விட்டுவிலகிய, அலங்கோலமுடைய என்னை விட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை; வியன் மூவுலகுக்கு ஒருதலைவா, மன்னும் உத்தர கோசமங்கைக்கு அரசே; பொருமூஇலை தலைவேல் வலன் ஏந்திப் பொலிபவனே; இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து; நினைப்பிரிந்த விரிதலையேனை; விடுதிகண்டாய் - என்று அன்னுவயம் செய்து கொண்டபின் உரை காண்க.

வியன் மூ உலகுக்கு ஒரு தலைவா - ***வியன்*** - அகன்ற, பெரிய, பெருமை பொருந்திய. இதை மூவுலகம், தலைவன் என்ற இரண்டிடங்களிலும் கூட்டி வியன்மூவுலகு; வியன்தலைவன்; என்றுரைக்க. ***வியன்தலைவன்*** - பெருமைக்குரிய தலைவன். வியலென் கிளவியகலப் பொருட்டே (தொல் - உரியியல் சூ-68) ***மூவுலகுக்கு*** - மூன்று உலகங்களுக்கும் என்று முற்றும்மை விரித்துக்கொள்க. உலகு மூன்றுவன. விண்ணுலகம், மண்ணுலகம், கீழுலகம் என்பன. மண்ணுலகுக்கு மேல் உள்ள பல உலகங்கள் விண்ணுலகத்தும், மண்ணுக்கும் கீழுள்ள பல உலகங்கள் கீழுலகத்தும் அடக்கிக் கூறப்பட்டன. அம் மூன்று உலகங்களின் ஒரு சிறு கூறும் விலக்கப்படாமல் முழுவதும் என்க.

ஒரு தலைவர் - ***ஒரு*** - ஒப்பற்ற. ஈடும் எடுப்பும் இல்லாத தனித்தலைமை குறித்தவாறு. தனக்குமேல் மற்றொருதலைவன் இல்லாதவன். பிரமனைத் தலைகொய்த ஞான்றும், திருமாலை அவன் மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம் ஆகிய அவதாரங்களில் அழித்தபோதும் காமனை எரித்த சமயத்திலும் அந்நிகழ்ச்சிகளை வேறுயாரும் தடுத்து நிறுத்தாமையே இவன் தனித்தலைவன் என்பது வெளிப்படுத்தும். எனவே, தகுதியற்ற எனக்கு நீ அருள்புரிந்துவிட்டாலும் அதுபற்றி உன்னை உசாவுவார் யாருமிலர் என்பது குறிப்பு.

ஈண்டு;

"நான்மறைக் கிழவ ....
ஈதியா வின்னரு ளின்னண மெனக்கே
சமையந் தீர்ந்த தனிப்பொரு டெரித்தற்
கமையந் தேர்கலை யருளுதி யாயினும்
எண்ணீ ராண்டைக் கிலக்கமிட் டிருந்த
அண்ணலங் குமரற் காருயிர் தோற்ற
கடாவிடை யூர்திபாற் கண்டும்
அடாதென மொழிகுந ரார்கொன்மற் றுனையே"

(பண்டார மும்மணிக்கோவை-20)

எனவரும் குமரகுருபரமுனிவர் கூற்று நினைக.

மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே - எல்லா உலகங்களையும் ஆள்வோனுயினும் அவ்வரசாட்சிக்குத் தலைநகராக உத்தரகோசமங்கையை அமைத்துக் கொண்டவன் என்றவாறு.

பொரு மூ இலை தலைவேல் - என்று மாற்றிக் கொள்க. **பொரு** - போர். **பொருதல்** - போர் செய்தல். **மூஇலை வேல்** மூன்று இலைகள் போன்ற தலைகளைக் கொண்ட வேல், சூலப்படை. வட மொழி மந்திரமாகிய ஸ்ரீ ருத்திரத்தின் தொடக்கத்தில், சிவபெருமானின் படையாகிய இந்தச் சூலப்படைக்கு வணக்கம் சொல்லப்பட்டிருப்பதால் இதன் பெருமை புலனுகும்.

பொருதலை மூ இலை வேல் என்றே கொண்டு **பொருதலை** - போர்க்களம். **அலை** - அலைக்கின்ற, துன்புறுத்துகின்ற. வினைத் தொகை. **மூஇலைவேல்** என்றுரைப்பினுமமையும். திரிசூலம் சிவபெருமான் படை என்பதை முன்னம் கீர்த்தித் திருவகவல 109 - ல் "கழுக்கடை தன்னைக் கைக்கொண்டருளியும்" என்றருளியதும் காண்க. ஆண்டு "கழுக்கடை" என்றதன் கீழுரைத்தவையும் பார்க்க "தூமதிசடைமிசை மூவிலை ஒருதாட் சூலம் ஏந்துதல், மூவரும் யான் என மொழிந்த வாறே". (திருவொற்றியூர் ஒருபா ஒருபது" - 6 - 11) எனும் பட்டினத்தடிகள் கூறுவது நினைக.

வலன் ஏந்திப் பொலிபவனே - வலன் - வெற்றியுமாம். ஏந்தியதன்றி எறியாமலே வெற்றிபெற்று விளங்குபவன் என்றவாறு. சூலம் ஏந்திய அவன் காட்சியே மெய்யடியார்களைக் காமம் முதலிய உயிர்ப் பகைகள் நண்ணுமற் காப்பதாகும்.

"வெற்றியைத்தரும் மூவிலை வேலை என் அவலங் கண்டும் அதன் மீது எறியாமல் வைத்திருக்கின்றாயே" என்பர் திரு. பாரதியாரவர்கள். இனிச் சூலம் சிவபெருமானின் இலச்சினைகளுள் ஒன்று என்பது நினைக. இவ்வுண்மையை-

திருச்சிற்றம்பலம்

"புன்னெறியா மமண் சமயத் தொடக்குண்டு போந்தவுட
றன்னுடனே யுயிர்வாழத் தரியேனுன் றரிப்பதனுக்
*கென்னுடைய நாயகநின் **னிலச்சினையிட்** டருளென்று*
பன்னுசெழுந் தமிழ்மாலை முன்னின்று பாடுவார்" (150)

"நீடுதிருத் தூங்கானை மாடத்து நிலவுகின்ற
வாடகமே ருச்சிலையா னருளாளோர் சிவபூத
மாடொருவ ரறியாமே வாகீசர் திருத்தோளிற்
சேடுயர்மூ விலைச்சூலஞ் சினவிடையி னுடன்சாத்த" (152)

*"ஆங்கவர்தந் திருத்தோளி லார்ந்ததிரு **விலச்சினையைத்***
தாங்கண்டு மனங்களித்துத் தம்பெருமா னருணினைந்து
தூங்கருவி கண்பொழியத் தொழுதுவிழுந் தார்வத்தால்
ஓங்கியசிந் தையராகி "யுய்ந்தொழிந்தே" னெனவெழுந்தார்
(153)

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - திருநாவுக்கரசுநாயனர் புராணம்)

எனச் சேக்கிழார் பெருமான் தீட்டும் செஞ்சொல்லோவியத்திற் காண்க.

இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து - "இருதலைக் கொள்ளி எறும்பு" என்பது உலகில் வழங்கும் பழமொழி. ஒரு கழியின் நடுவில் ஓர் எறும்பு இருக்கும்பொழுது அக்கழியின் இருபுறமும்

நெருப்புப் பற்றி எரியத்தொடங்கினுல் எறும்பு இருபக்கங்களிலும் மாறி மாறி ஓடி உய்ய முயலும். ஆனுல் இரு பக்கங்களிலும் நெருப்புள்ளதால் அதற்கு எப்பக்க வழியாகவும் கழியைவிட்டுச் செல்ல இயலாது. நெருப்பு இருபுறமும் நெருங்க நெருங்க வெப்பம் தாங்காது துடிக்கும். அந்நிலையில் அது தரையில் வீழ்ந்து தப்பிக்க வாய்ப்புள்ளது. பழமொழியிலுள்ள இந்தக் குறைகளைய நம் அடிகள் "***இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு***" என்றருளிச் செய்கின்ருர். மூங்கில் குழாய் போன்ற ஒருகழியினுள் ஓர் எறும்பு உள்ளபோது அம்மூங்கில் குழாயின் இருபுறமும் நெருப்புப் பற்றினுல் அஃது இருதலைக் கொள்ளியாகும் அதன் உள்ளே உள்ள எறும்புக்கு இறந்தொழிவது தவிர வேறு வழியில்லை. ஈண்டு இருதலைக் கொள்ளி என்றது ஐம்புல வேட்கையாகிய துன்பம் ஒருபுறமும், ஆட்கொண்ட இறைவனின் பிரிவு மற்ருெரு புறமுமாக வாட்டும் துன்பங்கள்.

நினைப்பிரிந்த விரிதலையேனை - ***பிரிந்த*** - பிரிந்து வருந்துகின்ற ***விரிதலை*** - துன்ப நிகழ்ச்சியினுல் உண்டாகும் அலங்கோலத்தின் அறிகுறி. இந்நாளிலும் இழவு நிகழ்ந்த இல்லங்களில் மகளிர் மாட்டுக் காணவுள்ளது. ***விரிதலை*** - விரிந்த தலைமயிர் இடவாகுபெயராகத் தலையில் மயிர் விரிந்து கிடத்தலை உணர்த்திற்று.

இத்திருப்பாடலில் "இருதலைக் கொள்ளியினுள் எறும்பு ஒத்த விரிதலையேனை" என்றதனுல் உலக வாழ்க்கையில் வெறுப்புப் பெறப்பட்டுப் "***பிரபஞ்ச வைராக்கியம்***" புலனுதல் காண்க.

114\. பொலிகின்ற நின்ருள் புகுதப்பெற்
ருக்கையைப் போக்கப்பெற்று
மெலிகின்ற வென்னை விடுதிகண்
டாயளி தேர்விளரி

ஒலிநின்ற பூம்பொழி லுத்தர
கோசமங் கைக்கரசே
வலிநின்ற திண்சிலை யாலெரித்
தாய்புர மாறுபட்டே. ௧௦

(இ - ள்)

வண்டுகள் பயின்று பாடும் விளரி என்னும் இசை நிலைபெற்ற பூஞ்சோலைகளுள்ள உத்தரகோசமங்கைக்கு மன்னவனே; முப்புரங்களையும் பகைத்து; வலிமை பொருந்திய உறுதியான மேருமலையாகிய வில்லினால் அழித்தவனே; விளங்குகின்ற நின் திருவடியில் அடைக்கலம் ஆகியும், ஊனடைந்த உடம்பின் பிறவியை வீணுக்கி வருந்துகின்ற சிறியேனை விட்டு விடுவாயோ? (விடலாகாது)

(வி - ரை)

இத்திருப்பாடலை; - அளிதேர் விளரி ஒலி நின்ற பூம்பொழில்; உத்தரகோசமங்கைக்கு அரசே; புரம்மாறுபட்டு, வலிநின்ற திண்சிலையால் எரித்தாய்; பொலிகின்ற நின்தாள் புகுதப்பெற்றும்; ஆக்கையைப் போக்கப்பெற்று மெலிகின்ற என்னை விடுதிகண்டாய் - என்று அன்னுவயம் செய்துகொண்டு உரை காண்க.

அளிதேர் விளரி ஒலி நின்ற பூம்பொழில் - அளி - நறு நாற்றத்திலேயே செல்வதாகிய தேன் என்னும் வண்டு. ஈண்டுச் சாதியொருமையாக வண்டுகளைக் குறித்துநின்றது. **தேர்** - நாடோறும் ஒலித்து மலர்கள்தோறும் தேனை ஆராய்கின்ற; ***விளரி*** - இசையின் எழுவகைகளில் ஒன்று. ***ஒலிநின்ற*** - வண்டுகள் மலர்களில் முரலும் ஒலி இடைவிடாது நிலைபெற்ற. சிலமலர்கள் சிலபருவங்களில் மட்டும் மலரும். வெவ்வேறு பருவங்களில் மலரும் மரம், செடி, கொடிகள் முதலியன இப்பதியில் நிறைந்து, ஆண்டின் எல்லாப் பருவங்களிலும் எல்லா நாட்களிலும் மலர்களைத் தருவதால் வண்டுகளின் ஓசை நிலைபெற்றுள்ளதாயிற்று. உத்தரகோசமங்கைப் பதியில் மெய்யன்பர்கள் எல்லாக்காலங்களிலும் சிவானந்தத் தேனுண்டு மனம் உருகி சிவபெருமான் புகழ்களைப் பாடிக்களிப்பர் என்பது தொனிப்பொருள். ***பூம் பொழில்*** - நால்வகைப் பூக்களும் கிடைக்கும் மலர்வனம். பொலிவு

மிக்க பொழில் எனலுமாம். பூக்கள் மலர்ந்து வீணே வீழாமல் அழகு செய்கின்றன என்றவாறு. ***புரம் மாறுபட்டு - புரம்*** - திரிபுரங்கள். இடவாகுபெயராக அங்கு வசித்த அசுரர்களைக் குறித்துநின்றது. ***மாறுபட்டு*** - மாறுபட்டதனால் என மூன்றனுருபு விரித்துக் கொள்க. அவர்கள் மறை நெறியினின்றும் மாறுபட்டுப் பௌத்த நெறியைத் தழுவி உலகங்களை அலைக்கத் தொடங்கியதனால். ***மாறுபட்டு*** - அவர்களுடன் பகைத்து எனலுமாம். திரிபுரங்களை இறைவன் எரித்த வரலாறு. கீர்த்தித்திருவகவல் *(58-59)*ல் "ஏற்றார் மூதூர் எழில் நகை எரியின் வீழ்வித்த" வரலாறு என்றதன் கீழுரைத்தாம். ஆண்டுக்காண்க. ***மாறுபட்டே*** - ஏகாரம் ஈற்றசை ***வலிநின்ற திண் சிலையால் எரித்தாய்*** - மேருமலையை வில்லாக வளைத்த செய்தி சிவபெருமானின் முடிவிலாற்றலுடைமைக்கு எடுத்துக் காட்டாகும். ***வலிநின்ற*** வலிமை எப்பொழுதும் நிலைபெற்றிருக்கும் மலை. வில்செய்வதற்கு வளையும் இயல்புள்ள மூங்கிலையும் சிலா மரத்தையும் பயன் படுத்துவர். ஆனால் வலிமையும் திண்மையும் நிலைபெற்றுச் சற்றும் வளையாத கல்லாகிய மலையைப் பயன்படுத்தினான். சில பொருள்கள் வளைக்க இயலாது. திண்மையாக இருக்கும் அவற்றை நீரில் கிடத்தியோ நெருப்பில் வாட்டியோ வளைப்பர். அப்பொழுது அவற்றின் திண்மை இயல்பு சிறிது நேரம் விலகி வளைந்துகொடுக்கும். மலையில் அவ்வாறின்றித் திண்மை நிலைபெற்றிருக்கும். ஆதலின் ***வலிநின்ற*** திண்சிலை என்றார். ***திண்மை*** - உலகைத் தாங்கும் மேருமலையின் வலிமை. ***சிலை*** - கல், வில் இரண்டும் சிலை எனப்படும். ஈண்டு இரண்டுமேயாயிற்று. ***எரித்தாய்*** - திரிபுரங்கள் இறைவன் நகையால் எரிந்தொழிந்தன. சிலை இறைவன் திருக்கையில் ஓர் படைக்கலமாகவே நின்றது. அதனால் திரிபுரங்கள் எரிக்கப்பட்டன. என்பது உபசாரம்.

பொலிகின்ற நின்றாள் புகுதப் பெற்று : பொலிகின்ற - நின்தாள் - வீட்டின்பமாக விளங்குகின்ற ஞானசிரியனாக இறைவன் எழுந்தருளிய ஞான்று இறைவன் திருவடிக்காட்சி நம் அடிகள் உள்ளத்தில் புகுந்து அங்கு இடையறாது விளங்குவதால் "***பொலிகின்ற***" என்று நிகழ் காலத்திலுரைத்தார். ***புகுதப் பெறுதல்*** - அடைக்கலம் அடைதல். ***புகுதப்***

பெற்றும் - எனச் சிறப்பும்மை விரித்துக்கொள்க. அடைக்கலம் அடைந்த என் உள்ளத்தில் நின் திருவடிகள் புகுந்ததாகிய பேறு கிட்டியும் கூட.

ஆக்கையைப் போக்கப் பெற்று - ஊனடைந்த உடம்பின் பிறவியை வீட்டின்பம் அடையப் புயன்படுத்தாது வீணுகப் போக்கி;

மெலிகின்ற என்னை - பிறவிப்பயனுகிய வீட்டின்பம் எய்தாது வருந்துகின்ற என்னை. இனி, **போக்கப்பெற்றும்** - என்று சிறப்பும்மை விரித்துக் கொண்டு, உன் திருவடிகளைச் சரணுக அடைந்து உடலின் மீதுள்ள பற்றை ஒழித்தபின்பும் நான் வீடுபேறு எய்தாமல் மெலிகின்றேன் எனலுமாம்.

இத்திருப்பாடலில் "ஆக்கையைப் போக்கப் பெற்றும் மெலிகின்றேன் என்று உலகவாழ்வின் பற்றை வெறுப்பது கூறப்படுவதனுல் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதல் காண்க.

115. மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப
யானுன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண்
டாய்வினை யேன்மனத்தே
ஊறுமட் டேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
நீறுபட் டேயொளி காட்டும்பொன்
மேனி நெடுந்தகையே கக

(இ - ள்)

தீவினையேனுகிய என் நெஞ்சத்தில் ஊறும் தேனே; மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே; திருநீறு அணியப்பட்டு வெண்ணிற ஒளி விளங்கும் பொன்னிறமான திருமேனியையுடையவனே; பெரியோனே; ஐம்புலன்களும் முரண்பட்டுச் சிறியேனை வஞ்சித்தமையால், நின் அழகிய மலர்போன்ற திருவடித் தொண்டுக்கு வேறுபட்டு ஒழுகும் சிறியேனுகிய என்னை, விட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை; - வினையேன் மனத்தே ஊறும் மட்டே; மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே; நீறுபட்டே ஒளிகாட்டும், பொன்மேனி நெடுந்தகையே; அஞ்சு மாறுபட்டு என்னை வஞ்சிப்ப யான் உன் மணிமலர்த்தாள் வேறுபட்டேனை விடுதி கண்டாய் - என்று அன்னுவயம் செய்துகொண்டு பொருள் காண்க.

வினையேன் மனத்தே ஊறும் மட்டே - வினையேன் - தீவினையாளன். ஞானுசிரியனுல் ஆட்கொள்ளப்பட்டும் ஏனைய அடியார்களுடன் வீட்டுலகம் ஏகாமல் தாம் இவ்வுலகில் நிறுத்தி வைக்கப்பட்டதற்குத் தம் தீவினையின் எச்சமே காரணம் என்று நம் அடிகள் மனங்கொண்டதால், தம்மை ***வினையேன்*** என்ருர். ***மனத்தே ஊறும் மட்டு*** - தவத்தால் தூய்மையெய்திய மெய்யடியார்கள் உள்ளத்தில் மட்டுமே இறைவனுகிய தேன் ஊற்றெடுக்கும். அதனை 104 - ம் திருப்பாடல் உரையின் கீழ் எடுத்தாண்ட திருத்தாண்டகத்தாலறிக. அவ்வாருயினும் தீவினையாளனுகிய என்மனத்திலும் அத்தேன் ஊறுவது இறைவனின் எல்லையற்ற அருட்பெருக்கினுலாயது என்றவாறு. ***மட்டு*** - தேன். ***ஊறுபட்டே*** - என்பது சீகாழித்தாண்டவராயர் கொண்ட பாடம்.

நீறுப்பட்டே ஒளி காட்டும் - ஞானுசிரியன் நம் அடிகளை ஆட்கொண்டஞான்று அவன் திருமேனியில் திகழ்ந்த வெண்ணீற்றுக் கோலம்.

பொன் மேனி நெடுந்தகையே - நம் அடிகளுக்கு ஞானுசிரியனின் திருக்கோலத்தில் காட்சி நல்கிய திருநீறு அணிந்த மேனியின் நிறம் பொன்னிறம். ஆட்கொண்ட அவனை **நெடுந்தகை** என்ருர். **நெடுந்தகை** - பெருந்தன்மையுடையவன். ***தகை*** - குணம். பொன்னை மெல்லிய கம்பியாக மிக நீளமாக இழுக்கலாம். பெரியோர்களின் பொறுமையும் அவ்வாறே ஈண்டுக் கூறிய பொன்னின் திருமேனிமேல் ஒளிவீசும் திருநீற்றின் கோலம், ஞானுசிரியனுக வந்த இறைவனுக்கும் ஒக்கும் இக்காட்சியை;

திருச்சிற்றம்பலம்

“பொன்னின் வெண்டிரு நீறு புனைந்தெனப்
பன்னு நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கு மறிவரி யானென்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை”

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் திருமலைச் சருக்கம் 1)

என்று நம் சேக்கிழார் பெருமான் கயிலைக்குப் புணர்த்து விளக்குவது காண்க. **பொன்** களிம்பு இல்லாதது. இறைவனும் இயல்பாகவே பாசங்களின் நீங்கியவன் என்பதும் நினைக. **நெடுந்தகை** - பண்பாகு பெயராக இறைவனைக் குறித்து நின்றது.

அஞ்சு மாறுபட்டு என்னை வஞ்சிப்ப - அஞ்சு - ஐந்து என்பதன் போலி. எண்ணலளவை ஆகுபெயராக ஐம்புலன்களைக் குறித்து நின்றது. **மாறுபட்டு** - என்னுடன் மாறுபட்டு என்றும். ஐம்புலன்களும் தம்முள் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டு என்றும்; ஒன்று மாற்றி ஒன்றுக என் ஒருவனையே வஞ்சிக்க என்றும் உரைக்க நின்றது. ஆதலின் உன்தாளை நினைக்கும் தவத்தில் நிற்க இயலவில்லை என்றவாறு. ஈண்டு,

திருச்சிற்றம்பலம்

“தாயுநீயே தந்தைநீயே சங்கரனே யடியேன்
ஆயுநின்பா லன்புசெய்வா னுதரிக்கின் றதுள்ளம்
*ஆயமாய **காயந்தன்னு ளைவர்நின்றொன் றலொட்டார்***
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவலமே யவனே”

(திருமுறை 1 - 50 - 7)

*“**மாறி நின்றெனைக்** கெடக்கிடந் தனையையெம்*
மதியிலி மடநெஞ்சே

தேறுகின்றில மினியுனேச் சிக்கெனச்
சிவனவன் றிரடோண்மேல்
நீறுநின்றது கண்டனே யாயினு
நெக்கிலே யிக்காயங்
கீறுகின்றிலே கெடுவதுன் பரிசிது
கேட்கவுங் கில்லேனே"

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் - 37)

என்றவையும் சிவபுராணம் 88 - ல் "கள்ளப்புலக் குரம்பை" என்றதன் உரையின் கீழெடுத்தாண்ட திருமுறைப் பாடலும் பார்க்க.

வஞ்சிப்ப - இவ் வைம்புலன்களும் தவநெறியில் நிற்கும் என்னுடன் சேர்ந்து சிவத்தையே கண்டு கேட்டு உண்டு உயிர்த்தது உற்றறிய உதவும் கடப்பாட்டின. ஆனல், இவை பிறழ்ந்து என்னே உலக வாழ்க்கையில் ஈடுபடச்செய்து வஞ்சித்து விட்டன என்றவாறு.

யான் உன் மணிமலர்த்தாள் வேறுபட்டேனே - ***மணிமலர்த்தாள் - மணி*** - அழகிய, மலர்த்தாள் வண்ணத்தாலும் வடிவாலும் தாமரை மலரைக் போன்றுள்ள திருவடி. **வேறுபட்டேனே** - வேறுபட்ட என்னே. **வேறுபடுதல்** - திருவடியைச்சார்ந்து திருவடிவண்ணமாகவே இருக்க வேண்டிய யான்; பாசத்தைச்சார்ந்து பாசமாகவே உள்ளேன்; அந்நிலே, ஐம்புலன்கள் என்னே வஞ்சித்ததால் என்றவாறு. **வேறுபட்டேனே** - வேறுபட்டேன்- வினேயாலணேயும் பெயர். தன்மை ஒருமை. "ஐ" இரண்டனுருபு. "வேறுபட்ட என்னே" என்றவாறு. பின்வரும் இடங்களிலும் இவ்வாறே கொள்க.

இத்திருப்பாட்டில் "ஐம்புலன்கள் மாறுபட்டு வஞ்சித்ததனுல் யான் உன் மணிமலர்த்தாள் வேறுபட்டேன் என்று உலக வாழ்க்கையை வெறுத்துரைப்பதனுல் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதல் காண்க.

116. நெடுந்தகை நீயென்னை யாட்கொள்ள
யானைம் புலன்கள்கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண்
டாய்விர வார்வெருவ
அடுந்தகை வேல்வல்ல வுத்தர
கோசமங் கைக்கரசே
கடுந்தகை யேனுண்ணுந் தெண்ணீ
ரமுதப் பெருங்கடலே கஉ

(இ - ள்)

பகைவர்கள் அஞ்ச, அவர்களை அழிக்கும் தன்மையுடைய சூலப்படையில் வல்லவனே; உத்தரகோசமங்கைக்கு வேந்தனே; கொடுந் தன்மையுடையேனாகிய யான் பருகுதற்குரிய தெளிந்த தன்மையுடைய அமுதமயமான பெரிய கடலாக உள்ளவனே. பேரருட்குணமுடைய நீ சிறியேனை ஆளாகக் கொள்ளவும் ஐம்புலன்களைக் கொண்டு நின் சார்பைக் கைவிடும் இயல்பினனாகிய என்னை விட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை - "விரவார் வெருவ அருந்தகை வேல் வல்ல, உத்தரகோசமங்கைக்கு அரசே, கடுந்தகையேன் உண்ணும் தெள் நீர் அமுதப் பெருங்கடலே, நெடுந்தகை நீ, என்னை ஆட்கொள்ள, யான் ஐம்புலன்கள் கொண்டு விடும் தகையேனை; விடுதிகண்டாய்" - என்று அன்னுவயம் செய்துகொண்டு பொருள் காண்க.

விரவார் வெருவ - பகைவர்கள் அஞ்ச; என் பகைவர்களாகிய ஐம்புலன்களும் அஞ்சும்படி எனலுமாம்.

அடும்தகை வேல்வல்ல - கொல்லும் இயல்பினதாகிய முத்தலை வேலைச் செலுத்துவதில் வல்ல. முன்னம் 113 - ம் திருப்பாட்டில் "பொருதலை மூவிலை வேல் வலன் ஏந்திப் பொலிபவனே" என்றருளியதும், அதன் கீழுரைத்தவையும் பார்க்க. "திருவடிக்கு அன்பில்லாத உயிரை நிக்கிரகம் செய்யச் சூலாயுதம் தரித்த நாதனே" - என்றார் சீகாழித் தாண்டவராயர்.

உத்தரகோசமங்கைக்கு அரசே - அடியார்களுக்கு அனுக்கிரகம் செய்யத் திருஉத்தரகோசமங்கையில் எழுந்தருளிய மகாதேவனே என்ருர் சீகாழித் தாண்டவராயர்.

கடும் தகையேன் உண்ணும் - **கடுமை** - ஈண்டு பிறவித் துன்பமாகிய கொடுமை குறித்தது. அது வெப்பமாக வாட்டுவதால் அதை மாற்றுவதற்காக நீர் வேண்டியுள்ளது. **உண்ணும்** - பருகும்.

தெண்ணீர் அமுதப் பெருங்கடலே - பிறவித்துன்பம் எத்துணைப் பெரியதாயினும் இறைவன் திருவருளாகிய அமுதத்தை ஒருசிறிது பருகின் பிறவிவெப்பம் தணிந்து போகும். ஆனுல் தம் பிறவிக்குக் காரணமான வெப்பம் மிகப்பெரிதாகலின் அதை ஒழிப்பதற்கு அளப்பரிய திருவருள் கடலாக உதவுவதாகக் கூறினுர். மழை வளங்குன்றில் கடலின் வளமும் சுருங்கும். திருவருள், மழை முதலிய வருவாயின்றி, ஆன்மாக்கள் எவ்வளவு பருகினும் குறைவுருமல் நிறைந்து நிற்றலால் **பெருங்கடல்** என்ருர். பருகினுர்க்கு ஞானம் நல்கித் தெளிவுறுத்தலின் தெண்ணீர் என்ருர். பௌதிகக் கடல் உண்ணத்தக்க தெண்ணீர் கடலாக இருப்பினும் கூட, பருகிய பொழுது மட்டுமே வெப்பம் தணிக்கும். திருவருளாகிய கடல் பிறவிவெப்பம் தணிப்பதும் இனிப் பிறவியே இல்லாமற் செய்து இறப்பதையும் ஒழிப்பதால், இது ***அமுதப்பெருங்*** கடலுமாயிற்று. ***தெண்ணீர்*** - தெளிந்த நீர்மையுடைய ***தண்ணீர்*** - என்று பாடம் கொண்டு, **கடு** - நஞ்சு என்றுரைத்து, மலபோத நஞ்சைப் புசிப்பதான எனக்குக் குளிர்ந்த அமுதப் பெருங்கடலான சிவானந்தத்தை உன்ன அருளிய அநுபூதிக்கு என்ன கைம்மாறு செய்வேன் என்றுரைத்தார் சீகாழித் தாண்டவராயர். இப்பாடபேதமும் விளக்கமும் சிறப்பாயிருப்பினும் இது வரை வெளிந்துள்ள வேறு பதிப்புக்களில் எல்லாம் ***தெண்ணீர்*** என்றே காணப்படுதலின் அவ்வாறே பாடம் கொண்டாம். தண்ணீர், அமுதம் என வழங்கப்படுவதை

“ வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று”

(திருக்குறள் 11)

"அன்றுமுத ளுடோறு நாடோறு மண்ண
லடியரள விறந்தபெயர் வந்தவர்க ளெல்லாஞ்
சென்றுறையத் திருமடங்க டிருமடங்க டோறும்
திருவிளக்கங் கவர்சாத்த வுள்ளுடைமேற் போர்வை
துன்றியசெந் நெலினடிசில் கன்னனறுங் கனிக
டுயவறு சுவைக்கறி நெய்தயிர் திரண்ட பாறே
னன்றுதிருப் பண்ணியந்தண் ணீரமுத மடைக்காய்
நரபதியே வலினமைச்சர் நாடோறு நடத்த"

(திருத்தொண்டர்புராண வரலாறு 82)

என்பவற்றிற் காண்க.

நீ என்னை ஆட்கொள்ள - ஆட்கொள்ளவும் என்று சிறப்பும்மை விரித்துக் கொள்க. ஆள்வாரில்லாத ஒருவன் மனம் போன வழியில் சென்று கெட்டொழிதலும் கூடும். அவ்வாறன்றி நீ என்னை ஆட்கொண்டும் கூட நான் ஐம்புல இன்பங்களைப் பற்றி உன் திருவருட் பயனை இழக்கும் நிலையில் உள்ளேன் என்றவாறு.

யான் ஐம்புலன்பற்றி - நீ கைவிட்டு விடுவாயோ என்றஞ்சுவதற்குக் காரணம் கூறியவாறு.

இத்திருப்பாடலில் ***"ஐம்புலன் கொண்டு விடும் தகையேன்"*** என்றதனுல் உலக வாழ்க்கையில் உள்ள பற்றை வெறுத்துக் கூறுதல் பெறப்படும் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதல் காண்க.

117. கடலினுள் நாய்நக்கி யாங்குன்
கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதிகண்
டாய்விட லில்லடியார்
உடலில மேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
மடலின்மட் டேமணி யேயமு
தேயென் மதுவெள்ளமே. கரு

(இ - ள்)

விடுதல் இன்றிப் பற்றிநிற்கும் நின் மெய்யடியாரின் உடலையே திருக்கோயிலாகக் கொண்டு, அதன் கண்ணே நிலைபெற்று எழுந்தருளியுள்ளவனும், உத்தரகோசமங்கையின் வேந்தனுமாகியவனே, மலர் இதழ்களில் உள்ள தேனே, மாணிக்கமணியே, அமுதமே, எனக்குக் கிட்டிய கள்ளின் வெள்ளமே, கடலின் கண்ணுள்ள நீரை நாய் நக்கியுண்பது போன்று, நின் அருட்பெருங்கடலின் கண்ணே, உள்ளத்தை விரும்பிச் செல்லவிடாத சிறியேனைக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை, - "விடல் இல் அடியார் உடல் இலமே மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே; மடலின் மட்டே, மணியே; அமுதே, என் மது வெள்ளமே; கடலின்உள் நாய்நக்கி யாங்கு; உன் கருணைக் கடலின் உள்ளம் விடல் அரியேனை; விடுதிகண்டாய்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

விடல் இல் அடியார் - உன்னை விடுதல் இல்லாது பற்றிநிற்கும் மெய்யடியார்கள். ஒரொருகால் உன்னைப்பற்றியும் பின்னர் விட்டும் நிற்கும் அன்பர்கள் போலன்றி இடையறுது உன்னையே தியானம் செய்து கொண்டிருப்பவர்கள். அவர்கள் இயல்பை;

திருச்சிற்றம்பலம்

"இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடறனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையே
லதுவோவுனதின் னருலாவடு துறை யரனே"

(திருமுறை-3-4-1)

"காண்டலே கருத்தாய் நினைந்திருந்தேன்
மனம்புகுந்தாய் கழலடி
பூண்டுகொண் டொழிந்தேன்
புறம்போயினு லறையோ
ஈண்டுமாடங்க ணீண்டமா ளிகைமேலெழுகொடி
வானி ளம்மதி
தீண்டிவந் துலவும்
திருவாரூ ரம்மானே." (திருமுறை-4-20-1)

" நின்ருலு மிருந்தாலுங் கிடந்தாலு நடந்தாலும்
மென்ருலுந் துயின்ருலு விழித்தாலு மிமைத்தாலு
மன்ருடு மலர்ப்பாத மொருகாலு மறவாமை
குன்ருத வுணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - பத்தராய்பணிவார்புரா - 7)

எனவரும் திருவாக்குகளில் காண்க. ★

உடல் இலமே மன்னும் - முறுகிய அன்பிஞல் கட்டுண்டு இறைவன் மெய்யடியார்களின் நெஞ்சத் தாமரையையே தன் கோயிலாகக் கொண்டு நிலே பெற்றிருப்பன், என்றவாறு. ***இலமே*** - இல்லமாக.

இலமே - என்புழி ஏகாரத்தைப் பிரித்து உடல் என்பதனேடு இயைத்து இரண்டனுருபு விரித்துக் கொள்க. உடலேயே இல்லமாக என்றவாறு.

★ " விடலிலமே வரும் வேதவிழுப் பொருடனை விடலில் வடியார்
உடலிலமேயென ஓதினன் வாதநல் லூரன் வருப்பினெடே"
(மோகவதைப் பரணி)

"அங்கோல மரத்தையதன் விதையும் காந்தத்தையய வூசி யும்தான்
மங்காத கற்புடையாள் கொழுநனேயு மரத்தைமலர்க் கொடியும் பாய்ந்து
பொங்கோதை யாறுகட லினையும்போன் மனவிருத்தி புலன்கள் செற்ற
யெங்கோனின் மலரடியை யெய்தியிருப் பதுபத்தி யென்பதாமே."
(சிவானந்த லகரி 61 சங்கர பகவத்பாதாள்
கவியரசு அவர்கள் மொழிபெயர்ப்பு)

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"**காயமே கோயிலாகக்** கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனுர்க்குப் போற்றவிக் காட்டினோமே"

(திருமுறை 4-76-4)

"நற்பதத்தார் நற்பதமே ஞான மூர்த்தீ
நலஞ்சுடரே நால்வேதத் தப்பால் நின்ற
சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற
சொலற்கரிய சூழலாய் இதுவுன் தன்மை
நிற்பதொத்து நிலையிலா நெஞ்சந் தன்னுள்
நிலாவாத **புலாலுடம்பே புகுந்து நின்ற**
கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன்
கனகமா மணிநிறத் தெங் கடவுளானே."

(திருமுறை 6-95-4)

"படமாடக் கோயிற் பகவற் கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா .
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே"

(திருமந்திரம் 1857)

திருச்சிற்றம்பலம்

என்பன நினைக.

மன்னும் - இதை இடைநிலைத் தீவகமாகக் கொண்டு "உடலிலமே மன்னும்" "மன்னும் உத்தரகோசமங்கை" என ஈரிடத்தும் புணர்க்க.

மடலின்மட்டே - இருலினின்றும் தொகுக்கப்படும் தேன் ஈக்களின் எச்சில், பிழியும் பொழுது நசுங்கிக் கலக்கும் தேனீக்களின் முட்டைகள், தேன் மெழுகு ஆகியவை கலந்துள்ளதாகும். அவ்வாறன்றி மலர் இதழ்களின் தேன் என்றது தேனின் தூய்மைகுறித்து நின்றது.

மணியே அமுதே - மணி - செந்நிறமுள்ள மாணிக்கமணி. இறைவன் நம் அடிகளை ஆட்கொண்டபோது கொண்டிருந்த ஞானாசிரியனின் திருவுருவம் செம்மைமிக்க ஒளியுடையதாக விளங்கிய கோலம். ***அமுது*** - மரணத்தை நீக்குவது. இறைவன் தன்னையடைந்தார் மரணம் பிறப்பு என்ற இரண்டையுமே நீக்கி அழிவில் வீட்டின்பம் தருவதால் ஈண்டு அமுதே என்றார்.

என் மதுவெள்ளமே - மது ஊறும் இடம் நோக்கித் தென்னைமது, பனைமது என்பது போலச் சிவானந்த வெள்ளம் ஆன்மாவினிடத்தில் ஊறுவதில்லை. அது சிவபெருமானின் உடைமை. ஆன்மா அதை அனுபவித்தற்கு உரியது. ஆதலின், ***என் மதுவெள்ளம்*** என்றார். ஈண்டு; "இந்நிலைதானில்லையே" எனத் தொடங்கும் சிவஞான சித்தியார் சுபக்கம் - சூத் - *8* பாடல் *34* - ம் அதற்கு நம் மாதவச் சிவஞான முனிவர் உரையும் நினைக. மது சிறிது உண்ணினும் களிப்பு மிகவுண்டாகும். இம்மது இவ்வுலகை மறந்து சிவானந்தக் களிப்பை அளவின்றித் தருதலின் ***மது வெள்ளமே*** என்றார். ***மடலின் மது*** ஒவ்வொரு மலரினின் தினையளவே இருக்கும்; இம்மதுவோ இறைவன் ஒருவனிடத்தே வெள்ளமாகப் பெறவுள்ளது.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"தினைத்தனை யுள்ளதோர் பூவினிற்றே னுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறு மெப்போது
மனைத்தெலும் புண்ணெக ***வானந்தத் தேன்சொரியுங்***
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ."

(திருவாசகம் 217)

திருச்சிற்றம்பலம்

என்றது நினைக.

கடலின் உள் நாய் நக்கி ஆங்கு - உண்ணுதற்குரிய நல்ல நீர் எத்துணை மிகுதியாக இருப்பினும் நீர்வேட்கை கொண்ட நாய்க்கு அதைத் தனக்கு வேண்டுமளவு விரைந்து பருக இயலாது. நக்கி நக்கிச் சிறிது சிறிதாகவே உண்ணும். கிட்டியது உவர்ப்பு நீராயின் வேறு வழியின்றி

விடாய் மிகுதியால் சிறிது நக்கியுண்டும், உவர்ப்பு மிகுதியால் போதிய அளவு உண்ண இயலாமலும் மீண்டும் சிறிது நக்கியுண்டும் விலகும். ஈண்டுக் கிட்டியது இறைவன் திருவருளாகிய அமுதம். அஃதும் அளந்தறிய இயலாத கடல்போன்று மிகுதியாகக் கிட்டியுள்ளது. என் தீவினைப் பயனால் அதைப் போதிய அளவு பருக இயலாமல் சிறிது சிறிதே உண்டேன் என்றவாறு.

விடல் அரியேனை - உன் திருவருளாகிய கடல் கிட்டினும் அதில் என் உள்ளம் முழுதும் செல்ல விடாதபடி என்னைத் தடுப்பது என் தீவினை. நான் அத்துணைத் தீவினையாளன் என்றவாறு.

இத்திருப்பாடலில் உன் திருவருள் வெள்ளம் என்முன் பெருங்கடலாக விரிந்து கிடக்கின்றது அதில் என் உள்ளம் முழுதும் செல்ல விடாமல் என் தீவினை உலகப்பற்று வடிவில் என்னைத் தடுக்கின்றது என்று இரங்குவதால் "***பிரபஞ்ச வைராக்கியம்***" புலனாதல் காண்க.

118. வெள்ளத் துணைவற்றி யாங்குன்
அருள்பெற்றுத் துன்பத்தின்றும்
விள்ளக் கிலேனை விடுதிகண்
டாய்விரும் புமடியார்
உள்ளத்துள் ளாய்மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய்களி
யாத களியெனக்கே கச

(இ - ள்)

நின்னை விரும்பி அன்பு செய்யும் மெய்யடியார் உள்ளத்து வீற்றிருப்போய்; நல்ல நீர்ப்பெருக்கில் அடித்துச் செல்லப்படும் சாணிப்பறவை நீர்வேட்கையால் வருந்துவது போல, நின் திருவருட் பேற்றுக்கு ஆளாகியும் இன்னும் உலக வாதனையாகிய துன்பத்தினின்றும் நீங்குதற்குரிய ஆற்றல் இல்லாத சிறியேனை விட்டு விடுவாயோ?

(விடலாகாது). வஞ்சகச் செயலுடையேனுகிய எனக்குப் பொறி புலன்களின் வழியாக எய்தப்பெருத மாறிலா மகிழ்ச்சியை அருள்புரிவாயாக.

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "விரும்பும் அடியார் உள்ளத்து. உள்ளாய், மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே; வெள்ளத்துள் நாவற்றி ஆங்கு, உன் அருள் பெற்று இன்னும் துன்பத்துள் விள்ளக்கிலேனை; விடுதிகண்டாய்; கள்ளத்துள்ளேற்கு எனக்குக் களியாத களி அருளாய்" என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

விரும்பும் அடியார் உள்ளத்து உள்ளாய் - விரும்புவது உள்ளத்தின் செயல். ஆதலின் தன்னை விரும்பும் உள்ளத்துள் இறைவன் உள்ளவனுகின்ருன் என்றவாறு.
இதனை;

திருச்சிற்றம்பலம்

"நினைத்தவர்கள் நெஞ்சுளாய் வஞ்சக்கள்வா
நிறைமதியஞ் சடைவைத்தா யடையா துன்பால்
முனைத்தவர்கள் புரமூன்று மெரியச் செற்ருய்
முன்னுனைத் தோல்போர்த்த முதல்வா வென்றுங்
கனைத்துவரு மெருதேறுங் காள கண்டா
கயிலாய மலையாநின் கழலே சேர்ந்தேன்
அனைத்துலகு மாள்வானே ஆனைக் காவா
அல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 62 - 4)

எனவரும் அரசுகள் தேவாரத்திலும் காண்க.

வெள்ளத்துள் நாவற்றி ஆங்கு - வெள்ளத்துள் நின்றும் ஒருவன் நீர்வேட்கையால் வருந்துவது போல.ஈண்டு;

"அயிரை பரந்த வந்தண் பழனத்
தேந்தெழின் மலர்ந்த தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கிவள்
................"

(குறுந்தொகை 178)

என்றது நினைக. இதில் ஆம்பல் பூத்துள்ள நீர் சேற்று நீர், அது பருக உதவாது; உன் அருள்வெள்ளம் பருகுதற்குரியது. ஆனால் நான் பருகாது வருந்துகின்றேன் என்க.

சாணிப்பறவை என்னும் ஒருவகைப் புள் வெள்ள நீரிலே வசிக்கும். பெருவெள்ளம் வரும்பொழுது வெள்ளத்தினால் அடித்துச் செல்லவும்படும். ஆனால் அஃது அந்நீரை அருந்தும் வகையறியாது நீர் வேட்கையால் வருந்தும். அவ்வாறே யான் உன் அருள்பெற்றும் துன்பத்தினின்றும் நீங்காதவன் ஆனேன் என்றவாறு. சாணிப்பறவை, என்ற எழுவாய் வருவித்துக் கொள்க. **ஆங்கு** - போல. உவம உருபு. சாணிப்பறவை செய்தியைக் கூறுபவர், திரு. சீகாழித்தாண்டவராயர். இதற்கு இவ்வாறன்றி. ***நாவற்றி*** என்பதை எட்டுக்கால் பூச்சி வகைகளுள் ஒன்றான நாவற்றிப் பூச்சி என்று கொண்டு, அது நாள் முழுதும் நீரில் மிதந்து கொண்டே இங்குமங்கும் திரியும்; எனினும் நீரினால் எப்பயனும் அடைவதில்லை என்பர் பேராசிரியர் திரு. அ.ச. ஞானசம்பந்தம் அவர்கள். இக்காட்சி மருத நிலப்பாங்கான ஊர்களில் கழனிப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் இன்றும் காணப்படும் ஒன்றாகும். இவ்வாறு பொருள் கொள்ளுங்கால் "அலைந்த" என்னும் ஒரு சொல் வருவித்து "***நாவற்றி அலைந்தாங்கு***" என்று பொருள் கொள்க.

உன் அருள்பெற்று இன்னும் துன்பத்துள் விள்ளக்கிலேனை - ***அருள் பெற்றும்*** - எனச் சிறப்பும்மை விரித்துக் கொள்க. ***துன்பத்துள்*** நீங்கற் பொருளில் வந்த "இன்" உருபு தொக்கு நின்றது. "துன்பத்தினின்றும் விள்ளக்கிலேனை" என்றவாறு. ***விள்ளக்கிலேன்*** - விள்ளகிலேன் என்பது விரித்தல் விகாரம் பெற்றது. ***கில்*** - ஆற்றல் உணர்த்தும் இடைச்சொல். நல்ல நீர் வெள்ளத்தில் பருகி அதில் தோய்ந்தாற்கு நீர் வேட்கை ஒழியும், உடல்வெப்பமும் தணிந்து சுகம் உண்டாகும். அவ்வாறே திருவருளைத் துய்த்துத் திளைத்தாற்குப்

பொறிபுலன்களாலான துன்பம் முற்றிலும் ஒழிந்து, பேரின்பமாகிய பரமசுகம் உண்டாகும். இவ்வுவமையிலும் ஒன்றன் நீக்கமும் ஒன்றன் விளைவும் நேர்வது காண்க. நன்னீர்ப் பெருக்கை நண்ணிய ஒருவன் முதலில் நீரைப்பருகி விடாய் தீர்த்துக் கொள்வன். பின்னர் நீரில் தோய்ந்து உடல் வெப்பம் மாறிச் சுகம் பெறுவன். நீரையே அவன் பருகவில்லை எனில் அதில் தோய்ந்து உடல் வெப்பமும் மாற்றிக் கொள்ளான். ***நாவற்றியாங்கு*** என்றதால் நான் திருவருளால் துன்ப நீக்கமே பெற்றிலன், எனவே சிவானந்தப் பேரின்பமாகிய இன்பம் துய்த்தல் எங்கே? என்றவாறு. ஈண்டு;

"வெள்ளத்து ணாவற்றி யாங்கு விடிந்திருளாங்
கள்ளத் தலைவர் கடன்"

(திருவருட்பயன் 38)

என்ற ஞானசாத்திரம் நினைக.

கள்ளத்துள்ளேற்கு; எனக்கே - உன் திருவருள் நல்கும் பேரின்பத்தை வேட்டுத் தவத்தில் ஈடுபட்டு உன்னைத் தங்கள் உள்ளத்தாமரையில் எப்பொழுதும் வீற்றிருக்கச் செய்யும் மெய்யன்பர்களுக்கு நீயே வலிந்து சென்று அதை அளிப்பை; வஞ்சகம்கொண்ட நெஞ்சுடைய வல்வினையேனாகிய நான் அதை நின்மாட்டு இரந்து பெறற்குரியவன் என்றவாறு. ***எனக்கே*** - ஏகாரத்தைப் பிரித்துக் களி என்பதுடன் புணர்த்து "***களியே***" - எனப் பிரிநிலைப் பொருளிலும் கொள்க. ***களியாதகளி*** - இது வரை நான் பெற்றுக் களித்தவை எல்லாம் ஐம்புலன்களின் துகர்ச்சியால் வந்தவையே. இப்பொழுது நான் நின்பாலிரப்பது இதுவரை பெற்றிராத களிப்பு. அது மெய்யுணர்வினால் உணரக் கூடியது என்றவாறு. ***களி*** - போதை. ***களியாத களி*** - மதுவுண்ணாமலே வரும் களிப்பு என்பர் கவியரசு அவர்கள். மெய்யுணர்வினால் வரும் சிவ போகத்தை;

திருச்சிற்றம்பலம்

"உணர்வி னேர்பெற வருஞ்சிவ
போகத்தை யொழிவின்றி யுருவின்கண்

அணையு மைம்பொறி யளவினு
மெளிவர வருளினை யெனப்போற்றி
இணையில் வண்பெருங் கருணையே
யேத்திமுன் னெடுத்தசொற் பதிகத்திற்
புணரு மின்னிசை பாடின
ராடினர் பொழிந்தனர் விழிமாரி"

(பெரியபுராணம் - திருஞானசம்பந்த நாயனார் புராணம் 161)

"காண்டலுந் தொழுது வீழ்ந்துட னெழுந்து
கரையிலன் பென்பினை யுருக்கப்
பூண்டவைம் புலனிற் புலப்படா வின்பம்
புணர்ந்துமெய் யுணர்வினிற் பொங்கத்
தாண்டவம் புரியுந் தம்பிரா னாரைத்
தலைப்படக் கிடைத்தபின் சைவ
ஆண்டகை யாருக் கடுத்தவந் நிலைமை
விளைவையா ரளவறிந் துரைப்பார்"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் 90)

என்று பெரியபுராணம் பேசுவது காண்க.

கழியாத களி - என்று பாடங்கொண்டு நீங்குதல் இல்லாத ஆனந்தம் என்றுரைத்தார் திரு. பாரதியார் அவர்கள்.

அருளாய் - அருள்வாயாக என வேண்டுகோளாகவும்; அருளாமல் உள்ளாய் என்று எதிர்மறையாகவும் உரைக்க நின்றது.

ஆய் - வினைப்பயனால் துன்புறும் என் நிலையை ஆய்வு செய்து, ***அருள்*** - அருள்பாலிப்பாயாக எனவும் உரைக்க நின்றது.

இத்திருப்பாடலில், "உன் அருள்பெற்றும் துன்பத்தினின்றும் விள்ளக்கில்லேன்" என்று உலகவாதனையாகிய துன்பத்துக்கு ஆற்றாது இறைவனை வழுத்துவதால் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனாதல் காண்க.

119. களிவந்த சிந்தையொ டுன்கழல்
கண்டுங் கலந்தருள
வெளிவந்தி லேனை விடுதிகண்
டாய்மெய்ச் சுடருக்கெல்லாம்
ஒளிவந்த பூங்கழ லுத்தர
கோசமங் கைக்கரசே
எளிவந்த வெந்தைபி ரானென்னை
யாளுடை யென்னப்பனே. கரு

(இ - ள்)

மெய்ம்மையான ஒளி மண்டலங்களுக்கெல்லாம் ஒளி உண்டாவதற்குக் காரணமானவனும், பொலிவுமிக்க திருவடிகளையுடையவனும் உத்தர கோசமங்கைக்கு வேந்தனுமாகியவனே, எளிமையிற் காட்சி நல்கியவனே, எம் தந்தை முதலியோருக்கும் தலைவனே; சிறியேனை ஆளாகவுடைய என் தந்தையே, மகிழ்ச்சி மிக்க உள்ளத்தோடு உன் திருவடியைத் தரிசனம் செய்தும், நீ என்னுடன் இரண்டறக்கலந்து அருளும் வண்ணம், வெளிப்பட்டுவராத என்னைக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "மெய்ச்சுடருக்கெல்லாம் ஒளிவந்த பூங்கழல், உத்தரகோசமங்கைக்கு அரசே; எளிவந்த எந்தைபிரான்; என்னை ஆளுடை என் அப்பனே; களிவந்த சிந்தையொடு, உன்கழல் கண்டும்; கலந்து அருள் வெளிவந்திலேனை; விடுதி கண்டாய்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

மெய்ச் சுடருக்கெல்லாம் - ஞாயிறு, திங்கள், தீ முதலிய ஒளி மண்டலங்கள் எல்லாம் இயற்கையில் அமைந்த ஒளியுடையன ஆதலின் ***மெய்ச்சுடர்*** என்றார். அவற்றின் ஒளிக்கூறுகளே உலகில் நாம் காணும் பிற ஒளிகள். எனினும் இம்மும்மண்டலங்களுக்கும் ஒளி நல்குவது இறைவன் திருவடியாகலின், ஒளி வந்த பூங்கழல் என்றார்.

ஒளிவந்த பூங்கழல் - ஈண்டு வந்த என்ற பெயரெச்சம் கருவிப்பெயரொடு முடிந்தது. "உண்டகலம்" என்பது போலக் கொள்க.

*"**ஒளியான திருமேனி** உமிழ்தான மிகமேவு*
களியார வாருமானே கழல்நாளு மறவாமல்
அளியாளும் மலர்தூவு மடியார்க ளுளமான
வெளியாகும் வலிதாய வினேகூட நினேயாவே" (1)

*"**ஓங்கொளியா** யருள்ஞான மூர்த்தி யாகி*
உலகமெலா மளித்தருளு முமையம்மை காணத்
தேங்கமழு மலரிதழி திங்கள் கங்கை
திகழரவம் வளர்சடைமேற் சேர வைத்து
நீங்கலரும் பவத்தொடர்ச்சி நீங்க மன்றுள்
நின்றிமையோர் துதிசெய்ய நிருத்தஞ் செய்யும்
***பூங்கமல மலர்த்தாள்கள்** சிரத்தின் மேலும்*
புந்தியினு முறவணங்கிப் போற்றல் செய்வாம்" (2)

(சிவப்பிரகாசம் - பாயிரம்)

என நம் ஞானசாத்திரம் நவில்வன காண்க. இதில் இரண்டாம் பாடலுக்கு உரை உதவிய மதுரைச் சிவப்பிராகாசர் இந்தத் திருவாசகத் திருப்பாடலே மேற்கோளாக எடுத்தாண்டுள்ளது கண்டின்புறுக. திருவாசகம் *30* - உரையில் எடுத்தாண்ட சிவஞான சித்தியார் சூ *-1* செய் *52* - ம், திருவாசகம் *88* - ம் பாடல் உரையில் எடுத்தாண்ட பேரூர்ப்புராணம் நிருத்தப்படலம் செய்யுள் 67 - ம் காண்க.

பூங்கழல் - வண்ணத்தாலும் வடிவாலும் தாமரைமலரை ஒத்த திருவடிகள். ***கழல்*** - தானியாகு பெயராக்த் திருவடியை உணர்த்தி நின்றது. சிவபுராணம் *8* - ல் "கழல்" என்றதன் கீழுரைத்தவை காண்க. இதற்கு இவ்வாறன்றி, "அந்தக்கரணங்களில் ஒன்ருன மனத்துக்கு ஒளி தருவது ஆன்மா, ஆன்மாவுக்கு ஒளிதருபவன் இறைவன். ஆதலின் மெய்ச்சுடருக்கெல்லாம் ***ஒளிவந்த பூங்கழல் என்ருர்;"*** என்று விளக்குவர் கவியரசு அவர்கள்.

எளிவந்த எந்தை பிரான் - *அத்துணே அரியவனுயினும்* இறைவன் என்பொருட்டு யான் காணும் வண்ணம் என்போல் மானிட வடிவுடன் திருப்பெருந்துறையில் எளியவனுக வந்தான் என்றவாறு. அவ்வாறு அவன்

எளிமையாக வந்ததற்குக் காரணம் அவன் எந்தையும் தலைவனுமாய் நின்றதாகும். **பிரான்** - உபகாரி; என்னை விட்டுப் பிரியாதவன். **வந்த** - கருவிப்பொருளில் வந்த செய்த என்னும் பெயரெச்சம். மூன்றுமடியில் ஒளிவந்த என்றதன் கீழுரைத்தவை காண்க.

என்னை ஆளுடை என் அப்பன் - ஒருவனை ஆட்கொள்வோன் அவனுக்குத் தந்தையாக இருத்தல் வேண்டும் என்னும் நியமம் இன்மையால் என்னை ஆளுடை அப்பன் என்று இயைத்து இயம்பினர்.

என்னை - என் ஐ - என் தலைவன் எனலுமாம். **ஆள்** - மூன்று காலத்துக்கும் பொருந்தும் வினைத்தொகை. அருள் செய்யவேண்டும் என்று விண்ணப்பம் செய்யும் உரிமை குறித்து நின்றது.
ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"எம்பிரா னெந்தை தந்தை
தந்தையெங் கூட்ட மெல்லாந்
தம்பிரா னீரே யென்று
வழிவழிச் சார்ந்து வாழும்
இம்பரின் மிக்க வாழ்க்கை
யென்னைநின் றீருஞ் சூலை
வம்பென வாண்டு கொண்டா
னொருவனே தீர்ப்பான் வந்து"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - ஏயர்கோன் - 92)

எனவரும் சேக்கிழார் பெருமான் திருவாக்கை நினைக.

களிவந்த சிந்தையொடு உன் கழல்கண்டும் - உலகில் ஒரு பொருளைக் காணுங்கால் அக்காட்சி விருப்பையோ அன்றி வெறுப்பையோ விளைவிக்கும். விருப்பினுல் இன்பமும் வெறுப்பினுல் துன்பமும் நிகழும். இறைவன் திருவடிக்காட்சி அவ்வாறன்றி அழிவில்லாத பேரின்பம் பயப்பதாகும். ஆதலின் இறைவன் திருவடிக்காட்சி களிவந்த சிந்தைக்குக் காரணமாயிற்றென்றுர். நம்

அடிகள் பாசப்பிணிப்பால் சிறிதும் சலியாது மிக்க மிகிழ்ச்சியுடன் அக்காட்சியில் திளைக்கலானார். இஃது இறையருளிற் கலத்தற்கான முதற்சாதனம்.

கலந்து அருள் - நீ என்னுடன் இரண்டறக் கலந்தருளும் வண்ணம்.

மேற்குறித்த சாதனத்தின் பயனை நல்கவேண்டும் கடப்பாடு இறைவன் மேலதாம். ஆதலின் ***கலந்து அருள்*** என்று விண்ணப்பம் செய்தார் எனலுமாம்.

வெளிவந்திலேனை - உலகியற் பிணிப்பினின்றும் வெளிப்பட்டுத் திருவருளை நோக்கிவராத என்னை என்றவாறு. திருவருளில் கலத்தற்கு உரிய ஞானப் பெருவெளியின் எல்லைக்குள் வராத என்னை எனலுமாம்.

கழல்காணுதல் சிவதரிசனம். அதன் பயன் ஆன்மசுத்தி, அஃது ஈண்டு **வெளிவருதல்** என்று குறிக்கப்பட்டது. அதன்பின் நிகழவுள்ளது "சிவபோகம்".

விடுதிகண்டாய் - இங்ஙனம் முடிவான பயனை விளைக்கும் அபேத சாதனம் பெறாத குறையைக் காரணமாகக் கொண்டு என்னைக் கைவிட்டு விடாதே; ஏன் எனில் நீ எனக்குத் தந்தையாயும் பிரானாயும் ஆட்கொண்டவனாயும் உள்ளாய் என்றவாறு.

இத்திருப்பாடலின்கண் "கலந்தருள வெளிவந்திலேனை" என்றதால் பேதசாதனம் கைகூடியும் நான் முன்னேறி அபேத சாதனத்தில் திளைக்கவில்லை. இந்நிலை நீடிப்பின் மீண்டும் உலகியலில் வீழ்ந்து விடுவேனோ என்ற அச்சம் குறிப்பால் பெறப்படுவதால் "***பிரபஞ்ச வைராக்கியம்***" புலனாதல் காண்க.

120. என்னையப் பாவஞ்ச லென்பவ
ரின்றிநின் றெய்த்தலைந்தேன்
மின்னையொப் பாய்விட் டிடுதிகண்
டாயுவ மிக்கின் மெய்யே

உன்னையொப் பாய்மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
அன்னையொப் பாயெனக் கத்தனொப்
பாயென் னரும்பொருளே கசு

(இ - ள்)

நிலைபெற்ற உத்தரகோசமங்கையின் மன்னவனே; காட்சிப்பட்ட அளவில் மின்னலை ஒப்பாய்; மெய்ம்மையாக உனக்கு உவமை கூறப்புகின், நின்னையே நீ ஒப்பாய்; எனக்குத் தாயையும் தந்தையையும் ஒப்பாய்; எனக்குப் பெறலரும் பொருளாக உள்ளவனே, என்னை நோக்கி "அப்பா; அஞ்சாதே" என்று சொல்லுவார் இல்லாமல் வருந்தி நின்று அலைந்து இளைத்தேன்; இந்நிலையில் விட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை - "மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே; மின்னை ஒப்பாய்; மெய்யே உவமிக்கின், உன்னை ஒப்பாய்; எனக்கு அன்னை ஒப்பாய், அத்தன் ஒப்பாய்; என் அரும் பொருளே; என்னை "அப்பா அஞ்சல்" என்பவர் இன்றி; நின்று எய்த்து அலைந்தேன்; "விட்டிடுதி கண்டாய்" என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

மின்னை ஒப்பாய் *- இறைவன், திருப்பெருந்துறையில் ஞானாசிரியனாக எழுந்தருளி நம் அடிகளை ஆட்கொண்டஞான்று அவன் திருமேனி மின்னலைப் போன்று ஒளிபரப்பிக் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கிய சரித நிகழ்ச்சியைக் கூறுகின்றார். உவமேயப் பொருளினும் உவமம் உயர்ந்ததாக இருத்தல் வேண்டும் என்பது விதி. ஈண்டு இறைவன் திருமேனியின் ஒளிக்கு உவமை கூற உலகில் ஒன்றுமே இல்லையாதலின், உலகியற் பொருளில் சிறந்த ஒன்றை எடுத்துக்காட்டுவான் புகுந்த நம் அடிகள் மின்னலைக் கூறினர். அஃது இறைவன் திருமேனியின் ஒளிபற்றியும் காட்சியளித்து உபதேசம் நல்கி விரைவில் மறைந்தருளிய தொழில்பற்றியும் கூறப்பட்டது. ஆகலின் உருவும் தொழிலும் பற்றிய உவமையாயிற்று.*

மெய்யே உவமிக்கின் உன்னை ஒப்பாய் - உண்மையாக உவமை கூறவேண்டுமானுல் உனக்கு நீயே உவமையாவாய்; இந்த மின்னலின் உவமை உபசாரமாகக் கூறப்பட்டதேயாகும். ***உவமிக்கின் மெய் மின்னை ஒப்பாய்*** என்று கூட்டி உவமை கூறப்புகின் உடம்பு மின்னலை ஒத்திருப்பவனே எனக்கூறி ஏகாரம் அசைநிலை எனலுமொன்று.

மெய்யே - என்பதை விளியாகக் கொண்டு உண்மைப் பொருளே! உவமிக்கின் உனக்கு நீயே ஒப்பாக உள்ளாய் எனலுமமையும். முன்னர்ச் சிவபுராணம் 33 - ல் "மெய்யே" என்றதன் கீழுரைத்தவை காண்க.

உன்னை ஒப்பாய் என்றது உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் உவமை காணமுடியாதவன் என்றவாறு.

பெருமையாலுயர்ந்த நாயன்மார்களுக்கு உவமை கூறவந்த நம் சேக்கிழார் பெருமான் அவர்களுக்கு வேறு ஒருவர் உவமையாகாமையின் அவர்களுக்கு அவர்களே உவமையாவர் என உளங்கொண்டார். அவர்களுள்ளும் நாயனுர் ஒருவருக்கு நாயனுர் மற்ருருவர் உவமையாகார்; ஒவ்வொருவரும் தமக்குத்தாமே உவமையாவர் என முடிவு செய்தார். இவ்வுண்மையை அவர் நமக்கு நேரே உணர்த்தாமல் நம் பரம ஆசாரியமூர்த்திகளாகிய நம்பியாரூரருக்கு இறைவன் கூறுவதாக நம் உள்ளத்தில் செலுத்துகின்ருர்.

அதனை;

திருச்சிற்றம்பலம்

"பெருமையாற் றம்மை யொப்பார்
பேணலா லெம்மைப் பெற்ருர்;
ஒருமையா லுலகை வெல்வார்;
ஊனமே லொன்று மில்லார்;
அருமையா நிலையி னின்ரு
ரன்பினு லின்ப மார்வார்;

இருமையுங் கடந்து நின்று
ரிவரை நீ யடைவா யென்று"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் தடுத்தாட்கொண்ட புராணம் 196)

என்று பெரியபுராணம் பேசுவதிற் காண்க.

இத்துணைச் சிறந்த நாயன்மார்கள் ஆன்ம வருக்கங்கள். வீடு பேற்றிலும் அவர்கள் சிவானந்தம் நுகர்வதற்கு மட்டுமே உரியவர்களாகி, இறைவன் அடிமைகளாக இருப்பர். இத்தகைய நாயன்மார்க்கே உவமை இல்லை என்புழி இவர்களை அடிமைகளாகக் கொண்டுள்ள இறைவனுக்கு எவ்வாறு உவமைகாட்ட இயலும்? அந்நிலையை ஈண்டு நம் அடிகள் "**உன்னை ஒப்பாய்**" என்றருள் செய்தார்.

ஈண்டு,

"அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து"

(திருவருட்பயன் 1)

"பெருமைக்கு நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றி
னருமைக்கு ***மொப்பின்மை யான்"***

(திருவருட்பயன் 3)

-என்பன நினைக.

எனக்கு அன்னை ஒப்பாய் அத்தன் ஒப்பாய் - சிறியேனாகிய என்னை நோக்கி நினக்கு உவமம் கூறப்புகின் நீ எனக்குத் தாயும் தந்தையும் போல்வாய். **எனக்கு** - ஈன்று வளர்த்தலில் அன்னையும் சான்றோனாக்கலில் தந்தையும் இன்றியமையாதவர்களாவர். கன்மத்துக் கீடாகிய உடலை மாயையினின்றும் படைத்து உதவியதால் நீ எனக்கு அன்னையை ஒத்தாய்; ஞானாசிரியனாக வந்து உபதேசம் செய்து நெறிப்படுத்தியதால் ***அத்தனை ஒப்பாய்*** என்றவாறு.

என் அரும்பொருளே - இம்மைக்குரியது புகழ்; மறுமைக்குரியது அறம். இவ்விரண்டனையும் கடந்து எய்துவதாகிய வீடுபேற்றுக்குரியது ஞானம். அதை நல்குபவன் ஞானுசிரியன் ஆதலின் எனக்குக் கிடைத்தற்கரிய பொருளே என்ருர். இறைவன், எல்லாவற்றையும் இழந்தும் பெறற்குரிய அரும்பொருள் என்பதை நாயன்மார் சரிதங்கள் பலவற்றுள்ளும் காண்க.

என்னை அப்பா அஞ்சல் என்பவர் இன்றி - உலகியற் பொருள் பற்றி அச்சம்நேரின் மேன்மக்கள் யாரையேனும் நண்ணில் அவர்கள் அஞ்சற்க என்று கூறிக்காப்பர். மறுமைப் பொருள்பற்றிய அச்சம்நேரின் திருமால் முதலிய தேவர்களில் யாரையேனும் வழிபட்டு வேண்டில் அவர்கள் அச்சம் ஒழித்துக்காப்பர். ஈண்டு நம் அடிகள் அவாவியது வீட்டுலகமாகும். அதற்குத் தடையாக நின்று அச்சுறுத்துவது பாசப்பிணிப்பாகும். அதை ஒழித்து "அஞ்சற்க" என்று கூறி உய்விப்பவர் மக்கள், தேவர் கூட்டங்களில் ஒருவருமிலர். ஆதலின் "***அஞ்சல் என்பவர் இன்றி***" என்ருர். ***அப்பா*** - இது தந்தை மகனை நோக்கிக் கூறும் செல்வமொழி. ***அஞ்சல்*** - அஞ்சவேண்டா. இது பாசப்பிணிப்பின் காரணமாக வரும் துன்பம் பற்றிய அச்சம் "அஞ்ச லோம்புமதி" (திருமுருகாற்றுப்படை 296) என்பது நினைக.

எய்த்து அலைந்தேன் - அலைந்து எய்த்தேன் என்று மாற்றிக் கொள்க. என் அறியாமை காரணமாகப் பல பிறவிகளில் "***அஞ்சல்***" என்று கூறிக் காக்கத் தகுதியற்றவர்களான தேவர்கள் பலரை வழிபடுவதில் அலைந்து இளைத்தேன் என்றவாறு.

விடுதிகண்டாய் - என் அறியாமையால் நின்னைப் புகலடையாது பிறரை நாடி அலைந்து இளைத்தது என்பிழை. அது காரணமாக என்னைக் கைவிட்டு விடுவாயோ என்றவாறு.

இத்திருப்பாடலில் நம் அடிகள் உலகியல் நலன் கருதிப் பிறதேவர்களை வழிபடுதல் வீட்டுநெறிக்கு உதவாமை பற்றிக் கூறுவதால் "***பிரபஞ்ச வைராக்கியம்***" புலனுதல் காண்க.

121. பொருளே தமியேன் புகலிட
மேநின் புகழிகழ்வார்
வெருளே யெனைவிட் டிடுதிகண்
டாய்மெய்ம்மை யார்விழுங்கும்
அருளே யணிபொழி லுத்தர
கோசமங் கைக்கரசே
இருளே வெளியே யிகபர
மாகி யிருந்தவனே கஎ

(இ - ள்)

நின் மெய்ப்புகழைப் பழித்துரைக்கும் பொய்ம்மையாளர்க்கு அஞ்சத்தக்க பொருளே; புகழ் பாராட்டும் மெய்ம்மையாளர்க்கு உண்ணும் அருளமுதே, அழகிய சோலைகள் சூழ்ந்த, உத்தர கோச மங்கைக்கு வேந்தனே; மாயாகாரியப் பொருளைப் பற்றிப் புறப்பார்வையால் நோக்குவார்க்கு மறை பொருளாக உள்ளவனே, உலகியற் பொருள்களை மாயாகாரியம் என்று உணர்ந்து விலக்கி அகப் பார்வையால் நோக்குவார்க்கு வெளிப்படு பொருளாயுள்ளவனே. எனக்கு இம்மையும் மறுமையுமாய் நின்று இதுகாறும் உதவிபுரிந்த பெருமானே; மெய்ப்பொருளாக உள்ளவனே; வேறு துணையிலியாகிய எனக்குப் புகலிடமாக உள்ளவனே; கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை "நின் புகழ் இகழ்வார் வெருளே; மெய்ம்மையார் விழுங்கும் அருளே; அணிபொழில் உத்தரகோச மங்கைக்கு அரசே; இருளே; வெளியே; இகபரமாக இருந்தவனே; பொருளே; தமியேன் புகலிடமே; எனை விட்டிடுதி கண்டாய்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

நின்புகழ் இகழ்வார் வெருளே - இறைவனைப் பற்றிய புகழே மெய்ம்மையானதாகும். இறையம்ச குணம் இல்லார் புகழ் பொய்ம்மையாய்ப் புனைந்துரையாய் முடியும். இவ்வுண்மையை;

"இருள்சேர் இருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

(திருக்குறள் 5)

என்னும் பொதுமறையானும்; அதற்கு "இறைமைக் குணங்கள் இலராயினரை உடையரெனக் கருதி அறிவில்லார் கூறுகின்ற புகழ்கள் பொருள் சேராவாகலின் அவை முற்றுமுடைய இறைவன் புகழே பொருள்சேர்புகழ் எனப்பட்டது" என்னும் பரிமேலழகர் உரைப்பகுதியாலும் அறிக. எனவே, இறைவன் புகழில் விருப்பு உண்டாதல் வேண்டும். சிலருக்கு விருப்பு உண்டாகாது ஒழியும். அஃது அவர்கள் தவக்குறைவினுல் நிகழ்வது. விருப்பின்மையுடன் ஒழியாது சிலருக்கு இறைவன் புகழில் வெறுப்பு உண்டாகி இகழ்வராயின் அது மிகவும் கொடியதாகும். அதனையே ஈண்டு **நின்புகழ் இகழ்வார்** - என்றருளினர். அத்தகைய தீவினையாளருக்கு இறைவன் அஞ்சத்தக்கனுவன் என்பார் **வெருளே** என்றார். **வெருள்** - அச்சம். அஞ்சத்தக்கது என்றவாறு.

மெய்ம்மையார் விழுங்கும் அருளே - **மெய்ம்மையார்** - இறைவன் திருப்புகழை உண்மையன்புடன் போற்றுகின்றவர்கள் **விழுங்கும் அருளே** - உண்ணும் அமுதம்போன்ற திருவருள்வடிவாக உள்ளவன். **விழுங்குதல்** - கனி முதலியவற்றை உண்ணுங்கால் மென்று சத்துப்பகுதியை மட்டும் உட்கொண்டு தோல், நார், கொட்டை முதலியவற்றை உமிழ்ந்து விடுகின்றோம். திருவருளில் அவ்வாறு கழிக்கப்படும் பகுதிகள் இன்மையால் முழுவதையும் விழுங்கும் நிலையிலுள்ளது என்றவாறு.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"**கற்றவர் விழுங்குங்** *கற்பகக் கனியைக்*
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த

கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரவென் கண்குளிர்ந் தனவே"
திருச்சிற்றம்பலம்

(திருவிசைப்பா 48)

எனவரும் சேந்தனுர் செந்தமிழ் நினைக.

மெய்ம்மையார் விழுங்குவது அருளாகிய அமுதம் என்றமையால், புகழ் இகழும் பொய்ம்மையார் விழுங்குவது தீவினையாகிய அஞ்சத்தக்க நஞ்சு என்பது பெற்றும். மெய்ம்மையாரால் விழுங்கப்படும் அருள் என்றும் மெய்ம்மையாரை விழுங்கும் அருள் என்னும் உரைக்கநின்றது காண்க. பொய்ம்மையாளர் இகழ்வர் என்றதால் மெய்ம்மையாரைப் பாராட்டிப் பரவுவர் என்பது பெற்றும்.

இருளே - மாயையின் காரியமாகிய உலகைப் புறப் பார்வையால் நோக்கி அதனையே பொருள் என்று கொள்வார்க்கு இறையின் விளக்கம் கிட்டாமையால் **இருளே** என்ருர்.

வெளியே - உலகை நோக்காது உமையொருபாகனையே அகப்பார்வையால் நோக்கி உணர்வார்க்கு அவன் நன்கு புலப்படலின் **வெளியே** என்ருர். **இருளே** - **வெளியே** முரண்.

ஈண்டு;

"தன்னே ரிலாஞான சம்பந்தன் தாளடைந்தார்க்
கென்னே ***யிருள்வெளியாம்*** *என்பரால் - அன்னேன்*
*அருளாத போது****வெளி யாயிருந்த வெல்லாம்***
இருளா யிருந்த *வெனக்கு"*

(பண்டார மும்மணிக் கோவை - 18)

எனவரும் குமரகுருபர சுவாமிகள் திருவாக்கு நினைக. 119 - ம் பாடல் உரையில் எடுத்தாண்ட சிவப்பிரகாசம் 1,2 பாடல்கள் காண்க.

இகபரமாகி இருந்தவனே - நம் அடிகள் இறைவன் தம்மை பிறவியில் ஞானசிரியனுக வந்து ஆட்கொண்டது தம் மேலைத்தவத்தின் பயன் என்று கருதினர். அஃது இவ்வுலகில் இப்பிறவியில் பெற்றபேறு, அதனுல் **இகம்** ஆயிற்று. இப்பிறவியில் அவன் ஆட்கொண்டமையால்

இனி மறுமை இன்றி வீடுபேறுபெறும் நிலே எய்திற்து அது **"பரம்"** ஆயிற்று. அந்நிலே உறுதியாதலின் **இருந்தவனே** என இறந்தகாலத்திற் கூறினர்.

பொருளே - பொருள் - மெய்ப்பொருள், என்றும் அழியாது நிலேபெற்றிருப்பது. அதை **வஸ்து** என்பர் வடமொழியாளர். அதனின்றும் போந்தது வாஸ்தவம் - உண்மை.
ஈண்டு;

"பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானு மாணுப் பிறப்பு"

(திருக்குறள் 351)

என்புழி **"பொருள்"** என்ற சொற்கு மெய்ப்பொருள் என்று பரிமேலழகர் கூறிய உரை நினைக.

தமியேன் புகல் இடமே - தமியேன் - துணையில்லாதவன். பலர் உடனிருந்தும் தன்னந்தனியாக இருப்பவன் பிறிதொரு சார்பும் இல்லாமல், தனிப்பட்ட எனக்கு எப்பொருட்கும் சார்பாகிய மெய்ப்பொருளாக உள்ள நீயே முடிவாக அடைதற்குரிய இடனுவாய் என்றவாறு. ★

"தமரு மமரு மனேயு மினிய தனமு மரகும் அயலாகத்
தறுகண் மறலி முறுகு கயிறு தலேயை வளேய எறியாதே
கமல விமல நடன உபய கனக மணிகொள் இருபாதம்
கருத அருளி யெனது தனிமை கழிய அறிவு தரவேணும்
குமர சமர புரியின் முருக குலவு பழநி மலேயோனே
கொடிய பகடு முடிய முடுகு குறவர் சிறுமி மணவாளா

★ கல்வியான் ஆய கழிநுட்பம் கல்லார்முன்
சொல்லிய நல்லவும் தீயவாம் - எல்லாம்
இவர்வரை நாட தமரையில் லார்க்கு
நகரமுங் காடுபோன் றுங்கு.

(பழமொழி நானூறு 213)

அமர ரிடரு மவுணருடலு மழிய வமர்செய் தருள்வோனே
அறமு நிறமு அயிலு மியலு மழகுமுடைய பெருமாளே.”

(திருப்புகழ் 757)

-என்ற அருணகிரிநாதர் திருவாக்கிலும் இத்தனிமை பற்றி அறிக.

விட்டிடுதி கண்டாய் - நின்னையே மெய்ப்பொருள் என உணர்ந்து புகலிடமாகக் கருதி அடைந்தேன். என்னை நீ கைவிட்டு விடுவாயோ! அவ்வாறு கைவிட்டுவிட்டால் வேறு பற்றுக்கோடு இல்லாத யான் என் செய்வேன்? என்னைக் கைவிடலாகாது என்றவாறு.

இத்திருப்பாடலில் “பொருளே தமியேன் புகலிடமே” என்று இறைவனைச் சுட்டிக் கூறியதால் அவனல்லாத மாயாகாரியப் பொருள்கள் எல்லாம் நிலையற்றவை என்பதும், அவற்றின் சார்பு வெறுத்து ஒதுக்கத்தக்கது என்பதும் பெறப்படுதலின் “***பிரபஞ்ச வைராக்கியம்***” புலனுதல் அறிக.

122. இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொள்
ஒற்றிவை யென்னினல்லால்
விருந்தின னேனை விடுதிகண்
டாய்மிக்க நஞ்சமுதா
அருந்தின னேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
மருந்தின னேபிற விப்பிணிப்
பட்டு மடங்கினர்க்கே கஅ

(இ - ள்)

கடலில் தோன்றிய பெருநஞ்சை அமிழ்த உணவாகக் கொண்டு உண்டு அருளியவனே; நிலைபெற்ற உத்தரகோசமங்கைக்கு அரசனே; பிறப்பாகிய நோய்வாய்ப்பட்டு முடக்கம் உற்றூர்க்கு நோய் நீக்கும் மருந்தாக உள்ளவனே; என் உள்ளத்தே எழுந்தருளி இருந்து, அடிமையாகிய என்னை ஆண்டுகொள்க; விற்றுக்கொள்க; ஒற்றிவைத்துக்

கொள்க என்று கூறுதலன்றிப் பிறிதொன்றினுக்கும் உரிமையில்லாத, புத்தடியவனுன என்னை விட்டுவிடுவாயோ? (விடலாகாது);

(வி - ரை)

இத்திருப்பாடலை "மிக்க நஞ்சு அமுதா அருந்தினனே; மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே; பிறவிப் பிணிப்பட்டு மடங்கினர்க்கே; மருந்தினனே; இருந்து என்னை ஆண்டுகொள்; விற்றுக்கொள்; ஒற்றிவை; என்னின் அல்லால் விருந்தினனேனை; விடுதிகண்டாய்" - என்று அன்னுவயம் செய்துகொண்டு உரைகாண்க.

மிக்க நஞ்சு அமுதா அருந்தினனே : மிக்கநஞ்சு - திருப்பாற்கடலின் அடியில் நஞ்சு இருந்தது. தேவர்களும் அசுரர்களும் அதனைக் கடைந்தஞான்று அது மேல்வந்தது. தாம்புக்கயிருகப் பயன்பட்ட வாசுகி உடல் வருத்தம் பொருது கக்கிய நஞ்சும் அந்நஞ்சுடன் சேர்ந்து மிக்க நஞ்சாகிய ஆலகாலமாயிற்று. ***மிக்க*** - அளவில் மிகுந்த. இந்த வரலாற்றை;

" ஊன்று பேதுற வெய்தியே
யாற்ற வெய் துயிர்த்துத்
தோன்று வெஞ்சினங் கொண்டுமெய்
பதைத்துநாத் துடிப்ப
ஆன்ற ஆயிரம் வாய்தொறும்
ஆலகா லத்தைக்
கான்ற தத்துணை அளக்கரு
முமிழ்ந்தது கடுவே."

(கந்தபுராணம் - தட்சகாண்டம் ததீசி உத்தரப்படலம் 327)

-என்று கச்சியப்ப சிவாசாரியார் கூறுவது காண்க.

மிக்க - என்பதற்கு மிகை, செருக்கு என்று கொண்டு உலகங்களை அழிக்கச் செருக்குடன் எழுந்த நஞ்சு எனலுமமையும். ஈண்டு;

"அடுங்கால மிதுவென்ன விடமெழலு
நனிவெருவி யயன்மா லேனோர்
கொடுங்காலன் றனைக்குமைத்த குரைகழற்கீழ்ச்
சரண்புகுதக் கொதித்து வாழ்நாள்
பிடுங்காம லருள்புரிந்த பரம்பொருளை யன்றியுமோர்
பிரானுண் டென்ன
நடுங்காதார் தமைக்காணப் பெற்றிடினு
மென்னுள்ள நடுங்கு மாதோ"

(காஞ்சிப்புராணம் - மணிகண்டீச்சரப் படலம் 67)

" நம்பா நினக்கோல முறையோ வெனக்கால
நஞ்சுண்டு பித்துண்டு நாந்தேவ றென்பார்
தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த
தயவாளர் கூடற் றடங்காவில் வண்டீர
செம்பாதி மெய்யுங் கரும்பாதி யாகத்
திருத்தோளும் மார்பும் வடுப்பட்ட துங்கண்
டெம்பாவையைப்பின்னு மம்பாவை செய்வார்
எளியாரை நலிகிற்பி னேதா மிவர்க்கே"

(மதுரைக்கலம்பகம் 29)

"மாயிரு ஞாலத்து மன்னுயிர்கள்
கண்களிப்ப மன்று ளாடும்
நாயகன் கண்டங் கறுத்தன்றே
பொன்னுலகை நல்கிற் றம்மா
நாயகன் கண்டங் கறுதேலந் நாட்டமரர்
சேயிழை மாதருக்குச் செங்கைகளுங்
கொங்கைகளும் சிவக்கும் போலும்"

(சிதம்பரச் செய்யுட்கோவை 49)

-என்பவற்றிற் காண்க. மேலும்;

திருச்சிற்றம்பலம்

"ஓங்கு மொருவிட முண்டம்
பலத்தும்ப ருய்யவன்று
தாங்கு மொருவன் தடவரை
வாய்த்தழங் கும்மருவி
வீங்குஞ் சுனைப்புனல் வீழ்ந்தன்
றழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கு மவர்க்கறி யேன்சிறி
யேன் சொல்லும் வாசகமே"

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் - 158)

-என்றதில் ஓங்கும் ஒருவிடம் என்புழி, "உலகம் முழுதையும் சுடும் வண்ணம் மேன்மேலும் வளரா நின்றதோர் விடம்". எனப் பேராசிரியர் உரை கூறுவதும் காண்க.

அமுதா அருந்தினன் - நோயுற்ற காலத்தில் நோய் நீங்க மருத்துவன் தரும் மருந்து மிகவும் கசப்பாக இருப்பின் நோய் நீங்க வேண்டுமே என்று மிகவும் வெறுப்புடன் உண்பர். ஈண்டுக் கூறப்படும் நஞ்சு, நோய் நீக்குவதன்று உயிரையே நீக்குவது. ஆனுல் இறைவன் அதை உண்ணும் பொழுது மரணத்தை நீக்குவதும் மிக்க சுவையுள்ளதுமான அமுதமாகக்கருதி விருப்புடன் உண்டான் என்றவாறு. அவ்விருப்பம் உலகம் உய்ய வேண்டும் என்ற பேரருளினுலாம். **அருந்துதல்** - விரும்பி உண்டல். ***அமுதா*** - "அமுதாக" என்பதிலுள்ள ஈற்றகரம் தொகுத்தலாயிற்று. ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

" மருந்து வானவ ருய்யநஞ் சுண்டுகந்
திருந்த வன்கழிப் பாலையு ளெம்பிரான்
திருந்து சேவடி சிந்தையுள் வைத்திவள்
பரிந்து ரைக்கிலு மென்சொற் பழிக்குமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 5 - 40 - 2)

-எனவரும் நம் அரசுகள் அமுதமொழி காண்க.

இத்திருப்பாடலில், "வானவர் மருந்துண்டு உய்யத் தான் உகந்து நஞ்சுண்டு இருந்தவன்" என இயைத்துப் பொருள் கொள்க.

பிறவிப் பிணிப்பட்டு மயங்கினர்க்கே : பிறவிப் பிணி - உடலைப் பற்றி நின்று வருத்தும் நோய்போன்று, பிறவி, உயிரைப் பற்றி நின்று வருத்துதலின் பிறவியைப் பிணி என்ருர். பிறவி, இடையிடையே இன்பம் நல்குவதாயினும், அவ்வின்பம், துன்பம் விரவியுள்ளது. பிறவி, வீடு பெறுவதற்குத் தடையாகவுள்ளது. வீட்டின்பத்துடன் ஒப்பிடும் பொழுது துன்பமாகவும் உள்ளது. ஆதலின் பிறவியைப் ***பிணி*** என்ருர்.

மடங்கினர்க்கே - மடங்குதல் - ஆற்றல்குன்றி முடக்கம் எய்துதல். உறுப்புக்கள் தத்தம் தொழில்களைச் செய்யாது பிணிக்கப்படுதல். பிறவியாகிய பிணி, ஆன்மாவைத் தவநெறியில் சென்று உய்யவிடமால் பிணித்தலின் ஆன்மாவை மடக்கியதாயிற்று. ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது.

மருந்தினனே - நோய் நீங்க மருத்துவனுல் தரப்படுவது மருந்து. ஈண்டு மருத்துவனுகிய இறைவனையே மருந்தாகக் கூறினுர். என்னை;

"உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானுற் கூற்றே மருந்து"

(திருக்குறள் 950)

-என்று பொய்யாமொழி நோய்தீர்ப்பானுகிய மருத்துவனையும் மருந்து என்று மொழிவது காண்க. மேலும், போற்றித் திருவகவல் 200 - ல் "போராயிரமுடைப் பெம்மான்" என்றதன் உரையில் எடுத்தாண்ட திருத்தாண்டகத்தில், "***மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்***" என்றது காண்க.

இருந்து என்னை ஆண்டுகொள் விற்றுக் கொள் ஒற்றிவை என்னின் அல்லால் : இருந்து - என்னுள் வேறறக் கலந்து நிலைபெற்று. ***ஆண்டு கொள்*** - என்னை அடிமையாகக் கொள்வாயாக. உலகில் ஒருவன் தனக்கு உடைமையாகவுள்ள ஒரு பொருளை ஆளுங்கால், ஆள்வோனுகிய அவன், ஆளப்படும் பொருளினின்றும் வேருக இருந்து ஆள்வதைக் காண்கின்ருேம். இறைவன் தன் அடிமையாகிய உயிரை ஆளுங்கால் இவ்வுலகியலுக்கு மாருக வேறறக் கலந்துநின்று ஆள்வான் என்பார்

இருந்து என்னை ஆண்டுகொள் என்றார். முன்னரும் "கடையவனேனைக் கருணையினாற் கலந்தாண்டுகொண்ட" என்றது காண்க.

விற்றுக்கொள் ஒற்றிவை - 18-ம் திருப்பாடலில் "விற்றெலாமிக வாள்வதற்குரியவன்" என்றன் கீழுரைத்தவை பார்க்க.

இருந்து - என்பதை ஒவ்வொன்றனுடனும் கூட்டி. "***இருந்து என்னை ஆண்டுகொள்; இருந்து என்னை விற்றுக்கொள்; இருந்து என்னை ஒற்றிவை***" என்றுரைக்க.

என்னின் அல்லால் - என்று கூறுவதைத் தவிர்த்து. இதன்பின் "பிறிதொன்றும் செய்தற்கு உரிமை இல்லாத" என்பன அவாய் நிலையாய் வருவித்துரைக்க.

விருந்தினனேனை : விருந்து - புதிதாக வந்தவன் ஈண்டுப் புதிய அடியவனான என்னை என்றவாறு. அடிகள், திருப்பெருந்துறையில் தம்முடன் கலந்திருந்த அடியவர்கள் அனைவரும் இறைவனின் பழைய அடியவர்கள் என்றும்; தமக்கு முன்பே பல்லாண்டு காலம் தவமுயன்று பக்குவமெய்தியதால் வீடுபெற்றனர் என்றும்; புதியவராக வந்த தாம் அவ்வாறு தவச்செயலின் நிறைவின்மையால் பக்குவம் எய்தவில்லை என்றும் அதனாலேயே இறைவன் தமக்கு அவர்களுடன் வீட்டுலகு எய்த அருளவில்லை என்றும் கொண்டார். பின்னரும் "ஈசன் பழவடியீர் பாங்குடையீர் புத்தடியேம் புன்மை தீர்த்தாட்கொண்டாற் பொல்லாதோ" (157) என்பது காண்க.

விடுதிகண்டாய் - புத்தடியேன் என்ற காரணத்தால் என்னைக் கைவிட்டு விடுவாயோ? விடலாகாது என்றவாறு.

இத்திருப்பாடலில், "இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை" என்று விண்ணப்பம் செய்து, உயிர் மாயாகாரியங்களாகிய உடல், கருவி, இடம், நுகர்பொருள் ஆகிய அனைத்தின் தொடர்பை வெறுத்துரைப்பதால் "***பிரபஞ்ச வைராக்கியம்***" புலனாதல் அறிக.

123. மடங்கவென் வல்வினைக் காட்டைநின்
மன்னருட் டீக்கொளுவும்
விடங்கவென் றன்னை விடுதிகண்
டாயென் பிறவியையே
றொடுங்களைந் தாண்டுகொ ளுத்தர
கோசமங் கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித்
தாய்வஞ்சிக் கொம்பினையே கசு

(இ - ள்)

உத்தரகோசமங்கைக்கு மன்னவனே; மலைபோன்ற கொடிய யானையை உரித்து, வஞ்சி மரத்தின் கொம்பு போன்ற உமையம்மையை அச்சமுறச் செய்தவனே; அடியேனது வலிய வினையாகிய காட்டினை ஓடுங்கி அழியும் வண்ணம், உன் நிலைபெற்ற பேரருளாகிய எரியிட்டுக் கொளுத்தும் ஆற்றல் மிக்கவனே; என்னை விட்டு விடுவாயோ? (விடலாகாது); அடியேன் பிறப்பை மூலத்தோடும் களைந்து ஒழித்து என்னை ஆட்கொண்டருளுவாயாக.

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "உத்தரகோசமங்கைக்கு அரசே; குன்று கொடுங்கரி உரித்து; வஞ்சிக் கொம்பினை அஞ்சுவித்தாய்; என் வல்வினைக்காட்டை மடங்க நின் மன்அருள் தீக்கொளுவும் விடங்க; என்தன்னை விடுதிகண்டாய்; என் பிறவியை வேரொடுங் களைந்து; ஆண்டு கொள்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

உத்தரகோசமங்கைக்கு அரசே - ஆண்டுகொள் உத்தர கோசமங்கைக்கு அரசே - என இயைத்துப் பொருள் கோடலுமொக்கும். அங்ஙனம் கொள்ளுங்கால் "கொள் உத்தரகோசமங்கை" என்பதை வினைத் தொகையாக்குக.

குன்று கொடுங்கரி உரித்து - என்று மாற்றிக் கொள்க. ***குன்று போலும்*** - என உவம உருபு தொக்கி நின்றது. மலை போன்ற பருத்த உடலும் கொடிய குணமும் கொண்ட யானை வடிவில் வந்த கயாசுரன்.

திருச்சிற்றம்பலம்

"வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை யம்பல வன்மலயத்
திருங்குன்ற வாண ரிளங்கொடி யேயிட ரெய்தலெம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுகமேய்க்குங் கனங்குழையே."

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் - 15)

-என்பது நினைக.

கரிக்குன்று - உவமையில், முன்மொழி உவமம் என்றும் பின்மொழி உவமம் என்றும் இருவகை. ஈண்டுக் கரிக்குன்று என்றது பின்மொழி உவமம் என்பது கவியராசு அவர்கள் குறிப்பு.

கரியுரித்த வரவாறு - மகிடாசுரன் என்பவன் மைந்தன் ***கயாசுரன்*** இவன் நான்முகனை நோக்கித் தவம்புரிந்து அனைவரையும் வெல்லும் வரம் வேட்டான். நான்முகன், சிவபெருமானைத் தவிர ஏனைய தேவர்கள் முனிவர்கள் முதலியோரை வெல்லும் வரம் தந்து "நீ, சிவபெருமான் திருமுன் மட்டும் பகைத்துச் செல்லற்க" என்று அறிவுறுத்தி அனுப்பினன். கயாசுரன், செருக்குற்றுத் தேவர் முனிவர் அனைவரையும் அலைத்து வந்தான். ஒருமுறை இவனிடம் துன்புற்றுப் புறங்கொடுத்தோடிய தேவர்கள் காசி நகரையுற்றுச் சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர்களைப் பின் தொடர்ந்து வந்த கயாசுரன் சிவபெருமான் சந்நிதிக்கும் வந்தான். பேரூழிக்கால உருத்திரவடிவம் கொண்ட சிவபெருமானை எடுத்து விழுங்கி விட்டான். அவன் வயிற்றைப் பிளந்து வெளியேறிய பெருமான் அவன் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டு நின்ற நிலையில் தேவர் முதலியோரைக் காத்தார். இக்காட்சியைக் கண்ட உமையம்மை அஞ்சினள் என்பது வரலாறு. இத்திருக்காட்சியை;

திருச்சிற்றம்பலம்

"விரித்தபல் கதிர்கொள்சூலம் வெடிபடு தமருகங்கை
*தரித்ததோர் கோல கால **பயிரவனாகி வேழம்***

உரித்துமை யஞ்சக் கண்டு வொண்டிரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனரே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4 - 73 - 6)

-என்று நம் அரசுகள் சொல்லோவியம் தீட்டுதல் காண்க.

வஞ்சிக் கொம்பினை அஞ்சு வித்தாய் : வஞ்சி - வஞ்சிக் கொடி போன்ற இடையை யுடையவள். **கொம்பு** - ஈண்டு இளம்பெண் என்ற அளவில் நின்றது; விளி - அன்னையின் மெல்லியல்பு குறித்தது எனலுமாம்.

என் வல்வினைக் காட்டை - நெருங்கிய பெருங்காடு போன்ற என் பிராரத்த வினையை; இதற்கு இவ்வாறன்றிச் சஞ்சிதவினையை என்று கொண்டு. "என்வல்வினைக் காட்டை மடங்க நின் அருள் தீக்கொளுவும் விடங்க என்று கூட்டி, என் சஞ்சித வினையை அழியும்படி நின் அருளாகிய சட்சு தீட்சையினுல் எரித்து அழித்த ஆண்மையுடையவனே" என்றுரைப்பர் கவியரசு அவர்கள்.

சீவன்முத்தர்களுக்குப் பிராரத்தவினை உடலூழாய்க் கழிய ஆகாமியம் ஏருது திருவருள் காக்கும் என்று நம் ஞான சாத்திரம் நவில்வது உண்மையே.

"ஏன்ற வினையுடலோ டேகுமிடை யேறும்வினை
தோன்றி லருளே சுடும்." (திருவருட்பயன் 98)

-என்று பிரமாணம் காட்டுவதும் ஏற்புடைத்தே. ஆயினும் ஈண்டு நாம் சிந்திக்க வேண்டுவதும் சிலவுள. சீவன்முத்தர்களிலும் மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகையில் பக்குவமுள்ளவர்கள் உளரன்றே. அவர்கள் பக்குவம் நோக்கி அருளும் தீட்சையும் அசத்தியோ நிருவாணம் சத்தியோநிருவாணம், என இரு பிரிவினவாம். அசத்தியோ நிருவாண தீட்சை பெற்ற முதல் மூன்று பக்குவ நிலையினருக்கே அவர்கள் பிராரத்தவினை உடலூழாய்க் கழியும். அவர்கள் இம்மண்ணுலக வாழ்வில் தங்கள் வாழ்நாள் முடிந்ததும் வீடுபெறுவர். அவர்களை நோக்கியே மேற்கண்ட திருவருட்பயன் 98-ம் பாடல் அருளப்பட்டது. தீவிரதர பக்குவமுடையார் அப்பக்குவநிலை எய்தும் வரையில் நுகர்ந்த பிராரத்த வினைகள்போக மீதமுள்ள பிராரத்தவினைகள் இருப்புள்ளபோதே சத்தியோ நிருவாண தீட்சை நல்கப்பட்டு உடனே வீடுபேறெய்துவர். மீதமுள்ள

பிராரத்தவினைகள் சத்தியோ நிருவாண தீட்சையினுல் அழிக்கப்படுகின்றன. எனவே, அவற்றை நுகர்வதற்காக வரையறை செய்யப்பட்டிருந்த மீதமுள்ள வாழ்நாட்களை அவர்கள் இவ்வுலகில் வாழ வேண்டுவதில்லை இந்தவிதி அஷ்டப்பிரகரண நூல்களில் ஏழாவது நூலாகிய மோட்சகாரிகை ககசூஇ-ஸ்லோக உரையில் காணலாம்.

ஸ்லோகம் - ஆசிரியரும் தீட்சைபெற்றவரும சரீரம் நசிக்கும் காலத்தில் சிவசாமியத்தை அடைகின்றனர் என்பதாம்.

(உ - ரை)

பிராரத்தமல்லாத சஞ்சித ஆகாமிய கன்மங்கட்குத் தீட்சையினுல் நாச மேற்படுகிறது. பிராரத்த கன்மத்திற்குத் தீட்சையினுல் நாச மேற்படுவதில்லை. இவ்வாறே "தீட்சை பெற்றவர்கள் சரீரம் நாசமாகுங்காலத்தில் சாந்தமாயும் மேலானதாயுமிருக்குந் தானத்தை யடைகின்றனர்" என்று கூறப்பட்டிருக்கின்றது. பிராரத்த கன்மத்துக்குச் சத்தியோ நிர்வாண தீட்சையினுற்ருன் நாசமேற்படும். அவ்வித தீட்சை பெற்றவனுக்குப் போகத்தால் நாசமில்லை யென்க ★

மிக அழுத்தமான சிவவழிபாட்டால் பிரார்த்த கன்மத்தை இப் பிறவியிலேயே ஒழித்து விடலாம் என்பதை;

திருச்சிற்றம்பலம்

"மாதொர் கூறனை வலஞ்சுழிமருவிய
மருந்தினை வயற்காழி
நாதன்வேதியன் ஞானசம்பந்தன்வாய்
நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்திசை கற்றுவல்லார் சொலக்
கேட்டுகந்தவர் தம்மை
வாதியாவினை** மறுமைக்கு **மிம்மைக்கும்
வருத்தம்வந் தடையாவே."

திருச்சிற்றம்பலம் ***(திருமுறை 2-106-11)***

-என நம் ஞானசம்பந்தப் பெருமானும் நவில்வது காண்க.

★ அஷ்டப்பிரகரணம். பக்கம்-௩௦௬. தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்க வெளியீடு.

இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு பெத்தான்சாம்பான் வரலாறுகும். நம் அடிகள் தீவிரதர பக்குவம் எய்தியவர்கள். திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பின் அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்திருந்தது, உலகம் உய்வதற்காக என்பதையும் வினைக்கிடாக அன்று என்பதையும் முன்னமே விளக்கினும். எனவே ஈண்டு, "**வல்வினைக்காடு**" என்பது பிராரத்த வினையேயாம்.

மடங்க நின்மன் அருள்தீக் கொளுவும் விடங்க - மடங்க - அழியும்படி. வல்வினைக்காட்டை ஒத்த என் பிராரத்த வினையை. ***மன் அருள்*** - நிலைபெற்ற அருள். வல்வினையாகிய அடர்ந்த காடாகலின், அழிக்கும் நெருப்பு, மழை முதலியவற்ருல் அழிந்துபடாது அழிக்க நிலைபெற்ற நெருப்பு வேண்டப்படுதலின் ***மன் அருள்*** என்ருர். ***மன்னுதல்*** - நிலைபெற்றிருத்தல். திருவருள் தோற்றமும் கேடும் இல்லாமல் நிலைபெற்றிருப்பது என்பது நினைக அருளாகிய நெருப்பு என்றவாறு.

வல்வினை - வினைகளை, வல்வினை மெல்வினை என இரு திறப்படுத்துரைப்பர். வல்வினை பயன்விளைவிப்பதில் விரைவும் மிகுந்த ஆற்றலுமுள்ளது. மெல்வினை அத்தகையதன்று. ஈண்டு,

> "*மெல்வினையே யென்ன வியனுலகி லாற்றரிய*
> *வல்வினையே யென்ன வருமிரண்டுஞ் - சொல்விற்*
> *சிவதன்ம மாமவற்றிற் சென்றதிலே செல்வாய்*
> *பவ கன்ம நீங்கும் படி*"

(திருக்களிற்றுப்படியார் - 16)

எனவரும் நம் ஞானசாத்திரம் நினைக.

விடங்க - அண்மை விளி. ***விடங்கன்*** - பிறராற் செய்யப்படாது. தானே தன் பேரருளைத் தன் திருமேனியாகக் கொண்டுள்ளவன்.

என் தன்னை விடுதிகண்டாய் - என் பிராரத்தவினை நெருங்கிய காடு போன்றுள்ளதால் அதன்பயனை நான் முற்றிலும் நுகர்ந்து கழிக்கும்படி என்னைக் கைவிட்டுவிடாதே. பிராரத்த வினையை அழித்து உடனே ஆண்டுகொள் என்றவாறு.

என் பிறவியை வேரொடும் களைந்து ஆண்டு கொள் - ***என் பிறவியை*** - இனி வரவுள்ள பிறப்பு இறப்புக்களை, மாயா மலத்தை அதன் வாசனையுடன் களைந்து. ***வேர்*** - மாயாமலவாசனை. சிவஞான மாபாடியம் சூத்திரம் - 10 அதிகாரம் - 2 உரைபார்க்க.

இதற்கு இவ்வாறன்றி. ***வேர்*** - மூலகன்மம் என்று கொண்டு அது பிறவிக்கு வேராதலின் அதை ஒழிக்க வேண்டும் என்றுரைப்பது கதிர்மணி விளக்கம். அவ்வுரைப்பகுதி வருமாறு.

"வேரிருக்க முளை களையப்படுமாயின் மீண்டும் அவ்வேரினின்றும் முளை தோன்றும். அதுபோலப் பிறவிக்கு வேராக உயிரைப் பற்றிநிற்கும் மூலகன்மம் ஒழிக்கப்படாமல், எடுத்த அப்பிறவி மாத்திரம் நீக்கப் படுமாயின், அம் மூலகன்மத்தினின்றும் பிறவியுண்டாம் என்னும் கருத்தினராய் "என் பிறவியை வேரொடுங் களைந்து" என்றார். கன்மம் மூலகன்மம் எனவும் கான்மிய கன்மம் எனவும் இருவகைப்படும். "கன்மமும் மூலங் காட்டிக் கான்மிய மலமாய் நிற்கும்" என்று சிவஞான சித்தியும், "முதற் காரணமாகிய மூலவினை, பதிமுதலிய பொருளோ டொப்ப அநாதி யுண்டென்பாரும்" என்று சிவஞான முனிவரும் கூறுமாறறிக". மூலகன்மம் ஈண்டு அவாவாகும் அதன் காரியம் அறம் பாவமாகவும், அவற்றின் பயன் இன்பத் துன்பமாகவும் கூறப்படும். அவா மூலகன்மமாதலை, ★ செம்புறு களிம்பென அநாதி மலமூழ்கியிருள் சேருமலர் விழியென்னவே, தெளிவற்ற கேவலத்தசை வற்றிருந்து மலசேட்டையாற் குழவி குருடர், தம் பிணியினுலுற்ற பால் கோலை நோக்க அவை தமையளிப்பா ரென்ன நான், சார் கன்ம மாயையை விரும்ப நீ தந்திடச் சகலனுய்", என்று சிவஞானமுனிவர் விளக்கியிருத்தலும் அறிக. வீட்டு நிலைக்குத் தகுதியுள்ள உயிரைப் பற்றி நிற்கும் தொடர்பையொழித்தலே ஈண்டு மூலகன்ம நாசமாகும். ஆதலின், அதுபற்றி அக்கன்மத்தின் அநாதித்தன்மைக்கு இழுக்கின்றென்பது"

இவ்விளக்கம் ஏற்புடைத்தன்று, "மூலகன்மம்" என்பது, ஆன்மா, அநாதி கேவலத்தினின்றும் முதன் முதலாகப் படைப்புக்கு வரும்பொழுது பெற்ற புரியட்டக உடம்பால் செய்யும் வினைகளுக்கு வித்தாக உள்ளது. அவ்வினைகள் பின்னர். ஆன்மா, வீடுபேறு அடையும் வரையும் செய்யும் வினைகளுக்கு பரம்பரையாகக் காரணமாகின்றன. எனவே, ஆன்மாப் பின்னர்த் தொடர்ந்து செய்யும் வினைகளுக்கு மூலகன்மம் காரணமாவதில்லை. எனவே இத் திருவாசகப் பாடலில் பிறவியின் வேர் என்றது ஆகாமியகன்மம் எனக் கொண்டாம். ஆதலின் மூலகன்மம் பற்றிய ஆய்வு முதலியன ஈண்டு வேண்டப்படுவதில்லை.

★ *அகிலாண்டேசுவரி பதிகம் - செ 4.*

என் பிறவியை வேரொடும் களைந்து ஆண்டுகொள் என்றுராயினும் என்னை ஆண்டுகொண்டு என் பிறவியைக் களைக என்பதே கருத்து.

இத்திருப்பாடலில் வல்வினைக் காட்டைக் கொளுத்திப் பிறவியை வேரொடும் களைய வேண்டுதலின், இப்போதுள்ள உலக வாழ்க்கையை வெறுத்தல் பெறப்படுகின்றது. அதனுல் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதல் காண்க.

124. கொம்பரில் லாக்கொடி போலல
மந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண்
டாய்விண்ணர் நண்ணுகில்லா
உம்பருள் ளாய்மன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
அம்பர மேநில னேயனல்
காலொடப் பானவனே உ௦

(இ - ள்)

அழகனே! அமரரும் அணுகுதற்கு இயலாத மேலிடமாகிய சிவலோகத்திருப்பவனே; நிலைபெற்றுள்ள உத்தரகோசமங்கைக்கு வேந்தனே, மண்ணும், வானும், காற்றும், நெருப்பும், புனலும் ஆனவனே; கொழுகொம்பில்லாத கொடிபோலச் சுழன்று வாடுகின்ற அடியேனை விட்டு விடுவாயோ? (விடலாகது).

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "கோமளமே! விண்ணர் நண்ணுகில்லா உம்பர் உள்ளாய்; மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே, நிலனே அம்பரமே காலொடு அனல் அப்பு ஆனவனே; கொம்பர் இல்லாக் கொடிபோல அலமந்தனன்; வெம்புகின்றேனை விடுதிகண்டாய்" - என்று அன்னுவயம் செய்துகொண்டு பொருள் காண்க.

கோமளமே - விளி. ***கோமளம்*** - அழகு மென்மை மாணிக்கம் இவை அனைத்தும் ஈண்டு உத்தகோசமங்கைக்கு அரசனுகிய சிவ பெருமானைக் குறித்து நின்றது. இது கவியரசு அவர்களின் உரைக்குறிப்பு.

விண்ணர் நண்ணுகில்லா உம்பர் உள்ளாய் - ***உம்பர்*** - மேலிடம். இஃது, இந்திரன் முதலிய தேவர்கள் வாழும் உலகங்களைக் குறிக்கும். அவற்றை விலக்கிச் சிவலோகத்தை அறிவித்தற்கு ***"விண்ணர் நண்ணுகில்லா"*** என்று அடை புணர்த்தார். ***நண்ணுதல்*** - அணுகுதல். சிவலோகம், இந்திரன் உலகம் முதல் திருமால் உலகம் வரை உள்ள எல்லா உலகங்களையும் தன்னுள் வியாப்பியமாக அடக்கிக்கொண்டு தான் அவற்றை வியாபித்துக் கடந்து நிற்றலின் இவ்வாறு கூறினர்.

மன்னும் உத்தரகோசமங்கைக்கு அரசே - விண்ணவரும் நண்ணுகிலா உம்பரில் உள்ளவனுயினும் மெய்யடியார்களுக்கு எளியவனுக இம் மண்ணுலகில் எழுந்தருளி அருளாட்சி செய்கின்ருன் என்றவாறு. முன்னம் போற்றித் திருவகவல் 126 - ல் "அருமையிலெளிய அழகே போற்றி" என்று வழுத்தியதும் நினைவு கூர்க.

நிலனே அம்பரமே காலோடு அனல் அப்பு ஆனவனே : செய்யுளாகலின் பூதங்களின் வரிசை முறையாறிகின்றது. ***கால்*** - காற்று. ***அப்பு*** - நீர். ***நிலனே அம்பரமே*** - என்பவற்றிலுள்ள ஏகாரங்கள் எண்ணுப் பொருட்டு. இவ்வேகாரத்தை அனலே காலே அப்பே எனப் பிறவற்றுடனும் புணர்க்க.

கொம்பர் இல்லாக் கோமளக் கொடிபோல் அலமந்தனன் - ***கொம்பர்*** - ***கொம்பு*** - கொழுகொம்பு; ***அர்*** - இறுதிப் போலி. ***கோமளம்*** - இளமை, பெண்மையுமாம். ***கொடிபோல்*** - உரிய பற்றுக் கோடாகிய கொழுகொம்பு இல்லாத இளங்கொடி, தனக்குக் கிட்டிய முள்வேலி மரம் எவற்றையேனும் பற்றிக்கொள்ளும். அது போன்று யான் இறைவனைப் பற்ருது, தீயோரைச் சார்ந்து துன்புறுவேன் என்றவாறு. ***அலமந்தனன்*** - துன்புற்றேன். ***அலமருதல்*** - சுழன்று துன்புறுதல். அலமர றெருமர லாயிரண்டுஞ் சுழற்சி (தொல்காப்பியம் - சொல் - உரியியல் - சூ.*14*)

❋" He is my supporting elm
and I am His Vine " - Francis Quarles

வெம்புகின்றேனே : வெம்புதல் - வெப்பத்தால் வாடுதல் ஈண்டு வினை வெப்பத்தால் வாடுதல் குறித்தது. அலமந்தனன் என்னும் தன்மை ஒருமை வினைமுற்று, வினையெச்சமாக நின்று வெம்புகின்றேன் என்பதிலுள்ள வெம்புதல் என்ற வினையைக் கொண்டு முடிந்தது. முதிர்ந்த கொடியாகலின் அலமருதலும் வெம்புதலும் எளிதிற்பற்று. எனவே அதனை விலக்க **இளங்கொடி** என்றார். பிரிதின் இயைபு நீக்கிய விசேடணம். "துடைக்கினும் போகேன்" என்றவாறு திண்மையான சிவ பக்தி இல்லாதவன் என்பது குறித்து நின்றது.

"ஒரு கொடி தோன்றுதற்கு ஆதாரமாகவும் வெளிப்பட்டு வளர்தற்கு இடனாகவும் உள்ளவை முறையே நிலமும் வெளியுமாகும். அம்முறையில் தாம் பிறத்தற்கும் உடலோடு கூடிப் போக்குவரத்துச் செய்தற்கும் இறைவன் ஆதாரமாகவும் இடனாகவும் இருத்தலின் "நிலமே யம்பரமே" எனவும், அக்கொடி பற்றுக்கோடின்றிச் சுழலுதற்குக் காற்றும்; வெம்புதற்குத் தீயும்; அவ்வெப்பம் தணிந்து குளிர்சி பெறுதற்கு நீரும் காரணமாதல் போல, வினையெச்சம் திருவருட்சார்பு பெறுமல் தாம் சுழலுதற்கும் வாடுதற்கும் காரணம். அவ்வாட்டம் நீங்கப் பெற்றுத் திருவடி நீழலில் குளிர்ந்த இன்பம் பெறுதற்கு காற்று தீ நீர் என்னும் பூதங்களின் வடிவமாக இறைவன் விளங்குதலின் ***"காலொடு அனல் அப்பானவனே"*** எனவும் கூறியருளினர்." என்று நயம்பட விளங்குவது கதிர்மணி விளக்கம்.

விடுதி கண்டாய் - மல வெப்பத்தால் வெம்பி வருந்தும் அடியேனை நின் தண்ணிய திருவருட் பெருக்கில் ஆழ்த்தி இன்புறுத்தலே நின் இயல்பாகும். அங்ஙனம் செய்யாமல் என்னைக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது) என்றவாறு.

இத்திருப்பாடலில், நின் திருவருளாகிய கொழுகொம்பு இல்லாது பாசப்பிணிப்பால் உலக வாழ்வில் சுழன்று வருந்துகின்றேன் என நம் அடிகள் இவ்வுலக வாழ்வை வெறுத்துரைப்பதால் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனாதல் பெற்றும்.

125. ஆனைவெம் போரிற் குறுந்தூ
றெனப்புல னலைப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண்
டாய்வினை யேன்மனத்துத்
தேனையும் பாலையுங் கன்னலை
யுமமு தத்தையுமொத்
தூனையு மென்பினை யுமுருக்
காநின்ற வொண்மையனே உக

(இ - ள்)

தீவினையேனின் உள்ளத்துட் புகுந்து, தேன் பால் கருப்பஞ்சாறு தேவாமுதம் என்னும் இவற்றையொத்து இனிமை நல்கி, என் உடம்பில் உள்ள தசைகளையும் எலும்புகளையும் உருக்கிக் கரையச்செய்து கொண்டிருக்கும் ஞானவடிவினனே, என் தந்தையே; களிறுகளின் கொடிய போர் நிகழ்ச்சியில் அகப்பட்ட சிறிய செடிகளின் புதர் ஒப்ப; ஐம்புலன்களால் அலைக்கப்பட்ட சிறியேனைக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "வினையேன் மனத்துள்; தேனையும் பாலையும் கன்னலையும் அமுதத்தையும் ஒத்து; ஊனையும் என்பினையும் உருக்காநின்ற ஒண்மையனே; எந்தாய்; ஆனை வெம்போரில் குறுந்தூறு எனப் புலனால் அலைப்புண்டேனை; விட்டிடுதிகண்டாய்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

வினையேன் மனத்து - இறைவன் திருவருளை எய்துதற்குரிய தூய்மை இல்லாத மனம் என்பார் ***வினையேன் மனத்து*** என்றார். ஆதலின் ஈண்டுக் குறித்தது தீவினை என்பது பெற்றாம். ஐம்புலன்களால் எற்றுண்டு அலமரும் மனம் வினைப்பயன் நுகர்ச்சிக்கேற்பத் திரியும் இயல்பினது. அதனால் தூய்மையற்றதாயிற்று.

தேனையும் பாலையும் கன்னலையும் அமுதத்தையும் ஒத்து - தீவினைப்பயன் நுகர்ச்சியால் மனம் தூய்மையற்ற நிலையிலும் இறைவன் தம் உள்ளத்துள் புகுந்து இன்சுவை பயத்தற்குக் காரணம் அவன் பேரருளே என்றவாறு. தேன் பால் கருப்பஞ்சாறு என்பவை மக்களால் சுவைத்து அறியப்பட்ட மதுரச்சுவைகளைக் கொண்டன. திருவருளின் சுவை இச்சுவைகள் மட்டில் அமையாது இன்னும் மிகுந்து மக்களால் அறியப் படாத சுவை கொண்டது. ஆதலின், அஃது அவ்வாறே மக்களால் அறியப்படாத தேவ அமுதை உவமை காட்டினர். ***கன்னல்*** - கருப்பஞ்சாறு ***மனத்து*** என்றதன் பின் "புகுந்து" என்னும் ஒரு சொல்லும் ***ஒத்து*** என்றதன் பின் "இனிமை பயந்து" என இரு சொற்களும் அவாய் நிலையால் வருவித்துரைக்கப்பட்டன.

ஊனையும் என்பினையும் உருக்காநின்ற ஒண்மையனே - தேன் பால் முதலிய உணவுகள் தசைகளுக்கும் எலும்புகளுக்கும் ஊட்டம் தந்து வலுவேற்றும். ஆனால் திருவருள் தேன் பால் முதலியவற்றினும் மிக மேலான இன்சுவை பயப்பதாயினும் தசைகளையும் எலும்புகளையும் உருக்கும். ஊன் உருக உருக உள்ளக்குழைவு மிக்கு உள்ளொளி பெருகும். இந்நிலையை நம் அடிகளே "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி" *(542)* என்றருளுவது நினைக.

ஒண்மையன் - ஆன்மாவின் உள்ளொளியாகிய மெய்யுணர்வு பெருகக் காரணமாக உள்ள ஞானப்பேரொளி வடிவானவன்.

எந்தாய் - என் தந்தையே உன் ஞானச் செல்வத்தையும் வீட்டின்பத்தையும் உன் மைந்தன் என்ற முறையில் பெறுவதற்கு நான் உரிமை உள்ளவன் என்று குறிப்பிட்டவாறு.

ஆனைவெம்போரில் குறுந்தூறு என்னப் புலனால் அலைப்புண்டேனை - "ஆனை வெம்போரில் குறுந்தூறு என்ன" - என்பது ஓர் பழமொழி. காட்டில் இரு யானைகள் தம்முள் இகலிப் பொரும்பொழுது அப்பொருகளத்தில் உள்ள சிறு செடிகள் அடர்ந்த புதர்கள் அக்களிறுகளின் கால்களால் பலகால் மிதியுண்டு துவைக்கப்பட்டு அழியும்;

குறுந்தூறு - சிறுசெடிகள் பல நெருங்க வளர்ந்துள்ள புதர். **குறுந்தூறு** என்றமையால் போரிடுவன பெரிய யானைகள் என்று கொள்க. **புலன்** - ஐம்புலன்கள். புலனால் அலைப்புண்டு என்றமையால் போரிடும் யானைகளும் ஐந்து எனக் கொள்க. ஐம்புலன்களும் ஒன்று மற்ற நான்கிற்கும் எதிராகச் செயல்படுதலின் இவ்வியானைகளும் ஒன்று மற்ற நான்குடனும் இகலிப் போரிடும் என்று கொள்க.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"ஐம்பெருமா பூதங்கா ளொருவீர் வேண்டிற்
றொருவீர் வேண் டீண்டிவ் வவனி யெல்லாம்
உம்பரமே யும்வசமே யாக்க வல்லீர்க்
கில்லையே நுகர்போகம் யானேல் வானோர்
உம்பருமா யூழியுமா யுலகே யாகி
*யொள்ளாரூர் **நள்ளமிர்தாம் வள்ளல்** வானோர்*
தம்பெருமா னாய்நின்ற அரனைக் காண்பேன்
தடைப்படுவே னோக்கருதித் தருக்கேன் மின்னே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6 - 27 - 2)

எனவரும் நம் அரசுகள் அமுதவாக்கு நினைக.

இங்கு ஐம்பெருமா பூதங்கள் என்றது ஐம்புலன்களைக் குறித்து நின்றது. யானைகள் மிதிப்பதால் குறுந்தூறு அழிவதை;

"கழைதின் யானைக் காலகப்பட்ட
வன்றிணி நீண்முளை போலச் சென்றவண்
வருந்தப் பொரரோ னாயிற் ....."

(புறநானூறு - 73)

"வார்முகின் முழக்கின் மழகளிறு மிகீ இத்தன்,
கான்முளை மூங்கிற் கவர்கிளை போல
உய்தல் யாவது நின்னுடற்றி யோரே"

(பதிற்றுப்பத்து - பத்து 9 பாடல் 4 - வரி 11 - 13)

- எனவரும் சங்க இலக்கியப் பாடற் பகுதிகளிலும் காண்க.

"யானைகளால் மிதியுண்ட சிறு தூறுகளில் உள்ள செடிகள் அழியும்; ஆனால் அவற்றின் வேர்கள் அழியாமல் மண்ணினுள் நின்று மீண்டும் செடிகளைத் தோற்றுவிக்கும். அவ்வாறே ஐம்புலன்களால் அலைப்புண்டு முடிவில் நான் இறந்தாலும் என் வினைகள் அழியாமல் நின்று மீண்டும் எனக்குப் பிறவியைத்தரும். அந்நிலை நேராது என்னைக் காக்க" என்று விண்ணப்பம் செய்தவாறு.

விட்டிடுதி கண்டாய் - இப்பிறவியில் புலனால் அலைப்புண்டு வருந்தி மீண்டும் பிறப்பில் சேரும்படி என்னைக் கைவிட்டு விடாதே என்றவாறு.

இத்திருப்பாடலில் பொறிபுலன்களால் அலைப்புண்டு துன்புறுவதால் இவ்வுலக வாழ்வை வெறுத்துக் கூறினார். இதனால் "***பிரபஞ்ச வைராக்கியம்***" புலனாதல் காண்க.

126. ஒண்மைய னேதிரு நீற்றையுத்
தூளித் தொளிமிளிரும்
வெண்மைய னேவிட் டிடுதிகண்
டாய்மெய் யடியவர்கட்
கண்மைய னேயென்றுஞ் சேயாய்
பிறர்க்கறி தற்கரிதாம்
பெண்மைய னேதொன்மை யாண்மைய
னேயலிப் பெற்றியனே. உஉ

(இ - ள்)

மெய்யொழுக்கமுள்ள தொண்டர்களுக்கு எஞ்ஞான்றும் அணிமையில் உள்ளவனே; பொய்யொழுக்கமுள்ள தொண்டரல்லார்க்கு எக்காலமும் தொலைவில் உள்ளவனே; காட்சி முதலிய அளவைகளால் அறிவதற்கு அரிதாகியவனும், பெண் தன்மையுடையவனுமாகிய பழையவனே; அத்தகைய ஆண் தன்மையுடையவனே; அலித் தன்மையுடையவனே; ஒளிப் பிழம்பாக உள்ளவனே; திருநீற்றை நீரில் குழைக்காமல் நிறையப் பூசி, அந்நீற்றொளியில் விளங்கும் வெண்ணிற முடையவனே; என்னைக் கை விட்டுவிடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "மெய்யடியார்க்கு என்றும் அண்மையனே; பிறர்க்கு என்றும் சேயாய்; அறிதற் கரிதாம் தொன்மைப் பெண்மையனே; ஆண்மையனே; அலிப் பெற்றியனே; ஒண்மையனே; திருநீற்றை உத்தூளித்து ஒளிமிளிரும் வெண்மையனே; விட்டிடுதிகண்டாய்;" - என்று அன்னுவயம் செய்துகொண்டு பொருள் காண்க.

மெய்யடியார்கட்கு என்றும் அண்மையனே : மெய்யடியார் - சிவச்சின்னங்கள் பூண்டு உள்ளும் புறமும் தூய்மையுடையோராய் எப்பொழுதும் சிவனடிமைத் திறத்தில் திளைக்கும் தவநெறியினர். ***அண்மையன்*** - சிவபெருமான் தன் அட்டமூர்த்தங்களில் ஒன்றாக ஆன்மாவைக் கொண்டுள்ளான். ஆன்மாவினுள்ளே அவன் இருப்பதால் ***அண்மையன்*** என்றார். உயிருக்கு ஆன்மாவாகிய தன்னை உடலாகக் கொண்டு அதனுள் உயிராக இருப்பவனைவிட மிக அண்மையர் யாருமிலர் என்பது நினைக. இந்நிலை எல்லா ஆன்மாக்களுக்கும் பொதுவாகினும் மெய்யடியார் அல்லாத பிறர் மலத்தால் மறைக்கப்பட்டுள்ளமையில் இறைவன் இருப்பை உணர்வதில்லை. மழை நீர் யாண்டும் பெய்யினும் பள்ள நிலம் அந்நீரை ஏற்றுச் கொண்டு தேக்கி வைக்கும்; மேட்டு நிலம் வழிந்து போக விட்டுவிடும். அது போல இறைவன் மெய்யடியார்க்கு அண்மையனாகின்றான். **என்றும்** - இதனை இடைநிலைத் தீவகமாக வைத்து, மெய்யடியார்க்கு **என்றும்** அண்மையனே; பிறர்க்கு **என்றும்** சேயாய் என்றுரைக்க.

பிறர்க்கு என்றும் சேயாய் - பிறர்க்கு :- பிறர் - நல்லோரைக் கூறுங்கால் அவர் பெருமை வெளிப்படக் கூறுதலும்; தீயோரைக் கூறுங்கால் அவர் தீமை வெளிப்படாது வேறொரு படியாகக் கூறுதலும் உலகில் உயர்ந்தோர் வழக்கு. அம்முறையே மெய்யன்பர்களை **மெய்யடியார்** என்று கூறிப் பொய்யொழுக்கமுள்ளவர்களைப் ***பிறர்*** - என்று நயம்படக் கூறினர். ***சேயாய்*** - எத்தனை ஊழிக் காலம் எவ்வளவு தொலைவு தேடினும் எட்டாத தொலைவில் உள்ளவன். "புறத்தார்க்குச் சேயோன்" (சிவபுராணம் - *8*) என்றதும் நினைக.

இறைவன், மெய்யடியார்கட்டு அண்மையனும் பிறர்க்குச் சேயவனு முள்ள நிலையை;

திருச்சிற்றம்பலம்

"வெண்ணிலா மதியந் தன்னை
விரிசடை மேவ வைத்து
உண்ணிலாப் புகுந்து நின்றங்
குணர்வினுக் குணரக் கூறி
விண்ணிலார் மீயச் சூரார்
வேண்டுவார்; வேண்டி லார்க்கே
அண்ணியார் பெரிதுஞ் *சேயார்*
அதிகை வீரட்ட னாரே"

(திருமுறை *4- 25 - 1*)

"வஞ்சனையா ரார்பாடுஞ் சாராத மைந்தனைத்
துஞ்சிருளி லாட லுகந்தானைத் தன்றொண்டர்
நெஞ்சிருள் கூரும் பொழுது நிலாப்பாரித்
தஞ்சுடராய் நின்றானை நான்கண்ட தாரூரே"

(திருமுறை *4- 19 - 8*)

திருச்சிற்றம்பலம்

-என்று நம் அரசுகள் அருளிச் செய்தல் காண்க.

அரிதற்கு அரிதாம் தொன்மைப் பெண்மையனே; ஆண்மையனே, அலிப்பெற்றியனே - இறைவனைப் பெண், ஆண்,

அலித் தன்மைகளையுடையவனாகக் கூறியது, வழிபாடு செய்வார் தகுதி நோக்கியாகும். சத்தியும் சிவமுமாக விளங்கலின் பெண்மையும் ஆண்மையுமாய் நிற்கும் நிலைகள் விளங்கும். சத்தி பெண்பால்; சிவன் ஆண்பால்; அவனைப் பிரமம் என்ற சொல்லால் குறிக்கின் ஆணும் பெண்ணுமல்லாத ஒன்றன்பால் குறிக்கும். அந்நிலையே ***அலி*** யாகும். வடநூலார் பிரமம் என்ற சொல்லை "நபுஞ்சகம்" என்பர். வட மொழிப்புலவர் ஒருவர் தம் நெஞ்சை முன்னிலைப்படுத்திப், பிரமப் பொருளைப் பற்றுமாறு சாதுரிய முறையில் கூறிய ஒரு ஸ்லோகக் கருத்து ஈண்டு நினைந்து இன்புறத்தக்கது. அது வருமாறு; "நெஞ்சமே நினக்கு வேலை யாண்டு? சாரக் கடவ நெறியைக் குறித்து அடிக்கடி அலைகின்றாய்; ஆண் பெண் இருபாலர் பக்கலிலும் அணுகுதல் தகுதியன்று; அடிக்கடி மக்கட் குழுவில் செல்லக் கருதுதல் நகைப்பிற்கிடனாகும்; ஆதலின், அங்ஙனம் செல்லற்க, நின்னொடு ஒத்த இனமும் பேரின்பம் பயப்பதுமாகிய பிரமத்தைப் பற்றிச் சார்ந்து நலனெய்துக." என்பது. இதன் கண் நெஞ்சமும் பிரமமும் ஒத்த இனமென்பது, இரண்டும் நபுஞ்சக லிங்கம் ஆதல்பற்றி, மக்கட் குழுவிற் செல்லுதல் நகைப் பிற்கிடனாமென்றது, நெஞ்சம் நபுஞ்சகப் பாலாதலின், ஆணும் பெண்ணுமாகிய மக்கட் குழு ஏற்றுக்கொள்ள மாட்டாதென்பது குறித்ததாம். என்று விளக்குவது "கதிர்மணி விளக்கம்".

அறிதற்கு அரிதாம் தொன்மை - உலகில் மக்களுடைய ஆண் பெண் அலித்தன்மைகள், காட்சி முதலிய அளவைகளால் அளந்து அறிதற்கு எளியன. அவை கன்மத்துக் கீடாகப் புதிதுபுதிதாகப் படைக்கப்பட்டன. ஆனால் இறைவனின் அத்தன்மைகள் அவ்வளவைகளால் அளந்து அறிதற்கு இயலாதன. வழிபடுவார் தகுதிக் கேற்ப இறைவன் தானே படைத்துக் கொள்ளும் பழமையன. என்றவாறு.

"***அறிதற்கு அரிதாம்***" என்பதனையும், "***தொன்மை***" என்பதனையும் "***பெண்மை***" "***ஆண்மை***"; "***அலிப்பெற்றி*** " என்பவற்றோடு தனித் தனி இயைத்துரைக்க. ***பெற்றி*** தன்மை. "தன்மை பிறராலறியாத தலைவா" (திருவாசகம் 63) என்று நம் அடிகளே அருளியது காண்க. "இன்ன தன்மையன் என்றறியொண்ணா எம்மானை" (திருமுறை - 7 - 59 - 1). என்று நம் நம்பிகள் அருளியுள்ளது நினைக.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"இன்னவுரு வின்னநிற மென்றறிவ தேலரிது நீதிபலவுந்
தன்னவுரு வாமெனமி குத்ததவ னீதியொடு தானமர்விடம்
முன்னேவினை போய்வகையி ஞன்முழு துணர்ந்துமுயல்
கின்றமுனிவர்
மன்னவிரு போதுமரு வித்தொழுது சேரும்வயல்
வைகாவிலே"

(திருமுறை - 3 - 71 - 4)

" ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணுக் கடவுள் கருணையினுல் தேவர் குழாம்
நாணுமே யுய்யஆட் கொண்டருளி நஞ்சுதனே
ஊணுக வுண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோணுர் பிறைச் சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணுர் வனமுலேயீர் பொன்னூச லாடாமோ"

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 331)

-என்பனவும் காண்க.

பெண்மையனே, ஆண்மையனே, அலிப்பெற்றியனே; - என்ற பகுதிக்கு, இவ்வாறன்றிச் "சத்தி தத்துவத்தினின்றும் சதாசிவதத்துவம் தோன்றலின் தொன்மைப் பெண்மையன் என்றும், அவனிடத் தினின்றும் எல்லாம் முகிழ்த்தலின் ஆண்மையன் என்றும் அவ்விரண்டும் ஒன்றெனப்பட்ட சிவசத்தி நிலேநோக்கி அலிப்பெற்றியன் என்றும் கூறினுர் என்பாருளர்" என்பது திரு. பாரதியார் விளக்கம்.

ஒண்மையனே : ஒண்மை - அறிவுடைமை. அறிவுக்கு அறிவாய் இருந்து, ஆன்மாவை இயக்குதலின் **ஒண்மையனே** என்ருர்.

திருப்பெருந்துறையில் நம் அடிகளுக்கு உபதேசம் நல்கிய ஞான்று இறைவன் ஞாஞசிரியனுக எழுந்தருளி அளித்த கண்கொள்ளாக் காட்சியில் அவன் திருமேனியின் செந்நிறப் பேரொளியில் ஈடுபட்ட நம் அடிகள் அந் நிகழ்ச்சியை நினைந்து. **"ஒண்மையனே"** என்ருர் எனலுமாம்.

திருநீற்றை உத்தூளித்து ஒளி மிளிரும் வெண்மையனே : ஞாஞசிரியனுக எழுந்தருளிய நிலையில் இறைவன் தன் செம்மேனிமுழுதும் திருநீற்றை உத்தூளனமாகப் பூசி, முழுநீறு பூசிய முனிவனுகக் காட்சிதந்த கோலத்தை இங்குக் கூறுகின்ருர். ஞாஞசிரியன் திருநீறு அணிவது தன் மாணவர்களின் மல மாசுகளைக் கழுவி வீட்டுலகில் உய்ப்பதற்கான சின்னம்.

உத்தூளித்தல் - திருநீற்றை அணியும் முறை இரண்டாகும். ஒன்று நீரில் குழைத்துத் திரிபுண்டரமாகத் தலையுச்சி, நெற்றி, மார்பு, நாபி, இருமுழங்கால்கள், இரு தோள்கள், இரு முழங்கைகள், இரு மணிக்கட்டுக்கள், முதுகின் அடி, இருகாதுகளின் நுனிகள், கழுத்து ஆகிய பதினுறு இடங்களில் அணிதல்; அணியும் பொழுது உரிய மந்திரங்களைக் கூறி யணிதல். மற்ருென்று, நீரில் குழைக்காது திரிபுண்டரமின்றி நெற்றியில் அணிந்து கொள்ளுதல். இதனை உடல் முழுதும் பூசிக் கொள்ளுதலும் உண்டு. இதனை உத்தூளனமாக அணிதல் என்பர்.

ஞாஞசிரியனிடம் தீட்சை பெற்றவர்கள் உரிய சந்தி நேரங்களில் திரிபுண்டரமாகவும் பிற நேரங்களில் உத்தூளனமாகவும் அணிதற்குரியர். தீட்சை பெருதோர் உத்தூளனமாக மட்டுமே அணிதற்குரியர். செம்மேனி எம்மானின் திருநீற்றுக் கோலத்தை;

திருச்சிற்றம்பலம்

"பவளமால் வரையைப் பனிபடர்ந் தனையதோர்
படரொளி தருதிரு நீறும்
குவளைமா மலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்றுபொற் குழற் திருச் சடையுந்
திவள மாளிகை சூழ்தரு தில்லையுட்

டிருநடம் புரிகின்ற
தவள வண்ணனை நினைதொறும் என்மனம்
தழல்மெழு கொக்கின்றதே”
திருச்சிற்றம்பலம்
(திருவிசைப்பா - 226)

-எனத் திருவாலியமுதனர் தீட்டும் சொல்லோவியத்திற் காண்க.

வெண்மையன் - புனிதமுடையவன் எனவுமாம். ***விட்டிடுதி கண்டாய்*** - மெய்யடியார்களுக்கு அண்மையனுகிய நீ, அடியேனை ஆட்கொண்டு அம்மெய்யடியார்கள் நாப்பண் இருத்தினுய்; அஃதுன் பேரருளின் இயல்பு; பின்னர் அவ்வடியார்கள் அனைவருக்கும் வீடு நல்கி என்னை விட்டுப் பிரிந்து நீ சேயனுனுய்; இதனுல் நான் உன் மெய்யடியாருள் ஒருவன் என்ற தகுதியை இழந்து, உலகியலில் சிக்கி உழலும் பிறர் குழுவில் சேர்ந்தவனுவேன். இவ்வாறு என்னைக் கைவிட்டுவிடாதே என்றவாறு.

இத்திருப்பாடலில் நம் அடிகள், ஞானசிரியன் திருக்கோலத்தில் ஈடுபட்டு உலகியலில் உழலும் நிலையை வெறுத்தொதுக்குவதால் ***“பிரபஞ்ச வைராக்கியம்”*** புலனுதல் காண்க.

127. பெற்றது கொண்டு பிழையே
பெருக்கிச் சுருக்குமன்பின்
வெற்றடியேனை விடுதிகண்
டாய்விடி லோகெடுவேன்
மற்றடி யேன்றன்னை தாங்குந
ரில்லையென் வாழ்முதலே
உற்றடி யேன்மிகத் தேறிநின்
றேனெனக் குள்ளவனே. உ௫

(இ - ள்)

என் வாழ்க்கைக்கு மூல காரணமானவனே, நின்னுல் தரப்பெற்றனவாகிய மன மொழி மெய்களைக் கருவிகளாகக் கொண்டு;

தீயவற்றையே மிகையாகச் செய்து; அன்பைச் சுருங்கச் செய்கின்ற போலித் தொண்டனாகிய என்னைக் கைவிட்டு விடுவாயோ; அங்ஙனம் கைவிடுவாயாயின் கெட்டு ஒழிவேன்; எனக்குச் சத்தாக உள்ளவனாக (நின்னை) அடியேன் ஆராய்ந்து பெரிதும் தெளிந்துள்ளேன்; இந்நிலையில் அடியேனைக் காப்பவர் வேறு யாருமிலர் (நீயே காத்தருள வேண்டும்).

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "என் வாழ்முதலே; பெற்றது கொண்டு; பிழையே பெருக்கிச் சுருக்கும் அன்பின் வெற்றடியேனை; விடுதிகண்டாய்; விடிலோ கெடுவேன்; எனக்கு உள்ளவனே; அடியேன் உற்று மிகத் தேறிநின்றேன்; அடியேன் தன்னைத் தாங்குநர் மற்று இல்லை"; - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

என் வாழ்முதலே - இறைவன், மாயையினின்றும் உயிர்களுக்குத் தனுகரண புவன போகங்களைப் படைத்துத் தருகின்ற நிமித்த-காரணனாவன். ஒவ்வோருடலிலுமுள்ள அந்தக்கரணங்களும் மொழிகளும் அவ்வாறே படைக்கப்பட்டன. அவை, இவ்வுலகவாழ்வில் உயிர்கள் வினைப்பயன்களை நுகர்ந்து கழித்து மலபரிபாகம் எய்தவும், உண்மைச் சரியையாதி நெறிகளாம் படிமுறையில் ஏறிச் செல்லும் தவ நெறியில் எய்தும் மறுபிறவி வாழ்க்கைகளுக்கும் முடிவில் குருவருளால் ஞானம் பெற்று அடையவுள்ள வீட்டின்ப வாழ்வில் இறையின்பில் திளைக்கவும் கொடுக்கப்பட்டன. ஆதலின் அவற்றை நல்கிய நிமித்தகாரணனை **வாழ் முதலே** என்றார். **வாழ் முதல்** - வாழ்க்கைக்கு மூலகாரணமானவன். இஃது, எல்லா உயிர்களுக்கும் ஒக்குமெனினும், ஈண்டுச் சிறப்பு முறையில் அடிகள் உரிமை பாராட்டுதல், பின்னர்க் கூறவுள்ள விண்ணப்பங்களை ஏற்றுத் தம்மைப் பாதுகாக்கும் பொறுப்பு இறைவன் பாலாம் என்பதை வலியுறுத்தற்பொருட்டு **"என்"** என்றார். "வாழ் முதலாகிய பொருளே" (366) என்று பின்னரும் அருளியுள்ளது காண்க.

வாழ் முதல் - ஏதுப்பொருட்கண் வந்த வினைத்தொகை என்பது திரு.முதலியார் அவர்களின் உரைக்குறிப்பு. என் வாழ்க்கைக்கான சொத்து என்றார் கவியரசு அவர்கள்.

பெற்றது கொண்டு பிழையே பெருக்கி* - *பெற்றது - சாதி ஒருமை. ❋ மன மொழி மெய்களை உணர்தி நின்றது. அவை மூன்றும் திரிகரணம் என்னும் ஓரினமாயின.

"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்" (திருக்குறள் - 428)

இதற்கு உரை வகுத்த பரிமேலழகர் "பாவமும் பழியும் கேடும் முதலாக அஞ்சப்படுவன பலவாயினும், சாதிபற்றி ***"அஞ்சுவ"*** தென்றார். என்று விளக்குவது காண்க. ***பிழை*** - மன மொழி மெய்களால் முறையே தீயன நினைதலும், பேசுதலும், செய்தலும். ***பிழையே*** - ஏகாரம் தேற்றம். நல்வினைகளினின்றும் பிழையைப் பிரித்துக் காட்டுவதால் பிரிநிலை ஏகாரம் எனலுமாம். ***பெருக்கி*** - ஓரளவில் நில்லாது மிகுதியாகச் செய்து.

சுருங்கும் அன்பின் வெற்றடியேனை : சுருங்கும் அன்பின் - பிழை பெருக அன்பு குறைந்து கொண்டு வந்தது என்பார், ***சுருங்கும் அன்பின்*** என்றார். ***வெற்று அடியேனை*** - பிழையைச் சுருக்கி அன்பைப் பெருக்கிக் கொண்டேவருதல் மெய்யடியார்கள் இயல்பாகும். அதற்கு மாறாக யான் அன்பை சுருக்கிக் கொண்டு பிழையைத் தொடர்ந்து பெருக்கி வருகின்றேன் என்பார் தம்மை ***வெற்றடியேன்*** என்றார். வெறும் அடியவன் என்ற பெயரிலன்றி அடிமைப் பண்பு இல்லாதவன் என்றவாறு. ***அன்பு*** - திருவடிக்குச் செய்யும் அன்பு.

விடுதிகண்டாய் விடிலோ கெடுவேன் - வெற்றடியானாகிய இவன் அடிமைத்தன்மை பயனற்றது என்று கருதி என்னைக் கைவிட்டு விடுவாயோ? அவ்வாறு கை விடின் நான் கெட்டு ஒழிவேன் என்றவாறு.

❋ ***சாதி யொருமை*** - ஒரு சொல் ஒருமையீறு தோன்ற நின்றும் தோன்றாது நின்றும், பின் ஒருமை பன்மை வினை ஈறாக மேல்வந்து முடிக்கும் சொற்களுமின்றித் தானே பன்மைப் பொருளுணர்த்துவது.

(பிரயோக விவேகம். செய் 50 உரை)

விடிலோ - ஒகாரம் இரக்கக்குறிப்பு. ***எனக்கு உள்ளவனே*** - எனக்குப் பற்றுக் கோடாக உள்ளவனே. எனக்குச் சொத்தாக உள்ளவனே; நான் நம்பியிருக்கக் கூடியவனே எனலுமாம். இதற்கு இவ்வாறன்றி "***உள்ளவன்*** என்பது உள்ளத்தில் நின்று தாங்கிக் காப்பவன் என்னும் பொருட்டு". என்பது கதிர்மணி விளக்கம் "***உள்ளத்தவன்***" என்று பாடமில்லை. ஆதலின் இவ்வுரைப் பொருத்தம் புலவர் பெருமக்களின் ஆய்வுக்குறித்து.

அடியேன் உற்று மிகத்தேறி நின்றேன் : உற்று - அழுந்தி ஆராய்ந்து. இதற்கு இவ்வாறன்றி; உலகியலில் பொருந்தி என்றும், அடைக்கலமாக அடைந்து என்றும்; உன்னை விட்டு விலகியதால் வரும் துன்பத்தை மிக அனுபவித்து என்றும்; உன் திருவடியை அடைந்து என்றும்; திருப்பெருந்துறையை எய்தி என்றும் பலவாறு உரைத்தனர் முன்னுரையாளர்கள். அவற்றின் பொருட் சிறப்பின்மை தேற்றம். ***தேறி நின்றேன் - தேறி*** - தெளிந்து. ***மிக*** - அத்தெளிவை நூலறிவாலும் அனுபவ உணர்வாலும் நன்கு ஆராய்ந்து பெற்றேன் என்றவாறு. ***நின்றேன்*** - அத்தெளிவும் என்னால் முன்னரே துணியப்பட்டது என்பது குறிக்க இறந்தகாலத்தாற் கூறினார். ***தேறுதல்*** என்றதற்குச் செயப்படு பொருளாக ***நின்னை*** என்பது வருவித்துரைத்தாம்.

"என்னைத் தாங்குநர் நின்னையன்றிப் பிறர் இலர் என்பதையும் நீ கை விடில் கெடுவேன் என்பதையும்" நான் மிகத் தேறி நின்றேன் என்றவாறு.

அடியேன் தன்னைத் தாங்குநர் மற்று இல்லை - மெய்யன்பின்றிப் பிழையைப் பெருக்கி அதனால் கீழ் நிலையில் விழாதவாறு எடுத்துக் காப்போர் நின்னையன்றி வேறு யாரும் இலர். ***தாங்குநர்*** - பிழை செய்தாலும் பொறுத்து நல்வழியிற் செலுத்துவோர்.

இத்திருப்பாடலில் பெற்றது கொண்டு பிழையே பெருக்கி அன்பைச் சுருக்கும் உலக வாழ்கையை வெறுத்து இறைவனிடம் விண்ணப்பம் செய்வதால் "***பிரபஞ்ச வைராக்கியம்***" புலனாதல் அறிக.

128. உள்ளன வேநிற்க இல்லன
செய்யுமை யற்றுழனி
வெள்ளன லேனே விடுதிகண்
டாய்வியன் மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய்
புலனின்கட் போதலொட்டா
மெள்ளென வேமொய்க்கு நெய்க்குடந்
தன்னை யெறும்பெனவே உச

(இ - ள்)

பெரிய துதிக்கை கொண்டதும் விரைவிற் சினங்கொள்ளுவதுமான பெரிய யானையின் தோலைப் போர்வையாக உடையவனே, (நெஞ்சம்) நின்பால் சாரவொட்டாத வண்ணம், நெய்ந் நிறைந்த குடத்தை எறும்பு மொய்த்துத் தடை செய்வதுபோலப் புலன்கள் மெல்ல நெருங்கிச் சூழ்ந்து தடை செய்வன; அதனுல் வருந்துகின்றேன். தகுதியுள்ளன நிற்கத், தகுதியில்லாதனவற்றையே செய்யும் மயக்கத்தையும் ஆரவாரத்தையும் உடையவனும் தூய்மையற்றவனுமாகிய சிறியேனைக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை "மாத்தடக்கை பொள்அனல் வியன் வேழத்து உரியாய்; நின்கண் போதல் ஒட்டா; நெய்க்குடந்தன்னை எறும்பு என்ன; புலன்மெள்ளன மொய்க்கும்; உள்ளன நிற்க; இல்லனவே செய்யும்; மையல்துழனி வெள்ளன் அலேனே; விடுதி கண்டாய்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

மாழ்தடக்கை - மிகப் பெரிய கை. துதிக்கை. ***பொள் அனல் வேழம்*** - விரைவிற் சினங்கொள்ளும் யானே. விரைந்து வந்த யானே எனலுமாம்.

பொள் - விரைவுக் குறிப்பு ★

அனல் - சினம். உவமையாகுபெயர்.

வேழம் -யானை. ***மாத்தடக்கை வேழம்*** - என்று கூட்டியுரைப்பினுமாம். நாய் எத்துணைத் தீங்கு செய்யினும் தன்னை வளர்ப்பவனிடம் நன்றி மறவாதது. யானை ஒருசிறு பிழைக்கே சினங் கொண்டு பல்லாண்டு தன்னை ஊட்டி வளர்த்த பாகனையே கொல்வது. ஆதலின்..**"*பொள் அனல் வேழம்*"** என்றார்.

பொள்ள நல் வேழம் - உள்துளையுடைய நல்லயானை - என்பது கதிர்மணி விளக்கம். துளை ஈண்டு துதிக்கையில் உள்ள துளையைக் குறித்தது ***நல்*** - எல்லாம் வல்ல இறைவன் திருமேனிக்கு அதன் தோல் போர்வையாகப் பயன்படும்பேறு குறித்தாம் - என்று விளக்குவது அந்த உரை. அவ்வாறுயின் முயலகன் முதலிய யாவையும் நல்லனவாகுமாதலின் இவ்வுரைப் பொருத்தம் ஆய்வுக்குறியது. ***நல் வேழம்*** - நல்ல வலிமை பொருந்திய யானை என்பர் திரு.முதலியாரவர்கள்.

உரியாய் - யானையின் தோலை யுடையவனே. ***உரி*** - உரிக்கப்பட்ட தோல். தொழிலாகு பெயர்.

வியன் உரியாய் என்று கூட்டி "அகன்ற தோலையுடையவனே" என்பது கதிர்மணி விளக்கம் வேழத்துரி போர்த்த வரலாறு முன்னம் 123-ம் திருப்பாடலில் **"*கரியுரித்த வரலாறு*"** என்றதன் கீழ்க் காண்க.

நின் கண் போதல் ஒட்டா - உன்னிடம் செல்ல இசையாத; செல்ல வல்லமையற்ற. நெஞ்சம் என்ற வினைமுதல் வருவித்துக் கொள்க. இதனையே முன்னர் "நினைப்பதாக சிந்தை செல்லும் எல்லை" *(80)* என்றருளினார்.

★ *தார்ப்பொலி தருமதத்தன்*
தக்கவா றுரைப்பக் குன்றிற்
கார்த்திகை விளக்கிட் டன்ன
கடிகமழ் குவளைப் பைந்தார்
போர்த்தநல் லகல மெல்லாம்
பொள்ளென *வியர்த்துப் பொங்கி*
நீர்க்கடன் மகரப் பேழ்வாய்
மதனன்மற் றிதனைச் சொல்வான்
(சீவகசிந்தாமணி - நாமகளிலம்பகம் - 227)

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை
வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை
இல்லை யெனினும் பெரிதுள னெம்மிறை
நல்ல வரனெறி நாடுமி னீரே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை - 10 - 2103)

- என்பது நினைக.

ஒட்டா - "ஒட்டாது" என்ற வினையெச்சம் ஈறு கெட்டு நின்றது. முற்றெச்சப் பொருட்டாயிற்று எனலுமாம்.

நெய்க்குடம்தன்னை எறும்பு என்ன - "தேவரீர் திருவடி நெய்க்குடம் போல நிறைந்திருப்ப அதனை எறும்புகள் புசிக்க விதியில்லாமையில் அக்குடத்தைச் சுற்றித் திரிந்து அலைந்தது போலச் சிற்றின்பங்கருதி அலைந்த என்னை விடுதி கண்டாய்" - என்றுரைத்தார். திரு. சீகாழித் தாண்டவராயர் அவர்கள். **நெய்க்குடம்** - தேன்குடம் என்றார் திரு. தேசிகரவர்கள்.

புலன்கள் மெள்ளென மொய்க்கும் : புலன்கள் - ஐம்பொறிகள் குறித்து நின்றன. காயத்துள்ளே இறைவன் இருந்தும், காயம் அழிவதன் முன் நான் உள்ளே சென்று அவனை நுகரவிடாமல், உடலைச் சுற்றியலையும் ஐம்பொறிகள், நெய்ந்நிறைந்துள்ள குடத்துட் சென்று நெய்யைப் பருகவிடாமல் குடத்தை மெள்ளெனவே மொய்க்கும் எறும்புகள் போன்றன என்றவாறு. **மெள்ளெனவே** - உடல் அழியுமுன் இறைவனை அடைய விரையாமல் என்றவாறு. ★

★ நெய்க்குடத்தைப் பற்றியேறு மெறும்புகள்போ னிரந்தெங்கும்
கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள் காலம்பெய வுய்யப் போமின்
மெய்க்கொண்டு வந்துபுகுந்து வேதப்பிரானார் கிடந்தார்
பைக்கொண்ட பாம்பணையோடும் பண்டன்று பட்டினங் காப்பே.

(நாலாயிற திவ்வியப் பிரபந்தம் பெரியாழ்வார் திருமொழி 5 - 2 - 1)

"யானை முதல் எறும்பு வரை" என்னும் உலக வழக்குப்படி, மிகப் பெரிய உருவுடைய யானையை அடக்கிக் கொன்று அதன் தோலை உரித்த இறைவனே மிகச்சிறிய எறும்புகள் போன்ற ஐம்புலன்களின் ஆற்றலை ஒடுக்குதல் அரிதன்று என்றவாறு.

"மொய்க்கும்" எனப் பொருட்கள் கூறியமையின், "உவமைக்கண்" எறும்பெனவே என்றுவாளா கூறினுர். ஆதலின் எறும்புகள் நெய்க்குடம் தன்னை மொய்த்தல் எனப் புலன்கள் நான் உன்னை அணுக விடாமல் தடை செய்யும் என்பது பொருளாயிற்று. "மெள்ளனவே" என்பது பிழையான பாடம்.

உள்ளன நிற்க - உள்ளன - மெய்ப்பொருள் தரும் சத்தாக உள்ளன. இறைவழிபாட்டுக்குச் செய்யத்தக்கனவாகிய நற்செயல்கள் சரியை முதலிய நெறிகள், சிவபுண்ணியங்கள். ***நிற்க*** - அவற்றைச் செய்யாமல்.

இல்லனவே செய்யும் - உள்ளனவே என்பதிலுள்ள ஏகாரத்தைப் பிரித்து ***இல்லன*** - என்பதுடன் கூட்டுக. ஏகாரம் பிரிநிலை தேற்றமுமாம். ***இல்லன*** - உள்ளன வற்றுக்கு மறுதலையாக உலகியலிற் சென்று துன்பமாகிய தீய பயன்களை விளைவிக்கும் தகாத செயல்கள் பிறப்பிறப்புக்களில் செலுத்தும் செயல்கள். ***உள்ளன; இல்லன*** - என்ற வற்றுக்குப் "பயன்" என்ற வினை முதல் வருவித்துக் கொள்க. ★

உள்ளன நிற்க இல்லனவே செய்யும் - "தேவரீர் திருவடி அநாதியே பிரிவிலாது உள்ளபடி அடியேன் உள்ளத்திருப்ப, அவை இழந்து இல்லாத சூனியத்திற் கருதி மயக்கறிவால் மாறுபட்டுப் பல முயற்சி செய்யும் -" என்றுரைத்தார். சீகாழித் தாண்டவராயர்.

★ "ஏ! கூற்றுவனே!! போகங்கள் யாவும் நிலையற்றவை;
மனிதனின் இந்திரியங்களின் பொலிவையெல்லாம்
அவை தேய்த்துத் தள்ளுகின்றன. மேலும் தீர்க்காயுள்
என்பதும் மிக அற்பமானதே"

(கடோபநிடதம் 1 - 26)

மையல் துழனி வெள்ளன் அலேனை : மையல் - காமம் முதலியன பற்றிய மயக்கம். இஃது அகத்தில் நிகழ்வது. ***துழனி*** - ஒலி; ஆரவாரம். இஃது அகக்குற்றத்தை மறைக்க மேற்கொள்ளப்படும் ஆடம்பரச் செயலான புறக்குற்றம். ***துழனி*** - அறியாமைக் கூட்டம் என்பர் கவியரசு அவர்கள். ***துழனி வெள்ளன்*** என்று கொண்டு, ***"வெண்துழனியனை"*** எனப் பின் முன்னுக்கி உருபு விரித்து "வெற்ருரவாரம்" என்றுரைத்தார் திரு.முதலியாரவர்கள். ***வெள்ளன் அலேன்*** - கபடமற்றவன் அல்லாதவன்; வஞ்சகன், புல்லறிவாளன், தீயவன்.

இதனை;

திருச்சிற்றம்பலம்

வெள்ளநீர்ச் சடைய ஞர்தாம்
வினவுவார் போல வந்து
உள்ளமே புகுந்து நின்ருர்க்
குறங்குநான் புடைகள் போந்து
கள்ளரோ புகுந்தீ ரென்னக்
கலந்துதான் நோக்கி நக்கு
வெள்ளரோ மென்று நின்ருர்
விளங்கிளம் பிறைய ஞரே.

திருச்சிற்றம்பலம்

(திருமுறை - 4 - 75 - 9)

-எனவரும் நம் அரசுகள் திருவாக்கிற் காண்க.

வெள் அனலேனை - என்று பிரித்து. மயக்கமாகிய, ஆரவாரித்து ஒலி செய்யும் நெருப்பினையுடையவனுகிய சிறியேனை என உரை கொண்டு "தக்கன இன்ன தகாதன இன்ன வென்று பகுத்துணர்தற்குத் தடையாகிய உலக இன்பமாகிய காமம்" என்று விளக்குவது கதிர்மணி விளக்கம். ஈண்டு காமம் நெருப்பைப் போல் சுட்டெரிப்பது என்பது பொருள்.

அலேனை - அல் + ஏனை - "அறியாமையாகிய இருளுடைய என்னை" என்பாருமுளர்.

இத்திருப்பாடலில் "புலன்கள் உலகியற் பொருள்களைப்பற்றிக் கொண்டு என்னை அலைப்பதால் செய்யத் தக்கனவற்றை விட்டுச் செய்யத் தகாதனவற்றைச் செய்யலானேன் அதனால் திருவருட்பேறு கிட்டாதாயிற்று" என்று கூறி இரங்குவதால் **"பிரபஞ்ச வைராக்கியம்"** புலனாவது காண்க.

129. எறும்பிடை நாங்கூ ழெனப்புல
னாலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண்
டாய்வெய்ய கூற்றொடுங்க
உறுங்கடிப் போதவை யேயுணர்
வுற்றவ ரும்பரும்பர்
பெறும்பத மேயடி யார்பெய
ராத பெருமையனே. உரு

(இ - ள்)

கொடிய கூற்றுவன் வலிகுன்றும் வண்ணம்; அவன் உடம்பிற் பொருந்திய நறுமணமிக்க திருவடி மலர்களாகிய அவற்றையே பற்றுக் கோடாக அறிந்தவர்களாகிய சரியை நெறியினரும், அவரின் மேம்பட்ட கிரியை நெறியினரும், அவரின் மேம்பட்ட யோக நெறியினரும் ஆகிய இவர்கள், பெறுதற்குரிய (சாலோக முதலிய) பதமுத்திகளாக விளங்குகின்றவனே; அம் மூவரினும் மேம்பட்ட மெய்யன்பர்களாகிய சிவஞானிகள் மீண்டும் வாராமைக்கு ஏதுவாயுள்ள (சாயுச்சிய முத்தி நிலையாக விளங்கும்) பெருமையுடையவனே; பல எறும்புகளின் இடைப்பட்ட நாங்கூழ்ப் புழுவைப் போல, ஐம்புலன்காளாலும் தின்னப்பட்டு வருந்திப் பயனற்ற தமியனாகிய என்னைக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "வெய்ய கூற்று ஒடுங்க, உறுங்கடிப் போது அவையே உணர்வுற்றவர்; உம்பர் உம்பர்; பெறும்பதமே; அடியார்

பெயராத பெருமையனே; எறும்பு இடை நாங்கூழ் எனப் புலனால் அரிப்புண்டு அலந்த வெறுந்தமியேனை; விடுதி கண்டாய்." - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

வெய்யகூற்று ஒடுங்க - ***வெய்ய*** - வெம்மை; சிறிதும் இரக்கமின்மை. மார்க்கண்டேயரின் இளமை, ஒருகுடிக்கு ஒருமகவு; தவங்கிடந்து பெற்ற மைந்தன் என்பவற்றில் ஒன்றுகூட உளங்கொண்டு இரங்காமை. அவன் இறைவன் ஆணைப்படி தன் கடமையையே செய்தான் எனில்; இறைவன் திருவுள்ளக்குறிப்புக்கு மாறுகச் சிவ வழிபாட்டின் இடையில் சிவ சந்நிதியில் புகுந்து உயிரைக் கவர முயன்றது குற்றம் என்க. இறைவன் சந்நிதியில் விதி விலக்குக்கள் எல்லாம் மாறுபடும் என்பதைக் கண்ணப்பநாயனுர் செய்த வழிபாட்டாலறிக. சிவனடியார்களின் வாழ்நாள் எல்லையில் அவர்கள் உயிரை மேல் உலகங்களில் உள்ள உரிய புவனங்களிற் சேர்ப்பது சிவகணங்களின் தொழில்; கூற்றுவன் கடமையன்று.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"வேலைமலி தண்கானல் வெண்காட்டான் றிருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்றூதர்
ஆலமிடற் றானடியா ரென்றடர வஞ்சுவரே."

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 2 - 48 - 5)

-என்பது காண்க.

காலபாசத் திருக்குறுந்தொகைப் பதிகம் முழுமையும் பார்க்க.

ஒடுங்க - வலிகுன்றி அடங்க.

உறுங்கடிப் போது அவையே உணர்வுற்றவர் : உறுதல் - பொருந்துதல். ***கடி*** - காவல் எனலுமாம். அடியார்களைப் பாதுகாக்கும் திருவடி ஈண்டு மார்க்கண்டேயரைப் பாதுகாத்த திருவடி. ***போது*** -

மலரும் பருவத்திலுள்ள பெருமுகை, ஈண்டு உவமையாகு பெயராக இறைவன் திருவடியைக் குறித்து நின்றது. தாமரை மலர் போன்ற இறைவன் திருவடி கூற்றுவனின் வலிய மார்பில் பொருந்தியவுடனே அவன் ஆற்றல் ஒடுங்கிற்று இறைவனின் முடிவிலாற்றலுடைமையைக் குறித்தது. இறைவன், கூற்றுதைத்த வரலாற்றை 49 - ம் திருப்பாட்டில் "கூற்றுவன் எதிர் ஏற்றுவந்து தாமரைத்தாளுற்ற வரலாறு" - என்றதன் கீழுரைத்தாம். ஆண்டுகாண்க.

அவையே - அவை - ஈண்டுப் பண்டறிசுட்டாகத் தம்மை அடைந்தாரது இடையூற்றைப் போக்கி அழிவில் இன்பத்தில் உய்க்கும் இயல்பினவாகிய இறைவன் திருவடிகளைக் குறித்தது. ஏகாரம் தேற்றம் ***உணர்வுற்றவர்*** - தியானத்தில் நிறுத்தி வழிபடும் மெய்யடியார்கள். சரியை நிலையினர்.

உம்பர் உம்பர் - சரியை நெறியினருக்கு மேற்பட்ட கிரியா நெறியினரும், அவருக்கு மேற்பட்ட யோக நெறியினரும். ***உம்பர்*** - மேல்நிலை இடவாகுபெயராக அந்நிலையில் ஒழுகுவோரைக் குறித்து நின்றது. பின்னதற்கும் இஃதொக்கும்.

பெறும்பதமே - சரியை கிரியை யோகம் என்னும் மூன்று நெறிகளினும் ஒழுகுவோர், முறையே சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் பதமுத்திகளைப் பெறுவர். அவர்களுக்கு அப்பதங்களை யருளும் இறைவனை "உணர்வுற்றவர் பெறும்பதமே" என்றார். இன்பத்தை வழங்கும் இறைவனை வேற்றுமையின்மைபற்றி "இன்பமே" என்று விளித்தல் போலப் பதமுத்தியருளும் நிலையில் இறைவனைப் "**பதமே**" என்று விளித்தார்.

அடியார் பெயராத பெருமையனே - அடியார் என்றது ஈண்டு மெய்யன்பர்களாகிய சிவஞானிகளை. அவர்கள் ஞான நெறியில் ஒழுகுவோராதலின் குரு அருளால் அவர்கள் முடிவில் எய்துவது சாயுச்சிய நிலையாகிய பரமுத்தியேயாகும். சாலோக முதலிய பதமுத்திகளைப் பெற்றார்க்கு அந்நிலைகளிற் பெயர்ச்சியுண்டு. சாயுச்சிய நிலையினருக்குப் பெயர்ச்சியின்மையால் "***அடியார் பெயராத பெருமையனே***" என்றார்.

பெருமை - ஞான நெறியினின்றும் மீண்டும் பதமுத்திகளிற் செலுத்தாமல் அழிவில் இன்பம் துய்க்கத் தன்னையே வழங்குவதாகிய பெருமை.

எறும்பிடை நாங்கூழ் என : நாங்கூழ் - மண்புழு. இதை நாக்குப்பூச்சி; நாகப்பூச்சி; நிலப்புழு என்ற பெயர்களாலும் வழங்குவர். பூநாகம் என்பர் வடமொழியாளர். இஃது எலும்பு இல்லாது வெறும் தசைப்பிண்டமாக மருத நிலங்களில் பெரும்பாலும் காணப்படும். ஈரமண்ணை உண்டு கொண்டே அதை அகழ்ந்து கீழ்ச் செல்லும். உண்டமண்ணை வால்பகுதி வழியாகக் கழிவுப் பொருளாக மேலே நிலப் பரப்பில் வெளியேற்றும். எறும்பைவிடப் பன்மடங்கு பெரிதாயினும் பல எறும்புகள் இதனைச் சூழ்ந்து கொண்டு கடித்துத் தின்னும்போது அவற்றினின்றும் தன்னைக் காத்துக் கொள்ள இயலாது அலமந்து இறக்கும். ***என*** - போல. உவம உருபு. பொருட்கண் ***"அரிப்புண்டு"*** எனவருதலின் உவமைக்கண்ணும் ***"எறும்பிடை நாங்கூழ் அரிப்புண்டால் என"*** - என்று கொள்க.

புலனால் அரிப்புண்டு அலந்த : புலன் - ஐம்பொறிகள். பல எறும்புகள் ஒரு நாங்கூழ்ப் புழுவை அரித்துத்தின்பது போல, ஐம்புலன்களும் என் ஒருவனை அரித்துத் தின்கின்றன. நாங்கூழ்ப்புழு, தன்னைக் காத்துச் கொள்ள இயலாது துடித்து மடிவது போல, நானும் என்னைக் காத்துக்கொள்ள இயலாது துன்புற்றேன் என்றவாறு.

வெறும் தமியேன் : வெறுமை - பயனின்மை; ***தமியேன்*** - துணையற்றவன்; அனாதை. முன்னம் 72 - ம் திருப்பாட்டில் "தமியனேன்" என்றதன் கீழுரைத்தவை காண்க. இச்சொல் "தனியேன்" என வழங்கும் சொல்லுடன் மயங்கற்பாற்றன்று. உழவர்கள் ஆனேறு, கன்று, காலி, மேதி, கடா ஆடு, நாய் முதலியவற்றை தங்கள் உடைமைகளாக ஓம்பி வருவர். அவை, அவர்கள் உழவுத் தொழிலில் பல்வகையில் பயன்படுவன. அவற்றுக்குத் தீங்குநேர்ந்தால் அவர்கள் தலையிட்டுக் களைந்து காப்பர். ஆனால், மண்புழு அவர்கள் நிலத்தில் உள்ளனவாயினும் அவற்றால் அவர்களுக்குப் பயனில்லை என்று கருதுகின்றனர். ஆதலின், எறும்புகள் அவற்றை அரித்து அலைக்கும் பொழுது அவர்கள் தலையிட்டுக் காவாது வாளா செல்வர். அவ்வாறே நான் பயனற்றவனாதலின் ஐம்புலன்கள் என்னை அரித்துத் தின்னும்போது நீ தலையிட்டுக் காவாமல்

வாளாயிருக்கின்ருய் போலும். மண்புழு நிலத்தின் கீழுள்ள மண்ணையுண்டு தன் வால் பகுதிவழியாக நிலத்தின் மேற்பரப்பிற்கு வெளியேற்றுகின்றது. அதனுல் மண் கீழ்மேலாக நன்கு புரட்டப்பட்டுப் பயிர்த்தொழிலுக்கு ஆக்கம் தருகின்றது. ஆதலின் அதை உழவனின் நண்பர் என்று வேளாண்மை உயிரியல் வல்லார் கூறுகின்றனர். ஆதலின் அஃது ஆனேறு முதலியன போன்று பாதுகாக்கத் தக்கது. அவ்வாறே நானும் ஏனைய பேரடியார்கள் போன்று உன் அடிமை. அவர்களைப்போன்று நானும் பாதுகாக்கப்பட வேண்டியவன் என்றவாறு.

விடுதி - நீ பேரருளுடையனுதலின் அவ்வாறு என்னைக் கைவிட்டு விடலாகாது.

இந்தத் திருப்பாட்டின்கண், உலகியற் பொருள் பற்றிய ஐம்புலன்களால் வரும் துன்பம் பொறுக்கலாற்ருதது என்று மொழிவதால் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதல் காண்க.

130. பெருநீ ரறச்சிறு மீன்றுவண்
டாங்கு நினைப்பிரிந்த
வெருநீர்மை யேனை விடுதிகண்
டாய்வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுண் மலைச்சிறு
தோணி வடிவின்வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடை
வானக் கொழுமணியே உகூ

(இ - ள்)

பெரிய கங்கையாருகிய, மிக்கு வழியும் நீர்ப் பெருக்கையுடைய நீர் நிலையில், பொருகின்ற சிறிய தோணியின் உருவத்தைப் போன்ற; வெண்ணிறமுள்ள குளிர்ந்தபிறை அடங்கப்பெற்ற சடையையுடைய; ஞான வெளியில் திகழும் சிறப்புள்ள செம்மணியே, பெரிய நீர் நீங்கிச் சிறிய மீன் துடித்தாற் போன்று ஆதரவாகிய நின்னைப் பிரிந்தமையால் அஞ்சும் தன்மையுள்ள சிறியேனை விட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "வியன் கங்கை; பொங்கிவரும் நீர் நடுவுள், மலைச்சிறு தோணி வடிவின்; வெள்ளைக் குருநீர் மதி பொதியும் சடை; வானக் கொழுமணியே; பெரும் நீர் அற; சிறுமீன் துவண்டாங்கு; நினைப்பிரிந்து; வெரும் நீர்மையேனை; விடுதிகண்டாய்" என்று அன்றுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

வியன் கங்கை - பகீரதன் தவத்தால் விண்ணின் நின்றும், ஒருவராலும் தடுத்தற்கரிய விரைவுடன் இழிந்து வந்த கங்கை. ***வியன்*** - வான் வியப்பு. பெருமை; சிறப்புமாம்.

பொங்கிவரும் நீர் மடுவுள் - கங்கை, அங்ஙனம் நனி விரைவில் பொங்கிவரும் நிலையில் அதன் வேகத்தை இந்த மண்ணுலகம் தாங்காது என்று கருதிய பகீரதன், இறைவனை வேண்ட, அவன் அதைத் தன் சடையின் ஒரு கூற்றில் ஏற்று அடக்கினான். கங்கை இறைவன் சடை நடுவில் ஒரு சிறிய நீர்மடுப்போன்று காட்சி தந்தது என்றவாறு. ஈண்டுக் கலித்தொகை - கடவுள் வாழ்த்தில் "தேறுநீர் சடைக்கரந்து" - என்றதும் அதற்கு "பகையென்று தெளிகின்ற கங்கையின் வேகத்தைச் சடையில் ஒரு கூற்றிலே அடக்கி" - எனவரும் நச்சினார்க்கினியர் உரையும் நினைக.

மலைச்சிறு தோணி வடிவின் - இறைவன் தன் சடையில் தரித்த பிறைநிலவு. அந்த நீர் மடுவுள் மிதந்து அசையும் ஒரு சிறு தோணியைப் போன்று காட்சி தந்தது என்றவாறு. ***மலைதல்*** - அசைந்து மோதுதல் எதிர்த்தலுமாம். ***மலை*** - முதனிலைத் தொழிற்பெயர், மடுவில் உள்ள நீர் அலைகளால் இங்கும் அங்கும் தாக்கி அசைக்கப்படுதல்.

இஃது ஓர் அருமையான வருணனை. திருவாசகத்தில் இத்தகைய வருணனைகள் மிக்க அரிதாக ஈங்கொன்றும் ஆங்கொன்றுமே காணப்படுகின்றன.

"இனியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி ஐந்தெழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை" *(31 - ல்)* என்று நம் அடிகளே கூறி இரங்கியவண்ணம் அந்தப் பிறைநிலவு நம் அடிகளுக்குக் காட்சி தந்தது என்க. இறைவன் திருமேனியின் ஏதேனும் ஓர் உறுப்பையோ, அல்லது

அது தாங்கியுள்ள படைக்கலத்தையோ, அணிகளுள் ஒன்றையோ தியானம் செய்யினும் உயிர் உய்தியடையும். ஈண்டுப் பிறைநிலவின் தியானமும் அவ்வாறே உயிரின் பிறப்பிறப்புக்களை ஒழித்து உய்விக்கும் என்பது நினைக. தன்னைப்புகலடைந்த வெண்கதிர்ச் செல்வனின் சிறுமைகளை நீக்கிப் பாதுகாத்துயர்த்தியவாறு தன்னையுற்ற உயிர்களின் வினைகளைப் போக்கி உய்விப்பான் என்றறிவுறுத்தியவாறுமாம்.

இறைவன் கங்காதரனான வரலாறு முன்னம் போற்றித் திருவகவல் *(109 - ல்)* "கங்கையைச் சடையில் தாங்கிய வரலாறு" என்றதன் கீழுரைத்தாம். ஆண்டுக் காண்க.

வெள்ளைக் குருநீர் மதிபொதியும் சடை : குரு - நிறம் "குருவுங் கெழுவு நிறனா கும்மே". (தொல்காப்பியம் - சொல் - உரியியல் சூ.5) ***நீர்*** - தன்மை; குளிர்ச்சியுமாம்; வெள்ளை மதி, குருநீர்ச்சடை - என்று கூட்டியுரைத்தார் திரு. பாரதியாரவர்கள்.

வெண்கதிர்ச் செல்வன், தக்கன் சாபத்தால் தன் பதினாறு கலைகளில் பதினைந்து கலைகளும் அழிந்தபின், ஒற்றைக் கலையுடன் சிவபரஞ்சுடரைப் புகலடைந்து உய்ந்தான். என்பதை;

"மூன்றுறழ் ஐந்து வைகல்
முடிந்துழி மதிய மென்போன்
ஆன்றதன் கலையின் மூவைந்
தழிதலும் அவனே யென்னச்
சான்றுரை செய்தல் போலோர்
தண்கலை இருந்த லோடும்
மான்றனன் மெலிந்து வெள்கி
வானவர் கோனை யுற்றான்"

(கந்தபுராணம் - தட்சகாண்டம் சந்திர சாபப்படலம் 8)

-என்பதிற் காண்க. இறைவன் சூடியது ஒற்றைக் கலையுடன் கூடிய வெண்கதிர்ச் செல்வனையே என்பது நம் அடிகள் கருத்து. இதனை,

"வெண்மதியின் ஒற்றைக் கலைத்தலையாய்" (144) என்று பின்னர் அருளிச் செய்வதிற்காண்க. ஆனால் அவன் இரண்டு கலைகளுடன் சிவ பெருமானைச் சரணடைந்தான் என்பர் அடியார்க்கு நல்லார்.

இதனை,

"குழவித் திங்க ளிமையவ ரேத்த
வழகொடு முடித்த வருமைத் தாயினு
முரிதி னின்னோ ருடன்பிறப் புண்மையிற்
பெரியோன் றருக திருநுத லாகென"

(சிலப்பிதிகாரம் - மனையறம்படுத்த காதை 38 - 41)

தருக வென்றது **சூடின பிறை இரண்டுகலை** யாதலின், அதனை எண்ணுட்டிங்களாக்கித் தருக வென்பது கருத்து"

(அடியார்க்கு நல்லார் உரை)

- என்றதின் காண்க.

தக்கன் சாபத்தால் தன் கலைகளை ஒவ்வொன்றாக இழந்து வந்து இறைவனைப் புகலடைந்து உய்ந்த வரலாறு முன்னம் (8-ல்) தக்கன் வேள்வி செய்த வரலாறு" என்றதன் கீழுரைத்தவற்றுள் காண்க.

வானக் கொழுமணியே : வானம் - ஞானப் பெருவெளி. ***கொழுமை*** - செழுமை. ஒளி மிகுதியைக் குறித்து நின்றது. ***மணி*** - ஈண்டு செம்மணியைக் குறித்தது. இறைவன் திருமேனியின் வண்ணம் அஃதாதல் நினைக. விண்மீன், கோள் முதலியன இல்லாத ஞான வானில் செந்நிற ஒளி மிக்க மாணிக்கமணி போலத் திகழும் இயல்பினதாகிய இறைவன் திருமேனி குறித்தவாறு. குருந்தமரநிழலில் நம் அடிகளை ஆட்கொண்ட கோலம் இஃதாகும். அவனைப் பிரிந்த நிலையில் இன்று ஞான வெளியில் அவன் திருவுருவை நினைவு கூர்ந்து இங்ஙனம் கூறினார்.

பெருநீர் அற - பெரிய நீர் வெள்ளம் வற்ற.

சிறுமீன் துவண்டாங்கு - நம் அடிகள், தமக்கு நேரில் காட்சியருளிய ஞானாசிரியன் பிரிவால் தாமுற்ற துன்பத்தை ஈண்டோருவமையில் வைத்து விளக்குகின்றார். பறவைகளுக்குக் கூடும்,

கால்நடைகளுக்குத் தொழுவமும் அவ்வப் பிராணிகளின் உடலளவுக்குச் சிலமடங்கு பெரிதாயிருந்தால் போல். ஆனுல் சிறிய அளவுள்ள மீனுக்கு அதன் இருப்பிடமாகிய நீர் அந்த மீனின் உடலளவை விடச் சில மடங்கு பெரிதாயிருந்தால் போதாது. பல மடங்கு பெரும் அளவுள்ள நீர் நிலே வேண்டும் சிறு மீனுக்கு அஃது இருப்பிடமாக மட்டுமன்றி, உணவாகவும், மூச்சுக் காற்ருகவும் பயன்படுவது. திமிங்கிலம் முதலிய பெரிய வடிவுள்ள மீன்களுக்கு மிகப் பெரிய நீர் நிலேயாகிய கடல் வேண்டும். கடலின் அளவுடன் ஒப்பிடும் பொழுது திமிங்கிலமும் சிறு மீனே. **துவண்டாங்கு** - நீர் வற்றினுல் மீன் உடனே இறந்து விடுவதில்லே. நீர் நிலேயின் அடியில் உள்ள சேற்றின் அடியில் தங்கி அந்த ஈரத்தில் சில காலம் உயிர்வாழும். அப்பொழுது அது துன்புற்றுத் துடிக்கும் அதையே ஈண்டுக் கூறினுர். **ஆங்கு** - அதைப் போல.

நிணேப்பிரிந்த வெருநீர்மையனே - திருப்பெருந்துறையில் நீ ஆட்கொண்ட பின்பு உன்னேப் பிரிந்ததனுல் அஞ்சும் இயல்பினனுகிய என்னே. உவமையிற் கண்டவாறு இங்குப் பிரிதலே அருளாகிய கடலே விட்டு நீங்கியதாகக் கொள்க.

வெரு நீர்மையன் : வெரு - வெருவுதல்; அஞ்சுதல்; ***நீர்மை*** - தன்மை; இயல்பு.

பிரிந்த - என்னும் பெயரெச்சம் உண்ட களேப்பு என்பது போலக் காரணப் பொருளில் வந்தது. இஃது உவமையோடு இயையாமையில் ***பிரிந்து*** என்று பாடம் கொண்டார்கள் திரு. முதலியாரவர்கள். வெளிவந்துள்ள மற்ற பதிப்புக்கள் அனேத்திலும் ***பிரிந்த*** என்றே காணப் படுகின்றமையால் நாமும் அவ்வாறே கொண்டாம்.

நீரற்றநிலேயில் மீனுக்கு, மூச்சும் உணவும் புறக்காப்பும் இலவாதல் போன்று இறைவன் பிரிவால் உள்ளுணர்வின்பமும் புறத்துணேயும் இலவாயின என்று நம் அடிகள் வருந்தியவாறு.

வெரு நீர்மையேன் - என்றது அபயம் பெறுதற்கு உரியவன் என்று விண்ணப்பம் செய்து கொண்டவாறு.

இத்திருப்பாடலில் இறைவன் பிரிவால் நம் அடிகள் பிரபஞ்ச வாதனை தாக்க, அதற்கு அஞ்சி வருந்துதல் கூறப்பட்டுள்ளதால் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதல் காண்க.

131. கொழுமணி யேர்நகை யார்கொங்கைக்
குன்றிடைச் சென்றுகுன்றி
விழுமடி யேனை விடுதிகண்
டாய்மெய்ம் முழுதுங்கம்பித்
தழுமடி யாரிடை யார்த்துவைத்
தாட்கொண் டருளியென்னைக்
கழுமணி யேயின்னுங் காட்டுகண்
டாய்நின் புலன் கழலே. உஎ

(இ - ள்)

அடியேனைத் தூய்மை செய்கின்ற மாணிக்க மணியே, செழித்த முத்துக்கள் போன்ற அழகிய பற்களுள்ள மகளிரின் கொங்கைகளாகிய மலைகளில் ஏறிச்சென்று; அறிவுகுறைந்து இடறிவிழுகின்ற அடியேனைக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது). அன்பின் முதிர்வால் உடல் முழுதும் நடுங்கி அழுகின்ற மெய்யடியார் பக்கலில் அடியேனைப் பிணித்து வைத்து, ஆளாக ஏற்றுக் கொண்டு அருள்புரிந்து நின் ஞானமயமான திருவடிகளை இன்னமும் காட்டியருளல் வேண்டும்.

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "என்னைக் கழுமணியே; கொழுமணி ஏர் நகையார்; கொங்கைக் குன்று இடைச் சென்று; குன்றிவிழும் அடியேனை; விடுதி கண்டாய்; மெய்ம்முழுதுங் கம்பித்து; அழும் அடியார் இடை ஆர்த்து வைத்து; ஆட்கொண்டு அருளி; நின் புலன்கழல் இன்னும் காட்டு" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

என்னைக் கழுமணியே - என்னைப் பிறப்பிறப்பாகிய கடலினின்றும் எடுத்து மலமாசு நீங்கக் கழுவி வைத்துக்கொண்ட மாணிக்கமே

என்றவாறு. ***கழுமணி*** - இறந்தகால வினைத் தொகை. ***கழுவுதல்*** - மலப்பிணிப்பினின்றும் விடுவித்து ஞானமயமாக்கல். ஈண்டுச் சிவஞான போதம் 12 - ம் சூத்திரத்தில் "அம்மலம் கழீஇ" என்றதும் அதற்கு, "அவ்வியல்பினையுடைய மும்மலங்களை ஞான நீரால் கழுவி," என்று மாபாடியம் உரை வகுத்தலையும் காண்க. பின்னரும் தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால் (167) என அருளுவதையும் காண்க. உலகில் உள்ள மணிகள் பிறகருவிகளால் தூய்மை செய்யப்படுவன. சிவமாகிய செம்மணி, இயல்பாகவே மாசிலாமணி. அது தன்னை நண்ணிய உயிர்கள் சிவசந்நிதிச் சிறப்பால் தாமே தூயவாகும்படி அருள்வதாகும். சந்திரகாந்தக் கல் தண்ணீரைப் பொழிவதை யொத்து, இந்தமணி அருள் நீரைப் பொழிவதாகும்.

கொழுமணி ஏர் நகையார் : கொழுமணி - குற்ற நீங்கியதும் பருத்து முதிர்ந்துள்ளதுமான முத்து. அஃதே வெள்ளொளி யுடைத்தாகலின் இளமகளிர் பற்களுக்குவமையாயிற்று. ***மணி*** - ஈண்டு முத்தைக் குறித்து நின்றது. ***ஏர்நகையார்*** - அழகிய பற்களையுடைய இளமகளிர் முத்தின் நிரை போன்ற பற்கள் என்றமையால் அவற்றையுடைய மகளிரின் இளமைச் செவ்வி புலனாயிற்று. முன்னம் போற்றித்திருவகவல் (30-ல்) "வெண்ணகை" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

கொங்கைக் குன்றிடைச் சென்று - கொங்கைகளுக்குப் பருமனும் திரட்சியும் நிமிர்ந்த நிலையுமுள்ள குன்றுகளை உவமை காட்டியதால்; அக் கொங்கைய மகளிரின் இளமைநலம் குறித்தார். முன்னம் போற்றித் திருவகவல் (34-ல்) "ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. ***சென்று*** - ஞானமார்க்கத்தை விட்டு விலகி மகளிர் மையலில் வீழ்ந்து என்றவாறு.

குன்றி வீழும் அடியேனை - குன்றி - அறிவு, ஒழுக்கம், குடிப்பிறப்பு யாவும் குறைந்து. ***வீழும்*** - வீழ்ச்சியடையும். அஃது ஒழுக்கம் முதலியன குன்றியதனால் நிகழ்வது.

ஈண்டு;

" குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின் " (திருக்குறள் - 965)

-என்று தெய்வ நூல் தெருட்டுவது நினைக.

"குன்றிடைச் சென்று குன்றிவிழல்" என்றது ஒரு நயம். இது சொற்பின் வருநிலையணி. வாழ்வோமென்று கருதிச் சென்று மலையினின்றும் வீழ்ந்து அழிதல். சமநிலத்தில் நடந்து செல்வதினும் மலையேறி நடத்தலால் உடல் வலி குறைந்து கால் இடறி வீழ்தல் கூடும் என்பது உலகியலில் நாம் அறிவது. சமதரையில் வீழ்ந்தால் சிறு காயங்களுடனே அன்றிக் காயமே இன்றியோ தப்பலாம். குன்றினின்றும் வீழ்ந்தோர் உயிர் பிழைத்தலரிது. அதிலும் இரு குன்றுகளினிடையுள்ள பள்ளத்தாக்கில் வீழ்ந்தோர், அங்கு ஓடும் ஆறு முதலியவை இருப்பின் மரணம் உறுதி என்பார் "குன்றிடைச் சென்று" என்றார். இஃது உலகியல் மக்களின் வீழ்ச்சியை விடத் தவவாழ்வில் முன்னேறுவோர் வீழ்ச்சி பெருந்துன்பம் தருவதென்றவாறு.

அடியேனை - வீழ்வாரைக் கை தூக்குதலே அருளாளர் செய்கை. ஈண்டு, நான் உன் அடியவன்; நீ பேரருளாளன்; ஆதலின் என்னைக் கைவிட்டு விடாதே என்றவாறு.

விடுதி கண்டாய் - ***விடுதி*** - விட்டு விடுவாயோ? நீ பேரருளாளனும் நான் உன் அடிமையுமாதலின் அவ்வாறு கை விடலாகாது. ***கண்டாய்*** - முன்னிலை அசை.

மெய்ம் முழுதும் கம்பித்து - உடல் முற்றிலும் நடுங்கி. இது சிவபெருமானின் பேரடியார் அகத்திலக்கணங்கள் பத்தில் ஒன்று. முன்னம் போற்றித் திருவகவல் (61-ல்) "உடல் கம்பித்து" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. முன்னம் திருவண்டப்பகுதி (176-177)ல். "உருகுவது உள்ளங் கொண்டோருருச் செய்தாங்கெனக், கள்ளூருக்கை யமைத்தனன்" என்றருளினாராதலின், இந்த நடுக்கம் உடலுறுப்புக்களின் ஓரோ விடத்தன்றி உடல்முழுதும் நிகழ்ந்தது என்பார் ***"மெய்ம் முழுதும்"*** என்றார்.

அழும் அடியாரிடை ஆர்த்து வைத்து : அழும் - பக்திப் பெருக்கால் கண்ணீர் விடும்.

இதனை;

திருச்சிற்றம்பலம்

“சகமலா தடிமை யில்லை தானலாற் றுணையு மில்லை
நகமெலாந் தேயக் கையா ணுண்மலர் தொழுது தூவி
முகமெலாங் கண்ணீர் மல்க *முன்பணிந் தேத்துந் தொண்டர்*
அகமலாற் கோயி லில்லை யையனை யாற னார்க்கே.”

திருச்சிற்றம்பலம்

(திருமுறை - *4 - 40 - 8*).

- எனவரும் திராவிட வேதத்திற் காண்க. அழுதல்; மேற்குறித்த அகத்திலக்கணம் பத்தில் ஒன்றுதலும் பார்க்க.

அடியார் இடை - சிவனடியார் கூட்டத்தில். ***என்னைக் கழுமணியே*** என்றதிலுள்ள ***“என்னை”*** என்றதை இடைநிலை விளக்காகக் கொண்டு ஈண்டுங் கூட்டி ***“என்னை அடியாரிடை ஆர்த்து வைத்து”*** என்க.

ஆர்த்து - கட்டி. அது மீண்டும் உலகியலிற் சென்று விடாது காத்தற் பொருட்டு. முன்னம் திரும்பெருந்துறையில் என்னை அடியார்களுடன் கூடியிருக்கச் செய்தாய். அதனால் நான் புறம்போகாது காக்கப் பெற்றேன். பின்னர் அவர்களை உன்னிடம் ஒடுக்கிக்கொண்டு நீயும் நீங்கினாய். அதனால் தனியே விடப்பட்ட நான், புறம்போனேன். ஆதலின் என்னை மீண்டும் மெய்யடியார் பக்கலில் இருத்தி, நான் மறுபடியும் விலகிவிடாமல் கட்டியும் வைத்தருள்க என்றவாறு.

ஈண்டுக், “கொங்கைக் குன்றிடைச் சென்று விழும் அடியேன்” என்றது நம் அடிகள் அடியார் கூட்டத்தை விட்டு விலகியதால் நேர்ந்தது என்றும்; “கொழுமணி ஏர் நகையார் என்ற பன்மைக் குறிப்பினால் பரத்தையர் பலர்பால் தொடர்பு கொண்டிருந்தாரென்றும், மருதத்திணை அன்பின் ஐந்திணைகளில் ஒன்றாகலின் அதனால் நம் அடிகளுக்கு இழுக்கொன்றும் இல்லை” என்னும் விபரீத ஆய்வும் முடிவும் கொள்வாருமுளர் இவற்றை

23 - ம் திருப்பாடல் உரையில் விரித்து விளக்கி மறுத்தாம். எனவே, இவ்வெற்ருய்வுகளின் முடிவுகளை வெறுத்தொதுக்குக.

ஆட்கொண்டு அருளி - திருப்பெருந்துறையில் முன்னம் ஆட் கொண்டது போல மீண்டும் அடிமையாக ஏற்று என் மலபந்தங்கள் நீங்கும்படி அருள் செய்து.

நின் புலன்கழல் இன்னும் காட்டு : புலன்கழல் - சிவபரஞ்சுடரின் திருவடிகளையே ஞானமயமாகச் சைவ நூல்கள் சாற்றும். ஆதலின் ***புலன் கழல்*** என்ருர். ***புலன்*** - அறிவுடைமை.

இன்னும் - முன்னர்த் திருப்பெருந்துறையில் காட்டியருளியது போல இன்னமும் காட்டியருளுக என்றவாறு. ***காட்டு*** - நீ காட்டியருளினுலன்றி என்னுல் காண முடியாது. ஆதலின் காட்டும் உபகாரமும், என் உயிருடன் கலந்து நான் அவற்றைக் காணும் வண்ணம் நீயும் உடனிருந்து காணும் உபகாரமும் செய்தருள்க.

நின்கழல் புலன் காட்டு - என்று மாற்றி நின் திருவடிகளை எனக்குக் கட்புலனுகும்படி காட்டியருளுக என்பார் கவியரசு அவர்கள்.

இதன்கண், "கொழுமணியேர் நகையார் கொங்கைக் குன்றிடைச் சென்று குன்றி விழுமடியேனை" - என்று வெறுத்துக் கூறுவதால் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதல் காண்க.

132. புலன்கடி கைப்பிக்க யானுந்
திகைத்திங்கொர் பொய்ந்நெறிக்கே
விலங்குகின் றேனை விடுதிகண்
டாய் விண்ணு மண்ணுமெல்லாங்
கலங்கமுந் நீர்நஞ் சமுதுசெய்
தாய்கரு ணுகரனே
துலங்குகின் றேனடி யேனுடை
யாயென் றொழுகுலமே. உஅ

(இ - ள்)

விண்ணுலகமும் பூவுலகமும் ஆகிய எல்லாம் கலக்கமுறக் கண்டு, கடலில் தோன்றிய நஞ்சத்தை உண்டு காத்தருளியவனே; அருட்குணத்துக்கு இருப்பிடமானவனே; நிலைகலங்குகின்ற அடியேனை ஆளாக உடையவனே; என் வழிபாட்டுக்குரிய இனமே; ஐம்புலன்களும் மயக்கம் செய்ய; மயங்கி இவ்வுலகத்து நிலையற்ற ஒரு தீய வழியின் கண்ணே விலகிச் செல்கின்ற சிறியேனாகிய என்னை; விட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை - "விண்ணும் மண்ணும் எல்லாம் கலங்க; முந்நீர் நஞ்சு அமுது செய்தாய்; கருணாகரனே; துலங்குகின்றேன் அடியேன் உடையாய்; என் தொழுகுலமே; புலன்கள் திகைப்பிக்க; யான் திகைத்து இங்கு ஓர் பொய்ந்நெறிக்கே; விலங்குகின்றேனை; விடுதிகண்டாய்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

விண்ணும் மண்ணும் எல்லாம் கலங்க - அமுதம் வேட்டுக் கடலைக்கடைய அதில் தோன்றிய ஆலகால நஞ்சைக்கண்டு முதலில் நடுங்கினவர்கள் தேவர்கள்; பின்னர் நடுங்கியவர் மக்கள். ஆதலின் அம்முறைக் குறிப்புத் தோன்ற முதலில் தேவர்களையும் பின் பூவுலக வாசிகளையும் கூறினார். விண் மண் பாதல மென்னும் முத்திற உலகங்களும் நடுங்கினவாயினும் சிறப்புப் பற்றி முதலிரு உலகங்களை மட்டும் கூறினார். ***வீண் மண்*** - என்றவை இடவாகு பெயர்களாக முறையே மண்ணுலகுக்கு மேலுள்ள எல்லா உலகங்களிலும் வசிப்போரையும்; பூவுலக வாசிகளையும் குறித்து நின்றன. நிலவுலகின் கீழுள்ள எல்லா உலகங்களையும் பாதலம் என்றதில் அடக்கி அவற்றில் வாழ்வோரைக் குறித்ததாகக் கொள்க.

எல்லாம் - முற்றிலும்; அவ்வுலகங்களில் வசிப்போர் அனைவரும்.

கலங்க - நஞ்சினால் நேரவுள்ள தங்கள் அழிவைக்கண்டு அச்சமுற. ***கலங்க*** - என்றதன் பின் "கண்டு" எனது ஒரு சொல் வருவித்துரைக்க. முன்னம் 122 - ம் திருப்பாட்டில் "மிக்க நஞ்சு அருந்தினனே" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

முந்நீர் நஞ்சு அமுது செய்தாய் : முந்நீர் - கடல். நில உலகை ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய மூன்று நீர்மைகளையுடையது. இதற்கு, இவ்வாறன்றிக் கடல், ஆற்று நீரும் ஊற்று நீரும் மழை நீரும் கொண்ட பெரிய நீர் நிலேயாதலின் முந்நீர் எனப்பெயர் பெற்றது என்பர். புறநானூற்றின் பழைய உரையாசிரியரும் அவ்வாறே கொண்டார்.

"ஆவுமானியற் பார்ப்பன மாக்களும்
....
முந்நீர் விழவி னெடியோ
னன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே."

(புறநானூறு 9)

" .... யாற்று நீரும் ஊற்று நீரும் மழை நீரு
முடைமையால் கடற்கு முந்நீரெனப் பெயராயிற்று"

-என்பது அவருரை. ஆனுல் அடியார்க்கு நல்லார் இதை மறுத்துக் கீழ்க்கண்டவாறு விளக்குவது காண்க.

"முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்;
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவிறோ ளோச்சிக் கடல்கடைந்தா னென்பரால்"

(சிலப்பதிகாரம் - மதுரைக் காண்டம் - ஆச்சியர் குரவை)

முந்நீர் - கடல். ஆகுபெயர். ஆற்றுநீர் ஊற்று நீர் மேனீரென இவையென்பார்க்கு அற்றன்று; ஆற்றுநீர் மேனீராகலானும் இவ்விரண்டு மில்வழி ஊற்று நீரும் இன்ருமாதலானும் இவற்றை முந்நீரென்றல் பொருந்தியதன்று; முதிய நீரெனில் "நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்" என்பதனுல் அதுவும் மேனீரின்றி அமையாமையின் ஆகாது; ஆனுல் முந்நீர்க்குப் பொருளியாதோவெனின் முச்செய்கையையுடைய நீர் முந்நீரென்பது; முச்செய்கையாவது மண்ணைப் படைத்தலும், மண்ணை யழித்தலும், மண்ணைக் காத்தலுமாம் ...."

தேவர்களும் அசுரர்களும் கூடிக் கடைந்தது திருப்பாற்கடலே; நஞ்சம் எழுந்ததும் அந்தக் கடலில்தான். ஈண்டு அந்தக்கடலே முந்நீர்க்கடல் என்றது இனம்பற்றி வந்த உபசாரம்

இறைவன் நஞ்சு அமுது செய்த வரலாறு முன்னம் 8 - ம் திருப்பாடலில் "நஞ்ச மஞ்சிய வரலாறு" என்றதன் கீழுரைத்தாம். ஆண்டுக் காண்க.

கருணாகரனே - இறைவன், நஞ்சுண்ட வரலாறு, எல்லா உலகங்களையும் காத்தருளிய அவன் பேரருளுடைமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. பின்னர், அவ்வருட் செயலை நினைந்து உயிர்கள் தன்னை வழிபட்டுய்யும் பொருட்டு அந்த நஞ்சைத் தன் கண்டத்தில் நிறுத்தி நீலகண்டனானதும் அவன் பேரருளாம். எனவே, **கருணாகரன்** என்றார். **கருணை** - அருள்.

ஆகரம் - இருப்பிடம். சுரங்கம், கடல் என்லுமாம். கருணை ஆகரன் - கருணாகரன் என வந்தது தீர்க்க சந்தி

இத்தப் பேரருள் நிகழ்ச்சியை;

"ஆலங் குடியானை ஆலால முண்டானை
ஆலங் குடியானென் றார்சொன்னார் - ஆலங்
குடியானே யாகில் குவலயத்தோ ரெல்லாம்
மடியாரோ மண்மீதி லே"

- என்று காளமேகப்புலவர் சுவைபடக் கூறி மகிழ்கின்றார்.

துலங்குகின்றேன் அடியேன் உடையாய் : துலங்குதல் - கலங்குதல். ஈண்டு நிலைகுலைதல் குறித்து நின்றது. ஆலகாலத்துக்கு அஞ்சிய எல்லா உலகங்களையும் காத்த உனக்குப் பிறப்பிறப்புக்களுக்கு அஞ்சி நிலைகுலையும் என்னைக் காத்தல் பெரிதன்று. அஃது உன் பேரருளுடைமைக்கு இயல்பேயாம் என்பது குறிப்பு.

அடியேன் உடையாய் - நான் உன் அடிமை; நீ என் தலைவன். ஆதலின் உன் அடிமையைக் கலங்காது காத்தருளுதல் உன் கடமை என்றவாறு.

என் தொழுகுலம் - என்னுல் வழிபடப்படும் இனம். அவ்வினத்தினர்; அன்னை, தந்தை, மூத்தோர், ஆசிரியன்மார், தெய்வங்கள் என்பவராம். இதனைப் "போற்றித்திருவகவல்" *148* - ல் "அம்மான்" என்றதன்கீழ் எடுத்துக்காட்டிய திருத்தாண்டகத்திலும் காண்க.

புலன்கள் திகைப்பிக்க - நிலையற்ற மாயா காரியப் பொருள்களைப் பற்றி நிகழும் ஐம்புல நுகர்ச்சிகள் தொடக்கத்தில் இன்பம் போலத் தோன்றி முடிவில் துன்பந் தருவன. அந்த உண்மையை அறியாவண்ணம் அறிவை மயக்கலின் **புலன்கள் திகைப்பிக்க** என்றூர். **திகைப்பித்தல்** – மயக்க அறிவைத் தருதல். "மாறி நின்றெனை மயக்கும் வஞ்சப்புலன்" *(386)* என்றும் "திகைத்தாற்றேற்ற வேண்டாவோ" *(498)* என்றும் நம் அடிகளே பின்னரும் கூறுதல் காண்க.

யானும் திகைத்து இங்கு ஒர் பொய்ந் நெறிக்கே விலங்குகின்றேனை : யானும் - உன்ஞல் ஆட்கொள்ளப்பட்ட யானும் - உம்மை உயர்வு சிறப்பு.

> *"காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து*
> *மேமப் புணை மன்னு மில்"*

(திருக்குறள் - *1164*)

என்னும் பொய்யாமொழிக்குப் பரிமேலழகர் உரையை மேற்கோள்காட்டி ஈண்டு, உம்மை அசைநிலை என்றுறுதுக்குவது கதிர்மணி விளக்கம்.

இங்கு - ஐம்புலன்கள் உய்த்து இன்பம் நுகரச் செய்யும் இந்த மண்ணுலகில்.

ஒர் பொய்ந்நெறி - தீமை செய்வதில் ஒப்பற்ற வல்லமையுடைய பிழை நெறி. ***ஒர்*** - ஓர் என்பது குறுக்கல் விகாரம் பெற்று "***ஒர்*** " என நின்றது. ***பொய்ந்நெறி*** - அழியும் இன்பம் தரும் உலகியல் நெறி. அஃது

ஆன்ம முன்னேற்றத்தைத் தடுக்கும் பிழைபட்ட வழி. **பொய்ந்நெறிக்கே** - ஒரு நன்னெறியினின்றும் விலகிப் பிறிதொரு நெறியில் செல்லுங்கால் அஃது ஒரோவமயம் நன்நெறியாகவும் அமைதல் கூடும். ஆனுல் அடியேனுக்கு அங்ஙனமின்றித் தீநெறியாகவே அமைந்தது என்று இரங்கியவாறு. **பொய்ந்நெறிக்கே** - ஏகாரம் தேற்றம். பொய்ந்நெறிக்கு என நான்கன் உருபு ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்தது. ***"திங்கட்கொர் பொய்நெறி "*** - இதில் வருமொழி முதல் உயிர்மெய் யெழுத்தாகலின் நிலே மொழி "திங்கட் கொரு" என்றுதான் வருதல் வேண்டும். அவ்வாறுவரின் அது கனிச் சீராகிச் செய்யுளின் ஓசை கெடும். ஆதலின் "திங்கட் கொர்" என வந்தது செய்யுள் விகாரம்.

விலங்குகின்றேனே - விலகிச் செல்கின்ற என்னே. ஆலத்தையும் அமுது செய்த நீ; நன்னெறியினின்றும் விலகித் தீநெறிக்கே செல்கின்ற என்னே அவ்வாறு செல்லும்படி விட்டுவிட வேண்டாம். நீ கருணுகரன் ஆதலின் நான் அவ்வாறு செல்லாமல் காத்தல் உன் கடமையுமாம் என்றவாறு.

விடுதி - எனவே அவ்வாறு கைவிடலாகாது.

இத்திருப்பாடலில், ஐம்புல இன்பங்களால் திகைப்புண்டு செந்நெறிச் செலவைக் கைவிட்டு நிலேயற்ற உலக இன்பங்களே நாடிச் செல்லும் உலக வாழ்வை வெறுத்துக் கூறி இரங்குவதால் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதல் காண்க.

133. குலங்களேந் தாய்களேந் தாயென்னேக்
குற்றங்கொற் றச்சிலேயாம்
விலங்கலெந் தாய்விட் டிடுதிகண்
டாய்பொன்னின் மின்னுக் கொன்றை
அலங்கலந் தாமரை மேனியப்
பாவொப்பி லாதவனே

மலங்களைந் தாற்சுழல் வன்றயி
ரிற்பொரு மத்துறவே உகூ

(இ - ள்)

பொன்னையொத்து ஒளிவிடுகின்ற திருக்கொன்றை மலர் மாலையையுடைய; அழகிய தாமரை மலர் போன்ற திருமேனியையுடைய என் தந்தையே; ஒப்பற்ற பரம்பொருளே; மத்தினால் வலிந்து கடையப்பட்டுச் சுழலும் தயிரைப் போல; ஐந்து மலங்களாலும் தாக்கப்பட்டுச் சுழல்கின்றேன்; (இந்த நிலையில்) காமம் முதலிய குற்றங்களின் கூட்டத்தை நீக்கினாயாயின்; அடியேனுடைய அம்மலக் குற்றங்களையும் நீக்கினோனாவாய்; மேருமலையாகிய வெற்றிதரும் வில்லையுடைய எந்தையே; கைவிட்டு விடுவாயோ.? (விடால்காது).

(வி - ரை)

இத்திருப்பாடலை - "பொன்னின் மின்னுக் கொன்றை அலங்கல் அம் தாமரைமேனி அப்பா; ஒப்பு இலாதவனே; மத்து உறப்பொரும் தயிரின், மலங்கள் ஐந்தாற் சூழல்வன்; குலம்களைந்தாய் என்னைக் குற்றம் களைந்தாய், விலங்கல் ஆம் கொற்றச் சிலை எந்தாய் விட்டிடுதி கண்டாய்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

பொன்னின் மின்னுக் கொன்றை அலங்கல் : பொன் - கொன்றைமலரின் நிறத்துக்கும் ஒளிக்கும் ஈண்டு உவமையாக நின்றது. ***மின்னும்*** - ஒளிவீசும். ***கொன்றை அலங்கல்*** - கொன்றைப் பூமாலை. அரசர்க்கு அடையாள மாலையும், அழகுக்கு அணியும் மாலையும் போருக் கெழும்பொழுது சூட்டிக் கொள்ளும் மாலையும் ஆகியவை தனித்தனி வெவ்வேறு பூமாலைகளாம். சிவபெருமானுக்கு இம்முத்திறப் பூமாலையும் கொன்றை மலர்மாலையேயாம். இவ்வுண்மையை;

" கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்;

....

றுவில் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே".

(அகநானூறு - காப்புச் செய்யுள்)

-எனவரும் பாரதம் பாடிய பெருந்தேவனர் வாக்காலறிக. ஈண்டுத் ***தார்*** - அடையாள மாலே. (மார்பில் அணிவது) ***மாலே*** - அழகுக்கு இடுவது; ***கண்ணி*** - போர் மாலே. (தலேயைச் சூழ்ந்து நெற்றியில் பொருந்த அணிவது)

" கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பிற் றருங் கொன்றை
.................."

(புறநானூறு - கடவுள் வாழ்த்து)

உரையுடன் பார்க்க.

ஈண்டும், கொன்றைப் ***பொன்னேர்ப்*** புதுமலர் என்று கொன்றையின் வண்ணத்துக்குப் பொன் உவமையாதல் காண்க.

கொன்றை - இது, பொன்னிறமாக, மலரும் பொழுதே சமட்டித் திருவைந்தெழுத்தான ஓங்கார வடிவில் மலர்வது. நீண்ட மகரந்தக் குழாய்கள் தொங்குவதால் ஒவ்வொரு மலரும் ஒவ்வொரு மாலேபோன்று காட்சியளிப்பது. சமட்டித் திருவைந்தெழுத்தின் விரிந்த நிலேகளும், அவை இறைவன் திருமேனியாகவும் திருப்பெயராகவும் இறைவனேயாகவும் உள்ள நிலேகள் பற்றியும் முன்னம் சிவபுராணம் (1-ல்) "நமச்சிவாய", "ஓங்காரமாய் நின்ற" (33) ஆகியவற்றின் கீழ் விளக்கினும். எனவே கொன்றை அவனுக்கு அடையாள மாலேயாயிற்று. உலகங்கள் அனேத்திலுமுள்ள அழகுகளுக்கெல்லாம் சிவபெருமானே இருப்பிடம். ஆதலின், அவனே அழகுசெய்ய ஒருமாலே தேவையில்லே. ஆனல் சிவவழிபாட்டில் "அலங்காரம்" என்ற ஒருருப்புண்டன்றே? அதன்படி அடியார்கள் தாங்கள் வழிபடும் சிவமூர்த்தத்தை மலர்மாலேகளால் ஒப்பனே செய்வர்.

அதற்கு அவர்கள் இறைவன் திருமேனி வண்ணமாகவேயுள்ளதும் திருவைந்தெழுத்தை நினைவூட்டுவதுமான கொன்றை மாலையைத் தேர்ந்தேடுத்தனர். ஆதலின், அஃது அவனுக்கு அழகுக்கான மாலையுமாயிற்று.

இறைவன் திருமேனி வண்ணம் பொன்னையொத்து இலங்குவதை;

திருச்சிற்றம்பலம்

"பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலியும் பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
என்போலிக ளும்மை யினித்தெளியார்
அடியார் படுவ திதுவேயாகில்
அன்பேயமை யுமதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4 - 1 - 9)

-எனவரும் அரசுகள் தமிழிற் காண்க.

"கொற்றச் சிலையின் விலங்கல் எந்தாய்" - என்று சிவபெருமான் முப்புரங்களை அழிக்க எழுந்த போர்க்கோல நிலை கூறப்படுகின்றது. எனவே, இப்பொழுது அவன் அணிந்துள்ள கொன்றைமாலை அவனுக்குப் போர்மாலையுமாயிற்று.

அம் தாமரை மேனி - அழகிய தாமரை மலர் போன்ற வண்ணமுடைய திருமேனி. ***"அலங்கல் மேனி " "அம்தாமரை மேனி"*** என்று தனித்தனியே கூட்டுக. "செந்தாமரைக் காடனைய மேனி" என்றார் முன்னரும் *(30)*.

அம் - நிறமும் ஒளியும் செவ்விகுலையாத அழகு. ***தாமரை*** - செந்தாமரை என்றோ, வெண்டாமரை என்றோ பிரிதினியையு நீக்கிய

விசேடனமின்றி, ***தாமரை*** - என்று வாளா விளம்பினுர். இறைவன் திருநீறு அணிந்த செம்மேனியன். ஆதலின் ஈண்டுச் செந்தாமரை அவன் திருமேனி வண்ணத்துக்கும், வெண்டாமரை அவ்வுடம்பின் மேல் அவன் அணிந்துள்ள திருநீற்றின் வண்ணத்துக்கும் ஒப்பனவாகலின் இரு தாமரைகளேயும் கொள்க.

அப்பா - ஞாஞசிரியனே; விளி.

ஒப்பு இலாதவனே - "இறைவன், தம்பொருட்டு மானிடச்சட்டைதாங்கி எழுந்தருளிஞுயினும், முடிவிலாற்றலுடையவனும் திருமால் முதலிய பெருந்தேவர்களுக்கும் அரியவன் என்பதும்; உவமையற்றவன் என்பதும் நினைக" "உவமிக்கின் மெய்யே உன்னை யொப்பாய்" *(120)* என்று முன்னர் அருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

மத்து உறப் பொரும் தயிரின் - தயிரினின்றும் வெண்ணெயைத் தனியே பிரித்தெடுக்க மகளிர் தயிருள்ள சட்டியில் மத்தை நாட்டிக் கடைவர். மத்து வலமும் இடமுமாகச் சுழன்றும் கீழே ஆழ்ந்தும் மேலே எழுந்தும் தயிரைச் சுழற்றிக்கடையும். தயிரும் மத்தின் வழி வலமும் இடமுமாகச் சுழன்றும் கீழ் மேலாகப்புரண்டும் கலங்கும். ஈண்டு, மத்து ஐம்புலன்களின் தொழில்களுக்கும், தயிர், புலன் வழிப்பட்டு அலேவுறும் உயிருக்கும் உவமை. **பொரும்**. பொருதல் - கடைதல். ஈண்டுப் பிறவிஃனப் பொருளில் "கடையப்படுகின்ற" என்ருகி, அவ்வாறு கடையப் படுவதின் பயஞகிய கலக்கம் குறித்து நின்றது. **பொரும்** - கடையும் என்ற பொருளில் வருவதை; "ஒற்றைக்கிரி மத்தைப் பொருது" எனவரும் திருப்புகழில் காண்க. ***தயிரின்*** - இன், உவம உருபு. தயிர், ஒருமுறை சுழல்தல் பிறவிக்கும், மறித்து எதிர்த் திசையில் சுழல்தல் இறப்புக்கும்; மேல் கீழாக எழுந்து ஆழ்தல் நல்வினே தீவினேப் பயன்களால் மேல் கீழ் உலகங்களில் சென்று பிறந்தும், உலகில் உயர்வும் தாழ்வுமான பிறவிகளே எய்தி உழல்வதற்கும் உவமையாகக் கொள்க.

மலங்கள் ஐந்தால் சுழல்வன் - அவ்வாறு உயிர் பல உலகங்களில் உயர்வும் தாழ்வுமான பல பிறவிகளில் அலேவுறுவது ஐந்து மலங்களில் காரியங்களால் என்றவாறு.

ஐந்து மலங்கள் - ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம் என்பன. இவற்றை;

"மும்மல நெல்லி னுக்கு
முளையொடு தவிடு மிப்போன்
மம்மர்செய் தணுவி னுண்மை
வடிவினை மறைத்து நின்று
பொய்ம்மைசெய் போக பந்த
போத்திருத் துவங்கள் பண்ணு
மிம்மல மூன்றி னோடு
***மிருமல மிசைப்ப** னின்னும்"* (86)

"மாயையின் காரி யத்தை
மாயேய மலம தென்று
மேயுமும் மலங்க டத்தந்
தொழிலினை யியற்ற வேவுந்
தூயவன் தனதோர் சத்தி
திரோதான கரிய தென்று
*மாய்வரிம் **மலங்க ளைந்து***
மணுக்களை யிணைத்து நிற்கும்" (87)

(சிவஞான சித்தியார் - சுபக்கம் சூத்திரம் அதி - 4)

- என்றும்;

"மோகமிக வுயிர்கடொறு முடனாய் நிற்கு
மூலவா ணவமொன்று முயங்கி நின்று
பாகமிக வுதவுதிரோ தாயி யொன்று
பகர்மாயை யொன்றுபடர் கன்ம மொன்று
தேகமுறு கரணமொடு புவன போகச்
***செயலாரு மாமாயைத் திரட்சி** யொன்றென்*

ருகமல மைந்தென்ப ரைந்து மாறு
தருனென்ப தரிதென்ப ரறிந்து ளோரே."

(சிவப்பிரகாசம் - 32)

- என ஞான சாத்திரங்கள் நவில்வதாலறிக.

குலம்களைந்தாய் என்னைக் குற்றம் களைந்தாய் - ***என்னைக் குற்றக் குலம் களைந்தாய்*** என்றும்; **என்னைக்** குற்றம் களைந்தாய் என்றும் ஈரிடத்தும் கூட்டியுரைக்க நின்றது. **குற்றக்குலம்** - அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, வெகுளி ஆகிய குற்றங்களின் கூட்டம். **குலம்** - கூட்டம். இவை களையப்படுதலின் இவற்றின் காரியமாகிய வினைகள் நிகழா; இவற்றாலாகிய துன்பங்களும் இலவாம். மெய்யுணர்வின் பயனும் கைகூடும். முன்வரும் ***களைந்தாய்*** என்றதன் பின் "ஆயின்" என்ற சொல்லையும், பின் வரும் ***"களைந்தாய்"*** என்றதன் பின் "ஆவாய்" என்ற சொல்லையும் அவாய் நிலையால் வருவித்து குலங்களைந்தாயாயின் என்னைக் குற்றம் களைந்தான் ஆவாய் என்றுரைக்க.

குலம் களைந்தாய் - என்பதற்குக் குடிப்பிறப்பு சாதி முதலியவற்றால் உயர்வுடையோம் என்ற செருக்கை ஒழித்தல் எனலுமாம்.

திருச்சிற்றம்பலம்

" சாதிகுலம் பிறப் பென்னுஞ்
சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை
அல்லலறுத் தாட் கொண்டு
பேதைகுணம் பிறருருவம்
யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக்
குலாவுதில்லை கண்டேனே."

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் - 477)

- என்று நம் அடிகளே பின்னர் அருளிச்செய்வது காண்க.

களைதல் - மீண்டும் முளையாவாறு வேருடன் அகழ்ந்தெடுத்து ஒழித்தல்.

என்னை - இரண்டாம் வேற்றுமையுருபு ஆறும் வேற்றுமைப் பொருளில் வந்த உருபுமயக்கம்.

விலங்கல் ஆம் கொற்றச்சிலை எந்தாய் - ***விலங்கல்*** - மலை. வளையும் தன்மை யில்லாத மலையை வில்லாக வளைத்தது இறைவனின் முடிவிலாற்றலுடைமை குறித்தது. ***கொற்றச் சிலை*** - இறைவன் இந்த வில்லை ஏந்தி நின்ற நிலையிலேயே திரிபுரங்கள் அழிந்து வெற்றியைத் தந்தன. அம்பு எய்யப்படாமலே வெற்றியைத் தந்ததால் இந்தவில் கொற்றச் சிலையாயிற்று. ***கொற்றம்*** - வெற்றி.

திருச்சிற்றம்பலம்

"ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை யுந்தீபற"

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் - 295)

- என்று பின்னர் நம் அடிகளே அருளிச் செய்வது நினைக.

மேருமலையைச் சிலையாகக் கொண்டு அதைப் பயன் படுத்தாமலே வெற்றி கண்ட உனக்கு, என் குற்றக் குலங்களைக் களைதல் ஒருபொருட்டன்று என்றவாறு.

எந்தாய் - மைந்தனுகிய என் பகைகளைக் களைதல் பேராற்றலுடைய என் தந்தையாகிய உன் கடமை என்றவாறு.

விட்டிடுதி - ஆதலின் இந்த நிலையில் என்னைக் கைவிடலாகாது என்றது குறிப்பு.

இத்தத் திருப்பாடலில் - ஐந்து மலங்களால் துன்பம் நிகழும் உலக வாழ்வை வெறுத்து உய்விக்க வேண்டுவதால் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதல் காண்க.

134. மத்துறு தண்டயி ரிற்புலன்
தீக்கது வக்கலங்கி
வித்துறு வேனை விடுதிகண்
டாய்வெண் டலைமிலைச்சிக்
கொத்துறு போது மிலைந்து
குடர்நெடு மாலை சுற்றித்
தத்துறு நீறுட ஞரச் செஞ்
சாந்தணி சச்சையனே. ௩௦

(இ - ள்)

வெண்ணிறமான தலையைச் சடையிற் சூடி; பூந்துணரில் பொருந்திய கொன்றை மலர் மாலையை யணிந்து, குடர் போன்ற நெடிய செவ்வலரி மலர் மாலையைக் கழுத்தில் சுற்றிலும் புனைந்து; பரந்துபட்ட திருநீற்றுடன் சந்தனத்தின் செந்நிறமான கலவையை யணிந்து திகழும் மெய்ப்பொருளாக உள்ளவனே. மத்தினுல் கடையப்படும் குளிர்ந்த தயிரைப் போன்று புலன்களாகிய நெருப்பு வெதுப்பக் கலக்கமுற்று, அந்தக் கலக்கத்தில் வேருன்றி யழுந்தும் தன்மையெய்திய அடியேனைக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை - "வெண்தலை மிலைச்சி; கொத்து உறுபோது மிலைந்து; குடர்நெடு மாலை சுற்றி; தத்து உறு நீறுடன்; ஆரம் செஞ்சாந்து அணி சச்சையனே; மத்து உறு தண்தயிரின் புலன் தீக்கதுவக் கலங்கி; வித்து உறுவேனை; விடுதி கண்டாய்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

வெண்தலை மிலைச்சி - தாருகவன முனிவர்கள் ஏவிய நகுதலையைத் தன் சடை மீது தரித்து. இதன் வரலாறு முன்னம் திருவண்டப்பகுதி (32-ல்) "கானப்புலியுரி அரையோன் ஆன வரலாறு" என்றதன் கீழுரைத்தாம். ஆண்டுக்காண்க. ***மிலைத்தல்*** - சூடுதல். இதனை;

" நக்கெழு சிரத்தை யன்றோர்
நாதன்மேல் விடுத்த லோடும்
அக்கண மணுக வற்றால்
அகிலம திறவா வண்ண
முக்கண னருள்செய் தந்த
முண்டமுண் டகக்கைப் பற்றிச்
செக்கரஞ் சடைமேற் கொண்டுன்
செயலினைப் புரிதி யென்றான்."

(கந்தபுராணம் - ததீசி யுத்தரப்படலம் - *109*)

- என்னும் சொல்லோவியத்திற் சுவைக்க.

இதற்கு, இவ்வாறன்றி ***"வெண்தலை"*** என்பதைப் பால்பகா அஃறிணையாகக் கொண்டு பேரூழிக் காலத்தில் மடிந்த திருமால் ஆகியோர் தலைகளாலான மாலை என்பர் திரு. பாரதியாரவர்கள்.

கொத்து உறுபோது மிலைந்து - கொத்தாக மலர்ந்த கொன்றை மலர்களாலான மாலையை அணிந்து. மலர்க் கொத்தினின்றும் கழன்று புதுமைச் செவ்வி குலையாதிருக்கும் கொன்றை மலர்களாலான மாலை எனலுமாம்.

குடர் நெடு மாலை சுற்றி - குடர்போன்று நீண்டதும் செந்நிறமுள்ளதுமான செவ்வலரி மாலையைக் கழுத்தில் சுற்றிலும் தரித்துக் கொண்டு. "போன்று" என்னும் உவம உருபு விரித்துக் கொள்க. செவ்வலரி மலர் மாலை நீண்ட வடிவத்தாலும் செந்நிறத்தலும் குடருக்கு உவமையாயிற்று. செவ்வலரி மலர் அட்டபுட்பங்களுள் ஒன்றாய்ச் சிவபெருமானுக் குகந்ததாயுள்ளது நினைக.

இதற்கு இவ்வாறன்றிக் "குடராகிய நெடியமாலை என்றும்; இறைவன் சரபமூர்த்தியாக வந்துழி மானுட மடங்கலாக நின்ற திருமாலின் குடரை மாலையாகத் தரித்துக் கொண்டு" - என்றும் முன்னுரையாளரில் சிலர் உரை கூறினர். இந்தத் திருப்பாடலில், மேருவில், அம்பு

முதலியவற்றுடன் இறைவனின் போர்க்கோலம் கூறப்படாமையின் மேற் கண்டவாறு உவமைத் தொகையாகக் கொண்டுரைத்தாம்.

தத்து உறு நீறுடன் - உத்தூளனமாகப் பூசியதனுல் பரந்துபட்ட திரு நீற்றுடன். "திருநீற்றை யுத்தூளித் தொளிமிளிரும் வெண்மையனே *(126)* என்ருர் முன்னரும். இறைவன் திருமேனி மீது இயல்பாகப் படரும் அநாதி விபூதியும் பேரூழிக் காலத்தில் படியும் ஆதி விபூதியும் எனவும் கொள்க.

தத்துதல் - பரத்தல்; படர்தல். இதனே;

திருச்சிற்றம்பலம்

"நித்த லுந்நிய மஞ்செய்து நீர்மலர் தூவிச்
சித்த மொன்றவல் லார்க்கரு ளுஞ்சிவன் கோயில்
மத்த யானேயின் கோடும்வண் பீலியும் வாரித்
***தத்துநீர்ப் பொன்னி** சாகர மேவுசாய்க் காடே"*

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 2-38-1)

- எனவரும் ஞானசம்பந்தப் பெருமான் தமிழிற் காண்க.

ஆரம் செம்சாந்து அணி சச்சையனே : ஆரம் - சந்தனம். ***சாந்து*** - சந்தனக்குழம்பு. ***செம்சாந்து*** - செஞ்சந்தனத்தின் குழம்பு. இது, சந்தனக் கட்டையின் மிக உயர்ந்த வகையினின்றும் கிடைப்பது. இந்தக்கட்டையை வெட்டினுல் செந்நிறமாயும் சந்தனக்கல்லில் இழைத்தால் மஞ்சள் நிறமான குழம்பாயும் வருவது. மிகவும் தண்மையுள்ளது.

சச்சையன் - சத்தாம் தன்மையுடையவன். மெய்ப்பொருள். வட மொழியில் சத்தின் தன்மை சத்தா என்ருகும். ஆகார ஈறு தமிழில் ஐகாரமாகிச் "சத்தை" என நிற்கும். சச்சை என்பது அதன் போலி. "வித்தை" "விச்சை" என்ருனது போலக் கொள்க. இதற்கு இவ்வாறன்றி, ***"செச்சை"*** என்பது மோனே நோக்கிச் ***சச்சை*** எனத் திரிக்கப்பட்டது

என்பர் திரு. முதலியாரவர்கள். ***செச்சை*** - வெட்சிப்பூ. வெட்சிப்பூப் போன்ற நிறமுள்ள திருமேனியினனே. குழம்புகளைப்பூசிக் கொள்பவன் என்றும், வேதத்தாலும் அறிஞராலும் ஆராயப்பட்டவன் என்றும் பொருள் கூறுவர் திரு.பாரதியாரவர்கள். ***சச்சு*** - இளமை; நுட்பம் என்று பொருள் கொண்டு ***சச்சு + ஐயன்*** - என்று பிரித்துரைத்தார் திரு. காசு பிள்ளையவர்கள். ***சச்சு*** - கை கொட்டியாடும் கூத்து என்று கொண்டு "பூதங்களுடன் கூடித் திருக்கையாற் கொட்டியாடும் நாதனே" என்றுரைப்பர் சீகாழித் தாண்டவராயர் அவர்கள். ***சச்சை*** - என்பதைச் சதங்கை என்று கொண்டு "கெஜ்ஜை கட்டி ஆடுதல்" என்று தெலுங்கில் வழங்குவதாகக் கூறுவது கவியரசு அவர்களின் உரைக்குறிப்பு.

மத்து உறுதண்தயிரின் - முன்னைத் திருப்பாட்டில் கூறிய உவமையையே ஈண்டும் கூறினர்; எனினும் ஒருசிறு வேற்றுமையுள்ளதை நாம் உளங்கொள்ளல் வேண்டும். ஆண்டுத் ***"தயிர் பொருமத்து"*** என்று வாளா உரைத்தவர் ஈண்டுத் ***தண்தயிர்*** என்று தயிருக்கு அடைபுணர்த்தார். தயிர் எத்துணை கடையப்படினும் தன் தண்மைக் குணம் நீங்குவதில்லை. ஈண்டு அந்த உயிர்க்குணத்தையும் நீக்கப் புலன்கலாகிய நெருப்புக்கதுவித்து என்று அடுத்துக் கூறவுள்ளார்.

மத்துறுதயிர் என்ற இந்த உவமையை;

திருச்சிற்றம்பலம்

" பத்தனாய் வாழமாட்டேன் பாவியேன் பரவிவந்து
சித்தத்து ளைவர்தீய செய்வினை பலவுந்தீய
மத்துறு தயிரேபோல மறுகுமென் னுள்ளந்தானு
மத்தனே யமரர்கோவே யாரூர்மூ லட்டனாரே."

(திருமுறை 4-52-9)

" பொத்தார் குரம்பை புகுந்தைவர்
நாளும் புகலழிப்ப

மத்தார் தயிர்போன் மறுகுமென்
சிந்தை மறுக்கொழிவி
அத்தா வடியே னடைக்கலங்
கண்டா யமரர்கடம்
சித்தா திருச்சத்தி முற்றத்
துறையுஞ் சிவக் கொழுந்தே."

(திருமுறை 4-96-2)

- எனவரும் நம் அரசுகள் அமுத வாக்கிலும் சுவைக்க.✽

புலன் தீக்கதுவ - புலன்கள் கலங்கித் தீக்கதுவ வெப்பமுற்று என்றவாறு. ***தீப்புலன்கதுவ*** - என்று மாற்றித் தீயவாகிய புலன்கள் பற்றிச் சூழ்ந்துகொள்ள எனலுமாம்.

வித்து உறுவேனெ - வித்தாம் தன்மை யடைந்து ஆழமாக வேறூன்றியமுந்தி நிலைபெறுதல். புலன்கள் செய்யும் கொடுமையினின்றும் விடுபட இயலாமல் ஆழ்ந்து நிலை பெறுதல்.

வித்து - இது "விதுப்பு" என்பது முதனிலை மாத்திரமாய் நின்று ஒற்றிரட்டி "நடுக்கம்" என்ற பொருளில் வந்தது என்பர் திரு. முதலியாரவர்கள்.

இத்திருப்பாடலே, "புலன் தீக்கதுவக் கலங்கி வித்துறுகின்ற" உலக வாழ்க்கை வெறுத்துக் கூறப்படுவதால் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதல் காண்க.

135. சச்சைய னேமிக்க தண்புனல்
விண்கால் நிலநெருப்பாம்

✽ *"ததியுறு மத்திற் சுழலுமென் னுவி தளர்விலதோர்*
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்க மலாலயனு
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கியென்றுந்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே"

(அபிராமி அந்தாதி - 7)

விச்சைய னேவிட் டிடுதிகண்
டாய்வெளி யாய்கரியாய்
பச்சைய னேசெய்ய மேனிய
னேயொண் படவரவக்
கச்சைய னேகடந் தாய்தடந்
தாள அடற்கரியே. ௩௧

(இ - ள்)

வெண்மை, கருமை, பசுமை, செம்மையாகிய வண்ணங்களுடைய திருமேனியை யுடையவனே; ஒளிபொருந்திய படமுள்ள பாம்பாகிய அரைப் பட்டிகையை யுடையவனே; அகலமான அடிகளையும் கொல்லும் இயல்பையும் கொண்ட யானையைக் கொன்றவனே. மெய்ப்பொருளே; மிகவும் குளிர்ந்த நீர், வான், காற்று, நிலம், தீ ஆகிய ஐந்து பூதங்களாகவும் விளங்கும் வித்தையை யுடையவனே. (என்னைக்) கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இந்தத் திருப்பாடலை - "வெளியாய் கரியாய் பச்சையனே செய்ய மேனியனே; ஒண்பட அரவக் கச்சையனே; தடம் தாள அடற்கரி கடந்தாயே; சச்சையனே; மிக்க தண்புனல் விண் கால் நிலம் நெருப்பு ஆம் விச்சையனே; விட்டிடுதி கண்டாய்" - என்று அன்னுவயம் செய்துகொண்டு பொருள் காண்க.

வெளியாய் கரியாய் பச்சையனே செய்ய மேனியனே : ***வெளியாய்*** - இறைவன், பதி ஞானத்தாற் பார்க்கும் மெய்ஞ்ஞானிகளுக்கு வெளிப்பட்டு நிற்பவன். அவன் ஒளிமயமான ஞானமே திருமேனியாகக் கொண்டவன் என்பதை; "ஒளியான திருமேனி", "ஓங்கொளியாய் அருள்ஞான மூர்த்தியாகி" என்றெல்லாம் சிவப்பிரகாசம் வழுத்துவதாற் காண்க. திருநீற்றின் வெண்மை ஒளியினன் எனலுமாம். ஈண்டு 88 - ம் திருப்பாட்டில் "பரஞ்சோதி" என்றதன் உரையில் எடுத்தாண்ட பேரூர்ப் புராணப் பாடல் பார்க்க.

கரியாய் - பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் காண முயல்வோருக்குப் புலப்படாமல் இருளாயிருப்பவர். முன்னர்ச் சிவபுராணம் (72 - ல்) "துன்னிருளே! தோன்றுப் பெருமையனே" என்றருளியவையும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

பச்சையனே - திருவருளாகிய உமையம்மையுடன் கூடி மெய்யன்பர்களுக்குக் காட்சிதரும் நிலே குறித்தது.

செய்ய மேனியனே - இறைவனின் இயல்பான திருமேனி வண்ணம். திருப்பெருந்துறையில் ஞானுசிரியனுக எழுந்தருளி ஆட்கொண்ட திருமேனியின் வண்ணமாம். அந்தத் திருமேனியும் அம்பிகையாகிய திருவருளே என்பது நினேக.

ஈண்டு, "***வெளியாய்***" என்றது வெண்ணிறத்துடன் வெட்டவெளியாகிய வானின் கட்புலனுகும் நிறமின்மையும் (ஸ்படிகம்) குறித்து நின்றது. ஏனைய மூன்று நிறங்களேயும் கூட்டிச் சதாசிவ மூர்த்தத்தின் ஐந்து முகங்களின் ஐந்து நிறங்களேயும் குறித்து நின்றன எனவும் கொள்க. இதிற் தத்புருடம் பச்சைநிறம் என்னுது பொன்னிறம் என்று கூறப்படும். முன்னம் சிவபுரணம் (49)-ல் "நிறங்களோ ரைந்துடையாய்" என்றதும் ஆண்டுரைத்வையும் பார்க்க.

இனி; "***வெளியாய்***" என்றது வெண்ணிறமுள்ள நீரையும்; "***கரியாய்***" என்றது கருநிறமுள்ள காற்றையும்; அந்த நிறத்தின் இனமாகிய புகை நிறமுள்ள வானேயும்; "***பச்சை***" என்பதைப் பொன்னிறமாகக் கொண்டு அந்த நிறமுள்ள நிலத்தையும்; "***செய்ய***" என்றது செந்நிறமுள்ள அனலேயும் குறிப்பனவாகக் கொண்டு இறைவன் பஞ்சபூதங்களிலும் எழுந்தருளி நின்று சடப்பொருள்களாகிய அவற்றை இயக்குகின்றுன் என்றும் கொள்க. இனம்பற்றி கதிரவன், திங்கள், ஆன்மா என்ற மூன்றையும் கூட்டி அட்டமூர்த்தங்களாக நிற்கும் நிலேயையும் கொள்க. 12 - ம் திருப்பாடலில் "காலமுமாய்" என்றதன் கீழ் எடுத்தாண்ட திருத்தாண்டகமும் காண்க.

ஒண்பட அரவக்கச்சையன் - ஒண் - ஒளிபொருந்திய. தலேயில் மாணிக்கமுள்ளதால் ஒளி பொருந்திய படமாயிற்று.

அரவக்கச்சை - பாம்பைக் கச்சாகக் கொண்டது. குண்டலினி என்றும் சுத்தமாயையை இறைவன் தன்னுள் அடக்கியிருத்தலாகிய உண்மைப் பொருளைக் குறித்து நின்றது.

தடம்தாள அடல் கரி கடந்தாயே - தடம்தாள அடல்கரி - கயாசுரனாகிய யானை. ***கடந்தாயே - கரியே*** என்பதிலுள்ள ஏகாரத்தைப் பிரித்து **கடந்தாய் என்பதுடன் புணர்க்க. *கடத்தல்*** - அழித்தல். முன்னிலை வினைப்பெயர் விளியேற்றுக் ***கடந்தாயே*** என்றாயிற்று. ***தடம்தாள அடல் கரி*** - அகலமான பாதங்களையுடையதும், போர் செய்வதுமான யானை. ***தடம்*** - தாள்களுக்கு அடை. ***தாள*** - குறிப்புப் பெயரெச்சம் "திருநெறிய தமிழ்" என்றதிற் போலக் கொள்க. ***அடல்*** - வினைத் தொகை. ***கரி*** - கரத்தையுடையது; கையையுடைய விலங்கு; யானை. காரணப் பெயர். கொடிய அசுரனை அழித்த உனக்கு என்புலப் பகைகளை அழித்து என்னைக் காத்தல் அரிய செயலன்று என்பது குறிப்பு. ***தடம் தாள*** - என்பதற்கு with dropping broues என்று ஆங்கிலத்தில மொழிபெயர்த்தார் மொழிபெயர்ப்பாளர். அது பொருளன்று என்பது தேற்றம். அடற்கரி கடந்த வரலாறு முன்னம் *123* - ம் திருப்பாடலில் "குன்று கொடுங்கரி உரித்து" என்றதன் கீழுரைத்தாம். ஆண்டுக் காண்க.

சச்சையனே - *134* - ம் திருப்பாட்டில் உரைத்தவை காண்க. இதைச் "சர்ச்சை" என்பதன் திரிபாகக் கொண்டு, ***சர்ச்சை*** - ஆராய்ச்சி. தத்துவங்களை ஆராய்ந்து பெற்ற துணிபால் தெளிதற்குரியவன் என்றுரைத்தார் திரு. தேசிகரவர்கள்.

மிக்க தண்புனல் விண் நிலம் நெருப்பு ஆம் விச்சையனே - மிக்க தண்புனல் - நாம் காணும் தண்ணீரில் பாதிப்பகுதி அப்புத் தத்துவமும் மீதமுள்ள பாதிப்பகுதி ஏனைய நான்கு பூதங்களும் உள்ளன. இதனைத் தண்புனலிலும், வெப்பமானியை வைத்து நோக்கின் 32°F. வெப்பமுள்ளதால் அதில் அனலிருப்பதும், நீரைக் காய்ச்சினால் அதிலுள்ள காற்று மேலே குமிழிகளாக வந்து வெளியேறுவதால் காற்று இருப்பதும், நீர் நிலத்திலிருப்பதால் நீரில் மண் இருப்பதும், இந்நான்கு பூதங்களுக்கும் வான் இடமளிப்பதால் நீரில் வெளியிருப்பதும் கொண்டு அறிக. இவ்வாறே ஒவ்வொரு பூதத்திலும் பாதிப்பகுதி அந்தப்பூதமும் மீதமுள்ள

பாதிப் பகுதி ஏனைய நான்கு பூதங்களும் இருப்பதறிக. ஆதலின் ஈண்டுத் **தண்புனல்** என்பதற்கு ***மிக்க தண்புனல்*** என்று அடைபுணர்த்தார் ஏனைய நான்கு பூதங்களினும் அளவு மிக்க என்றவாறு.

மிக்க - என்றதனை விண், நிலம், நெருப்பு ஆகிய ஒவ்வொன்றன் முன்பும் புணர்த்துரைகாண்க. இனம்பற்றி நிலத்துக்கும் அவ்வாறு கூட்டிக் கொள்க.

இறைவன் பஞ்ச பூதங்களாக இருப்பதை மேலே விளக்கினும்.

விச்சையனே : விச்சை - வித்தை. அஃது இத்திரசால வித்தை நிலையில் "சடப் பொருள்களாகிய ஐம்பெரும் பூதங்களில் அவையேயாகவும்; குணங்களையுடைய நிலையுள்ள சித்துப் பொருள்களைக் கடந்து நின்று அவற்றை இயக்குபவனுகவும்" வெளிப்படுவதாகிய வித்தை.

விட்டிடுதி - உலகியற் பொருள்களாகவே அவற்றுள் நின்று அவற்றை இயக்கும் நீ; உலகியல் இன்பத்தை நாடிச் சென்றேன் என்ற காரணத்தால் என்னைக் கைவிட்டு விடுதலாகாது; அவற்றினின்றும் விடுவித்துக் காத்தருள்க என்றவாறு.

இத்திருப்பாடலில் நித்தியப் பொருளாகிய இறைவன் நிலையில் பொருள்களாகிய ஐம்பூதங்களாகவும் உள்ளநிலை உலக வாழ்வில் உயிர்களுக்கு நேரும் புலப்பகைகளை ஒழித்தற்கேயாம் என்பது பெறப்படுதலின் ஐம்பூதங்களாலாகிய உலக வாழ்வை வெறுத்தல் குறிப்பாற்·பெறப்பட்டுப் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதல் காண்க.

136. அடற்கரி போலைம் புலன்களுக்
கஞ்சி யழிந்தவென்னை
விடற்கரி யாய்விட் டிடுதிகண்
டாய்விழுத் தொண்டர்க்கல்லால்
தொடற்கரி யாய்சுடர் மாமணி
யேசுடு தீச்சுழலக்

கடற்கரி தாயெழு நஞ்சமு
தாக்குங் கறைக்கண்டனே. ௩உ

(இ - ள்)

சிறந்த மெய்யடியார்களுக்கேயன்றிப், பிறர்க்குத் தீண்டுதற்கு அருமையாக உள்ளவனே; ஒளிவீசும் பெரிய மாணிக்க மணியே; சுடும் இயல்புள்ள நெருப்பும் சுழலும் வண்ணம் திருப்பாற்கடலின்கண் கருமைநிறத்துடன் தோன்றிய; ஆலகால நஞ்சை உணவாகக் கொண்ட கரிய கழுத்துடையவனே; அடியேனை எக்காலத்தும் விட்டு நீங்குதற்கு அரியவனே; வலிமிக்க ஐந்து யானைகளைப் போன்ற ஐம்புலன்களுக்கு அஞ்சி நிலைகுலைந்த அடியேனை; விட்டுவிடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை - “விழுத்தொண்டர்க்கு அல்லால் தொடற்கு அரியாய்; சுடர்மாமணியே சுடுதீச்சுழல; கடல்கரிதா எழும்; நஞ்சு அமுதாக்கும் கறைக்கண்டனே; என்னை விடற்கு அரியாய்; அடல் கரிபோல் ஐம்புலன்களுக்கு அஞ்சி அழிந்த என்னை; விட்டிடுதிகண்டாய்” - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

விழுத் தொண்டர்க்கு அல்லால் தொடற்கு அரியாய் : விழுத்தொண்டர் - மேன்மையான தொண்டர்கள். உலகத் தொண்டு அழியும் இயல்பினவாகிய உலக இன்பங்களை வேட்டு முனைந்து நின்று ஆற்றப்படுவது. இவ்வின்பங்கள் அடிமைக்குக் குறைந்தும் அவனை ஆளும் உலகியல் தலைவனுக்கு மிக்கும் கிட்டுவன. சிவத்தொண்டு அழிவில் இன்பங்களை வேட்டு முனைப்பற நின்று செய்யப்படுவது. இதிற்கிட்டும் இன்பம் முழுவதும் அடிமைக்கே உரியது. இவ்வாறு தொண்டியற்றுவாரையே ஈண்டு விழுத்தொண்டர் என்றார். இவர்களை;

“கண்ட விவை யல்லேனு னென்றகன்று காணுக்
கழிபரமு நானல்லே னெனக்கருதிக் கசிந்த
தொண்டினொடு முளத்தவன்று னின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி

விண்டகலு மலங்களெல்லாங் கருடதியா னத்தால்
விடமொழியு மதுபோல விமலதையு மடையும்
பண்டைமறை களுமதுநா னேனென்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே."

(சிவஞான சித்தியார் - சுபக்கம் சூத் - 9 - செய்-7)

- என்று நம் ஞான சாத்திரம் நவில்வது காண்க.

விழுத் தொண்டர்க்கே அல்லால் - என்றமையால் விழுத் தொண்டரல்லா ஏனையோர்க்குத் தொடற்கு அரியாய் என்பது பெற்றும். அவர்கள் வேடநெறி நில்லாமல் வேடம் பூண்டிருப்போரும்; வேட நெறி நில்லாமையுடன் அவ்வேடமும் இல்லாரும் எனப் பலதிறத்தினர்.

தொடற்கு அரியாய் : தொடுதல் - தீண்டுதல். பிறர்க்குத் தீண்டுதற்கு அரியாய் என்றமையால் விழுத்தொண்டர்க்குத் தீண்டுதற்கு எளியன் என்பது பெற்றும். இந்நிலையை;

திருச்சிற்றம்பலம்

" ஓராதா ருள்ளத்தில் நில்லார் தாமே
யுள்ளூறு மன்பர் மனத்தார் தாமே
பேராதென் சிந்தை யிருந்தார் தாமே
பிறர்க்கென்றுங் காட்சிக் கரியார் தாமே
ஊராரு மூவுலகத் துள்ளார் தாமே
யுலகை நடுங்காமற் காப்பார் தாமே
பாரார் முழவத் திடையார் தாமே
பழன நகரெம் பிரானுர் தாமே"

(திருமுறை 6-36-8)

"ஆவணம் பறிக்கச் சென்ற
வளவினி லந்த ணாளர்

காவணத் திடையே யோடக்
கடிதுபின் தொடர்ந்து நம்பி
பூவணத் தவரை யுற்று
ரவரலாற் புரங்கள் செற்ற
ஏவணச் சிலையி ஞரை
யார் தொடர்ந் தெட்ட வல்லார்?"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - தடுத்தாட் கொண்ட புராணம் - 44)

" எட்டுக் கொண்டார் தமைத் தொட்டுக் கொண்
டேநின்ருர்
விட்டா ருலகமென் றுந்தீபற
வீடேவீ டாகுமென் றுந்தீபற"

(திருவுந்தியார் 24)

- என்பவற்றில் காண்க.

சுடர் மாமணியே - நெருப்புப் போன்று ஒளி வீசும் பெரிய மாணிக்க மணியே; ***மா*** - பெருமை பொருந்திய எனலுமாம். அது நெருப்பைப் போன்று ஒளி வீசினும் விழுத்தொண்டர்க்குத் தீண்டுதற்கு எளிதாய் தண்ணென்று இனிதாய் இருத்தலும் ஏனையோருக்குத் தீண்டுதற்கு இயலாததாய்ச் சுடுவதுமாகிய பெருமை.

வடமொழியில் மகாகவி காளிதாசன் இயற்றிய சாகுந்தல நாடகத்தில் ஒரு காட்சி. துஷ்யந்த மன்னன் கண்ணுவ முனிவர் தவச்சாலையில் சகுந்தலையைக் கண்ணுற்ருன். முதலில் அவளை அந்தணர் குலக்கன்னி என்று நினைந்தான்; பின்னர் அரசர் குலப்பாவை என்று தெளிந்தான். அப்பொழுது அவன் தன் நெஞ்சை நோக்கி; "நெஞ்சமே! இப்பொழுது ஐயம் நீங்கித் துணிவுண்டாயிற்று; ஆதலின் விருப்பமுடையை யாகலாம். எப்பொருளை நெருப்பென்று ஐயுற்றனையோ, அஃது அணிந்து கோடற்குரிய இரத்தினமாகும்" என்று கூறுகின்ருன். நெருப்புத்துண்டும் மாணிக்க மணியும் நிறத்தாலொக்குமாயினும், முன்னது சுடும்; பின்னது அணிந்து கோடற்குரியது என்பது உவம விளக்கம். அவை இரண்டும் வேறுவேறு

தனிப்பொருள்கள். ஆனால் ஈண்டு நம் அடிகள் கூறுவது ஒரே பொருளாகிய இறைவன் விழுத்தொண்டர்க்குத் தீண்டுதற்குத் தண்ணிய மாணிக்க மணியாயும் ஏனையோருக்குத் தீண்டற்கு அரிய நெருப்பாகவும் உள்ளான் என்ற நயம் நினைந்து சுவைக்க.

நெருப்பு, நிலா, பகலோன் ஆகிய மூன்றும் ஒளி தரும் பொருள்கள். நெருப்பு, விறகு முதலிய எரிபொருள்களைப் பற்றுக்கோடாகக் கொண்டு ஒளி தருவது. அப்பொருள்கள் எரிக்கப்பட்ட பின் நெருப்பும் ஒளிதராது அணைந்து விடும். தண்கதிர்ச் செல்வன் செங்கதிரோனில் நின்றும் ஒளிபெற்று உலகுக்கு ஒளிதருபவன். மாணிக்க மணியோ அவ்வாறன்றித் தானாகவே ஒளிதருவது; எரிபொருள்களின் பற்றுக்கோடு தேவையற்றது; காலவரம்பின்றி ஒளி தருவது என்பர். ஆனால் உண்மை வேறு. இருளிலும் ஒளி வலிமடங்கியுள்ளது. மாணிக்கமணி மின்மினிப் பூச்சி போன்றவை அவ்விருளில் வலி மடங்கியுள்ள ஒளியைத் தம்பாலீர்த்து ஒளிர்வன. இருளில் வலிமடங்கியுள்ள ஒளியும் பகலில் கிடைக்கும் ஒளியும் செங்கதிரோனால் கொடுக்கப்பட்டவை. செங்கதிரவன் ஒளியோ சிவபெருமானிடமிருந்து பெறப்பட்டது. ஆதலின் இறைவனைச் ***"சுடர்மாமணியே"*** என்று விளித்தார். 30 - ம் திருப்பாடலில் "தனிச்சுடரே" என்றும் 119 - ம் பாடலில் "மெய்ச் சுடருக்கெல்லாம் ஒளி வந்த பூங்கழல்" என்றும் அருளியவையும் அவற்றின் கீழுரைத்தவையும் காண்க.

சுடுதீச்சுழல - சுடும் இயல்புள்ள நெருப்பு. அது வடவைத்தீ. குதிரையின் முகம் போன்ற வடிவுடன் கடலின் அடியில் அடங்கி இருப்பது. பேரூழிகள் சிலவற்றில் கடல் மீதூர்ந்து உலகங்களை அழிக்கும். அதை நீரூழி என்பர். வேறுசில பேரூழிகளில் வடவைக்கனல் பொங்கி எழுந்து கடல் முழுவதும் உண்டு உலகங்களை எரித்தழிக்கும். அதைத் நெருப்பூழி என்பர். அந்த வடவைத் தீயினையே ஈண்டுச் ***சுடுதீ*** என்றார். ***சுடு*** - கடல்களையும் உலகங்களையும் சுட்டு அழிக்கின்ற தீ என்றவாறு. ***சுடு*** - வினைத் தொகை. ***சுடுதீயும்*** - என உயர்வு சிறப்பும்மை விரித்துக் கொள்க. வடவை நெருப்பும் நிலை குலைந்து சுழலும்படி எழும் நஞ்சு என்றவாறு.

கடல் கரிதா எழும் - தான் எழுந்த வெண்ணிறமுள்ள திருப்பாற் கடலும் கரிய நிறமாகும்படி எழும் எனலுமொக்கும். ***கடலும்*** - எனச் சிறப்பும்மை விரித்துக் கொள்க. ***கரிதாக*** - என்பதன் ஈறு கெட்டது.

கடல் என்பதை இடவாகு பெயராகக் கொண்டு திருப்பாற்கடலின் கண் பள்ளிகொண்டுள்ள காத்தற் கடவுளாகிய திருமாலுக்கும் தன்னைக் காத்துக்கொள்வதற்கு அரிதாக எழும் என்ற பொருளில் "***கடற்கும் அரிதா எழும்***" என்று பிரித்துரைக்கினுமொக்கும். ஈண்டு;

" கையினிற் சங்கு போலும்
கவின்நிறம் கரிந்து மாலும்
ஒய்யென ஓட வோட;
உம்பரு மவன்பின் னோட;
வெய்யவெவ் விடத்தை யுண்டு
விடைமிசைக் கொம்பி னுப்பண்
ஐயவிவ் வரச மன்று
ளாடுமுன் நடனம் வாழி "

(நடனுஞ்சலி - *24*) ❋

என்றது நினைக.

சுழல் அக்கடல் - என்று பிரித்து "அகரம்" பண்டறி சுட்டாகத் திருப்பாற்கடலை உணர்த்திற்று என்பர் கவியரசு அவர்கள்.

நஞ்சம் எழுந்த வரலாறு முன்னம் *8* - ம் திருப்பாடலில் "நஞ்ச மஞ்சி" - என்றதன் கீழுரைத்தாம். ஆண்டுக் காண்க.

நஞ்சு அமுதாக்கும் கறைக்கண்டனே - இறைவன், ஆலகால நஞ்சை முற்றிலும் அழித்தொழிக்கும் பேராற்றல் கொண்டவன் எனினும் அதை உண்டு அடக்கியது எத்துணைக் கொடிய பொருளும் தன்னை நலியாது என்பதை உயிர்கள் அறியவேண்டி என்க. அவ்வறிவினால் தன்னை வழிபட்டுய்யும் வண்ணம் அந்த நஞ்சைக் கழுத்தில் நிறுத்திக் ***கறைக்கண்ட***னானான் என்பதும் நினைக. நஞ்சை அடக்கியது போலக் கொடிய என்னையும் நல்லவனாக்கி ஆட்கொள்ள வேண்டும் என்ற குறிப்புமாம்.

❋ உரையாசிரியன் இயற்றியது.

என்னை விடற்கு அரியாய் - பந்தம் வீடு என்ற இரு நிலைகளிலும் இறைவன் உயிரோடு ஒன்றி நிற்கும் இறையியல்பும், ஆன்மாக்களும் அவனை எந்த நிலையிலும் விட்டு நீங்க இயலாதவை என்பதும் குறித்து நின்றது. **அருமை** - ஈண்டு இன்மை குறித்து நின்றது.✽

என்னை - அழிந்த ***என்னை;*** என்னை விடற்கரியாய் என ஈரிடத்தும் கூட்டுக.

அடல் கரிபோல் ஐம்புலன்களுக்கு அஞ்சி அழிந்த என்னை - அடல் - வெற்றியும் மிடுக்குமுள்ள வலிமை மிக்க. ***கரிபோல்*** - யானைகளைப் போல. மதச்செருக்கால் யானைகள் பாகனையும் அவன் தோட்டியையும் விலக்கி மேற்செல்லும் வெற்றியும் வலிமையும் குறித்தது. ***கரி*** - கரத்தையுடையது; யானை. பால்பகா அஃறிணையாக ஈண்டு ஐம்புலன்களையும் குறிக்கும் ஐந்து யானைகளைக் குறித்து நின்றது. அவை என் அறிவின் ஆற்றலையும் தவ வலிமையையும் விலக்கி நுகர்பொருள்கள் மேற்செய்கின்றன என்றவாறு.

தொண்டர்கள் யானைகளுக்கு அஞ்சுவதில்லை என்பதை நாம் எறிபத்த நாயனார், கோச்செங்கட் சோழநாயனார் புராணங்களில் கண்டோம் ஆனால் அவர்களும் ஐம்புலன்களாகிய யானைகளுக்கு அஞ்சுவதை;

திருச்சிற்றம்பலம்

"தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவ்வரி
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 2-114-1)

- எனவரும் பிள்ளையார் திருவாக்கிற் காண்க.

✽ *"பெற்றுள்சக தண்டங்க ளனைத்தும் மவைபெற்று*
முற்றுமுகிழ் முலையாளொடு முக்கண்ணர் விரும்பும்
பற்றுமென மிக்கோரிகழ் பற்றென்றினு முண்மை
கற்றார்தொழு மருணாசல மன்போடுகை தொழுதான்"

(வில்லிபாரதம் - அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம் - 15)

இத்திருப்பாடலில் **"அஞ்சு"** என்றது வினைத்தொகைக் குறிப்பாக நின்று தொண்டர்கள் அஞ்சிய, அஞ்சுகின்ற; அஞ்சவுள்ள எனவும்; "ஐந்து" என்னும் எண்ணின் போலியாக ஐம்பொறிகளாகிய ஐந்து களிறு எனவும் உரைக்க நிற்றல் காண்க. தொண்டர்கள் அஞ்சுகின்ற இக் களிறுகளை அடக்குவோர் **"விழுத்தொண்டர்கள்"** என்க.

ஐம்பொறிகளை யானைகளாக உருவகம் செய்வதை;

"உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து"

(திருக்குறள் - 24)

- என்று திருவள்ளுவர் தெருட்டுவதிலுங் காண்க.

அஞ்சி அழிந்த என்னை - ஒருவன், வலிமை மிக்க கொடிய பகைவனை எதிர்க்க நேருங்கால் தன் ஆற்றல் பயன்படாத நிலையில் தனக்கு நேரவுள்ள தீங்கை நினைந்து அஞ்சுவன்; அவ்வச்சத்தின் முடிவில் நிலைகுலைவன். ஈண்டு ஐந்து களிறுகளையொத்த ஐம்பொறிகளை அடக்க முயன்றும் முடியாமையால் அச்சமும் இதன்பின் நிலைகுலைதலும் எய்தின.

விட்டிடுதி - என்னை என்பதை ஈண்டும் கூட்டி என்னை விட்டு விடுவாயோ? நீ கறைக் கண்டனுய் உள்ளது உன் பேரருளின் சின்னம். அதற்கு மாருக நீ என்னை விடலாகாது என்றவாறு.

இத்திருப்பாடலில் ஐம்பொறிகளின் பகையால் இவ்வுலக வாழ்க்கை அஞ்சியழியும் நீர்மைத்து என்று முறையிடுவதால் இந்த பகுதியின் கருத்தாகிய **"பிரபஞ்ச வைராக்கியம்"** புலனுதல் காண்க.

137. கண்டது செய்து கருணைமட்
டுப்பரு கிக்களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண்
டாய்நின் விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப்
பணிசெயக் கூவித்தென்னைக்

கொண்டெனெந் தாய்களை யாய்களை
யாய குதுகுதுப்பே. ௩௩

(இ - ள்)

எனக்குச் சிறப்புரிமை வாய்ந்த என் தந்தையே; அருளாகிய தேனை மிகவும் குடித்துக் களிப்பு மீதூரப் பெற்றும்; மனத்தில் தோன்றியபடி செய்து செருக்கிப் பேசித் திரிகின்ற சிறியேனைக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது); நறுமணமிக்க தாமரை மலர் போன்ற உன் திருவடிகளை; முன்னர்த் தந்தது போலக் கொடுத்துத் தொண்டுபுரியக் கூவியழைக்கச் செய்து; அடியேனை அடிமையாகக் கொண்டு; இடையூறுகிய ஆசையைக் களைந்து அருள் வாயாக.

(வி - ரை)

இத்திருப்பாடலை - "என் எந்தாய்; கருணைமட்டுப் பருகிக் களித்துக் கண்டது செய்து மிண்டுகின்றேனை விடுதிகண்டாய்; நின் விரைமலர்த் தாள் பண்டுதந்தாற் போல் பணித்துப் பணிசெயக் கூவித்து; என்னைக் கொண்டு; களையாய் குதுகுதுப்புக் களையாயே" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

என் எந்தாய் - அடங்காத மைந்தனுயினும் உணவூட்டி நோய் நீக்கி அறிவு கொளுத்தல் பெற்றோர் கடனுகலின்; களித்துத் திரியும் தமக்கு அருள்நறவு ஊட்டி. உலகியலின்பங்களாகிய நோயைக்களைந்து திருவடிக் காட்சியாகிய ஞானத்தை நல்கிப் பாதுகாக்கும் அம்மையப்பனைச் சிறப்புரிமை காட்டி ***என் எந்தாய்*** என்றார்.

கருணை மட்டுப் பருகி - மெய்யன்பர்களுக்கு எளிதில் அறியக்கூடியதும் இனிப்புச் சுவையும் குடித்தற்கு நெகிழ்ச்சியு முடைமையால் திருவருளை ஈண்டு ***மட்டு*** என்றார். ***மட்டு*** - தேன். முன்னம் நூற்சிறப்பில் "திருவாசகம் என்னும் தேன்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க. ***பருகி*** - மிக அதிக அளவில் குடித்து. "***பருகியும்***" என உம்மை விரித்துக் கொள்க.

களித்துக் கண்டது செய்து மிண்டுகின்றேனை - உன் திருவருளாகிய தேனைப் பருகியவன், அஃதே யனுபவமாக அவ்வருளானந்தத் தடத்துள்ளே

என் செயலற்று அடங்கி இன்பம் நுகர்ந்து கொண்டிருக்க வேண்டிய யான் அவ்வாறன்றி மன மகிழ்ச்சி மிகுதியால் என் மனத்தில் தோன்றியவற்றை யெல்லாம் செய்து யாரையும் மதியாது செருக்குடன் பேசுகின்ற என்னை.

கருணை மட்டுப் பருகியும் இவ்வாறு ஒழுகுதற்குக் காரணம் பண்டு கிட்டிய இறைவன் திருவடிகளைப் பிரிந்தது என்க.

களித்தல், மனத்தின் செயல்; ***மீண்டுதல்*** - மொழியின் செயல்; ***கண்டது செய்தல்*** - உடம்பின் செயல். ஆக மூன்று கரணங்களாலும் சிவ நெறிக்குமாறாய் உலகியல் அவநெறியில் ஒழுகுதல் கூறியவாறு காண்க.

மிண்டுதல் - செருக்குடன் பேசுதல்; திண்மையுறுதல்; பணிவின்மை எனலுமாம்.

இதனை;

திருச்சிற்றம்பலம்

"குண்டுந்தேருங் கூறைகளைந்துங்
கூப்பிலர் செப்பிலராகி
மிண்டும் மிண்டர் மிண்டவை கண்டு
மிண்டுசெயாது *விரும்பும்*
தண்டும்பாம்பும் வெண்டலை சூலந்
தாங்கிய தேவர் தலைவர்
வண்டுந்தேனும் வாழ்பொழிற் சோலை
மல்கு பெருந்துறையாரே"

(திருமுறை 1-42-10)

*" **மிண்டு மனத்தவர்** போமின்கள்*
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்;
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்

தண்டங்கடந்த பொருளள வில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்று மென்று முள்ளபொரு ளென்றே
பல்லாண்டு கூறுதுமே"
திருச்சிற்றம்பலம்

(திருப்பல்லாண்டு 2)

"கண்டுபா ரிடங்கள் சித்தர்
சாரணர் கணப்பி சாசர்
மண்டிய வியக்கர் வானோர்
தானவர் மற்றுந் துற்று
மிண்டுகள் பேசிச் *செல்ல*
விசயமா மகுட வல்லி
சண்டவெங் கோபத் தோடுந்
தழல்விழித் தெதிர்ந டந்தாள்"

(திருவால வாயுடையார் - திருவிளையாடற்புராணம் - மணஞ்செய்த திருவிளையாடல் - 7)

- என்பவற்றும் காண்க.

கண்டது - திருமேனியைத் தரிசித்தது என்றார் சீகாழித் தாண்டவராயர்.

விடுதி - உன் கருணை மட்டுப்பருகியும் நான் கண்டது செய்து மிண்டுகின்றது காரணமாக என்னை நீ கைவிட்டு விடாதே. நான் அவ்வாறு ஒழுகுவதற்குக் காரணம் திருப்பெருந்துறையில் உன்னைப் பிரிந்ததேயாம் அஃது என் தீவினைப் பயன். நீ என் தந்தையாகலின் மீண்டும் ஆட் கொண்டருள்க என்றவாறு.

நின் விரைமலர்த்தாள் - திருப்பெருந்துறையில் இறைவன் ஞானாசிரியனாக எழுந்தருளி நம் அடிகள் சென்னிமிசைப் பாதமலர் சூட்டிய ஞான்று அத்திருவடிகளை நம் அடிகள் உற்று கண்டு உயிர்த்து நுகர்ந்தார். அத்திருவடிகள் தாமரை மலர்களைப் போன்று மெல்லிய ஊறும் செந்நிற ஒளியும் நறுமணமும் நல்கி இன்பஞ் செய்தன. அந்நினைவால் ஈண்டு இவ்வுவமை கூறினார்.

பண்டு தந்தால் போல் பணித்து - ஞானசிரிய வடிவில் திருவடி நல்கியதுபோல மீண்டும் கொடுத்து என்றவாறு. ***பணித்தல்*** - கொடுத்தல். அவ்வாறு கொடுத்தால் நான் மீண்டும் புலன்வழிச் செல்லாமல் அது தடுக்கும் என்றவாறு.

பணிசெயக் கூவித்து : பணிசெய - என்பதை இடை நிலைத் தீபமாகக் கொண்டு "***பணிசெய நின் விரை மலர்த்தாள் பண்டுதந்தாற் போற் பணித்து***" என்றும்; "***பணி செயக் கூவுவித்து***" என்றும் ஈரிடத்தும் புணர்த்துப் பொருள் காண்க. விழுத் தொண்டர்கள் "வீடும் வேண்டா விறலினர்" ஆகலின் கூடும் அன்பினிற் கும்பிட்டுப் பணி செய்தற்கே "***விரை மலர்த்தாள்***" வேண்டினர் என்பதும்; அத்திருவடிகட்டுப் பணிசெய்து கிடப்பதையே தம் கடனாகக் கொண்டார் என்பதும் உளங்கொள்க.

கூவித்து - "கூவுவித்து" என்பதிலுள்ள பிறவினை விகுதி தொக்கு நின்றது. இறைமைக்கு ஏற்பக் "கூவி" என்னாது "கூவுவித்து" என்றார். இறைவன் நேரே அழைக்கும் தகுதி தமக்கின்மையையறிந்து வழியடியார் ஒருவரை விட்டு அழைப்பித்து எனப் பிறவினை வாய்பாட்டாற் கூறினர் என்பர் திரு. தேசிகர் அவர்கள்.

என்னைக் கொண்டு - என் தகுதியின்மை கண்டு என்னைத் தள்ளிவிடாதே. "நின் விரைமலர்த்தாள் தருதல் ஒன்றே என் தகுதியின்மை அனைத்தையும் அழித்துவிடும்;" ஆதலின், மீளவும் என்னை ஆளாகக் கொண்டு; என்றவாறு.

களையாய குதுகுதுப்பே களையாயே : களையாய - இடையூறாகிய. பயிருக்கு இடையூறாகிய களை. களைப்போலச் சிவபோகமாகிய பயிருக்கு இடையூறாகிய புலனின்பங்கள். ***களை*** - வேருடன் களைந்து ஒழிக்கப்பட வேண்டிய புல்பூண்டுகள். தொழிலாகு பெயராக நின்றது. இங்கு இடையூறாக நிற்கும் ஆசையைக் குறித்தது.

குதுகுதுப்பு - ஆசை. இச்சொல் இப்பொருள் பயப்பதை "நாற்றங் குதுகுதுப்ப" (பரிபாடல் 20 - வரி13) என்ற பகுதிக்கு "நாற்றத்தை ஆசைப்படாநிற்ப" என்று பரிமேலழகர் பொருள் கொள்வதை அவர் உரையிற் காண்க.

“ மணியிருபாற் கலகலப்ப மதசலங்கள் சலசலப்ப
அணிபலவுங் கதிர்கதிர்ப்ப வடையலர்கள் விதிர்விதிர்ப்பத்
திணியுலகம் விதுவிதுப்பத் தேவர்களுங் **குதுகுதுப்பப்**
பணிலமுதலிய *மியம்படுப்பப் படர்ந்தது வெங்கதக்களிறு”*

(காஞ்சிப்புராணம் - நகரேற்றுப்படலம் - 145)

- எனவரும் நம் மாதவச் சிவஞானமுனிவர் வாக்கிலும் காண்க.

களையாயே - மீண்டும் துளிர்விட்டு வளரா வண்ணம் வேருடன் களை வாயாக. ***ஏ*** - விளி.

இத்திருப்பாடலில் - திருவருட்பேற்றின் அருமையறியாமல் புலன்வழிச் சென்று செருக்கித் திரியும் இவ்வுலக வாழ்க்கை வெறுக்கத்தக்கது என்பது பெறப்படுதலால் ***“பிரபஞ்ச வைராக்கியம்”*** புலனுதல் காண்க.

138. குதுகுதுப் பின்றிநின் றென்குறிப்
பேசெய்து நின்குறிப்பில்
விதுவிதுப் பேனை விடுதிகண்
டாய்விரை யார்ந்தினிய
மதுமதுப் போன்றென்னை வாழைப்
பழத்தின் மனங்கனிவித்
தெதிர்வதெப் போது பயில்விக்
கயிலைப் பரம்பரனே ௩௪

(இ - ள்)

திருக்கயிலை வெற்பில் எழுந்தருளியுள்ள மேலான பரம்பொருளே; என் மனக்கருத்துக்கு ஒத்தவாறே ஒழுகி நின்று; நின் திருவுள்ளக்கருத்துக்கு ஏற்ப ஒழுகுவதில் ஆசைப்படாமல்; (பயன் பெற) மிக விரைகின்ற சிறியேனை; விட்டுவிடுவாயோ? (விடலாகாது); வாழைக்கனியைப் போல அடியேன் மனத்தைக் குழையச்செய்து; நறுமணம் நிறைந்து இனிமை மிக்க மலர்களுடன் கூடிய தூய தேனையொத்து; எனக்குக் காட்சி நல்கல் எஞ்ஞான்று? விரைவில் அழைப்பித்துக் கொள்வாயாக.

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "கயிலைப் பரம்பரனே; என் குறிப்பே செய்து நின்று; நின்குறிப்பில் குதுகுதுப்பின்றி; விதுவிதுப்பேனை; விடுதிகண்டாய்; வாழைப்பழத்தின்; என்னை மனம் கனிவித்து; விரையார்ந்து; இனிய மதுமதுப் போன்று; எதிர்வது எப்போது? பயில்வி" - என்று அன்னுவயம் செய்துகொண்டு பொருள் காண்க.

கயிலைப் பரம்பரனே - தன் சொரூபநிலையில் யாண்டும் நிறைந்துள்ள சிவபெருமான் ஆன்மாக்கள், தன்னை வழிபட்டு உய்யும் பொருட்டுத் திருக்கோயில்களிலுள்ள சிவமூர்த்தங்களில் தடத்த வடிவில் எழுந்தருளியுள்ளான். இவ்வுண்மையை ஆவின் உடல்முழுதும் பால் பரவி நிற்பினும், அதன் முலைவழியே சுரந்து வெளிப்பட்டுப் பயன் தருதலை உதாரணமாகக் காட்டி ஆன்றோர் விளக்குவர். அத்திருத்தலங்களில் மிகச்சிறந்தது கயிலைமலை என்பது மறையாகமங்கள் காட்டும் உண்மை. புண்ணியத்தின் வண்ணம் வெண்மை. முழுதும் பனிபடர்ந்து வெண்ணிறமாகத் தோற்றமளிக்கும் கயிலைமலையைப் "புண்ணியம் திரண்டுள்ளது போல்வது" என்பர் சேக்கிழார் பெருமான். அதனை;

திருச்சிற்றம்பலம்

"அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்
நண்ணும் மூன்றுல குந்நான் மறைகளும்
எண்ணில் மாதவஞ் செய்யவந் தெய்திய
புண்ணி யந்திரண் டுள்ளது போல்வது"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - திருமலைச்சிறப்பு 2)

- என்றதிற் காண்க.

இத்துணைப் பெருமைகளுடன் நாம் மற்றொன்றும் மனங்கொளல் வேண்டும். பிறதலங்களினின்றும் ஏனைய அடியார்களுக்குக் காட்சி தந்தது போலன்றி நம் அடிகளை ஆட்கொள்ள இறைவன் திருக்கயிலையினின்றே திருப்பெருந்துறைக்கு ஞானாசிரியனாக எழுந்தருளினான். ஆதலின் ஈண்டுக் ***கயிலைப் பரம்பரனே*** - என்றார். **பரம்** - மேலானது. ***பரம்பரனே*** -

மேலானவற்றுக்கெல்லாம் மேலானவன். ***ஏ*** - விளி.

பயில்வீக் கயிலைப் பரம்பரனே - என்று கூட்டிக் கயிலையில் வாழும் மேலான கடவுளே! என்றுரைப்பர் கவியரசு அவர்கள். ***பயில்*** - வாழும்; ***வீ*** - சிறப்புணர்த்தும் உபசர்க்கம். "விநாயகன்" என்றாற்போல என்பது அவர்கள் உரைக்குறிப்புக்கள். ***வீ*** - விசும்பு என்று கொண்டு "விண்ணில் விளங்கும் கயிலை" என்பர் திரு. பாரதியாரவர்கள்.

வீ - வீ - என்பது மலர். ***வீ*** என்பதை அதன் குறுக்கல் விகாரமாகக் கொண்டு "அடியார்களின் உள்ளத் தாமரையில் விளங்கும் கயிலைப் பரம்பரனே" எனலுமொக்கும்.

கயிலை - தலவிசேடம் - போற்றித்திருவகவல் 189 - ல் "திருக்கயிலை" என்றதன் கீழுரைக்கப்பட்டது. ஆண்டுக்காண்க.

என் குறிப்பே செய்து நின்று - என் உடல் பொருள் ஆவி மூன்றையும் நின்னுடையவாயின. ஆதலின் எனக்கென்று ஒன்றுமின்றி நின் திருவுள்ளப்படி செயல்புரிவதே என் கடமை. ஆனால் நான் என் கருத்தின் வழியே செயல்புரிகின்றேன் என்றவாறு. ***குறிப்பு*** - உள்ளக்கருத்து. ***நின்று*** - என் விருப்பப்படியே ஒழுகி நின் திருவுள்ளக் கருத்துப்படி செயல்புரியாது. நின்று. ***ஏகாரம்*** - தேற்றம்.

நின் குறிப்பில் குதுகுதுப்பின்றி : குதுகுதுப்பு - ஆசைப்படுதல். உற்சாகம் கொள்ளுதல் எனலுமாம். முன் பாட்டில் உரைத்தவை பார்க்க. இதைக் குதுகம்; குதுகுதுகம், குதூகலம் என்னும் வட சொல் என்று கொண்டார் கவியரசு அவர்கள்.

குறிப்பில் - குறிப்பில் இல்லாத என்றுரைக்கவும் நின்றது. நின்குறிப்பில் இல்லாத செயல்களைச் செய்து பயன்பெற விரைகின்ற சிறியேனை; என்றவாறு.

விதுவிதுப்பேனை - பயன் பெற விரைகின்ற என்னை. ***விது விதுத்தல்*** - விரைதல். உன் அருட்குறிப்பின் வழிநில்லாமல், என்

மனக்கருத்தின் வழியே செயலாற்றி அதற்கான பயனைப்பெற மிகவும் விரைகின்ற என்னை என்றவாறு.

விடுதி - உன் குறிப்பின்வழி செயலாற்றுதது மட்டுமன்றி; என் மனக்கருத்தின் வழி தொழில் புரிந்ததன் காரணமாக என்னை நீ கைவிட்டு விடுவாயோ? பேரருளுடையவனுதலின் நீ அவ்வாறு கைவிடலாகாது என்றவாறு.

வாழைப் பழத்தின் என்னை மனம் களிவித்து : வாழைப்பழத்தின் - வலிய மனம் கனிதலே இறையருளை எய்துதற்கு வழி. எனவே முதற்கண் தம் உள்ளத்தைக் குழைவிக்க இறைவனை வேண்டும் நம் அடிகள், அக்குழைவுக்கு வாழைக்கனியை உவமையாகக் கூறுகின்றார். வாழை பலா மா என்று மூன்றும் சிறந்த சுவையுள்ளனவாகலின் மிகப் பழங்காலந்தொட்டே அவற்றை ஓரினமாகக் கொண்டு "முக்கனிகள்" என்று வழங்கினர் நம் முன்னோர். விஞ்ஞான முன்னேற்றத்தால் உழவுத் தொழில் இந்நாளில் பசுமைப்புரட்சி ஏற்பட்டு மிக முன்னேறியுள்ளது. தோட்டக்கலை இன்று நமக்கு முக்கனிகளினும் சிறந்த இன்சுவை பயக்கும் பலகனிகளைத் தருகின்றது. எனினும் முக்கனிகள் நம் சமூகத்தில் தன் சிறப்பிடத்தைத் தொடர்ந்து நிறுத்திக்கொண்டுள்ளது. இறைவழிபாடு, மாகேசுரபூசை, விருந்தோம்பல் போன்றவற்றில் முக்கனிகள் இன்றும் சிறப்பிடம் பெறுகின்றன. இம்முக்கனிகளுள்ளும் பலாவும் மாவும் எத்துணையளவு கனிந்தாலும் அகத்தே வன்மையுள்ள கொட்டைப் பகுதியுள்ளவை. ஆதலின் அவற்றை விடுத்து முழுவதும் மென்மை கொண்ட வாழைக்கனியை ஈண்டு உவமை கூறினார்.

தம் உள்ளத்தை இங்ஙனம் வாழைப் பழத்தை ஒத்துக் கனிவிக்க வல்லவன் இறைவன் என்பதை முன்னரும் "கல்லை மென்கனியாக்கும் விச்சை கொண்டென்னை நின் கழற் கன்பனுக்கிய" *(98)* என்றார்.

வாழைப்பழத்தின் : இன் - ஒப்புப் பொருவில் வந்த ஐந்தாம் வேற்றுமை உருபு.

என்னை மனம் கனிவித்து : என் மனத்தைக் கனிவித்து என்னை - இரண்டாம் வேற்றுமை உருபு. ஆறும் வேற்றுமைப் பொருளில் வந்தது. மனம் - மனத்தை, இரண்டாம் வேற்றுமைத் தொகை. மனம் அவ்வாறு கனியும் நிலையில் சிவகரணமாக மாறித் திருவருள் அங்குத் தங்கித் தொழிப்புரியத்தகுதி பெறுகின்றது. அதனை விரும்பியே மனத்தைக் கனிவிக்க வேண்டுகின்றார்.

விரையார்ந்து இனிய மதுமதுப் போன்று - விரை - நறுமணம் ***மதுமது - மது*** - முன்னது மகரந்தம் பின்னது தேன். வாழைப்பழத்தை மனத்துக்கு உவமையாக்கியதால் அடைமொழியின்றியும் தேனை இறைவனுக்கு உவமையாக்கியதால் ***"விரையார்ந்து இனிய மதுமது"*** என்று சிறந்த பல அடைமொழிகள் புணர்த்தும் மொழிந்த நயம் காண்க. இயற்கை நறுமணமும் மகரந்தமும் கூறியதால் தேனடையினின்று பெறும் ஈக்களின் எச்சில், புழுக்களின் சிதைந்த உடல்கள் முதலியவை கலவாது தூயமலர்களில் தோன்றிய தேன் என்று கொள்க. வாழைப் பழத்தை கனிவித்து அதன்கண் தேன் தோய்ந்தது போல எழுந்தருள வேண்டும் என்று விண்ணப்பம் செய்தவாறு.

மதுமது - என்பதற்குச் "செக்கச் செவேல்" என்பது போல மதுவிலும் மது. அஃதாவது மதுவின் தன்மை மிக்க மது - என்பர் கவியரசு அவர்கள்.

எதிர்வது - என்னை ஏற்றுக் கொள்வது எனலுமாம்.

எப்போது - இப்போதே பல்லூழி காலம் கழிந்துவிட்டது, மேலும் காலத்தாழ்வு சகியேன் என்ற விரைவுக் குறிப்பு.

பயில்வி - பயிலுதல் - அழைத்தல். பிறவினைப் பொருளில் வந்தது. மனத்தூய்மை பெற்று யானே நின்னை நண்ணும் ஆற்றலற்றவன்; ஆதலின் என்னை நீயே நலப்படுத்தி நின்பால் அழைப்பித்துக் கொள்ள வேண்டும் என்று விண்ணப்பம் செய்தவாறு.

பயிலுதல் - என்பது இப்பொருளில் வருவதை -

திருச்சிற்றம்பலம்

“ மாதர்ம டப்பிடியும் மட வன்னமு மன்னதோர்
நடை யுடைமலை மகடுணையென மகிழ்வர்
பூதவி னப்படைநின் றிசைபாடவு மாடுவ
ரவர் படர் சடைந்நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபாடுவ ராழ்கடல் வெண்டிரை
யிரை நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங்கும லர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயி றருமபு ரம்பதியே”

திருச்சிற்றம்பலம்

திருமுறை 1-136-6

- என்பதிற் காண்க. ✽

இத்திருப்பாடலில், இறைவன் திருவுள்ளக் கருத்தின் வழி ஒழுகுதலே இன்றியமையாத கடனாக நிற்க; அதில் விருப்ப மின்றித் தம்முனைப்பால் தம்கருத்தின் வழி ஒழுகுதலை நம் அடிகள் வெறுத்துக் கூறுவதால் ***“பிரபஞ்ச வைராக்கியம்”*** புலனாதல் காண்க.

139. பரம்பர னேநின் பழவடி
யாரொடு மென்படிறு
விரும்பர னேவிட் டிடுதிகண்
டாய்மென் முயற்கறையின்

✽ *எயினர் தங்கிட மிருடிக ளிருப்பிட மேய்ந்த*
வயின்வ யின்றெறு மணிநிறக் கோபங்கள் மலர்ந்த
பயின்ம ரந்தொறும் பரிந்தன பேடையைப் பயிலுங்
குயிலி ரங்கின குருந்தநின் றரும்பின முருந்தம்

(கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம்
வனம்புகுபடலம் - 45)

அரும்பர நேர்வைத் தணிந்தாய்
பிறவியை வாயரவம்
பொரும்பெரு மான்வினை யேன்மன
மஞ்சிப் பொதும்புறவே. ௩௫

(இ - ள்)

திங்களின் கூறுகிய மெல்லிய பிறையை நாகத்துடன் ஒக்க அமைத்துச் சடையில் அணிந்தவனே; எங்கள் பெருமானே; ஐந்து வாய்களையுடைய பிறவியாகிய நாகம்; தீவினையாளனாகிய என் உள்ளம் நடுங்கி ஒடுங்க; நஞ்சு சாகும் வண்ணம் தாக்குகின்றது; மேலான பரம் பொருளே; நின் பழைய மெய்யடியாரின் தூய ஒழுக்கத்துடன் ஒப்பச் சிறியேனது, வஞ்ச ஒழுக்கத்தையும் விரும்பி ஏற்றுக் கொண்ட சங்கார காரணனே; (என்னை) விட்டுவிடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை - "முயற்கறையின் மெல்லரும்பு அரநேர் வைத்து அணிந்தாய்; பெருமான், ஐவாய்ப் பிறவி அரவம்; வினையேன் மனம் அஞ்சிப் பொதும்புறவே பொரும்; பரம்பரனே; நின் பழ அடியாரொடு என் படிறும் விரும்பு அரனே; விட்டுடிடுதிகண்டாய்;" - என்று அன்னுவயம் செய்துகொண்டு பொருள் காண்க.

முயற் கறையின் மெல் அரும்பு* - *முயற்கறை - முழு நிலாவிலுள்ள கறை முயல் போன்று வடிவுள்ளதாக இருக்கும். ஈண்டு முயற்கறை என்றது அன்மொழித் தொகையாக நின்று முழுநிலாவைக் குறித்தது அரிய சொல்லாட்சி.

மெல் அரும்பு - முழு நிலாவின் ஒரு கூறுகிய பிறை. பின் ஒவ்வொரு கூறுகப் பதினாறு கலைகளையும் பெற்று வளரவுள்ளது குறித்து **மெல் அரும்பு** என்றார்.

அரநேர் வைத்து அணிந்தாய் : அர - அரா என்பது "அர" என நின்றது. "குறியதனிறுதிச் சினைகெட உகரம் அறிய வருதல் செய்யுளுள்

உரித்தே" (தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் சூ.234) என்பது விதி. **நேர் வைத்து** - திங்களும் பாம்பும் ஒன்றுடன் ஒன்று பகையுள்ளவை. அவை இரண்டும் ஒன்றை மற்றொன்று காணும் வண்ணம் அணிமையில் எதிரெதிராக வைத்தல் - சிவ சந்நிதியில் இரஜோ குணம் வலிமடங்கிச் செயலற்று நிற்க; திருவருளும் அன்புமே செயற்படும் என்பது குறிப்பு. ***அணிந்தாய்*** - திங்களையும் பாம்பையும் அணிந்தது அழகுக்கன்று. வேறு எங்குச் சேரினும் தடுக்கலாகாத பகைவலியால் அவற்றுக்குக் கேடு விளையாமைப்பொருட்டு திங்களையும் பாம்பையும் சமமாக வைத்தவனாகலின் பழஅடியாருடன் என்னையும் ஒக்க வைத்து என்படிறு அல்லல் செய்யாமைப் பொருட்டு. ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"அங்கமே பூண்டாய் அனலாடினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்சடையினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே."

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-99-2)

- எனும் அரசுகள் தேவாரம் நினைக.

இளம்பிறையையும் பாம்பையும் சமமாக வைத்தானாதலின், பழ அடியாருடன் படிறுள்ள என்னையும் விரும்புகின்றவன் என்றவாறு.

பெருமான் - விளி. பிறவியாகிய ஐவாய் அரவுக்கு அஞ்சி அதனிடமிருந்து காக்கும்படி விண்ணப்பம் செய்தவாறு.

ஐவாய்ப் பிறவி அரவம் : ஐந்து தலைகளுள்ள நாகம் என்று பிறவியை ஏகதேச உருவகம் செய்தார். ***ஐவாய்*** இரட்டுற மொழிதலாக ஐந்து வாயில்கள் உள்ள புலன்களையும் குறித்து நின்றது. ***பிறவி*** - உடம்பு.

ஐம்பொறிகளின் வழியேசென்று புலனுகர்ச்சியில் ஈடுபடுங்காலும் நேரும் துன்பத்தை நோக்கி உடம்பை **ஐவாய் அரவம்** என்ருர்.

வினையேன் மனம் அஞ்சிப் பொதும்புறப் பொரும் - வினையேன் மனம் - தீவினையாளனுகிய என் உள்ளம். ***அஞ்சி*** - பிறவியாகிய பாம்புக்கு அச்சமுற்று. ***பொதும்பு*** - மரப்பொந்து. காடு எனலுமாம்.

பொதும்புற - பிறவியாகிய பாம்புக்கு அச்சமுற்று நான் மரப்பொந்திற் சென்று ஒளியும்படி.

பொரும் - அப்பாம்பை எதிர்த்துப் போரிடுகின்ற. ***பொதும்புறப் பொரும் பெருமான்*** என்று முடிக்க.

பரம்பரனே : பரம்பரன் - மேலானவற்றுக் கெல்லாம் மேலான கடவுள். அவனே பிறவியை எதிர்த்துப் போரிட்டு அழிக்க வல்லவன் என்று உடம்பொடு புணர்த்தார்.

நின்பழ அடியாரொடும் என்படிறும் விரும்பு அரனே : பழ அடியார் - விட்டு நிலையை வேட்டுப் பலகாலம் அருந்தவம் புரியும் மெய்யடியார்களைக் குறித்து நின்றது. ***ஒடு*** - எண்ணுப் பொருளில் வந்தது. ***என்படிறு*** - என்படிறும் என உம்மையை ஈண்டும் கூட்டுக. இங்கு உம்மை இழிவு சிறப்புப் பொருளில் வந்தது. ***படிறு*** வஞ்சனை. குற்றம் எனலுமாம். ***பழஅடியாரொடு*** என்றமையின் நான் புத்தடியேன் என்பதும்; தம் ஒழுக்கத்தைப் ***படிறு*** என்றமையின் பழஅடியார் ஒழுக்கம் தூயது என்பதும் பெற்ரும்.

படிறுடைய என்னை என்று மாற்றி ***என்*** என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை என்று கொண்டார் திரு. கா.சு. பிள்ளை அவர்கள். ***அரன்*** - இது, "ஹரன்" என்னும் வட சொல்லின் தமிழாக்கம் ***அரன்*** - அழிப்பவன். என்படிற்ருெழுக்கத்தையும் பிறவியையும் அழிப்பவன்; அஃது உன் பேரருளுடைமையினுல் நிகழ்வது என்றவாறு.

விட்டிடுதி - என்படிற்ருெழுக்கம் காரணமாக என்னைக் கைவிட்டு விடாதே. என்றவாறு.

இத்திருப்பாடலில், இறைவன் திருவுள்ளப் பாங்கின் வழி யொழுகுதலே இன்றியமையாதது; அதில் விருப்பமின்றித் தன் முனைப்பால் ஒழுகுதல் வெறுக்கத்தக்கது என்பது கூறப்படுதலின் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனாதலறிக.

140. பொதும்புறு தீப்போற் புகைந்தெரி
யப்புலன் தீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண்
டாய்விரை யார்நறவந்
ததும்புமந் தாரத்திற் றாரம்
பயின்று மந் தம்முரல்வண்
டதும்புங் கொழுந்தே னவிர்சடை
வானத் தடலரைசே. ௱௪௰

(இ - ள்)

நறு நாற்றம் பொருந்திய தேன் நிறைந்த மந்தார மலரில்; எடுத்தலிசை பாடிப் பின் படுத்தலிசை ஒலிக்கும் வண்டுகள்; அமிழ்வதற்கு ஏதுவாகிய செழித்த தேன் விளங்கும் சடையினையுடைய; சிதாகாயத்தில் எழுந்தருளியுள்ள வெற்றிமிக்க பெருமானே; மரப் பொந்திற் பொருந்திய நெருப்பைப் போலப் புகைந்து எரிகின்ற; அப்புலன்களாகிய நெருப்புப் பற்ற; (அதனால்) வெதும்புதலையுடைய சிறியேனை; விட்டுவிடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை; "விரைஆர் நறவம் ததும்பும் மந்தாரத்தில்; தாரம் பயின்று மந்தம் முரல் வண்டு; அதும்பும் கொழுந்தேன் அவிர்சடை; வானத்து அடல் அரைசே; பொதும்பு உறு தீப்போல் புகைந்து எரி; அப்புலன் தீக்கதுவ வெதும்புறுவேனை; விடுதிகண்டாய்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

விரைஆர் நறவம் ததும்பும் மந்தாரத்தில் : ***மந்தாரம்*** - அமரர் உலகிலுள்ள ஐந்தருக்களுள் ஒன்று. ஏனையவை கற்பகம், சந்தானம்,

அரிச்சந்தானம், பாரிசாதம் என்பன. மந்தாரம் ஈண்டுப் பொருளாகு பெயராய் நின்று மந்தார மலரை உணர்த்திற்று. ***விரை*** - நறுமணம்; ***நறவம்*** - தேன். மலர்களில் உற்றவை நறுமணமும், தோற்றப் பொலிவும், தேனுமாம். ஈண்டு மந்தாரமலரின் நறுமணமும் தேனும் கூறினர். மந்தாரம் என்றதால் மலரின் வண்ணமும் வடிவுமாகி தோற்றம் பெற்றும். ***ததும்பும்*** - சிந்தும்.

தாரம் பயின்று மந்தம் முரல் வண்டு : தாரம் - உச்ச சுரத்தில் பாடுவது. ***மந்தம்*** - கீழ் சுரத்தில் பாடும் மெல்லிசை. இவற்றுக்கு இடைப்பட்டதை "மத்திமம்" என்பர். இதனை,

திருச்சிற்றம்பலம்

"மந்தரத்தும் மத்திமத்துந் தாரத்தும் வரன்முறையாற்
றந்திரிகண் மெலிவித்துஞ் சமங்கொண்டும் வலிவித்தும்
அந்தரத்து விரற்றொழில்க ளளவுபெற வசைத்தியக்கிச்
சுந்தரச்செங் கனிவாயும் துளைவாயும் தொடக்குண்ண."

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - ஆனய நாயனர் புராணம் - 27)

- என்றதிற் காண்க. ***பயின்று*** - பழகி; எடுத்தவிசையில் அடுத்தடுத்துப் பாடிப் பின் தாழ்ந்து மெல்லிதாகப் படுத்த இசையில் பாடுவதைக் குறித்து நின்றது. ***வண்டு*** - தேனீக்கள். இவை நறுமணத்தையே விரும்பிச் செல்வன. ***முரலுதல்*** - ஒலித்தல்.

அதும்பும் கொழுந்தேன் அவிர்சடை : அதும்புதல் - அமிழ்தல். ***"அதும்பும் கொழுந்தேன்"*** என்புழி, அதும்பும் என்பது செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் இடப் பொருள் கொண்டு முடிந்தது. ***கொழுந்தேன்*** - தேனின் மிகுதி வண்டு அதனுள் அழுந்துதல் குறித்தது. மலரிலுள்ள தேனை உண்ண வந்த வண்டு அதனை உண்ணுமல் மலரைச் சுற்றுங்கால் ஒலி செய்தும், தேனையுண்டு மலரின் அகத்தே தேனில் அழுந்துங்கால் ஒலியடங்கியும் இருத்தல் இயல்பு. கல்வியில் வல்லான் ஒருவன் இறைவனை அணுகப் பெருத நிலையில் தருக்கம் வாதம்

முதலியவற்றில் ஈடுபடுவன். இறைவன் திருவருளில் படிந்ததும் வாதம் முதலிய ஒழிந்து மௌனநிலையை எய்துவன் என்பதும் நினைக.

மந்தார மலரிலுள்ள வண்ணம் சத்தையும், நறுமணம் சித்தையும்; தேன் ஆனந்தத்தையும் குறிப்பில் உணர்த்திநின்றன. இம்மூன்றனையும் கொண்ட மந்தார மலர் சச்சிதானந்தன் என்னும் உண்மையறிவின் வடிவினனாகிய இறைவனையும் தேனுண்ண வந்த வண்டு இறைவனை எய்துதற்குரிய பக்குவான்மாவையும் குறித்து நின்றன. உயிருக்குப் பக்குவம் எய்து முன்பு பாசஞானம் பசு ஞானங்களாகிய அபர ஞானமும்; பக்குவம் எய்தியபின் அனுபவ உணர்வாகிய பதிஞானமும் உண்டாம். இங்கு வண்டு ***தாரம் பயிலுதல்*** பாச ஞானத்தையும் ***மந்தம் முரலுதல்*** - பசுஞானத்தையும், ***கொழுந்தேன்*** - சிவானந்தத்தையும்; ***தேனில் அதும்புதல்*** பக்குவ ஆன்மா பாச, பசு ஞானங்களை விட்டுச் சிவானந்தத்தில் தோய்ந்து இன்புறுதலையும் குறிப்பனவாம் ஈண்டு; 32 - ம் திருப்பாடல் உரையில் எடுத்தாண்ட சிவஞான சித்தியார் சூ-9 செய்-1 பார்க்க.

அவிர்சடை : அவிர்தல் - விளங்குதல். இறைவன் சடை பொன்னிறமாதலின் அது பொன்போன்று ஒளிவீசி விளங்குவதாம்.

வானத்து அடல் அரைசே : வானம் - சிதாகாசமாகிய ஞானப்பெருவெளி. ***அடல்*** - வெற்றி. ***அரைசு*** - அரசு என்பதில் 'அ' கரம் 'ஐ' காரமாக வந்த மொழியிடைப் போலி. சிதாகாயத்தில் விளங்கும் வெற்றியுள்ள இறைவன். மாயப்படை வாராமே வென்று அருளாட்சிபுரிவது அவன் வெற்றி.

இதனை;

திருச்சிற்றம்பலம்

" ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா வேறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் *மாயப்படை வாராமே."*

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 613)

என்று நம் அடிகளே பின்னர்க் கூறுவார்.

பொதும்பு உறுதீப்போல் புகைந்து எரி : பொதும்பு - மரத்திலுள்ள பொந்து. ***புகைந்து*** - நெருப்பு சிறிதுசிறிதாகப் புகைந்து பெருகி. மரப்பொந்தில் பற்றிய நெருப்பு சிறிது சிறிதாகக் கனிந்து பிறகு மூண்டெழுந்து அம்மரத்தையே அழித்துவிடும். ***எரி*** - எரிகின்ற. வினைத் தொகை.

அப்புலன் தீக்கதுவ வெதும்பு உறுவேனை : அப்புலன் - சுட்டு முன் திருப்பாடல்களிற் கூறியாங்கு பற்பல துன்பங்களை விளைத்ததென்பதைச் சுட்டிநின்றது. "உள்ளம்" என்ற ஒரு சொல்வருவித்து, ***"உள்ளம் வெதும்புறுவேனை"*** என்க. வினைமுதல் வெதும்புறுவதாகிய உயிர், மரப்பொந்து - பொறிவாயில்கள். மரம் - உடம்பு; ஈண்டு உடம்புடன் பிரிவின்றி நிற்கும் உயிரைக் குறித்து நின்றது. பொறிவாயிலாகிய மரப் பொந்திற் பற்றிய புலனுகிய நெருப்பு சிறிது சிறிதாகப் பெருகி உடம்புடன் வேறற்று நிற்கும் மரமாகிய உயிரை அழித்தலால் ***"உள்ளம் வெதும்புகின்றேன்"*** என்றவாறு. உன் திருவருளாகிய மழையே இந்த நெருப்பை அணைக்க வல்லது. இந்த நிலையில் நீ என்னைக் கைவிடலாகாது என்றவாறு. ஈண்டு 64 - ம் திருப்பாடல் உரையில் எடுத்தாண்ட நம்பிகள் தேவாரம் நினைக.

இத்திருப்பாடலில் "பொதும்புறு தீப்போன்ற புகைத்தெரியப்புலன் தீக்கதுவ வெதும்புறுவேனை" என்றதால், உலகவாழ்க்கை புலன்களின் கொடுமையால் துன்புறத்தக்கது என்று வெறுத்துக் கூறுதலின் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதல் காண்க.

141. அரைசே யறியாச் சிறியேன்
பிழைக்கஞ்ச லென்னினல்லால்
விரைசேர் முடியாய் விடுதிகண்
டாய்வெண் ணகைக்கருங்கண்
டிரைசேர் மடந்தை மணந்த
திருப்பொற் பதப்புயங்கா
வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினை
தான்வந் தடர்வனவே நஎ

(இ - ள்)

வெள்ளிய பற்களையும் கரிய கண்களாகிய கடலையும் உடைய உமையம்மையை ஒருகூற்றில் உடைய இறைவனே; முத்தித்திருவை நல்கும் அழகிய திருவடிகளையுடைய பாம்பணிந்த பெருமானே; பல மலைகள் ஒருங்கு திரண்டுவந்து தாக்கினாற்போல; வலிய தீவினைகள் திரண்டுவந்து நெருக்குகின்றன; மன்னவனே; நறுமணம் பொருந்திய சடைமுடியினையுடையாய்; அறிவில்லாத சிறியேனாகிய என் பிழையின் விளைவுகளுக்கு அஞ்சினேன்; அவ்வச்சத்தை நீக்குவதற்கு "அஞ்சற்க" என்று நீ கூறினலல்லது (வேறுகதியின்று); என்னைக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது)

(வி - ரை)

இத்திருப்பாடலை - "வெண்ணகைக் கருங்கண் திரைசேர் மடந்தை; மணந்த; திருப்பொற்பதப் புயங்கா; வரைசேர்ந்து அடர்ந்தென்ன; வல்வினைதான் வந்து அடர்வன; அரைசே; விரைசேர் முடியாய்; அறியாச் சிறியேன் பிழைக்கு அஞ்சல் என்னின் அல்லால்; விடுதிகண்டாய்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

வெண்நகைக் கருங்கண் திரைசேர் மடந்தை : உமையம்மை. ***வெண்நகை*** - இறைவன் திருவடிச் சார்பைத் திருவருள் மூலம் எய்த விரும்பித் தன்னை வழிபடும் அடியவர்களுக்கு புன்னகை பூத்த முகத்துடன் அன்னை காட்சிதரும் கோலம். ***கருங்கண்திரை சேர்மடந்தை*** - கடல்போன்று விரிந்து அளவிடமுடியாத அருள்வெள்ளம் பொழியும் கண்கள். ***திரை*** - சினையாகு பெயராகக் கடலை உணர்த்திற்று. கரிய அகலமான கண்கள் பெண்களுக்கு அழகூட்டுவன. ஈண்டுக் கடலின் கரிய நிறமும் அளவிடமுடியாத பரப்பளவும் உவமைகள். கடலின் நீர் அளவிடற் கரியது. அன்னையின் கண்கள் பொழியும் திருவருட்பெருக்கும் அள்ளக்குறையாத பெற்றியது. பல மலைகள் போன்று அளவிட இயலாது தீவினைத்துன்பங்களை நீக்குதற்குக் கடல் போன்ற திருவருள் மிகுதி தேவைப்பட்டவாறு.

சேர்மடந்தை - அருட்கடல் கண்களில் சேர்ந்துள்ள இளம் பருவத்தினள். ***மடந்தை*** - இளம்பருவப்பெண். அம்பிகை

காலதத்துவத்தைக் கடந்தவளாகலின் என்றும் முதுமை எய்தாள். ***மடந்தையை*** என இரண்டனுருபு விரித்துக் கொள்க. ***திரைசேர் மடந்தை*** - என்பதற்குக் கங்கையம்மை என்றும் திருமகள் என்றும் உரைத்தனர் சிலர். அதிற் பொருட்செறிவு இன்மை கண்டு ஒதுக்குக.

மணந்த - கூடிய, பொருந்திய. ***மணந்த புயங்கா*** என ஈண்டும் கூட்டி முடித்துக் கொள்க. ***திருப் பொற்பதப் புயங்கா*** - ***திரு*** - வீடு பேருகிய செல்வம் "மோட்சலட்சுமி" என்பர் வடமொழியாளர். வீட்டின்பம் தருவது மெய்ஞ் ஞானமாகும். இறைவன் திருவடியை ஞான வடிவம் என்று மறையாகமங்கள் மொழியும். ***பொற்பதம்*** - உலக வாழ்வுக்குப் பொன் இன்றியமையாதது போன்று, வீடு பேற்றுக்கும் சிவபதம் இன்றியமையாதது. ஆதலின் "***பொற்பதம்***" என்ருர். ***புயங்கா***- "***மடந்தை மணந்தபுயங்கா***", "***திருப்பொற் பதப்புயங்கா***" என்னும் தொடர்கள் முறையே போகத்தையும் வீட்டின்பத்தையும் அருள்பவன் என்ற உண்மையைப் புலப்படுத்தி நின்றன. "பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானை" என வரும் நம்பிகள் தேவாரம் நினைக. இதில் பொன்னைத் தந்து போகத்தைப் புணர்ப்பவன் என்றும்; மெய்ப்பொருளைத் தந்து வீட்டின்பத்தை அருள்பவன் என்றும் நிரனிறைப் பொருள் கோளமைந்து, இறைவன் போகியாயிருந்து உயிர்க்குப் போகத்தைப் புணர்ப்பவன் என்பதையும் யோகியாயிருந்து யோகமுத்தியை அருள்பவன் என்பதையும் புலப்படுத்து நிற்கு நயம் கண்டு நனி மகிழ்க. ***புயங்கா*** - புயங்கன் என்றதன் விளி. முன்னம் 66 - ம் திருப்பாடலில் "புயங்கம்" என்றதன் கீழுரைத்தவை காண்க.

வரைசேர்ந்து அடர்ந்து என்ன - மலைகள் பல ஒருங்கு திரண்டு வந்து தாக்கினுற் போல. ***மலை*** - அசைக்கலாகாத நிலையினது. அவை பல சேர்ந்து வந்து அடர்ந்தன என்பது இல்பொருளுவமை. ஒரு மலையின் ஒருசிறு கூறு உருண்டுவந்து மேல் விழின் தாக்கப்பட்டார் உய்தலரிது. பலமலைகள் ஒருங்கு சேர்ந்து வந்து தாக்கினுல். ஒருவரும் உய்யார் என்பது போதரும்.

வல்வினை தான் வந்து அடர்வன : வல்வினை - ஈண்டுத் தீவினை என்ற பொருளில் வந்தது. மலை பல என்றமையால் ஈண்டு வினைகளும்பல என்பது பெற்றும். மலைகளின் தொகுதி தாக்கின் அத்தாக்குதலை விலக்கலும் இயலாது; உய்யவும் முடியாது என்பது ஈண்டு வினைகளின் தாக்குதலை விலக்கவும் இயலாது; தாக்கிய பின் உய்தலும் இயலாது என்பது தோன்ற **வினை** என்பதற்கு **வல்** - என்றடைபுணர்ந்தார். ***தான்*** - தேற்றப் பொருளில் வந்தது. ***அடர்வன*** - நெருக்கித்தாக்குவன. ***அடர்வனவே*** - ஏகாரம் ஈற்றசை. ***அரைசே*** - அரசனே; தாக்கும் தீவினைத் தொகுப்பை முற்றிலும் அழித்தற்குரிய ஆற்றலுடைய வினைக் கேடனாகிய மன்னவன் நீயே என்றார்.

விரைசேர் முடியாய் - நறுமணம் பொருந்திய சடையாகிய முடியையுடையனே. ***விரை*** - நறுமணம்; இயற்கையானது. சடையிலணிந்த கொன்றை மாலையாலானது என்பாருமுண்டு. திருவருள் மணம் என்பர் சீகாழித் தாண்டவராயர். மாயையமாகிய நிலையற்ற உலகை நிலையெனக் கொண்டு, மணிமுடி சூடி மருளாட்சி புரியும் மன்னர் போலன்றி, மாயைக்கு அப்பாற்பட்டு என்றும் நிலைபெற்றுள்ள இன்பமயமான வீட்டுலகத்தை நறுமணமிக்க சடைமுடி பூண்டு அருளாட்சி புரியும் அரசர் பெருமான் என்றவாறு.

அறியாச் சிறியேன் பிழைக்கு அஞ்சல் என்னின் அல்லால் : அறியாச் சிறியேன் - அகவையிற் சிறியவனாயினும் ஒருவன் அறிவிற்சிறந்து விளங்குவதை உலகிற்காணலாம். ஆனால் யான் அவ்வாறன்றி அறிவின்மையினால் தீவினைகளைச் செய்யும் சிறுமைக் குணத்தினன் என்றவாறு. ***பிழைக்கு*** - பிழையின் விளைவுகளுக்கு. ***பிழை*** - மனமொழி மெய்களால் செய்யும் தீவினைகள். ***அஞ்சல்*** - அஞ்சற்க. ***என்னின் அல்லால்*** - என்று அபயமொழி வழங்குதல் தவிர, அதற்குமாறாக என்னைக் கைவிட்டு விடாதே என்றவாறு. உன் அபயமொழி ஒன்றே என் தீவினைகளத்தனையும் எரியிடைப்பட்ட பஞ்சு போன்று அழித்துவிடும் என்றவாறு. ***என்னின் அல்லால்*** - என்றதன்பின் அவாய்நிலையால் வேறு கதியின்று என்பது வருவித்துரைக்க. "பிழையெலாம் தவிரப் பணிப்பானை" என்பது நம்பிகள் தேவாரம்.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"அஞ்சி ஞார்க்கர ஞாதி யென்றடி
யேனு நான்மிக அஞ்சினேன்;
அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருள்
நல்கி ஞய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 7-48-5)

- என்றதும் நினைக.

இத்திருப்பாடலில் - "வரைசேர்ந்தடர்ந்தென்ன வல்வினைதான் வந்தடர்வன" என உலகவாழ்வின் துன்பம் குறிப்பிடப்படுவதால் "***பிரபஞ்ச வைராக்கியம்***" புலனுதல் காண்க.

142. அடர்புல ஞனிற் பிரிந்தஞ்சி
அஞ்சொனல் லாரவர்தம்
விடர்விட லேனை விடுதிகண்
டாய்விரிந் தேயெரியுஞ்
சுடரனை யாய்சுடு காட்டர
சேதொழும் பர்க்கமுதே
தொடர்வரி யாய்தமி யேன்றனி
நீக்குந் தனித்துணையே ௩௮

(இ - ள்)

எங்கும் பரந்து ஒளிவீசும் தீப்பிழம்புபோலத் திகழ்பவனே; எல்லாம் ஒடுங்கும் இடமாகிய பெருஞ்சுடலைக்கு மன்னவனே; மெய்யடியார்க்கு அமுதம் போன்றவனே; யாராலும் தொடர்ந்து பற்றுவதற்கு அரியவனே; புகலற்ற அடியேனது தனிமையை நீக்கியருளும் ஒப்பற்ற துணையாக வுள்ளவனே; என்னைத் தாக்குகின்ற புலன்களுக்கு அஞ்சி நின்னைப் பிரிந்து; அழகிய சொற்களையுடைய மகளிரின் முழைபோன்ற இடங்களை விடாமற் பற்றி நிற்கின்ற சிறியேனை; விட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "விரிந்து எரியும் சுடரனையாய்; சுடுகாட்டு அரசே; தொழும்பர்க்கு அமுதே; தொடர்பு அரியாய்; தமியேன் தனி நீக்கும் தனித்துணையே; அடர்புலனால் அஞ்சி நின் பிரிந்து; அம்சொல் நல்லார் அவர்தம் விடர் விடலேனை; விடுதி கண்டாய்" - என்று அன்னுவயம் செய்துகொண்டு பொருள் காண்க.

விரிந்து எரியும் சுடர் அனையாய் - ஞானயோகத்தில் திளைக்கும் பெரியோர்கள் முதலில் இறைவனைப் பேரொளிப் பிழம்பாகக் கண்டு வழிபட்டனர் என்பது மறையாகமங்கள் கூறும் உண்மை. ஐம்பெரும் பூதங்களும், ஞாயிறும், திங்களும், ஆன்மாவும் இறைவனின் அட்ட மூர்த்தங்கள். இவற்றுள் ஞாயிறும், திங்களும் நெருப்பும் ஒளி மண்டலங்கள். இவை புற இருளைப் போக்கி மாயேயங்களாகிய உலகப் பொருள்களை மட்டும் காட்டுவன. இறைவன், அக இருளாகிய ஆணவமலத்தின் வலிமையையடக்கித் தன் இயல்பை உயிர்களுக்குக் காட்டுபவன். ஆதலின், இறைவனை ஒளிமண்டலங்களில் வைத்து நம் முன்னோர் வழிபடலாயினர்.

இந்நாளிலும் எண்ணற்ற அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நாடோறும் ஆன்மார்த்த சிவபூசை புரிகின்றனர். அதில் அந்தரியாக பூசை என்றோர் பிரிவுண்டு. வழிபடுவர் தம் உள்ளத்தின் நடுவில் தன் ஆன்மாவையே கட்டை விரலளவுள்ள ஒளிமயமான சிவலிங்க மூர்த்தமாகப் பாவித்து, அதனுள் சிவபெருமானை எழுந்தருளச்செய்து, அபிடேகம் முதலிய எல்லாவற்றுடன் கூடிய வழிபாடு செய்வர். இங்ஙனம் மிகச் சிறிய

அளவில் மெய்யன்பர்கள் உயிரினுள் எழுந்தருளியுள்ள பெருமானே, தன்முனைப்பால் தேடிய அயனும் அரியும் பல்லாண்டு முயன்றும் காணக் கிட்டாத அழற்றூணாய் நின்றான். அவன் திருவடிகள் பாதாளம் ஏழும்கடந்து கீழே சென்றது. திருமுடி அண்ட முகடுகளுக்கும் அப்பால் மேலே சென்றது. அந்நிலையினையே ஈண்டு **"விரிந்தே எரியும் சுடர் அனையாய்"** என்றார். விரிந்து எரியும் என்ற தொடரில் வருமொழியில் முதலில் உயிரெழுத்து வருதலின் நிலைமொழி யீற்றிலுள்ள குற்றியலுகரத்தை ஏகாரமாக்கினர். விரிந்தும் எரியும் சுடராதலின் **"விரிந்தே எரியும் சுடர்"** என்றார் என்பது கவியரசு அவர்களின் உரைக்குறிப்பு.

சுடுகாட்டு அரசே - ஈண்டுச் **"சுடுகாடு"** என்றது பேரூழிக்காலத்தில் அனைத்தும் எரிந்து சாம்பலாகித் திருமால் முதலிய யாவரும் ஒடுங்கிய இடமாகும். அக்காலத்தில் ஆண்டுத் தலைவனாக விளங்கும் தகுதி தையல் பாகனுக்கன்றி பிறரெவர்க்கும் இன்றென்பது துணிபு. மாயேயங்களாகிய உலகங்களில் விளங்கும் அரசர்களாகிய மக்கள் தேவர் முதலியோர் தங்கள் குடிமக்கள் இறந்தொழிதல் போலத் தாமும் இறந்தொழிவர். ஆனால் இறைவனாகிய அரசன் யாவும் யாவரும் ஒடுங்கிய பின்பும் நிலைபெற்று மீண்டும் படைப்பு முதலிய செயல்களுக்குத் தலைமை வகிப்பர் என்பது நினைக.

ஈண்டு;

"அன்ன வேலையி லவையெலா மழிந்தபின் னளிப்போர்
என்ன நின்றவர் தம்மையு மொடுக்கு மிதற்பின்
முன்ன ருள்ளதோ ரேகமா யுறையுமெம் மூர்த்தி
பின்னு மிம்முறை புரிந்திடு மென்றுமிப் பெற்றி" (11)

"பரம னிவ்வகை அடுந்தொறு மடுந்தொறும் பலவாம்
பிரம னாதியோ ரென்பினைத் தரிக்குமப் பெரியோர்
சிரமெலாந் தொடுத்த ணியலா யணிந்திடுஞ் சிகைதன்
உரமு லாவுமுந் நூலென வேயணிந் துறையும்" (12)

"அல்ல தங்கவர் தங்களை முத்தலை அயிலால்
மெல்ல வேயெடுத் தேந்திடு மவர்தமை விழியால்
தொல்லை நாளின் நீறுக்கியும் புனைந்திடுந் தூயோன்
மல்லல் மாதவம் அனையவ ரியற்றிய வகையால்"(13)

(கந்தபுராணம் - தட்சகாண்டம் ததீசியுத்தரப்படலம்)

- என்பன காண்க.

தொழும்பர்க்கு அமுதே - உயிர்முனைப்பால் தேடிய திருமாலுக்கும் அயனுக்கும் அரியவனேயன்றி, மெய்த்தொண்டில் தவமுயலும் உண்மை அடியார்களுக்கு இனியனாய் எளிவந்தருளுவன் என்றவாறு. நம் அரசுகளுக்குப் பொதிசோறளித்தது, நம்பிகளுக்கு நண்பகலில் இரந்துவந்து சோறளித்தது பரவையம்மையார்மாட்டு நள்ளிரவில் இருமுறை தூது சென்றது போன்ற அருள் நிகழ்ச்சிகள் காண்க. சுடராயினும் தொண்டர்க்கு அமுதம் போன்று தண்மையனாய் இன்பம் பயப்பவன். முன்னம் 136 - ம் திருப்பாட்டில் "சுடர் மாமணியே" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

தொடர்வு அரியாய் - மெய்த்தொண்டரல்லாதவரால் தொடர்வதற்கும் அரியவன்.

ஈண்டு,

திருச்சிற்றம்பலம்

"தாய னாரெனு நாமந் தரித்துளார்;
சேய காலந் தொடர்ந்துந் தெளிவிலா
மாய னார்மண் கிளைத்தறி யாதவத்
தூய நாண்மலர்ப் பாதந் தொடர்ந்துளார்."

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - அரிவாட்டாய நாயனார் புராணம் - 5)

- என்றது காண்க. முன்னம் 136 - ம் திருப்பாட்டில் "தொடற்கரியாய்" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

தமியேன் தனிநீக்கும் தனித்துணையே : தமியேன் - திக்கற்றவன், அனாதை. உயிர் அநாதி கேவலத்தில் கிடக்கும் பொழுதும் இறைவன்

உடன் துணையாயிருந்து படைப்புக்குக் கொண்டு வருகின்றான்; சகல நிலையில் உயிர் தன் முனைப்பால் இறைவன் உடனிருப்பதை அறியாது உழன்ற நாளிலும் துணையாகவுள்ளான். தன்முனைப்பற்று இறை விளக்கம் பெற்ற பின்பும் துணையாக உள்ளான்; இறுதியில் வீடுபேறுற்ற நிலையிலும் உடனிருந்து இன்பம் துய்க்கச் செய்கின்றான். இந்நிலைகள் எவற்றுள்ளும் பிறர் துணையாவதின்மையால் **தனித்துணை** என்றார். ஈண்டு, 72 - ம் திருப்பாட்டில் "தமியனேன் தனிமை தீர்த்தே" என்றதன் கீழெடுத்தாண்ட திருப்புகழ் நினைக.

அடர்புலனால் அஞ்சி; நிற்பிரிந்து : அடர்புலன் - புலனுகர்ச்சியில் செல்லும் என் உள்ளத்தைத் தடுக்க முயன்றேன். ஆனால் புலன்வலி என்னை மீதூர்ந்து பொருகின்றது. **புலனால்** - "**ஆல்**" மூன்றனுருபு. ***அஞ்சி*** - புலன்களின் சமருக்கு ஈடுகொடுக்க முடியாமல் அச்சமுற்று. ***நிற்பிரிந்து*** - நின் திருவடிகள் புலன்களின் வலிமை அணுக இயலாதன. நான் அதை அடைந்திருக்க வேண்டும். மாறாகத் தனித்துணையான உன்னைப் பற்றாமல் பிரிந்து சென்றேன்.

அம்சொல் நல்லார் அவர்தம் விடர்விடலேனை - அவ்வாறு சென்றவன் புலன் வலிமைக்கு ஆக்கம் தரும் இளமகளிர் சார்பைப் பற்றிக் கொண்டு விடாமலுள்ள என்னை. ***அம் சொல்*** - அழகிய இனிய சொற்கள். காமுகர் விரும்பிப் பற்றுதற்கும் பற்றியபின் விடாது தொடர்வதற்கும் ஏது. ***நல்லார்*** - இளமகளிர். ***அவர்*** - பகுதிப் பொருள் விகுதி. ***விடர்*** - பள்ளம். மலைப் பகுதியிலுள்ள வனங்களில் யானைகளைப் பற்றுவதற்காக அமைக்கப்படும் "***விடர்***" என்ற பள்ளம், கொங்கு நாட்டில் "கொப்பம்" என்று வழங்கப்படுகின்றது. பள்ளத்தின் மேல் மெல்லிய மரக்கிளைகள். மூங்கில் முதலியவற்றை அமைத்து ஓலை, இலை முதலிய வற்றை மேலே பரப்பி, மண்ணைத் தூவி, அதன் மேல் புல் முதலியவற்றை விளைவித்தோ அல்லது தானியங்களைப் பரப்பியோ மறைப்பர். அவற்றைத் தின்னவரும் யானைகள் பள்ளத்தில் வீழ்ந்து மீள முடியாமல் வேடர்கள்பால் சிறைப்படும். ***விடர்*** - ஈண்டு அஞ்சொல் நல்லாரின் காமமாகிய பள்ளம் குறித்து நின்றது. தானியம், பசும்புல் முதலியன அவர்கள் ஒப்பனை குறித்து நின்றன. விடரில் வீழும் காமுகனை

யானை என்னுது அவன் குற்றத்தைத் தன்மேலேற்றிக் கொண்டு **"விடலேனே"** என்றதால் இஃது ஏகதேச உருவக அணி. விடரில் வீழ்ந்த யானை மீள முயலும்; ஆனல் காமுகன் அவ்விடரையே பற்றிக் கொண்டு விடாது உழல்வன். ஆதலின் அவன் அவ்விலங்கினும் இழிந்தவனுனன். **விடர்** - மலைக்குகை போன்ற சிற்றிடத்தை யுணர்த்தும்; சிற்றிடம் கூறியது ஒழுக்கப் பிறழ்ச்சி வெளிப்படாமை குறித்தாம் என்பது கதிர் மணி விளக்கம். **விடலேனே** - நின்னைப் பிரிந்தேன். அதனுல் புலன்கள் தாக்கின. அத்தாக்குதலுக்கு அஞ்சிய யான் மீண்டும் நின்னைப் பற்றியிருக்க வேண்டும்; அவ்வாறு பற்ருமல் புலன்களின் தாக்குதலை விடக் கொடிய காமமாகிய பள்ளத்தைப் பற்றினேன். பற்றித் துன்பம் மேலும் மிகுந்த போதும் தொடர்ந்து பற்றிக் கொண்டுள்ளேன் என்றவாறு. நற்சார்பை விடுவதினும் தீயசார்பைத் தொடர்ந்து பற்றிக் கொண்டிருப்பதில் அவா மிகுந்துள்ளேன் என்றவாறு.

விடுதி - தீயசார்பைப் பற்றிக் கொண்டுள்ளதைக் காரணமாகக் கொண்டு என்னைக் கை விட்டுவிடாதே. மைந்தன் தீயவனுயின் அன்னை அவனைக் கைவிட்டு விடுவதில்லை. நீ அன்னையினும் மேலான அன்புள்ளவன். நீ தனிப்பெருந் தலைவனுதலின் தீய சார்புள்ள என்னை ஏற்றுக் கொண்டால் அது பற்றி உன்னை உசாவுவார் ஒருவருமிலர் என்றவாறு.

ஈண்டு;

"கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென்
கன்னெஞ்ச முருகவிலையே;
கருணைக் கிணங்காத வன்மையையும் நான்முகன்
கற்பிக்க வொரு கடவுளோ
வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு
வழக்குக் கிழுக்குமுண்டோ;
வானமாய் நின்றின்ப மழையா யிறங்கியெனை
வாழ்விப்ப துன்பரங்காண்
பொல்லாத சேயெனில் தாய்தள்ள னீதமோ
புகலிடம் பிறிதுமுண்டோ

பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட்கயலுமாய்ப்
புன்மையே ஞவனந்தோ
சொல்லால் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மா இருக்கவருளாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே"

(தாயுமான சுவாமிகள் பாடல் - சுகவாரி 3)

- என்பது காண்க.

இத்திருப்பாடலில் - புலன்களால் வரும் துன்பம் மிகக் கொடியது; மகளிர் மையலால் வரும் துன்பம் அதனினும் கொடியது என்று உலக வாழ்க்கை வெறுக்கப்படுதலின் **"பிரபஞ்ச வைராக்கியம்"** புலனுதல் காண்க.

143. தனித்துணை நீநிற்க யான்தருக்
கித்தலை யானடந்த
வினைத்துணை யேனை விடுதிகண்
டாய்வினை யேனுடைய
மனத்துணை யேயென்றன் வாழ்முத
லேயெனக் கெய்ப்பில்வைப்பே
தினைத்துணை யேனும் பொறேன்றுய
ராக்கையின் திண்வலையே. ௩௬

(இ - ள்)

தீவினை யுடையேனின் உள்ளத்துக்கும் துணையாக உள்ளவனே; என் வாழ்கைக்கு ஆதாரமாகவுள்ள முதற்பொருளே; எனக்கு இளைப்பு நேர்ந்த விடத்துப் பயன்படும் பாதுகாப்பு நிதி போன்றவனே; ஒப்பற்ற துணையாகிய நீ இருக்க யான் செருக்குற்றுத் தலைகீழாக நடந்த, வினையைத் துணையாகக்கொண்ட சிறியேனை; விட்டுவிடுவாயோ? (விடலாகாது); உடலாகிய திண்ணிய வலையிற்பட்டு எய்தும் துன்பத்தைத் தினையளவு நேரமேனும் பொறுக்கலாற்றேன்.

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "வினையேனுடைய மனத்துணையே; என்றன் வாழ் முதலே; எனக்கு எய்ப்பில் வைப்பே; தனித்துணை நீ நிற்க; யான் தருக்கித் தலையால் நடந்த வினைத்துணையேனை; விடுதி கண்டாய்; ஆக்கைத் திண்வலைத்துயர்; தினைத்துணையேனும் பொறேன்;" - என்று அன்னுவயம் செய்துகொண்டு பொருள் காண்க.

வினையேனுடைய மனத்துணையே : வினையேன் - தீவினையாளனாகிய நான். தம்மை "***வினையேன்***" என்றதால், இறைவன் வினையின் நீங்கிய விமலன் என்பதும், அவனே உயிர்களின் வினைகளை நீக்குபவன் என்பதும் பெற்றாம். ***மனத்துணையே*** - மனம் முக்கரணங்களிலும் சிறந்ததாகும். மனங்கலவாமல் மொழிமெய்களால் நிகழும் வினைகளை அபுத்திபூர்வமான வினைகள் என்பர். அவை மென்வினைகளாகி எளிதில் நுகர்ந்து கழிக்கத் தக்கன. மனம் கலந்து மொழி மெய்களால் நிகழும் வினைகளை புத்திபூர்வமான வினைகள் என்பர். அவை முடிகிப் பயன் நுகர்விப்பன. மனம் தூய்மை பெறின் முக்கரணங்களும் தூய்மை பெறும். அதன்பின் அது பொறி வழிச் செல்லாது தன்னைப்பற்றுமாறு இறைவன் அம்மனத்துள் நின்று அதை உய்ப்பதால் அவனை ***மனத்துணையே*** என்றார். முன்னம் போற்றித் திருவகவல் 89-ல் "கைதர வல்ல கடவுள்" என்றருளியதும் ஆண்டுக் "கடவுள்" என்றதன் கீழுரைத்தவையும் காண்க. மனத்துக்கும் துணையே என்ற இழிவு சிறப்பும்மை விரித்துக் கொள்க.

என்றன் வாழ்முதலே - 127 - ம் திருப்பாட்டில் "என் வாழ்முதலே" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

எனக்கு எய்ப்பில் வைப்பே : எய்ப்பில் வைப்பு - பாதுகாப்பு நிதி. வீட்டின்பம் பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டு நான் முயலும் தவத்தில் இளைப்பு நேர்ந்துழி அதையொழித்துத் தன்னையே வழங்கும் பேரருளாளன் என்றவாறு. பாதுகாப்பு நிதி பற்றி முன்னம் 102 - ம் திருப்பாடலில் "தொழும்பாள ரெய்ப்பினில் வைப்பனே" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

தனித்துணை நீ நிற்க : தனித்துணை - ஒப்பற்ற துணை. முன்னம் 102 - ம் திருப்பாட்டில் "துணையாளன்" என்றதன் கீழுரைத்தவை காண்க. ***நீ நிற்க*** - எனக்குத் துணை செய்வதற்கு நீ ஆயத்தமாகக் காத்திருக்கவும்.

யான் தருக்கித் தலையால் நடந்த வினைத்துணையேனை : யான்தருக்கி - "***யான்***" என்றதன் பின் "என" என்னும் ஓர் இடைச் சொல்லை அவாய் நிலையால் வருவித்து ***யான் எனத்தருக்கி*** எனவுரைத்துக் கொள்க. ***தருக்கி*** - செருக்குற்று. "***யான்***" என்றதனுல் இனம்பற்றி "எனது" என்பதையும் கொண்டு "யான் எனது" எனும் அகப்பற்றுப் புறப்பற்றுக்களால் மயங்கி என்க. "***யான் தருக்கித் தலையால் நடந்த வினைத்துணையேனை***" - என்பதற்குத் "தருக்கித் தலையால் நடந்த வினைத்துணையேனுகிய என்னை" எனக் கோடலுமொக்கும்" ***தலையால் நடத்தல்*** - செருக்கினுல் நெறிமுறை தவறி ஒழுகுதல். செருக்குற்றுத் தவறே செய்வோரை இன்றும் பேச்சு வழக்கில், "காலால் நடந்தால் அறிவுரை கூறித் திருத்தலாம். தலையால் நடப்போரைத் தட்டிக்கேட்பது எவ்வாறு" - என வழங்குவது நினைக. இதற்கு இவ்வாறன்றி "இறைவன் தனித்துணையாக நிற்றலினுல் செருக்குற்று விதிக்குமாருக ஒழுகினேன்" எனப் பொருள் கொண்டார் முன்னுரையாளர்களில் ஒருவர். செருக்கு ஆணவ மலத்தால் விளைவது. இறைவனின் தனித்துணை பெற்ருர்மாட்டு ஆணவமலம் வலி மடங்கி நிற்குமாதலின் செருக்கு விளைவிப்பதற்கு வாய்ப்பில்லை. ஆதலின் அஃதுரையன்று என ஒதுக்குக. "***வினைத்துணையேனை*** - நித்தியப் பொருளும் ஞான வடிவினனுமாகிய நீ எனக்குத் துணை செய்ய ஆயத்தமாக நிற்க உன்னை விட்டு, நுகர்ச்சியால் அழியக்கூடியதும் ஆகாமியத்தைத் தோற்றுவிப்பதும் சடப்பொருளுமாகிய வினையைத் துணையாகக் கொண்டேன்; என் அறியாமை இருந்தவாறு என்னே? என இரங்கியவாறு. ஈண்டு;

> *"சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்*
> *கபாய மொருநாளு மில்லை - உபாயம்*
> *இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்*
> *விதியே மதியாய் விடும்"*

(நல்வழி - 15)

- **எனும் ஔவைப் பிராட்டியார் வாக்கு நினைக.**

வினைத்துணை - என்புழித் **"*துணை*"** எனும் சொற்கு "இரண்டு" என்று பொருள்கொண்டு நல்வினை தீவினையாகிய இரு வினைக்கட்டு எனலுமொக்கும். ஈண்டு, "நல்வினை" என்றது பசுநல்வினையை.

விடுதி - உன் துணையை விட்டு வினையின் துணையை நாடினேன் என்பது காரணமாக என்னைக் கைவிட்டு விடுவாயோ? விடலாகாது.

ஆக்கையின் திண் வலைத்துயர் : ஆக்கையின் - ஆக்கை - உடம்பு. யாக்கை - ஆக்கை என்றாயிற்று. யானை - ஆனை; யாடு - ஆடு; யாறு - ஆறு; யாண்டு - ஆண்டு என்பன போலக் கொள்க. ***இன்*** - தவிர் வழிவந்த சாரியை. ***திண்வலைத்துயர்*** - உடம்பாகிய திண்மை மிக்க வலையில் படும் துன்பம். வேடர்கள் விலங்கு பறவைகளைப் பிடிக்க வலை முதலிய பொறிகளை வைப்பர். வலையில் வீழ்ந்த விலங்கு வலியதாயின் சிலசமயம் வலையை அறுத்துக் கொண்டு தப்பிவிடுவதும் உண்டு. ஆனால் உடம்பாகிய வலையில் சிக்கிய உயிர் மலபரிபாகம் பெற்று வீடு பேறெய்தும் வரை உடம்பினின்றும் தப்ப இயலாமை குறித்துத் ***திண்வலை*** என்றார். ***திண்மை*** - மிகுந்தவலிமை. ***துயர்*** - பிறவிகளில் நுகரும் வினைப்பயன்கள்.

தினைத்துணையேனும் பொறேன் - அத்துன்பத்தை ஒருகணப் போதும் பொறுக்கலாற்றேன். ***தினை*** - சிறுமை குறிக்கும் ஓரளவு. இச்சொல் அப்பொருளில் வருவதை;

> *"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாகக்*
> *கொள்வர் பயன்றெரி வார்"*
>
> (திருக்குறள் *104*)

என்ற பொய்யாமொழியில் "தினை", "பனை" யென்பன சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சில அளவை - என்று பரிமேலழகர் விளக்குவது காண்க. ஈண்டுக் கால அளவுகுறித்து நின்றது.

இத்திருப்பாடலில்; "உடலோடு கூடிய உலக வாழ்கையில் வரும் துயர் ஆற்றொணுக் கொடியது என்று வெறுத்துக் கூறப்படுதலின் **"*பிரபஞ்ச வைராக்கியம்*"** புலனாதல் காண்க.

144. வலைத்தலை மானன்ன நோக்கியர்
நோக்கின் வலையிற்பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதிகண்
டாய்வெண் மதியினொற்றைக்
கலைத்தலை யாய்கரு ணாகர
னேகயி லாயமென்னும்
மலைத்தலை வாமலை யாண்மண
வாளவென் வாழ்முதலே ௪௦

(இ - ள்)

வெண்திங்களின் ஒருகலை மட்டுமுள்ள பிறை நிலவைச் சூடிய சென்னியனே; அருளுக்கு இருப்பிடமே; கயிலை என்னும் மலையின் மன்னவனே; மலைமகளின் கணவனே; என் வாழ்க்கைக்கு மூலகாரணமானவனே; வலையிற்பட்ட மானின் விழிகளை ஒத்த கண்களுள்ள இளமகளிரின் பார்வையாகிய வலையிற் சிக்கிக் காமுற்றுத் திரிந்த சிறியேனை; விட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "வெண் மதியின் ஒற்றைக் கலைத்தலையாய்; கருணாகரனே; கயிலாயம் என்னும் மலைத்தலைவா; மலையாள் மணவாள; என் வாழ்முதலே; வலைத்தலை மான் அன்ன நோக்கியர்; நோக்கின் வலையில் பட்டு; மிலைத்து அலைந்தேனை; விடுதிகண்டாய்" - என்று அன்னுவயம் செய்துகொண்டு பொருள் காண்க.

வெண்மதியின் ஒற்றைக் கலைத்தலையாய் : ***வெண்மதி*** - வெண்ணிறமான திங்கள். இஃது இனச்சுட்டில்லாத பண்பு கொள் பெயர். அஃதாவது வெண்ணிறமன்றி வேறு வண்ணமுள்ள திங்கள் இன்று என்பது பொருள். ***வெண்மதி*** - என்பதை இரட்டுற மொழிதலாகக் கொண்டு "வெள்ளறிவினன்"; அஃதாவது அறிவிலி எனலுமொக்கும்; மேலே கந்தபுராணச் செய்யுளில் கருநிறம் கூறியதும் நினைக. கறுப்பு அறிவின்மையும் குறிக்கும். தக்கன் சாபத்தால் திங்கட்புத்தேள் அழியும்

நிலை எய்தினன். அவனைக்காத்துச் சாப விடுப்பருளியவன் சிவபெருமான். இவற்றையெல்லாம் புறக்கணித்து அவன் சிவபெருமானுக்கு எதிராகத் தக்கன் செய்த வேள்வியில் கலந்து கொண்டதே அவன் முதுக்குறைவின்மையைக் காட்டும். இறைவன் புகலடைந்தாரைப் புரப்பவனாதலின் ஈண்டு இச்சரிதம் நினைவூட்டினர்.

இறைவன், வெண் மதியின் ஒற்றைக்கலைத் தலைவனான வரலாறு முன்னம் 8 - ம் திருப்பாடல் உரையில் உரைத்தாம்.

கருணாகரனே - அருளுக்கு இருப்பிடமானவன். இதனால் இறைவன் குணமும், பிறையைச் சடையில் தரித்ததால் அக்குணத்தின் பயனாகிய அவன் செயலும் கூறினர். செயலை முன்னரும் அதற்குக் காரணமான குணத்தைப் பின்னரும் கூறிய நயம், செயலைக் கொண்டு குண உண்மையை உயிர்கள் உணரச் செய்யும் சிவபெருமானின் அளப்பரும் அருளைப் புலப்படச் செய்தற்காம். **ஆகரம்** - இருப்பிடம் சுதாகரம்; இரத்தினாகரம் என்பன நினைக.

கயிலாயம் என்னும் மலைத்தலைவா - கயிலை, சாயுச்சிய நிலை எய்தினோர் வீட்டின்பம் நுகரும் பேரின்ப நிலையம். அதை ஒரு மலையாகக் கொள்வர். முத்தியிலும் உயிர்கள் இறைவனுக்கு அடிமைகளாக நின்று இன்பம் துய்ப்பன. இறைவன் அவற்றுக்கு முத்தியின்பம் ஊட்டும் தலைவன். ஆதலின் அப்பேரின்ப நிலையத்தின் தலைவனானவன்.

மலையான் மணவாள : மலையான் - மலைமகள், "மலைமகள் மகனே" (திருமுருகாற்றுப்படை 263) இறைவன், இமயமலை அரசனின் திருமகளாகிய உமையம்மையை மணந்து போகமூர்த்தியாகவும் விளங்குகின்றான். அதனால் உயிர்கள் போகம் நுகர்ந்து வினைக்கழிவு பெற்று வீடுநோக்கி முன்னேறுகின்றன என்னும் உண்மைகள் நினைக. ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடி

பெண்பா லுகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ"

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் - 263)

- என்று நம் அடிகளே பின்னர் அருளுவது காண்க.

" போகியா யிருந்து யிர்க்குப்
போகத்தைப் புரித லோரார்
யோகியாய் யோக முத்தி
உதவுத லதுவு மோரார்
வேகியா னுற்போற் செய்த
வினையினை வீட்ட லோரா
ஊகியா மூட ரெல்லாம்
உம்பரி னொருவ னென்பர் "

(சிவஞான சித்தியார் சூ-1 - செய். 50)

-என வரும் ஞான சாத்திரமும் நினைக.

என் வாழ்முதலே - மரம் செடிகளுக்கு ஆதாரமாகக் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து நின்று தாங்குவன அவற்றின் வேர்கள். மண்ணை அகழ்ந்து காண்போர்க்கே அவை கட்புலனுவன. அவ்வாறே ஆன்ம கோடிகளின் வாழ்வுக்கு மூலகாரணமாயுள்ளவன் சிவபெருமானேயாவன். ஆயினும் முதிர் தவமில்லார் அவனை அறிவதிலர். அத்தவத்தில் வெற்றிபெற்ற நம் அடிகள் அவ்வுண்மையை அறிந்து அவனைத் தம் வாழ்முதலே என்ருர். ***முதல்*** - வேர்; கிழங்கு.

வலைத்தலைமான் அன்ன நோக்கியர் - மானின் கண்கள் இயல்பாகவே மருட்சியுடையன. அவ்விலங்கு வேடரின் வலையில் சிக்கிய ஞான்று மிகவும் மருண்ட விழிகளுள்ளனவாகும். அம்மருட்சி அச்சத்தால் எய்துவது." ***"மான் அன்ன"*** என்புழி மான் பொருளாகுபெயராய் நின்று மானின் விழிகளையுணர்த்தின. அவை இளமகளிரின் மருட்சியுடைய கண்களுக்கு உவமை. மருட்சி ஒரு பொருளைக் கண்டு அஞ்சுவதாலும் பிற கலக்கமுறச் செய்வதாலும் உண்டாகும். ஈண்டு வலையில்பட்ட மானின்

விழி அச்சத்தால் மருண்டன. மகளிர் விழி காமுகராகிய இளைஞரைக் கலக்கமுறச் செய்வதற்கு மருண்டன என்க. ***வலைத்தலை*** - என்புழி ***தலை*** - ஏழாம் வேற்றுமை உருபுப் பொருளில் நின்றது. ***நோக்கியர்*** - கண் என்னும் சினையடியாக வந்த பெயர் "திணிதோளன்"; "செங்குஞ்சியன்" என்பனபோலக் கொள்க. ஈண்டு; இளமகளிரை உணர்த்திற்று. ***நோக்கின் வலையில் பட்டு*** - பார்வையாகிய வலையில் அகப்பட்டு. ***நோக்கின்*** - "இன்" தவிர்வழி வந்த சாரியை, ***மிலைத்து அலைந்தேனை*** - ***மிலைத்தல்*** - ஈண்டு விலங்குகள் பறவைகள் போன்ற அஃறிணை உயிர்கள் காம மீதூரப்பட்ட போது எழுப்பும் ஒலிகுறித்து நின்றது. இளமகளிர் காமவலைப்பட்ட ஞான்று அஃறிணை உயிர்களைப் போன்று ஒழுகினேன் என்பது குறிப்பு. ***அலைந்தேனை*** என இறந்த காலத்திற் கூறியது தீய ஒழுக்கத்துக்கு இரங்கி அதனால் இறைவன் கைவிட்டு விடுவானோ என அஞ்சிய நிலை. ஈண்டுக் கூறியவை உலக மக்கள்மாட்டுக் கண்ட குற்றங்களை அருளுள்ளத்தால் நம் அடிகள் தம்மேலேற்றிக் கூறியனவாம். முன்னம் 44 - ம் பாடலுரையில் விளக்கியவை காண்க.

விடுதிகண்டாய் - கை விடலாகாது என்பதற்கான காரணம் முன்னம் 142 - ம் பாடல் உரையில் விரித்தாம்.

இத்திருப்பாடலில், "மகளிர்மாட்டு காமுற்றுத் திரியும் உலகவாழ்க்கை துன்பத்துக்கு வழிகோலும் என்று வெறுத்துரைத்தலின் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனாதல் காண்க.

145. முதலைச்செவ் வாய்ச்சியர் வேட்கைவெந்
நீரிற் கடிப்பமூழ்கி
விதலைச்செய் வேனை விடுதிகண்
டாய்விடக் கூன்மிடைந்த
சிதலைச்செய் காயம் பொறேன்சிவ
னேமுறை யோமுறையோ
திதலைச்செய் பூண்முலை மங்கைபங்
காவென் சிவகதியே சுக

(இ - ள்)

தேமல் படர்ந்து அணிகலன்கள் விளங்கும் கொங்கைகளுள்ள உமையம்மையை ஒருகூற்றில் கொண்டவனே; எனக்கு வீடுபேருக உள்ளவனே; காமமாகிய விருப்பம்மிகுந்த நீரில் முழுகி; சிவந்த வாயினையுடைய மகளிராகிய முதலைகள் கடிக்க, அதனுல் நடுக்கமுறும் சிறியேனைக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது); புலால் வாடை மிக்க இறைச்சி செறிந்த, பிணி விளைவிக்கும் உடலைத் தாங்கலாற்றேன்; சிவபெருமானே, (இவ்வுலக வாழ்வில் என்னை இருத்தல்) முறையாகுமா, முறையாகுமா;

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "திதலைச்செய் பூண்முலை மங்கைபங்கா; என் சிவகதியே; வேட்கை வெந்நீரில் மூழ்கிச்; செவ்வாய்ச்சியர் முதலை கடிப்ப; விதலைச் செய்வேனை; விடுதிகண்டாய் விடக்கு ஊன்மிடைந்த, சிதலைச் செய்காயம் பொறேன்; சிவனே முறையோ, முறையோ;" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

திதலைச் செய் பூண்முலை மங்கை பங்கா : திதலை - தேமல். இஃது இளமங்கையர் கொங்கைகளுக்கு அழகு செய்வது; இயற்கையில் அமைவது. ***பூண்*** - அணிகலன்கள். இவை செயற்கையாக அமைந்து அழகூட்டுவது. இங்குத் திதலை உமையம்மையின் மாரு இளமையையும், பூண் வழிபடும் அடியார்கள் அணிகலன் பூட்டி மகிழும் வழிபாட்டுறுப்பினையும் அம்மையின் அழியாத மங்கலத் தன்மையையும் குறித்து நின்றன. ***மங்கை பங்கா - மங்கை*** - ஈண்டுப் பேரருளின் உருவகமாக நின்று திருவருளின் மூலமே அப்பனை அடைதல் வேண்டும் என்னும் உண்மை உணர்த்திற்று.

என்சிவகதியே - சிவகதி - வீடுபேறு. இஃது எல்லாச் சமயத்தினருக்கும் பொருந்துமாயினும் ஈண்டுச் சிவநெறி இன்பத்தையே குறித்து நிற்றலின் ***என்*** - என்று அடைபுணர்த்தார். சிவகதி என்பது வீடுபேறு என்றபொருளில் பிற சமயத்தினரும் வழங்குவதைச் "சினவரன் றேவன் ***சிவகதி*** நாயகன்" என்று சிலப்பதிகாரம் (காதை 10 -வரி 18ல்) கூறுவதிற் காண்க.

வேட்கை வெம் நீரில் மூழ்கி - வேட்கை - விருப்பம். ஈண்டு மகளிர் பற்றிய விருப்பமாகிய காமம் குறித்து நின்றது. ***வெம் நீர்*** - கொடிய நீர். சுழற்சியும் ஆழமுமுள்ளதாகித் தன்னுள் வீழ்ந்தாரை முதலைகள் பற்றிக் கடித்து ஆழ்த்தி அழிக்கும் திறன்பற்றிக் காமம் கொடிய நீராயிற்று. ***வெம் நீர்*** - வெப்பம் பொருந்திய நீர் என்று உரைத்தாரும் உளர். வெப்பம் பொருந்திய நீரில் முதலைகள் வாழ்வதில்லையாதலின் அஃதுரையன்று என ஒதுக்குக. ***மூழ்குதல்*** - ஆழ்ந்து அழிதல்.

செவ்வாய்ச்சியர் முதலை கடிப்ப - சிவந்த வாயினையுடையோரும் முதலை போன்ற கொடியோருமாகிய காமம்மிகுந்த இளம்பெண்கள். முதலைகள் வாழ்வதற்கு மிகுந்த ஆழமுள்ள நீர்நிலைகள் தேவையாதலின் ஈண்டு இப்பெண்கள் நல்கும் காமமும் பேரளவுள்ளதாயிற்று. ***கடிப்ப*** - முதலைகள் தாம்பற்றிய உயிர்களை விடாது நீரில் ஆழ்த்திக் கடித்துத் துன்புறுத்திக் கொல்லும். இம்மகளிரும் தம் வயப்பட்டாரைக் கழிபெருங் காமத்தில் ஆழ்த்தி நோய் முதலியவற்றால் துன்புறுத்தி அழிப்பர். ***கடித்தல்*** - ஈண்டு நோய் முதலியவற்றாலும் பிறவற்றாலும் துன்புறுத்துதல். ***செவ்வாய்*** - சிவந்தவாய். இஃது இயல்பாகவே உள்ள உதடுகளின் வண்ணமும் மகளிர் ஒப்பனையால் செந்நிறம் தீட்டிக்கொண்ட உதடுகளும் குறித்தன. இவ்வண்ணம் காமுகராகிய இளைஞரை ஈர்ப்பது.

இனி இதற்கு இவ்வாறன்றி ***முதலை*** - என்பதற்குச் செந்நெட்டி என்று கொண்டு பண்பாகு பெயராகச் செந்நிறமுள்ள செந்நெட்டிப் பூவை குறித்தது என்றும் ***கடிப்ப*** என்றது கடியென்னும் உரிச் சொல்லடியாகப் பிறந்த வினைச்சொல்லாகக் கொண்டு "அச்சம் தோன்ற" எனவும் கொண்டு "செந்நெட்டிப் பூவைப் போன்று சிவந்த உதடுகளுள்ள மகளிரின் காமமாகிய கொடிய நீரில் அச்சங்கொண்டு மூழ்கி" - என உரைப்பினுமமையும்.

விதலைச் செய்வேனை : விதலை - நடுக்கம். ***விதலைச் செய்வேனை*** - நடுங்குகின்ற என்னை. காமத்தின் பெருக்கம், மகளிரின் விடாப்பற்று, அவர்தரும் நோய் முதலிய துன்பங்கள் ஆகியவை நடுக்கத்துக்குக் காரணமாயின. "விதலைச்செய்" "சிதலைச் செய்" தொகைகளிலும் சகர வொற்றுக்கள் வருதல் எதுகை நோக்கி வந்த விரித்தல் விகாரங்கள்.

வீடுதி கண்டாய் - என் கழிபெருங் காமமாகிய தகுதியின்மை நோக்கி விட்டு விடாதே.

விடக்கு ஊன் மிடைந்த - விடக்கு - புலால்வாடை. வேறு உயிர்களுக்கு உணவாகப் பயன்படும் புலால் எனலுமாம். முன்னம் சிவபுராணம் (84) - ல் ***விடக்கு*** - என்றதன் கீழுரைத்தவை காண்க. ***மிடைந்த*** - செறிந்துள்ள.

சிதலைச்செய் காயம் பொறேன் - சிதலை - கரையான். ஈண்டு நோய், காமம் முதலியன உடலைக் கரையான் போலச் சிறிது சிறிதாக அழிப்பதால் அவற்றைச் ***சிதல்*** என்றார். ***செய்*** - செய்யப்படுகின்ற. நோய் முதலியவற்றால் அழிக்கப்படுகின்ற ***பொறேன்*** - புலாலின் முடை நாற்றமும் நோய் காமம் முதலியன பற்றி அழிப்பதால் வரும் துன்பமும் தாங்கலாற்றேன்.

சிவனே முறையோ முறையோ : சிவன் - பேரின்பமாகிய மங்கலம் தருபவன். தமக்கு நேர்ந்துள்ள துன்பம் நீக்கிப் பேரின்பம் நல்கும் வண்ணம் ***சிவம்*** - என்ற சொல்லால் கூவி உடம்பொடு புணர்த்தார். ***முறையோ முறையோ*** - குடிமகன் ஒருவன் தனக்குப் பகை முதலியவற்றால் கடக்கலாற்றாத துன்பம் நேர்ந்துழி அரசனையடுத்து நீதிவழங்க விண்ணப்பம் செய்வன். அங்ஙனமே அழியும் மாலையதாகிய உடலோடு கூடி வாழ்தலில் நோய் முதலியவற்றால் நண்ணும் துன்பம் ஆற்றாமல், துன்ப நீக்கத்துடன் அழிவில் இன்பம் நல்கப் பேரரசனாகிய இறைவனிடம் அருணீதி கேட்டு முறையிட்டவாறு, ***முறையோ முறையோ*** என்ற அடுக்கு அவல மிகுதி குறித்து நின்றது.

இத்திருப்பாடலில் "விடக்கூன் மிடைந்த சிதலைசெய்காயம் பொறேன்" என்று உலக வாழ்க்கை வெறுக்கப்படுதலின் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனாதல் காண்க.

146. கதியடி யேற்குன் கழறந்
தருளவு மூன்கழியா

விதியடி யேனை விடுதிகண்
டாய்வெண் டலைமுழையிற்
பதியுடை வாளரப் பார்த்திறை
பைத்துச் சுருங்கவஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக்
குஞ்சடை மன்னவனே சஉ

(இ - ள்)

வெண்ணிறமுள்ள தலையின் துளையில் தங்கும் ஒளி பொருந்திய பாம்பு; (அண்மையிலுள்ள) திங்களைக் கண்டு சிறிது படம் விரித்துப் பின் அஞ்சிச் சுருக்கிக் கொள்ள; அதனைத் திங்கள் (கண்டு) அஞ்சிக் கங்கை நீரில் முழுகி மறையும் சடையுடைய அரசனே; தொண்டனாகிய எனக்கு நின் திருவடிப்புகலிடம் வழங்கியருளவும்; இவ்வூனுடலைப் போக்காமைக்கு ஏதுவாகிய; வாழ்வுடைய அடியேனை விட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "வெண்தலைமுழையில் பதியுடை வாள் அர; பார்த்து இறைபைத்து அஞ்சிச்சுருங்க; மதி பார்த்து அஞ்சி நெடு நீரில் குளித்து ஒளிக்கும் சடை மன்னவனே; அடியேற்கு உன்கழல் கதிதந்து அருளவும்; ஊன்கழியா; விதி அடியேனை; விடுதி கண்டாய்; - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

வெண்தலை முழையில் பதியுடை வாள் அர* - *வெண்தலை - தாருக வனத்து முனிவர்கள் ஏவிய நகுதலை. முன்னம் திருவண்டப்பகுதி (32)- ல் "கானப்புலியுரி அரையோன் ஆனவரலாறு" - என்றதன் கீழுரைத்தவை காண்க. ***முழை*** - துளை. தலையில் மூக்கு கண் முதலிய இருந்த இடங்களிலுள்ள வங்குகள். **பதியுடை** - தனக்குக் காவலாகப் பதுங்கி வாழ்தலையுடைய. ***பதிதல்*** - தங்குதல். ***பதி*** - முதனிலைத் தொழிற்பெயர். ***முழையில் பதியுடை*** - என்பதிலுள்ள **இல்** என்பதை ஏழாம் வேற்றுமை உருபாகக் கொண்டுரைத்தாம். இதற்கு இங்ஙனமின்றி **இப்பதி** என்று கூட்டி "வீட்டிடம்" தங்குமிடம் என்றுரைத்தார்

திரு. கா.சு. பிள்ளையவர்கள். ***வாள் அர*** - கொடிய பாம்பு; "கொலை செய்யும் பாம்பு" என்பர் கவியரசு அவர்கள். வாள் போன்று நீண்ட வடிவுடையதும்; ஒளியுடையதும் கொல்லக் கூடியதுமான பாம்பு என்றவாறு. வடிவும் பண்பும் தொழிலும் பற்றி வாள், பாம்புக்கு உவமையாயிற்று ***அரா***-என்பது "***அர***" எனக் குறுகிநின்றது. 139-ம் திருப்பாடலில் "***அர***"-என்றதன் கீழ்க் காட்டிய இலக்கண விதி காண்க.

பார்த்து இறை பைத்து அஞ்சிச் சுருங்க - ***பார்த்து*** - பாம்பு மதியைப் பார்த்து. ***இறை பைத்து*** - திங்கள் மேல் இயல்பாகக் கொண்ட பகைக் குணத்தால் சினமுற்று சிறிது படம் விரித்து. ***இறை*** - சிறிது. ***பைத்தல்*** - படம் விரித்தல். இச்சொல் இப்பொருளில் வருவதைப் "பைத்த பாம்பின் துத்தியேய்ப்ப" - எனவரும் பொருநராற்றுப் படைப் பகுதிக்கு "படம் விரித்த பாம்பினது பொறியை யொப்ப" - என நச்சினர்க்கினியர் உரை வகுப்பதாலறிக.

அஞ்சிச் சுருங்க - பாம்பு, திங்கள் மேல் இயல்பாகக் கொண்ட பகையுணர்வால் சினங்கொண்டு சிறிது படம் விரித்ததாயினும் திங்கள் சார்ந்து காவல் பெற்றுள்ள இடம் சிவபெருமானுதலின் காவலின் வலிமையை உணர்ந்து அச்சங்கொண்டு தன் படத்தைச் சுருக்கியது என்றவாறு. ***பார்த்து***-என்றது ஈண்டு "உணர்ந்து" என்றபொருளில் கொள்க. திங்களைப் பார்த்துச் சினங்கொண்ட பாம்பு திங்கள் பெற்றுள்ள காவலை உணர்த்து அஞ்சி எனப் ***பார்த்து*** என்பதை ஈரிடத்தும் வெவ்வேறு பொருளில் அமைத்துக் கொள்க. ***சுருங்க*** - சினத்தால் விரித்த தன் படத்தைச் சுருக்கிக் கொள்ள.

மதி நெடுநீரில் குளித்து ஒளிக்கும் சடை - ***மதி*** - நிலாத்துண்டம். "***பார்த்து***" "***அஞ்சி***" என்பவற்றை ஈண்டும் கூட்டி மதி, சினங் கொண்ட தன் பகையாகிய பாம்பைப் பார்த்து அச்சமுற்று என்க. நெடுநீரில் குளித்து ஒளிக்கும். ***நெடுநீர்*** - ஆழமும் அகலமும் கொண்ட கங்கையாறு. பாம்புக்கு அஞ்சிய பிறைமதி மூழ்கி ஒளிந்து கொள்ளத் தகுதியான இடம் என்றவாறு. ***குளித்து ஒளிக்கும்*** - ஆழமாக மூழ்கி மறைந்து கொள்ளும் ***சடை*** - கங்கையாகிய பேராற்றைத் தாங்கியுள்ள சடா மகுடம்.

மன்னவனே - நாட்டில் அமைதியாக வாழும் குடிமக்கள் வன்முறையாளரான தீயவர்களுக்கு அஞ்சுவர். அதன் காரணமாக நாட்டை ஆளும் வல்லரசைச் சரணடைவர். குடிமக்கள் மாட்டு மிகை செய்ய எழுந்த தீயவர்கள் குடிகளைக் காக்கும் அரசின் காவல் வலிமையையுணர்ந்து அச்சங்கொண்டு தலை மறைவாகி விடுவர். மண்ணுலக மன்னரின் சின்னம் மணிமுடி. ஈண்டு அருட்பேரரசனாகிய சிவபெருமானின் சின்னம் ஞானமாகிய சடை முடியாயிற்று.

அடியேற்கு உன்கழல் கதிதந்து அருளவும் - ***அடியேற்கு*** - ***அடியேன்*** - என் உடைமைகளை எல்லாம் உன் உடைமைகளாக உன் திருவடிகளில் சேர்த்துவிட்டு என் உயிரையும் உனக்கு அடிமையாக்கி விட்ட எனக்கு. ***உன் கழல்*** - உன் திருவடிகள் ***கதி*** - புகலிடம். ***தந்து அருளவும்*** - நீ வழங்கி அருள்செய்த பின்பும். இறைவன் திருவடி ஞானமயமானது. ***கதி***-கதியாக என ஆக்கம் வருவிக்க ***கழல்***-என்பதை வினை முதலாக்கி; "அது கதிதந்து அருளவும்" எனலுமாம்.

ஊன் கழியா - நீ அருளிய உன் திருவடிகளைப் பற்றிக்கொண்டு இந்த ஊனுடலை நீத்துவிடாத. இந்த உடம்பு பிராரத்த வினைநுகர்ச்சிக்காக வந்தது. அவ்வினை முற்றும் நுகர்ந்து கழிக்கப்பட்ட பின் இவ்வுடல் ஒரு நொடிப் பொழுது கூட நில்லாது. திருப்பெருந்துறையில் இறைவன் குரு வடிவில் வந்து நம் அடிகளுக்குத் திருவடி சூட்டிய பின்பும் தம் ஊனுடல் நீங்காமைக்குக் காரணம் தம் பிராரத்த வினை முற்றும் கழியாமையே என்று நம் அடிகள் கூறி இரங்குகின்றார். ஆயினும் இறைவன் அவரை இவ்வுலகில் நிறுத்தியது மாதவம் செய்த தென்திசை, திருவாசகம் முழுவதையும், பின்னர்த் திருக்கோவையாரையும் பெறவும்; பௌத்த சமயத்தை மறுத்துச் சிவநெறியை நிலை நாட்டவுமே என்பதைப் பின் சரித நிகழ்ச்சிகளால் அறியலாம்.

விதி அடியேனை - விதியின் வசப்பட அடியவனை; அஃதாவது மீதமுள்ள பிராரத்த வினையை முற்றும் நுகர்ந்து கழிக்கவுள்ள உன் அடிமையை.

விடுதிகண்டாய் - கழல் கதிதந்து அருளிய பின்பும்; அக்கழலைப்பற்ருது ஊனுடலையே பற்றிக்கொண்டுள்ள என் புன்மை கண்டு என்னைக் கைவிட்டு விடாதே.

இத்திருப்பாடலில் உடலோடு கூடிய உலக வாழ்க்கை உயிரின் நற்கதிக்குத் தடையாக உள்ளது என்று கூறப்படுதலின் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதல் காண்க.

147. மன்னவ னேயொன்று மாறறி
யாச்சிறி யேன்மகிழ்ச்சி
மின்னவ னேவிட் டிடுதிகண்
டாய்மிக்க வேதமெய்ந்நூல்
சொன்னவ னேசொற் கழிந்தவ
னேகழி யாத்தொழும்பர்
முன்னவ னேபின்னு மானவ
னேயிம் முழுதையுமே சரு

(இ - ள்)

சொல்லும் பொருளுமிக்க மறைகளையும் மெய்ம்மையான சிவாகமங்களையும் கூறியருளியவனே; சொற்களுக்கு எட்டாமல் அப்பாற் பட்டவனே; என்றும் நீங்காத தொண்டினையுடைய மெய்யடியார்களுக்கு முன் நிற்பவனே; அவர்க்கு ஆதரவாகப் பின் நிற்பவனும்; இவ்வெல்லாமும் ஆனவனே; நிலைபேறுடையவனே; நின்னொடு கலக்கும் வழியறியாத சிறியவனாகிய எனக்கு; ஆனந்த விளக்கமாகத் திகழ்பவனே; கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "மிக்க வேதம் மெய்ந்நூல் சொன்னவனே; சொற்கழிந்தவனே; கழியாத் தொழும்பர் முன்னவனே; பின்னும் இம் முழுதையும் ஆனவனே; மன்னவனே; ஒன்றும் ஆறு அறியாச் சிறியேன்; மகிழ்ச்சி மின்னவனே; விட்டிடுதி கண்டாய்"- என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

மிக்க வேதம் மெய்ந்நூல் சொன்னவனே : மிக்க வேதம் - பொருட்டெளிவு துணிய முயல்வார்க்கு நான்மறைகள் கலக்கம் செய்வனவாய்ச் சொற்பொருட் பெருக்கம் உடையனவாகும். இந்திரன் முதலிய தேவர்களுக்கு உபசாரமாகத் தலைமை கூறுவன. ஆதலின் ***மிக்க வேதம்*** என்றார். ***மெய்ந்நூல்*** - சிவாகமங்கள் மெய்ப்பொருளாகிய சிவபெருமான் ஒருவனுக்கே பரத்துவம் பகன்று பயில்வோருக்குத் தெளிவு தருவன. ஆதலின் ***மெய்ந்நூல்*** என்றார். சனகாதி முனிவர் நால்வரும் நெடுங்காலம் நான்மறைகளைப் பயின்று மெய்யுணர்வு எய்தாமையின் சிவபரஞ்சுடரை நண்ணிக் குறையிரப்ப, இறைவன் அவர்கட்குச் சிவாகமங்களை உபதேசம் செய்து மெய்ப் பொருளுண்மையைத் தெளிவுபடுத்தினான் என்று கந்தபுராணம் கூறுவது நினைக. அப்பகுதி;

"இருட்பெருங் கடலுள் யாமத்
தெறிமருத் திடைப்பட் டாங்குப்
*பொருட்பெருங் கடலாம் **வேதம்***
புடைதொறு மலைப்ப விந்நாள்
அருட்பெருங் கடலே எய்த்தே
***மமைந்தில துணர்வி** யாங்கண்*
மருட்பெருங் கடலின் நீங்கும்
வண்ணமொன் றருடி யென்றார்" (6)

"நந்திமுற் கடையைப் போற்ற
ஞானநா யகனு மண்ணல்
முந்துறை சனக னாதி
முனிவரர் தொழுது கேட்ப
அந்தமில் லாக மத்தின்
அரும்பத மூன்றுங் கூறப்
புந்திய தொடுங்கும் ஞான
போதகம் போதி யென்றார்." (10)

(கந்தபுராணம் - உற்பத்திக் காண்டம் - மேருப்படலம்)

இங்ஙனம் சனகாதியர் உபதேசம் பெற்றவை இறைவன் முன்பே அருளிச் செய்த சிவாகமங்களை, அவற்றின் பெயர்களும் முதன் முதல் உபதேசம் பெற்றவர்கள் பெயர்களும் முன்னம் "ஆகமமாகி நின் றண்ணிப்பான்" (சிவபுராணம் 4) என்றதன் கீழுரைத்தாம். ***சொன்னவனே*** - சிவாகமங்கள் இருபத்தெட்டும் காமிக முதலிய பேதந்தோன்ருது சூக்குமை வாக்குவடிவாய் நாததத்துவத்தில் நிற்கும்படி அருளிச் செய்தவன் சிவபெருமானே என்பதைச் சிவஞான மாபாடியம் சூத்திரம் 2. அதிகரணம் 2-ல் சிவதத்துவம் என்ற தலைப்பில் காண்க.

இனி நான்மறைகளையும் சிவபெருமானே அருளிச்செய்தான் என்புழி அவற்றின் பொருள்களைத் துணிய உதவுவனவாகிய; சிட்சை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம் என்னும் ஆறங்கங்களையும் அருளிச் செய்தான் என்றும் கொள்க. இவ்வுண்மைகளை;

திருச்சிற்றம்பலம்

"பாதம் விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே
வேதநான்கும் *பதினெட்டோ* ***டாறும்*** *விரித்தார்க்கிடம்*
தாதுவிண்ட மதுவுண்டு மிண்டிவரு வண்டினம்
கீதம் பாட மடமந்தி கேட்டுகளுங் கேதாரமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 2-114-2)

- எனவரும் பிள்ளையார் திருவாக்காலறிக.

சொற்கழிந்தவனே - ஈண்டுச் ***சொல்*** என்பது நூல் அளவையைக் குறிக்கும்; இறைவன் இயல்பை நூல்களின் வாயிலாக ஓராற்ருன் அறியலாமேயன்றி, ஒன்றியுணர்தலாகிய அனுபவம் எய்தலரிது. "நூலுணர் வுணரா நுண்ணியோன்" (திருவண்டப் பகுதி 49) என்ருர் முன்னரும். வாக்கைப் பாசஞானம் என்றும், மனத்தைப் பசுஞானம் என்றும் ஞான நூல்கள் நவிலும். ஆகலின் இறைவன் பாசஞான பசுஞானங்களுக்கு எட்டாதவன் என்றவாறு. ஈண்டு "ஊனக்கண்பாசம் உணராப்பதியை" என்னும் சிவஞான போதம் ஒன்பதாம் சூத்திரப் பகுதியாலும் "அவன் வாக்கு மனாதீத கோசரமாய் நிற்றலான்;" என்னும் அதன் உரைப்

பகுதியாலும் அறிக. இறைவன், சொல்லின் எல்லையைக் கடந்து நிற்பவன் என்பதைச் "சொற்கழிவு பாதமலர்" (164) என்று நம் அடிகளே பின்னர் அருளிச் செய்வதும், "வாசகாதீத மனோலய பஞ்சரனே" (திருவகுப்பு) என்று அருணகிரிநாதர் அருளியுள்ளதும் காண்க. "சொற்பதத்தார் சொற்பதமுங் கடந்து நின்ற சொலற்கரிய சூழலாய்" (திருமுறை-6-95-4) எனவரும் நம் அப்பர் சுவாமிகள் திருவாக்கும் நினைக.

கழியாத் தொழும்பர் முன்னவனே - தொழும்பர் - அடியார்கள். "ஏழைத் தொழும்பனேன்" (325) "தொழும்பாய்ப் பணி செய்வோம்" (163) எனப் பின்னரும் அருளிச் செய்தல் காண்க.

திருச்சிற்றம்பலம்

" *பெற்ற போழ்தும் பெறுத போழ்தும்*
பேணி யுங்கழ லேத்து வார்கள்
மற்றோர் பற்றிலர் என்றி ரங்கி
மதியு டையவர் செய்கை செய்வீர்
அற்ற போழ்து மலந்த போழ்தும்
ஆபற் காலத் தடிகே ளும்மை
ஒற்றி வைத்திங் குண்ண லாமோ
ஓண காந்தன் தளியு ளீரே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 7-5-3)

என்றதும் நினைக.

முன்னவனே - சிவநெறிச் செலவுடைய மெய்யன்பர்கட்டுச் சரியை முதலிய நெறிகள் படிமுறையாக அமைந்தவை. அப்படிகளில் ஏறி மேல் நிலையை எய்தச்செல்வார் இடையில் கவர்வழிகள் காணின் மயங்கி அவற்றிற் சென்று அலைப்புண்டு அழியாமல் முன்னின்று செந்நெறிகாட்டி அழைத்துச் செல்பவன்.

பின்னும் இம் முழுதையும் ஆனவனே - அவ்வாறு செந்நெறிச் செல்வார் படிகளில் கால்தவறிப் பக்கங்களிலோ கீழோ வீழ்ந்து உருண்டு

ஒழியாமல், அவர்களைப் பின்னின்றும் இரு பக்கங்களில் நின்றும் காத்து மேலுங்காப்பவன்.

இம்முழுதையும் - என்பதிலுள்ள சுட்டு முன்பின் என்பவற்றுடன் பக்கங்களையும் குறித்து நின்றது. இச்சுட்டின் ஈற்றில் நின்ற வகரமெய் மகரமெய்யாகத் திரிந்தது.

முழுதையும் - முன், பின், பக்கங்கள் ஆகிய எல்லாவற்றிலும் முழுமையாக நின்று காப்பவன். ***முழுதையும்*** - என்புழி ஐகாரம் சாரியை. ***ஆனவன்*** - எல்லாப் பக்கங்களிலும் காத்துய்ப்பவனுகி நின்றவன். ***மன்னவனே*** - நிலைபேறுடையவன். ***மன்னுதல்*** - நிலைபெறுதல், குணியாகிய நீ நிலைபேறுடையவன். ஆதலின் உன் குணமாகிய பேரருளும் நிலைபேறுடையது. அதன் நிறைவில் அடங்கியுள்ள நான் சிறுமையுடையவன்; அச்சிறுமைகண்டு என்னைப் புறத்தே தள்ளி விடுதல் பேரருளுக்கு இயல்பன்று என்பது குறிப்பு.

ஒன்றும் ஆறு அறியாச் சிறியேன் - நீ யாண்டும் நிறை பொருளாக நிலைத்துள்ளாய்; யான் உன் நிறைவுள் அடங்கியுள்ளேன். எனினும் நான் உன்னுடன் கலந்து விடுவதற்கான வழியை அறியாத சிறுமையுடையவன் என்றவாறு. ***ஒன்றுதல்***-பரமுத்தியடைதல் ***ஆறு***-வழி.

மாறு என்று பிரித்துக் "கைம்மாறு ஒன்றும் செய்வதற்கு அறியாச் சிறுமையுடையவன்" என்றுரைக்கவும் நின்றது.

மகிழ்ச்சி மின்னவனே - ஆனந்த விளக்கமாக உள்ளவனே. சாதனம் முற்றுப் பெற்றவழி ஆன்மாவுக்குப் பாச நீக்கமும் சிவப்பேறும் நண்ணும். இருள் நீங்கியதும் கண்ணுக்குப் பொருள் விளக்கம் எய்தும். பின், அப்பொருளில் அழுந்தி அறியும். அவ்வாறே பாசநீக்கத்தால் திருவருள் விளக்கம் உண்டாகும்; அதன்பின் சிவப்பேருகிய ஆனந்த விளக்கம் நிகழும். அது பேரின்ப நுகர்ச்சிக்கு உரியதாகும். அப்பேறு பரமுத்தியாகும். அந்த நுகர்ச்சி பரமுத்தி எய்தாத நிலையிலும் கிட்டும் என்பதை 30-ம் பாடலுரையில் எடுத்தாண்ட பெரியபுராணச் செய்யுளாலறிக. ***மின்னவனே*** - திருப்பெருந்துறையில் குருவடிவில் வந்து எனக்குத் திருவடி தீட்சை நல்கினுய். அப்பொழுது நான் ஆனந்த விளக்கம்

பெற்றேன்; அதன் பின் நீ என்னை விட்டு மின்னலைப் போன்று விரைவில் மறைந்து விட்டாய்; நான் பெற்ற ஆனந்தானுபவமும் மின்னலை ஒத்து மறைந்து விட்டது என்றவாறு. மகிழ்ச்சியைத்தரும் மின்போன்ற உமையம்மையை உடையவனே எனலுமாம்.

விட்டிடுதி கண்டாய் - நான் ஆனந்தானுபவத்துக்குத் தகுதியற்ற சிறுமையுடையவன் என்று கருதி என்னைக் கைவிட்டு விடலாகாது. என்றவாறு.

இத்திருப்பாடலில் ஒன்றுமாறறியாச் சிறுமைக்கு ஏது உலகப்பற்றென்பதும் அது வெறுத்து ஒதுக்கத் தக்கதென்பதும் பெறப்படுதலின் "***பிரபஞ்ச வைராக்கியம்***" புலனுதல் காண்க.

148. முழுதயில் வேற்கண் ணியரென்னு
மூரித் தழன்முழுகும்
விழுதனை யேனை விடுதிகண்
டாய்நின் வெறிமலர்த்தாள்
தொழுதுசெல் வானத் தொழும்பரிற்
கூட்டிடு சோத்தெம்பிரான்
பழுதுசெய் வேனை விடேலுடை
யாயுன்னைப் பாடுவனே *சச*

(இ - ள்)

எங்கள் தலைவனே! கூரிய வேலை முழுவதும் ஒத்த விழிகளுள்ள மகளிராகிய காட்டுத் தீயில் அமிழ்ந்து போகும்; உறைந்த நெய்யைப் போன்ற சிறியவனை; விட்டு விடுவாயோ; எல்லாஉலகங்களையும் உன் உடைமையாகவும் எல்லா உயிர்களையும் உன் அடிமைகளாகவும் கொண்டுள்ளவனே; நின்னைத் துதித்துப் பாடுவேன்; (அதனுல்) குற்றமே செய்கின்ற என்னைக் கைவிடலாகாது; வணக்கம்; நறுமணம் நிறைந்த தாமரை மலர்போன்ற நின் திருவடிகளை; வணங்கிச் சிற்பரவெளிநோக்கிச் செல்கின்ற தொண்டர்களுடன் சேர்ப்பாயாக.

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "எம்பிரான் முழுதும் அயில்வேல் கண்ணியர் என்னும் மூரித்தழல் முழுகும் விழுது அனையேனை விடுதிகண்டாய்; உடையாய்; உன்னைப் பாடுவன்; பழுது செய்வேனை விடேல்; சோத்து; நின் வெறி மலர்த்தாள்; தொழுவானம் செல் தொழும்பரிற் கூட்டிடு" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

முழுதும் அயில்வேல் கண்ணியர் என்னும் மூரித்தழல் முழுகும் - ***முழுதும் அயில்வேல்*** - கூரியவேற்படையை முழுவதும் ஒத்த. ***முழுது*** - முழுதும் என்பதிலுள்ள உம்மை தொகுத்தலாயிற்று. "ஒத்த" என்னும் உவம உருபு விரித்துக்கொள்க. வேற்படை இளமகளிர் கண்களை முழுவதும் ஒத்தலாவது, வேல் கூர்மையுடையதாய் நஞ்சுபூசப்பட்டு எய்யப்பட்டாரை பிழையாது கொல்வது. கண்ணும் கூரியதாய், காமநஞ்சு விரவியதாய், சென்று தாக்கிய காமுகர் உள்ளத்தை உய்ய விடாது அழிப்பது. உவமம்; வண்ணம், வடிவு, பயன் இவற்றுள் ஒன்றுனும் பலவற்றுனும் உரைக்கப்படும். வேலும் கண்ணும் கடை சிவந்துள்ள வண்ணத்தாலும், இலைபோன்று அகன்று கடை குறுகி கூர்மையாயுள்ள வடிவாலும், எய்யப்பட்டாரை வருத்தி அழிக்கும் பயனாலும் ஒத்திருத்தல் காண்க. ***அயில்*** - கூர்மை. மகளிரின் கடைக்கண் ஆற்றல் குறித்து நின்றது. முன்னரும், "கூர்த்த நயனக் கொள்ளை" (போற்றித் திருவகவல் 35) என்றது நினைக. ***மூரித்தழல்*** - வலிமை பொருந்திய பெரிய நெருப்பு. ஈண்டுக் காட்டுத்தீயைக் குறித்து நின்றது. கண்ணியர் என்னும் காட்டுத் தீ என்றவாறு. ***முழுகும்*** - காட்டுத்தீயில் மூழ்கிவிட்ட. ***முழுதும் அயில் மூரித்தழல்*** - என்று கூட்டி, சார்ந்த பொருள் முழுவதையும் உண்ணும் காட்டுத்தீ எனலுமாம். ***அயிலுதல்*** - உண்ணல். ***கண்ணியர்*** - சினையாகு பெயராய் மகளிர்மாட்டுள்ள காமம் குறித்தது.

தழல் - நெருப்பு. ஈண்டுக் காமம் குறித்து நின்றது. பௌதிக நெருப்பு சடப் பொருள்களையே எரிக்கும். நீரில் மூழ்கியும் நெடுந்தொலைவு விலகிச் சென்றும் அந்நெருப்பினின்றும் தப்பலாம். ஆனால் ஆன்ம நற்குணங்கள் அனைத்தையும் அழிக்கும் காமத் தீயினின்றும் அவ்வாறு தப்ப இயலாது என்பதுணர்க.✽

✽ *ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு*
நீருட் குளித்து முயலாகு - நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமே குன்றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும் (நாலடியார் 90)

விழுது அனையேனை : விழுது - உறைந்த நெய். காட்டுத்தீயில் அமிழ்ந்த விழுதுநெய் போன்று உடனே அழியும் என்னை. ***விழுது*** - வெண்ணெய் என்று கொண்டனர் முன்னுரையாளரில் சிலர். வெண்ணெயில் நீரும் மோரின் பகுதியும் கலந்திருக்கும். எனவே வெண்ணெய் நெருப்பில் வீழ்ந்தால் அதன் நீர் முதலிய பகுதிகள் ஆவியாக மாறிப் பின் வெண்ணெய் உருகி நெய்யாக மாறச் சிறிது காலம் தாழ்க்கும் ஆனால் முன்பே உருகி நெய்யான பின் குளிர்ச்சியால் உறைந்துள்ள விழுது நெய், நெருப்பில் வீழ்ந்த உடனே விரைந்து உருகி அழியும் என்பது நினைக. மூழ்கும் பொருள் சிறிதாகவும் அதற்கு இடனாகிய பொருள் பெரிதாகவும் இருத்தல் இயல்பு. ஆதலின் சிறிதளவு உறைநெய் பெருங்காட்டுத் தீயில் மூழ்குதல் உயிர் உய்வகையின்றி காமத்தால் அழிவது குறித்து நின்றது.

விடுதி கண்டாய் - இங்ஙனம் காமம் முதலியவற்றால் அழியும் என்னைக் கைவிட்டு விடாதே.

உடையாய் - நான் உன் அடிமைகளுள் ஒருவனாதலின் என் அழிவு உனக்கே இழப்பாகும் ஆதலின் கைவிட்டு விடாதே என்று காப்பதற்கான காரணம் நுதலியவாறு.

உன்னைப் பாடுவன் - காமம் முதலிய குறைகள் நிறைந்திருப்பினும் உன் பொருள்சேர் புகழை நற்றமிழில் அமைத்து இசையாகப் பாடி மகிழ்வேன். அது மொழித் தொண்டாயிற்று. அவ்வாறு பாடுங்கால் என் உள்ளம் உருகி நீ அதில் கோயில் கொள்வாய். அது மனத்தாலான தொண்டாயிற்று. அத்தகைய ஆனந்த நிலையில் என்னை மறந்து நின் திருமுன் ஆடுவேன். அஃது உடம்பாலான தொண்டாயிற்று. இங்ஙனம் முக்கரணங்களும் உன் தொழும்பில் நிற்றலின் நீ என்பாலணைவாய், அப்பொழுது என் காமம் முதலிய பழுதுகள் நீங்கி ஒழியும். அந்நிலை நீ என்னைக் கைவிடாமைக்குக் காரணமாகும் என்றவாறு. ***பாடுவனே*** - என்பதில் உள்ள ஏகாரத்தைப் பிரித்து ***உன்னை*** என்பதுடன் புணர்த்து ***"உன்னையே பாடுவன்"*** எனப் பிரிநிலைப் பொருளில் உரைப்பினுமொக்கும். ஏகநாயக் வழிபாடு குறித்தவாறு. ***பாடுவனே*** - பாடேன் என எதிர்மறை குறித்த வினாவாகக் கொண்டு உரை வகுத்தாரும் உண்டு.

பழுது செய்வேனை விடேல் - பழுது - குற்றம்; அது மகளிர் காமத்தில் மூழ்கி அழியும் நிலை. ***விடேல்*** - அக்குற்றம் கருதி என்னைக் கைவிட்டு விடாதே. அஃதுன் பேரருளுடைமைக்கு இயல்பன்று என்பது குறிப்பு.

சோத்து - உயர்ந்தவனுக்குத் தாழ்ந்தவன் செய்யும் வணக்கம் ***சோத்தம்.*** அஃதீண்டு ஈறுகெட்டுச் ***சோத்து*** - எனநின்றது. "சோத்தெம் பிரானென்று சொல்லிச் சொல்லி" (202) என்று பின்னரும் அருளுவது காண்க. ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

" நாத்தா னுமுனைப் பாடலன் றிநவி லாதெனுச்
சோத்தென்று *தேவர் தொழநின்ற சுந்தரச் சோதியாய்*
பூத்தாழ் சடையாய் புக்கொளி யூரவி னுசியே
கூத்தா வுனக்குநா னுட்பட்ட குற்றமுங் குற்றமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 7-92-6)

நின் வெறிமலர்த்தாள் - புறத்தே உலக மக்களின் ஐம்புல நுகர்ச்சிக்கு உலகம் பற்றுக்கோடாதல் போல, மெய்யடியார்க்கு அகத்தே சிவாகாரமாக நிகழும் நுகர்ச்சிக்கு இறைவன் திருவடி பற்றுக் கோடாகும். அது தாமரை மலராக உருவகம் செய்யப்பட்டது. நறுமணம் நிறைந்த மலர் என்றதனால் நாற்றமும், அம்மலர் தேன் கொண்டுள்ளதால் சுவையும், மென்மைத் தன்மையால் ஊறும், சிவானந்தமாகிய தேனை உண்ணவரும் மெய்யடியார்களின் துதியிசையால் ஓசையும், வண்ணத்தால் ஒளியும் உடைமையின் ஐம்புலன் நுகர்ச்சிக்கு நிலைக்களனுதல் அறிக. ***வெறி*** - நறுமணம்.

தொழுது வானம் செல் தொழும்பரில் கூட்டிடு - தொழுது - உன்னைத் தொழுததன் பயனுக. வினையெச்சம் காரணப் பொருட்டாகும். ***வானம் செல்*** - நுண்ணிய ஞானப் பெருவெளியை நோக்கிச் செல்கின்ற. ***வானம்*** - நுண்ணிய ஞானப்பெருவெளி. ***செல்*** - செல்கின்ற. முதனிலைத் தொழிற் பெயர். இதை திருப்பெருந்துறையில் பொய்கை நடுவில் தோன்றிய ஒளியில் மூழ்கி வீடுபேறுற்ற அடியவர் என்றுரைத்தாரும்

உண்டு. அவர்கள் முன்பே சாயுச்சிய நிலையை எய்திவிட்டனர். ஆதலின் அவர்கள் கூட்டமாக இருத்தலும் நம் அடிகள் அவர்களுடன் கூடுவதும் இன்மையால் அஃதுரையன்று என விலக்குக. **வானத்தொழும்பர்** என்பதை **வான் நற்றெரும்பர்** - வான் செல்லும் நல்ல அடியார்கள். நான் அவ்வாறு நல் தொழும்பன் அல்லேன். நீ என்னை அவர்களுடன் கூட்டினுல் நானும் நற்றெழும்பனுவேன் எனலுமொக்கும்.

தொழும்பர் - தொண்டர்கள். ஈண்டு பாடல் 100 - உரையில் எடுத்தாண்ட பராபரக் கண்ணி (155) நினைக. ***"தொழுது செல் வானத் தொழும்பரில் கூட்டிடு"*** என்பதை "தொழுது செல்வான் அத்தொழும்பரில் கூட்டிடு" என்று பிரித்துக்கூட்டி "நின் திருவடிகளைத் தொழுது செல்லும் பொருட்டு அத்தொண்டர்களும் கூட்டுக" என உரைத்தலு மொக்கும்.

இத்திருப்பாடலில் மகளிர் நல்கும் காம வெள்ளத்தில் திளைத்தல் சிற்பர வெளிநோக்கிச் செல்லும் செந்நெறிச் செலவுக்குத் தடையாதல் குறித்து வெறுக்கப்படுதலின், ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதலறிக.

149. பாடிற்றி லேன்பணி யேன்மணி
நீயொளித் தாய்க்குப் பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண்
டாய்வியந் தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவ னெவ்விடத்
தானெவர் கண்டனரென்
ருேடிற்றி லேன்கிடந் துள்ளுரு
கேனின் றுழைத்தனனே. சரு

(இ - ள்)

மாணிக்கமணி போன்றவனே! நின்னைப் பாடினேனல்லேன்; வணங்கினேனல்லேன்; காட்சியளித்து நீ மறைந்ததன் காரணமாகப் பச்சிறைச்சிப் பிண்டமாகிய இவ்வுடலை ஒழிக்காத என்னைக் கைவிட்டு விடுவாயோ; அப்பொழுதே வியப்புற்றுச் சிவபெருமான் எங்குள்ளான் என்று கதறித் தேடினேனல்லேன்; அவனை யாவர் பார்த்தனர் என்று

வினவிக் கொண்டு ஓடினேனல்லேன்; ஓய்ந்து செயலற்று வீழ்ந்து நெஞ்சம் உருகினேனல்லேன்; வீணாக இருந்து உலக வாழ்க்கை குறித்து உழைக்கலானேன்.

(வி - ரை)

இத்திருப்பாடலை "மணி! பாடிற்றிலேன் பணியேன்; நீ ஒளித்தாய்க்குப் பச்சூன் வீடிற்றிலேனை விடுதி கண்டாய்; ஆங்கு வியந்து சிவன் எவ்விடத்தான் என்று அலறித் தேடிற்றிலேன்; எவர் கண்டனர் என்று ஓடிற்றிலேன்; கிடந்து உள்உருகேன்; நின்று உழைத்தனனே"-என்று அன்னுவயம் செய்துகொண்டு பொருள் காண்க.

மணி - இறைவன் ஞானாசிரியனாக எழுந்தருளி நம் அடிகளை ஆட்கொண்டஞான்று, அவன் திருமேனி வண்ணம் செம்மணி போன்று ஒளி வீசியதை நினைந்து ஈண்டு ***மணி!*** என்று விளித்தார். மணி போன்றவனை மணி என்றது உருவகம். கண்மணியனையான் எனலு மொக்கும்.

இதனை,

திருச்சிற்றம்பலம்

"திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேயென் னுறவேயென் னூனே யூனின்
உள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
*கருவேயென் கற்பகமே **கண்ணே கண்ணிற்***
***கருமணியே** மணியாடு பாவாய் காவாய்*
அருவாய வல்வினைநோ யடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையு மமர ரேறே."

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-47-1)

- எனவரும் நம் அரசுகள் திருவாக்கிற் காண்க.

பாடிற்றிலேன் பணியேன் - இறைவனை மன மொழி மெய்களால் முறையே தியானம் செய்தலும் இசைபாடித் துதித்தலும், வணங்குதலும்

நிகழ்த்தற்பாலன. இவற்றில் ஒன்றையுங்கூட நான் செய்யாத நிலையில் நீ ஞானசிரியனாக எழுந்தருளி ஆட்கொண்டாய். அவ்வாறு நீ என் கண்முன் நின்ற ஞான்று, நான் பாடுதலும், பணிதலும் செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்திலேன் என்றார். ஞானசிரியனைக் கண்டதுமே நம் அடிகள் மனமுருகிப் பாடிப் பணிந்தார் என்பது சரிதம். ஆனால் நம் அடிகள் இவ்வாறு எதிர் மறையாகக் கூறியது அயரா அன்பின் மிகுதியாலாம். பின்னரும் "நான் தனக் கன்பின்மை நானுந் தானுமறிவோம்" *(227)* என்றருளிச் செய்தல் காண்க.

பாடிற்றிலேன் - பாடேன், பாடு - பகுதி, ஏன் - விகுதி; இல் - எதிர்மறை இடைநிலை. "பாடினேன் அல்லேன்" என்பது பொருள். இவ்வாறே, "***வீடிற்றிலேன்***"; "***தேடிற்றிலேன்***"; "***ஓடிற்றிலேன்***" என்பவற்றுக்கும் கொள்க. இது திருவாசகத்திற் காணும் மிக அரிய சொல்லாட்சிகளுள் ஒன்று.

நீ ஒளித்தாய்க்கு - காட்சியளித்து மறைந்த உன் பொருட்டு; நீ மறைந்ததனால் உண்டான பிரிவாற்றாமை காரணமாக.

பச்ஊன் வீடிற்றிலேன் - இறந்தொழிந்தேனல்லேன் என்றவாறு. முன்னரும், "தீயில் வீழ்கிலேன்; திண்வரை யுருள்கிலேன்; செழுங்கடல் புகுவேனே" *(43)* என்றும், "நெருப்புமுண்டு; நீருமுண்டு யானுமுண் டிருந்ததுண்டு" *(84)* - என்று அருளியவையும் ஆண்டுரைத்தவையும் காண்க. ***பச்ஊன்*** - கொழுத்த உடம்பு. ***ஊன்*** - தசை . இஃது உடம்பின் காரணமாகிய சப்த தாதுக்களில் ஒன்று. ஈண்டு அதன் காரியமாகிய உடம்பை உணர்த்தி நின்றது. ஆதலின் காரண ஆகுபெயர். உயிருடன் கூடியுள்ள உடம்பு. உயிர் தங்கியுள்ள உடம்பில் இடைவிடாது குருதி ஓட்டமும், உயிர்வளி இயக்கமும் நிகழ்ந்து கழிவுப் பொருட்களை வெளியேற்றித் தூய்மையாக வைத்திருக்கும். உயிர் நீங்கியதும் குருதி ஓட்டமும் உயிர்வளி இயக்கமும் நின்று விடுதலின் உடம்பு கெடத் தொடங்கும்; விரைவில் அழுகி ஒழியும்; அப்பொழுது அவ்வூன் பச்ஊனாக இராது. இழிந்த ஊன் பிண்டமாகும். சிவபெருமான் திருமேனி ஒளிமயமானது என்னும் உயர்வு தோன்ற அதை ***மணி*** எனவும்,

தம் உடம்பின் இறைச்சி ஊனுண்ணும் பறவைகள், விலங்குகளுக்கு உணவாகும் இழிவுள்ளது என்பது தோன்ற **பச்சூன்** - எனவும் அருளினர். செம்மேனி போன்ற உன் திருமேனியின் காட்சியை இழந்த பின்பும் நான் உயிர் வாழ்வது மட்டுமன்றி இழிந்த இந்த ஊனுடம்பைப் பேணுகின்றேனே என இரங்கியவாறு, **பச்சூனின்** இழிவை,

"இலைமான் பகழிச் சிலைமாண் இரீகிய
அன்பி லாடவ ரலைத்தலிற் பலருடன்
வம்பலர் தொலைந்த அருஞ்சுரக் கவலை
அழற் போற் செவிய சேவ லாட்டி
நிழலொடு கதிக்கும் நிணம்புரி முதுநரி
பச்சூன் கொள்ளை மாந்திவெய் துற்று"

(நற்றிணை - 352)

என்பதனுலுமறிக. ***வீடிற்றிலேன்*** - வீடிற்றிலேனுகிய என்னை, ***விடுதி கண்டாய்*** - நின் பிரிவாற்ருது இறந்தொழிந்தேனல்லேன்; அஃதின்றி இவ்வுடலையும் ஓம்பும் பற்றுள்ளேன் என்று என்னைக் கைவிட்டு விடலாகாது.

ஆங்கு வியந்து சிவன் எவ்விடத்தான் என்று அலறித் தேடிற்றிலேன் - ஆங்கு திருப்பெருந்துறையில் நீ என்னை விட்டுப் பிரிந்த அப்பொழுதே; என்று காலத்தை உணர்த்தி நின்றது. ***வியப்பு*** - புதுமை. ஒருவர் உருவக்காட்சி மறைவதாயின்; அவ்வுருவுடையார் தம்மைக் காண்பார்கண் காணுதவாறு, வேருேர் இடம் சென்று மறைதல் இயல்பு. ஈண்டு, ஞானசிரியன் நம் அடிகளுக்குக் காட்சி தந்த இடத்திலேயே அவர் கண்முன் கரந்தது புதுமையாயிற்று. இறைவன் திருக்கயிலை நோக்கிச் செல்லும் வழியில் தன்னைப் பின்தொடர்ந்த நம் அடிகளை ஓரிடத்தில் நிறுத்தி அவரைத் திரும்பிச் செல்லப் பணித்தான். ஆணையை ஏற்ற நம் அடிகள் திரும்பினர். பின்னர் அவனை அவர் காணவில்லை என்பது சரிதம். இந்நிகழ்ச்சியையே இவ்வாறு தம் கண்முன்பே மறைந்த வியப்பென்ருர். ***வியந்து*** - மருண்டு எனலுமாம். ***சிவன் எவ்விடத்தான் என்று*** - தாம் தேடும் ஞானசிரியனை பிறர் அறியக் கூறியபடியாம். அவன் எங்கும் நிறைந்துள்ளவன்; அவனை

"எவ்விடத்தான்" என ஓரிடம் குறித்து வினவியது பிரிவாற்ருமையால் நிகழ்ந்த துன்பமிகுதி குறித்தது. ***அலறித் தேடிற்றிலேன்*** - என் கண்முன் அவன் இன்மையிற் வேறு பல இடங்களிலும் தேட வேண்டுவது என் கடமையாக இருந்தும் அவ்வாறு செய்திலேன் என்ருர். "தேடுகின்றிலே தெருவுதோ றலேகிலே" *(35)* என்று முன்னரும் அருளியது நினேக. **என்று** - என்பதை ஈண்டும் புணர்த்துப் பொருள் காண்க.

எவர் கண்டனர் என்று ஓடிற்றிலேன் - "அவனே யாருங் கண்டீர்களோ" என்று வினவிக் கொண்டே நான் வேறு இடங்களுக்கு ஓடவில்லே. இறைவன் தன்னேப் பின்தொடர வேண்டாம் என்று நிறுத்தி நம் அடிகளே மீளச் சொன்னதால் அடிகள் மீண்டார்; ஞாஞசிரியன் காட்சி மறைந்தது. பின்னர்ப் பொய்கை நடுவில் ஒளி தோன்றும்வரை ஏனேய அடியார்களுடன் தங்கியிருந்து அவர்கள் மறைந்தபின் தலயாத்திரையாக தில்லே நண்ணும்படிப் பணித்தது இறைவன் கருணே. அதை ஏற்ற நம் அடிகளுக்கு இறைவனேத் தேடி அலேய வாய்ப்பில்லே. ஆனுல் அவ்வாறு வாய்ப்பின்மைக்குக் காரணம் தம் அன்பின்மையே என்று நம் அடிகள் கருதி வருந்துகின்ருர்.

கிடந்து உள் உருகேன் - கிடந்து - இறைவனேப் பல இடங்களில் ஓடித் தேடியும், எதிர்ப்பட்டாரிடம் உசாவியும் உடலுறுப்புக்களும், நாவும் சோர்வுற்றதனுல் மேலும் அம்முயற்சிகளில் ஈடுபட இயலாது செயலற்று வீழ்ந்து. ***கிடத்தல்*** - தொழிலின்றி வாளா இருத்தல். ***உருகேன்*** - தேடிய பொருளேத் தொடர்ந்து தேடியும், உசாவியும் காண இயலாது உடம்பும், வாக்கும் சோர்வுற்ற நிலேயில் முக்கரணங்களில் எஞ்சியுள்ள உள்ளம், பிரிந்த இறைவனேத் தேட இயலாமை குறித்து உருகி வருந்தும். அவ்வாறு உள்ளமும் உருகேன் என்ருர். முக்கரணங்களும் இறைவனேத் தேடும் பணியில் ஈடுபடாமை குறித்துக் கழிவிரக்கம் கொண்டமை குறித்தது.

நின்று உழைத்தனனே - நின்று - நிற்றல் - உடலில் உயிர் நிலே பெறப்பெறுதல். ***உழைத்தல்*** - வருந்தி முயலுதல். இஃது 'உழத்தல்' என்றும் வரும்.

"சுழன்று மேர்ப்பின்ன துலக மதனு
லுழந்து முழவே தலை"

(திருக்குறள் 1031)

என வருதல் காண்க.

"மேற்கூறிய அன்புரிமைச் செயல்களில் ஒன்றுகூட மேற்கொள்ளாது உயிர் வாழ்தற்பொருட்டு இவ்வுலக வாழ்வை நச்சி உடலை ஓம்புதற்கு வருந்தி முயலுகின்றேனே" என்று இரங்கியவாறு. முன்னரும் "ஊனி லாவியை யோம்புதற் பொருட்டினும் உண்டுடுத் திருந்தேனே" *(44)* என்றதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

இத்திருப்பாடலில் இறைவன் பற்றிய அன்புச் செயல்களில் ஈடுபடாமல் உலக வாழ்வில் நின்று உழைத்தலைக் குறித்து அச்செயல் வெறுக்கத்தக்கது என்று குறிப்பிடுவதால் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதல் காண்க.

150. உழைதரு நோக்கியர் கொங்கைப்
பலாப்பழத் தீயினொப்பாய்
விழைதரு வேனை விடுதிகண்
டாய்விடின் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி
மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபர னென்றென்
றறைவன் பழிப்பினையே சசுூ

(இ - ள்)

மானின் பார்வையை ஒத்த நோக்கினதாகிய மங்கையரின் கொங்கைகளைப் பலாப்பழத்தின்கண் மொய்க்கும் ஈயினைப் போல, விரும்புகின்ற சிறியேனைக் கைவிட்டு விடுவாயோ; அவ்வாறு கைவிடுவாயாயின் பணி செய்யும் பொழுது நேர்ந்த குற்றத்தால் பழிக்காற்றுது நஞ்சையுண்டவன்; என்றும் அது புறத்தார்க்குப் புலனுகும் வண்ணம் கண்டத்தில் காட்டுபவன் என்றும்; நற்குணங்கள் இல்லாதவன்

என்றும்; மக்கட்டன்மையன் என்றும்; குறைந்த அறிவினன் என்றும்; பழைய கள்ளே விற்கும் வெறுக்கத்தக்க அன்னியன் என்றும்; எப்பொழுதும் நினக்குப் பழிப்பினேயே கூறுவேன்.

(வி - ரை)

இத்திருப்பாடலை; ஆற்றெழுக்காகப் பொருள் கொள்க. அவ்வாறு கொள்ளுங்கால், ஈற்றடியிலுள்ள "அறைவன் பழிப்பினேயே" என்பதை மட்டும் "பழிப்பினேயே அறைவன்" என்று மாற்றிக்கொள்க.

உழைதரு நோக்கியர் கொங்கை - மானின் பார்வையை ஒத்த பார்வையுடைய இளமகளிரின் கொங்கைகள். ***உழை*** - மான். ஈண்டு மானின் பார்வை குறித்து நின்றது. ***தரு*** - உவம உருபு. ***நோக்கியர்*** - காமுகராகிய இளைஞரைக் கலக்கமுறச் செய்யும் மருண்ட பார்வையுடைய மகளிர். இதுபற்றி முன்னம் (144-ல்). ***"வலைத்தலை மான் அன்ன நோக்கியர்"***- என்றதன் கீழுரைத்தவை காண்க. போற்றித் திருவகவல் (35-ல்) "நயனக் கொள்ளே" என்றதன் கீழுரைத்தவையும் நினைக.

பலாப்பழத்து ஈயின் ஒப்பாய் விழை தருவேனை - கொங்கைகளை விழையும் தமக்குப் பிளந்த பலாப்பழத்தில் விரும்பி மொய்க்கும் ஈக்களை உவமை கூறினர். ஈக்கள், பலாப்பழத்தின் மணத்தால் கவரப்பட்டு, அப்பழத்தில் மொய்க்கும்; பின் அதன் சுவையில் திளைத்துப் பழத்தை உண்ணும்; பின்னர் அப்பழத்தின் பிசினில் ஒட்டிக் கொண்டு மீள இயலாது மடியும். அவ்வாறே காமுகர், 'மகளிரின் மருண்ட பார்வையால் கவரப்பட்டு, அவர்களைச் சார்ந்து இன்பம் நுகர்வர்; பின்னர், அவர்களிடமிருந்து மீள முடியாது அழிவர்' என்று விளக்கியவாறு காண்க.

ஒப்பாய் - அது போன்று, ***ஈயின்*** - ***இன்*** - இரண்டாம் வேற்றுமைப் பொருளில் வந்த சாரியை. உவமம், பொருள் இரண்டிலும் "பலாப் பழத்தின் கண்;" "கொங்கையின் கண்" என்று ஏழனுருபு விரித்துக்கொள்க. ***விழை தருவேனை*** - இங்ஙனம் விரைவில் அழிந்து என்னையும் அழிக்கும் புல நுகர்ச்சியை விரும்பும் சிறுமையுடைய என்னை,

விடுதி கண்டாய் - என் சிறுமை கண்டு கைவிட்டு விடுவாயோ? விடலாகாது.

விடின் - கைவிடுவாயாயின், அவ்வாறு கைவிடுவதற்குக் காரணம் என் சிறுமை இயல்பு என்று நீ கொண்டதையே உறுதி செய்யும் வகையில், நின்னைப் பற்றிய நிந்தைகளைப் பறைசாற்றுவேன் என்று கூறத் தொடங்குகின்றார்.

நம் அடிகள் திருவருளில் தோய்ந்து நனி பழுத்த தமிழ்ப்புலமை நடம்புரியும் செந்நாவினர்; புலவர்கள் நூலியற்றுழி அஃது அழகுடன் மிளிரச் சில உத்திகளைக் கையாள வேண்டும் என்று இலக்கண நூல்கள் இயம்புகின்றன. அவ்வுத்திகள் முப்பத்திரண்டு. அவற்றுள் ஒன்று "இரட்டுற மொழிதல்". அதைக் கையாண்டு ஈண்டு இறைவனைப் பழிக்கும் மொழிகள் அவனைப் பரசும் துதிகளாகவும் அமைக்கின்றார். இதை '*நிந்தாஸ்துதி* என்பர் வடநூலார். நிந்தைப் பொருளை மேலே பொழிப்புரையில் கூறினும்; விளக்கம் பின்னர் கூறுவாம். புகழ்ப் பொருள்களாவன "நீ, திருப்பாற்கடலில் தோன்றிய நஞ்சையுண்ட பேரருளாளன்; அந்நஞ்சை உமிழாமலும் விழுங்காமலும் கண்டத்தில் நிறுத்திய பேராற்றலுடையவன். மாயா காரியங்களாகிய முக்குணங்களில் ஒன்றுகூட உன்னைப் பற்றாது அவற்றுக்கு அப்பால் நிற்பவன்; மான்கன்றை இடக்கரத்தில் ஏந்தி அதன் அழிவாற்றலை அழித்தவன்; பிறை நிலாவை முடியில் தரித்து அதன் அழிவை நீக்கிக் காத்தவன்; மிகத் தொன்மையான பெரிய பரம்பொருள்" - என்பன.

வேலை நஞ்சு உண்மழை தருகண்டன் - தொழில் செய்யும் பொழுது அதில் நிகழ்ந்த வேலைக்குற்றத்தால் பழிக்கு ஆற்றாது நஞ்சுண்டவன். அதை மறைக்க முடியாது வெளியே பறைசாற்றல் மாணக் கழுத்தில் வெளியுலகம் காணும்படி வைத்தவன். ***நஞ்சுண்டன்*** - என்பது, கள்வர் இனத்தில் ஒரு பிரிவு என்பர் கவியரசு அவர்கள்; நிந்தைப் பொருள். ***வேலை*** - தொழில். ***மழைதரு கண்டம்*** - கார்மேகம் போன்ற கழுத்து; நீலகண்டம். திருப்பாற்கடலில் தோன்றிய நஞ்சை இறைவன் உண்டது அந்நஞ்சால் எல்லா உலகங்களும் அழியாது காக்கும் பேரருளுடைமையாலாம். இது துதிப் பொருள். ***வேலை*** -

திருப்பாற்கடல். ***மழைதரு கண்டன்*** - நஞ்சுண்ட செய்தியை மறைக்கலாற்ருது அனைவரும் காணக் கழுத்தில் நிறுத்தியது. இது நிந்தைப் பொருள். ஒரு பொருளை வாயிலிட்டால் ஒன்று, அதை உமிழ்ந்து விடவேண்டும் அல்லது வயிற்றுள் செல்லும்படி விழுங்கி விட வேண்டும். இரண்டுமின்றி அதைக் கழுத்திலேயே நிலையா இருத்துவது யாராலும் இயலாதது. இறைவன் அவ்வாறு நிறுத்தி நீலகண்டனுக நிற்கின்ருன். இது துதிப்பொருள். ***கண்டன்*** - என்பதை; ***நஞ்சுண்ட - கண்டன்; மழைதரு கண்டன்*** என ஈரிடத்தும் கூட்டுக. ***மழை*** - மேகம். ஈண்டுக் கார் மேகத்தை உணர்த்திற்று. கருமேகம் போன்ற நிறமுள்ள கண்டத்தையுடையவன். தரு - உவமைப் பொருளில் வந்தது, நிறம் பற்றிய உவமை. *குணமிலி* - நற்குணமில்லாதவன்; குணங்கெட்டவன் என்பது நிந்தைப் பொருள். சத்துவம் முதலிய மூன்று குணங்களும் குணதத்துவத்திலுள்ளவை; பிரகிருதி மாயையின் விருத்தியாவன. அவை, உயிர்களின் கன்மத்துக்கீடாக அமைந்து, சுக துக்க மோகங்களுக்கு ஏதுவாவன. இறைவன், ஆன்மாக்களுக்கு உள்ளனபோல் முக்குணங்களும் இல்லாதவன்; எனினும் ஒரு குணமும் இல்லாதவன் என்பது கருத்தன்று; இறைமைக் குணங்களாகிய எண்குணங்களும் உள்ளவன் என்றவாறு.

மானிடன் - மனிதன், பசு இனத்தைச் சேர்ந்தவன். தின்பதற்காக மானை அகப்படுத்திக் கொண்ட வேடன் என்பர் திரு. பாரதியாரவர்கள். இது நிந்தைப் பொருள். தாருகாவனத்து முனிவர்கள் தங்கள் அபிசார வேள்வியில் தோன்றிய மானை, இறைவனை அழிக்க ஏவினர். இறைவன் அதைத் தன் இடக்கரத்தில் ஏற்று அதன் அழிவாற்றலை அழித்தான். இது துதிப்பொருள். இஃது இறைவனின் நிக்கிரகத் தன்மையை உணர்த்திற்று. ***மானிடன்*** - மானை இடக்கரத்தில் கொண்டவன்; மான் போன்ற உமையம்மையைத் தன் இடப்பாகத்தில் கொண்டவன் எனலுமாம்.

தேய்மதியன் - அறிவு குறைந்தவன். இது நிந்தைப் பொருள். நிலாப்பிறையை அணிந்தவன். தக்கன் சாபத்தால் கலைகள் தேய்ந்து பிறைத்திங்களாக வந்து புகலுற்ற வெண்டிங்கள் செல்வனைச் சடையிற் சூடிக் கலைகள் வளரும் வண்ணம் அருளிக் காத்தவன். இது துதிப்பொருள். இறைவனின் அனுக்கிரகத் தன்மையை உணர்த்திற்று.

பழைதரு மாபரன் - கள்ளை விற்பனை செய்யும் வெறுக்கத்தக்க அன்னியன். *பழை* - கள்; *தரு* - விலைக்குத் தருகின்ற; *மா* - வெறுக்கத்தக்க. *மா* - வெறுப்பு என்பது சூடாமணி நிகண்டு. *பரன்* - அன்னியன். சிவஞான சித்தியாரில் "பரபக்கம்" என்பது பார்க்க. *மாஅபரன்* - மிகவும் கீழானவன் எனலுமாம். *பழைதரு மாபரன்*- மிகப் பழங்காலந்தொட்டே நமக்குப் பெரிய அன்னியன் என்பர் கவியரசு அவர்கள். இவை நிந்தைப் பொருள்கள். "The Mighty God gone wrong" என்றார் ஆங்கில மொழிபெயர்ப்பாளர். அவர் "*பழை*" என்ற சொல்லைப் "*பிழை*" என்று மயங்கியதால் வந்தது இப்பிழை. *பழைதரு மாபரன்* - மிகப் பழைமையான பெரிய கடவுள். *மாபரன்* - முழுமுதற் கடவுள். அனாதியான பெரிய மேலானவன் எனலுமாம். இஃது இறைவனின் முழுமுதற்றன்மையை உணர்த்திற்று.

மாபெரும் புலவர் பெருமக்கள் இவ்வாறு இரட்டுற மொழிதல் உத்தியில் இறைவனை நிந்தாஸ்துதியாக வழுத்துவதைத் தமிழிலக்கியங்களில் ஆங்காங்குக் கண்டின்புறலாம். ஈண்டு,

"மறையவ னரசன் செட்டிதன் மூதை
வயங்குநூற் சூத்திரன் புவனம்
பறைதரு நல்ல சங்கரன் வேடன்
பணிசிவன் விளங்குமுக் கணக்கன்
அறைசெயம் பட்ட னகமது புறத்தே
காலியாட் டரவமா ரிடையன்
பறையனு முன்ன ரானநீ யின்று
பள்ளனு னமைதெரிந் தேன்யான்"

(பேரூர்ப் புராணம் -பள்ளுப்படலம் 35)

என வருவது கண்டு சுவைக்க.

என்று என்று பழிப்பினையே அறைவன் - *என்று என்று* - என்ற இரண்டனுள் முன்னதை "மழைதரு கண்டன்" என்பது முதலிய ஒவ்வொன்றுடனும் இயைத்து எண்ணும்மை விரித்துக் கொள்க. பின்னுள்ளதில் முற்றும்மை தொக்கது "*என்றும் அறைவேன்*" என்றது. பதிப்பொருளாகிய நீயும் அழிவற்றவன். பசுப்பொருளாகிய நானும்

அழிவற்றவன். ஆகலின், இனி முடிவில்லாத காலம் அறைந்து கொண்டே இருப்பேன் என்றவாறு. *பழிப்பினையே* - மேற்கூறிய மொழிகள் நிந்தை, துதி இரண்டுக்குமொக்குமாயினும், நான் துதியை விட்டு உனக்கு நிந்தையான பொருளிலேயே அவற்றைக் கூறிவருவேன் என்றவாறு. ஏகாரம் பிரிநிலை. நம் அடிகள் இவ்வாறு கூறுவது சிவனடிமைத்திறத்தில் அவர் கொண்டுள்ள அழுத்தத்தினாலான உரிமை பற்றியாகும்.

மேற்குறித்த பேரூர்ப்புராணப்பாடல் கொங்குநாட்டுச் சிற்றிலக்கியங்களில் எதிரொலிப்பதைக் கீழே காணலாம்.

வள்ளியாம் பெயர்கொள் குறத்திக்கு வாய்த்ததொரு
மாமி சிவகாமி செம்பொன்
மாடத்தி மேடத்தி வலயத்தி மலையத்தி
வாணத்தி பாணத்தியோ
டெள்ளரும் வேதப் பறைச்சியம் பலவச்சி
யேகச்சி வேகச்சிசிற்
டைச்சி கைக்கொள்ளுமம் படைச்சியென் றிவ்வுலக
மேத்திப்பணிந்து தொழவு
முள்ளபடி வள்ளலோடள் ளிருட்புரை வேட
வுருவோ டுதிரி தந்துமிவ்
வுலகிலுள விழிகுலத் துருவெலாம் பெற்றுநின்
னுளத்தினிடை யமைய விலையோ
பள்ளியாய்ப் பண்ணையிடை நென்னாற்று நட்டிடும்
பரிசென்கொல் பகறியன்னாய்

பச்சிளஞ் சோலைதிக ழூச்சிதப் பேரைவளர்

பச்சை மரகத வல்லியே.

(பேரூர்ப் பச்சைநாயகியம்மை
ஆசிரியவிருத்தம் - வித்துவான் கந்தசாமி முதலியார்)

இத்திருப்பாடலில், "ஈயினெப்பாய் விழைதருவேன்" என்று திருவருட் பேற்றிற்குத் தடையாகவுள்ள உலக வாழ்க்கையை வெறுத்துக் கூறுதலின் "*பிரபஞ்ச வைராக்கியம்*" புலனுதல் காண்க.

151. பழிப்பினின் பாதப் பழந்தொழும்
பெய்தி விழப்பழித்து
விழித்திருந் தேனை விடுதிகண்
டாய்வெண் மணிப்பணிலங்
கொழித்துமந் தாரமந் தாகினி
நுந்தும்பந் தப்பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ்
சேர்தரு தாரவனே. சஎ

(இ - ள்)

முத்துக்களுள்ள சங்குகளைக் கொழித்து; சடையாகிய அணையின் பெருமையைச் சார்ந்து; மந்தார மலர்களை ஒதுக்கித் தள்ளும்; கங்கை என்னும் வரம்புள்ள நீர்நிலையில், நிலாத் துண்டமாகிய தோணி பொருந்திய; மாலையையுடையனே; பழியற்ற நின் திருவடிக்கண், தொன்மையான தொண்டு கொண்டு; பின்னர் அத்தொண்டு நழுவியதால், அத்திருவடியைப் பழித்து விழித்துக் கொண்டிருந்த சிறியேனைக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை, "வெண்மணிப் பணிலம் கொழித்து; பந்தப் பெருமை தழீஇ; மந்தாரம் நுந்தும், மந்தாகினிச் சிறைநீரில்; பிறைக்கலம் சேர்தரு தாரவனே; பழிப்பில் நின் பாதம் பழந்தொழும்பு

எய்தி; விழப்பழித்து விழித்திருந்தேனே; விடுதி கண்டாய்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

வெண்மணிப் பணிலம் கொழித்து: வெண்மணி - சிப்பியில் தோன்றும் நன்முத்துக்கள், அவை வெண்ணிறத்தன. ஈண்டுச் சிவப்பேறு குறித்து நின்றது. *பணிலம்* - சங்குகள்; ஈண்டுச் சிப்பிகளேயும் குறித்து நின்றது. இவை, இறைவன் இயல்பை உணர்த்தும் சிவஞானம் குறித்தன. *கொழித்து* - தெள்ளியெடுத்து. பக்குவப்பட்ட ஆன்மாக்களே மலபந்தங்களினின்றும் தெள்ளியெடுத்து வீடுபேறு நல்கும் சிவனருட் செயலேக் குறித்து நின்றது. கொழித்தெடுப்பது கங்கை. ஆறு, தன்னுள் வாழும் சங்கு, இப்பி, முத்து முதலியவற்றை கொழித்தல் இயல்பென்பது நினேக.

பந்தப் பெருமை தழீஇ - பந்தம் - அணே. *பெருமை* - அணேயின் பெருமையாவது, தான் தேக்கி நிறுத்தும் நீர்ப்பரப்பின் வலிமையைவிடப் பன்மடங்கு வலிமையுடன் நிற்றல். ஈண்டுக் கங்கையாகிய பெரு வெள்ளத்தைத் தேக்கி ஓர் பனித்துளி போல் தன்னுட் சிறைப்படுத்திய இறைவனின் சடையாகிய அணேயின் வலிமை பேசப்படுகின்றது. ஏனைய தேவர்கள் அனேவரும் கங்கையைத் தாங்கும் ஆற்றல் தங்களுக்கு இல்லேயென்று கூறிப் பகீரதனேச் சிவபெருமானிடம் ஆற்றுப்படுத்திய வரலாறு நினேக. *தழீஇ* - சார்ந்து. கங்கை சிவபெருமானின் சடையைச் சார்ந்து என்றவாறு. *தழீஇ* - என்னும் வினேயெச்சம் பற்றி வந்த அளபெடை எதுகை நோக்கித் தொக்கது செய்யுள் விகாரம். *பந்தப் பெருமை* என்பதற்குச் "சிவபெருமான் திருச்சடையின் தொடர்பு பெற்றிருக்கும் பெருமை" என்றுரைத்தாரும் உண்டு.

மந்தாரம் நுந்தும்: மந்தாரம் - இந்திரன் உலகிலுள்ள 'கற்பகம்' முதலிய ஐந்தருக்களுள் ஒன்று. மந்தாரமரம் ஈண்டு, முதலாகு பெயராக மந்தார மலர்களே உணர்த்திற்று. அம்மலர்கள் தேவர்கள், சிவவழிபாட்டிற் சொரிந்தவை. *நுந்துதல்* - ஒதுக்கி அப்புறப்படுத்தல். கங்கைவெள்ளம் தன்னுட்பட்ட மலர்களே ஒதுக்கும் இயல்பு நினேக. சிவ வழிபாட்டில் சாத்திய மலர்கள் பின்னர் நின்மாலியமாகக் களேயப்படுதல் நினேக.

மந்தாகினிச் சிறை நீரில் - மந்தாகினி - கங்கை நதி, இமயமலேயில் தவழ்ந்து வரும்பொழுது அது *மந்தாகினி* என்னும் பெயருடன் மிக

மெதுவாக வருகின்றது. *மந்தாகினி* - மந்த கதியில் வரும் நதி. பின்னர் "*அலக் நந்தா*" "*பாகீரதீ*" முதலிய நதிகளும், எண்ணற்ற நீழ்வீழ்ச்சிகளும் தன்னுடன் கலக்க, மிக்க வேகமுள்ள பெருநதியாக இறங்குகின்றது. இந்நிலையில், அது கங்கையென்னும் பெயர் பெறுகிறது. அதை "*வேக வதீ*" என்றும் கூறுவர். மிகவேகமாக ஓடும் நதியென்பது பொருள். ஈண்டு, இறைவன் சடைமுடியில் நிற்கும் அதன் முந்தைய நிலை குறிக்க *மந்தாகினி* என்ற பெயரால் குறித்தருளினர். *சிறை* - அணை. ஆற்றில் வரும் பெருவெள்ளத்தை அணைகளில் தடுத்து நிறுத்திக் கீழுள்ள ஊர்கள் நிலங்களுக்கு ஆண்டு முழுதும் பயன் நல்கும் வகையில் அளவுபடுத்துக் கால்வாய்களில் விடுதல் நினைக. அணை வெள்ளத்தைச் சிறைப்படுத்துதலின் அது "*சிறை*" என்று கூறப்பட்டது. இதனைச் "சிறைவான் புனல்" - (திருக்கோவையார் 20) என்று நம் அடிகளே பின்னர் அருளுவது காண்க.

நீரில் - சிவபெருமான் சடைமுடியில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ள கங்கையின் நீர்ப்பரப்பில்.

பிறைக்கலம் சேர்தரு தாரவனே - பிறையாகிய தோணி சேர்ந்திருக்கும் பெருமையுடையவனும், மாலையணிந்தவனுமாகிய சிவபெருமானே என்றவாறு. *பிறைக்கலம்* - பிறை நிலாவாகிய தோணி. பிறை, வளைந்து இரு கோடுகளும் அதன் நடுப்பகுதியை விடச் சிறியனவாய் உயர்ந்து நடுப்பகுதி அகன்று படகு போலத் தோன்றலின் அதைப் "*பிறைக்கலம்*" என்றார். மந்தாகினி நீர்த்தேக்கத்தில் 'பிறைக்கலம்' என்றது மிக அழகிய உருவக அணி. மந்தாகினி நீர்த் தேக்கம் இறைவன் திருவருட்பெருக்கையும், திங்கட் பிறைக்கலம் பாச நீக்கம் பெற்ற ஆன்மா திருவருளில் திளைத்து உலா வருவதையும் குறிப்பாலுணர்த்தி நின்றன. இவ்வருணனையை நம் அடிகள் முன்னரும் (130) "கங்கை பொங்கி வருநீர் மடுவுண் மலைச் சிறு தோணி வடிவின் வெள்ளைக் குருநீர் மதிபொதியுஞ்சடை" என்றருளியது நினைக. *தாரவனே* - மாலையையுடையவனே. *மாலை* - ஈண்டுக் கொன்றை மாலையைக் குறித்து நின்றது. அஃது இறைவனுக்கு அடையாள மாலையும், அடியவர்கள் வழிபாட்டிற் சூட்டிய மாலையுமாம்; கங்கையின் செருக்கடக்கிய வெற்றிமாலை யெனலுமொக்கும்.

பழிப்பு இல் நின் பாத பழந்தொழும்பு எய்தி - **பழிப்பு இல்** பழியற்ற. பழிக்கப்படா பாதம் எனலுமாம். அசட்டை செய்யவொண்ணுத பாதம் என்பர் கவியரசு அவர்கள். **பழம் தொழும்பு** நின் திருவடிக்கண் தொன்மையான தொண்டை அடைந்து. **பழம் தொழும்பு** - மிகவும் தொன்மையான அடிமைத்திறம்; இறைவன் அனுதி; ஆன்மாக்களும் அனுதி; அவர்கள் ஆண்டான்; அடிமைப் பண்புகளும் அனுதி. ஆகவே, **பழம் தொழும்பு** என்ருர். "என்றுநீ யன்றுநான் உன்னடிமை யல்லவோ" (சுகவாரி 7) என்று தாயுமான சுவாமிகள் கூறுவது காண்க. **தொழும்பு** - என்பதைத் தொழிலாகு பெயராகக் கொண்டு திருப்பெருந்துறையில் நின்திருவடிக்கண் தொன்மையான தொண்டு புரிந்திருந்த அடியவர் கூட்டத்தை எய்தி எனலுமொக்கும். இது நம் அடிகள் சரிதக் குறிப்புள்ள அகச்சான்ருதலும் காண்க.

விழப் பழித்து விழித்து இருந்தேனை - **விழ** - பின்னர் அத்தொண்டு நழுவியதால் இறைவன், உலக நலன் கருதி நம் அடிகளை இவ்வுலகில் நிறுத்தித் திருவுருக்கரந்ததால் அத்தொண்டு நழுவலாயிற்று. அதைத் தம் தீவினைப்பயன் என்று நம் அடிகள் கருதினுர். "உன் திருவடிகளை அசட்டை செய்தேன். அதனுல் அத்தொண்டு என் கைவிட்டுப் போயிற்று, நான் அதோகதியில் வீழ்ந்தேன்" என்பர் கவியரசு அவர்கள். இப்பொருளில் **பழிப்பில்** - என்றதில் **இல்** - ஏதுப்பொருளில் வந்து ஐந்தனுருபாகக் கொள்க. **பழித்து** - முற்பாட்டிற் கூறியாங்கு நின்னை, "வேலை நஞ்சுண் மழைதரு கண்டன்", "குணமிலி", "மானிடன்", "தேய்மதியன்", "பழைதரு மாபரன்" என்றெல்லாம் நிந்தித்து. **பழித்து** - "நின் திருவடித் தொண்டினின்றும் நழுவியதால் நான் என்னையே பழித்துக்கொண்டு" எனலுமொக்கும். **விழித்து இருந்தேனை** - ஏமாற்றத்தால் ஒன்றும் செய்ய இயாலாது இருந்த என்னை. **விழித்தல்** - ஏமாற்றத்தால் செய்வதறியாது பெரிதாக விழித்தல். இதைப் "பேழ்கணித்தல்" என்பர். "பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற் கரியன் பெருமானே" (609) என்று நம் அடிகளே பின்னர் அருளுவது காண்க. **இருத்தல்** - இழந்ததை மீண்டும் எப்படி எய்துவது என்று தெரியாமல் வாழ்தல்.

இப்பகுதிக்கு "அடியார்கள் உன்னை வீழ்ந்து வணங்குவர்; என் இளமையில் நான் அதனைக் கண்டு பழிப்புரை பகர்ந்து பயனின்றி

விழித்திருந்தேன்; அஃது அறியாதகாலத்து ஆற்றிய குற்றம்" என்றுர் - என உரைகண்டாரும் உண்டு. நம் அடிகளின் சரிதத்தில் இளமையில் அவ்வாறு வாழ்ந்தார் என்பதற்குச் சான்றுகளில்லே. எனவே அஃது உரையன்று என ஒதுக்குக.

இனி "*விழித்திருந்தேனே*" என்பதற்கு "Woke once more" என ஆங்கில மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்த்தார். அது பொருளன்மை வெளிப்படை.

விடுதிகண்டாய் - உன் திருவடித் தொண்டினின்றும் நழுவியதன் காரணமாகவும் உன்னே நிந்தித்ததன் காரணமாகவும் என்னேக் கைவிட்டு விடாதே. அஃது அருளுடைமைக்கு இயல்பன்று என்றவாறு.

இத்திருப்பாடலின்கண் "பழிப்பில் நின் பாதப் பழந்தொழும் பெய்தி விழப் பழித்திருந்தேன். அதற்கு உலகப் பற்றே காரணம்; ஆதலின் அது வெறுத்து ஒழிக்கற்பாற்று" என்பது போதரலின் "*பிரபஞ்ச வைராக்கியம்*" புலனுதலறிக.

152. தாரகை போலுந் தலேத்தலே
மாலேத் தழலரப் பூண்
வீரவென் றன்னே விடுதிகண்
டாய்விடி லென்னே மிக்கார்
ஆரடி யானென்னி னுத்தர
கோசமங் கைக்கரசின்
சீரடி யாரடி யானென்று
நின்னேச் சிரிப்பிப்பனே சஅ

(இ - ள்)

தலேயில் விண்மீன்களேப் போன்ற தலேமாலேகளேயும், நெருப்பையும், பாம்புகளாகிய அணிகலன்களேயும் கொண்ட தெய்வீக வீரனே; சிறியேனேக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது); கைவிட்டு விடுவாயாயின், சீலம் மிகுந்த சான்றேர்கள் என்னே நோக்கி, "நீ யாருக்கு அடியவன்?" என்று கேட்பராயின்; "திருவுத்தரகோசமங்கையில்

எழுந்தருளியுள்ள தெய்வீக அரசனுகிய சிவபெருமானின் சிறப்புப் பொருந்திய அடியவர்களுக்கு அடியவன் என்று கூறி, நின்னைக் குறித்து எள்ளி நகையாடச் செய்வேன்".

(வி - ரை)

இத்திருப்பாடலில், இரண்டாமடி ஈற்றில் உள்ள "என்னை மிக்கார்" என்பதை மட்டும் "மிக்கார் என்னை" என்று மாற்றிக் கொண்டு ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

தலை, தாரகை போலும் தலை மாலை - தலை - சிவபெருமானின் சென்னி. அதிற் சிரமாலையணிந்துள்ள கோலத்தைப் பாடுகின்றார். விண்மீன்களை மாலையாகத் தொடுத்து அணிந்திருப்பது போன்ற சிரமாலை. அஃது உலகெலாம் அழிந்த பேரூழிக்காலத்து நான்முகன் முதலியோர் மடிய அவர்கள் தலை ஓடுகளை எல்லாம் மாலையாகத் தொடுத்து இறைவன் சிரமாலையாக அணிந்துகொண்டது. அவ்வாறு அணிவது நான்முகன் முதலிய பெருந்தேவர்கள் பேரூழியில் ஒழிய, நித்தியப் பொருளாகிய தான் ஒருவனே முழுமுதல் என்பதைப் புனருற்பவத்தில் படைப்புக்கு வரும் உயிர்கள் உணர்ந்து, தன்னையடைந்து, வழிபட்டு உய்ய வேண்டும் என்ற பேரருளினுலாம். இவ்வுண்மையை, முன்னம் திருவண்டப் பகுதியில் (7-12) "வேதியன் தொகையொடு..........குழகன்" - என்றருளிய பகுதியிலும், அதன் கீழுரைத்தவற்றுள்ளும் காண்க.

"பரம னிவ்வகை யடுந்தொறு மடுந்தொறும் பலவாம்
*பிரம ஞதியோ ரென்பினைத் தரிக்குமப் **பெரியோர்***
சிரமெலாந் தொடுத்த ணியலா யணிந்திடுஞ் சிகைதன்
உரமு லாவுமுந் நூலென வேயணிந் துறையும்
ஆத லாற்றனை வியப்பதற் கன்றவை யணிதல்
*ஈத லாதொரு திறமுள தியாவரு **மெவர்க்கும்***
நாத னேயிவ னென்றுதன் பாங்கரே நண்ணித்
தீதெ லாமொரீஇ முத்திபெற் றுய்ந்திடுஞ் செயலே"

(கந்தபுராணம்: தட்ச காண்டம் ததீசியுத்தரப் படலம்-14)

என்பவையும் நினைக.

தலைமாலையணிதல் சிவவேடங்களுள் ஒன்று. இதனை,

திருச்சிற்றம்பலம்

"தலையே நீவணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய்" (திருமுறை 4-9-1)

"தலைக்குத்தலை மாலை யணிந்ததென்னே
சடைமேற் கங்கை வெள்ளந் தரித்ததென்னே
அலைக்கும்புலித் தோல்கொண் டசைத்த தென்னே
அதன்மேற்கத நாகங்கச் சார்ந்த தென்னே
மலைக்குநிக ரொப்பன வன்றிரைகள்
வலித்தெற்றி முழங்கி வலம்புரி கொண்
டலைக்குங்கட லங்கரை மேன்மகோதை
அணியார்பொழி லஞ்சைக் களத்தப்பனே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 7-4-1)

என்பவற்றுட் காண்க. இன்றும் எண்ணற்ற சிவநேசச் செல்வர்கள் உருத்திராக்கத்தாலான சிரமாலையணிந்து வழிபடுதல் பார்க்க.

தாரகை போலும் தலை - என்று கொண்டு "Thy Star like head" என்று மொழிபெயர்த்தார் ஆங்கில மொழிபெயர்ப்பாளர். பெருமானின் தலை சடாமகுடமுள்ளது. மழிக்கப்பட்டதன்று. ஆதலின் அது விண்மீன் போன்று விளங்குவதில்லை.

தலை என்பதை நகுதலையாகக் கொண்டு அதைச் சூழத் தலைமாலையணிந்துள்ளது தனித்து நிற்கும் துருவ நட்சத்திரத்தைச் சூழ்ந்து விண்மீன்கள் கூட்டமாக நிற்பது போன்றுள்ளது என்பர் சீகாழித் தாண்டவராயர்.

தழல் அரப்பூண் - தழல் - நெருப்பு. மிருத்தியுஞ்சய தியானத்தில் சிவபெருமான் சென்னியில் நெருப்பைத் தரித்திருப்பது கூறப்பட்டுள்ளது என்பது திரு.கா.சு. பிள்ளையவர்கள் உரைக்குறிப்பு.

தழல் என்பதை அரவுக்கு அடையாக்கித் தீயைப் போன்ற நஞ்சுள்ள பாம்பை அணியாகப் பூண்டவன் எனவுமொக்கும். நச்சரவைத் "தழல் நாகம்" என்பதை,

திருச்சிற்றம்பலம்

"தீயவிடந் தலைக்கொள்ளத் தெருமந்து செழுங்குருத்தைத்
தாயர்கரத் தினினீட்டித் தளர்ந்துதனைத் **தழனாகம்**
மேயபடி யுரைசெய்யான் விழக்கண்டு கெட்டொழிந்தேந்
தூயவரிங் கமுதுசெயத் தொடங்கா" ரென்றதுவொளித்தார்.

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் திருநாவுக்கரசு நாயனார் புராணம் - 206)

என்றதிற் காண்க.

இனித் தழல் என்பதை "நெருப்பு" என்றே கொண்டு "தாருகாவனத்து முனிவர்கள் செய்த வேள்வித் தீயில் வந்த பாம்புகள்" எனவுமொக்கும். இறைவன் அணிகலனாகப் பூண்ட நாகங்கள் இருவகை. திருமாலூர்தியாகிய கருடனுக்கு அஞ்சி இறைவனைச் சரணடைந்தவை ஒருவகை. அவை கொடுந்தன்மை ஒழிந்து சாந்தமுற்றன. தாருகாவனத்து முனிவர்கள் ஏவியவை மற்றொருவகை. அவை வெஞ்சினத்துடன் இறைவனுக்குத் தீங்கிழைக்க வந்தவை. அவையே ஈண்டுக் குறிக்கப்பெறுவன என்பதைத் தழல் எனச் சிறப்பித்தோதினார். இவ்வுண்மையை,

"ஏந்திய பின்னர் வேள்வி
யெரியழற் கிடையே யெண்ணில்
பாந்தளங் கெழுந்து தீயோர்
பணியினாற் சீற்றத் தோடும்
போந்தன *வவற்றை மாயோன்*
புள்ளினுக் கஞ்சித் தன்பாற்
சேர்ந்திடும் பணிக ளோடுஞ்
செவ்விதிற் புனைந்தா னெங்கோன்"

(கந்தபுராணம் - ததீசி யுத்தரப் படலம் - 105)

என்றதிற் காண்க.

தழல் - "இடக்கரத்தில் தாங்கியுள்ள நெருப்பு" என்று கொண்டாருமுண்டு. அந்நெருப்பு அணிகலனுகப் பூணப்படவில்லை என்பது நினைந்து அவ்வுரையை ஒதுக்குக.

வீர - தனியாக நின்றே அனைவரையும் வெல்லும் ஆற்றலுடையவன். இறைவனின் அட்டவீரட்டங்கள் நினைக. "முடிவிலாற்றலுடைமை" அவன் எண்குணங்களுள் ஒன்றுதல் உணர்க. மேலே கூறிய "நகுதலை, தலைமாலை; பாம்பணி" என்பன அவன் வீரத்தின் சின்னங்களுட் சில.

என் தன்னை விடுதி கண்டாய் - புகலிடமின்றித் திகைப்புற்று நிற்கும் உன் அடிமையைக் கைவிடுதல் வீரனுகிய உனக்குத் தகுதியன்று. ஆதலின், கைவிடேல் என்றவாறு. *என் தன்னை* - என்னை. என் தன் ஐ - என்றன் தலைவன் எனலுமாம்.

விடில் - நீ அவ்வாறு கைவிடுவையாகில், அதனுல் என்பால் தோன்றக் கூடிய எதிர்விளைவுகளைக் கூறப் போகின்றேன்; கேட்பாயாக என விழிப்பூட்டும் தொனி கா்ண்க.

மிக்கார் என்னை ஆர் அடியான் என்னில் - ஞானமும் சீலமும் மிகுந்த சான்ருேர்கள் என்னை நோக்கி, "நின்பால் அடிமைப் பண்புள்ளதே; எனினும் நீ புகலற்றவனுகக் காணப்படுகின்ருயே; நின் தலைவன் யார்?" என்று வினவுவராயின். *மிக்கார்* - மிகுதி, ஈண்டு ஞானசீலங்களின் மேற்று. *மிக்கார்* - நின்னையும், என்னையுந் தவிர மீதமுள்ள ஏனையோர் எனலுமாம்.

ஆர் அடியான் - நீ யாருக்கு அடிமை. நற்குடிப் பிறப்புத் தோற்றமுள்ள சிறுவர்கள் நல்கூர்ந்து மெலிந்து காணப்படினுே: அன்றி அடாத செயலில் தலைப்படினுே உலகர் அவனை "நீ எக்குடும்பத்தினன்; நின் தந்தை யார்?" என்று உசாவுதலை இன்றும் காணலாம். "*ஆர்அடியான்*" - என்பதன்முன் "நீ" என்றும் எழுவாய் வருவிக்க.

என்னில் - என்று சீலமிக்கவர்கள் கேட்க நேரின், அதற்குத் தாம் விடையிறுக்க நேரும்; அவ்விடையையும் அதன்பின் விளைவுகளையும் இஞ்ஞான்றே அறிந்து கொள்: என்றவாறு.

உத்தரகோசமங்கைக்கு அரசின் சீரடியார் அடியான் என்று - ***உத்தரகோசமங்கை*** - முதலில் தம்மை அடிமை கொண்டவரின் பரம்பரைக்கு உரிய இடம் கூறியவாறு. அவ்விடம் முன்பே உமையம்மைக்கும் அறுபத்து நான்கு முனிவர்களுக்கும் ஆகமங்களில் தோன்றிய ஐயங்களை அகற்றித் தெளிவுறுத்திய இடம். கீர்த்தித் திருவகவல் (48-49)-ல் "உத்தரகோச மங்கையுளிருந்து வித்தக வேடங் காட்டிய இயல்பும்" என்றதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

அரசின் - ***அரசு*** - உத்தரகோசமங்கையைத் தலைநகராகக் கொண்ட மன்னன். உலக மன்னர்களைப் போன்று தனக்கு அவ்வரசை அளித்த முன்னோரும் தன்னிடமிருந்து அதைப் பெறவுள்ள பின்னோரும் இல்லாமல் என்றும் மன்னனாக உள்ளவன். அவன் செய்யும் அருளிப் பாடுகள் பற்றி அவனை உசாவும் மேலோரை இல்லாத பேரரசன்.

சீரடியால் - சிறப்பு மிக்க அடியவர்கள். சிறப்பாவது இறைவனுக்கு அணுக்கத் தொண்டுபுரியும் உரிமை. உயிர்கள் அனைத்தும் இறைவனுக்கு அடிமைகளே. அவ்வடிமைப் பண்பில் பல நிலைகள் உள்ளன. திருமால், நான்முகன் போன்ற பெருந்தேவர் அடிமைத்திறம் வேறு; நம்பியாரூரர் போன்றோர் அடிமைத்திறம் வேறு. இதனை,

திருச்சிற்றம்பலம்

"ஆவதிது கேண்மின்மறை யோரெனடி யானிந்
நாவனக ரூரனிது நான்மொழிவ" தென்றான்;
தேவரையு மாலயன் முதற்றிருவின் மிக்கோர்
யாவரையும் வேறடிமை யாவுடைய வெம்மான்.

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம்-தடுத்தாட் கொண்ட புராணம் 37)

என்றருளியுள்ளதிலும், அதற்குச் சிவக்கவிமணி C.K. சுப்பிரமணிய முதலியார் செய்த உரையிலும் காண்க. ஈண்டுச் ***சீரடியார்*** என்றது நம்பியாரூரர் போன்ற அடியவர்களை.

அடியான் என்று - அத்துணைச் சிறப்பு வாய்ந்த சீரடியார்களுக்கு நான் அடியவன் என்று விடை கூறி. இத்துணை மரபுச் சிறப்புள்ள யான் இன்று

சீரழியில் அது மரபின் முன்னவனுகிய நினக்கு இழிவு என்று கூறப் போகின்ருர்.

நின்னைச் சிரிப்பிப்பனே - அதனுல் சீலம் மிக்கவர் உன்னைப் பரிகசித்து ஏளனம் செய்யச் செய்வேன். நன்மரபைச் சேர்ந்த ஒருவர் இழிநிலையெய்தின் அவன் நிலை கண்டோர் அம்மரபின் முதல்வனை எள்ளி நகையாடல் இன்றும் உலகியலிற் காணவுள்ளது நினைக.

150-ம் திருப்பாடலில் "அறைவன் பழிப்பினையே" என்ருர். அப்பழிப்பு பழிக்கும் அடிகளுக்கும் பழிக்கப்படும் இறைவனுக்கும் மட்டுமே தெரியும். ஈண்டு, சீலம் மிக்கார்களைக் கொண்டு சிரிக்கச் செய்தலின் உன் இழிவு உலகமுற்றும் உணரும் என உணர்த்தும் நயம் காண்க.

இத்திருப்பாடலிற் காணும் நம் அடிகளின் விண்ணப்பச் சதுரப்பாடு பல நூற்ருண்டுகளாகவே சைவத்தமிழ்ப்புலமை உலகின் உள்ளங்கவர்ந்து ஒளிர்வதாகும். அதனை,

"நானிலத்தா ரேச நலனழிந்து நானிருந்தால்
கான னறும்பூக் களவீச - ஈனமுரைத்
தென்னைச் சிரிப்பாரென் றெண்ணுதே ஈனமுரைத்
துன்னைச் சிரிப்பாரு முண்டு"

(கருவை வெண்பா அந்தாதி)

என்றதிற் கண்டு சுவைக்க.

முன்னிலையில் கேட்போரை இங்ஙனம் நம் அடிகள் அச்சுறுத்தும் உத்தியை,

திருச்சிற்றம்பலம்

" கழிகின்ற வென்னையு நின்றநின்
கார்மயில் தன்னையும்யான்
கிழியொன்ற நாடி யெழுதிக்கைக்
கொண்டென் பிறவிகெட்டின்"

றழிகின்ற தாக்கிய தாளம்
பலவன் கயிலையந்தேன்
பொழிகின்ற சாரல்நுஞ் சீரூர்த்
தெருவிடைப் போதுவனே"

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் 76)

என்றதிலும் காண்க.

கட்டளைக் கலித்துறைப் பாடல்களில் ஈற்றுச் சீர் விளங்காய்ச் சீராக வருதல் வேண்டும். இத்திருப்பாடலில் ***"சிரிப்பிப்பனே"*** என்று புளிமாங்கனியாக வந்துள்ளதைப் புறனடையாகக் கொள்க.

இத்திருப்பாடலில், நம் அடிகள் உத்தரகோசமங்கையின் பேரரசனுக்குச் சீரடியாரடியாராக இருந்தும் தாம் அருள் பெருமைக்குக் காரணமாக நிற்பது தம் உலகப்பற்றே என்று வெறுப்பது பெறப்படுகின்றது. அதனால் ***"பிரபஞ்ச வைராக்கியம்"*** புலனுதல் காண்க.

153. சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத்
தொழும்பையு மீசற்கென்று
விரிப்பிப்ப னென்னை விடுதிகண்
டாய்விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் றோலுடைப் பிச்சனஞ்
சூண்பிச்ச னூர்ச்சுடுகாட்
டெரிப்பிச்ச னென்னையு மாளுடைப்
பிச்சனென் றேசுவனே சஙூ

(இ - ள்)

வெறுத்தற்குரிய என் உலக வாழ்வை எள்ளி நகையாடச் செய்வேன்; தொண்டுபுரிந்து வாழ்தல் இறைவனுக்கே என்பதை எங்கும் பரவச் செய்வேன்; இத்தகைய அடியவனைக் கைவிட்டுவிடுவாயோ? கைவிடுவாயாயின்; கொடிய யானையின் தோலைப்போர்த்த பித்தன்; புலித்தோலுடுத்த பித்தன்; நஞ்சை உணவாகக்கொண்ட பித்தன்; ஊருக்குப் பொதுவாகிய சுடலைத் தீயில் கூத்தாடும் பித்தன்;

தகுதியற்றவனுகிய என்னையும் அடிமையாகக் கொண்ட பித்தன்; என்று கூறி இகழ்ந்துரைப்பேன்.

(வி - ரை)

இத்திருப்பாடலின் முதலடியை மட்டும் "சீறும் பிறப்பைச் சிரிப்பிப்பன்" என்று மாற்றிக்கொண்டு ஏனைய பகுதிகளை ஆற்ருெழுக்காகப் பொருள் கொள்க.

சீறும் பிழைப்பைச் சிரிப்பிப்பன் - *சீறும் பிறப்பு* - இவ்வூனுடம்பு நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு என்பவற்றுக்கு இடனுயது. எனவே இதைப்பெற்றதும் இனி இத்தகைய உடல்கள் வாராதிருக்கத் தவமுயல்வதற்காக இதனை ஒரு கருவியாகக் கொள்ளல் வேண்டும். மாருக, உண்டுடுத்து உறங்குவதற்கே பயன்படின் இவ்வுடலுடன் கூடிய உலக வாழ்க்கை வெறுக்கத்தக்கதாகும். ஆதலின், இதனைச் "*சீறும் பிறப்பு*" என்ருர். *சீறுதல்* - வெறுத்தல்; வெகுளல்; *சிரிப்பிப்பன்* - அத்தகைய உலக வாழ்வை நான் எள்ளி நகையாடி ஒழிப்பதுடன், பிறரும் இவ்வுண்மையை உணர்ந்து தங்கள் உலக வாழ்வை எள்ளி நகையாடி ஒழிக்கச் செய்வேன் என்ருர்.

சீறும் பிழைப்பைச் சிரிப்பிப்பன் - நீ என்பால் சீற்றங் கொள்ளக் காரணமாகிய என் பிழைகளைக் கொண்டே உலகர் உன்னைச் சிரிக்கும்படி செய்வேன் எனலுமொக்கும். ஈண்டுச் சிரித்தற்குக் காரணம், "இத்துணைப் பிழைகளுள்ள இவனையும் இறைவன் ஆட்கொண்டானே; அவன் "முற்றுமுணர்தல்" இருந்தவாறு என்னே; என்று உலகர் நினைத்தல். *சீறும் பிழைப்பு* - ஆட்கொண்ட பின் வெறுத்தலாகிய தவறு எனலுமொன்று.

தொழும்பை ஈசற்கு என்று விரிப்பிப்பன் - இவ்வுடம்பு கொண்டு முக்கரணங்களாலும் சிவபெருமான் ஒருவனுக்கே தொண்டு செய்ய வேண்டும் என்பது மறையாகமங்கள் காட்டும் நெறி. அதை எவ்விடத்தும் எஞ்ஞான்றும் மேற்கொள்வேன். *தொழும்பு* - தொண்டு. தொழும்பையும் என உம்மை விரித்துக்கொள்க. *ஈசற்கு* - ஈசற்கே எனத் தேற்றேகாரம் விரித்துக்கொள்க. பிற தெய்வங்களை நீக்கிச் சிவபெருமான் ஒருவனையே வழிபட வேண்டும் என்ற ஏகநாயக வழிபாடு குறித்தது. ஏகாரம் பிரிநிலையுமாம். *ஈசற்கு* - ஈசன் பொருட்டு. *ஈசன்* - முன்னம் சிவபுராணம்

(11)-ல் "ஈசன்" என்றதன் கீழுரைத்தவை காண்க. ***விரிப்பிப்பன்*** - இவ்வுண்மையை யான் கைக்கொள்வதுடன் உலகமக்களும் கைக்கொள்ளும்படி என் முக்கரணங்களாலும் பரப்புவேன்.

அரிய தவத்தால் நண்ணும் வீட்டின்ப நுகர்ச்சிக்குப் பிறரையும் கூவியழைக்கும் பெருமையை நம் பெருமக்கள் கொண்டிருந்ததை ஆளுடைய பிள்ளையார் திருமண நிகழ்ச்சியின் ஈற்றில் காணலாம். ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"நான்பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற வுணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே"

திருச்சிற்றம்பலம்

(திருமந்திரம் 85)

" காக முறவு கலந்துண்ணக்
கண்டீ ரகண்டா காரசிவ
போக மெனும்பே றின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக வுருவாய்க் கிடக்குதையோ
இன்புற் றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாரும் சகத்தீரே"

(தாயுமானசுவாமிகள் பாடல் காடுங்கரையும் - 3)

என்பன காண்க.

என்னை விடுதி கண்டாய் - நினக்கு யானும் தொண்டு செய்து பிறரையும் தொண்டு நெறியில் ஆற்றுப்படுத்தும் என்னை நீ கை விடுதல் நீதியன்று என்றவாறு.

விடின் - இவ்வுண்மையை நின்பால் விண்ணப்பம் செய்த பின்பும் நீ என்னைக் கைவிடுவாயாயின், அதன் எதிர்விளைவுகள் யாதாம் என்பதை இனிக் கூறுதற்குத் தோற்றுவாய் செய்து கொள்ளல் காண்க.

வெம்கரியின் உரிப்பிச்சன் - *வெம்மை* - கொடுமை. அது கயாசுரனாக உலகங்களை அழித்த செயல். *உரி* - யானையின் தோல். *பிச்சன்* - பித்தன். யானையின் தோலை ஒருவன் போர்த்துக் கொண்டால் அதன் வெப்பமும் கனமும் தாங்காமல் இறந்துபடுவன்; சாவுதரும் என்று தெரிந்தே ஒரு செயலைச் செய்தல் பித்தரின் செயல். ஆதலின் *பிச்சன்* என்றார். இந்த வரலாற்றை 123-ஆம் பாடலுரையில் "கரியுரித்த வரலாறு" என்றதன் கீழுரைத்தாம்.

தோலுடைப்பிச்சன் - *தோலுடை* - உழுவையின் தோலை இடுப்பில் ஆடையாகவும், மானின் தோலை மேலாடையாகவும் தரித்தவன்; தோல்களை உடையவன் எனலுமாம். மானிட மடங்கலின் தோலையணிந்து இறைவன் "*மிருகேந்திரம்*" என்னும் உபாகமம் ஒன்றை அருளிச்செய்தான் என்னும் வரலாறு கேட்கப்படுவதும், சீகாழியில் சட்டைநாதர் மூர்த்தமும் கொண்டு நரசிங்கத்தின் தோலும் கொள்க. இவற்றை உலகர் விரும்பியணியார். இறைவன் அணிந்தமையால் *பிச்சன்* என்றார்.

நஞ்சு ஊண் பிச்சன் - *ஊண்* - உணவு. உயிர்கள் வாழ்வதற்கும், வாழ்நாளில் தொழில்புரிய உடம்பில் ஆற்றல் இருத்தற்கும் உணவு தேவை. *நஞ்சு* - உண்டாரைக் கொல்வது. ஆலகாலம் கண்டாரையும் அணுகினாரையும் அலைத்துக் கொல்வது. அவ்வியல்புகளுக்கு மாறாக இறைவன் ஆலகால நஞ்சையே உணவாகக் கொண்டான். இத்தகைய மாறுபாடு பித்தரின் செயல் என்றவாறு.

ஊர்ச் சுடுகாட்டுப் பிச்சன் - *சுடுகாடு* - பிணங்களை எரிக்குமிடம். அரசகுலத்தினர், பிரபுக்கள், மடாதிபதிகள், பெருஞ்செல்வர்கள் ஆகியோருக்குத் தனிச் சுடுகாடுகள் உள்ளன. அவை அவர்கள் ஆட்சியில் இருப்பதால் நாய், நரி, கழுகு, காகம் முதலியவை அண்டாமலும், எலும்பு, சாம்பல் முதலியன இன்றியும் துப்புரவாகப் பாதுகாக்கப்படும். அனுமதியின்றி அன்னியர் அணுக இயலாது. பொதுமக்களுக்கான மயானம், சுடுகாடாகவும், இடுகாடாகவும் யாவராலும் எப்பொழுதும்

பயன்படுத்தப்படும். பிணங்களைத் தின்னும் விலங்குகளும், பறவைகளும் பயிலும். எலும்பும், சாம்பலும், பிணம் சுடும் தீய வாடையும் கொண்டிருக்கும். அவ்விடத்தை நண்ணிச் சாம்பலைப் பூசிக் கொண்டு நெருப்பில் விளையாடுவது பித்தரின் செயல். ஆதலின் **ஊர்ச் சுடுகாட்டுப் பிச்சன்** என்றார்.

என்னையும் ஆளுடைப் பிச்சன் - ஒருவனை ஆளாகக் கொள்ள நேர்ந்துழி அவனால் பயனுண்டா என்று தெரிந்தே ஆட்கொள்வர். பயனற்றவனை ஆளாக அமர்த்தின் அவன் தன் தலைவனுக்குச் சுமையாகவே இருப்பன். அத்தகையோரை ஆட்கொள்ளல் பித்தரின் செயல். ஒன்றுக்கும் பற்றாத என்னை நீ ஆட்கொண்டதால் பிச்சனாயினை என்று கூறுகின்றார். ***என்னையும்*** - உம்மை இழிவு சிறப்பு. ஆட்கொள்வதற்கு முழுத்தகுதி வாய்ந்த அடியார்கள் அனைவரையும் நீ திருப்பெருந்துறையில் ஆட்கொண்டு வீடுபேறு நல்கினை. அத்தகுதி சிறிதுமற்ற **என்னையும்** நீ ஆட்கொண்டதால் ***பிச்சனாயினை*** என்றார்.

என்று ஏசுவன் - இவ்வாறெல்லாம் உன் குறைகளை எடுத்துக்கூறி நிந்திப்பேன். ***ஏசுதல்*** - எதிரிகளிடம் உள்ள குறைபாடுகளை எடுத்துக் கூறிப் பழித்தல் *ஏ* - ஈற்றசை.

இத்திருப்பாடலும் நிந்தாஸ்துதியாக அமைந்த ஒன்று. மேற்கூறிய விளக்கங்கள் அனைத்தும் நிந்தைப் பொருள் பயப்பன. **ஏசுவன்** என்று கூறியதால் அவற்றை நிந்தை மொழிகளாகவே சாற்றுவேன் என்று நம் அடிகள் கூறினர் என்பது பெறப்படும்.

ஆயினும் அவை அனைத்தும் இறைவனின் பொருள்சேர் புகழ்களைக் கூறி வழுத்தியதாக அமைதலையும் காண்பம்.

பிச்சன் - எல்லையற்ற பேரன்புடையவன். காளத்தியப்பர் மாட்டுப் பேரன்பு கொண்ட கண்ணப்ப நாயனாரைக் கடவுட்பித்துக் கொண்டு விட்டார் என்று அவர் மெய்க்காவலராகிய நாணனும் காடனும் கூறுகின்றனர். இதனை,

திருச்சிற்றம்பலம்

" தேவுமால் கொண்டா னிந்தத்
திண்ணன்மற் றிதனைத் தீர்க்க
லாவதொன் றறியோந் தேவ
ராட்டியை நாக னோடு
மேவிநாங் கொணர்ந்து தீர்க்க
வேண்டுமவ் வேட்டைக் காட்டி
லேவலாட் களையுங் கொண்டு
போது" மென் றெண்ணிப் போனார்"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் கண்ணப்ப நாயனார் புராணம் 120)

என்றதிற் காண்க. மகளிர்மாட்டுக் கழிபெருங் காமமுடையாரை இன்றும் "பெண்பித்தன்" என்று உலகர் கூறுதல் நினைக.

வெங்கரியின் உரிப்பிச்சன்; தோலுடைப் பிச்சன் - வேறு எவராலும் செய்தற்கரிய இவ்வருளாடல்கள் இறைவனின் "முடிவிலாற்றலுடைமை" யை வழுத்தியவாறு அமைதல் காண்க.

நஞ்சு ஊண் பிச்சன்; என்னையும் ஆளுடைப் பிச்சன் - இவை, உயிர்கள் மாட்டுள்ள இறைவனின் பேரருளுடைமையை வழுத்தியவாறு அமைதல் காண்க.

ஊர்ச் சுடுகாட்டு எரிப்பிச்சன் - பேரூழியின் பின் இறைவன் உலகங்களை மீண்டும் தோற்றுவிக்கப் புரியும் புனருற்பவ நடனம் குறித்தது. அது "சங்கார காரணனாகிய முதலையே முதலாகவுடைத்து இவ்வுலகம்" என்பதை நினைவூட்டி, இறைவனின் முழுமுதற்றன்மையை வழுத்தியவாறு அமைதல் காண்க.

இத்திருப்பாடலின்கண், "சிரிப்பிப்பன் சீறும் பிறப்பை" என்றதனால் உலக வாழ்க்கை வெறுத்து எள்ளி நகையாடற்குரியது என்பது பெறப்பட்டுப் "*பிரபஞ்ச வைராக்கியம்*" புலனாதல் காண்க.

154. ஏசினும் யானுன்னை யேத்தினு
மென்பிழைக் கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண்
டாய்செம் பவளவெற்பின்
தேசுடை யாயென்னை யாளுடை
யாய்சிற் றுயிர்க்கிரங்கிக்
காய்சின வாலமுண் டாயமு
துண்ணக் கடையவனே ருசு

(இ - ள்)

செந்நிறமுள்ள பவளமலை போன்று ஒளி விளங்கும் திருமேனியுடையவனே; சிறியேனை அடிமையாகக் கொண்டவனே; அமிழ்தம் உண்ண உரிமையுடையவனாக இருந்தும், சிறிய உயிர்க் கூட்டங்களுக்கு நேரும் துன்பத்திற்கு இரக்கங்கொண்டு, கொதித்து எழுங் கொடுமை மிக்க ஆலகால நஞ்சையுண்டருளியவனே; அடியேன் ஆண்டவனாகிய நின்னைப் பழித்துரைப்பினும் புகழ்ந்துரைப்பினும் உண்டாகும் என் குற்றத்தையே கருதி மனமுருகி வருந்துவேனைக் கைவிட்டு விடுவாயோ? (விடலாகாது).

(வி - ரை)

இத்திருப்பாடலை, "செம்பவள வெற்பின் தேசு உடையாய்; என்னை ஆளுடையாய்; அமுது உண்ணக் கடையவன்; சிற்றுயிர்க்கு இரங்கிக் காய்சின ஆலம் உண்டாய்; யான் உன்னை ஏசினும் ஏத்தினும் என் பிழைக்கே குழைந்து வேசறுவேனை; விடுதி கண்டாய்" - என்று அன்னுவயம் செய்துகொண்டு பொருள் காண்க.

செம்பவள வெற்பின் தேசு உடையாய் - செம்பவள வெற்பு - பவளமலை. தேசு - ஒளி; பவளம், பவளப் பூச்சிகளால் கடலில் பாறைகளாக உண்டாக்கப்படுவது. இது குன்றுகளாகவோ, மலையாகவோ உயர்ந்திருப்பதில்லை. பவளம், செந்நிறமுள்ளது; ஆனால் மாணிக்க மணி போன்று ஒளி வீசுவதுமில்லை. ஈண்டுச் "செம்பவள வெற்பின் தேசு" - என்றது இல்பொருளுவமை. இன் - ஒப்புப் பொருளில்

வந்த ஐந்தாம் வேற்றுமை உருபு. இறைவன், திருப்பெருந்துறையில் ஞானசிரியனாக எழுந்தருளியிருந்த கோலம் ஒளிவீசுகின்ற ஒரு பவளமலை வீற்றிருந்தது போலவிருந்தது என்று நம் அடிகள் நினைவு கூர்கின்றார். இஃது இறைவனின் அளப்பரும் பெருமை கூறியவாறு.

என்னை ஆளுடையாய் - இது, திருப்பெருந்துறையில் இறைவன் நம் அடிகளை ஆட்கொண்ட சரித நிகழ்ச்சியின் அகச்சான்று. இஃது நம் அடிகள் பொருட்டு அவன் செய்த பேருதவி. "பேரருளுடைமை" அவன் எண் குணங்களுள் ஒன்றாதல் காண்க.

அமுது உண்ணக் கடையவன் - அமுது - தேவாமுதம். இஃது உண்டார்க்கு நோயற்ற மிக நீண்ட வாழ்நாள் தரும். அமரர்களுக்கு மிக அரிய உணவு. ஆதலால் அவர்களால் இறைவனுக்குத் திருவமுதாகப் படைத்தற்குரியது. அதை உண்ணும் உரிமை சிவபெருமானுக்கேயாகும். ***கடையவன்*** - கடமையுடையவன். ஈண்டு உரிமை என்ற பொருளில் நின்றது. ***கடமை*** என்பதிலுள்ள "***மை***" விகுதிகெட்டு இடை "அ"கரம் "ஐ"காரமாகி விகுதிபெற்றுக் "கடையன்" ***கடையவன்*** என்றாயிற்று. பழமைப் பகுதியினின்றும் "பழையன்" "பழையவன்" என்றாயது போலக் கொள்க.

கடையவன் - தேவர்கள் அஞ்சிய ஆலத்தைத் தான் முதலில் உண்டு அவர்கள் விரும்பிய அமுதத்தை அவர்களே உண்ணும்படி விட்டு விட்டான். அதை உண்ண நின்ற அவர்கள் வரிசையில் இறைவனே கடைசியில் நின்றான். நின்றானாயினும் உண்ணவில்லை. இதை "I will be the last man to do it" எனவரும் ஆங்கில மரபுப்படி பொருள் செய்க என்பது கவியரசு அவர்கள் விளக்கம்.

கடையவன் - பேரூழிக் காலத்து அனைத்தும் ஒடுங்கத் தான் ஒருவனே இறுதியில் நிற்கும் முழுமுதல் எனக்கொள்ளலும் ஒன்று. சிவஞான போதம் முதற்சூத்திரத்தில் "அந்தம் ஆதி" என்றது நினைக. ***கடையவன்***-கடையன்.

"***கடையவன்***" என்பதுடன் முதலடியிலுள்ள "***யான்***" என்பதைப் புணர்த்துக் கடையவனாகிய யான் அமுதுண்ணும் பொருட்டு நீ

நஞ்சுண்டாய் என்றுரைப்பாரும் உண்டு. இப்பொருளில் "*யான்*" பக்குவான்மக்களையும்; **அமுதுண்ணல்** வீட்டின்பம் நுகர்தலையும், **நஞ்சு** - பக்குவான்மாக்களின் பந்தங்களையும் உணர்த்துவதாகக் கொள்க.

கடையவன் அமுதுண்ண - திருப்பாற்கடலைக் கடைந்த திருமால் அமுதத்தை உண்ண - என்றுரைப்பாரும் உண்டு. திருப்பாற்கடலைத் திருமால் கடையவில்லை. தேவர்களும், அசுரர்களும் கடையும்பொழுது மத்தாகிய மலை கடலுள் ஆழ்ந்து விடாமல் அவன், ஆமையாக அதனடியில் நின்று தாங்கினுன் திருமால்; அமுதம் உண்டவனும் அல்லன். தேவர்கள் மட்டுமே உண்டனர். இறைவன் நஞ்சுண்டதற்கு ஏது "சிற்றுயிர்க்கு இரங்கி" என்றதால் பெறப்படுகின்றது. ஆதலின் அஃதுரையன்று என ஒதுக்குக.

சிற்றுயிர்க்கு இரங்கிக் காய்சின ஆலம் உண்டாய் - ***சிற்றுயிர்*** - கடல் கடைந்த தேவர்கள் மட்டுமன்றி பதமுத்திகளை எய்தாத ஆன்ம கோடிகள் அனைத்தையும் குறித்து நின்றது. ஆலகால நஞ்சு பிரகிருதி மாயா புவனங்களில் இருந்த உயிர்கள் அனைத்தையும் அலைத்தது நினைக. அவ்வுயிர்கள் உணர்த்த உணரும் சிற்றறிவும் தங்கட்கு மேலுள்ளோர் இயக்க இயங்கும் சிறுதொழிலுமுடையனவாகலின் "***சிற்றுயிர்***" என்றுர். ***சிற்றுயிர்*** - இனச்சுட்டு இல்லாதது. ***இரங்கி*** - உயிர்கள் மாட்டு அவன் இயல்பாகவே கொண்ட "பேரருளுடைமை"யை வழுத்தியவாறு. ***காய்சின ஆலம்*** - ஆலகால நஞ்சு. ***காய்சினம்*** - வினைத் தொகை. ***காய்தல்*** - சுடுதல். ***சினம்*** - வெகுளி; கொடுமை. "சுடும் நெருப்புப் போன்ற நஞ்சு எனலுமாம். ***ஆலம் உண்டாய்*** - இறைவன் ஆலகால நஞ்சுண்டது உயிர்கள் மாட்டுப் பொதுவகையிற் செய்த பேருதவி. உண்டபின்பும் நஞ்சு அழியாமல், மரணங்கொடுக்கும் அதன் ஆற்றல் மடங்கி இறைவன் கண்டத்தில் நிற்பதறிக. சீவன்முத்தநிலை யெய்தியோர் அந்நிலையிலேயே வீட்டின்பம் நுகர்வர். ஆண்டு, அவர்கள் கன்ம மலம் கழிவதை முன்னம் கீர்த்தித் திருவகவல் (109-ல்) "அழுக்கு" என்றதன் கீழ் விளக்கினும். கன்மமலமின்மையில் இனி அவர்களுக்குக் கன்ம நுகர்ச்சிக்கான உடல்களைத் தரும் மாயா மலமும் நீங்கிற்று. மீதமுள்ள ஆணவ மலம் அவர்கள் மாட்டு வலிகுன்றி நிற்கும். அதன் பந்தமின்மையில் அவர்கள் வீட்டின்பம் நுகர்வர். இதையே, ஈண்டுச் ***சிற்றுயிர்க்கிரங்கி*** அவை சிவானந்தமாகிய அமுதத்தை நுகரும் பொருட்டு நீ அவர்கள் ஆணவ மலமாகிய காய்சின ஆலத்தையுண்டாய்" என்றருளிச் செய்கின்றுர்.

சிதம்பரம் பழுதைகட்டி மறைஞான சம்பந்த பண்டாரம் என்னும் பெரியவர் குறள் வெண்பாக்களால் "சங்கற்ப நிராகரணம்"* என்ற நூலொன்று செய்துள்ளார். அதில் அவர் இவ்வுண்மையை;

" அநாதிமலம் போகா திருந்துமயர் வாக்காதேல்
ஆதிமிடற் றின்விடம்போ லெண்"

*(பாடாணவாதிசங்கற்ப நிராகரணம்-3)**

என்று விளக்குவது காண்க.

இதனை மற்றொரு எடுத்துக்காட்டால் விளக்குகின்றார் வீழி சிவாக்கிரக யோகிகள்.

இருளின் குணம் மறைப்பது. அது பொருள்கள் மீதும் கண்களிலும் படிந்து கண்கள் பொருள்களைப் பார்க்க இயலாது செய்கின்றது. ஆனால் பூனையின் கண்களில் இருள் படியினும் அவற்றின் பார்வையை மறைக்கும் ஆற்றலற்று நிற்கின்றது. அவ்வாறே மூத்தான்மாக்களிடம் ஆணவ மலம் இருப்பினும் அவர்களை அது பந்தப்படுத்த இயல்வதில்லை என்பதது. அப்பாடல்,

" அனாதியாய் விபுவாகி நித்த மான
வாணவந்தா னீங்கும்வகை யாவ தெங்ஙன்
எனாதுகொணீ செம்பினுட் களிம்ப னாதி
யிரதகுளி கையினாலே யேகப் பொன்னும்
மனாதிருடா னிறைந்திருந்தும் பூனை யாதி
மணிவிழியி னங்ஙனருண் மன்னி னோர்பால்
துனாதுகெடு மாணவந்தான் மற்றோர் தம்மைத்
துடக்கிநிற்கு மாதலினாற் சோர்வு மின்றே"

*(சிவநெறிப் பிரகாசம் 185)***

என்பதாம்.

---

* சங்கற்ப நிராகரணம் - தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் - 110. பக்.42

** திருவாவடுதுறை ஆதீன வெளியீடு எண் - 233 பக்கம் 157.

யான் உன்னை ஏசினும் ஏத்தினும்* - *யான் - கேவலம் பெத்தம் முத்தி என்ற அனைத்து நிலைகளிலும் உன் அடிமையாகிய யான், **உன்னை** - எப்பொழுதும் என் ஆண்டானாகிய உன்னை ஏசுதற்கு உரியனல்லன். உன் திருவுள்ளக் குறிப்பின் வழியே ஒழுகக் கடமைப்பட்டவன். ***ஏசினும்*** - "வேலை நஞ்சுண் பித்தன்", "மழைதருகண்டன்", "குணமிலி", "மானிடன்" , "தேய்மதியன்", "பழைதருமாபரன்", "வெங்கரியின் உரிப்பிச்சன்", "தோலுடைப்பிச்சன்", "ஊர்ச்சுடுகாட்டு எரிப்பிச்சன்", "என்னையும் ஆளுடைப் பிச்சன்" என்றெல்லாம் நிந்தித்தாலும், "***ஏத்தினும்*** - "தலைத்தலை மாலைத் தழலராப் பூண் வீர" என்றும்; இத்திருவாசகம் முழுவதிலும் வழுத்திவாறும்; துதித்தாலுமாம். ***ஏசுதல்*** - உரிமையாற் குறை கூறல். "சீராடுதல்" என்றும் கூறுவர். இது பகைவர் பகரும் நிந்தை மொழிகளில் வேறானது.

என் பிழைக்கே குழைந்து வேசறுவேனை* - *என் பிழை - நீ எனக்கு அருள் செய்யாததும் திருப்பெருந்துறையில் ஏனைய அடியார்களுடன் என்னையும் ஏன்று கொள்ளாததும் என் தீவினைப்பயன். பக்குவம் எய்தியிருந்தால் நீ என்னையும் ஏன்று கொண்டிருப்பாய். அஃதறியாது நான் உன்னை மேற்கண்டவாறு நிந்தித்தது என் குற்றம்; ஞானாசிரியனாக நீ என்னை ஆண்டுகொண்டது தொடங்கி இன்று வரை நான் இத்திருவாசகப் பாடல்களால் உன்னை ஏத்தினேன். அவ்வாறு ஏத்தியும் நீ எனக்கு இன்னும் அருள்புரியவில்லை. அதற்குக் காரணம் நான் இன்னும் நுகர்ந்து கழிக்கவேண்டிய வினைகள் உள்ளன. இவ்வினைகளைச் செய்ததும் என் பிழை. இத்தகைய பிழைகளுக்காக நான் மனம் நெகிழ்ந்து துன்புறுகின்றேன் என்றவாறு. ***என் பிழைக்கே*** - ஏகாரம் பிரிநிலை. ***குழைதல்*** - நெஞ்சுருகுதல். ***வேசறுதல்*** - துன்புற்று வருந்துதல். இச்சொல் இப்பொருளில் வருவதை,

"அரும்பொனே மணியேயென் னன்பேயென்னன்பான
அறிவேயென் னறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே யென்றென்று பாடினே
னாடினே னாடி நாடி
விரும்பியே கூவினே னுலறினே னலறினேன்
மெய்சிலிர்த் திருகைகூப்பி

விண்மாரி யெனவெனிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தேனியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனு ஞலுமுனை
யிடைவிட்டு நின்றதுண்டோ
யென்றுநீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ
யாதேனு மறியாவெறுந்
துரும்பனே னென்னினுங் கைவிடுதல் நீதியோ
தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே"

(தாயுமான சுவாமிகள் பாடல் சுகவாரி - 9)

என்றதிற் காண்க.

விடுதி கண்டாய் - சிற்றறிவுடைய உயிர்கள் பிழை செய்தல் இயல்பு. பின்னர்ப் பிழையுடன் பட்டு வருந்திப் பிழை பொறுக்க வேண்டினுல், பொறுத்துப் பாதுகாத்தல் பேரருளாளனுகிய நிற்குக் கடன். நான் உன்னை வைதாலும், வாழ்த்தினுலும் அவை என் பிழைகளின் அடிப்படையிலேயே நிகழ்ந்ததாக எண்ணி வருந்துகின்றேன். ஆதலின் நீ என்னைக் கைவிடலாகாது என்றவாறு.

இத்திருப்பாடல் *நீத்தல் விண்ணப்பத்தின்* இறுதிச் செய்யுள். இப்பகுதி அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. எனவே, ஈண்டு ஈற்றடியிலுள்ள "**கடையவனே**" என்ற சீர் முதற் செய்யுளின் முதற்சீரான "கடையவன்" என்பதுடன் மண்டலித்து அந்தாதித் தொடையாக நிறைவுறுதல் காண்க.

இத்திருப்பாடலில், "ஏசினும் யானுன்னை யேத்தினுமென் பிழைக்கே குழைந்து வேசறுவேனை" என்றதால், உலக வாழ்க்கை பற்றிநிற்றல் பிழை. அஃது எவ்வாற்ருனும் வெறுக்கத்தக்கது என்பது பெறப்படுதலின் "*பிரபஞ்ச வைராக்கியம்*" புலனுதலறிக.

தொகுப்புரை:- நிலைபெற்றுள்ள உத்தரகோசமங்கையின் மன்னவனே! இழிந்த என்னை, நீ உன் பேருருளினால் ஆளாகக் கொண்டாய்; என் அறியாமையால் நான் அவ்வருளை ஏற்க மறுத்தேன். விளக்கில் வீழ்ந்தழியும் விட்டில் பூச்சியை ஒத்து நான் மங்கையர் மையலில் வீழ்ந்தேன்; பொய்யனானேன்; இருதலைக் கொள்ளியினுள் எறும்பையொத்தேன்; ஐம்புலன்கள் மாறுபட்டு வஞ்சிக்க நின்னை நீங்கினேன்; உன் அருள் ஆழியாக நண்ணினும் அதை நாய் நக்கியாங்கு மிகச் சிறிதே நுகர்ந்தேன். அருள் வெள்ளத்திற் கிடந்தும் அதை நுகராது ஆற்று வெள்ளத்திற் செல்லும் சாணிப்பறவை போன்றானேன்; என்னை "அஞ்சேல்" என்பார் யாருமிலர். மெய்ப்பொருளாகிய நீயே எனக்குப் புகலிடம். நீ எவ்வாற்றேனும் என்னை அடிமை கொள்ளற்குரியவன்; நான் கொழுகொம்பு இல்லாத கொடி போலும், யானைகளின் போரில் மிதியுண்டழியும் சிறுபுதர் போலும் அழிகின்றவன்; பிழைகளையே பெருக்குபவன்; எறும்புகள் நெய்க் குடத்தை மொய்த்துத் தடை செய்தும், மண்புழுவை அலைத்தும் அழிப்பது போல ஐம்புலன்கள் என்னைத் துன்புறுத்துகின்றன. நான் நீர் வற்றிய பொய்கையிலுள்ள மீன்கள் போல வருந்தி மத்தினால் கடையப்படும் தயிர்போலக் கலங்குகின்றேன்; என் மனத்தை வாழைப்பழம் போலக் கனியச் செய்து நின் பழ அடியார்கள் கூட்டத்திற் சேர்த்தருள்க. நின் பிரிவை ஆற்றாது நான் உன்னைப் பாடித் துதித்தலோ, உன்னைத் தேடுதலோ அல்லது உயிர் துறத்தலோ செய்யேன். எனினும் என்னைக் கைவிட்டு விடாதே. கைவிடுவாயாகில் நின்னை நிந்திப்பேன். சீலமிக்கவர்களிடம் நான் உன் பெருமைமிக்க அடியார்களின் அடியேன் என்று கூறி உன்னை அவர்கள் நகைத்துப் பரிகசிக்கச் செய்வேன். உன்னை நான் நிந்தித்தாலும், வந்தித்தாலும நீ ஏனக்கு அருள் செய்யாமைக்கு என் குறைபாடுகளே காரணம் என்று எண்ணி மனம் துன்புறுவேன். ஆதலின் என்னைக் கைவிட்டு விடாதே; அஃதுன் பேரருளுடைமைக்கு ஏற்புடைத்தன்று.

தலவிசேடம் - உத்தரகோசமங்கை - முன்னம் கீர்த்தித் திருவகவல்-48 உரையில் "உத்தரகோசமங்கை" என்றதன் கீழுரைத்தாம்.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்


திருச்சிற்றம்பலம்

7. திருவெம்பாவை


திருவண்ணுமலையில் அருளியது
(சத்தியை வியந்தது)

சைவ உலகில் திருமுறைகள் பன்னிரண்டனுள் திருவாசகம் சிறப்பிடம் பெற்றுள்ளது. அதன் முடிமணியாகத் திகழ்வது **திருவெம்பாவை.** நம் தமிழ்நாட்டில் திருமுறைகளை முதலினின்றும் தொடங்கி நாள் ஒன்றுக்குச் சுமார் ஐம்பது பாடல்களாக நாள்தோறும் பாராயணம் செய்து ஒராண்டில் நிறைவு செய்யும் அன்பர்கள் எண்ணிலர். ஆன்மார்த்த சிவபூசையிலும் திருக்கோயிலில் பரார்த்த பூசைகளிலும் ஓதப் பெறும் பஞ்சபுராணங்களில் திருவாசகமும் இடம்பெறுகின்றது. மார்கழித் திங்கள் திருவாதிரை நாளை இறுதியாகக் கொண்ட பத்து நாட்களிலும் திருவெம்பாவை விழாக் கொண்டாடப்படுகின்றது. இப்பத்து நாட்களிலும் ஆன்மார்த்தம், பரார்த்தம் ஆகிய இரு வழிபாடுகளிலும் திருவெம்பாவை ஒன்றே ஓதப் பெறுகின்றது. நித்திய பாராயணத்திலும் இந்நியதி கடைப்பிடிக்கப்படுகின்றது. இஃதொன்றே திருவெம்பாவையின் சிறப்பைக் காட்டும். இத்துணைச் சிறப்புள்ள திருவெம்பாவை கடல் கடந்து சென்று வேறு நாடுகளிலும் வேரூன்றியுள்ளது. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்ருன தாய்லாந்து (Tailand) உலகப் பெரும்போருக்கு முன்னம் சயாம் (Siam) என்று வழங்கி வந்ததது; மன்னராட்சியில் இருந்தது. மன்னரின் முடிசூட்டு விழா முதலிய முக்கிய அரசியல் சடங்குகளில் நம் திருவெம்பாவை ஓதப்பெற்று வந்தது. இதை Quaritch Wales என்னும் ஆசிரியர் தாம் இயற்றிய Siamise State Ceremonies என்ற நூலில் கூறுவது காணலாம்.

சங்க காலத்திலிருந்தே தமிழகத்தில் பாவை நோன்பு கைக்கொள்ளப்பட்டதென்றும்; மகளிர் மாட்டு ***"மார்கழி நீராடல்;***



திருவண்ணாமலை - திருக்கோயில்



"மொய்யார் தடம் பொய்கை"

திருவண்ணாமலை திருக்கோயில் வளாகத்தில் உள்ளது.

தைந்நீராடல்" போன்றவை நிலவின என்றும், மணமாகாத பெண்கள் மார்கழித் திங்களில் வைகறையில் துயிலுணர்ந்து நீராடி மணலால் உமையம்மையின் படிவம் அமைத்து நல்ல கணவன் அமைய வேண்டும் என்று வழிபட்டனர் என்றும், திருவாசகத்துக்கு முன்பு உரைகண்ட பலர் கூறுகின்றனர். பின்னர் எழுந்த ஆண்டாள் திருப்பாவையில் மகளிர் தங்கட்குக் கண்ணனே கணவனாக அமைய வேண்டி வழிபட்டனர்; அவ்வாறே திருவெம்பாவையிலும் சிவபெருமானே தங்கள் கணவனாக அமைய வேண்டி வழிபட்டனர்; அதையே நம் அடிகள் திருவெம்பாவையாகப் பாடியருளினர் என்றும் கூறினர். அவர்கள் தங்கள் கூற்றுக்குத் சான்றாகப் பாகவத புராணச் செய்யுட்களை மேற்கோள் காட்டினர்.

பாவை நோன்பின் தொன்மைக்கு முன்னுரையாளர்கள் காட்டும் ஆதாரங்கள்:- நற்றிணை செய்யுள் 80; கலித்தொகை செய்யுள் 59; பரிபாடல் செய்யுள் 11; யாப்பருங்கலம் 93-ம் சூத்திர விருத்தியுரையில் எடுத்துக்காட்டாக வரும் செய்யுள் ஒன்று; ஆகியவையே.

முதலில் சங்க நூல்களில் காட்டப்பட்ட ஆதாரங்கள் பற்றி ஆய்வு செய்தபின் யாப்பருங்கல விருத்தியுரையில் வரும் எடுத்துக்காட்டுச் செய்யுள், பாகவத புராணம், திருப்பாவை முதலியவை பற்றி ஆய்வோம்.

நற்றிணை 80-ம் பாடலில் திருமணப்பருவம் எய்திய தலைவி தன் தோழியருடன் தைத்திங்களில் வைகறை எழுந்து பொய்கையில் நீராடித் தன் தலைவனை மணக்க அருளும் வண்ணம் இறைவனை இறைஞ்சுதல் கூறப்படுகிறது. இதைத் ***தைந்நீராடல்*** என்று வழங்குவர். கலித்தொகை 59-ஆம் பாடலும் தைந்நீராடலேயாம். பரிபாடல் 11-வரி 74 முதல் 92 முடிய உள்ள பகுதியில் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் தொடங்கித் தைத்திங்கள் வரை மணமாகாத இளம் பெண்கள் தங்கள் அன்னையர் அண்மையில் நின்று நெறிப்படுத்த வைகறைப் பொழுதில் நாள்தோறும் நீராடல் கூறப்படுகின்றது. இதை **அம்பாவாடல்** என்று வழங்குவர்.

தைந்நீராடலும், அம்பாநீராடலும் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் தொடங்கித் தைத்திங்கள் தொடக்க நாள் முடிய நீராடுதல்.

இவற்றுள் அம்பாநீராடலின் அன்னை உடனிருந்து வழிகாட்டுகின்றாள். இவர்கள் நோன்பு தொடங்கும் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் நம் திருவெம்பாவை உற்சவம் நிறைவுற்று விடுகின்றது. திருவெம்பாவை உற்சவம் பத்து நாட்கள் மட்டுமே. சில ஆண்டுகளில் திருவாதிரை நாள் மார்கழித் திங்கள் முதல் மூன்று நாட்களுக்குள் வருமாயின் உற்சவம் கார்த்திகைத் திங்கள் இறுதியிலேயே தொடங்கி விடுகின்றது. இதில் அன்னை உடனிருந்து நீராட வழிகாட்டுவதில்லை. எனவே தைந்நீராடலும் அம்பா ஆடலும் திருவெம்பாவையிற் கூறப்படும் நீராடல் அல்ல.

இனி, யாப்பருங்கலம் சூத்திரம் 93-ல் விருத்தியுரையில் காணும் உதாரணச் செய்யுள் பற்றி ஆய்வோம். அச்செய்யுள்,

“ கோழியுங் கூவின குக்கி லழைத்தன
தாழி யுணீலத் தடங்கணீர் போதுமினோ
ஆழிசூழ் வையத் தறிவ னடி யேத்திச்
கூழை நனையக் குடைந்துங் குளிர்புனல்
ஊழியுண் மன்னுவோ மென்றேலோ ரெம்பாவாய்”

இப்பாடல் பாவைப் பாட்டின் அமைப்புக்கு மட்டுமே எடுத்துக்காட்டாகக் கொள்ளத் தக்கது. ***அறிவன்*** என்று இதில் கூறப்படுவன் அருகதேவன். சமணர்கள் கடவுள் கொள்கை இல்லாதவர்கள். “பெண்களுக்கு முத்தியில்லை; அவர்கள் ஆண்களாகப் பிறந்து, இந்திரராகிப் பின் முத்தியடைவர்” என்ற கொள்கையினர்.

அவர்கள் அணுவிரதர்; மாவிரதர் என்ற இருபெரும் பிரிவினர். மாவிரத அனுட்டானம் உள்ளோர்களில் துறவிகள், “நீராடில் உடல் வியர்வையிலுள்ள கிருமிகள் சாகும்” எனக் கருதி நீராடலைத் தவிர்த்தவர்கள். அவர்களில் ஆண், பெண் ஆகிய இருபாலரும் தலைமயிர்களை ஒவ்வொன்றாகப் பறித்து நீக்கிய தலையினர்; ஆதலின் அவர்கள் நீராடலும், அதிலும் “கூழை நனையக் குளிர் புனலாடலும்” எங்கே?

அணுவிரத அனுட்டானமுள்ளோர் பெரும்பாலும் இல்லறத்தினர். அவர்களுக்கு நீராடலும் திருக்கோயில் வழிபாடும் உண்டு. அவ்வழிபாடு

உலகியல்நலன் எய்த வேண்டியேயாம். மேற்குறித்த பாடலில், "***அறிவனடி யேத்தி***" என அருகதேவன் வழுத்தப்படுதல் காண்க. திருவெம்பாவையில் நாம் காணும் "சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறத்தல்" "தென்னு என்னு முன்னந் தீசேர் மெழுகொத்தல்" "விண்ணோரைத்தாள் பணியாமை" என்ற இயல்புகள் அவர்களுக்கு எவ்வாறு பொருந்தும்? ஆதலின் இம்மேற்கோட் பாடல் திருவெம்பாவையுடன் ஒருங்குவைத்து எண்ணத்தக்க தன்று.

இனித் திருப்பாவை பற்றிய ஆய்வில் ஈடுபடுவோம். ஆயர்பாடியில் வாழ்ந்த மங்கையர் கண்ணனைக் கணவனாக அடைய விரும்பி ஒழுகினர். பெற்றோர்கள் அதை ஏற்காது அவர்களை நிலவறையில் சிறையிட்டனர். அதனால் வானம் பொய்த்து வற்கடம் உண்டாயிற்று. தங்கள் பிழையை உணர்ந்த பெற்றோர்கள் பெண்களை விடுவித்தனர். அவர்கள் மார்கழித் திங்கள் ஒவ்வொரு நாளும் வைகறையில் எழுந்து எமுனை ஆற்றில் நீராடி மணலால் உமையம்மையின் பாவை நிறுவி வழிபட்டுக் கண்ணனைத் தாங்கள் மணக்கும்படி அருள் வேண்டினர். இதுபற்றிப் பாகவத புராணம் கூறும் செய்யுட்கள்:

"இன்ன தண்பனிப் பருவநல் லிளநரு வொழுகுங்
கன்னி யந்துழாய்க் கண்ணனெங் கணவனு கென்ன
அன்ன மென்னடை யாயர்தங் கன்னியர் நோற்றார்
மன்னு வெம்பனி மால்வரைக் கன்னியைத் தொழுதே"

*"பனிநி லாக்கதிர் பரப்பிய **முத்தவெண் மணலால்***
பனிவ ரைக்கொடி திருவுருப் பாற்பட வகுத்துப்
பனிம லர்த்தொடை சூடியும் பரவியு நோற்றுப்
பனியி றப்பினிற் படர்புன லாடுவான் படர்ந்தார்."

என்பன.

வைணவர்கள் திருமால் ஒருவனே புருடோத்தமன்; உயிர்கள் அனைத்தும் அவன் மனைவியர். நாயகன் நாயகி பாவனையால் இவ்வுலக வாழ்விலேயே திருமாலை அனுபவிக்கலாம்; மரணத்தின் பின்பு பக்குவ ஆன்மாக்கள்

வைகுண்டம் செல்லும் வழியில் விரஜா நதியில் மூழ்கி ஒளியுடம்பு பெற்றுத் திருமால் முன் அமர்ந்து அவன் திருமேனியைப் பார்த்துக்கொண்டே இருக்கும் இன்பம்தான் முத்தி என்ற முடிவினர்.

இவர்கள் கூறும் ஒளியுடம்பு மரணத்தின்பின் புரியட்ட உடலிலிருந்து தோன்றும் பூதசார உடல் போலும். அந்த உடல் எத்துணை ஒளியுள்ளதாயினும் சடப் பொருளாகிய மாயாமலத்தின் காரியமே. அஃது, ஆணவ மலத்தினின்றும் உயிர் விடுபெறுவதற்கான ஒரு கருவி. ஆணவ மலத்தின் வலி குன்றிய பின்பே உயிர் வீடுபேறு கூறுகின்றது. அந்நிலையில் அங்கு மாயாமல காரியமாகிய உடம்புக்கு; அஃது எத்துணை ஒளியுள்ளதாயினும்; வேலையில்லை. முத்தியின் உயிர், தனியே ஓர் உடலினின்று எதிரில் உள்ள இறைவனை நுகர்வதில்லை. பழத்தில் சுவை போலும்; மலரில் மணம் போலும்; நெருப்பில் சூடு போலும்; வீணையில் நாதம் போலும். இறைவனுடன் பிரிப்பின்றி நின்று இன்பம் நுகர்கின்றது. இவ்வுண்மையை நம் உண்மை விளக்கம் 46-ம் பாடலில் காணலாம். மேற்குறித்த பாகவத புராணப் பாடல்களில் பெண்கள், சிவபெருமான் தங்கள் கணவனாக அமைய வேண்டும் என்ற வேண்டுதல் காணப்படவில்லை. ஆதலின் அப்பாடல்களைத் திருவெம்பாவையில் வரும் பெண்களுக்குப் பொருத்துவது அடாது. திருமுறைகளில் அகத்துறையில் தலைவி கூற்றாக வருவது நாயகி நாயக பாவமன்று. மானிடப் பெண் ஒருத்தி இறைவனைக் காதலித்தாக வருவது, பாடும் திருமுறை ஆசிரியர் தன்னையே நாயகியாகக் கொண்டதன்று. அதனை "கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்" என்பர். தொல்காப்பியம் - பொருளதிகாரம் புறத்திணையியல் சூத்திரம் 81.. இளம்பூரணர் உரை காண்க. மாறாகத் திருவெம்பாவையில் வரும் பிரார்த்தனையில் சிவனடிமைத் திறமிக்க ஒருவனே என் கணவனாக அமைதல் வேண்டும். அவன் இட்ட பணிகளையே நான் ஏற்றுப் பணி செய்வேன் என்று வருவது காண்க. திருப்பாவை மார்கழித் திங்கள் முப்பது நாட்களும் நிலவும் நோன்பு, திருவெம்பாவை பத்து நாட்கள் மட்டுமே மேற்கொள்ளப்படுவது. அதிலும் சில ஆண்டுகளில் கார்த்திகைத் திங்கள் இறுதியிலேயே தொடங்கப்படுவது. ஆதலின் திருப்பாவை எவ்வாற்றானும் திருவெம்பாவைக்கு மாற்றாகாது.

இனி, இந்தத் திருவெம்பாவை நீராடல் என்பது நவ சத்திகளை எழுப்பித் தொழிற்படுத்துதல் என்ற ஒரு கருத்து, சைவ உலகிலும் முன்னுரையாசிரியர்

சிலர் மாட்டும் நிலவுகின்றது. அது பற்றி ஆய்வோம். திருவெம்பாவையின் கருத்து ***"சத்தியை வியந்தது"*** என்று நம் முன்னோரால் அமைக்கப்பட்டுள்ளது. அதில் ***"சத்தி"*** என்ற சொல் ***"மாது" "மங்கை"*** என்பன போன்ற இலக்கியச் சொல்லாக அன்றிச் சாத்திரச் சொல்லாக இருத்தலானும், மகளிர் ஒவ்வொருவராக எண்மர் துயிலுணர்த்தப் பெறுவதாலும் அவ்வாறு கருதினர். உலகத் தோற்றத்தின் பொருட்டு முதற்கண் எழுந்த ***"மனேன்மனி"*** என்றும் சிவசத்தி ***"சர்வபூத மனி"*** என்ற சத்தியை எழுப்பினள்; அவள் ***"பலப்பிரமதனி"*** எனும் சத்தியை எழுப்பினள்; இவ்வாறே "பலவிகரணி", "கலவிகரணி", "காளினி," "இரௌத்திரி", "சேட்டை", "வாமை" என்னும் சத்திகள் முறையே ஒருத்தி மற்றொருத்தியை எழுப்புதலையே இத்திருப்பாடல்கள் கருதின என்று விளக்குவர். அது நம் அடிகளின் திருவுள்ளக் கருத்தாயின் ஏனைய பன்னிரண்டு திருப்பாடல்களும் உலகத் தோற்றத்தினுடன் இயைந்த பாடல்களாக அமைந்திருக்கும். நிற்க; மேற்கூறிய சத்திகள் ஒவ்வொருத்தியும் மற்றொருத்தியைத் துயிலுணர்த்துவதாகும். திருவெம்பாவையின் முதல் எட்டுப்பாடல்களிலும் துயிலுணர்ந்தோர் அனைவரும் கூடி அடுத்துள்ள பெண்ணைத் துயிலுணர்த்துவதாக உள்ளன.

மின் ஆற்றல் என்பது ஒன்றே. அதை நம் இல்லங்களில் பயன்படுத்துகின்றோம். வெளிச்சம் தருதல்; சுடுதல்; குளிரச் செய்தல்; விசிறி முதலியவற்றைச் சுழலச் செய்தல்; தண்ணீர் இறைத்தல் முதலிய பல்வேறு தொழில்களையும் செய்வது அந்த் மின் ஆற்றல் ஒன்றே. இவ்வாறே சிவசத்தி ஒன்றே தொழில் வேறுபாட்டால் மேற்குறித்த ஒன்பது பெயர்கள் கொண்ட நவசத்திகளாக நிற்கின்றது. இதுபற்றிச் சிவஞான மாபடியம் இரண்டாம் சூத்திரம், இரண்டாம் அதிகரணம் "எங்குமுள" என்ற எடுத்துக்காட்டு வெண்பாவின்கீழ் "இனித் தீயின் சத்தியொன்றே" எனத் தொடங்கும் பகுதியில் கூறுவது காண்க.

இந்தச் சிவ சத்தியோ, குணியாகிய சிவபெருமானினின்றும் பிரிக்க இயலாதது. அவன் குணமாக நெருப்பிற் சூடுபோன்று நிற்பவள் இவள் சிவபெருமானை நோக்கி, "உன்னடியார் தாள் பணிவோம்" "அன்னவரே என் கணவர் ஆவார்", "நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில் உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்" "எய்யாமற் காப்பாய்

எமை", "பேதித்து நம்மை வளர்த் தெடுத்த பெய்வளை" "எம் கொங்கை நின் அன்பரல்லார் தோள் சேரற்க", "கங்குல் பகல் எம்கண் மற்றென்று காணற்க" என்றெல்லாம் பிரார்த்தனை செய்வது' - என்றுரைப்பது எவ்வாறு பொருந்தும்? திருமண நிகழ்ச்சியில் தாரை வார்க்கும் பொழுது நமக்கு வரும் கணவன் சிவநெறிக்கு மாறாக அமைந்து விடுவனோ என்று அஞ்சுவதாக பத்தொன்பதாம் திருப்பாட்டுக்கு அவர்கள் உரை கூறுகின்றனர். இதனைச் சிவசத்தியில் விண்ணப்பமாகக் கொள்வது எவ்வாறு ஏற்புடைத்தாகும்? இவ்விடங்களிலெல்லாம் மேற்குறித்த முன்னுரையாளர்கள் வலிந்தும், நெகிழ்ந்தும், பிறவாறு பொருள் கூறியும் செல்கின்றனர். அவையனைத்தும் ஏற்புடையனவல்ல என ஒதுக்குக.

திருப்பெருந்துறையினின்றும் தல யாத்திரையாகத் தில்லைக்குப் புறப்பட்ட நம் அடிகள் திருவண்ணாமலையை எய்தி அங்குச் சில காலம் தங்கி வழிபட்டார். அவர் தங்கிய காலத்தில் மார்கழித் திங்களில் திருவெம்பாவை உற்சவம் வந்தது. திருமணமாகாத இளம் பெண்கள் வைகறையில் துயிலுணர்ந்து இறைவன் புகழ்களைப் பாடியவாறு ஒரு குழுவாகப் பொய்கை சென்று நீராடி வழிபட்டதைக் கண்டார். அந்நிகழ்ச்சிகளையே ஈண்டுத் திருவெம்பாவையாகப் பாடி நமக்கு நல்கினார்.

பாவைப் பாடல்கள் வெண்டளையாலமைந்த நாற்சீரடிகள் ஐந்து முதல் பத்து முடியக்கொண்ட பாடல்களாலமைவனவாம். நம் அடிகள் எட்டடிகள் கொண்ட பாடல்களாக அமைத்துள்ளார்.

இதற்குச் ***"சத்தியை வியந்தது"*** என்று கருத்துரை மொழிந்தனர், நம் முன்னோர்.

திருச்சதகம் நூறு பாடல்கள் கொண்டது. அதையடுத்து ஐம்பது பாடல்கள் கொண்ட நீத்தல் விண்ணப்பத்தையும், பின்னர் இருபது பாடல்கள் கொண்ட பகுதிகளையும், அடுத்துப் பத்துப் பாடல்கள் கொண்ட பகுதிகளையும் நம் முன்னோர் அமைத்தனர். திருவெம்பாவை இருபது பாடல்கள் கொண்ட பகுதியில் முதலிடம் பெற்றுள்ளது. "நீத்தல் விண்ணப்பத்தின்" கருத்து பிரபஞ்ச வைராக்கியம். அஃதாவது "பாச நீக்கம்" பாசம் நீங்கிய பின் ஆன்மாவில் திருவருட் சத்தி பதியும். ஆதலின் இப்பகுதி ***"சத்தியை வியந்ததாயிற்று"***

"மலவிருளுற் றுறங்காமல் மன்னுபரி பாகரருள்
செலமுழுக வருகவெனச் செப்பல் திருவெம்பாவை"
என்பது பழைய திருப்பெருந்துறைப் புராணம்.

"திருவெம் பாவை தேசசத் திகளை
மருவி வியந்து வாய்மொழி பகர்ந்தது"
என்பது திருவாசகத் திருவுள்ளக்கிடை.

வெண்டலையான் வந்த இயற்றரவிணைக்
கொச்சகக் கலிப்பா

155. ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த் தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய் க

(இ - ள்)

ஒளி பொருந்திய அகலமான கண்களுள்ள அழகியே; எங்கள் பாவை போன்ற நங்காய்; நாங்கள் கூறுவதை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வாயாக; தோற்றமும் இறுதியும் இல்லா; அரிய பெரிய ஒளிப் பிழம்பாக உள்ள இறைவனை நாங்கள் புகழ்ந்து பாடுவதைக் கேட்ட பின்பும் உறங்குகின்றாயோ; அல்லது நின் காதுகள்தாம் செவிட்டுக் காதுகளோ; தெருவில் சிவபெருமானின் கழல்களணிந்த நீண்ட திருவடிகளை; நாங்கள் புகழ்ந்து பாடிய துதிப் பாடல்களின் ஒலியைக் கேட்ட உடனே (சிவபத்தி மிகுந்த ஒருத்தி); மலர்கள் நிறைந்த மஞ்சத்தினின்றும் புரண்டு எழுந்து; பத்தியால் தேம்பித் தேம்பி அழுது; பின் தன்வயமிழந்து; வேறு எச்செயலுமின்றி இவ்வாறு கிடந்தாள்; எங்கள் தோழியாகிய நின் தன்மை இவ்வாறுள்ளது; ஈதென்ன வியப்பு!

(வி - ரை)

இத்திருப்பாடலே; - வாள் தடங்கண் மாதே; எம்பாவாய்; ஓர்; ஏல்; ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதியை; யாம்பாடக் கேட்டேயும்; வளருதியோ; நின் செவிதான் வன் செவியோ; வீதிவாய்; மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்து ஒலி போய்க் கேட்டலுமே; போது ஆர் அமளியின் மேல் நின்றும் புரண்டு; விம்மி விம்மி மெய்ம்மறந்து; ஏதேனும் ஆகாள்; இங்ஙன் கிடந்தாள்; எம் தோழி பரிசு ஈதே: என்னே என்னே; - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

தோற்றுவாய்: திருவெம்பாவை விழாவில் நீராட விரும்பிய இள மங்கையர் சிலர், வைகறையில் துயிலுணர்ந்து, ஒரு குழுவாகச் சென்று பொய்கையில் நீராடி இறைவனே வழிபடுவதென்று தம்முள் முதல் நாளே ஏற்பாடு செய்துகொண்டனர். அவ்வாறு துயிலுணர்ந்த சிலர் சென்று இன்னும் உறங்குகின்ற பெண்களே ஒவ்வொருத்தியாகத் துயிலுணர்த்தித் தங்களுடன் சேர்த்துக்கொண்டு பொய்கை செல்லத் தொடங்கினர். அங்ஙனம் முதலில் துயிலுணர்த்தப் பெறுபவள் செய்தியுடன் நிகழ்ச்சி தொடங்குகின்றது.

வாள் தடங்கண் மாதே:- கண்கள் விழிப்பு நிலேயில் ஒளியுள்ளனவாயும் அகலமாயும் இருப்பன; துயில் நிலேயில் ஒளியின்றிச் சுருங்கி இருப்பன. வைகறையில் ஒளியுடன் கூடிய செஞ்ஞாயிறு அகலிடமெங்கும் விரிந்து செல்லும் ஒளிக்கதிர்களேப் பரப்பவுள்ள நிலேயில், கண்கள் அவற்றை ஏற்க ஒளியுடன் விரிந்து நிற்றல் வேண்டும். அவற்றுக்கு மாருக இருளும், சுருக்கமும் அமைய மூடிக் கிடத்தல் தக்கதன்று; உறக்கம் நீக்க அறிவுறுத்தும் பொருட்டு கண்களுக்கு அடை புணர்ந்தார். உனக்குக் கண்கள் பேரழகுடன் அமைந்திருத்தல் உறங்குவதற்கன்று என இடித்துரைத்தவாறுமாம். ***வாள்***- ஒளி; 48 -ம் திருப்பாடலில் "வாள் நிலாப்பொருள்" என்றதன் கீழுரைத்த இலக்கணக் குறிப்புகள் காண்க. ***தடங்கண்***- விசாலமானகண்கள். "தடவுங் கயவு நளியும் பெருமை"(தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - உரியியல் சூத்திரம் 320) ***"மாது - மாதர்***- அழகு. ஈண்டுப் பண்பாகு பெயராக அழகிய பெண்ணே உணர்த்திற்று.

எம்பாவாய் - எங்கள் பாவை போன்ற பெண்ணே! அழகு, பிறவிலேயே அமைவது; நான்முகன் படைப்பு. எல்லா உறுப்பும் முழு அழகுடன் அமைதல் மிக அருமை. பிறந்தபின் குறைந்த அழகுள்ள உறுப்புக்களை முழு அழகுள்ளனவாக மாற்றுதல் இயலாது. ஆனால் ஒரு பதுமை செய்யும் பொழுது அதன் ஒவ்வோருறுப்பும் முழு அழகுடன் அமைத்தல் சிறந்த சிற்பிக்குக் கைவந்த கலை. ஆதலின் முழு அழகுள்ள இளம் பெண்ணைப் "***பாவை***" என்று அழைப்பது மரபு. "பாவை போன்றவளே" என்பது பொருள். உவமையாகு பெயர். பேரழகுள்ளவளைப் பாவை என்று அழைப்பதை;

திருச்சிற்றம்பலம்

"சென்று மணிவா யிற்கதவஞ்
செறிய வடைந்த வதன்முன்பு
*நின்று "**பாவாய்!** திறவா" யென்*
றழைப்ப, நெறிமென் குழலாரும்
ஒன்றுந் துயிலா துணர்ந்தயர்வா
"ருடைய நாதன் பூசனைசெய்
துன்றும் புரிநூண் மணிமார்பர்
போலு மழைத்தா" ரெனத் துணிந்து;"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம் 338) என்பதிற் காண்க.

எம் - எங்கள் குழுவைச் சேர்ந்த. இடித்துரைத்தற்கான உரிமை பாராட்டியவாறு.

ஓர் ஏல் - ஏல்; ஓர் என்பதை ஓர் ஏல் என்று மாற்றிக் கொள்க. ***ஓர்*** - ஓர்தல்; உணர்தல் 5-ம் திருப்பாடலில் "கொள்" என்றதன் கீழுரைத்த இலக்கணக் குறிப்புக்கள் காண்க. முன்னிலை வினைமுற்று. "ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே" *(சிவபுராணம் 68)* என்று முன்னரும் கூறியது நினைக. ***ஏல்*** - ஏற்றுக் கொள்வாயாக. முன்னிலை ஏவல் வினைமுற்று. ***ஏலுதல்*** - ஏற்றுக் கொள்ளுதல். "நாங்கள் இனிக் கூறவுள்ளவற்றை

ஆராய்ந்து உண்மையுணர்ந்து ஏற்றுக் கொள்வாயாக” என்றவாறு. அவர்கள் கூறவுள்ளவற்றை இனிக் காண்க.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை - தோற்றமும் அழிவும் இல்லாததும் அரியதும் பெரியதுமான ஒளி. **ஆதியும் அந்தமும் இல்லா** - பதிப்பொருள் என்றும் உள்ளது. அதற்குத் தோற்றமோ, அழிவோ இல்லை. நித்தியப் பொருள். கால எல்லைக்குள் அடங்குவதன்று. **ஆதி** என்பதைத் தொடங்கும் இடமும் **அந்தம்** என்பதை முடியும் இடமும் எனக் கொண்டு இட எல்லைக்குள் அடங்காத நித்தியப் பொருள் எனலுமொக்கும். இறைவன் எங்கும் நிறைந்து எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள நிலை உணர்க.

அரும்- அரிய. **அருமை**- பாசஞானத்தாலும் பசு ஞானத்தாலும் உணர இயலாததாய் வாக்கு மனங்களுக்கு எட்டாமல் நிற்கும் தன்மை.

பெரும் - கால எல்லையுள்ளும் இட எல்லையுள்ளும் அடங்காது அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள ஞான சொரூபமாதலின் பெரும் என்றார். 30-ம் திருப்பாட்டில் “தனிச்சுடரே” என்றதன் கீழுரைத்தவை காண்க. **சோதி** - ஞானமயமானவன்.
ஈண்டு,

திருச்சிற்றம்பலம்

“துஞ்சு நாடுறந்து தோற்றமு மில்லா
சுடர்விடு சோதியெம் பெருமான்
நஞ்சு சேர்கண்ட முடையவென் னுதர்
நள்ளிருள் நடஞ்செயுந் நம்பர்
மஞ்சு தோய்சோலை மாமயி லாட
மாட மாளிகைதன்மே லேறிப்
பஞ்சு சேர்மெல்லடிப் பாவையர் பயிலும்
பாம்புர நன்னக ராரே”

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 1-41-4)

என்பது நினைக.

சோதியைத் திருமூல தேவநாயனர், 1. அண்டவொளி 2. பிண்டவொளி 3. அகண்டவொளி என மூவகைப் படுத்துவார். இவற்றுள் அண்டவொளி, ஞாயிறு, திங்கள், விண்மீன் முதலியவற்றிலுள்ளது; பிண்ட ஒளி, உடம்புடன் கூடிய உயிரறிவிலுள்ளது; அகண்ட ஒளி ஞானமயமாகி அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாயுள்ள இறைவனுவன். இதனே,

திருச்சிற்றம்பலம்

“அண்ட வொளியு மகண்ட வொளியுடன்
பிண்ட வொளியாற் பிதற்றும் பெருமையை
உண்ட வெளிக்கு ளொளிக்கு ளொளித்தது
கொண்ட குறியைக் குலேத்தது தானே”

திருச்சிற்றம்பலம்

(திருமந்திரம் 2806)

என்று விளக்குவது அவர் திருவாக்கு.

திருவெம்பாவையின் முதல் பாடலாகிய இத்திருப்பாடல் திருவண்ணுமலேயில் அருளிச் செய்யப்பட்டது என்பதும், அங்கு இறைவன் சோதி மலேயாய் நின்றதும், அவன் முடியும், அடியும் காணமுடியாது அயனும், மாலும் அயர்ந்து நின்றதும் நினேக. இதனுல் இறைவனின் சொரூப நிலே வழுத்தப்பட்டது.

யாம் பாடக் கேட்டேயும் - யாம் - மாதேவன் தமர் என்று உன்னுல் நன்கு அறியப்பட்ட நாங்கள். **கேட்டேயும்** - “கேட்டவுடன் நீ உருகியிருக்க வேண்டும். ஆனுல் நீ இன்னும் உறங்கிக் கொண்டுள்ளாய்” என்று இடித்துரைத்தவாறு. **கேட்டும்** - உம்மை இழிவு சிறப்பு. **ஏகாரம்** அசை.

வளருதியோ - வளருதல் - கண் வளர்தல்; உறங்குதல். நாங்கள் உரத்த குரலில் பலர் இணேந்து பாடுகின்றேம். இயல்பாக அவ்வொலியால் “உன் உறக்கம் கலேந்திருக்க வேண்டும். ஆனுல் நீ இன்னும் உறங்குகின்றுயே. இஃது ஏன்?” என்றவாறு.

நின் செவிதான் வன் செவியோ - அவ்வொலி உன் காதில் கேட்கவில்லே எனின் உன் காதுகள் செவிடோ என்று இடித்துரைத்தவாறு. **வன்மை** - ஓசையை ஏலாமை.

வீதிவாய் - நாங்கள் ஒரு குழுவாகத் தெரு வழியே உரத்த குரலில் பாடிக்கொண்டு உன் இல்லத்துக்கு வரும் வழியில், இந்த வீதியின் கண்ணே.

மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்து ஒலி போய் - தேவர்கள் அனைவருக்கும் தலைவனான சிவபெருமானின் திருவடிகளை வாழ்த்திக் கொண்டே வந்தோம்; அந்த வாழ்த்தொலி இத்தெருவிலுள்ள வீடுகளில் எல்லாம் பரவியது; அவ்விதம் பரவிய ஒலி சென்று நம் குழுவில் சேராதவளும் சிவபக்தி மிக்கவளுமாகிய ஒருத்தியின் காதில் புகுந்த பொழுது.

மாதேவன்- மகாதேவன், தொழப்படும் தேவர்களால் தொழப்படுபவன். "மகாதேவாய நம" என்பது சிவ அட்டோத்திர சத நாமங்களுள் ஒன்று.

திருச்சிற்றம்பலம்

"வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோம்
மாதேவா மாதேவா வென்று வாழ்த்தி
நீராண்ட புரோதாய மாடப் பெற்றேம்
நீறணியுங் கோலமே நிகழப் பெற்றேம்
காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்
கன்மனமே நன்மனமாய்க் கரையப் பெற்றேம்
பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணிகேட்கக் கடவோமோ பற்றற் றேமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-98-3)

என்பது நம் அரசுகள் திருவாக்கு.

மாதேவன்- "பெருந்தேவன்" என்பது பண்டைய வழக்கு. அப்பெயர் சிவபெருமானையே சுட்டும். அப்பெயரை வைத்துக் கொண்டவரே "பாரதம்" பாடிய பெருந்தேவனார். இதனால் இறைவனின் தடத்த நிலை வழுத்தப்பட்டது.

வார்கழல்கள் - வார் - நீண்ட.

"வார்தல் போகலொழுகன் மூன்று
நேர்பு நெடுமையுஞ் செய்யும் பொருள்"

(தொல்காப்பியம் - சொல்லதிகாரம் உயிரியல்: சூத். 317)

கழல் - தானியாகு பெயராக இறைவன் திருவடிகளை உணர்த்தி நின்றது. முன்னம் 33-ம் திருப்பாடலில் ***அப்பால் -*** என்றதன் கீழுரைத்தவை காண்க. **கேட்டலுமே -** கேட்ட உடனே. சிவபெருமானின் சிறந்த அடியவர்கள் என்று ஊர்மக்களால் அறியப்பட்ட நாங்கள் பலர் உரத்த குரலில் உன் இல்லத்தின் முன்பு நின்று பாடியும் நீ உறங்குகின்றாய்; நம் கூட்டத்தைச் சேராத சிவபத்திமிக்க ஒருத்தி தெருவில் நாங்கள் பாடிய சிவபரஞ்சுடரின் புகழைக் கேட்ட அளவில். ***போதுஆர் அமளியின் மேல்நின்றும் புரண்டு - போது ஆர் அமளி -*** புதிய பூக்கள் நிறையப் பரப்பப்பட்ட படுக்கை. படுக்கை வன்மையுடைதாயின் இடையிடையே உறக்கம் கலையும். மலர்களின் நறுமணமும் மென்மையும் விரைவில் ஆழ்ந்த உறக்கம் வருவிப்பன. துயிலுணர்ந்த பின்பும் விரைவில் எழவொட்டாமல் படுத்திருக்கச் செய்வன. அவ்வாறிருந்தும் இவள் இறைவன் புகழ்களைக் கேட்டவுடன் விழித்துச் செயல்பட்டாள். நீயோ இன்னும் உறங்குகின்றாய் என்று இடித்துரைத்தவாறு. **போது -** மலர்தற்குரிய நிலையிலுள்ள பெருமொக்கு. ஈண்டுப் புதிய மலர் குறித்தது. ***ஆர் -*** படுக்கையில் ஓரிடத்து மட்டுமன்றி மஞ்சம் முழுவதும் நிறையும்படி பரப்பப்பட்ட. ***அமளி -*** படுக்கை. ***மேல்நின்றும் -*** மலர் மஞ்சத்தின் மீது படுத்திருந்தும் கூட. ***உம்மை -*** உயர்வு சிறப்பு. ***புரண்டு -*** படுக்கையில் இருப்புக் கொள்ளாமல் வேதனையுடன் புரண்டு.

விம்மி விம்மி மெய்ம்மறந்து - தேம்பித் தேம்பி அழுது நினைவற்று. சிவ பத்தியின் மிகுதியால் படுக்கையில் வேதனையுடன் புரண்டது உடம்பின் செயல். இஃது அடியார்களின் அகத்திலக்கணம் பத்துள் ஒன்றான உடல் நடுக்கத்தால் எய்துவது. போற்றித் திருவகவல் 61-ல் "உடல் கம்மித்து" என்றதன் கீழுரைத்தவை காண்க. விம்மி விம்மி அழுதது உடல் மொழி

இரண்டன் செயல்கள். மெய்மறந்தது மனத்தின் செயல். முக்கரணங்களாலும் உலகியலினின்றும் விடுபட்டுச் சிவத்தைச் சார்ந்தவாறு.

ஏதேனும் ஆகாள்- வேறு எச்செயலும் இல்லாதவளாய். உலகியலினின்று முற்றும் விடுபட்டவளாய் பரமே பார்த்திருக்கும் சீவன் முத்த நிலை.

இங்ஙன் கிடந்தாள் - இவ்வாறு செயலற்றுக் கிடந்தாள். *கிடத்தல்* - மனம், மொழி, உடல் மூன்றும் செயலற்றுக் கல்லைப் போலக் கிடத்தல். ஈண்டு, இவளுக்கு மனமும் மொழியும் முற்றிலும் செயலற்றன. உடம்பில் உயிர்ப்பு ஒன்று மட்டும் நிகழ்ந்து கொண்டுள்ளது. அஃதும் இவள் செயலன்று. உடம்பில் உயிர் தங்கியிருத்தலின் தானே நிகழ்வது. ஆதலின் இவள் முற்றிலும் செயலற்றுள் என்றவாறு.

எம் தோழி பரிசு ஈதே! - *எம் தோழி* - எங்களால் சிறந்த சிவனடிமைத் திறம் வாய்க்கப் பெற்றவள் என்று நன்கு அறியப்பட்ட தோழியாகிய உன். *பரிசு* - இயல்பு. பலர் கூடி உயர்ந்த குரலில் சிவன் புகழ்களை உன் வீட்டின் முற்றத்தில் பாடக் கேட்ட பின்பும் உறங்கிக் கொண்டுள்ள உன் நிலை. *ஈதே* - இவ்வாறு உறங்கும் நிலையில் உள்ளது!

என்னே என்னே- இஃதென்ன வியப்பு! இத்தொடரில் முதலில் வரும் மெல்லொற்றை விலக்கிய புளி மாங்காய்ச் சீராக்கித் தளையமைதி கொள்க.

இத்திருப்பாடலில், படுக்கை, புலன் நுகர்ச்சியாகிய உலக இன்பத்தையும், வாழ்த்தொலி, திருவைந்தெழுத்து மந்திரோபதேசத்தையும், விம்முதல், ஆனந்தத் தழுந்துதலையும், மெய் மறத்தல், ஆனந்த பரவசத்தையும், ஏதேனும் ஆகாது கிடத்தல், ஆனந்தாதீதத்தையும் குறிப்பால் உணர்த்தி நின்றன.

இறைவன் திருவடி, திருவருளாகிய சத்தியைக் குறிக்கும். அச்சத்தி அருளின் உருவகம். "அருளது சத்தியாகும் அரன் தனக்கு" (சிவஞானசித்தியார் - சுபக்கம் சூ. 5 செய் 9) என்பது நம் ஞானசாத்திரம்.

இத்திருப்பாடலில் மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தப்படுதலின் திருவெம்பாவையின் கருத்தாகிய "*சத்தியை வியந்தது*" பெற்றும்.

156. பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்! நேரிழையீர்!
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய் உ

(இ-ள்)

"தகுதியான அணிகலன்களணிந்த பெண்ணே! எங்கள் பாவை போன்றவளே; நாங்கள் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வாயாக; நாம் உரையாடும் பொழுது, இரவும் பகலும் 'என்பற்று, மேலான ஒளிப் பிழம்பாகவுள்ள இறைவனிடத்ததே' என்று கூறுவாய். "எப்பொழுது இந்த மலர்கள் நிறையப் பரப்பிய படுக்கையினிடத்துப் பற்றுவைத்தனை;" "சீசி! நேரிழையார்களே! உங்கள் வாக்கில் வரும் எள்ளி நகையாடும் சொற்களில் இப்பொழுது நீங்கள் கூறியவை சிலவே போலும்! விளையாட்டாகக் கேலியுரை கூறுதற்கான காலம் இஃதோ; அமரர்களின் வழிபாடுகளைக் கண்டு நாணமடையும் செந்தாமரை மலர்கள் போன்ற திருவடிகளை, எளிய நமக்குத் தந்து அருள் செய்வதற்காக இந் நிலவுலகுக்கு எழுந்தருளி வந்த ஞானாசிரியனும், சிவலோக நாயகனும், தில்லையம்பதியில் திருச்சிற்றம்பலத்திலுள்ள; செல்வமும் அதிகாரமும் உள்ள இறைவன்மாட்டுத் திருவாத்தி மாலையைப் பெறும் அன்புரிமை உள்ளவர்கள் யாவர்; யாம் எத்தகையோம்"

(வி - ரை)

(முதலில் துயிலுணர்ந்த பெண்ணுடன் துயிலுணர்த்திய பெண்களும் கூடிச்சென்று அடுத்துள்ள இல்லத்தின் பெண்ணைத் துயிலுணர்த்துகின்றனர்; இனி வருவன அவர்கள் கூற்று.)

"நேரிழையாய்! எம்பாவாய்! ஓர்; ஏல்; நாம் பேசும் போது; இராப்பகல்; பாசம் பரஞ்சோதிக்கு என்பாய்; எப்போது இப்போதார் அமளிக்கே நேசமும் வைத்தனையோ?

(இனி வருவன துயிலுணர்த்தப்பட்டாள் கூற்று)

"நேரிழையீர்! சீசி; இவையுஞ்சிலவோ; விளையாடி ஏசும் இடம் ஈதோ; கூசும் விண்ணோர்கள் (நிற்க): ஏத்துதற்கு மலர்ப்பாதம்; தந்தருள வந்தருளும் தேசன்; சிவலோகன்; தில்லைச்சிற்றம்பலத்து ஈசனார்க்கு; அன்புடையார்; யாம் யார்" என்று இத்திருப்பாடலை அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

நேரிழையாய் - நேரிழை - தகுதியான அணிகலன்கள். தகுதி, ஈண்டு கன்னிப் பருவத்துக்கு உரியவை குறிக்கும். "மெட்டி" முதலியன கன்னிப்பருவத்தில் அணிவன அல்ல. திருமணமாகிக் கணவனுடன் இல்லறம் ஓம்பும் மகளிர் திருமாங்கலியத்தையும் மங்கல நாணையும், பிற கழுத்தணிகளையும், பிறர் கண்ணிற்பட அணியார்; விழிப்பு உறக்கம் முதலிய எல்லா நிலைகளிலும் அவை அவர்கள் மேலாடையில் உட்பகுதியில் இருக்கும். கன்னிப் பெண்கள் கழுத்தணிகள் மேலாடையின் வெளியில் பிறர் பார்க்கும்படி அணியப்படுவன. ஈண்டு உறங்கும் இக்கன்னிகையின் மார்பில் விளங்கும் அணிகளைக் கண்டு அவர் தோழியர் "***நேரிழையாய்***" என்று விளித்தனர். துயிலுணர்ந்த அவள் அவர்களை "***நேரிழையீர்***" என விளித்ததற்கும் இவ்வாறே பொருள் கொள்க.

நாம் பேசும்போது - இவர்கள் சிவனடிமைத் திறமிக்கவராதலின் இவர்கள் உரையாடலில் சிவபெருமானையும், அவன் அடியார்களையும் தவிர வேறு உலகியல் செய்திகள் இடம் பெறா. இத்திருப்பாடலிலும் அவ்வாறே அமைதல் காண்க. இதனை,

திருச்சிற்றம்பலம்

" செற்றவர் தம்மர ணம்மவற்றைச்
செவ்வழல் வாயெரி யூட்டிநின்றுங்
கற்றவர் தாந்தொழு தேத்தநின்றான்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளி
உற்றவர் தாமுணர் வெய்திநல்ல
வும்பருள் ளார்தொழு தேத்தநின்ற

பெற்றம ரும்பெரு மானையல்லாற்
பேசுவது மற்றொர் பேச்சிலோமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 1-5-9)

எனவரும் நம் ஞானபோனகர் வாக்கிற் காண்க.

இராப்பகல் - உலக வாழ்வு நடாத்தற்காகப் பொருளீட்ட வேண்டி உழைப்பதற்காக உள்ளது பகற்காலம். உழைப்பின் சோர்வு நீங்கி மறுநாள் உழைப்பதற்கான உடலுறுதி பெறுவதற்காக, உண்டு உறங்குவதற்காக உள்ளது இரவுக் காலம். உலக வாழ்வை உவர்த்து இனி உலகிற் பிறவாமை வேண்டும்; சிவனடியார்கள் இவ்விரு காலங்களையும் சிவபெருமானின் புகழைப் பேசும் தவத்திலேயே ஈடுபடுத்துவர். ஆதலின் ஈண்டு இரவும் பகலும் "பாசம் பரஞ்சோதிக்கே" என்றனர். **இரவும் பகலும்** என எண்ணும்மை விரித்துக்கொள்க. ஈண்டு,

திருச்சிற்றம்பலம்

"நனவினுங் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவே னம்மான்
புனல்விரி நறுங்கொன் றைப்போ தணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே
இதுவோ யெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின் னருளா வடுதுறை யரனே" 3

" கையது வீழினுங் கழிவுறினுஞ்
செய்கழ லடியலாற் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோ யெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின் னருளா வடுதுறை யரனே" 5

"உண்ணினும் பசிப்பினு முறங்கினும்நின்
ஒண்மல ரடியலா லுரையாதென்நாக்

கண்ணனுங் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலு மளப்பரி தாயவனே
இதுவோ யெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ வுனதின் னருளா வடுதுறை யரனே" 9

(திருமுறை 3 - 4)

"துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்தி ராதே
அஞ்செழுத் தோதினுளு மரனடிக் கன்ப தாகும்
வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா வமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார் நனிபள்ளி யடிக ளாரே"

(திருமுறை 4-70-5)

"ஈச னறியு மிராப்பக லுந்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களை
தேசுற் றறிந்து செயலற் றிருந்திட
ஈசன்வந் தெம்மிடை ஈட்டிநின் றானே"

திருச்சிற்றம்பலம்

(திருமந்திரம் 288)

என்பவற்றுட் காண்க.

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் - இரவும் பகலும் எம்பாசம் பரஞ்சோதிக்கு என்பாய். இப்பொழுது வைகறைப்பொழுது. இஃது இரவின் முடிவும் பகலின் தொடக்கமுமாகிய காலம். ஆதலின் இஃது இரவுமன்று; பகலுமன்று. எனவே, உன் பாசத்தைப் படுக்கைக்கு வைத்தனை போலும்! என்று அசதியாடியவாறு. வைகறைப் பொழுது இறைவனை வழிபடுவதற்கு மிகச் சிறந்த காலம். ஆதலின் இரவும் பகலும் பரஞ்சோதியைப் பரவுதலின் வைகறையில் பரவுதலே மிக விழுமியது என்றவாறு. ***பாசம்*** - பற்று; அன்பு. ஈண்டுப் பத்தி குறித்து நின்றது. ***பரஞ்சோதிக்கே*** - என்று பிரிநிலை ஏகாரம் விரித்துக் கொள்க. ஏகநாயக வழிபாட்டை வலியுறுத்தியவாறு. ***பரஞ்சோதி*** - 155-ம் திருப்பாட்டில் "அரும் பெரும் சோதி" என்பவற்றின் கீழுரைத்தவையும், போற்றித் திருவகவல் (155-ல்) "மற்றோர் பற்று இங்கு அறியேன்" என்றருளியதும் அதன் கீழுரைத்தவையும் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

"நின்றாலு மிருந்தாலுங் கிடந்தாலு நடந்தாலு
மென்றாலுந் துயின்றாலும் விழித்தாலு மிமைத்தாலு
மன்றாடு மலர்ப்பாத மொருகாலு மறவாமை
குன்றாத வுணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - பத்தராய்ப் பணிவார் புராணம் 7)

எனவரும் சேக்கிழார் பெருமான் திருவாக்கும் நினைக.

எப்போது இப்போது ஆர் அமலிக்கே நேசமும் வைத்தனையோ - ***எப்போது*** - வைகறையிலும் பகலிலும், மாலையிலும், இரவிலும் நம் பாசம் பரஞ்சோதிக்கே என்பாய்; ஆதலின் வேறு பொருட்களில் நேசம் வைத்தற்கு உனக்குப் பொழுது இல்லை; இருப்பினும் இப்பொழுது இந்தப் போதார் அமலிக்கு நேசம் வைத்துள்ளாய்; அவ்வாறு வைத்தற்கான பொழுது மேற்குறித்த வைகறை, பகல், மாலை, இரவு ஆகிய நான்கு பொழுதுகளைத் தவிர வேறு எந்தப் பொழுது? என்று அசதியாடியவாறு காண்க.

எப்போதும் - என்று முற்றும்மை பிரித்துக் கொண்டு, "இறைவனைத் தொழுதற்குச் சிறந்த காலமாகிய வைகறைப் பொழுதிலேயே நீ படுக்கைக்கு நேசம் வைத்தாய்! ஆதலின் பகல், மாலை, இரவு நேரங்களிலும் நீ உறங்குவாய்; இரவும் பகலும் பாசம் பரஞ்சோதிக்கே" என்ற உன் கூற்று வாய்மையற்றதாகின்றது எனலுமாம்.

இதற்கு, இவ்வாறன்றி "***ஆய்***" என்பதனைப் "***பாசம்***" என்பதுடனும் கூட்டிப் "பரஞ்சோதிக்கே ***பாசமாய் என்பாய்;*** இராப்பகல் நாம் பேசும் போது எப்போது" என்று கொண்டு; "நாம் பரஞ்சோதிக்கே பாசமாய், உணவு முதலியன கொள்ளாது உடம்பு எலும்புக் கூடாகி இரவும் பகலும் இறைவன் சீரைப் பாடுவது எப்பொழுது" என்று உரைத்தார் திரு.கா.சு. பிள்ளையவர்கள். ***என்பாய்*** - எலும்புக் கூடாகி.

எப்போதும் - என முற்றும்மை விரித்துக்கொண்டு "நாம் எத்தனை முறை உரையாட வாய்ப்புக் கிட்டினும்" என்றுரைப்பது கதிர்மணி விளக்கம்.

இப் போது ஆர் அமளிக்கே - இப்போதார் அமளி - இகரம் அண்மைச் சுட்டு. படுக்கையறையில் அவள் மஞ்சத்தின் அண்மையில் நின்று துயிலுணர்த்தினர் என்பதும், அதுவரை அவள் இறைவனைத் துதிக்கும் இசையொலி கேட்டும் துயிலுணரவில்லை என்பதும் போதரும். ***அமளிக்கே*** - ஏகாரம் பிரிநிலை.

நேசமும் - அமளியாகிய புலனின்பம் வைகறைப் பொழுதில் வெறுத்தொதுக்கத்தக்கது. அவ்வாறு வெறுத்தொதுக்காமையுமன்றி நேசமும் வைத்தனையோ என்றவாறு. ***நேசமும்*** - உம்மை இழிவு சிறப்பு.

(இனி வருவன துயிலுணர்தப் பெற்றாள் கூற்று)

நேரிழையீர் - தன்னை அவர்கள் "***நேரிழையாய்***" என்று விளித்ததற்கிணங்க இவள் அவர்களை "***நேரிழையீர்***" என விளித்தாள். அவர்கள் அனைவரும் திருமணமாகாதோர் என்பது நினைக.

சீசி - சீசி - என எள்ளற் குறிப்பேற்ற இடைச்சொல்லின் குறுக்கல் விகாரம். இறைவனைத் துதித்தற்குரிய இவ்வைகறை வேளையில் நீங்கள் உரைத்த பரிகாச மொழிகள் வெறுத்து ஒதுக்கற்குரியன என்ற பீடிகையுடன் பேசத் தொடங்குகின்றாள். இச்சொல்லை இப்பொருளில் "சீயேது மில்லா தென் செய்பணிகள் கொண்டருளும் தாயான ஈசன்" (திருவாசகம் 226) என்று நம் அடிகளே வழங்குவது காண்க.

இவையும் சிலவோ - இறைவனை வழிபடற்குரிய இவ்வைகறைப் பொழுதில் வீண் பொழுது போக்காக எள்ளி நகையாடற்குரிய பரிகாசச் சொற்கள் உங்களிடம் பெரும் எண்ணிக்கையில் உள்ளன போலும்; அவற்றுள் இப்பொழுது நீங்கள் இயம்பியவை சில போலும் என்றவாறு. மேலும் எள்ளல் மொழிகள் இயம்பாமல் தடை செய்யும் சதுரப்பாடு காண்க.

விளையாடி ஏசும் இடம் ஈதோ - "இவ் வைகறைப் பொழுது இறைவனை இறைஞ்சுதற்கு மட்டுமே அமைந்தது. இது விளையாடவும் பரிகசிக்கவும் ஏற்பட்ட காலம் அன்று" என்று மேலும் வலியுறுத்தி அவர்கள் கவனத்தைத் திசை திருப்பும் திறமை காண்க.

கூசும் விண்ணோர்கள் (நிற்க) - நாணமுறும் விண்ணுலக வாசிகள் காத்திருக்க. *கூசுதல்* - நாணுதல். "கூசும்" என்பதற்கு வினைமுதல் மலர்ப்பாதம். விண்ணுலகவாசிகள் போகம் முதலியவற்றை நல்கும் பதங்களை வேண்டியும்; பெற்றுள்ள பதங்களை இழந்து விடாமல் நிறுத்திக் கொள்ளவும் இறைவன் திருவடிகளை ஏத்துவர். அற்பப் பதங்களை விரும்பும் அவர்கள் செய்யும் வழிபாடுகளை ஏற்றுக் கொள்வதற்கு இறைவன் திருவடிகள் நாணமுற்றன என்றவாறு.

ஈண்டு முன்னம் 64-ம் திருப்பாடலில் "நெகும் அன்பில்லேன்" என்றதன் உரையில் எடுத்தாண்ட (திருமுறை 5-90-9) திருப்பாடல் பார்க்க.

விண்ணோர்கள் - மேலுலகங்கள் அனைத்திலும் வாழ்பவர்கள். நிற்க என்னும் ஓர் சொல் அவாய் நிலையாய் வருவித்துக் கொள்க.

ஏத்துதற்கு மலர்ப்பாதம் - எளியோமாகிய நாம் வழிபட்டுத் துதிக்கும் பொருட்டுச் செந்தாமரை மலர்கள் போன்ற தன் இரு திருவடிகளையும். *மலர்* - ஈண்டு செந்தாமரை மலர்களைக் குறித்தது. பண்பும் வடிவும் பற்றிய உவமைத் தொகை. *போன்ற* என்ற உவம உருபு விரித்துக் கொள்க.

தந்தருள வந்து அருளும் தேசன் - பாதங்களைத் தரும் பொருட்டு மானிடச் சட்டை தாங்கி வருவதாகிய அருள் பாலிக்கும் ஞானாசிரியன். *வருதல்* ஓர் அருளிப்பாடு; வந்தபின் திருவடிகளைத் தருதல் மற்றோர் அருளிப்பாடு. ஆதலின் "*அருள்*" என்பதை ஈரிடத்தும் புணர்த்தார். *தந்தருள வந்தருளும்* - அவற்றுள்,

> *"தருசொல் வருசொல் லாயிரு கிளவியுந்*
> *தன்மை முன்னிலை யாயி ரிடத்த"*
>
> (தொல்காப்பியம் - சொல்லதிகாரம் கிளவியாக்கம் - சூத். 29)

என்ற இலக்கணப்படி நமக்குத் தந்து அருள நம்பால் வந்து அருளும் என்றவாறு. யாவர்க்கும் மேலாம் இறைவன் நம்பால் வந்தாலும் அடியாரொடு ஒத்த நிலையினன்.

"தாவென் கிளவி யொப்போன் கூற்றே"

(தொல்காப்பியம் - சொல்லதிகாரம் எச்சவியல் - சூத். 446)

தேசன் - ஞான ஒளிமயமானவன். குருவாக மானிடச் சட்டை தாங்கி வருபவன். ***தேசன்*** - ஒளிமயமானவன் எனக்கொண்டு சொரூப நிலையை வழுத்தியவாறு எனலுமாம்.

சிவலோகன் - ஞானசிரியனாக வந்து, "நீ ஐம்புல வேடரின் அயர்ந்து மயங்கற்குரியனல்லன்; மன்னன் மைந்தன்" என்றுணர்த்திப் பக்குவ உயிரை மங்கலமாகிய வீட்டுலகிற் செலுத்துபவன். சிவஞானபோதம் எட்டாம் சூத்திரம் பார்க்க. ***சிவம்*** - மங்கலம். ***சிவலோகம்*** - மங்கலமாகிய வீட்டுலகம். ***சிவலோகன்*** என்றது இறைவனின் தடத்த நிலையை வழுத்தியவாறுமாம்.

தில்லைச் சிற்றம்பலத்து ஈசனுர்க்கு - தில்லைப் பதியில் உள்ள கோயிலில் சிற்றம்பலம் என்னும் ஆடரங்கில் எழுந்தருளியுள்ளவனும், எல்லாச் செல்வங்களும், அதிகாரங்களும் கொண்ட இறைவனுக்கு. தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள அம்பலவாணனைத் தரிசிக்க முத்தி என்ற வழக்கு நினைக. இறைவனின் தடத்த நிலையாகிய "***சிவலோகன்***" என்ற மூர்த்தம் கூறி, அதை வழிபடுவதன் பயனாகிய வீடுபேற்றை இவ்வுலகில் இப்பிறவிலேயே எய்தும் வழியாகத் தில்லைச் சிற்றம்பலத்து ஈசனிடம் ஆற்றுப்படுத்தும் உபதேசம் காண்க.

தேசு - இறைவனின் சொரூப நிலை எனலுமாம்.

அன்பு ஆர் யாம் ஆர் - ***அன்பு ஆர்*** என்பதை ***ஆர் அன்பு*** - என்று மாற்றிக் கொள்க. ***ஆர்*** - ஆத்திமாலை. ***அன்பு*** - அன்புரிமையுள்ள பத்தி. இறைவன் நின்மாலியமாகிய திருவாத்தி மாலையைப் பெற்றுக் கொள்ளும் அன்புரிமையுள்ள பத்தி, யார் மாட்டுள்ளது? அது சண்டீச நாயனார் ஒருவருக்கே உரியது. ***யாம் ஆர்*** - அதைச் சண்டீச நின்மாலியமாக பெற்றுக்கொள்ளும் பத்தியாவது நமக்குண்டோ எனில் அத்தகைய பத்தி எங்கே! நாம் எங்கே! நாம் அதற்கும் உரிமையுள்ளோமல்லோம் என்றவாறு. சண்டீச நின்மாலியம் ஆன்மார்த்த சிவபூசை செய்வோருக்கே உரியது என்ற மரபு நினைக.

இத்திருப்பாடலில், ***"மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும் தேசன்"*** என்று இறைவன் திருவடிகள் வழுத்தப்பெறுதலின் ***"சத்தியை வியந்தது"*** பெற்றும்.

157\. முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தனா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய் ௩

(இ - ள்)

"முத்துக்களைப் போன்ற வெண் பற்களுள்ள பெண்ணே; எங்கள் பாவை போன்றவளே! நாங்கள் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வாயாக; (முன் நாட்களில்) முன் எழுந்து எதிர்வந்து "என் தந்தை, இன்ப வடிவினன்; அழிவற்ற இறைவன்" என்று வாயூறி இனிக்கப் பாராட்டிப் பேசுவாய்; இப்பொழுது எழுந்து வந்து உன் படுக்கையறையின் வாயிலைக் கூடத் திறப்பாயல்லை;" "சிவனடியார் இலக்கணங்கள் பத்தும் நிரம்பியவர்களே, அவனுக்குப் பழைமையான அடியார்களே என் தோழியராவீர்; புதிய தொண்டுடைய எம் குற்றத்தை நீக்கி அடிமை கொண்டால் அது தீங்காகுமோ;" "நின் அன்புடைமை ஏமாற்று வேலையோ; அதனை யாமெல்லாம் அறியோமோ; நம் சிவபெருமானைத் தூய உள்ளமுடையார் புகழ்ந்து பாடாமலிருப்பரோ; உன்னைத் துயிலுணர்த்த வந்த எங்களுக்கு இவ்வளவும் வேண்டுவன".

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "முத்து அன்ன வெண்ணகையாய்; எம்பாவாய்: ஓர்; ஏல்; முன் எழுந்து எதிர்வந்து; என் அத்தன்; ஆனந்தன்; அமுதன்

என்று; அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்; வந்து உன் கடை திறவாய்;" "பத்து உடையீர்; ஈசன் பழ அடியீர்; பாங்கு உடையீர்; புத்து அடியேம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ; நின் அன்புடைமை எத்தோ; எல்லாம் அறியோமோ, நம் சிவனைச் சித்தம் அழகியார் பாடாரோ; எமக்கு இத்தனையும் வேண்டும்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

முத்து அன்ன வெண் நகையாய் - (இஃதும் இனி வருவனவும் துயிலுணர்த்த வந்த பெண்களின் கூற்று). துயிலுணர்த்தப் பெறும் பெண் முன் ஆண்டுகளில் மார்கழித் திங்கள் திருவெம்பாவை உற்சவ நாட்கள் எல்லாவற்றிலும், தன் குழுவைச் சேர்ந்த பெண்கள் அனைவருக்கும் முன்பு துயிலுணர்ந்து, பல் துலக்கி முகம், கை கால்கள் தூய்மை செய்து கொண்டு திருநீறு பூசியபின் வீதியில் தன் இல்லம் நோக்கிவரும் தன் தோழியர் குழுமுன் சென்று சேர்ந்து கொள்வாள். அப்பொழுது பாடிக் கொண்டு வந்த அவள் பற்களின் தூய்மையை "*வெண் நகையாய்*" என இன்று அவள் குழுவினர் விளித்தனர். பற்களின் தூய்மை கூறவே ஏனைய உடலுறுப்புகளின் தூய்மையும் பெற்றும். உபலக்கணத்தால் திருநீற்றின் வெண்ணிறமும் கொள்க. *நகை* - தொழிலாகு பெயராகப் பற்களை உணர்த்திற்று.

உவமையாகிய *முத்துக்கு* அடையின்றிப் பொருளாகிய நகைக்கு அடை புணர்த்தார். அது கள்ளமில் மனத்தைப் புறத்தே காட்டுவதாதலும்; அம்மனமே இறைவன் கோயில் கொள்ளத் தகுதியுள்ளதாதலும் கருதியென்க.

முத்து - சிப்பியினுள் இருப்பினும் அதனுடன் ஒட்டாது தனியே நிற்பதும்; பட்டை தீட்டப் பெருமலே விலை மதிப்புள்ளதும், தண்ணிய ஒளியுள்ளதுமாம். அஃது ஈண்டு, இப்பெண் தன் தோழியர் குழுவில் கூடியிருப்பினும் அவர்கள் போல் உலகியல் இன்பமாகிய போதார் அமலிக்கு நேசமற்றவளாய்த் தனித்து நிற்பதும்; தவம் முதலியவற்றுலன்றி தான் பிறந்து வளரும் சைவக் குடும்பச் சார்பால் இயல்பாகவே சிவ பத்தியாகிய மதிப்புடையவளாய்த் திகழ்தலும் நினைக.

முத்து, பிறந்தவிடத்துப் பயன்படாது வேறிடம் சென்று அங்கு அணிவோர்க்குப் பயன்படும். இதனை,

" சீர்கெழு வெண்முத்தம் அணிபவர் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதாம் என்செயும்
தேருங்கால் நும்மகள் நுமக்காங் கனையளே"

(பாலைக்கழி)

என்று சங்க இலக்கியம் சாற்றும். திருவெம்பாவை விழாவில் நீராடும் இப்பெண்களும் பின் திருமணமாகிப் புகுந்த இல்லங்களைச் சிவநெறியால் சிறப்புறச் செய்வர். மேலும் முத்துக்கள் போலன்றித் தாங்கள் பிறந்த குடும்பங்களுக்கும் பெருமை சேர்ப்பர் - என்னும் குறிப்புப் பொருளும் காண்க.

இளம் பருவத்தினரின் பற்கள் வெண்ணிறமாயிருத்தற்கான காரணம் முன்னம் போற்றித் திருவகவல் (30-ல்) "வெண் நகை" என்றதன் கீழுரைத்தாம்.

முன் எழுந்து எதிர் வந்து:- முந்தைய ஆண்டுகளில் திருவெம்பாவை உற்சவ நாட்களில் எங்களுக்கு முன்பாகவே துயிலுணர்ந்து உன்னைத் துயிலுணர்த்தத் தெருவில் வந்து கொண்டிருந்த எங்களை எதிர்நோக்கி வந்து. *முன்* - என்றது காலத்தைக் குறித்து நின்றது. அதை மீண்டும் ஒருமுறை யோதி யாங்கள் எழுமுன்பாகவே எனவும் கொள்க.

*என் **அத்தன்**, ஆனந்தன், **அமுதன்** என்று.* என்-என்பது சிவபத்தியின் முதிர்வால் எய்திய உரிமை குறித்து நின்றது. அதை அத்தன், ஆனந்தன், அமுதன் என்ற ஒவ்வொன்றன் முன்பும் புணர்க்க. இதனைத் துயிலுணர்த்தப் பெற்றாள் கூற்றாகக் கூறியது தம்மினும் அவளுக்கு இறைவன்பாலுள்ள சிறப்புரிமையை உணர்த்தியவாறு. ***அத்தன்*** - தந்தை. உலகியல் தந்தை தன் மகனை உணவு, உடை, கல்வி முதலியவற்றால் ஓம்பிச் சான்றோனாக்குவன். அவன் தொடர்பு இப்பிறவியுடன் ஒழிவது. உயிரின் தந்தையாகிய சிவபெருமான் உயிர்களை மல பந்தங்களினின்று விடுவித்து வீடுபேறு தருபவன். அவன் தொடர்பு முத்தியிலும் நிலைத்திருக்கும் தன்மையது. இறைவனைத் தந்தை என்ற பொருளில் "***அத்தன்***" என வழங்குவதை,

திருச்சிற்றம்பலம்

" ஆரூ ரத்தா ஐயாற் றமுதே அளப்பூ ரம்மானே
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவிற் கருகா வூரானே
பேரூ ருறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே
பாரூர் பலரும் பரவப் படுவாய் பாசூ ரம்மானே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 7-47-4)

எனவரும் நம் நம்பிகள் நற்றமிழிற் காண்க.

ஆனந்தன் - தன்னைச் சார்ந்த உயிர்களுக்கு முடிவிலாப் பேரின்பத்தை நல்கும் இன்ப வடிவினன். "வரம்பிலின்பமுடைமை" அவன் எண் குணங்களுள் ஒன்றும். தந்தையின் செல்வம் மக்கட்குரியது. அவ்வின்பம் உனக்கு உரியது என்பது குறிக்க. **அத்தன்** என்றதன் பின் **ஆனந்தன்** என்றார். **அமுதன்** - அழிவற்றவன். அவன்தரும் ஆனந்தமும் அழிவற்றது என்றவாறு. அதை "உலப்பிலா ஆனந்தமாய தேன்" என்பார் பின்னரும் (திருவாசகம் 542).

அள் ஊறித் தித்திக்கப் பேசுவாய் - வாயூறி மதுர மொழிகளால் பாராட்டிப் பேசுவாய். **அள்ளூறுதல்** - சுவையான உணவுப் பொருள்களை நினைத்த பொழுதே வாயில் உமிழ்நீர் ஊறுதல், ஈண்டு மனத்தால் நினைக்கும் பொழுதே இன்பமளிக்கும் சிவபெருமானைப் புகழ்ந்து பேசும் வாயில் ஊறும் உமிழ் நீர் குறித்து நின்றது. ஆதலின் அவன் புகழ் மிக்க பேச்சுக்கள் தித்திப்பவாயின. அவன் நினைவே உள்ளம் அள்ளூறச் செய்வதாகும். அதனை,

திருச்சிற்றம்பலம்

" அன்பி னஞ்ச மைந்துட னாடிய
என்பி னானை யுரித்துக் களைந்தவன்
அன்பி லானையம் மானையள் ளூறிய
அன்பி னுனினைந் தாரறிந் தார்களே"

(திருமுறை 5-80-3)

"உருமூன்று யுணர்வின்க ணொன்று ஞானை
ஓங்கார மெய்ப்பொருளை யுடம்பி னுள்ளால்
கருவீன்ற வெங்களவை யறிவான் றன்னைக்
காலனைத்தன் கழலடியாற் காய்ந்து மாணிக்
கருளீன்ற வாரமுதை யமரர் கோனை
யள்ளூறி *யெம்பெருமா னென்பார்க் கென்றுந்*
திருவீன்ற தென்பரம்பைக் குடியின் மேய
திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே"

(திருமுறை 6-86-3)

"அற்புதத் தெய்வ மிதனின்மற் றுண்டோ
அன்பொடு தன்னையஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் **துள்ளமள் ளூறுந்**
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 9-13-3)

என்பவற்றுட் காண்க.

தித்திக்க - சிவநினைவால் உள்ளம் உருகி இனிமை பயக்க, அதன் மதுரச் சுவை பேச்சிலும் வெளிப்பட்டது. அவை **என் அத்தன், ஆனந்தன், அமுதன்** என்ற மொழிகள். *பேசுதல்* - துதிப் பாடலில் மட்டுமன்றி உரையாடலிலும் இறைவன் திருநாமங்களின் மதுரச் சுவையை வெளிப்படுத்துதல். அவை மொழிவோர்க்கு மட்டுமன்றிக் கேட்போருக்கும் தித்திப்பன.

வந்து உன் கடை திறவாய் - இங்ஙனம் சென்ற ஆண்டுகளில் திருவெம்பாவை உற்சவத்தில் எங்களுக்கு முன் எழுந்து, தூய்மை செய்து

கொண்டு திருநீறணிந்து தெருவில் எங்களை எதிர் கொண்டு சிவ நாமங்களை வாயூறப் பேசிய நீ, இன்று நாங்கள் உன் இல்லத்தில் உன் பள்ளியறையின் முன் நின்று பாடி உன்னைத் துயிலுணர்த்தியும் அறையின் கதவைக்கூடத் திறவாமல் உறங்குகின்றாய் என்றவாறு. *வந்து* - உறக்ககம் நீத்துப் படுக்கையினின்று எழுந்து வந்து. *கடை* - அறையின் கதவு. *திறவாய்* - திறந்தாயல்லை. இதை ஏவல் வினைமுற்றாகக் கொண்டு "திறப்பாய்" எனலுமாம்.

(இனி வருவன துயிலுணர்த்தப் பெற்றவள் கூற்று)

பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர் - சிவபெருமான் அடியவரிலக்கணம் பத்தும் நிரம்பிவர்களே; அவனுக்குத் தொன்மையான தொண்டர்களே, என் தோழியரே. *பத்து* - சிவனடியார்க்குரிய இலக்கணங்கள். அவை அக இலக்கணங்கள் பத்து என்றும் புற இலக்கணங்கள் பத்து என்றும் இருபதாகக் கூறப்படுவன. ஈண்டு அவை அனைத்தையும் கொள்க. அவற்றை முன்னம் போற்றித் திருவகவல் *(61-ல்)* "உடல் கம்பித்து" என்றதன் கீழுரைத்தாம். *பத்தும்* - என்பதிலுள்ள முற்றும்மை தொகுத்தலாயிற்று. *ஈசன்* - சிவபெருமான். இதை, இடைநிலை விளக்காக ***ஈசனுக்குப் பத்துடையீர்; ஈசன் பழ அடியீர்*** - என இருபாலும் புணர்த்துரைக்க.

பழ அடியீர் - எந்தை தந்தை தந்தையெங் கூட்டமெல்லாம் தம்பிரான் நீரே எனக்கொண்டு, மழவிடையார்க்கு வழி வழி ஆளாய் வரும் தொன்மையான சிவனடியார்கள். "ஆயும் பழையார்" என்பது கந்தர் கலிவெண்பா *(121)*.

பாங்குடையீர் - என் தோழியரே. நீங்கள் என் தோழியராதலின் புத்தடியேனாகிய யான் திருவெம்பாவை உற்சவ நாளில் வைகறையிலும் உறங்கிக் கொண்டிருந்ததையும்; நீங்கள் வந்து துயிலுணர்த்திய பின்பும் விழித்தெழுந்து கதவைத் திறவாமையையும் பொறுப்பீர் என்பது குறிப்பு. *பாங்கு* - தோழமை. எல்லாம் நிரம்பிய தன்மையுமாம். ***புத்து அடியேம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ? - புத்து அடியேம்*** - உங்களைப் போன்று வழிவழி ஆளாகாமல் புதியவர்களாகச் சிவபெருமானுக்கு ஆட்பட்டவர்கள். ஆதலின் எங்களிடம் குறைபாடுகள்

இருக்கும் என்றவாறு. ***அடியேம்*** - என்ற பன்மை தன் போன்ற ஏனையோரையும் உளப்படுத்திக் கூறியது.

புன்மை - திருவெம்பாவை உற்சவநாளில் வைகறையில் உறங்கியது; நீங்கள் வந்து துயிலுணர்த்தியும் எழாதது; அறையின் கதவைக் கூடத் திறவாமல் உங்கள் அனைவரையும் காக்க வைத்து வைகறைப் பொழுதின் ஒரு பகுதியை உங்கள் அனைவருக்கும் வீணாக்கியது ஆகிய குற்றங்கள். ***தீர்த்து ஆட்கொண்டால்*** - இக்குற்றங்களைப் பொறுத்து இனி அவ்வாறு நடவாமல் என்னைத் திருத்தி என்னை உங்கள் அடிமையாக ஏற்றுக் கொண்டால்.

பொல்லாதோ - அவ்வாறு திருத்தி ஆட்கொள்ளுதல் தீமையாகுமோ? "பொல்லாததோ" எனற்பாலது "*பொல்லாதோ*" எனக் குறைந்து நின்றது. ***பொல்லாமை*** - தீமை.

(இனி வருவன துயிலுணர்த்தியோர் கூற்று).

நின் அன்பு உடைமை எத்தோ - நீ, உன்னைப் புன்மைகள் நிறைந்த புதிய அடிமை என்று கூறிக் கொள்கின்றாய். அவ்வாறாயின் முன் ஆண்டுகளில் திருவெம்பாவை உற்சவ நாட்கள் அனைத்திலும் நீ எங்களுக்கு முன்பாகத் துயிலுணர்ந்து தூய்மை செய்து கொண்டு இல்லத்தை விட்டு வெளியே வந்து இறைவனை, "என் அத்தன்; ஆனந்தன்; அமுதன்" என்றெல்லாம் வாயூறித் தித்திக்கப் பேசிக்கொண்டு எங்களை எதிர் கொண்டனையே; அவ்வன்புச் செயல்கள் அனைத்தும் வெறும் ஏமாற்று வேலையான போலிச் செயல்கள்தாமோ? ***எத்துதல்*** - ஏமாற்றுதல்; ***எத்தர்*** - ஏமாற்றுவோர். இதனை,

திருச்சிற்றம்பலம்

"புத்தராய்ச்சில புனைதுகி லுடையவர் புறனுரைச்சமணாதர்
எத்தராகிநின் றுண்பவரியம்பிய வேழைமை கேளேன்மின்
மத்தயானையை மறுகிடவுரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்
தத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே தீச்சரமடைம் மின்னே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 2-107-10)

என வரும் நம் ஆளுடைய பிள்ளையார் வாக்காலறிக.

எல்லாம் அறியோமோ? - பன்னாள் நின்னுடன் பழகிய நாங்கள் நீ முன் ஆண்டுகளில் எங்களுக்கு முன்பே துயிலெழுந்து வந்து எங்களை எதிர் கொண்டது; இறைவன் திருநாமங்களை வாயூறித் தித்திக்கப் பேசியது ஆகிய எல்லாம் உண்மை அன்பால் நிகழ்ந்தவை; போலியான ஏமாற்று வேலை அன்று என்பதை அறிய மாட்டோமோ? அறிவோம். ஓகாரம் உடன்பாடு குறித்த வினாப் பொருளில் வந்தது.

நம் சிவனைச் சித்தம் அழகியார் பாடாரோ? - சித்தம் தூயவர்கள் நம் சிவபெருமானைத் துதித்துப் பாடுவார்கள் அல்லரோ? நம் - பத்தி முதிர்வால் வரும் அன்புரிமை குறித்து நின்றது. ***சிவன்*** - மங்கலம் செய்பவன். ***சித்தம் அழகியார்- சித்தம்*** - ஈண்டு நெஞ்சம் என்ற பொருளில் வந்தது. நெஞ்சுக்கு அழகு தூய்மையுடைமை. தூய நெஞ்சினர் "***சித்தம் அழகியரானவர்***" - நெஞ்சம் தூயராகிச் சிவ பத்தியில் திளைப்போர் உரிய காலத்தில் சிவபெருமான் புகழைப் பாடுவர் - என்றவாறு. முன் ஆண்டுகளில் நீ அவ்வாறு வாயூறித் தித்திக்கப் பேசிய உன் மெய்யன்பை நாங்கள் அனைவரும் அறிவோம் என்றவாறு. சித்தத்தின் தொழில்கள் பற்றி முன்னம் 30-ம் திருப்பாட்டில் "சிந்தனை" என்றதன் கீழுரைத்தாம்.

இப் பெண் மெய்யன்பிளளாயின் முன் ஆண்டுகளிற்போல முன் எழுந்து எதிர்வந்து இறைவனை வாயூறித் தித்திக்கப் பேசாமல் இவ்வாண்டு துயிலுணர்த்தியும் எழாமலும் கதவு திறவாமலும் உறங்கிய காரணம் என் என ஓர் ஐயம் நிகழ்தல் இயல்பே; அதுபற்றி உரைப்பாம்.

ஒருவர் சீவன்முத்த நிலையை எய்திவிட்டனரேனும்; தனித்திருப்பின், அவ்வப்பொழுது வாசனாமலம் வந்து தாக்கும்; பின்னர் அம்மலமே முழு ஆணவமலமாக வளர்ந்து அவரை உலகியலிற் செலுத்திவிடும். ஆதலின் அத்துன்பத்தினின்றும் தப்புதற்குத் தம்மையொத்த சீவன் முத்தர்கள் கூட்டத்திலிருந்தும் சிவ வேடத்தையும், திருக்கோயிலையும் சிவபெருமானாகவே நினைந்து வழிபட வேண்டும் என்று சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரம் ஆற்றுப்படுத்துகின்றது. சீவன்முத்தர் நிலை பற்றி முன்னம் 38-ம் திருப்பாடலில் "பூசிற்றான்" என்பதன் கீழுரைத்தாம். இந்நெறி சீவன் முத்தர்க்கன்றி ஏனைய மெய்யடியார்களுக்கும் பொருந்துவதாகும். அவர்களுக்குச் சீவன்முத்தர் கூட்டம் கிட்டாதாயினும்

தம்மையொத்த ஏனைய அடியார்கள் கூட்டத்தில் கலந்திருந்து சிவவேடத்தையும், திருக்கோயில்களையும் சிவபெருமானாகவே நினைந்து வழிபட வேண்டும்.

இத்திருப்பாடலில் குறிப்பிடப்படும் பெண் சிறந்த சிவபக்தியுடைய வளாயினும் சென்ற ஆண்டு திருவெம்பாவை விழாவில் நீராடல் முதலியன நிறைவுற்றபின் தன் தோழியரைப் பிரிந்து தன் இல்லத்தில் தனித்திருந்தாள்; ஆதலின் அவள் உலக இன்பமாகிய போதார் அமளிக்கு நேசம் வைத்தாள்; துயிலுணர்த்தியும் எழாமலும் கதவைத் திறவாமலும் துயின்றாள் என்பன உய்த்துணரப்படும்.

அவையொக்கும், இவள் தோழியர் இவள் ஒருத்தியே சிறந்த சிவனடிமைத் திறமுள்ளவள் என்றும்; தாங்கள் அனைவரும் இவள் கூறும் புன்மைகள் உள்ளவர் என்றும் கூறுதலின் அவர்கள் குழு எங்கள் மெய்யடியார் குழுவாகும் எனின்; அதை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குதும். சான்றோர் ஒருவர் பலருக்குத் திருநீறு நல்குகின்றார். ஒருவன் அதைத் தன் இடக்கரத்தாலேற்பின் அது புன்மைச் செயல். இடக்கரம் அத்துணை இழிந்தது. வலக்கரத்தால் ஏற்பின் அது மரியாதைக்குறைவான செயல். தனித்து நிற்கும் வலக்கரம் ஓர் குறைபாடுள்ளது. இருகரங்களாலேற்பின் அது மிக விழுமிய செயலாக ஆன்றோர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவது. இப்பொழுது வலக்கரத்துடன் சேர்ந்த இடக்கரம் தன் புன்மை முற்றும் இழந்து வலக்கரத்துக்குள்ள குறைபாட்டையும் நிரப்புகின்றதன்றோ? அவ்வாறே அடியார் திருக்கூட்டத்தில் ஒவ்வொருவரிடமும் ஏதேனும் குறைபாடுகள் இருப்பினும் குழுவாகக் கூடிய ஞான்று அக்குறைபாடுகள் அனைத்தும் நீங்குவதுடன் ஒவ்வொருவரிடமுமுள்ள நல்லியல்புகளின் குறைவுகளும் நிறைவுறுகின்றன. இங்குக் குறிப்பிட்ட பெண்கள் கூட்டத்திலும் அவ்வாறு ஒவ்வொருவர் குறைகளும் நீங்கி நல்லியல்புகள் நிறைதலின் அவர்கள் கூட்டம் மெய்யடியார்கள் கூட்டமாகின்றது.

எமக்கு இத்தனையும் வேண்டும் - எங்களிடம் இருப்பதாக நீ குறிப்பிட்ட பத்துடைமை, ஈசன் பழஅடிமை முதலியன எங்கள் மாட்டு இல்லை. அவை அனைத்தும் எங்களுக்கும் அமைய வேண்டுவன. என்றவாறு.

இத்திருப்பாடலில், அடியார்கள் இலக்கணமாகிய பத்துடைமை குறிப்பிடப்படுகின்றது. அவ்விலக்கணம் திருவருளால் வருவது. திருவருள் சத்தியாகும். ஆதலின் **"சத்தியை வியந்தமை"** பெற்றும்.

158. ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றே
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய் ௪

(இ - ள்)

"ஒளி பொருந்திய முத்துக்களைப் போன்ற பற்களுள்ள பெண்ணே; எங்கள் பாவை போன்றவளே; நாங்கள் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக்கொள்வாயாக; இன்னும் விடியவில்லையோ"; "அழகிய கிளியின் மொழிபோன்ற சொற்களுள்ள பெண்கள் அனைவரும் இங்கு வந்துவிட்டனரோ"; "வந்துள்ளவரை எண்ணிக் கணக்கிட்டு உள்ள வண்ணம் தெரிவிப்போம்; கணக்கிட்டுத் தெரிவிக்கும் அத்துணை நேரமும்; நின் விழிகளை மூடித் துயில்கொண்டு; இறைவன் புகழ்களைப் பாடுதற்குரிய காலத்தை வீணாகக் கழிக்காமல், மேலுக வாசிகளுக்கு ஒப்பற்ற அமிழ்தமாக உள்ளவனும்; மறையாகமங்களின் சிறந்த பொருளாக உள்ளவனும்; காண்பார் விழிகளுக்கு இனிய காட்சி நல்குபவனுமாகிய; சிவபெருமானைப் புகழ்ந்துபாடி; நெஞ்சம் அசைவின்றி நிற்க; உள்ளே நெகிழ்ந்து கசிந்து உருகுவதில் ஈடுபட்டுள்ள நாங்கள்; வந்துள்ளாரை எண்ணிக் கணக்கிட்டுக் கூறுவதற்கு ஒல்லோம்; நீயே எழுந்து வந்து; எண்ணிக் கணக்கிட்டுக் குறையுமாயின் மீண்டும் உறங்குவாயாக"

(வி - ரை)

இத்திருப்பாடலை, "ஒள்நித் திலநகையாய்; எம் பாவாய்; ஓர்; ஏல்; இன்வம் புலர்ந்தின்றே வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ;

உள்ளவா எண்ணிக்கொடு சொல்லுகோம்; அவ்வளவும்; கண்ணைத் துயின்று; காலத்தை அவமே போக்காதே; விண்ணுக்கு ஒரு மருந்தை; வேத விழுப்பொருளை; கண்ணுக்கு இனியானைப் பாடி; உள்ளம் நின்று; உள் நெக்குக் கசிந்து உருக; யாம் மாட்டோம். நீயே வந்து எண்ணிக்குறையில் துயில்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

ஒள்நித் திலநகையாய் - இஃதும் அடுத்து வரும் "இன்னும் புலர்ந்தின்றோ" என்பதும் துயிலுணர்த்தும் பெண்களின் கூற்று. உவமையாகிய *நித்திலத்துக்கு* அடை புணர்ந்து பொருளாகிய *நகையை* வாளா கூறினர். இத்தனை பேர் குழுவாகப் பாடிக்கொண்டு வந்து பள்ளியறை முன் நின்றும் அவள் அறையின் கதவைத் திறந்திலள்; இன்னும் உறங்கிக் கொண்டிருத்தலின் பல் துலக்குதல் கூடச் செய்திலள் என உய்த்துணர்தலின், பல்லுக்கு ஒளிபுணர்த்தாமல் *நகையாய்* என்றனர்.

நித்திலம் - முத்து. நகைக்கு முத்துக்களை உவமை கூறுவதை;

திருச்சிற்றம்பலம்

"முத்தி லங்குமுறு வல்லுமை யஞ்சவே
மத்த யானைமறு கவ்வுரி வாங்கியக்
கத்தை போர்த்தகட வுள்கரு காவூரெம்
அத்தர் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 3-47-1)

என வரும் கவுணியர்கோன் திருவாக்கிற் காண்க.

இன்னம் புலர்ந்தின்றோ - இருள் நீங்கி விடியும் நிலையிலும் உறக்கம் மேற்கொண்டிருத்தலைச் சுட்டிக் காட்டியவாறு. *இன்னம்* - இன்னமும் என இழிவு சிறப்பும்மை விரித்துக்கொள்க. *புலர்ந்தின்றோ* - "புலர்ந்தது இன்றோ" என்பதிலுள்ள தகரம் கெட்டுப் புலர்ந்தின்றோ என நின்றது. ஓகாரம் எதிர்மறை குறித்த வினாப் பொருளில் வந்தது. உனக்கு இன்னும் நற்காலம் வரவில்லையோ என்பது தொனிப்பொருள்.

(இனி வருவது துயிலுணர்த்தப்பெற்ருள் கூற்று)

வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ - நம் குழுவைச் சேர்ந்த பெண்கள் அனைவரும் வந்து விட்டனரோ? உறக்கம் கலைந்த பின்பும் மஞ்சத்தை விட்டு எழ மனமின்றிப் படுத்த நிலையிலேயே இவள் இவ்வாறு வினவுகின்ருள். **வண்ணம்**- அழகு. இதைக் *கிளி; மொழியார்* இருவருக்கும் பொருத்திக் கொள்க. **வண்ணம்** - என்பதை ஓசை வேறுபாட்டால் வரும் அழகு எனக்கொண்டார் திரு. பாரதியாரவர்கள். வண்ணக் கவிகள் போன்றவை நினைக. **வண்ணம்** - நற்குணங்கள் என்பது கதிர்மணி விளக்கம்.

கிளியின் மொழியினினிமையை,

திருச்சிற்றம்பலம்

"தேனைக்குங் கிளிமழலை யுமைகேள்வன் செழும்பவளந்
தானைக்குந் திருமேனி தழலுருவாஞ் சங்கரனை
வானைக்கும் வளர்மதிசேர் சடையானை வானேர்க்கும்
ஏனேர்க்கும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4-7-2)

என வரும் நம் அரசுகளின் அமுத மொழியிற் காண்க.

உள்ளவா எண்ணிக் கொடு சொல்லுகோம்- இது துயிலுணர்த்தியோருள் ஒருத்தி கூற்று.

நேற்றிரவு நாங்கள் துயிலுமுன் சிவபெருமானின் திருநாமங்களை துதித்துக்கொண்டு பள்ளி கொண்டோம்; படுத்த பின்பும் அவனையே சிந்தித்துக் கொண்டிருந்த வண்ணம் உறங்கி விட்டோம்; வைகறையில் துயிலுணர்ந்த பின்பும் அவன் புகழ்களை நினைந்தும், பாடியும் பல்துலக்கித் தூய்மை செய்துகொண்டு குழுவாக இங்கு எய்தினேம். ஆதலின் வந்துள்ளோரைக் கணக்கிட்டுக் கூற இதுவரை எங்களுக்கு எண்ணமோ அவகாசமோ இல்லை; இப்பொழுது நீ கேட்பதால் எண்ணிக் கொண்டு கணக்கிட்டது சரியா என்று பார்த்தபின் உனக்குக் கூறுகின்றோம்; என்றவாறு. இவ்விடையில் துயிலுணர்த்தப் பெறுபவளின் சோம்பல் சுட்டிக்

காட்டப்படும் நுட்பம் காண்க. ***உள்ளவா***- எண்ணிக் கணக்கிட்ட விடையைச் சரிபார்த்துச் சரியான விடையை "உள்ளவாறு" என்பதன் ஈறு கெட்டது. கொடு - கொண்டு என்ற துணை வினையின் இடைக் குறை விகாரம்.

அவ்வளவும் கண்ணைத் துயின்று காலத்தை அவமே போக்காதே - ***அவ்வளவும்*** - நாங்கள் எண்ணிக் கணக்கைச் சரிபார்த்து உனக்கு விடை கூறச் சிறிது நேரமாகும்; அதுவரை நீ உன் படுக்கை இன்பத்தை அனுபவிக்க எண்ணுகின்றாய். ***கண்ணைத் துயின்று*** - விழிகளை மீண்டும் மூடிக்கொண்டு உன் உறக்கத்தைத் தொடர்ந்து. ***காலத்தை அவமே போக்காதே*** - நாங்கள் எண்ணிக் கணக்குச் சரிபார்த்து உனக்கு விடை கூறுவதற்காகும் காலத்தை வீணாக்காமல். ***அவமே போக்குதல்***- வீணாக்குதல். அக்காலம் இறைவனைப் பாடாமல் துயில்வதால் உனக்கு வீணாகின்றது. பாடிக் கொண்டிருக்கும் எங்கள் தொண்டு என்னும் பணியில் ஈடுபடுத்தப்படுவதால் எங்களுக்கும் வீணாகின்றது. இவ்விரு தரப்புக் காலமும் வீணாதல் உன்னால் நேர்கின்றது. அவ்வாறு செய்யாமல் என்றவாறு. ***போக்காதே*** என்பது இவ்வாறு வினையெச்சமாகவன்றி, ஏவல் வினை முற்றாகவும் நிற்பது காண்க. துயிலுணர்த்தப் பெற்றாள், பின் யாது செய்ய வேண்டும் என்பது இனி அடுத்து வருகின்றது.

(இனிவருவன துயிணர்த்திய பெண்களில் வேறொருத்தியின் கூற்று)

விண்ணுக்கு ஒரு மருந்தை - மண்ணுலகுக்கு மேல் வைகுண்டம் முடிய உள்ள எல்லா உலகங்களிலும் வசிப்பவர்களைக் குறித்தது. ***விண்*** - விண்ணுலகம். இடவாகு பெயராக ஆங்கு வசிப்பவர்களைக் குறித்து நின்றது.

ஒரு மருந்து - ஒப்பற்ற மருந்து. தேவர்களின் அமிழ்து நஞ்சுடன் பிறந்தது. நோயற்ற நீண்ட வாழ்நாளும் வலிமையும் தருவதாயினும் மரணத்தை நீக்கும் ஆற்றலற்றது. ஆனால் சிவபெருமானாகிய அமிழ்தோ நஞ்சின் ஆற்றலையும் அடக்கியது; பிறப்பு, இறப்பு என்று இரண்டாக வரும் பிணியையும் நீக்குவது. ஆதலின், இஃது ஒப்பற்ற மருந்தாயிற்று. ஒரு - ஒப்பற்ற. இறைவன் தனக்குவமை இல்லாதவன் என்றவாறு. ஒரு - ஒன்று எனக்கொண்டு பதிப்பொருள் ஒன்றே என்பதும் நினைக.

சிவபெருஞ்சுடரை நம் பெருமக்கள் மருந்து என்று கொண்டதை;

திருச்சிற்றம்பலம்

"மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினொ டிறவுமானான்
அருந்தவ முனிவரொ டானீழற்கீழ்
இருந்தவன் வளநக ரிடைமருதே"

(திருமுறை 1-110-1)

"மருந்தவை மந்திர மறுமை நன்
னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே
சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன்
சொரிதரத் துன்றுபைம்பூம்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வேலி
யுறை செல்வர்தாமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 3-92-1)

எனும் காழியர்கோன் திருவாக்குக்களாலறிக.

வேத விழுப்பொருளை - விண்ணுலகவாசிகளுக்கு அரியவனாயினும் இறைவன் மண்ணுலகவாசிகள் தன்னை அறிந்து வழிபட்டு உய்யும் பொருட்டு நான்மறைகளை அருளிச் செய்து அவற்றின் பொருள்களையும் கூறி, அவை கூறும் மேலான பொருளாகவும் சிவாகமங்களாகவும் உள்ளான்.

விழுப் பொருள் - மேலான பொருள். இறைவன் வேதத்தின் பொருளாக உள்ளான் என்பதை;

திருச்சிற்றம்பலம்

" நல்வி னைப்பய னன்மறை யின்பொருள்
கல்வி யாயக ருத்தனு ருத்திரன்

செல்வன் மேய திருமழ பாடியைப்
புல்கி யேத்து மதுபுக ழாகுமே"
(திருமுறை 3-48-5)

"பூதத்தின் படையர் பாம்பின் பூணினர் பூண நூலர்
சீதத்திற் பொலிந்த திங்கட் கொழுந்தர்நஞ் சழுந்து கண்டர்
கீதத்திற் பொலிந்த வோசைக் கேள்வியர் வேள்வி யாளர்
வேதத்தின் பொருளர் வீழி மிழலேயுள் விகிர்த ஞரே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4-64-1)

என்பவற்றுட் காண்க.

கண்ணுக்கு இனியானே - கண் என்பது ஈண்டு ஞானேந்திரியங்களில் ஒன்றும் புற உறுப்புமாகிய விழியையும்; தியானம், அந்தரியாகம் முதலியவற்றில் இறைவன் திருவுருவை அகத்தே காணும் ஆன்ம அறிவையும் குறித்து நின்றன. இறைவனின் தடத்த மூர்த்தத்தைப் புறத்தே கண்டுழி அத்திருமேனியின் ஒவ்வோருறுப்பும் கண்ட விழியைத் தன்வயமாக்கிப் பிறிதொன்றிற் செல்லாமல் தடுத்துக் கண்ணுக்கு இன்பமூட்டுவன. இந்நிலேயை நம் நம்பிகள் தில்லேத் தரிசனத்திற் பெற்ருர். முன்னம் போற்றித் திருவகவல் (83-ல்) "நன்புலன் ஒன்றி" என்றதன் உரையில் எடுத்தாண்ட பெரிய புராணப் பாடல் பார்க்க.

இவ்வாறே தியானம், அந்தரியாகம் முதலியவற்றிலும் இறைவனேத் திரிபுடி இன்றி நினேவில் நிறுத்தும் நிலேக்கும் கொள்க.

பாடி - அவன் பொருள் சேர் புகழ்களேத் துதித்து இசைப் பாடல்களாகப் பாடிய வண்ணம்.

உள்ளம் நின்று - "நிற்க" என்பது நின்று எனத் திரிந்தது. உள்ளம் அடைவின்றி நிற்க என்றவாறு. இது திரிபுடியற்ற தியானத்துக்கு இன்றியமையாத நிலே.

திருச்சிற்றம்பலம்

"உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுருவெழுதி

உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறு தானே றேறி
அமரர்நா டாளாதே யாரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணு னேக்காதா ரல்லா தாரே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-25-1)

உள்நெக்குக் கசிந்து உருக - உள்ளம் அலேயாமல் நிற்கும் நிலேயில் கிட்டும் இறைவன் காட்சியால் மனம் இளகிப் பின் கசிந்து உருகும் நிலேயெய்தும். மண்பானேயில் பனிக்கட்டியை நிறைத்துக் கோடை காலத்தில் ஓரிடத்தில் வைக்கின், முதலில் வெயிலின் வெப்பத்தால் பனிக்கட்டி இளகும்; அதை ஈண்டு "நெக்கு" என்ருர். பின்னர் அது தண்ணீராக உருகிப் பானேயில் புறத்தே கசியும். அதனேயே ஈண்டுக் கசிந்து உருகுவதாகக் கூறிஞர். சிவத்தியானத்தில் எய்தும் இந்நிலேயை;

திருச்சிற்றம்பலம்

"ஏற தேறு மிடைமரு தீசனர்
கூறு வார்வினே தீர்க்குங் குழகனர்
ஆறு செஞ்சடை வைத்த அழகனர்க்
கூறியூறி யுருகுமெ னுள்ளமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 5-14-6)

என நம் அரசுகள் அருள்வது காண்க.

உருக - உருகலின். உருக என்புழி "அல்" என்னும் தொழிற்பெயர்ப் பகுதியும், ஏதுப்பொருளில் வந்த ஐந்தனுருபும் தொக்கன. அவற்றுள் உருக என்பதன் ஈற்றகரம் கெட உருகலின் என நின்றது. உருகிய காரணத்தால் என்றவாறு.

யாம் மாட்டோம் - கண்ணுக்கினியானேப் பாடி உள்ளம் நின்று; உள் நெக்கு விட்டுக் கசிந்து உருகும் காரணத்தால், நாங்கள் இந்த இன்பானுபவ

நிலையை விட்டு வந்துள்ளாரை எண்ணிக் கணக்கிட்டு நிற்குக் கூறுவதாகிய வீண் செயலில் தலையிட ஒல்லோம் என்றவாறு.

நீயே வந்து எண்ணிக் குறையில் துயில்- வந்துள்ளாரைக் கணக்கிட்டு உனக்குக் கூறல் ஒரு வீண் செயல். இறைவனைத் துதித்து உருகுவதாகிய நற்பணியில் ஈடுபட்டுள்ள நாங்கள் அதை விட்டு இந்த வீண் செயலில் இறங்கோம். இறங்கின் நற்பணி விடுத்தலாகிய ஓர் இழப்பும், வீண் செயலில் ஈடுபடுத்தலால் அந்தப் பொழுதை இழத்தலாகிய ஓர் இழப்பும் எங்களுக்கு நேரும். ஆனால் நீயோ இவ்வைகறைப் பொழுதை வீணுக்குவது என்று முடிவு செய்துவிட்டாய். நீ உறங்கினும் வந்துள்ளோரைக் கணக்கிடினும் இந்தப் பொழுது உனக்கு வீண். இப்பொழுது நீ உறக்கத்தை நீத்து, வெளிப் போந்து வந்துள்ளோரை எண்ணிக் கணக்கிட்டுக்கொள். ஒருவேளை சிலர் வாராதிருப்பின் அவர்கள் வரும்வரை மீண்டும் துயில்கொள். இதனுல் உனக்கு வேண்டிய வந்துள்ளோரின் எண்ணிக்கை கிட்டும்; ஒருவேளை சிலர் வாராதிருப்பின் துயிலின் இன்பமும் கிட்டும் என்றவாறு.

நீயே- ஏகாரம் தேற்றம். *குறையில்*- என்பதை *துயில்* என்பதன் முன்பும் புணர்த்துக் குறைவற்ற உறக்கம் கொள்க- என அசதியாடிய வாருமாம்.

ஏச்சு மொழியின் கூர்மை உச்சத்தை அடைந்துவிட்டதால் இவ்வில்லின் பெண்ணும் எழுந்து தூய்மை செய்து கொண்டு வந்து குழுவுடன் கலந்து கொள்கின்றுள். குழு அடுத்த இல்லத்துக்குச் செல்கின்றது.

இத்திருப்பாடலில் இறைவன் "*கண்ணுக்கினியான்*" என்று வழுத்தப்படுகின்றுன். ஆதலின் அவன் திருமேனி தாங்கியுள்ள தடத்த நிலை பெற்றும்; திருமேனி அவன் பேரருளின் உருவகமாகிய உமையம்மையேயாகலின் "*சத்தியை வியந்தது*" பெற்றும்.

159. மாலறியா நான்முகனும் காணு மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்

கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய் ரு

(இ - ள்)

"எங்கள் பாவை போன்ற பெண்ணே; நாங்கள் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக்கொள்வாயாக; திருமாலாலும் அறியப்படாத திருவடிகளையும், நான்முகனாலும் காணப்படாத முடியினையும் கொண்டு மலைவடிவாய் நின்ற இறைவனை; நாம் உணர்வோம் என்று இவ்வாறு உள்ளனவாகிய சில பொய்களையே; சுரக்கும் பாலையும் தேனையும் ஒத்து இனிமையாகப் பேசும் வாயினையுடைய கள்ளீ; வாயிற் கடையைத் திறப்பாயாக; மண்ணுலகில் உள்ளோரும், மேலுகங்களில் உள்ளோரும் பிற உலகங்களில் உள்ளோரும்; ஆகிய யாவராலும் அறிதற்கரிய அப்பெருமானுடைய, திருவுருவத்தையும்; எளிய நம்மை ஆளாகக் கொண்டருளிக் குற்றம் நீக்கும் அருட்குணத்தையும், புகழ்ந்து பாடி; "சிவபெருமானே; சிவபெருமானே" என்று ஓலமிட்டுக் கூவியும்; அறிந்திலை; உறக்கம் நீங்கி எழுந்தாயுமல்லை; மயிர்ச்சாந்தணிந்த கூந்தலுள்ள நின் இயல்பு என்னே."

(வி - ரை)

இத்திருப்பாடலை, - எம் பாவாய்; ஓர்; ஏல்; மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம் அறிவோம் என்று உள்ள பொக்கங்களே ஊறு பால் தேன் போல் பேசும் வாய்ப் படிறீ; கடை திறவாய்; ஞாலமே விண்ணே பிறவே அறிவு அறியான்; கோலமும்; நம்மை ஆட்கொண்டு அருளிக் கோதாட்டும் சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று ஓலமிடினும் உணராய்; உணராய் காண். ஏலக்குழலி பரிசு - என்று அன்னுவயம் செய்து கொண்டு உரை காண்க.

மால் அறியா நான் முகனும் காணா மலையினை - மால் - திருமால். இவன் சகலர்களுள் மிக உயர்ந்தவன். நான்முகனினும் மிக்க பரிபாகமுள்ளவன். திருமகளின் கணவனாகலின் செல்வச் செழிப்புள்ளவன்.

காண்பதற்குரிய கண்ணுறுப்பு, செந்தாமரை மலர் போன்ற செவ்வி வாய்க்கப்பெற்றவன். இவனாலும் காண முடியாத மலை என்றார். **திருமாலும்** என்ற உயர்வு சிறப்பும்மை விரித்துக் கொள்க. கண்ணாற் காண இயலாமை மட்டுமன்றி உள்ளத்தாலும் அறிய ஒண்ணாதவன் என்பார் **அறியா** என்றார். இறைவனைத் தன்முனைப்பாலும் செல்வச் செருக்காலும் அறிய இயலாது என்றவாறு. இறைவன் திருமாலின் ஆன்மாவைத் தன் அட்ட மூர்த்தங்களுள் ஒன்றாகக் கொண்டு அவனுடன் இருந்தும் அவனால் அறிப்பெறாதவன் என்க.

இதனை,

திருச்சிற்றம்பலம்

"தாவியவ னுடனிருந்துங் காணாத தற்பரனை
ஆவிதனி லஞ்சொடுக்கி யங்கணனென் றாதரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தி யடிகளுக்கு நல்குமவன்
கோவிலும் பூவெழுகோற் கோளிலியெம் பெருமானே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 1-62-6)

எனவரும் ஞானபோனகர் வாக்கிற் காண்க.

நான்முகனும் காணா: அயனாலும் திருமுடியறிப்படாத. உம்மை இறந்தது தழுவிய எச்சம். அயன் கல்விக் கதிபதியாகிய கலைமகளின் கணவன். ஆதலின் பாச ஞானமாகிய கல்வியாலும் காண முடியாதவன் என உயர்வு சிறப்பும்மையாகக் கொள்ளலுமொக்கும். மனம் தன்முனைப்பின்றி ஒருமுகப்பட்டு நிற்கும் நிலையில் திருவருளே கண்ணாகக் காணக் கூடிய இறைவனைக் கல்விச் செருக்குற்றுப் பன்முகப்பட்டு ஓடும் மனத்தால் காண இயலாது என்பார் **நான்முகன்** என்றார்.

திருமாலும், நான்முகனும் இறைவனின் அடிமுடி தேடித் தோற்ற செய்தியை,

திருச்சிற்றம்பலம்

"அன்னமாய் விசும்பு பறந்தயன்தேட
வங்ஙனே பெரியநீ சிறிய

என்னையாள் விரும்பி யென்மனம் புகுந்த
வெளிமையை யென்றுநான் மறக்கேன்
முன்னமா லறியா வொருவனு மிருவா
முக்கணு நாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே யமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 9-13-1)

எனவரும் கருவூர்த் தேவர் திருவிசைப்பாவிற் காண்க.

மலை - இறைவன் ஓர் அணு வடிவில் நின்ருலோ அல்லது காண்பாரின் கண், பக்கப் பார்வை, தொலைவுப் பார்வை, சாளேசுரம் முதலிய குறைபாடுகள் கொண்டிருந்தாலோ காண இயலாது. ஆனுல், ஈண்டு இறைவன் விண்ணும் பாதளமும் கடந்து நிற்கும் பெருமலையாக உள்ளான். காணமுயன்றவரில் ஒருவன் செந்தாமரைக் கண்ணன்; மற்ருெருவன் எட்டுக் கண்களுள்ளவன். ஆயினும் காண இயலவில்லை என்ற நயம் காண்க. காணும் காலம், திங்கள் விண்மீன்கள் போன்றவையிலா இரவாகின் மலையையும் காண இயலாது. ஆனுல் இம்மலையோ நெருப்பு வடிவமாக நின்று பேரொளி வீசுவது. எனினும் அவர்களால் காண இயலவில்லை என்பது மற்ருெரு நயம்.

மலை, ஈண்டு "அளக்க இயலாத வடிவமும் அறுதியிட்டுக் கூற இயலாத பல்வகைப் பொருள்களின் உடைமையும், பேராற்றல் வாய்ந்தவராலும் அசைக்க இயலாத நிலையும், நெடுந்தொலைவிலும் காணப்படும் உயர்வும், வற்கடமுற்ற ஞான்றும் தன்பால் வாழும் உயிர்களுக்கு நீர்வளம் தரும் கொடையும் கொண்டதால் இறைவனுக்கு உவமையாயிற்று.*

ஈண்டுக் குறிப்பிடப்படும் மலை, திருவண்ணுமலையாகும். திருவெம்பாவை இத்தலத்தில் அருளிச் செய்யப்பட்டது நினைக.

---

* அளக்க லாகா வளவும் பொருளுந்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே"

(நன்னூல். சூத். : 28)

திருமாலும், அயனும் பிறகிருதி மாயையில் உள்ள புவனுதிபதிகள். இவர்களால் அந்த மாயையைத் தன்னுள் வியாப்பியமாகக் கொண்டு அதற்கு அப்பால் நிற்கும் இறைவனைக் காண இயலாது என்பது நினைக.

நாம் அறிவோம் என்று உள்ள பொக்கங்களே - திருமாலும், நான்முகனும் அறியா இறைவனை நாம் அறிவோம் என்று இத் துயிலுணர்த்தப்பெற்ற பெண் முன்னுட்களில் தன் குழுவினரிடம் கூறினுள். அஃதுண்மையாயின் இவள் முன்பே துயிலுணர்ந்து தூய்மை செய்து கொண்டு இறைவன் புகழைப் பாடிவரும் குழுவினரைத் தெருவில் எதிர்கொண்டு அவர்களுடன் சேர்ந்திருப்பள். ஆனுல் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கின்றுள். ஆதலின் அவள் கூறியது பொய். *உள்ள பொக்கங்களே* - இவ்வாறுள்ள பல பொய்களையே. *பொக்கம்* - பொய்; உள்ளீடற்றது. பற்களில்லா வாயைப் "பொக்கவாய்" என்பது காண்க. ஏகாரம் பிரிநிலை. உண்மைகளை விலக்கிப் பொய்களையே என்றவாறு. பேசுவன அனைத்தும் பொய்யே; உண்மையல்ல எனத் தேற்றமுமாம். "இத்தலத்தில், முன்பொரு காலத்தில், நான்முகன் இறைவன் திருமுடியைக் காணுது "கண்டேன்" என்று பொய்ம்மொழிந்தான். அதன்பின் யாரும் அவ்வாறு பொய் சொல்லவில்லை. இன்று, இறைவனை அறியாத நீயும் "*அறிவோம்*" என்று பொய் புகல்கின்றுய்" என்றவாறு. ஈண்டு, 64-ம் திருப்பாடல் உரையில் "நெகும் அன்பிலேன்" என்றதன்கீழ் எடுத்தாண்ட (திருமுறை 5-90-9) பாடல் நினைக.

ஊறுபால் தேன் போல் பேசும் வாய்ப் படிறீ - இத்தகைய பொய்ம்மொழிகளை அவள் இனிய சொற்களாற் பேசுகின்றுள். ஒரு சொல்லைக் கூறும் பொழுது இனிமை அத்துடன் கலந்து வெளிப்பட்டு விடுதலின் இருப்புக் குறைந்துவந்து முடிவில் தீர்ந்து விடுவதில்லை. ஊற்றில் தண்ணீர் எடுக்க எடுக்க ஊறிக்கொண்டுள்ளது போல, இவள் வாயில் பாலையும் தேனையும் ஒத்த இனிமை ஊறிக் கொண்டே இருக்கின்றது என்றவாறு. *ஊறு* - வினைத் தொகை. அதைப் பால் தேன் இரண்டுக்கும் புணர்க்க. "*போல் அறிவோம்*" - என்புழி யுள்ள *போல்* என்ற உரையசையை ஈண்டுப் "*பால்*" "*தேன்*" இரண்டுக்கும் புணர்க்க. *வாய்* - பாலும் தேனும் போல இனிமை ஊற்றெடுக்கும் இடம். *படிறீ* - குற்றமுள்ளவளே! - விளி. *படிறு* - இறைவனை ஏத்தும் வைகறையில் உறங்கிக் கொண்டு இருக்கும் அவளை நாம் அறிவோம் என்று கூறும் பொய்யாகிய குற்றம். அது கள்ளமும் வஞ்சனையுமாம். இச்சொல் இப்பொருளில் வருவதை,

“ இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்”

(திருக்குறள் 91)

எனவரும் வள்ளுவர் வாய்மொழியிற் காண்க.

கடைதிறவாய் - வாயிற்கதவைத் திறப்பாயாக, இன்னும் திறக்காமல் இருக்கின்றாய் எனலுமாம்.

ஞாலமே விண்ணே பிறவே அறிவு அரியான் - இறைவனை அவனருளே கண்ணாகக் காணினல்லால் தன்முனைப்பால் காண முயலின் அவர்கள் பூவுலக வாசிகளாயினும் மேலுகங்களில் உள்ளோராயினும் ஏனைய உலகங்களில் இருப்போராயினும் அறிவதற்கும் அரியவன். *ஞாலம்* - பூவுலகம். அஃது இரு வினைப்பயன்களை நுகர்தற்கான இடம். *விண்* - பூவுலகுக்கு மேலும் திருக்கயிலைக்குக் கீழும் உள்ள எல்லா உலகங்களும். அவை பசு புண்ணியங்களின் பயனாகிய இன்பம் நுகர்தற்கான இடங்கள். *பிற* - பூவுலகுக்குக் கீழுள்ள நரகம் முதலிய இடங்கள். அவை தீவினைப் பயன்களை நுகர்தற்கான இடங்கள். மிக இன்றியமையாத இடங்களிலன்றி ஏனைய இடங்களில் அத்தகை இடங்களின் பெயர்களைக் கூறாமல் *பிற* என்று கூறிச் செல்வது ஆன்றோர் மரபு. ஆதலின் ஈண்டும் *பிற* என்றார். பின்னரும் “வானே நிலனே *பிறவே*” (160) என்றருளுவது காண்க. பெரிய புராணம் திருஞான சம்பந்த நாயனார் புராணம் 24-ம் திருப்பாடலில், “மிசையுலகும் பிறவுலகு மேதினியே தனி வெல்ல” என்ற பகுதிக்குச் சிவக்கவிமணி C.K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் உரை காண்க.

நரகவாசிகளுக்குப் பொதுவாகத் தீவினைப் பயனாகிய துன்பங்களை நுகர்வதற்கே நேரம் சரியாக இருக்கும்; இறைவனைப் பற்றி நினைக்கவோ அல்லது அவனை வழிபடவோ நேரம் இராது. ஆயினும் திருவருளினால் ஒரோரு சமயம் அத்தகைய வாய்ப்பு நேரும். அத்தகைய அருளிப் பாடொன்று தேவி பாகவதத்தில் காணப்படுகின்றது.

கும்பிபாக நரகத்தில் உயிர்கள் ஒறுக்கப்பட்டுத் துன்பத்தால் கூக்குரலிட்டன. மேலுள்ள உலகம் ஒன்றில் சென்று கொண்டிருந்த துர்வாச முனிவர் அக்கூக்குரலைத் தற்செயலாகக் கேட்டார். கீழே என்ன நிகழ்கின்றது

என்று அறியக் குனிந்து பார்த்தார். அக்கொடிய காட்சிகள் அவருக்குப் புலப்பட்டன. மன வேதனையால் நெற்றியைச் சுளித்தார். நெற்றியில் அணிந்திருந்த திருநீற்றின் துகள்கள் கும்பிபாக நரகில் வீழ்ந்தன. அதன் தொடக்கால் அங்கு வருந்தும் உயிர்கள் சிவ நினைவுற்றுச் சிவனைத் துதிக்கத் தொடங்கின. நரகம் இன்ப உலகாயிற்று. அவ்வுயிர்களும் உய்ந்தன. பின்னர் அந்த இடம் கும்பிபாக நரகுக்குத் தகுதியற்றதாயிற்று. வேறொரு கும்பிபாக நரகம் புதியதாகப் படைக்கப்பட்டது என்பது அவ்வரலாறு.

ஞாலம், விண், பிற - என்பன இடவாகு பெயர்களாக ஆங்கு வாழ்வோரைக் குறித்து நின்றன. ஏகாரங்கள் எண்ணுப் பொருளில் வந்தன.

அறிவு அரியான் - திருவருள் காட்டக் காணலாமாகலின் அரிய இயலான் என்னாது *அரியான்* என்றார்.

கோலமும் - கோலம் - உருவம். இறைவன் அருவம்,அருவுருவம், உருவம் என்ற மூன்று நிலைகளில் நின்று உயிர்களுக்கு உதவுகின்றான். இவற்றுள் நம் போன்றோர் வழிபட்டுய்தற்குச் சிறந்த சாதனமாயுள்ளது உருவ நிலையாம். ஆதலின் ஈண்டுக் *கோலத்தைக்* கூறினார். இத்திருமேனியும் அவன் பேரருள் என்பதை முன்னம் கீர்த்தித் திருவகவல் *(1)*-ல் திருவடி என்றதன் கீழ் எடுத்தாண்ட சிவஞான சித்தியார் பாடலின் கீழுரைத்தாம்.

நம்மை ஆட்கொண்டு அருளிக் கோதாட்டும் சீலமும் - இறைவன் மாட்டுப் பத்தி செலுத்துவதற்கான மற்றொரு சிறந்த சாதனம், அப்பெருமானின் எல்லையில்லாத அருட்குணத்தில் ஈடுபட்டுத் துதித்தல். மாலயனுக்கு அரிய அத்துணை மேலோன் குற்றங்கள் நிறைந்த எளிய நம்மை ஆட்கொண்டு சீராட்டும் அவன் மேன்மைக் குணத்தை நினைந்து அவனைப் புகழ்ந்து பாடுவோம் என்றவாறு.

கோதாட்டு- இது பெயர்ச்சொல். பிறரை இகழ்ந்து குற்றமுண்டாகும்படி விளையாடுதல் என்பது இதன் பொருள். இச்சொல்லை இப்பொருளில்,

"கோதாட் டொழி"

(ஆத்திசூடி 42)

என்று நம் ஔவைப் பிராட்டியார் அருளிச் செய்துள்ளது காண்க.

கோதாட்டுதல் என்பது வினைச்சொல். பாவம் முதலிய குற்றங்களைப் போக்குதல் என்பது இதன் பொருள். அடிகள் இப்பொருளிலேயே இச்சொல்லை ஆண்டுள்ளார்.

சீலம் - உயர்ந்த ஒழுக்கமுடைய செய்கை. இதனை "எளிவந்த தன்மை" என்பர் திரு. தேசிகரவர்கள்.

சிவனே சிவனே என்று ஓலம் இடினும் - *சிவன்* - மங்கலம் செய்பவன். கோதுள்ள எங்களை அக்குற்றங்களுடன் ஏற்றுக்கொண்டு சீராட்டும் நீ, அக்குற்றங்களை நீக்கி வீட்டுலகமாகிய மங்கலத்தில் உய்க்க என்று கூவியும். *ஓலம்* - அபயம் வேண்டிப் பெருங்குரலிற் கூவும் குறிப்பு மொழி.

உணராய் உணராய் காண் - *உணராய்* - அவன் பெருமையை உணர்ந்தாயல்லை. *உணராய்* - துயிலுணர்ந்து எழுந்தாயுமல்லை. *காண்* - முன்னிலை அசை.

ஏலக்குழலி பரிசு - இறைவன் புகழைப் பாடிக்கொண்டே படுக்கச் சென்று வைகறையில் அவனைத் துதித்தவாறே எழவேண்டிய நீ, உறங்கச் செல்லும் பொழுதும் உன்னை ஒப்பனை செய்துகொண்டு பள்ளிகொண்டாய். வைகறையில் நாங்கள் இறைவனைத் துதித்துப் பாடிவந்தும் இன்னும் எழுந்து கதவு திறவாய்; உன் இயல்பு இருந்தவாறு என்னே! என்றவாறு. *ஏலம்* - மயிர்ச்சாந்து. உபலக்கணத்தால் ஏனைய ஒப்பனைப் பொருள்களையும் கொள்க. **உன் பரிசு** என்பதன்பின் "இருந்தவாறு என்னே" என்பவற்றை அவாய் நிலையால் வருவித்துக் கொள்க.

இவ்வாறு கூறியவுடன் இவ்வில்லத்தின் பெண் வேறு பேச்சின்றித் தானே எழுந்து தூய்மை செய்துகொண்டு வெளிவந்து குழுவில் கலந்து விட்டாள். குழு மற்றொருத்தியின் இல்லம் நோக்கி ஏகுகின்றது.

இத்திருப்பாடலிலிருந்து 162-ம் பாடல் முடியத் துயிலுணர்த்தப் பெறுவோர் பேச்சுக்கள் இல்லை. இதுவரை ஒவ்வொருவர் இல்லமாக நின்று நின்று துயிலுணர்த்தியதில் வைகறை கழிந்து பொழுது நன்கு விடியும் நேரம் நெருங்கிவிட்டமையின் பெண்களும் போதிய அளவு உறங்கி விட்டனர்.

ஆதலின் அழைத்த உடனே எழுந்து வந்து விட்டனர் என்பது உய்த்துணரப்படும்.

இத்திருப்பாடலில் இறைவனின் "கோலம்" வழுத்தப்படுகின்றது. அத்திருவடிவம் அவன் பேரருளின் உருவகமாகிய "சத்தி"யாதலின் "*சத்தியை வியந்தது*" பெற்றும்.

160. மானேநீ நென்னலே நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணுமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றே
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே யுருகா யுனக்கே யுறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய் சு

(இ - ள்)

மான் போன்ற மருண்ட நோக்குள்ளவளே; எங்கள் பாவை போன்றவளே; நாங்கள் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக்கொள்வாயாக; "நாளை நீங்கள் துயிலுணருமுன் நானே எழுந்து வந்து உங்களை எழுப்புவேன்" என்று நீ, நேற்றுக் கூறிய சொற்கள்; நாணமில்லாமல் போன திசையைக் கூறுவாயாக; இன்னமும் பொழுது விடியவில்லையா; வானுலகினரும் பூவுலகினரும் பிறவுலகினரும் ஆகிய எவராலும் அறிவதற்கு அரியவனாகிய சிவபெருமான், தானே வலிய நம்பால் அணைந்து; தலையளித்து நம்மை அடிமையாகக் கொண்டு அருளுதற்குரிய, அழகிய கழல்களணிந்த நீண்ட திருவடிகளைப் புகழ்ந்து பாடி வந்துள்ள எங்களுக்காக; உன் வாயைத் திறக்கின்றாயல்லை; ஊன் உருகப் பெற்றாயுமல்லை; இந்நிலை உனக்கே பொருந்துவதாகும்; எங்களுக்கும் மற்றெல்லோருக்கும் தலைவனாகிய அப்பெருமானைப் பாடுவாயாக.

(வி - ரை)

இத்திருப்பாடலை,- "மானே; எம்பாவாய்; ஓர்; ஏல்; நீ நென்னலை நாளை நானே வந்து உங்களை எழுப்புவன்; என்றலுமே; நாணுமே போன திசை

பகராய்; இன்னம் புலர்ந்தின்றே; வானே நிலனே பிறவே அறிவரியான்; தானே வந்து தலைஅளித்து எம்மை ஆட்கொண்டு அருளும்;வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு; உன் வாய்திறவாய்; ஊன் உருகாய்; உனக்கே உறும்; எமக்கும் ஏனோர்க்கும் தம் கோனைப் பாடு" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

மானே:- திருவெம்பாவை உற்சவம் தொடங்குவதற்கு முதல் நாள் இப்பெண்கள் அனைவரும் ஒருங்குகூடி உற்சவ நாட்களில் நாள்தோறும் வைகறையில் துயிலுணர்ந்து ஒரு குழுவாக இறைவன் புகழ்களைப் பாடியவாறு பொய்கை சென்று நீராடிச் சிவபெருமானைத் துதிப்பதாக முடிவு செய்து கொண்டனர். அப்பொழுது இவ்வில்லின் பெண் "நாளை நானே முதலில் துயிலுணர்ந்தெழுந்து தூய்மை செய்துகொண்டு உங்கள் இல்லங்கள் தோறும் வந்து உங்கள் அனைவரையும் துயிலுணர்த்துவேன்" என்று கூறித் திரும்பினாள். ஆனால் இன்று ஏனையோரிற் பெரும்பகுதியினர் தன் இல்லம் வந்து தன்னைத் துயிலுணர்த்தும் வரையில் உறங்கினாள். அவர்கள் எழுப்பியதும் விழித்தெழுந்தவள், அவர்கள் முந்திய நாளில் தான் கூறியதைச் சுட்டிக் காட்டி ஏசுவரே என்று மருட்சியடைந்தாள். அவள் மருட்சி அவள் விழிகளில் தெரிந்தது. இவை அனைத்தையும் உய்த்துணர்ந்த குழுவினர் அவளை "*மானே*"என்று விளித்தனர். *மான்* - முதற்பெயர். ஈண்டு மானின் நோக்குக்காகிப் பின்னர் அந்நோக்குப் போலும் நோக்குடையாளைக் குறித்தது. ஈண்டு 59-ம் திருப்பாடலில் "மான் நேர் நோக்கி" என்றதன் உரையில் எடுத்தாண்ட திருமுறை *(3-39-1)* பாடல் நினைக.

நீ, நென்னலை நாளை நானே வந்து உங்களை எழுப்புவன்:- *நீ* - இப்பொழுது உறங்கிக் கொண்டிருக்கும் நீ. *நென்னலை* - நென்னல் - நேற்று. *ஐ* - சாரியை. *நானே* - ஏகாரம் தேற்றம். *உங்களை* - இப்பொழுது உன்னை எழுப்பிக் கொண்டிருக்கும் எங்களை. *எழுப்புவன்* - துயிலுணர்த்துவேன்.

என்றலும் - என்றலுமே என்பதும் பாடம்.

நாணுமே போன திசை பகராய் - "நானே வந்து எழுப்புவன் என்று கூறிய சொற்கள், அவ்வாறு செயலிற் காட்டாமையால் நாணமுற்றிருக்க வேண்டும். நாணமுற்றார் வெளியில் தலைகாட்டாமல் இல்லத்தினுள்

மறைந்திருப்பர். இங்கு அச்சொற்கள் உன் இல்லத்தினுள் ஒளிந்திருப்பின் உரிமையால் நாங்கள் உள் வந்து காண்போம் என்று அஞ்சியே போலும், வெளியில் வேறு எங்கோ தலைமறைவாகிப் போய் விட்டன. அவ்வாறு போனவை எந்தத் திசையிற் சென்றன என்று அசதியாடியவாறு.

இன்னம் புலர்ந்தின்றே - வைகறைப் பொழுதில் சென்று அவர்களை எழுப்புவதாகத் தானே கூறினேம். இன்னும் வைகறை நேரம் வரவில்லை என்று கருதிக்கொண்டு உறங்குகின்றாய் போலும்; வைகறை நேரம் கடந்து கொண்டுள்ளது; பொழுது புலரும் நேரம் நெருங்கிக் கொண்டுள்ளது என்பவற்றை அறியாயோ. *புலர்தல்* - பொழுது விடிதல். வைகறையில் வனிதைபாகனைப் பாடுதல் சிறந்த சிவ புண்ணியம்; அப்புண்ணியம் நண்ணற்கு உனக்கு இன்னம் விடிவுகாலம் வரவில்லையோ எனலுமாம்.

வானே நிலனே பிறவே அறிவு அரியான் - 159-ம் திருப்பாடலில் "ஞாலமே விண்ணே பிறவே அறிவு அரியான்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க. ஆண்டு 'ஞாலத்தை' முதலிற் கூறியது, இப்பூவுலகே உயிர்கள் சிவபூசை செய்து உய்வதற்குத் தகுதியான இடம் என்ற கருத்தால். இவ்வுண்மையை முன்னம் போற்றித் திருவகவல் (117-ல்) "ஏனோர்க் கெளிய இறைவன்"- என்றதன் கீழ் விரித்துரைத்தாம். ஈண்டு *வானை* முதலாகக் கூறியது பூவுலகில் சிவபூசை செழித்து நிகழ மழை இன்றியமையாதது; அம்மழையை வழங்குவது வான் ஆகலினென்க. ஏகாரங்கள் எண்ணுப் பொருளில் வந்தன.

தானே வந்து - பெருந்தவம் புரிந்து இறைவனை எய்தும் புண்ணியப் பேறில்லாத சிறு பெண்களாகிய நம்மைத் தேடி அவனே வந்து. அவ்வாறு வருதல் அவன் பேரருளினால் என்றவாறு.

தலை அளித்து எம்மை ஆட்கொண்டு அருளும் - தலையாய அருளை நல்கி எங்களை அடிமை கொண்டு அருள் புரியும். *தலையளித்து* - ஒருசொல் நீர்மையாகக் கொள்க. அருள் செய்து என்பது பொருள். *ஆட்கொண்டு அருளும் - ஆட்கொள்ளுதல்* - பாசம் நீக்கி அடிமையாக ஏற்றுக் கொள்ளுதல். இஃதோர் அருளிப்பாடு. *அருளும்* - அருள் புரிதல். இது மற்றோர் அருளிப்பாடு. இவை முறையே பாச நீக்கமும் திருவடி நல்கலும் குறித்து நின்றன.

வான் வார் கழல் பாடி வந்தோர்க்கு - இறைவனின் அழகிய திருவடிகளைத் துதித்துப் பாடி வந்துள்ள எங்களை வரவேற்கும் பொருட்டு. *"வானே நிலனே பிறவே அறிவு அரியான் கழல்;" "தானே வந்த கழல்;" "எம்மைத் தலையளித்து ஆட்கொண்ட கழல்;" "அருளும் கழல்" "வான் கழல்" "வார் கழல்"* என ஒவ்வொன்றனுடனும் புணர்த்துப் பொருள் காண்க.

வான் - மேன்மை; பெருமை எனலுமாம். பெருமை, உயிர்களை ஒம்பி ஆட்கொள்ளும் செயலால் வருவது. *வார்கழல்* - நீண்ட திருவடிகள். பின்னரும் "பாதாள மேழினுங் கீழ் சொற்கழிவு பாதமலர்" (164) என்பது காண்க. 155-ம் திருப்பாடல் உரையில் "வார்" என்றதன் கீழுரைத்தவை காண்க. *கழல்* - தானியாகு பெயராகத் திருவடிகளை உணர்த்திற்று. முன்னம் சிவபுராணம் (7-ல்) "கழல்" என்றதன் கீழுரைத்தவை காண்க. *கழல்* - ஈண்டுத் திருவருளை உணர்த்தி நின்றது.

பாடி வந்தோர்க்கு - இறைவன் திருவருளை இசையால் வழுத்தி வந்துள்ள எங்களை வரவேற்கும் பொருட்டு.

உன் வாய் திறவாய் - உன் வீட்டு வாயிற் கதவையும் கூடத் திறந்தாயல்லை எனலுமாம்; நேற்று நீ கூறியவண்ணம் நீயே வந்து எங்களைத் துயிலுணர்த்தியிருக்க வேண்டும்; அவ்வாறு செய்கலையாயினும், நாங்கள் வந்து உன் இல்லின் முன் நின்று இறைபுகழ் இசைத்தல் கேட்டு நீ எழுந்து வந்து கதவு திறந்து எங்களை வரவேற்றிருக்க வேண்டும்; அதற்குச் சிறிது நேரம் வேண்டுமாயின் வாயைத்திறந்தேனும் எங்களை "வாருங்கள்" என்று வரவேற்றிருக்க வேண்டும். நீ இவை ஒன்றையும் செய்தாயல்லை என இடித்துரைத்தவாறு. *வாய் திறவாய்* - என்பதை ஏவல் வினைமுற்றாகக் கொள்ளினும் அமையும்.

ஊன் உருகாய் - மெய்யடியார்களுக்கு இறைவன் புகழைப் பாடக் கேட்டதும் மனம் குழையும், நாவெழாது சொற்குழறும்; உடல் உருகிக் கண்ணீர் வெளிப்படும். இவையெல்லாம் படிப்படியாக நிகழ்வன. பாடல் கேட்டு உறக்கமே கலையாத நிற்கு உடல் எங்கே உருகியிருக்கப் போகின்றது என இடித்துரைத்தவாறு. *ஊனே* - என்பதிலுள்ள ஏகாரம் ஈற்றசை.

உனக்கே உறும் - நாளை வந்து உங்களை நானே எழுப்புவன் என்ற சொல்லை முப்பது நாழிகைக்குள் மறத்தலும்; இறைபுகழ் பாடி வந்தோர்க்கு வாய் திறந்து வரவேற்போ, கதவு திறத்தலோ இன்றி இருத்தலும்; நெஞ்சம் உருகி உடல் குழையாமையும் முதலிய இவையனைத்தும் உனக்கே பொருந்தும் இயல்புகள். ஏகாரம் தேற்றம்; பிரிநிலையுமாம்.

எமக்கும் ஏனோர்க்கும் தம்கோனைப் பாடு - இனியேனும் படுக்கையை விட்டு வந்து எங்களுக்கும் நீ உட்பட மற்றவர்களுக்கும் தலைவனாகிய சிவபெருமானை எங்களுடன் சேர்ந்து பாடுவாயாக. எமக்கும் ஏனோர்க்கும் என்றமையால் அனைவருக்கும் அவன் ஒருவனே முழுமுதற் கடவுள் என்றது பெற்றும். *தம்* **கோன்** - தலைவன். "தம்பிரான்" என்பது போலக் கொள்க. *பாடுக* என்பதிலுள்ள ஏவல் வினைமுற்றில் ஈறு தொக்குப் *பாடு* என நின்றது. இனிவரும் பாடல்களிலும் இவ்வாறே கொள்க.

இத்திருப்பாடலில் "*வான் வார் கழல் பாடி*" என்று திருவடியாகிய சத்தி வழுத்தப்படுதலின் "*சத்தியை வியந்தது*" பெற்றும்.

161. அன்னே யிவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய் எ

(இ - ள்)

தாயே! எங்கள் பாவை போன்றவளே; நாங்கள் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வாயாக; தேவர்கள் பலராலும் நினைத்தற்கு அரியவனும்; ஒப்பற்றவனும்; மிக்க பெருமையுடைவனுமாகிய;

சிவபெருமானைப் பற்றிய சங்கு, எக்காளம் முதலியவற்றின் ஒலிகளைக் கேட்ட அளவில் "சிவ சிவ" என்று கூறியவாறு வாய்திறப்பாய்; "தென்னவனே" என்று ஏனையோர் கூறுமுன் நெருப்பிற்பட்ட மெழுகையொத்து உருகுவாய்; (இப்பொழுதோ) "எனக்குத் தந்தை, எனக்கு மன்னன், இனிய அமிழ்தம்" என்று நாங்கள் அனைவரும் சேர்ந்தும் தனித்தனியாகவும் கூறினோம்; அவற்றைக் கேட்பாயாகி; இன்னமும் உறங்குகின்றனையோ; இறைவன் பொருட்டுக் குழைவில்லாத நெஞ்சம் படைத்த அறிவிலார் போலச் செயலற்றுக் கிடக்கின்றாய்; நின் செயல்களுள் இவையும் சிலவோ; உறக்கத்தின் இயல்புதான் எத்தகையது?

(வி - ரை)

இத்திருப்பாடலை,- "அன்னே" என்பதன் பின் "எம்பாவாய்; ஏல்; ஓர்" என்பவற்றையும்; "வாளா கிடத்தியால்" என்பவற்றின் பின் "இவையுஞ் சிலவோ" என்பவற்றையும், "பரிசு" என்பதன் பின் "என்னே" என்பதையும் அமைத்துப் பொருள் காண்க.

அன்னே - அம்மா என்று பேச்சு வழக்கில் உள்ளது. மகளிரில் அகவையில் இளையவர், முதியவர் சமவயதினர் எவரையும் விளிக்கப் பயன்படுகின்றது. விளிக்கப்படும் சூழ்நிலையையும் விளிப்போரையும் பொறுத்து அன்பு, மரியாதை போன்றவற்றை வெளிப்படுத்துவது. தொடர்பில்லாத அன்னியரையும் விளிக்கப் பயன்படுவது. ஈண்டுத் தோழியர் ஒருவரை ஒருவர் விளிக்கப் பயன்படும் முன்னிலைச் சொல்லாக நிற்கின்றது.

பல அமரர் உன்னற்கு அரியான் - பல அமரர் - அமரர்கள் பலரும் என்க. ***அமரர்கள்*** - தேவர்கள். அவர்கள் மிகுந்த அளவில் பசு புண்ணியம் செய்து அவற்றின் பயனாக விண்ணுலகில் மிகுதியாக இன்பங்களை நுகர்பவர். ***பலர்*** - அவர்கள் முப்பத்து மூன்று கோடித் தொகையினர். ஆதலின் ***பலர்*** என்றார். ***பலரும்*** - என உயர்வு சிறப்பும்மை விரித்துக் கொள்க. மனிதர்களை விட அத்துணை அளவு பசு புண்ணியங்களால் மேலுள்ள நிலையினரும் என்றவாறு. ***உன்னற்கு அரியான் - உன்னற்கும்*** என உயர்வு சிறப்பும்மை விரித்துக் கொள்க.

உன்னுதல் - நினைத்தல். நினைத்தற்கே அரியவன் என்றதால் சென்றடைதற்கும் அரியவன் என்பது கூறுமலே போதரும். ***அரியவன்*** - தேவர்கள் முதலியோரும் மண்ணுலகு நண்ணிப் பெருந்தவங்கள் செய்து இறைவனைக் கண்டதாகப் புராண வரலாறுகள் பல உண்மையின்; *உன்னற்கு* - இயலாதவன் என்னுது "***அரியவன்***" என்றுர்.

ஒருவன் - ஒப்பற்றவன்; ஏகன். முன்னம் திருவண்டப் பகுதி (44-ல்) "ஒருவன்" என்றதன் கீழுரைத்தவையும் ஆங்குள்ள அடிக்குறிப்பும் காண்க.

இரும் சீரான் - இமையோர் எவர்க்கும் எண்ணற்கும் அரியனுய் நிற்றலும்; ஒப்பும் உயர்வுமற்ற பெருமையுள்ளவனுய் நிற்றலும் அவன் பெருமை குறிப்பன. அமரர் பலருக்கும் நினைத்தற்கும் அரியனுதலும், ஒப்பும் உயர்வுமற்ற பெருமைக்குரிய குணங்களுள்ளவனுதலும் அவன் பெருமை. அத்துணைப் பெருமையுள்ளவனுயிருந்தும், நம் போன்ற எளியவர்க்கிரங்கித் தானே வந்து தலையளிசெய்து ஆட்கொள்வதால் அப்பெருமை மிக்க சீராயிற்று. *இரும்* - பெரிய; மிகுந்த. *சீரான்* பெருமையுடையவன். *ஒருவன்; இரும் சீரான்* - ஒன்று இரண்டு என்ற எண்ணலங்காரம் காண்க.

சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய் திறப்பாய் - *சின்னங்கள்* - சங்கு, தாரை, கொம்பு, துத்தாரி, எக்காளம் போன்ற துளைக்கருவிகள். கருவியாகு பெயராக இங்கு அவற்றை ஊதுவதால் எழும் ஒலி குறித்து நின்றது. திருஞானசம்பந்தப் பெருமான் தலயாத்திரைச் செலவில் பரிசனங்கள் முன்னுல் பிள்ளையாரின் புகழ்களை முத்துச் சின்னத்தில் ஊதிச் சென்றனர் என்பதை,

திருச்சிற்றம்பலம்

"சீர்நிலவு திருத்தெளிச்சே ரியினைச் சேர்ந்து
சிவபெருமான் றனைப்பரவிச் செல்லும் போது
சார்வறியாச் சாக்கியர்தம் போதி மங்கை
சார்தலுமற் றதுவறிந்த சைவ ரெல்லாம்

ஆர்கலியின் கிளர்ச்சி யெனச் சங்கு தாரை
யளவிறந்த பல்லியங்கண் முழக்கி யார்த்துப்
பார்குலவு தனிக்காளஞ் சின்ன மெல்லாம்
'பரசமய கோளரிவந் தா' னென் றூத"

திருச்சிற்றம்பலம்

(பெரிய புராணம்- திருஞான சம்பந்த நாயனர் புராணம் 904)

எனவரும் சேக்கிழார் பெருமான் திருவாக்கிற் காண்க.

கேட்பச் சிவன் என்றே வாய் திறப்பாய் - கேட்ட அளவில் அவற்றுக்கு மறுமொழி கூறுவாய் போன்று "சிவன்" என்ற நாமத்தை உச்சரித்த வண்ணம் வாய் திறப்பாய். இந்நாளிலும் சிவனடியார்கள் குழுவில் "நமப் பார்வதீ பதயே" என்ற முழக்கம் கேட்டதும் செவிமடுத்தோர் "அரகர மகாதேவா" என்று வாய் திறத்தல் நினைக. கேட்ப - இலக்கணையாற் காண்டலையும் கொண்டு திருநீறு, உருத்திராக்கமாலை முதலிய சிவச்சின்னங்களை அணிந்த அடியார்களைக் கண்ட அளவில் "சிவனென்றே வாய் திறப்பாய்" என்றும் கொள்க. "*சிவனென்றே வாய் திறப்பாய்*" - "சிவ" என்பது காரண பஞ்சாட்சரம் ஆதலும் நினைக.

தென்னு என்னுமுன் தீசேர் மெழுகுஒப்பாய் - தென்னு - தென்னன் - அழகுள்ளவன். ஆலவாயண்ணலின் திருப்பெயர்களுள் ஒன்று சுந்தரேசன் என்பது நினைக. இந்திய நாட்டின் தென் பகுதியாகிய பாண்டிய நாட்டைச் சௌந்திர பாண்டியனுக முடிசூடி ஆண்டவன்; தமிழகமாகிய மாதவம் செய்த தென்திசையில் சிவன் என்று வழக்கப்பெற்று உலகின் எல்லா நாடுகளுக்கும் இறைவனுக உள்ளவன். என்னுமுன் - "தென்னன்" என்று கூறிய அளவில் விரைவு பற்றி "*என்னுமுன்*" என்ருர். "அம்பு படுமுன் தலை துணிந்தது" என்பது போலக் கொள்க. இதனைக் "காரியம் முந்துறாஉங் காரண நிலை" எனக்கூறி ஏதுவணியாகக் கொள்வர். "தென்னுடைய சிவனே போற்றி" என்று முழுவதும் சொல்வதற்கு முன் "தென்னு" என்றலுமே - எனலுமாம். மெய்யன்பர்கள் இறைவன் புகழ்களை இசையில் பாடுவதற்காகத் "தென்னு தென் தெனு" எனச் சுருதி கூட்டத் தொடங்குமுன்பே - என்பர் திரு. பாரதியாரவர்கள்.

தீ சேர்மெழுகு ஒப்பாய் - உள்ளம் உருகுவாய், 155-ம் திருப்பாட்டில் "மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய் வீதிவாய்க் கேட்டலுமே..... .....கிடந்தாள்" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

என் ஆனை என் அரையன் இன் அமுது என்று எல்லோமும் வெவ்வேறாய்ச் சொன்னோம் கேள்- ஆனை அரையன் இன் அமுது என்பன அருமை பாராட்டிக் கூறும் காதற்கிளவிகள். ***என்*** என்பது உரிமை பாராட்டியவாறு. ***ஆனை*** - யானை என்பதன் மரூஉ. மகளிர் தம் மைந்தர்களைச் சீராட்டுழி "என் ஆனையே" என்று விளிப்பதை இன்றும் காணலாம். இவ்வாறே இறைவனை "என் ஆனாய் என் ஆனாய்" என்று நம் அரசுகள் விளிப்பதையும் காண்க. (திருமுறை 6-95-7) - முன்னம் 6-ம் திருப்பாட்டுரையில் இப்பாடலை எடுத்துக்காட்டினோம். இதற்கு இவ்வாறன்றி "என் ஆன் ஐ" என்று பிரித்து ***ஆன்*** தவிர் வழி வந்த சாரியையாக நீக்கி ***என்ஐ*** - என் தலைவன்; என்பர் திரு. தேசிகரவர்கள். ***அரையன்*** - "அரசன்" என்ற சொல்லின் இடையிலுள்ள "அ" கரத்துக்குப் போலியாக "ஐ" காரம் வந்துள்ள மொழியிடைப்போலி. ***இன் அமுது***- என்பதை ஈண்டும் புணர்ந்து ***என் இன் அமுது*** என்க. ***அமுது*** இன்பம் பயக்கும் தேவாமுதம். அது, தேவர்கள் கடலைக் கடைந்து ஆலகால நஞ்சால் அலைப்புண்டு அசுரர்களை வஞ்சித்துப் பெற்றது. நரை திரை மூப்பு சாக்காடுகளை நீண்ட நாட்களுக்கு ஒத்திப்போடுவதால் அவற்றை அழிப்பது என்று உபசாரத்தால் கூறப்படுவது. இறைவனாகிய அமுதே அத்தகைய வீண்முயற்சிகளின்றி நேரிய தவ நெறியில் கிட்டிப் பிறவியை யழித்து ஒப்புயர்வற்ற இன்பம் பயப்பது. ஆதலின் ***இன் அமுது*** என்றார். ***இன்*** - பிறிதினியைபு நீக்கிய விசேடனம். ***எல்லோமும் சொன்னோம்; வெவ்வேறாய்ச் சொன்னோம்***- "என் ஆனை; என் அரையன்; இன் அமுதன்" என்று நாங்கள் அனைவரும் கூடிக் கூறினோம்; நீ துயிலுணரவில்லை; கூட்டமாக ஒலித்த பேரொலியால் கூறியவை உனக்குத் தெளிவாகக் கேட்கவில்லையோ என்று ஐயுற்றுத் தனியே கூறினோம். ஒருத்தி ஒருமுறை கூறியது உன் உறக்கம் கலையத்தொடங்கியும் தெளிவாகக் கேட்கவில்லையோ என்று ஐயுற்று ஒவ்வொருவரும் தொடர்ந்து தனித்தனியாய்க் கூறினோம். ***கேள்*** - அவற்றைக் கேட்ட பின்பும் என இழிவு சிறப்பும்மை விரித்துக் கொள்க.

இன்னம் துயிலுதியோ - "மார்கழித் திங்களில்; திருவெம்பாவை உற்சவ நாட்களில் வைகறையில் துயிலுணர்தல் உன் இயல்பு. சிவச்சின்னங்களின் ஒலி செவிமடுப்பின் உறங்கினும் விழித்திருப்பினும் சிவ நாம உச்சரிப்புடன் துதிக்கத் தொடங்குவாய். ஆனால் இன்று அவ்வாறு வைகறை நீங்கும் நிலையிலும் நாங்கள் பலர் கூடியும் தனித்தனியும் இறைவன் புகழ் நாமங்களைச் சொல்வதைக் கேட்ட பின்பும் உறங்குகின்றாய் போலும். இஃதுன் இயல்பன்று" என்று துயிலுணர்த்த முயன்றவாறு.

வன்நெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தி - "***வன் நெஞ்சர் போல்***", "***பேதையர் போல்***" என ஈரிடத்தும் புணர்த்துரைக்க. "இறைவன் இயல்புகளை நாங்கள் அனைவரும் கூறி இயம்பியும்; தனித்தனியாக இயம்பியும் நீ இன்னும் துயிலுணராமைக்கு இரு காரணங்கள் இருத்தல் வேண்டும். ஒன்று நீ கல்லைப் போன்ற மனத் திண்மையளாதல் வேண்டும்; அல்லது அறிவிலியாக இருத்தல் வேண்டும். ***போல்*** - என்றதால் நீ அவ்விரு இயல்புகளும் இல்லாதவள் என்பது பெற்றாம். உன் உண்மை இயல்பு, இறைவன் சின்னங்களைக் கேட்டவுடனே "சிவனே"ன்றே வாய் திறத்தல்; ஆதலின் நீ வன் நெஞ்சினள் அல்லை. ஏனைய தெய்வங்களை ஒதுக்கிச் சிவபரஞ்சுடரையே மெய்ப்பொருளாகப் பற்றினை; ஆதலின் நீ அறிவில்லாதவளும் அல்லை. எனினும் வாளாகிடத்தி; அஃது எதனால் என்பதை நாங்கள் அறிவோம்; ***வாளா கிடத்தி*** நாங்கள் இறைவன் பரிசுகளைக் கூறி ஏத்துதல் கேட்டும் செயலின்றிக் கிடக்கின்றாய் ***வாளாகிடத்தி*** - உறங்காமல் சும்மா படுத்திருக்கின்றாய்" என்பது கவியரசு அவர்களின் உரைக்குறிப்பு. ***ஆல்*** - அசை.

இவையும் சிலவோ - "சின்னங்கள் இறைவன் புகழ்களை ஒலிக்கக் கேட்டவுடன் "சிவனே"ன்றே வாய்திறத்தலும்; "தென்னா" என்னாமுன் தீசேர் மெழுகு ஒத்து மனம் உருகுதலும் உன் உண்மை இயல்புகள். இவையன்றிச் சிவன் இயல்புகளை நாங்கள் ஒன்றுகூடி இயம்பியும், தனித்தனியாக இயம்பியும் உன் உள்ளுணர்வுகளை வெளிக்காட்டாது வாளா கிடந்தால் நீ இன்னும் துயிலுணர்ந்திலை என்று கருதித் தொடர்ந்து சிவப்பரஞ்சுடரின் பல்வேறு இயல்புகளைச் சொல்லி உன்னைத் துயிலுணர்த்த முயல்வோம். அவற்றைக் கேட்டு இன்புறலாம் என்று கருதி உறங்குபவள்

போல் வாளா கிடத்தி. இத்தகைய எண்ண ஓட்டமும் அதற்காக வாளாகிடத்தலும் நீ வெளிக்காட்டாத உன் இயல்புகள். இத்தகைய இயல்புகள் நின்பால் இன்னும் பல உள்ளன போலும். அவற்றுள் இவை சிலவே போலும்" என்றவாறு.

துயிலின் பரிசு என்னே- இப்பொழுது நீ எழுந்து வந்து அற்றன்று; இன்று நான் உண்மையிலேயே இதுவரை உறங்கிவிட்டேன் என்பையாகில்; 'உன் தலையாய சிவனடிமைத் திறத்தையும் மென்மனத்தையும் மீதூர்ந்துவிட்ட உன் உறக்கத்தில் இயல்பை என் என்பேம்.

இத்திருப்பாடலில் நம் அடிகள் இறைவனைத் "தென்னு" என்று குறிப்பிடுகின்றார். அஃது இறைவன் அங்கயற்கண்ணி அம்மையை மணந்த குறிப்பினது. ஆதலின் "*சத்தியை வியந்தது*" பெற்றும்.

162. கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய் அ

(இ - ள்)

"எங்கள் பாவை போன்ற பெண்ணே! நாங்கள் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வாயாக; கோழிகூவ எங்கும் பறவைகள் ஒலி யெழுப்பும்; வெள்ளிய சங்கங்கள் எங்கும் ஒலித்தல் கேட்டு நாதசுரம் இசையொலியெழுப்பும்; ஒப்பற்ற பரம்பொருளாகிய ஒளிவடிவினனின் ஈடற்ற மேலான அருள் முதலிய; இணையற்ற சிறந்த பொருள்கள் அமைந்த புகழ்ப் பாடல்களை இசைத்தோம்; நீ கேட்டாயல்லையோ; வாழ்வாயாக; இஃது எத்தகைய துயிலோ; நின் வாயைத் திறக்கின்றுயல்லை; அருட் கடலாகிய சிவபெருமான்மாட்டு அன்பு செய்யும் நெறியும் இம்முறை

தானே; (இனியேனும்) பேரூழியின் முடிவில் அழியாமல் தான் ஒருவனே தலைவனாய் நின்றவனும்; உமையம்மையை ஒரு கூற்றில் கொண்டவனுமாகிய இறைவனையே பாடுவாயாக".

(வி - ரை)

இத்திருப்பாடலில்; "எம்பாவாய்; ஏல்; ஓர்" என்பவற்றை முதலில் அமைத்துக்கொண்டு, பிற பகுதிகளுக்கு ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்: கோழி - கோழிப் பறவையில் ஆண் இனமாகிய சேவல். அஃதே பொழுதறி புள்ளாக வைகறையில் கூவுவதாகலின் அது முதலிற் கூவிற்று. ***சிலம்ப*** - ஒலியெழுப்ப; கூவ - செயவெனெச்சம். ***ஏழில்*** என்பதிலுள்ள ***"இல்"*** என்ற சொல்லைப் பிரித்து இங்கு ***"இல்கோழி சிலம்ப"*** என்று கூட்டி இல்லங்கள்தோறும் கோழிகள்கூவ என்றுரைக்கவும் நின்றது. குருகு பறவைகள். ஏனைய பறவைகள் பொழுது புலர்ந்ததை அறிந்து ஒலியெழுப்பின என்றவாறு. ***எங்கும்*** - எல்லாப் பக்கங்களிலும்.

ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும் - ஏழில் - நாதசுரம் இசையின் ஏழு சுரங்களும் அமைக்கப்பட்டுள்ள துளைக்கருவி. ***ஏழ்*** - முன்னர் இசையையும் பின்னர் அவற்றை வெளியிடும் கருவியாகிய நாதசுரத்தையும் உணர்த்தி நிற்றலின் இருமடியாகு பெயராயிற்று. சிவபெருமான் திருக்கோயிலில் வைகறைப் பொழுதில் முதலில் வெண் சங்கு ஒலிக்கும். ***சங்கு*** என்பது ஈண்டு வலம்புரிச் சங்கை உணர்த்திற்று. அது பிரணவ வடிவமாகும். அதைச் செவியுடன் சேர்த்து உற்றுக் கேட்கின் "ஓம்" என்னும் பிரணவ ஒலி இடைவிடாது கேட்கும். ஓசை ஒலிகளுக்கெல்லாம் பிரணவ ஒலி வித்தாகலின் அது முதலில் ஒலிக்க, அதைத் தொடர்ந்து ஒலியின் எண்ணற்ற வடிவங்களைத் தோற்றுவிக்கும் ஏழு சுரங்களைக் கொண்ட நாதசுரம் ஒலிக்கத் தொடங்கும். அதைத் தொடர்ந்து தவில், தாளம், ஒத்து முதலியனவும் ஒலிக்கத் தொடங்கும். கால வேறுபாட்டாலோ அன்றிப் பிற காரணங்களாலோ சிவாலயத்தில், இவ்வின்னியங்கள் உதவாத நிலையில் வலம்புரிச் சங்கு மட்டுமேனும் ஒலித்தல் வேண்டும். அதைக் கீழ்வரும் திருத்தாண்டகத்தில் காண்க.

கோழியும் குருகும் தாமே துயிலுணர்ந்து ஒலி எழுப்புவன; *ஏழிலும் சங்கும்* பிறரால் ஒலி எழுப்பப்படுவன. தாமே துயிலுணர்ந்து எழவேண்டியிருந்தும் பிறர் துயிலுணர்த்தி எழுப்ப வேண்டிய நிலையில் துயில்வதைக் குறித்தவாறு. பின்னர் ஊரின் நாலுபக்கங்களில் உள்ள விநாயகர், முருகன், அம்பிகை, திருமால், கிராமதேவதைகள் கோயில்களிலும் இன்னியங்கள் ஒலிக்கத் தொடங்கும் என்றவாறு. "*ஏழில் இயம்ப*" என்புழி "*இயம்ப*" என்பது காரியப் பொருளில் வந்த வினையெச்சம்.

திருக்கோயில் வழிபாட்டில் வெண்சங்கம் ஊதுதல் ஒரின்றியமையாத நிகழ்ச்சியாதலை;

திருச்சிற்றம்பலம்

"*திருக்கோயி லில்லாத திருவி லூரும்*
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு ***வெண்சங்க மூதா வூரும்***
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லா மூரல்ல அடவி காடே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-95-5)

எனவரும் நம் அரசுகள் அமுதவாக்காலறிக.

கேழில் பரஞ்சோதி - கேழ் - ஒப்பு. *கேழில் -* ஒப்பும் உயர்வும் இல்லாத. *பரஞ்சோதி* - மேலான ஒளி. முன்னம் 30-ம் திருப்பாடல் உரையில் "தனிச்சுடரே" என்றதன் கீழுரைத்தவை காண்க.

கேழில் பரங்கருணை - பரம்கருணை - மேலான திருவருள். பேரருளுடைமை. இறைவனின் எண் குணங்களுள் ஒன்றுதல் நினைக.

கேழில் விழுப்பொருள்கள் - இறைவனின் பொருள்சேர் புகழமைந்த துதிப்பாடல்கள். *விழுப்பொருள் -* மேலான பொருள். "விண்ணகத் தேவரும் நண்ணவுமாட்டா விழுப்பொருளே" என்பர் பின்னரும் *(374).*

பாடினேம் கேட்டிலேயோ - யாம்பாட நீ கேட்டனை. *கேட்டிலேயோ* - ஓகாரம் எதிர்மறைப் பொருட்டு.

வாழி ஈதென்ன உறக்கமோ - *வாழி* - யாம் பாடக்கேட்டேயும் வாளா கிடக்கும் நீ, எத்தகைய தீங்கும் எய்தாமல் வாழக்கடவை. "இவ்வுறக்கத்தின் கொடிய பிடியினின்றும் விடுபட்டு நீ வாழ்வாயாக" என்பது கவியரசு அவர்களின் உரைக்குறிப்பு.

ஈது என்ன உறக்கமோ - இது மெய்யாகவே உறக்கம் தானே? அல்லது உறங்குவது போல் வாளா கிடத்தியோ என்றவாறு. உறக்கத்தின் மிகுதியின் கொடுமையும் குறித்தவாறு எனலுமாம்.

வாய் திறவாய் - நாங்கள் பாடியதைக் கேட்ட பின்பும் உன் இல்லத்தின் வாயிற்கதவைத் திறந்தாயல்லே - எனலுமாம்.

ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறே - *ஆழி* - கடல். ஆழியான் - அருட்கடலாகிய சிவபெருமான். இனி, *ஆழி* - சக்கரம் என்று கொண்டு திருவருளாகிய ஆக்ஞா சக்கரத்தையுடையவன் எனலுமாம்.

ஆழியான் - சக்கரப் படையுடைய திருமால் என்று கொண்டு, "நீ எங்களுடன் உரையாடும் பொழுது "திருமால், சிவபெருமான் திருவடியில் தன் கண்ணைப் பறித்துச் சாத்தி வழிபட்டது போல், யானும் நெறிமுறை பிழையாது சிவ வழிபாட்டில் நிற்பேன்" என்றது நீதானே? நாங்கள் பாடியது கேட்ட பின்பும் உறங்குகின்றாய் எனலுமொக்கும். திருமால், சிவபெருமானைத் தன் இதயத்தில் நிறுத்தி வழிபட்டவாறே திருப்பாற் கடலில் அறிதுயில் கொள்வது போல இறைவனை உன் உறக்கத்திலும் வழிபடுகின்றனை போலும்; உன் சிவபத்தி திருமாலின் சிவபத்தி போலும்" என்று அசதியாடியபடியுமாம்.

"ஆழியை மாலுக்கு அருள்வதான நாதனிடம் நீ வைத்த அன்பும் இப்படியோ" - என்பர் சீகாழித் தாண்டவராயர்.

ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை - பேரூழிக் காலத்தில் அண்டங்கள் அனைத்தும் அழிந்தொழியத் தான் ஒருவனே நிலைத்து நின்று, மீண்டும் அண்டங்களைப் படைப்பவனாகிய சிவபெருமானை, "சங்காரகாரணனாய்

உள்ள முதலேயே முதலாக உடைத்து இவ்வுலகம்" - எனவரும் சிவஞானபோத முதற் சூத்திரக் கருத்துரை நினைக. ஈண்டு, முன்னம் 33-ம் திருப்பாடலில் "அப்பால் நின்ற" என்றதன் கீழும், 74-ம் திருப்பாடலில் "ஈறுய் ஈறின்மை ஆனுய்" என்றதன் கீழும், 103-ம் திருப்பாடலில் "பின்ன எம்பிரான்" என்றதன் கீழும் உரைத்தவை காண்க. ஒருவன் - திருவண்டப் பகுதி 43-ல் "ஒருவன்" என்றதன் கீழுரைத்தவையும் அப்பக்கத்தில் அடிக் குறிப்பும் காண்க.

ஏழை பங்காளனேயே பாடு - *ஏழை* - உமையம்மை. ஏழையைத் தன் இடப்பங்கில் ஆள்பவன் என்றும்; ஏழையின் வலப்பக்கத்தை ஆள்பவன் என்றும் உரைக்க நின்றது. இதைத் "தடுமாறும் தொழிற்பெயர்" என்று இலக்கணம் இயம்பும். ஏழை ஈண்டு பேரருளின் உருவகம்.

ஏழை - பற்றுக் கோடற்றுத் துன்பத்தில் வருந்தும் உயிர்; அதன் பங்கில் உள்ளவன் எனலுமொக்கும். ஏகாரம் பிரிநிலே. ஏனைய தெய்வங்களை விட்டுச் சிவபெருமான் ஒருவனேயே துதிக்க என்று ஏகநாயக வழிபாட்டை வலியுறுத்தியவாறு. *பாடு* - துதித்து வழிபடுக என்று ஆற்றுப்படுத்தியவாறு. மொழித்தொண்டு கூறியதனுல் இனம் பற்றி மனமும் மெய்யும் கொள்க.

ஏழை பங்காளனேயே பாடு என்றதனுல் "*சத்தியை வியந்தது*" பெற்றும்.

(இத்துடன் தோழியரைத் துயிலுணர்த்தல் நிறைவுறுகின்றது.)

163. முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானுகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய் கூ

(இ - ள்)

(எங்கள் பாவை போன்ற பெண்களே! நான் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக்கொள்வீர்களாக. நீராடச் சென்ற பெண்களின் குழுவினருள் ஒருத்தி "நான், நம் அனைவர் சார்பாகவும் இறைவனிடம் விண்ணப்பம் செய்துகொள்கின்றேன். நீங்கள் அதை ஏற்றுக் கொள்வீர்களாயின் அதன் அறிகுறியாக நான் செய்துகொள்ளும் விண்ணப்பத்தை வழிமொழியுங்கள்" என்று கூறி விண்ணப்பம் செய்து கொள்கின்றாள். ஏனையோரும் வழிமொழிகின்றனர். இனிவரும் ஏனைய பாடல்களிலும் இவ்வாறே கொள்க.)

"முற்பட்டனவாகிய தொல்பொருள்கள் எல்லாவற்றுக்கும் முற்பட்ட தொல்பொருளாக உள்ளவனே; பிற்பட்டனவாகிய புதிய பொருள்கள் எல்லாவற்றுக்கும் மேலும் புதுமையாகவுள்ள பொருட்டன்மையுடையனே; உன்னையே ஆண்டானாகக் கிடைக்கப் பெற்றமையால் உன் சிறப்புமிக்க அடிமைகளாகிய யாங்கள்; நின் அடியார்களுக்கே உரிமையுடையவர்கள் ஆவோம்; அவ்வடியார்களில் ஒவ்வொருவரும் எங்கள் ஒவ்வொருத்திக்கும் கணவனாராவார்; அவர் மனமுவந்து கூறிய கட்டளைப்படியே; அவர்கள் அடிமைகளாக நின்று மனமுவந்து தொண்டு புரிவோம்; எங்கள் பிரானாகிய நீ, எங்களுக்கு இங்ஙனமே அருள் பாலிப்பாயாகில்; எத்தகைய குறைபாடும் இல்லாதவராவோம்."

(வி - ரை)

இத்திருப்பாடலின் ஈற்றிலுள்ளவற்றை "எம்பாவாய் ஏல் ஓர்" என்று மாற்றி முதலில் வைக்க. ஈற்றடியிலுள்ள "இன்னவகையே எமக்கு எங்கோன்" என்பவற்றை "எங்கோன் எமக்கு இன்னவகையே" என்று மாற்றிக் கொள்க. பிறகு பாடல் முழுவதற்கும் ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

குழுவினர் அனைவரும் துயிலுணர்ந்து விட்டனர். வைகறைப் பொழுதும் நீங்கும் நேரமாகிவிட்டது. பெண்கள் அனைவரும் இறைவனைத் துதித்தவாறு சென்று நீராடுவார்கள். குழுவில் ஒருத்தி ஏனைய பெண்களை விளித்து இறை புகழைப் பாடுகின்றாள். ஏனையோர் வழிமொழிந்தவாறு பின்பற்றுகின்றனர். பின்வரும் பதினொரு பாடல்களிலும் இவ்வாறே கொள்க.

எம்பாவாய் - எங்கள் பாவை போன்ற பெண்களே. ஒருமைச் சொல் பன்மைப் பொருளில் வந்தது. ஒருமை பன்மை மயக்கம்; இனிவரும் பாடல்களிலும் இவ்வாறே கொள்க.

ஓர் ஏல் - நான் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக்கொள்வீர்களாக.

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே - முன் பின் பழமை புதுமை என்னும் இவ்வழக்குக்கள் கால தத்துவத்தின் பின் தோன்றியவை. இறைவன் அத் தத்துவத்தைக் கடந்து நின்று, அதை இயக்குபவன். ஆயினும் கால தத்துவத்துக்குட்பட்ட பொருள்களில் வைத்தே மன்பதை ஆராய்ச்சி நிகழ்தலின் "முன்னைப் பழம் பொருள்" என்பது ஈண்டுக் காலதத்துவத்துக்குட்பட்ட தொல் பொருள்களைக் குறித்து நின்றது. இதுவரை வெளிப்பட்ட மாயாகாரியமாகிய பொருள்கள் எல்லாவற்றுக்கும் முற்பட்ட தொல்பொருளாவன் இறைவன். இப்பொருள்களைப் படைப்பவன் இறைவன். அவற்றைப் படைக்குமுன் அவன் இருந்தால்தானே அவற்றைப் படைத்திருக்க இயலும்? ஆதலின், "***முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருள்***" என்றார். இறைவன் காலத்தாலும் இடத்தாலும் அளப்பரிய பெருமையன். இத்திருப்பாடலில் அவன் காலத்தால் அளத்தற்கரிய பெருமையனுதலை வழுத்துகின்றார். இதனைப் பதிமுதுநிலை என்று திருவருட்பயன் முதலதிகாரத் தலைப்புக் கூறும்.

பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே - இதுவரை வெளிப்படாத புதிய பொருள் ஒன்றை அவன் மாயா காரியமாகப் படைப்பானுகின் அப்பொருளில் அமைந்துள்ள புதுமைத் தன்மையுடைவனும் அவனே என்றவாறு. ***பேர்த்தும்*** - மேலும்; மீண்டும் பழமையாயிருப்பது போலவே புதுமையாயும் இருப்பவன் என்றவாறு. ***பெற்றியன்*** - இயல்பினன்.
ஈண்டு,

திருச்சிற்றம்பலம்

"மூப்பான் இளையவன் முன்னவன்
பின்னவன் முப்புரங்கள்

வீப்பான் வியன்தில்லே யானரு
ளால்விரி நீருலகங்
காப்பான் பிரியக் கருதுகின்
ருர்நமர் கார்க்கயற்கட்
பூப்பால் நலமாளி ரும்புரி
தாழ்குழற் பூங்கொடியே"

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் 312)

என்ற இத்திருப்பாடலில், "மூப்பான் - எல்லார் யாக்கைக்கும் முன்னே தனதிச்சையாற் கொள்ளப்பட்ட திருமேனியையுடையனுதலின் எல்லார்க்குந் தான் மூப்பான்; இளையவன்- பின்ருேன்றிய யாக்கையை யுடையாரெல்லாரும் மூப்பவும் தான் நிலேபெற்ற விளமையையுடையனுதலின் எல்லார்க்கு மிளேயான்; முன்னவன் உலகத்திற்கு முன்னுள்ளோன்; பின்னவன்- அதற்குப் பின்னுமுள்ளோன்" என்று பேராசிரியர் உரைத்த விளக்கங்களே உளங்கொள்க.

" வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணலன் **புதியரிற் புதியன்**
மூதக் கார்க்குமூ தக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதியா *யுயிர்க்குயி ராய்நின்ற வமலன்"*

(கந்த புராணம் - சூரனமைச்சியற்படலம் 127)

என்றதும் நினைக. 'முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்' *(387)* என்று நம் அடிகளே பின்னர்க் கூறுவதும் காண்க.

உன்னேப் பிரானுகப் பெற்ற உன் சீர் அடியோம்- உன்னே-"உன்னேயே" என்று பிரிநிலே ஏகாரம் விரித்துக் கொள்க. பிற தெய்வங்களே நீக்கிச் சிவபெருமான் ஒருவனேயே பற்றுக் கோடாகக் கொள்ளும் ஏக நாயக வழிபாடு குறித்து நின்றது. முன்னம் 6-ம் திருப்பாட்டில் "உள்ளேன் பிற தெய்வ முன்னேயல்லா தெங்கள் உத்தமனே" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க. *பிரான்* - தலேவன்; *பெற்ற பேறு* - தகுதியினுல் ஒருவற்குக் கிடைக்க வேண்டிய செல்வம். அது கிடைக்காமலும் போகலாம். ஈண்டு எய்தப்

பெற்றமையாற் பேருயிற்று. "மக்கட் பேறு" என்பன போல்வன நினைக. *பெற்ற* - பெற்றதனால் உன்சீர் அடியார் ஆயினேம். காரணப் பொருட்டு வந்த பெயரெச்சம். *சீரடியார்*- சிறப்பு மிக்க அடியவர்கள். சிறப்பு - பரசமயங்களில் செல்லாப் பாக்கியம் பண்ணிப் பாவை பாகனையே பணிவதால் எய்திய சீர்.

உன் அடியார் தாள் பணிவோம் - உன் மெய்யடியார்களின் திருவடிகளை வணங்குவோம். அந்த நற்பேறு நாங்கள் உன்னையே பிராணகப் பெற்று வழிபட்டதால் எய்துவதாகும். சிவ வணக்கத்தால் கிட்டுவது சிவபுண்ணியம். அப்புண்ணியத்தின் பயன் சிவனடியார்களை வழிபடும் பேறு. திருஞானசம்பந்தப் பெருமான் திருக்காளத்தியில் இறைவனை வழிபட்டார். அதனால் சிவபுண்ணியம் கிட்டியது. வழிபாடு முடிந்து திருமுன்னரினின்றும் நீங்கிப் புறம்போந்தார். கிட்டிய சிவ புண்ணியத்தின் பயனுயக் கண்ணப்பநாயனுரை வழிபடும்பேறு வாய்த்தது. இவ்வுண்மையை,

திருச்சிற்றம்பலம்

"தாழ்ந்தெழுந்து திருமலையைத் தொழுது கொண்டே
தடஞ்சிலா தலசோபா னத்தா லேறி
வாழ்ந்திமையோர் குழாநெருங்கு மணிநீள் வாயின்
மருங்கிறைஞ்சி யுட்புகுந்து ***வளர்பொற் கோயில்***
சூழ்ந்துவலங் கொண்டிறைவர் திருமுன் பெய்தித்
தொழுதுதலை மேற்கொண்ட செங்கை போற்றி
வீழ்ந்தெழுவார் கும்பட்ட பயன்காண் பார்போல்
மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம்-திருஞானசம்பந்த நாயனுர் புராணம் 1022)

என்று சேக்கிழார் பெருமான் தீட்டும் செஞ்சொல்லோவியத்திற் கண்டுவக்க.

ஆங்கு அவர்க்கே பாங்கு ஆவோம் - ஆங்கு - அவர்கள் திருவடிகளைப் பணிந்த அவ்விடத்தில், பணிந்த அப்பொழுதே; பணிந்த அங்ஙனமே பாங்கு ஆவோம் என்றவாறு. ***அவர்க்கே***- ஏகாரம் பிரிநிலை. அடியாரல்லாதாரை வேறுபடுத்தியவாறு. ***பாங்கு*** - உரிமை. இனி எங்கள் உடல் பொருள் ஆவி மூன்றும் அவர்களுக்கே உரிமையாம் என்றவாறு.

அன்னவரே எம் கணவர் ஆவார்* - *அன்னவரே* -** இங்ஙனம் எங்களை உரிமை கொண்ட மெய்யடியார்களே. ஏகாரம் பிரிநிலை. வேறு ஆடவரைப் பிரித்துக் காட்டியது. ***கணவர் - வாழ்க்கைத் துணைவர். **கண் அன்னவர்** - சிவநெறிச் செலவில் கண் போன்று நல்வழி காட்டி நடத்திச் செல்பவர். ***ஆவார்***- ஆவதற்குரியவர்.

அவர் உகந்து சொன்ன பரிசே* - *அவர் - எங்கள் கணவன்மார்களாக நாங்கள் ஏற்றுக் கொண்ட உன் அடியார்கள். ***உகந்து*** - தலைவர், அடிமைக்கு இடும் கட்டளைகள் அதிகார முறையிலும், விருப்பின்றியும் நிகழ்தல் கூடும். அங்ஙனம் இல்லாமல் உன் அடியார்களாகிய எம் கணவன்மார்கள் இடுவன உள்ளம் மகிழ்ந்து இடுவனவாக வேண்டுமென்றவாறு. ***சொன்ன*** - கட்டளையிட்ட. ***பரிசே***- ஏவிய வண்ணமே. ஏகாரம் தேற்றம்.

தொழும்பாய்ப் பணி செய்வோம் - *தொழும்பு* - கடமையாக மேற்கொள்ளும் அடிமைத்தன்மை. "ஏழைத் ***தொழும்பனேன்***" என்று பின்னரும் (325) நம் அடிகளே அருளிச்செய்தல் காண்க. ***பணி செய்வோம்*** - "***உகந்து***" என்பதை ஈண்டும் கூட்டி மனம் விரும்பித் தொண்டு செய்வோம் என்க. ***பணி செய்தல்***- அவர்கள் ஏவிய கட்டளைகளைச் செயற்படுத்தல்.

எம்கோன் எமக்கு இன்ன வகையே நல்குதியேல் - இந்த ஒருவரம் மட்டும் நீ எங்களுக்கு அருள் செய்தால் போதும்; ஏனைய நலன்கள் தாமே அமையும் என்றவாறு. ***நல்குதல்***- அருள் செய்தல்.

என்ன குறையும் இலோம் - ஏனைய நலன்கள் அவ்வாறு தாமே எய்துவதால் எங்களுக்கு வேறு குறைகள் இல்லை என்றவாறு. உலகச் செல்வங்களிற் சிறந்தது மன்னர் செல்வம்; அதனினும் மேம்பட்டது வானோர் செல்வம்; அதனினும் விழுமியது இந்திரன் முதலிய பெருந்தேவர்கள்; திரு, அதனினும் உயர்ந்தது ஆன்ம ஞானம்; அதனினும் மிக்கது சிவபெருமான்மாட்டு அன்பு; அதனினும் பெரியது சிவனடியார்க்கு அடிமையாதல். அவ்வடிமைத்திறத்தினும் சிறந்தது வேறு எதுவுமில்லை.

இத்திருப்பாடலில், இறைவன் தொன்மையும் புதுமையும் வழுத்தப்பட்டது. அந்நிலை அவர் சத்தியுடன் கூடிய நிலையில் நிகழ்வதாகலின் "*சத்தியை வியந்தது*" புலனுதலறிக.

164. பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓத வுலவா வொருதோழந் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய் ௧௦

(இ - ள்)

"எங்கள் பாவை போன்ற பெண்களே! நான் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வீராக. இறைவன் திருவடிமலர்கள்; கீழுலகம் ஏழிற்கும் கீழாகச் சொல்லில் அடங்காத நிலையின; மலர்கள் நிறைந்து அணி செய்யப்பட்ட திருமுடியும் எல்லாப் பொருள்களின் முடிவாக உள்ளது. உமையம்மையை ஒரு பங்கில் உள்ள ஒருவகைப்பட்ட திருமேனியை மட்டும் உடையவனல்லன்; விண்ணுலகத்தினரும் மண்ணுலகத்தினரும் புகழ்ந்து ஏத்தினாலும்; புகழ்ச்சி முற்றுப் பெறாத; நான்மறைகளையும் தோற்றுவித்த முதல்வன்; எண்ணற்ற அடியார்களின் உள்ளத்தில் கோயில் கொண்டுள்ளான்; அத்தகைய சிவபெருமானின் திருக்கோயிலிலுள்ள குற்றமற்ற குலப்பெண்களே; அப்பெருமானுக்கு ஊர் யாது; அவன் பெயர் எது; அவனுக்கு உறவினர் யாவர்; அயலவர் யாவர்; அவ்விறைவனைப் புகழ்ந்து பாடும் முறை எது?"

(வி - ரை)

இத்திருப்பாடலை; "எம்பாவாய் ஓர் ஏல்; பாதமலர்; பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு; போதார் புனை முடியும் எல்லாப் பொருண் முடிவே; பேதை ஒரு பால் திருமேனி ஒன்றல்லன்; விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்; ஓத உலவா வேதமுதல்; ஒரு தோழம் தொண்டர் உளன்; அரன் கோயில்; கோது இல் குலத்துப் பிணாப்பிள்ளைகாள்; அவன் ஊர் ஏது; அவன் பேர் ஏது; உற்றார் ஆர்; அயலார் ஆர்; அவனைப் பாடும் பரிசு ஏது" என்று அன்னுவயம் செய்துகொண்டு பொருள் காண்க.

பாதமலர் - திருவடிகளாகிய தாமரை மலர்கள்; வடிவும் வண்ணமும் பற்றித் தாமரை மலர்கள் இறைவன் திருவடிகளுக்கு உவமை.

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு - முன்னைத் திருப்பாட்டில் காலத்தால் அளவிடவொண்ணாத இறைவன் பெருமையை வழுத்திய நம் அடிகள், இத்திருப்பாட்டில் இடத்தால் அளவிட வொண்ணாத அவன் தலைமையை அருளிச் செய்கின்றார். அவன் திருவடிகள் பூவுலகின் கீழுள்ள ஏழு உலகங்களுக்கும் கீழ் என்றதால் அதன் இருப்பிடம் சொற்களால் அளவிடற்கொண்ணாதது என்றவாறு. முன்னம் திருமால் "ஏனமாகி முன்கலந் தேழ்தல முருவ இடந்து பின்னெய்த்து" (போற்றித் திருவகவல் 6-7) நின்ற வரலாறு கூறியது நினைக. *பாதாளம் ஏழு* - முன்னம் போற்றித் திருவகவல் 118-ல் "நரகங்கள்" என்றதன் கீழுரைத்தாம். *சொற்கழிவு* - சப்தப் பிரபஞ்சம் என்பர். ஒலிகள் நால்வகை வாக்குக்களாலாகிய மாயேயங்கள். அவற்றால் மாயையைக் கடந்து நின்று அம்மாயையை இயக்கும் இறைவனைக் கூற இயலாது என்றவாறு. *ஏழினும்* - முற்றும்மை.

போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே - *போதார் புனைமுடி* - அடியார்களால், விரியும் பக்குவத்திலுள்ள நாண் மலர்களைக் கொண்டு அணி செய்யப்பட்டுள்ள இறைவன் திருமுடி. அஃது எல்லாப் பொருள்களும் முடிந்த இடமாகும். *போது* - வைகறையில் வண்டுகள் மொய்ப்பதன்முன் கொய்யப்பட்ட, விரியும் பக்குவத்திலுள்ள மலர்கள். அவையே சிவவழிபாட்டுக்குரியன. *முடியே* - அம்மலர்களால் அணி செய்யப்பட்ட முடி எல்லாப் பொருள்களுக்கும் அப்பாற்பட்ட நிலையினதாயின. அடியார்கள் அம்முடிமேல் எவ்வாறு மலர்கள் சாத்தி அணி செய்வர் எனின், அஃது இறைவனின் எளிவந்த தன்மையால் அடியார்களுக்கு எட்டுவதாயிற்று என்று அமைதிப்படுத்திக் கொள்க. தாடகை என்னும் பெண் சூட்டிய மாலையை இறைவன் தலை வணங்கி ஏற்ற வரலாற்றைத் திருப்பனந்தாள் தலவரலாற்றிற் காண்க. *எல்லாப் பொருள்* - மாயேயங்களாகிய பொருள்கள் அனைத்தும். இறைவன் மாயையைக் கடந்து நிற்கும் நிலையை மேலுரைத்தாம். இப்பொருள்களைப் பொருட் பிரபஞ்சம் என்பர். *முடியும்* - உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. நான்முகன் அன்னமாய் விசும்பு பறந்தும் இறைவன் திருமுடியைக் காணாது தோற்ற வரலாறு நினைக. *முடிவே* - இறைவன் திருமுடியின் நிலை அடியார்கள் மலர்களால் அணி செய்யும் அளவுக்கு

அவர்கள் கைகளுக்கும் எட்டும் நிலையினதா? அன்றி மாயையும் கடந்து நிற்கும் நிலையினதா? என்னின் பின்னதே என்று கூறுவார். எல்லாப் பொருள் முடிவே என்றார். முடிவே - ஏகாரம் தேற்றம். இறைவன் திருவடிகளும் திருமுடியும் உள்ள நிலைகளை பின்னரும் நம் அடிகள் -

திருச்சிற்றம்பலம்

" கீத மினிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பால்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதி குணமொன்று மில்லா னந்தமி லான்வரக் கூவாய்"

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 346)

என்று அருளுவது காண்க.

பேதை ஒரு பால் திருமேனி ஒன்றல்லன் - இறைவன் திருவடிகளும் திருமுடியும் உள்ள நிலைகள் இவ்வாருயின், அவை இரண்டுக்கும் இடைப்பட்ட அவன் வடிவம் எது? மாதொருபாக மூர்த்தம் அவன் வடிவங்களுள் ஒன்று மட்டுமே, அவன் அவ்வொரு மூர்த்தம் மட்டுமே கொண்டவனல்லன். ***பேதை*** - பெண். ஈண்டு உமையம்மையை உணர்த்தி நின்றது. ***ஒருபால் திருமேனி*** - அம்மையை; தன் வாம பாகத்தில் கொண்ட வடிவம். அது மாதொரு பாகமூர்த்தம்.

"தன்மை சுட்டலு முரித்தென மொழிப
வன்மைக் கிளவி வேறிடத் தான"

என இலக்கணம் (தொல்காப்பியம் - சொல்லதிகாரம் கிளவியாக்கம் சூ. 25) இயம்புவதும் அதற்கும் சேனாவரையர் உரையும் காண்க.

ஒன்றல்லன் - அவ்வடிவம் ஒன்று மட்டும் கொண்டவனல்லன். சிவமூர்த்தங்கள் அறுபத்து நான்கும் அவன் வடிவங்களே. அவற்றோடும் அவன் கொண்டுள்ள வடிவங்களின் எண்ணிக்கை முற்றுப் பெறுவதில்லை. அம்மூர்த்தங்களுக்கு வேருக மெய்யடியார்கள் பாவித்து வழிபடும் மூர்த்தங்களிலும் அவன் எழுந்தருளியுள்ளான். வைணவக் குடும்பத்தில்

வாழ்க்கைப்பட்ட இளம் சைவப்பெண் ஒருத்திக்காக, அவள் சிவமூர்த்தமாகப் பாவித்து வழிபட்ட தொழுவத்தில் கறவைப்பசுவை யாக்கும் கட்டுத்தறியிலும் அவன் எழுந்தருளிய உண்மையைத் திருக்கன்றுப்பூர் தல வரலாற்றில் காண்கின்றோம்.

கன்றுப்பூர் நடுதறி ஈசர் வரலாறு - மழ விடையாருக்கு வழி வழி ஆட்செய்யும் சைவக் குடும்பம் ஒன்றில் ஓர் பெண்மகவு பிறந்தது. அக்குழந்தை காலப்போக்கில் வளர்ந்து திருமணப் பருவம் எய்திய இளம் நங்கையாயிற்று. குடும்பச் சூழல் அவளை மிகச் சிறந்த சிவபக்தையாக்கியிருந்தது. சிவவழிபாடின்றி உணவு கொள்ளாத நியமம் கைக்கொண்டாள். விதி வசத்தால் அவள் திருவாரூர் மாவட்டம் கன்றுப்பூர் என்னும் பதியில் வைணவக் குடும்பம் ஒன்றில் மணமகளாகப் புகுந்தாள். குடும்பத்தினர் திருமாலையன்றி வேறு தெய்வங்களை வழிபட ஒவ்வாதவர்கள். இல்லத்தின் கொல்லையில் ஆனிரைகளுக்கான தொழுவம் ஒன்றிருந்தது. கோபூசை செய்வாள் போன்று நாளும் அங்குச் சென்று கறவை ஆன் கட்டப்பட்டுள்ள கட்டுத்தறி ஒன்றைச் சிவலிங்கமாகப் பாவித்து அப்பெண் வழிபட்டு வந்தாள். இறைவன் அந்தக் கட்டுத்தறியில் எழுந்தருளியிருந்து அவள் வழிபாட்டை ஏற்றுக் கொண்டு அவளுக்கு அருள் புரிந்தான் என்பது அத்தல வரலாறு.

இவ்வாறு அவன் தாங்கும் திருமேனிகளை மேலும் கூறுவதைக் கீழே பார்ப்போம்.

விண்ணோரும் மண்ணும் துதித்தாலும் - ***விண்ணோர்*** - நில உலகுக்கு மேல் சிவ உலகம் வரையுள்ள பல உலகங்களில் வசிப்பவர்கள். ***மண்*** - இடவாகு பெயராக மண்ணுலகில் வாழும் சிவநெறிச் செலவினராகிய மக்களைக் குறித்து நின்றது. ***விண்ணோரும்*** - உம்மை எதிரது தழுவிய எச்சம். ***மண்ணும்*** - உம்மை இறந்தது தழுவிய எச்சம். ***துதித்தல்*** - இறைவன் புகழ்களைப் பாடி வழிபடுதல்.

ஒத உலவா வேதமுதல் - துதித்துமுடிக்க முடியாத அளவு புகழ்களுள்ளவனும் வேதத்தை அருளிச் செய்த முதல்வனுமாவன். ***ஒத*** - துதிகளைச் சொல்ல. ***உலவா*** - முடிவில்லாத. ஈண்டு முற்றிலும் துதித்து முடிக்க இயலாத இறைவனின் புகழ்களைக் குறித்து நின்றது. ***வேதமுதல்*** - வேதத்தால் போற்றப்படும் முதல்வன் எனலுமாம். இறைவன் புகழ்களைக் கூறுவது வேதம். அதை அருளிச் செய்தவன் இறைவன். அவ்வேதமே

அவன் புகழ்களைக்கூறி முடிக்க இயலாதவாறு அப்புகழ்கள் அளவற்றுள்ளன என்றவாறு. அவ்வாருயின் அவ்வேதம் குறைபாடுள்ளதா? அதை அருளிச் செய்தவனின் "முற்றறிவுடைமை" என்னும் எனின்; வேதம் கிடக்கட்டும்; இறைவனே தன் பெருமையை முற்றும் அறியாதவன் என்பார். "தம் பெருமை தானறியாத் தன்மையன் காண்" (திருவாசகம் 273) என்று பின்னர் அருளிச் செய்தல் காண்க. முடிவு என ஒன்று இருந்தால்தானே முற்றறிவினனாகிய அவன் அதை அறிய இயலும்? இல்லாத ஒன்றை எவ்வாறு அறிவது?

இனி **வேதம்** என்பதையும் ஓர் வினை முதலாகக் கொண்டு "வேதம் முதலாக மண்ணுலக உயிர்கள் ஈருக எல்லாரும் துதித்தாலும்" என உரைக்கவும் நின்றது.

ஒரு தோழம் தொண்டர் உளன் - **தோழம்** - அற்புதம், பதுமம், கருவம், பிருந்தம், சங்கம், சமுத்திரம் போன்று "**தோழம்**" என்பதும் ஒரு பேரெண். ஈண்டு எண்ணற்ற என்ற பொருளில் வந்தது. "**பேதை ஒருபால் திருமேனி**"யையும், அட்ட மூர்த்தங்களையும், அறுபத்து நான்கு சிவமூர்த்தங்களையும், மெய்யடியார்கள் பாவித்துப் புறவழிபாடு செய்யும் ஏனைய மூர்த்தங்களையும் தன் திருமேனிகளாகக் கொண்ட இறைவன், எண்ணற்ற தொண்டர்கள் அக வழிபாட்டில் தங்கள் உள்ளக் கோயில்களில் நிறுவி வழிபடும் வேறு வேறு வடிவங்களையும் தன் திருமேனியாகக் கொண்டுள்ளான் என்றவாறு. **தோழம்** என்பது இப்பொருளில் வருவதை,

திருச்சிற்றம்பலம்

"உண்ணற் கரிய நஞ்சையுண் டொருதோழந் தேவர்
விண்ணிற் பொலிய வமுதளித்த விடைசேர் கொடியண்ணல்
பண்ணிற் சிறைவண் டறைபூஞ்சோலைப் புறவம் பதியாக
எண்ணிற் சிறந்த விமையோ ரேத்த வுமையோ டிருந்தானே"

திருச்சிற்றம்பலம் (திருமுறை 1-74-7)

எனவரும் பிள்ளையார் திருவாக்கிற் காண்க.

தொண்டர் - இதுவரையும் படைப்புக்கு வந்து வீடுபேறுற்றவர்களையும்; தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி இறைவனை எய்த முயல்பவர்களையும்

கொண்ட எல்லாச் சமயத்தினரையும் குறித்து நின்றது. "தொண்டர்" என்புழி நான்கனுருபு விரித்துத் "தொண்டர்க்கு உளன்" என்க. உளன் - உள்ளத்தின்கண் அவர்கள் நிறுவி வழிபடும் வேறு வேறு வடிவங்களில் இருப்பன் என்றவாறு.

இவ்வுண்மையை,

திருச்சிற்றம்பலம்

"ஆருருவ வுள்குவா ருள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற வருளுந் தோன்றும்;
வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை
மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவந் தோன்றும்
நீருருவக் கடலிலங்கை யரக்கர் கோனை
நெறுநெறென வடர்த்திட்ட நிலையுந் தோன்றும்
போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-18-11)

எனவரும் நம் அரசுகள் அமுதவாக்கிற் காண்க.

இனி; "தோழம்" என்றதன்பின் "காலம்" என ஒரு சொல் வருவித்து, "விண்ணோரும் மண்ணோரும் ஒரு தோழம் காலம் ஓதினும் குறையாத புகழை உடையவன்" என்பர் கவியரசு அவர்கள்.

பெரும்பாலான பதிப்புக்களில் "தோழன்" என்ற பாடம் காணப்படுகின்றது. அதை ஏற்று இறைவன் உயிர்களின் நண்பன் என்று கூறி நம்பியாரூரர் சரிதத்தையும், போற்றித் திருவகவல் 120-ல் நம் அடிகள் "தோழ போற்றி" என அருளியுள்ளதையும் ஆதாரமாகக் காட்டினர் முன்னுரையாளரில் சிலர். நம்பியாரூரருக்கும் குபேரனுக்கும் இறைவன் தன்னைத் தோழனாகத் தந்தது, அப்பெருமக்கள் இருவருக்கு மட்டுமே அருளிய சிறப்பு நிகழ்ச்சிகள். அவை, அவர்கள் தவத்தால் கிட்டியவை. போற்றித் திருவகவலில் கூறியது இறைவன் ஆன்மாக்களைக் கேவலம், சகலம், சுத்தம், வீடுபேறு ஆகிய எல்லா நிலைகளிலும் உடனிருந்து காக்கும் நிலை.

அஃது அவன் பேரருளுடைமையால் நிகழ்வது. அந்நிலை வேறு. ஈண்டு அவனைத் தோழன் என்று கொண்டால் பின்னர் "ஆருற்றார்" என வருதலுடன் முரணும். எனவே அப்பாட பேதம் சிறப்பின்மை கருதி ஒதுக்குக.

அரன்தன் கோயில் கோது இல் குணத்துப் பிணாப் பிள்ளைகாள் - மேற்கண்ட வண்ணம் சிவபரஞ்சுடரின் இடத்தால் அளவிட இயலாத பெருமையை நீராட வந்த பெண்களில் ஒருத்தி மொழிய ஏனையோர் அதைப் பின் மொழிந்தவாறு நீராடுவதற்காகத் திருவண்ணாமலைத் திருக்கோயில் வளாகத்துள்ள திருக்குளத்தை அண்மினர். குளக்கரையில் இவர்களுக்கு முன்பே பெண்கள் சிலர் நீராடித் தூய்மை செய்து கொண்டு உலர்ந்த ஆடைகளை அணிந்து சிவச்சின்னங்களைத் தரித்தவர்களாகத் திருக்கோயிலினுள் செல்ல ஆயத்தமாக நின்றனர். அவர்களை விளித்து நீராட வந்த மகளிர் சில வினாக்களை எழுப்புகின்றனர். ***பிணாப்பிள்ளைகள்*** - இதை "***அரன்தன் கோயில் பிணாப் பிள்ளைகாள்; கோதில் குலத்துப் பிணாப் பிள்ளைகாள்*** என ஈரிடத்தும் கூட்டுக. சீலம் மிகுந்த குடும்பங்களில் உள்ள சில இளம் பெண்கள் மணவாழ்வை வேண்டாமல் வாழ்நாள் முழுவதும் கன்னியராகவே திருக்கோயில்களில் பணிபுரியும் நிலையை விரும்புவர்; அவர் மனநிலை அறிந்த பெற்றோரும் அதற்கிசைந்து விடை கொடுப்பர். அப்பெண்கள் திருக்கோயிலின் அண்மையிலுள்ள கன்னிமாடத்தில் தங்கி திருக்கோயிலில் அலகிடல், மெழுகல், மலர்த்திருப்பணிகள் போன்ற தொண்டுகளைச் செய்வர். தஞ்சை இராசராசேச்சுரம் திருக்கோயிலில் இத்தகைய பெண்கள் இருந்தனர் என்பதும்; அவர்கள் "*தளிச்சேரிப் பெண்டுகள்*" என வழங்கப் பெற்றதையும் கல்வெட்டுக்களாலும் பிற்காலச் சோழர்கள் பற்றிய வரலாற்று நூல்களாலும் அறியலாம். இவர்களில் சிலர் மிக அரிதாகப் பிற்காலத்தில் தங்களை ஒத்துத் திருக்கோயிற் பணியில் நிற்கும் ஆடவரில் ஒருவரை மணந்து இல்வாழ்க்கையில் ஈடுபடலும் உண்டு. சங்கிலியம்மையாரின் சரிதம் அவ்வாறு அமைந்த ஒன்றாகும். அவர்களையே ஈண்டுப் ***பிணாப்பிள்ளைகாள்*** என விளித்தார். ***பிணா*** என்றது மக்களில் பெண்பாலரைக் குறிப்பது. "பெண்ணும் பிணவு மக்கட் குரிய" (தொல்காப்பியம்- பொருளதிகாரம் மரபியல் சூத். 62) என்பது இலக்கணம். ஆடவர்களில் இளைஞரும் சிலர் இவ்வாறு திருக்கோயில் பணியில் ஈடுபடுவதுண்டாகலின் அவர்களினின்றும் பிரித்தற்குப் ***பிணா*** என்றார். அவ்வாறு இளைஞரினின்றும் பெண்மக்களைப் பிரித்து விளித்ததன் காரணம் நீராட வந்த பெண்கள் தம் பெண்மைக்கு ஒத்த தோழமை குறித்து

என்க. ***அரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்***- அப்பெண்கள் சிவபெருமான் திருக்கோயிலில் வாழ்நாள் முழுதும் பணி செய்யும் நற்பேறு குறித்து அவர்களைத் திருக்கோயிலுக்கு உரியவர்களாக்கிக் கூறினாள். **கோதுஇல் குலத்துப் பிணாப்பிள்ளைகாள்**- மழவிடையார் திருவடிக்கே வழிவழி அடிமை செய்யும் குடும்பங்களில் பிறந்த பெண்களாகலின் அவர்கள் குலம் கோது இல் குலமாயிற்று. பிணாப்பிள்ளைகள் என்றது ஈண்டுச் சீவன் முத்தர்களைக் குறிப்பாலுணர்த்திற்று.

அவன் ஊர் ஏது - ஊர்- பூவுலகிலுள்ள ஒரு நாட்டின் ஒரு மாநிலத்தில் ஒரு மாவட்டத்தில் ஒரு வட்டத்தில் உள்ள ஒரு சிறு கிராமம்; அதில் வாழும் மக்கள் அதைத் தங்கள் பதியாகக் கூறுவர். இறைவன் திருமேனியோ மேலும் கிழும் உள்ள உலகங்கள் அனைத்தையும் கடந்து செல்வது. அவன் குடியிருக்கும் ஊராக எதைச் சொல்வது என்று எங்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் அவனுக்கு அணுக்கமானவராகலின் நீங்களேனும் கூறுங்கள் என்றவாறு. ***ஏது*** - யாது என்றது ஏது என மருவி நின்றது. யாதும் இன்று என்பது பொருள்.

அவன் பேர் ஏது - மக்கள் பலர் இருப்பின் அவர்களில் ஒவ்வொருவரையும் ஆணும் பெண்ணுமாக அடையாளம் குறிக்கத் தனித்தனியே பெயரிடுவர். இறைவன் ஒருவனாகவே நிற்கின்றான். அவன் ஆணுமல்லன் பெண்ணுமல்லன். அவன் வடிவமும் ஆணும்பெண்ணும் இணைந்தது. அவனை எந்தப் பெயரால் விளிப்போம் என்றவாறு. **பேர்**- பெயர் என்றதன் மரூஉ.

உற்றார் ஆர் - ஒருவனுக்கு உறவினர் தந்தை வழி, தாய் வழி, மனைவி வழி, மக்கள் வழியே அமைவர்.

திருச்சிற்றம்பலம்

" உற்றா ராருளரோ - உயிர் கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லால்நமக்
குற்றா ராருளரோ ?"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4-9-10)

என்பது நினைக.

இறைவன், தாயுமிலி தந்தையிலி; மனைவியோ நெருப்பிற் சூடு போன்று அவன் குணமாகவே உள்ளவள்; மக்கள், அவன் இளமைக் கோலமே; எனவே அவனுக்கு உறவினராக யாரைக் கொள்வோம்?

அயலார் ஆர் - ஆன்மாவை அவன் தன் அட்ட மூர்த்தங்களுள் ஒன்ருகக் கொண்டவன். ஆதலின் அவனுக்கு அயலாராக யாரைக் கொள்வோம். ஒருவனுடன் தொடர்புள்ளவரை நண்பர், நொதுமல், பகைவர் என மூவராகப் பிரிப்பில் நொதுமல் என்பது நட்போ, பகையோ இல்லாத அந்நியர். ஆங்கிலத்தில் Stranger என்பர். ஈண்டு அயலார் என்பதை Foes (பகைவர்கள்) என்று Dr.G.U. Pope; திரு. K.M. பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் மொழிபெயர்த்துள்ளனர்.

அவனைப் பாடும் பரிசு ஏது - சொல்லுக்கும் இடங்களுக்கும் அப்பாற்பட்ட அவனை எவ்வண்ணம் புகழ்ந்து துதிப்போம் என்றவாறு. *பரிசு* - வகை. ★

இத்திருப்பாடலில், "பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்" என அம்மையின் பெருமை வலுத்தப்படுதலின் "*சத்தியை வியந்தது*" புலனுதல் காண்க.

165. மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரன்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய் கக

★ "If I make the seven oceans ink,
if I make the trees my pen,
if I make the earth my paper,
the glory of God cannot be written" - *Kabir*

(இ - ள்)

"எங்கள் பாவை போன்ற பெண்களே! நான் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வீர்களாக; செறிந்த நெருப்பை ஒத்த செந்நிறமுள்ளவனே; வெண்ணிறமான திருநீற்றை உத்தூளனமாக அணிந்தவனே; வீடுபேறு என்னும் திருவுடையவனே; சிற்றிடையும் மை தீட்டப்பட்ட அகன்ற விழிகளும் கொண்ட உமையம்மையின் கணவனே; எங்கள் தலைவனே; வண்டுகள் நிறைந்த அகன்ற திருக்குளத்தில் கைகளால் நீரை அளைந்து முகேர் என்று ஒலிதோன்றும் வண்ணம் நீரில் வீழ்ந்து மூழ்கி; நின் திருவடிகளைப் புகழ்ந்து பாடி; வழி வழி அடிமைகளாகிய நாங்கள் நல்வாழ்வு எய்தினோம்; ஆண்டவனாகிய நீ, ஆன்மாக்களை அடிமைகொண்டு காத்தருளும் திருவிளையாடலினால், உய்தி பெறுவார்கள். உய்தி பெறும் வகைகள் அனைத்தாலும் ஈடேறி விட்டோம்; இனி நாங்கள் இளைத்துவிடாமல் காத்தருள்க.

(வி - ரை)

இத்திருப்பாடலை; - "எம்பாவாய் ஓர் ஏல்; ஆர் அழல் போல் செய்யா; வெண் நீருடி; செல்வா; சிறு மருங்குல் மையார் தடம்கண் மடந்தை மணவாளா; ஐயா; மொய்யார் தடம் பொய்கை புக்கு; கையால் குடைந்து; முகேர் என்னக் குடைந்து; உன் கழல் பாடி; வழியடியோம் வாழ்ந்தோம் காண்; ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்; உய்வார்கள் உய்யும்வகை எல்லாம் உய்ந்து ஒழிந்தோம்; எய்யாமல் காப்பாய்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

ஆர் அழல் போல் செய்யா - ஆர் அழல் போல் - நிறைந்த நெருப்புப்போல. நெருப்பு தான் தூயதாக இருப்பதன்றித் தான் பற்றிய பொருள்களையும் தூயதாக்கி ஒன்றுவிக்கும். இறைவனும் தான் இயல்பாகவே பாசங்களினீங்கி இருப்பதன்றித் தான் பற்றிய ஆன்மாக்களையும், மலங்களினின்றும் நீக்கித் தூயனவாக்கித் திருவருளுடன் ஒன்றுவிப்பன். *செய்யா* - செந்நிறமுடையவனே! விளி. செம்மை நிறத்தை மட்டுமன்றிக் குற்றமின்மையையும் உணர்த்தும். இது, நெருப்பு இறைவன் இருபாலும் பொருந்துமாறு காண்க. நெருப்பு, அணுக இயலாததுபோல இறைவனும் அயன், மால் இருவருக்கும் அணுக இயலாத அண்ணாமலையாக நின்றான். நெருப்பு, பொருள்களை அழிப்பது;

இறைவன் பேரூழிக்காலத்தில் எல்லா உலகங்களையும் அழித்தலாகிய தொழிலைச் செய்பவன். ஆதலின் **போல்** என்றார்.

வெள் நீறு ஆடி - வெள்ளை நிறமாகிய திருநீற்றை உத்தூளனமாக அணிந்துள்ளவளே! *வெண்நீறு* - வெள்ளை நிறமுள்ள திருநீறு. அஃதொன்றே அணியத்தக்கது என்பதும், ஏனைய நிறமுள்ளவை விலக்கத்தக்கன என்பதையும், பேரூர்ப்புராணம், உபதேச காண்டம் முதலியவற்றாலறிக. *நீறு ஆடி* திருநீற்றில் குளித்தவன். தொழிலாகு பெயராக இறைவனை உணர்த்திற்று. "பொடி பூசி" என்பது போலக் கொள்க. *ஆடுதல்* - குளித்தல். திருநீறாடுதலை பஸ்ம ஸ்நானம் என்பர். *வெண்ணீறு* உமையம்மையைக் குறிக்கும். "பராவணமாவது நீறு" எனவரும் ஆளுடைப் பிள்ளையார் திருவாக்கை எடுத்துக்காட்டி இதை முன்பே போற்றித் திருவகவல் 197-உரையில் விளக்கினும். பேரூழியின் முடிவில் இறைவனுள் ஒடுங்கிய உமையம்மை மீண்டும் புனருற்பவத்தின் பொருட்டு அவனிடமிருந்து வெளிப்படுவள். அந்நிலையில் அவள் இறைவன் திருமேனிமேல் அநாதி விபூதி வடிவமாகப் படர்வள். இதையே ஈண்டு *வெண்ணீறாடி* என்றார். இதனால் திருவைந்தொழில்களில் ஒன்றான படைப்புத் தொழில் வழுத்தப்பட்டது.

செல்வா - வீடுபேறாகிய திருவையுடையவனே! விளி. இதனால் திருவைந்தொழில்களில் மற்றொன்றாகிய அருளல் வழுத்தப்பட்டது. சிவபெருமானைச் "செல்வன்" என்பது மரபு. முன்னம் 51-ம் திருப்பாட்டில் "செல்வனே" என்றதன் கீழுரைத்தவை காண்க.

சிறு மருங்குல் மைஆர் தடம்கண் மடந்தை மணவாளா - *சிறு மருங்குல்* - சிற்றிடை. *மைஆர் தடம்கண்* - மைநிறையப் பூசியுள்ள அகலமான கண்கள். *மடந்தை* - இளமையுள்ள பெண். இவையனைத்தும் அம்பிகையின் மாறாத இளமை குறித்தன. *மணவாளன்* - கணவன். மாறா இளமையுடைய உமையம்மையின் கணவனாகிய இறைவனும் மாறா இளமையுடைய மணவாளன். இதை நம் அடிகள் "நித்த மணாளர் நிரம்ப அழகியர்" (338) என்று பின்னர் அருளிச் செய்தல் நினைக. *மணவாளா* என்றது விளி. இறைவனின் திருவைந்தொழில்களில் ஒன்றான காத்தல் கூத்தை முதலில் அம்பிகை தன் கண்களாற் பருகி உயிர்களின்

ஆற்றலுக்கேற்பப் பக்குவப்படுத்தி அளிப்பள். இதைப் "பாலுண் குழவி பசுங்குடர் பொறுதென நோயுண் மருந்து தாயுண்டாங்கு" (சிதம்பர மும்மணிக்கோவை 14-15) என அழகோவியம் தீட்டுவர் குமரகுருபர முனிவர். ஆதலின் ஈண்டு அம்பிகையின் கண்களை "**மையார் தடங்கண்**" என்று சிறப்பித்துரைத்தார். இதனுல் திருவைந்தொழில்களில் ஒன்ருன "காத்தல் தொழில்" வழுத்தப்பட்டது.

ஐயா - திருவைந் தொழில்களை மிக எளிதில் இயற்றும் பெருந்தலைவனுகிய நீயோ எளியோமாகிய எங்கட்கும் தலைவனுயினை என்னும் வியப்பால் **ஐயா** என்றவாறு. **ஐயன்** - தலைவன். **ஐ** - வியப்புக் குறிப்பதோர் இடைச்சொல். "ஐ" வியப்பாகும். முன்னம் 63-ம் திருப்பாட்டில் "ஐயா" என்றதன் கீழ் உரைத்தவை பார்க்க. இச்சொல் இப்பொருளில் வருவதை "ஐதே காமம்" என நற்றிணை 143-ம் பாடலில் காண்க.

மொய்யார் தடம் பொய்கை புக்கு - *மொய்* - வண்டுகள் நிறைந்த. மொய்த்தல் தொழில் பற்றி தொழிலாகு பெயராக வண்டுகளை உணர்த்தி நின்றது. நீராடுவோர் நெருங்கியுள்ள எனலுமாம்; பூக்கள் நிறைந்த எனலுமொக்கும். "*மொய்யார் தடம் பொய்கை*" - என்பது திருப்பெருந்துறையில் இருந்த ஒரு பொய்கையின் பெயர் என்பர் கவியரசு அவர்கள். **ஆர்தல்** - நிறைதல். "வண்டுகள் நிறைந்த" என்றும், "மலர்கள் நிறைந்த" என்றும், "நீராடுவோர் நிறைந்த" என்றும் உரைக்க நின்றது. **புக்கு** - நீராடும் பொருட்டுப் பொய்கையுள் இறங்கி.

கையால் குடைந்து - கைகளால் நீரைத் துழாவி. மார்கழித் திங்கள் மிகவும் குளிர் நிறைந்த காலம். வைகறையில் பொய்கையில் நீராடுவோர் முதலில் கைகளால் நீரை அளைந்து உடம்பு குளிரை ஏற்றுக் கொள்ள ஆயத்தம் செய்வது குறித்தது. நீராடுமிடத்தில் பரவியுள்ள மலர்கள், வண்டுகள் முதலிய விலகி நீர்ப்பரப்பை மூழ்குவதற்குத் தக்கவாறு கைகளால் அளைந்தனர் எனலுமாம். **குடைதல்** - நீரில் மூழ்கும்படி கைகளை ஆழ்த்தி நீர்ப்பரப்பைக் கலக்குதல்.

முகேர் என்னக் குடைந்து - குளிர் காலத்தில் வைகறையில் இல்லங்களில் வெந்நீரில் குளிப்போர் முதலில் சூடான நீரைத் தங்கள்

இடுப்பின் கீழ் கால்களிலும், பின்னர் மார்பு, தோள் முதலியவற்றிலும் ஊற்றிக் கொள்வர். வெப்பத்தால் உடலில் குருதி ஓட்டம் விரைவுபட்டு உடல் சூடாகும். பின்னர்த் தலையில் நீர் விட்டுக் குளிப்பர். அந்நிலையில் புறத்தே உள்ள குளிர்காற்றை உடல் ஏற்கத் தகுதியாகிவிடும். நீர் நிலைகளில் நீராடுவோர் அங்ஙனம் பகுதி பகுதியாக உடலைத் தண்ணீரில் நனைப்பின் குளிர் அதிகமாகி உடல் நலம் குன்றும். ஆதலின் நீர்ப்பரப்பில் உடல் முழுவதும் ஒரே சமயம் நனையும்படி திடீரென்று மூழ்குவர். மூழ்கி எழுந்ததும் உடல் குளிரை ஏற்கத்தக்கதாகிவிடும். அவ்வாறு "*முகேர்*" என ஒலியுண்டாகும்படி மூழ்கினர் என்றவாறு. *குடைதல்* - உடல் முழுவதும் நனையும்படி நீர்ப்பரப்பில் முழுகுதல்.

குடைந்து குடைந்து - என அடுக்குத் தொடராகக் கொண்டு பலமுறை மூழ்கி என்றுரைத்தாருமுண்டு.

உன்கழல் பாடி - நீராடுங்கால் இறைவன் புகழ்களைப் பாடிக்கொண்டே நீராடும் மரபை இன்றும் பலரிடம் காணலாம். நீராடுமுன் தீர்த்தனுகிய இறைவன் திருவடிகளைப் புகழ்ந்து பாடுவதால் நீரைப் புனிதமாக்கி அதன்பின் அதில் தோய்ந்து - என்பர் கவியரசு அவர்கள்.

உன்வழி அடியோம் வாழ்ந்தோம் காண் - *உன் வழியடியோம்* - எந்தை தந்தை தந்தை, எங்கூட்டம் எல்லாம் தம்பிரான் நீயே என்று வாழையடி வாழையாக உனக்கு அடிமைகளாக வந்த குடியில் பிறந்த நாங்கள். *வாழ்ந்தோம்* - இந்தப் பாவை உற்சவத்தின் குறிக்கோள் வைகறை நீராடி உன்னைப் பரவி நாங்கள் விரும்பிய அனைத்தையும் பெறுதலாகும். இதை நாங்கள் மனமார நிறைவேற்றினோம். ஆதலின் எங்கள் விருப்பம் நிறைவேறப் பெறுவோம் என்றவாறு. துணிவு பற்றி "*வாழ்ந்தோம்*" என இறந்த காலத்திற் கூறினர். முன்னம் போற்றித் திருவகவல் 130-ல் "வைத்த" என்றதன் கீழுரைத்த இலக்கணக் குறிப்புகள் காண்க. *காண்* - முன்னிலை அசை.

ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின் - *ஐயா நீ* - சந்தியில் மறைந்துள்ள மகரவொற்றை வெளிக்கொணர்ந்து ஐ ஆம் நீ என்று பிரித்துக் கொள்க. ஐ - தலைவன். தலைவனும் நீ என்றவாறு. *ஆட்கொண்டு அருளும் விளையாட்டு* - *ஆட்கொள்ளல்* - ஒரு செயல்;

அருளுதல் ஒரு செயல். இறைவன் தன் அடிமைகளாக ஏற்றுக் கொண்ட உயிர்களை அவற்றின் வினைகளை நுகரச் செய்து சோபான முறையில் மலபரிபாகம் வருவித்து முன்னேற்றுகின்றான். ஆணவ மலப்பிணிப்பு படிப்படியாகத் தளர்கின்றது. இஃதோர் அருளிப்பாடு. இதில் வினைப் பயன்களை நுகர்விக்கும் பொருட்டுத் திரோதான சத்தியால் மலத்தைத் தொழிற் படுத்தி ஆன்ம அறிவை மறைக்க வேண்டியுள்ளது. இதனால் அவன் திருவைந் தொழில்களில் ஒன்றான "மறைத்தல்" வழுத்தப்பட்டது காண்க. மலபரிபாகமுற்ற ஆன்மா வீடு பேற்றுக்குத் தகுதியாகின்றது. இறைவன் அதற்கு வீட்டின்பம் நல்குகின்றான். இதனையே **அருளும் விளையாட்டு** என்று குறித்தார். இதனால் திருவைந்தொழிலில் ஒன்றான "**அருளல்**" வழுத்தப்பட்டது. *விளையாட்டு* - இத்திருப்பாடலில் இறைவன் தொழில்கள் ஐந்தும் வழுத்தப்பட்டமை கண்டின்புறுக. இத்திருவைந்தொழில்களைப் பெருமுயற்சியின்றி ஒரு விளையாட்டுப் போல் எளிமையிற் செய்கின்றான் என்றவாறு.

ஈண்டு;

" சொன்னவித் தொழில்க ளென்ன காரணந்
தோற்ற வென்னில்
முன்னவன் விளையாட் டென்று மொழிதலு
மாமு யிர்க்கு
மன்னிய புத்தி முத்தி வழங்கலு மருளான் முன்னே
துன்னிய மலங்க ளெல்லாந் துடைப்பதுஞ்
சொல்ல வாமே"

(சிவஞானசித்தியார் - சுபக்கம் சூத்.1. அதி-2. செய்-36.)

எனவரும் ஞான சாத்திரமும் அதற்கு உரை கண்ட நம் மாதவச் சிவ ஞான முனிவர் இத்திருவாசகப் பாடலின் பகுதியையே எடுத்துக் காட்டி "ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்... என்பது முதலிய திருவாக்குக்கள் பற்றி, விளையாட்டென்றது, ஐங்கலப் பாரஞ் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டென்பது போல அத்துணை யெளிதிற் செயப்படுதலை நோக்கியே யாகலின்; அக்கருத்தும் உயிர்கட்குப் பெத்த காலத்துச் சுவர்க்காதி போகமும், பதமுத்திகளும் முத்தி காலத்து வீடுபேறும் கொடுத்தற் பயத்த தென்ப" என்று விளக்குவதும் காண்க.

உய்வார்கள் உய்யும் வகை எல்லாம் உய்ந்தொழிந்தோம் - ஒரு நிலப்பரப்பில் ஒரு மணி நேரம் இடையீடின்றிப் பெருமழை பெய்யின் அப்பரப்பிலுள்ள மேட்டுப் பகுதி மழை நீரை வீணே கழிக்கும்; பள்ளப்பகுதி நீரைத் தன்பால் நிறுத்தி உழவுத் தொழிலுக்கும் நிலத்தடி நீர் வளத்துக்கும் பயன்படுத்திக் கொள்ளும். அவ்வாறே திருவருட் பெருக்கைப் பக்குமில்லார் விட்டொழிப்பர். தவத்தால் பக்குவமுற்றோர் ஏற்றுப் பயன்பெறுவர். ஈண்டு ***உய்வார்கள்*** என்றது திருவருளை விரும்பித் தவம் புரியும் மெய்யடியார்கள். ***உய்யும் வகை*** - மலப்பிணிப்பை நீக்கித் திருவருளைப் பெறுதற்குரிய உண்மைச் சரியை முதலிய நெறிகள். ***எல்லாம்*** - சோபான முறையில் அந்நெறிகள் அனைத்தையும் சாதனங்களாகக் கொண்டு. ***உய்ந்தொழிந்தோம்*** - ஈடேறியே விட்டோம். ***ஒழி*** - துணிவு பற்றி வந்த துணை வினை. கருதிய அனைத்தும் கைவரப்பெற்றே விட்டோம் என்றவாறு. இச்சொல் இவ்வாறு துணைவினையாக வருதலை;

திருச்சிற்றம்பலம்

" மண்ணுல கிற்பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்ட னேனின்று கண்
டொழிந்தேன்
விண்ணுல கத்தவர் விரும்ப வெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித் தான்மலை யுத்தமனே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 7-100-5)

எனவரும் நம்பிகள் திருவாக்கிற் காண்க.

எய்யாமல் எமைக் காப்பாய் - செந்நெறிச் செலவில் யாங்கள் இதுவரை முன்னேறிக் கருதிய அனைத்தும் கைவரப் பெற்றோம். இனி, மேலும் வீட்டுலகை நோக்கிச் செல்ல வேண்டியுள்ள செலவில் நாங்கள் களைப்படைந்து பிறவியிற் சென்று விடாமல் எங்களைக் காத்தருள்க-என்றவாறு. ***எய்யாமை*** - அறியாமை எனப் பொருள் கொண்டு "அஞ்ஞானம்" வராமல் காப்பாய் எனலுமாம். இச்சொல் இப்பொருளில் வருவதை,

"எய்யா மையே யறியா மையே"

(தொல்காப்பியம்- சொல்லதிகாரம்-உயிரியல் சூத்.342)

என்பதிற் காண்க.

எய்யாமல் - நீ இளைத்து விடாமல் என்றும் பொருள் கொள்ளலாம் என்பது கவியரசு அவர்களின் உரைக்குறிப்பு. *எய்ப்பு* - களைப்பு என்ற பொருளில் வருவதை,

"அப்பாயெய்ப் பில்வைப்பே யாற்றுகிலேன் போற்றி யென்று
செப்புவதல் லால்வே றென் செய்வேன் பராபரமே"

(பராபரக்கண்ணி 25)

என்று தாயுமானப்பெருமானும் கூறுவதிற் காண்க.

இத்திருப்பாடலில் "சிறு மருங்குல் மையார் தடங்கண் மடந்தை மணவாளர்" என்று உமையம்மை வழுத்தப்படுதலின் "சத்தியை வியந்தது" காண்க.

166. ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய் கஉ

(இ - ள்)

"எங்கள் பாவை போன்ற பெண்களே! நான் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வீர்களாக; நம்மை அநாதியே கட்டிய பிறவித் துன்பம் ஒழியும் வண்ணம்; நாம் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்து முழுகும் தூய நீரையுடையவனும்; நல்ல தில்லை நகரின்கண் உள்ள

சிற்றம்பலத்தில் அனலை ஏந்தி ஆடுகின்ற அருட்கூத்தினனும்; இப்பூவுலகையும் மேலுலகங்களையும் நம் அனைவரையும்; ஆக்கியும் அளித்தும் ஒடுக்கியும் விளையாடுகின்றவனுமாகிய சிவபெருமானின் திருப்புகழையும் இசைத்துக் கொண்டு கைவளையல்கள் ஓசை செய்யவும்; நீண்ட மேகலை முதலிய அணிகள் ஆரவார ஓசை எழுப்பவும்; அழகிய கூந்தலின்மேல் வண்டுகள் எழுந்து ஓசை செய்யவும்; தாமரை மலர்கள் விளங்குகின்ற திருக்குளத்தில் மூழ்கி; அனைத்து உயிர்களையும் அடிமைகளாகவும், உலகங்களை உடைமைகளாகவும் கொண்டுள்ள இறைவனின் பொன்போன்ற திருவடிகளைப் புகழ்ந்து துதித்து; பெரிய சுனை நீரிலும் மூழ்குங்கள்.

(வி - ரை)

இத்திருப்பாடலின் ஈற்றிலுள்ளனவற்றை "எம்பாவாய் ஓர் ஏல்" என மாற்றி முதலில் அமைக்க. மூன்றும் அடியிலுள்ள "குவலயமும்" என்பதை "வானும்" என்பதன் முன்னும், நான்காமடியிலுள்ள "படைத்தும்" என்பதைக் "காத்தும்" என்பதன் முன்னும் வைக்க. பிறகு பாடலுக்குப் பொருள் காண்க.

ஆர்த்த பிறவித் துயர் கெட - ஆர்த்த - அநாதியே ஆணவ மலத்தால் பிணிப்புண்டதன் காரணமாக வந்துள்ள பிறவி. அவ்வாறு வந்தபின் மாயா கன்ம மலங்களாலும், ஆன்மா கட்டப்படுவதால் வரும் பிறவி என்பதும் அறிக. அவ்வாறு வந்த பிறவியினுல் ஆன்மாவின் அறிவு இச்சை செயல்களும் பிணிப்புண்பது நினைக. *ஆர்த்தல்* - நுகர்வித்தல் என்று பொருள் கொண்டு "வினைப் பயனை நுகர்வித்த பிறவி" எனப் பொருள் கோடலுமாம். இச்சொல் இப்பொருளில் வருவதை "நசையுநர்க் *கார்த்து* மிசை பேராள" (திருமுருகாற்றுப்படை 270) என்ற பகுதிக்கு நச்சினுர்க்கினியருரையாலறிக. "ஆர்த்த துயர்"; "ஆர்த்த பிறவித் துயர்" என இருபாலும் கூட்டியுரைக்க. *கெட* - இப்பொய்கையில் நீராடுவதால், அநாதியான மலப்பிணிப்பும், அதன் காரணமாகப் பிரவாக அநாதியாய் வரும் பிறப்பிறப்புக்களும், அவற்றின் காரணமாக வரும் துயர்களும் ஒழியும்படி.

நாம் ஆர்த்து ஆடும் தீர்த்தன் - ஆர்த்தல் - ஆரவாரம் செய்தல். அது பிறப்பிறப்பு நீங்குவதற்குச் சாதனமாக நாம் நீராடுவதற்கு இறைவனின்

இந்தப் பொய்கையைப் பெற்றேம் என்னும் மகிழ்ச்சியால் நிகழ்வது. தீர்த்தன் - தீர்த்தனது பொய்கை என்க. தீர்த்தன் - தூயவன். ஆன்மாக்களின் மல மாசுகளை மண்ணித் தீர்ப்பவன். நீர், சிவபெருமானின் அட்ட மூர்த்தங்களுள் ஒன்றுகலின் புண்ணிய நீர்களைச் சிவபெருமானுகவே கொள்வதும் மரபு. இதனை;

திருச்சிற்றம்பலம்

"ஒன்று வுலகனைத்து மானர் தாமே
ஊழிதோ றூழி யுயர்ந்தார் தாமே
நின்றுகி யெங்கு நிமிர்ந்தார் தாமே
நீர்வளிதீ யாகாச மானர் தாமே
கொன்றுடுங் கூற்றை யுதைத்தார் தாமே
கோலப் பழனை யுடையார் தாமே
சென்றுடு தீர்த்தங்க ளானர் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-78-1)

எனவரும் நம் அரசுகளின் அமுதவாக்கிற் காண்க.

நாம் ஆரவாரித்து இன்பக்கூத்து ஆடுவதற்கு ஏதுவாகிய அம்பலவாணன் எனலுமாம்.

நல்சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன் - சிற்றம்பலம். தில்லைத் திருக்கோயிலில் உள்ள ஐந்து ஆடரங்குகளுள் ஒன்று. இஃது அம்பலவாணர் எழுந்தருளியுள்ள கருவறைக்கு முன் உள்ளதும், நாள்தோறும் இரத்தின சபாபதியும் படிக லிங்கமும் திருமுழுக்குப் பெறுவதுமான கனகசபை. கனகசபை முன் அன்பர்கள் நின்று வழிபடும் இடத்துக்குத் தெற்கில் கோவிந்தராசரின் சித்தர கூடத்தை அடுத்துள்ள திருச் சுற்றின் தெற்கில் உள்ளது நிருத்தசபை. சோமாஸ்கந்த மூர்த்தம் எழுந்தருளியுள்ளது தேவசபை என்னும் பேரம்பலம். ஆயிரக்கால் மண்டபமாக உள்ளது இராஜசபை. கருவறையின் மேற்குப் பகுதி சிதாகாசம். பேரம்பலத்தினின்றும் பிரித்துணர்த்தச் சிற்றம்பலம் என்றுர்.

ஈண்டு இறைவன் திருக்கூத்தைக் கண்டு வழிபட்டோர்க்கு வீடுபேறு கிட்டுவதால் *நல்* - என்ற அடைபுணர்த்தார். *தீயாடும்* - கையில் அனலேந்தி ஆடும். இது திருவைந் தொழில்களில் ஊழிக்கூத்தை உணர்த்திற்று. *தீயாடுதல்* - தீயொளி - ஞானம். அது பக்குவான்மாக்கள் தன்னை ஞானத்தால் கண்டுய்யும் பொருட்டு எனலுமாம். "*தீயாடும் கூத்தன்; ஆடும் கூத்தன்*" என்று பிரித்துரைக்க. *ஆடும் கூத்தன்* - திருவைந் தொழில் கூத்துக்களை இயற்றுபவன். அவை தில்லையம்பலத்தில் ஆடப் பெறுவன. சத்தியம் செய்வோர் நெருப்பைக் கையிலேந்திச் சத்தியம் மொழிவர் என்பது மரபு. ஈண்டு இறைவன் அனலேந்தியுள்ளது "என் பிறவியை நீக்குவது சத்தியம்" என்றவாறு என்பர் சீகாழித் தாண்டவராயர். *தீயாடும் தீர்த்தன்* என்று கூறியது முரண்பாட்டினிடையே முழுமுதலைக் காணும் சிறப்பு என்பர் பேராசிரியர் திரு. அ.ச. ஞானசம்பந்தம்.

இக்குவலயமும் வானும் எல்லோமும் - ***இவ்வானும்*** - என்பதிலுள்ள இகரச் சாட்டைப் பிரித்துக் "குவலயமும்" என்பதன் முன்புணர்க. விண் உலகங்களை விட நில உலகம் நமக்கு அணிமையில் உண்மை அறிக. ***வானும்*** - பூவுலகத்துக்கு மேலும் திருக்கயிலைக்குக் கீழும் உள்ள எல்லா உலகங்களையும். ***எல்லோமும்*** - ஆன்ம கோடிகளாகிய நம் அனைவரையும். குவலயமும் வானும் மாயையால் தோற்றுவிக்கப்பட்ட அவ்வுலகங்களாகிய சடப் பொருள்களைக் குறிக்கும். இனம் பற்றிக் கீழுலகங்களையும் கொள்க. ***எல்லோமும்*** - இம்மூவகை உலகங்களில் வாழும் ஆன்மாக்களாகிய நம் அனைவரின் தனுகரணங்களையும் என்றவாறு.

படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடி - செய்யுளாகலின் "***காத்தும் படைத்தும்***" என முன்பின்னாக வைத்தார். *படைத்தல்* - அநாதி கேவலத்திற் கிடக்கும் உயிர்களைக் காரண உடல் முதல் தூல உடல் வரையுள்ள ஐந்து உடல்களையும் அவற்றுள் நின்றியங்கும் கரணங்களையும், அவ்வுயிர்கள் புசிப்பதற்கான போகங்களையும், அவை நின்று தொழிற் படுதற்கான உலகங்களையும், தோற்றுவித்தலும் பேரூழியின் பின்வரும் புனருற்பவங்களில் இவற்றைத் தோற்றுவித்தலும். *காத்தல்*- அவ்வாறு தோற்றுவிக்கப்பட்டவை அவ்வவ்வுயிர்களுக்குத் தேவையான கால எல்லை முடியும் வரை அழிந்து விடாமல் பாதுகாத்தல். *கரந்தும்* - ஒடுக்கியும்; தோற்றுவிக்கப்பட்ட தனு கரண புவன போகங்கள் நிலை பெறுவதற்குரிய கால எல்லைகள் முடிந்ததும்

அவற்றை மாயையுள் ஒடுக்கியும் என்றவாறு. திருவைந்தொழில் நிகழும் இவை மூன்றும் சடப் பொருள்கள்மாட்டு நிகழ்வன. உயிர்கள்மாட்டு நிகழும் ஏனைய இரு தொழில்களில் "மறைத்தலை" கரத்தலுள்ளும்; "அருளலை"க் காத்தலுள்ளும் அடக்கிக் கூறினார். *விளையாடி* - தொழிலடியாகப் பிறந்த பெயர்; விளையாடுதலைச் செய்பவன் என்பது பொருள். **கூத்தனும்** - விளையாடியுமாகிய இறைவனின் வார்த்தை என்க. இகரம் வினை முதற் பொருளில் வந்தது. *விளையாடி* - மிக எளிதிற் செய்பவன்; முன்னம் 165-ம் திருப்பாடல் உரையில் "விளையாட்டு" என்றதன் கீழுரைத்தவை காண்க.

வார்த்தையும் பேசி - நீராடுவதுடன் அவன் பொற்பாதங்களையும் ஏத்த உள்ளனர்; அதன்முன் அவன் புகழ்களையும் பேசினர் என்பதால் உம்மை எதிரது தழுவிய எச்சம். *வார்த்தை* - இறைவன் புகழ்கள். திருவைந்தெழுத்தை ஓதி எனலுமாம். 165-ம் திருப்பாடலில் "உன் கழல்பாடி" என்றதன் கீழுரைத்தவை காண்க.

வளை சிலம்ப - கைகளில் அணிந்துள்ள சங்கு வளையல்கள் ஒலிக்க. நீர்ப்பரப்பைக் கைகளாற் குடைந்து அதன்பின் மூழ்குதலின் கைவளைகள் ஒலித்தன. *வளை* - சங்கு. முதற்காரணம் வளை அதனின்றும் அறுத்து எடுக்கப்படும் காரியம் ஆனதால் கருவியாகு பெயராகச் சங்கை உணர்த்திற்று எனக் கொண்டு "சங்குகள்" ஒலிக்க எனலுமாம். ஈண்டுச் சங்கு வலம்புரிச் சங்கை உணர்த்தி நின்றது. அதனைச் செவியில் அணைத்து உற்றுக் கேட்பின் பிரணவ ஒலி கேட்கும். ஆதலின் "சமட்டிப் பஞ்சாட்சரம் கூறிக் கொண்டு" எனலுமாம். "ஓம்" என்னும் பிரணவம் கூறியவாறு நீராடுங்கள் என்றவாறு.

வார்கலைகள் ஆர்ப்பு அரவம் செய்ய - *கலைகள்* - மேகலைகள். தலைக்குறை விகாரம். மணிகள் இழைத்த நீண்ட பொன் வடங்களாக இளமகளிர் அரையில் அணியும் அணிகலம். இவை ஏழு அல்லது எட்டு வடங்களாக அமைக்கப்படுவன. ஆதலின் நீராடும்காலை அவ்வடங்கள் ஒன்றுடனொன்று மோதி ஆர்ப்பரவம் செய்தன. இதற்கு இவ்வாறன்றிக் "*கலைகள்*" என்பதை Sarees என்று மொழிபெயர்த்தார் திருவாசகமணி திரு. K.M. பாலசுப்பிரமணியம்.

அணிகுழல் மேல் வண்டு ஆர்ப்ப - அணிகுழல் - மலர்களாலும், நறுமணமுள்ள மயிர்ச் சாந்து முதலியவற்ருலும் அழகு செய்யப்பட்டிருந்த கூந்தல். ***மேல்வண்டு ஆர்ப்ப*** - நீராடுங்கால் மகளிர் தலையில் அணிந்திருந்த மலர்மாலைகளை நீக்கிவிட்டு நீராடுவர். எனினும் அதுவரை மலர்கள் சூட்டப்பட்டிருந்ததாலும், நறுமணத் தைலம் முதலியவற்ருலும் வண்டுகள் அவர்கள் கூந்தலில் மொய்த்திருக்கும். இப்பொழுது அவர்கள் பொய்கை நீரில் மூழ்குதலின் வண்டுகள் அவர்கள் தலைகளை விட்டு மேல் எழுந்து ஆரவாரம் செய்தன என்க. உத்தம சாதிப் பெண்களாகலின் அவர்கள் கூந்தல் இயற்கையிலேயே வண்டுகளைக் கவரும் நறுமணமுள்ளவை என்பதும் ஒக்கும்.

பூத்திகழும் பொய்கை குடைந்து - தாமரை மலர் விளங்குகின்ற பொய்கையில் மூழ்கி. பொய்கையில் குவளை, ஆம்பல், அல்லி போன்ற நீர்ப்பூக்கள் நிறைந்து ஒரே ஒரு தாமரை மலர் மட்டும் பூத்திருக்கினும் சிறப்புப் பற்றி அது தாமரைக்குளம் எனப்படும் இவ்வுண்மையை;

திருச்சிற்றம்பலம்

"திறமலி சின்மொழிச் செந்துவர் வாயின வெங்கையர்க்கே
மறமலி வேலோ னருளுக; வார்சடை யான்கடவூர்த்
துறைமலி யாம்பல் லாயிரத் துத்தமி யேயெழினும்
நறைமலி தாமரை தன்னதன் ரேசொலும் நற்கயமே"

திருச்சிற்றம்பலம்

(திருவாரூர் மும்மணிக்கோவை - 24)

எனச் சேரமன்னர் செப்புவதில் காண்க.

ஆதலில் ஈண்டுக் குறிக்கும் பொய்கை தாமரைப் பொய்கையாம். "பூவெனப்படுவது பொறிவாழ் பூவே" என்ற வழக்கும் நினைக. ***திகழும்*** - பொய்கையிலுள்ள குவளை, ஆம்பல், அல்லி போல் பல நீர்ப்பூக்களின் நடுவில் சிறப்பாக விளங்கும். ***பொய்கை*** - தாமரைக்குளம். இதற்கு இவ்வாறன்றி மலர்கள் விளங்குகின்ற குளம் என்றே முன்னுரையாளர் அனைவரும் உரைத்தனர். அடுத்து வரும் 167-ம் பாடலில் "பங்கயப் பூம்புனல்" என்று நம் அடிகளே வெளிப்படையாகக் கூறலின் முன்னுரையாளர்களின் உரை நம் அடிகளின் கருத்தன்று என ஒதுக்குக.

திருவாசகத்தில் பல இடங்களில் நம் அடிகள் இறைவன் திருவடிகளுக்குத் தாமரைப்பூவையே உவமை கூறுவதையும், அத்திருவடிகளே வீடுபேறு என உணர்த்திச் செல்வதையும் பரக்கக் காணலாம். ஈண்டு நீராடும் நேரிழையர் தாங்கள் உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்த உண்மையையும், இனியும் வீடுபேறு நோக்கி விரையும் செலவில் தாங்கள் எய்யாமை வேண்டும் என்று விண்ணப்பம் செய்து கொள்வதையும் தாமரை மலர்கள் விளங்கும் பொய்கையின் குளிர்ந்த நீரில் அவர்கள் திளைத்தாடல் இறைவன் திருவடி மலர்கள் நல்கும் தண்ணளியில் திளைத்தின்புறு தலையும் குறிப்பால் உணர்த்தல் கண்டுவக்க.

உடையான் பொற்பாதம் ஏத்தி- உடையான்- வீடுபேருகிய உலவாத செல்வத்தை உடையவன் எனினுமொக்கும். *பொற்பாதம்-* பொன்போன்ற திருவடிகள். அழகிய திருவடிகள் எனலுமாம். ஈண்டு அத்திருவடிகள் நல்கும் வீடுபேறு குறித்து நின்றது. பொன் தன்னையடைந்தார்க்கு எல்லா வளங்களும் தருவது. வீடுபேறும் தன்னை எய்தினர்க்குப் பேரின்பம் பயப்பது என்பன நினைக. *ஏத்தி* - துதித்து. முன்னம் "உன் கழல் பாடி" *(165)* "வார்த்தையும் பேசி" *(166)* என்றன நீராடுவதற்கு முன் நீரைப் புனிதமாக்கும் கிரியைகள். ஈண்டு *ஏத்தி* என்றது பொய்கையில் நீராடிய பின் நிகழும் கிரியை. இஃது அவன் வண்ணமாக நிற்கும் பொய்கையில் நீராடும் பேறு நல்கியதற்கு நன்றியும் இனி நீராடவுள்ள இருஞ்சுனை நீரையும் அவன் வண்ணமாக்கவும் அதில் குடையும் பேறு நல்கவும் வேண்டிச் செய்யும் கிரியையாம்.

இரும் சுனை நீர் ஆடு - சுனை - மலையில் ஆங்காங்குப் பெருகும் நீரூற்றுக்கள். இவை வழிந்திறங்கி வழியிலுள்ள பள்ளங்களை நிரப்பும்; பின்பும் வழிந்து நீர்வீழ்ச்சிகளாக வீழும். மெய்யடியார்கள் பொய்கையில் நாள்தோறும் நீராடுவர். சிறப்பு நாட்களில் பொய்கையில் நீராடிய பின் சுனைகளிலும் நீராடுவர். அது பள்ளங்களில் தேங்கியுள்ள நீரில் குடைதலும், நீர் வீழ்ச்சியில் குளித்தலுமாம். இராமேச்சுரத்தில் உள்ள இருபத்தொரு தீர்த்தங்களில் நீராடியபின் அன்பர்கள் "கோடி தீர்த்தம்" என்னும் சுனை நீரில் குளித்தலையும், திருச்செந்தூரில் உள்ள பிற தீர்த்தங்களில் நீராடியபின் "நாழி தீர்த்தம்" என்ற சுனையில் நீராடி முடிப்பதையும் நாம் இன்றும் காணலாம். *இரும் சுனை - இரும் -* பெரிய. ஆண்டின் எல்லா நாட்களிலும் நீர் வளம்

குன்றாத பெரிய சுனை. இறைவனே அனல் வடிவமாக நின்ற அண்ணாமலையில் உள்ள பெருமை பெற்ற சுனையுமாயிற்று. நெருப்பு மலையில் இருந்தும் நீர்வளம் குன்றாத பெருமையுள்ள சுனை என்ற நயமும் காண்க. **ஆடு** - ஆடுங்கள். நீராடுங் குழுவில் ஒருத்தி மற்ற பெண்கள் அனைவரையும் விளித்துக் கூறியது. ஒருமை பன்மை மயக்கம். இதை வழி மொழியும் ஏனைய பெண்கள் ஒவ்வொருத்தியும் மற்ற அனைவரையும் விளித்துக் கூறிய ஏவல் வினைமுற்றாகப் பொருள் கொள்க. இனி வரும் பாடல்களில் இவ்வாறு வருமிடங்களிலும் இங்ஙனமே பொருள் கொள்க.

இத்திருப்பாடலில் "*உடையான் பொற்பாதம் ஏத்தி*" என்றதனால் திருவடியாகிய அம்பிகையை வழுத்துதல் கூறப்பட்டது. அதனால் "*சத்தியை வியந்தது*" பெற்றாம்.

167. பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும்புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் கரு

(இ - ள்)

"எங்கள் பாவை போன்ற பெண்களே! நான் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வீர்களாக. குளிர்ந்த கருங்குவளை மலர்களையுடைமையாலும்; செந்தாமரையின் புதிய பேரரும்புகளையுடைமையாலும்; அழகிய நீர்ப்பறவைகளை யுடைமையாலும்; மேலும் மேலும் எழும் அலைகளையுடைமையாலும்; நீராடுவோர் தங்களிடமுள்ள அழுக்கைக் கழுவிக் கொள்ள வந்து எய்துதலாலும்; எங்கள் இறைவியையும் எங்கள் இறைவனையும் ஒத்துப் பொருந்திய நீர் நிறைந்த பொய்கையில்; தாவித் தாவிப் புகுதலின்; நம் கைவளைகள் ஓசை செய்யவும்; சிலம்புகள்

அவ்வோசையோடு கலந்து ஓசை எழுப்பவும்; நகில்கள் பூரிக்கவும்; மூழ்கும் நீர்ப்பரப்பு மேலெழவும்; தாமரை மலர்களாற் பொலியும் பொய்கையுள் தாவிப் படிந்து நீராடுங்கள்.

(வி - ரை)

இத்திருப்பாடலின் ஈற்றிலுள்ளனவற்றை "எம்பாவாய் ஓர் ஏல்" என மாற்றிப் பாடலின் முதலில் அமைக்க. ஐந்தாம் அடியிலுள்ள "புகப் பாய்ந்து பாய்ந்து" என்பதைப் "பாய்ந்து பாய்ந்து புக" என மாற்றிக் கொள்க. பிறகு பாடல் முழுவதற்கும் பொருள் காண்க.

இத்திருப்பாடல் பொய்கை, இறைவி, இறைவன் என்ற முப்பொருளுக்கும் பொதுவாய் அமைந்துள்ள முப்பொருட் சிலேடையில் பொலிகின்றது. மேலே பொழிப்புரையில் இப்பொய்கைக்கான பொருள் விரித்தாம்.

பைங்குவளைக் கார் மலரால் - பைங்குவளை - மெல்லிய குவளை எனலுமாம். அன்றலர்ந்த புதிய குவளை மலர் எனலுமொக்கும். ***கார் மலர்*** - கருங்குவளை மலர். குவளை இனத்தில் உள்ள செங்குவளை மலரை விலக்கியவாறு. இப்பொய்கையை இறைவிக்கு ஒப்பிடும் போது கருங்குவளை அவள் திருமேனி வண்ணமாயுள்ளதாலும் என்றும் இறைவனுக்கு ஒப்பிடுங்கால் குவளை அவன் கண்டம்போன்று கருநிறங் கொண்டிருத்தலாலும் என்றும் கொள்க.

செம் கமலப் பைம் போதால் - செங்கமலம் - தாமரை இனத்திலுள்ள வெண்டாமரை மலரை விலக்கற்கு செங்கமலம் என்றூர். ***பைம்போது*** - பசுமைக்கு, மேலுரைத்தவாறு "மெல்லிய" அன்றலர்ந்த என்ற பொருள்கள் கொள்ளலுமாம். ***போது*** - பேரரும்பு. சிறிது நேரத்தில் மலராக விரிய உள்ளது. பொய்கையை இறைவிக்கு ஒப்பிடுங்கால் செந்தாமரைப்போது அவள் திருவடிகளைப் போன்றிருப்பதாலும் என்றும்; இறைவனுக்கு ஒப்பிடுங்கால் செந்தாமரையின் வண்ணம் அவன் திருமேனி வண்ணம் போன்றிருத்ததாலும் என்றும் கொள்க.

அம் கம் குருகு இனத்தால் - அம் - அழகிய, ***கம்*** - நீர்; ***குருகு இனம்*** - நீர்ப் பறவைகளின் கூட்டம். அவை வாத்து, நீர்க்கோழி, நாரை,

கொக்கு, மீன்கொத்தி முதலியன. பொய்கையை அம்பிகைக்கு ஒப்பிடும் பொழுது; ***அங்கம்*** - கைகளாகிய உடலுறுப்புக்கள் என்றும், குருகு ***இனம்*** - வளையல்களின் கூட்டம் என்றும் பொருள் கொள்க. இறைவனுக்கு ஒப்பிடும் பொழுது. ***அங்கம்*** - உடலுறுப்புக்களில் சிறந்ததாகிய தலை என்றும் குருகு ***இனம்*** - பறவையின் இனமாகிய கொக்கு என்றும் கொள்க. ***கொக்கு*** - ஈண்டு முதலாகு பெயராகக் கொக்கின் இறகை உணர்த்திற்று. இறைவன் கொக்கு வடிவில் வந்த குரண்டாசுரனை வதைத்து, அவ்வெற்றியின் சின்னமாக அக்கொக்கின் இறகைத் தன் சென்னியில் சூட்டிக் கொண்டான் என்பது வரலாறு.

பின்னும் அரவத்தால் - பின்னும் - பின்னரும். குவளை, செங்கமலம் குருகினம் இவைகளுடன் மேலும் அரவத்தையுடைமையாலும் என்றவாறு. ***அரவம்*** - நீர்ப்பாம்பு. பின்னி எழும் அலையோசை உண்மையாலும் எனலுமொக்கும். பொய்கையை அம்பிகைக்கு ஒப்பிடும் பொழுது ***பின்னும் அரவத்தால்*** - பாம்பு போன்று பின்னப்படும் கூந்தலால் என்று பொருள் கொள்க. பொய்கையை இறைவனுக்கு ஒப்பிடும்பொழுது "நீர்ப்பாம்புகள் அவன் திருமேனி மேல் பின்னிக் கிடக்கும் பாம்புகளைப் போன்றுள்ளமையாலும்" எனப் பொருள் கொள்க.

தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால் - "நீராடுவோர் தங்களிடமுள்ள அழுக்கைக் கழுவிக்கொள்ள வந்து எய்துவதால்" என்பது பொய்கைக்குப் பொருந்தியவாறு. பொய்கையை இறைவிக்கு ஒப்பிடுங்கால்; தங்கள் ஆணவ மலத்தைக் கழுவிக்கொள்ள விரும்புவோர் முதலில் இறைவன் திருவருளின் உருவகமாகிய அம்பிகையை அணுகுவதால் என்று பொருள் கொள்க. இறைவனுக்கு ஒப்பிடுங்கால், திருவருளாகிய குணத்தையுடைய குணியாகிய இறைவனை அடைவதால் என்று பொருள் கொள்க.

"சிவயநம" என்பது சூட்சும பஞ்சாட்சரம் என்பதை முன்னம் சிவபுராண உரையில் விளக்கினோம். இதில் "ம" கரம் ஆணவ மலம். "ய"கரமாகிய ஆன்மா அம்மலத்தைக் கழுவிக்கொள்ள விரும்புகின்றது. "சி" கரமாகிய சிவத்தைச் சாரச் செல்கின்றது. அந்நிலையில் "ந" கரமாகிய மனறப்பாற்றல் "வ" கரமாகிய அருளாற்றலுடன் ஒன்றி அஃதாகவே

மாறிவிடுகின்றது. மீதமுள்ள "சிவய" என்ற அதிசூக்கும பஞ்சாட்சரத்தில் இறைவன், இறைவி, ஆன்மா மூன்று மட்டுமே உள்ளன. இவற்றுள் "ம" கரம் இல்லையாயினும் "ய" கரம் தன் இருப்பை உணர்வதால் ஆணவ மலவாசனை உள்ளதாகின்றது. அதனையும் கழுவிக் கொள்ள அது முதலில் அன்னையாகிய "வ" கரத்தை அணுகுகின்றது. "வ" கரம் "ய" கரத்தைச் சிவமாகிய "சி" கரத்துடன் சேர்த்து விட்டுத்தானும் "சி" கரத்துடன் ஒன்றி விடுகின்றது. "ய" கரம் ஆணவ மலத்தின் வாசனையும் கழுவப் பட்டு விடுதலின் தன் இருப்பையும் உணராது "சி" கரத்துடன் ஒன்றுகின்றது. மகா காரண பஞ்சாட்சரமாகிய "சி" கரம் ஒன்று மட்டுமே நிற்கின்றது.

"*தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினல்* - என்பதில் இவ்வாறு பொய்கையை இறைவனுடன் ஒப்பிட்டுப் பொருத்திக் கொள்க.

எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்தமடு - மேற்கூறிய விளக்கத்தில் பிராட்டியை முதலில் கூறியது, திருவருளாகிய அம்மையுடன் சென்று அப்பனை அடைதல் வேண்டும் என்ற நுண் பொருளைப் புலப்படுத்தற்காம். அதை மேலே விளக்கினும்.

இத்திருப்பாடல் பல நுண்ணிய சித்தாந்தக் கருத்துக்களின் திரண்ட பொருள்கள் செறிந்து திருவெம்பாவையின் முடிமணியாக விளங்குகின்றது. இவ்வாறு தங்கள் மலம் கழுவ விரும்பி வந்து சாரும் பக்குவான்மாக்களுக்கு இறைவன் அவரவர் பக்குவங்களுக்கேற்ப பல்வேறு வகை தீட்சைகளால் மலத்தைக் கழுவுகின்றான்.
அவ்வுண்மையை;

"பலவிதமா சான்பாச மோசனந்தான் பண்ணும்
படிநயனத் தருள்பரிசம் வாசகமா னதமு
மலகிற்சாத் திரம்யோக மவுத்தி ராதி
யநேகமுள வவற்றினவுத் திரியிரண்டு திறனு
மிலகுஞானங் கிரியை யெனஞான மனத்தா
லியற்றுவது கிரியையெழிற் குண்டமண் டலாதி

நிலவுவித்துச் செய்தல்கிரி யாவதிதா னின்னு
நிர்ப்பீசஞ் சபீசமென விரண்டாகி நிகழும்"

(சிவஞான சித்தியார் சுபக்கம். சூ. 8-அதி.1-செய்.3)

என நம் ஞான சாத்திரம் நவிலும்.

நயனதீட்சை என்பது ஆசாரியன் திருநோக்கால் பாசத்தை ஒழித்தல். இதைச் சட்சு தீட்சை என்றும் கூறுவர். மீன், நீர் நிலைகளில் முட்டைகளை ஈன்றவாறே நீந்தித் தொலைவில் சென்று விடும். பின்னர்த் திரும்பி அம்முட்டைகளை நோக்கும். அதன் நோக்குப் பட்டவுடன் முட்டைகளினின்றும் குஞ்சுகள் வெளிப்படும் என்பது கவிமரபு. இதை நயன தீட்சைக்கு எடுத்துக்காட்டாகக் கூறுவர். கண்ணப்ப நாயனுர் இத்தீட்சை பெற்றுய்ந்தார் என்பதை;

திருச்சிற்றம்பலம்

" திங்கள்சேர் சடையார் தம்மைச்
சென்றவர் காணு முன்னே
யங்கணர் கருணை கூர்ந்த
வருட்டிரு நோக்க மெய்த
தங்கிய பவத்தின் முன்னைச்
சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய வொளியி னீழற்
பொருவிலன் புருவ மானுர்" *(104)*

"முன்புதிருக் காளத்தி முதல்வனு ருருளேக்கால்
இன்புறுவே தகத்திரும்பு பொன்னுனற் போல்யாக்கை
தன்பரிசும் வினையிரண்டுஞ் சாருமல மூன்றுமற
அன்புபிழம் பாய்த்திரிவா ரவர்கருத்தி னளவினரோ" *(154)*

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - கண்ணப்ப நாயனுர் புராணம்)

எனச் சேக்கிழார் பெருமான் தீட்டும் செந்தமிழோவியத்திற் கண்டின்புறுக.

ஈண்டு, நம் அடிகளார் "**பைங்குவளைக் கார் மலரால்**" என்றருளியது நயன தீட்சையால் மலம் கழுவுவதைக் குறிப்பாலுணர்த்திற்று.

மானத தீட்சை என்பது, ஆசாரியன் பாவனையால் மாணவன் இதயகமலத்துட் புகுந்து அவன் அறிவை வாங்கித் தன் இதயத் தாமரையில் கலந்து பின் அவன்பால் நிலைப்படுத்துதல். தாமரை மலரை இதயமாகக் கூறுவது கவிமரபு. ஈண்டு நம் அடிகள் **செங்கமலப் பைம்போதால்** என்றருளியது மானத தீட்சையால் மலம் மோசித்தலைக் குறிப்பாலுணர்த்திற்று. இதற்கு ஆமை, தன் பாவனை நினைவால் தன் முட்டைகளைக் காத்துக் குஞ்சுகளை வெளிப்படுத்துவதை எடுத்துக்காட்டாகக் கூறுவர்.

பரிசதீட்சைஎன்பது, ஆசாரியன்தன்கையைச்சிவ அஸ்தமாகப் பாவித்து மாணவனின் சென்னியில் வைத்துப் பாசத்தை ஒழித்துக் காத்தல். இதற்குப் பறவை தன் சிறகுகளால் தன் முட்டைகளைக் காப்பதை எடுத்துக்காட்டாகக் கூறுவர். ஆசாரியன் தன் வலது திருவடியின் கட்டை விரலை மாணவன் சென்னியிற் சூட்டி மலம் கழுவுவதை திருவடி தீட்சையென்பர். நம் அரசுகள் பெருமான் அத்தீட்சை பெற்றதை,

திருச்சிற்றம்பலம்

"நினைந்துருகு மடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைக ணீங்க வைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் றளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந் துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய ***திருவடியென் தலைமேல் வைத்தார்***
நல்லூரெம் பெருமானார் *நல்ல வாறே"*

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-14-1)

என்று அவரே அருளியுள்ளதிற் காண்க.

நம் ஆளுடைய நம்பிகளுக்கு இறைவன் கிழவேதியனாக வந்து சித்த வட மடத்தில் நல்கியதும், திருவடி தீட்சையாகிய பரிச தீட்சையேயாம்.

அவ்வரலாற்றை,

திருச்சிற்றம்பலம்

"அதுகண்டு வீரட்டத் தமர்ந்தருளு மங்கணரு
முதுவடிவின் மறையவராய் முன்னொருவ ரறியாமே
பொதுமடத்தி னுட்புகுந்து **பூந்தாரான் றிருமுடிமேற்**
பதுமமலர்த் தாள்வைத்துப் பள்ளிகொள்வார்
போற்பயின்றார்"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம்- தடுத்தாட்கொண்ட புராணம் 85)

என்று பெரியபுராணம் பேசுவது காண்க.

பரிச தீட்சையில் மற்றொரு வகையானது ஹஸ்த மஸ்தக சையோக தீட்சை. அஃது ஆசாரியன் தன் கையை மாணவன் சென்னிமிசை வைத்து மலம் போக்குவது. வடமொழியில் "ஹஸ்தம்" என்பது முன்கை. அஃதாவது விரல்கள் உட்பட விரிந்த உள்ளங்கை. "மஸ்தகம்" என்பது தலையின் முன்பாகம் நெற்றியில் சேருமிடம். யோகம் என்பது சேர்தல். சகயோகம் (சையோகம்) இரண்டும் கூடுதல். கருவூர்த் தேவர், இறைவன் தமக்கு இத்தீட்சையை அருளியதைத் தம் கங்கைகொண்ட சோளேச்சரத் திருவிசைப்பாவில் குறிப்பிடுகின்றார். அப்பாடல்களை, 108-ம் பாடல் உரையில் மேற்கோள்களாக எடுத்தாண்டாம். அங்குக் காண்க.

ஈண்டு, நம் அடிகள் **அங்கம் குருகினத்தால்** என்றருளியது பரிச தீட்சையால் மலம் கழுவுதலைக் குறிப்பால் உணர்த்திற்று. **அங்கம்** - ஆசாரியனின் உடலுறுப்புக்களான திருவடியும் திருக்கரமும். **குரு இனத்தால்** - கோழி முதலிய பறவைகள் தங்கள் அங்கங்களான சிறகுகளால் தங்கள் முட்டைகளை அடைகாப்பது போல என்றவாறு.

ஆசாரியன், தன் மாணவனுக்குத் தன் வாய்மொழியால் திருவைந்தெழுத்தை உபதேசம் செய்து மலம் போக்கி உய்விப்பது வாசக தீட்சை. ஞான சாத்திரங்களைக் கற்பித்து, பதி பசு பாசங்களின் உண்மை இயல்புகளை உளங்கொளச் செய்து மலம் நீக்கி ஈடேற்றுவது சாத்திர தீட்சை. இரண்டும் வாய் மொழிகளாகிய ஒலியால் நிகழ்வன. இவற்றையே ஈண்டு

நம் அடிகள் ***அரவத்தால்*** என்று குறிப்பாலுணர்த்துகின்றூர். ***அரவம்*** - வாய்மொழியாகிய ஒலி.

பொங்கும் மடுவில் - அருவிகளினின்றும் புதிய நீர் வந்து பொய்கையில் கலந்து கொண்டே இருப்பதால் நீரின் இருப்பு மிகுந்து கொண்டே வருகின்றது என்றவாறு. ***பொங்குதல்*** - நீர் மட்டம் மேலோங்குதல். ***மடு*** - பொய்கை. பொய்கை நீரை அவ்வப்பொழுது வடிகால்களில் திறந்து விட்டுத் தூய்மையாகப் பாதுகாப்பர்.

பாய்ந்து பாய்ந்து புக - நடுத்தர வயதினரும் முதியோரும் நீர் நிலைகளில் மூழ்கி உடலைத் தூய்மை செய்தபின் கரையேறி விடுவர். இளவயதினர் நீர் விளையாட்டின் வேட்கையால் பன்முறை நீர்ப்பரப்பில் குதித்தும், மூழ்கியும் நீந்தியும் திளைப்பர். அந்நிலைகளையே ***பாய்ந்து பாய்ந்து*** என்ற அடுக்கு விளக்கிற்று. ***புக*** - நீரினுள் மூழ்க. எச்சம் காரணப் பொருட்டு. "சங்கம் சிலம்பு தலும்", "சிலம்புகள் கலந்தார்த்தலும்" புக்கதன் விளைவுகள்.

நம் சங்கம் சிலம்ப - ***சங்கம்*** - சங்கினின்றும் அறுத்தெடுக்கப்பட்ட கைவளையல்கள். ***சிலம்ப*** - ஒலிக்க. நீராடும் பொழுது கை வளையல்கள் ஒன்றுடனென்று மோதி ஒலி செய்ய "***வளை சிலம்ப***" என்றூர் முன்னரும் (166).

சிலம்பு கலந்து ஆர்ப்ப - நீர்ப்பரப்பில் குதிப்பதாலும் நீந்துவதாலும் கால்களில் அணிந்துள்ள சிலம்புகள் குலுங்கி அவற்றினுள் இடப்பட்டுள்ள பரல்கள் ஓசை செய்ய. ***கலந்து*** - ஏனைய அணிகளின் ஓசைகளுடன் கலந்து.

கொங்கைகள் பொங்க - "உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்" என்ற மகிழ்ச்சியால் உடல்கள் பூரித்தன. அதனுல் கொங்கைகளும் பூரித்தன. ***பொங்க*** - பூரிக்க; விம்ம.

குடையும் புனல் பொங்க - ***குடையும்*** - மூழ்கி நீராடும். ***புனல் பொங்க*** - ஏற்கெனவே "பொங்கும் மடுவாக" இருந்த புனல் மட்டம் ஒரே சமயத்தில் பலர் இறங்கி நீராடுவதாலும், "பாய்ந்து பாய்ந்து புகுதலாலும்" நீந்துதல் முதலியவற்ருலும் மேலும் உயர்ந்தது என்றவாறு.

பங்கயப் பூம்புனல் பாய்ந்து - ***பங்கஜம்*** - பங்கம் - சேறு. ஜம - ஜனித்தல் சேற்றில் பிறந்தது. தமிழில் பங்கயம் என வந்தது. காரணப்

பெயர். தாமரை மலரைக் குறித்தது. **பூம்புனல்** - தாமரை மலர்களால் பொலிவுறும் குளம். 166-ம் திருப்பாட்டில் "பூத்திருக்கும் பொய்கை" என்றதன் கீழுரைத்தவை பார்க்க. நீராடுதற்குரிய வைகறையின் இருள் நீங்கிப் பொழுது புலர்வதை உணர்த்திற்று. *பாய்ந்து* - நீரில் தாவி மூழ்கி. **ஆடு** - ஆடுங்கள். இவ்வாறு பெருமானையும் பிராட்டியையும் வேறு வேறாக எண்ணுவார்க்கும், மாதிருக்கும் பாதியனாக எண்ணுவார்க்கும் ஒத்த இலக்கணங்களைக் கொண்டு இப்பொய்கை திகழ்கின்றது. இறைவன் திருவருளாகிய இதன் நீர்ப்பரப்பின் வியாபகத்துள் நீங்கள் வியாப்பியமாக மூழ்கித் திளைக்கும் நிலையில் தன் முனைப்பற்று இன்புறுவோம் என்று கருதி நீராடுங்கள் என்றவாறு.

இத்திருப்பாட்டில் "*எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்குமடு*" என்றதனால் "*சத்தியை வியந்தது*" புலனாதல் காண்க.

168. காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய் கசு

(இ - ள்)

"எங்கள் பாவை போன்ற பெண்களே! நான் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வீர்களாக; காதில் அணிந்துள்ள குழை முதலிய காதணிகள் அசைய; உடம்பில் அணிந்துள்ள பிற அணிகலன்கள் அசைய, மலர்மாலைகளணிந்திருந்த கூந்தல் அசைய; வண்டுகளின் கூட்டம் எழுந்து சுழல; குளிர்ந்த நீரில் மூழ்கி; சிறிய ஆடரங்கைத் துதித்து இசைத்து; இறைவன் "அ"கரப் பொருளாக விளங்குவதை இசைத்து; ஒளிவடிவாக உள்ள அப்பெருமான் பெருமைகளைப் பாராட்டி இசைத்து; சுற்றி அணிந்துள்ள கொன்றை மாலையைப் புகழ்ந்து பாடி; அவன்

எப்பொருட்கும் முதலான முறையை இசைத்து; ஈறுன இயல்பை இசைத்து; நம்மை வேறுபடுத்து எடுத்துப் பாதுகாத்து ஆட்கொண்டவளும், வளையணிந்த கைகளையுடையவளுமான உமையம்மையின் திருவடி மாண்பை இசைத்து நீராடுங்கள்."

(வி - ரை)

இத்திருப்பாடலின் ஈற்றிலுள்ள பகுதியை "எம்பாவாய் ஓர் ஏல்" என மாற்றிப் பாடலின் முதலில் அமைத்துக் கொள்க. முதலடியில் "பூண்" என்பதைப் "பைம்" என்பதன்முன் வைக்க. ஏழாம் அடியை "நம்மைப் பேதித்து எடுத்து வளர்த்த பெய்வளை" என்று மாற்றிக் கொள்க. பிறகு பாடலுக்குப் பொருள் காண்க.

காது ஆர் குழை ஆட - நீராடுங்கால் பொய்கை நீர்ப்பரப்பில் குதித்தும், பாய்ந்தும், நீந்தியும் மூழ்குவதால் உடலுறுப்புகள் அனைத்தும் அசைகின்றன. அணிந்துள்ள அணிகலன்களும் அசைகின்றன. காதில் அணிந்துள்ள குழை முதலியனவும் அசைகின்ற காட்சியைக் குறித்தவாறு. ***காது*** - செந்நெறிச் செலவில் வீடு பேறெய்தக் காரணமாக உள்ளது ஞானம். அது சோபான முறையில் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடுதல் ஆகிய நிலைகளினிற்றில் எய்தவுள்ளது. அவற்றில் முதல் நிலையாகிய கேட்டலை ஈண்டுக் **காது** என்றது குறிப்பாலுணர்த்தி நின்றது. ***ஆர்*** -ஆர்தல் - நிறைதல். காதில் வனப்பு நிறையும்படி அணிந்துள்ள குழைகள் என்க. ***குழை*** - வட்டவடிவமாகக் காதில் அணியும் அணிகலன்.

பூண் பைங்கலன் ஆட - மார்பிலும் உடலின் பிற உறுப்புக்களிலும் அணிந்துள்ள பொன் அணிகள். அவை பசிய பொன்ஞற் செய்யப்பட்டன வாகலின் **பைங்கலன்** என்றார். பூண் - அணிகள். இவற்றுள் பெரும்பாலான அணிகள் மார்பில் அணியப் பெறுவன. ஆதலின் சிந்தித்தலைக் குறிப்பால் உணர்த்தியவாறு காண்க.

கோதை குழல் ஆட - மலர்மாலைகள் அணிந்திருந்த கூந்தல் ஆட. முன்னம் 166-ல் திருப்பாட்டில் "அணி குழன்மேல் வண்டார்ப்ப" என்றதின் கீழுரைத்தவை காண்க. **கோதை** - மலர்மாலை. ஈண்டு தலையில் சூடிக் கொள்ளும் கண்ணி குறித்தது. ***குழல்*** - கூந்தல் அது தலையிலுண்மையின் ஈண்டுத் தெளிதலைக் குறிப்பால் உணர்த்தியவாறு காண்க.

வண்டின் குழாம் ஆட - நீராடுமுன் கோதைகளைக் களைந்த பின்பும் வண்டுகள் கூந்தலில் அமர்ந்திருந்ததன் காரணம் முன்னம் 166-ம் பாடலுரையில் "அணிகுழல் மேல் வண்டார்ப்ப" என்றதன் கீழுரைத்தாம். அவ்வாறு அமர்ந்திருக்கும் நிலையில் அவை ஓசையின்றி அமைதியாக இருக்கும். இது "நிட்டை கூடுதலை" குறிப்பாலுணர்த்தியவாறு. மகளிர் நீரில் மூழ்கும் நிலையில் அவ்வண்டுகள் மேலெழுந்து சுழன்று ஆரவாரம் செய்யும். அதையே ஈண்டு "வண்டின் குழாம் ஆட" என்றார்.

தீக்கையளவில் நின்று கேட்டல் முதலிய நான்கில் மேவாதவர், மேலாய பதங்களிற் சென்று புண்ணியப் பயன்களாகிய இன்பங்களை நுகர்ந்து பிறகு மீண்டும் நிலவுலகில் பிறந்து குருவால் ஞானம் உபதேசம் செய்யப் பெறுவர். பின்னர் அவ்வுபதேசப் பொருளைச் சிந்தித்துத் தெளிவு பெறுவர். அதன்பின் நிட்டை கூடுவர். அந்நிலையில் அவர்கள் சீவன் மூத்தர்களைப் போலிருப்பர்.

இதனை,

" மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தி நிபாத
மேவுதலு ஞானம்விளைந் தோர்குருவி னருளாற்
புக்கநுட்டித் தேநிட்டை புரிந்து ளோர்கள்
பூதலத்திற் புகழ்சீவன் முத்த ராகித்
தக்கபிரி யாப்பிரிய மின்றி யோட்டிற்
றபநியத்தில் சமபுத்தி பண்ணிச்சங் கரனோ
டொக்கவுறைந் திவரவனை யவனிவரை விடாதே
யுடைந்தையாய்ச் சிவன்றேற்ற மொன்றுமே காண்பர்"

(சிவஞான சித்தியார் - சுபக்கம். சூ. 8-அதி.2-செய்.29)

என நம் ஞான சாத்திரம் நவிலும். இத்திருப்பாடல் உரையில் "சீவன் முத்தராகி" என்புழி ஆக்கச் சொல் உவமப் பொருள் குறித்து நின்றது; "ஆள்வாரிலிமா டாவேனோ" (திருவாசகம் - கோயில் மூத்த திருப்பதிகம்-7) என்றாற் போல - என்று விளக்கினர் நம் மாதவச் சிவஞான முனிவர். சீவன்முத்தர் சிவச் சிந்தனையினின்றும் யாதேனும் ஒரு காரணத்தால் உலக

நினைவுக்குத் திரும்பின், அவர்கள் தங்களை ஒத்த சீவன்முத்தர் கூட்டத்தில் கலந்திருத்தல் வேண்டும். அல்லாக்கால் வாசனுமலம் மீண்டும் முழு வலிமையுற்று அவர்களை உலகியலில் ஈடுபடுத்திப் பிறவியில் செலுத்தி விடும் என்பதை நாம் சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரத்திற் பார்த்தோம். ஈண்டு அணிகுழல் மேல் நெருங்கி அமர்ந்திருந்த வண்டுகள் சீவன்முத்தர்கள் கூட்டத்தையும்; மகளிர் நீர்ப்பரப்பில் மூழ்கியதன் காரணமாக வண்டுகளின் கூட்டம் கலைந்து அவை மேலெழுந்து ஆரவாரம் செய்தல் சீவன்முத்தர் கூட்டம் கலைந்ததால் அவர்கள் ஆரவார உலகியலில் ஈடுபடுவதையும் குறிப்பாலுணர்த்தின.

"**கோதைக் குழலாட**" என்பதும் பாடம். இப்பகுதியில் நான்குமுறை பயின்ற "**ஆட**" என்ற வினையெச்சங்கள், பின்வரும் "ஆடி" "பாடி" என்ற வினையெச்சங்களைத் தொடர்ந்து இறுதியில் வரும். "**ஆடு**" என்ற ஏவல் வினைமுற்றைத் தழுவி முடிந்தன.

சீதப் புனல் ஆடி - சீதப்புனல் - பொய்கையின் குளிர்ந்த நீர். அஃதே நீராடுவோர்க்கு உடல் நலம் தருவது. இறைவன் திருமுழுக்கிலும் பசுவின் நெய் அபிடேகத்தின் பின் மட்டுமே இளம் சூடுள்ள நீராட்டுவர். ஆயினும் உடனே தண்ணீராட்டுவர். ஏனைய அபிடேக திரவியங்களால் முழுக்காட்டிய ஒவ்வொரு முறையும் சீதப்புனலே ஆட்டுவர் என்பது நினைக. **புனலின் கண்** என ஏழனுருபு விரித்துக் கொள்க.

சிற்றம்பலம் பாடி - தில்லையில் உள்ள அவன் ஆடரங்குகள் ஐந்தனுள் ஒன்றான சிறிய ஆடரங்கை இசையால் வழுத்தி. இறைவன் இவ்வரங்கில் நாள்தோறும் இரத்தினசபாபதி மூர்த்தத்தில் திருமுழுக்காட்டும், வழிபாடும் ஏற்பதால் ஏனைய நான்கு அரங்குகளிலும் சிறந்ததாய் அன்பர்களால் பாடப் பெறுவதாயிற்று.

வேதப்பொருள்பாடி - மறைகளில் உள்ள இறைவன் பொருள்சேர் புகழ்களைத் தமிழில் இசைப் பாடல்களாக அமைத்து இறைவனை வழுத்திப் பாடி.

"அப் பொருள் ஆமா பாடி - இறைவன் மறைகளாகவும் மறைகளின் பொருள்களாகவும் உள்ளான். மலபரிபாக முற்ற ஆன்மா சிவோகம் பாவனையால் தன்முனைப்பிழந்து சிவ வியாபகத்துள் அடங்கிச் சிவமாகவே

நின்று இன்பம் நுகர்கின்றது. அதனையே ஈண்டு "*அப்பொருள் ஆமா*" என்றார். "ஆமாறு" என்றது கடை குறைந்து நின்றது. அப்பொருள் "ஆக்கிக் கொள்ளுமாறு" எனப் பிறவினைப் பொருளில் கொள்க. பின்னரும் "சிவமாக்கி எனையாண்ட அத்தன்" (648) என்றருளுவது காண்க.

சோதி திறம்பாடி - சோதி - ஒளி. முன்னம் 30-ம் திருப்பாட்டில் "தனிச்சுடர்" என்றதன் கீழுரைத்தவை பார்க்க. அருவம், அருவுருவம், உருவம் என இறைவன் தாங்கும் திருமேனிகள் 'வேதப் பொருள்' அருவத்தையும், "சோதி" அருவுருவத்தையும் குறித்து நின்றன. சிவமூர்த்தங்கள் அனைத்தும் உருவம். இறைவன் சோதி வடிவில் பேரடியார்களுக்குக் காட்சி நல்கலை;

திருச்சிற்றம்பலம்

"அழுந்திய விடரு ணீங்கி
யடியனே னுய்ய வென்பால்
எழுந்தருள் பெரியோ! யீண்ட
வமுதுசெய் தருள்க" வென்று
தொழும்பனு ருரைத்த போதிற்
சோதியா யெழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாருந்
தொண்டருந் திகைத்து நின்றார்"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - இளையான்குடி மாற நாயனார் புராணம் 24)

எனவரும் பெரியபுராணப் பாடலிற் காண்க.

திறம் - வழிபடும் ஆன்மாக்களின் பக்குவங்களுக்கேற்ற வகையில் திருமேனி தாங்கும் பெருமை.

சூழ் கொன்றைத் தார் பாடி - சூழ் - திருமுடியிலும், மார்பிலும் சூழ அணிந்துள்ள.

கொன்றை - பொன்னிறங் கொண்டு புறத்தே ஐந்து இதழ்களும், நடுவண் ஓங்கார வடிவமான அகவிதழும் கொண்டு பிரணவத்தையுட்

பொதிந்த திருவைந்தெழுத்தைப் புலப்படுத்தலின் இம்மலர், பொன்னுர் மேனியனும், திருவைந்தெழுத்தின் வடிவினனுமாகிய சிவபெருமானுக்கு உரியதாயிற்று. *தார்* - மலர்மாலை வகைகளுள் ஒன்று; மார்பில் அணியப் படுவது.

"உருள்பூந் தண்டார் புரளு மார்பினன்"

(திருமுருகாற்றுப் படை - அடி 11)

என்பது காண்க.

பாடி - இசையினுல் வழுத்தி. மாலை, திருவருள் வடிவமான உபாங்கமாதலின் வழுத்துதற்குரியதாயிற்று. இதுபற்றி முன்னம் கீர்த்தித் திருவகவல் 1-ல் "திருவடி" என்றதன் கீழ் எடுத்தாண்ட சிவஞான சித்தியார் சுபக்கப் பாடலைச் சிவாக்கிர யோகிகள் உரையுடன் விளக்கினும். ஆண்டுக் காண்க.

ஆதி திறம்பாடி - சிவபெருமான் புனருற்பவத்தில் அனைத்தையும் தோற்றுவித்தலால் *ஆதி* என்ருர். முன்னம் போற்றித் திருவகவல் 122-ல் "முதல்வன்" என்றதன் கீழ் விளக்கியவை காண்க. *ஆமா* என்பதை ஈண்டும் கூட்டி *ஆதி ஆமா திறம்பாடி* என்க.

அந்தம் ஆமா பாடி - *அந்தம்* - யாவையும் ஒடுங்குதற்கு நிலைக்களம். சிவபெருமான் ஒருவனிடமே அவ்வியல்பு காணப்படுமாறு என்க. *ஆமா*- ஆமாறு என்றதன் ஈறு கெட்டது. *பாடி* - இசையால் வழுத்தி. முன்னம் சிவபுராணம் 13-ல் "ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே" என்றதன் கீழுரைத்தவை பார்க்க. ஆதியும் அந்தமும் கூறியதால் இடைப்பட்ட காத்தல் தொழிலும் பெறப்பட்டது. சிவஞானபோத முதற்சூத்திரம் "அந்தம் ஆதி" என்றதும் அதன் கருத்துரையும் மாபாடிய விளக்கமும் காண்க.

நம்மைப் பேதித்து எடுத்து வளர்த்த பெய்வளை தன் - *நம்மை* - ஆன்மாக்களாகிய நம்மை. *பேதித்து* - அநாதி கேவல நிலையில் கிடந்த நம்மை அந்நிலையினின்று வேறுபடுத்து. *எடுத்து* - காரண உடல் முதல் பருவுடல் வரையுள்ள ஐந்து உடல்களையும் அந்தக்கரணங்களையும் தந்து சகல நிலைக்கு எடுத்து. சிவஞான சித்தியார் முன்னூற் சிறப்புப் பாடலில் இச்சொல்லுக்கு,

"பவமாயக் கடலில் அழுந்துகின்ற என்னை அதன்கண்
அழுந்தா வண்ணம் கருணைக் கையால் எடுத்து"

என்று நம் மாதவச் சிவஞான முனிவர் உரை கூறுவதும் ஈண்டுக் கொள்க. வளர்த்த - வினைப்பயன்களை நுகரச் செய்து, மலப்பிணிப்பைப் படிப்படியாகத் தளர்வித்து ஞானம் வளரச் செய்து, ஆன்ம முன்னேற்றம் கொடுத்து, நாம் மீண்டும் உலகியலிற் சிக்கிப் பிறப்பிறப்பிற் செல்லாது பாதுகாத்த. பெய்வளை - வளையலை அணிந்த பெண். வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாக ஈண்டு உமையம்மையை உணர்த்திற்று. இந்நிலையை,

"காரிட்ட வாணவக் கருவறையி லறிவற்ற
கண்ணிலாக் குழவியைப் போற்
கட்டுண் டிருந்தவெமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட் டதற்கி சைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ப் பொய்யுடல்
பெலக்கவிளை யமுதூட்டிப்
பெரியபுவ னத்திடைப் போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்டமைத்திட்
டேரிட்ட தன்சுருதிமொழி தப்பில் நமனைவிட்
டிடருற வுறுக்கியிடர்தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினி
லிசைந்துதுயில் கொண்மி னென்று
சீரிட்ட வுலகன்னை வடிவான வெந்தையே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிண மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே"

(தாயுமானசுவாமிகள் பாடல் 4. சின்மயானந்த குரு-6)

என்று நம் தாயுமானப் பெருமான் உயிரோவியம் தீட்டுதல் காண்க.

பாதத்திறம்பாடி - *பாதம்* - திருவடிகளாகிய அம்மையின் திருவருள். *திறம்* - ஆன்மாக்களை உய்விக்கும் பெருமை. *பாடி* - இசையினால் வழுத்தி.

இத்திருப்பாடலில் "*பெய்வளை தன் பாதத் திறம் பாடி*" - என்றதனால் "*சத்தியை வியந்தது*" புலனாதல் கண்டின்புறுக.

169. ஒரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தாள்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் கரு

(இ - ள்)

"எங்கள் பாவை போன்றவர்களும், கச்சும் அழகிய அணிகலன்களும் அணிந்த கொங்கைகளையுடையவர்களுமான பெண்களே; நான் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வீர்களாக; (சிவானுப நிலையிலுள்ள இப்பெண்) ஒவ்வோரமயத்தில் "எம்பெருமானே" என்று பன்முறை பகர்ந்து நம் தலைவனாகிய சிவபெருமானின் புகழ்மொழிகளை இடைவிடாமல் பேசுவாள்; உள்ளத்தில் மகிழ்ச்சி மிக; விழிகள் நீரை ஒரு காலும் நீங்காத நீண்ட தாரையாக வழியவிட; நிலத்தின்மீது ஒரே முறைமையைக் கைக்கொண்டு செய்யும் வணக்கத்தை மேற்கொள்வாள்; ஏனைய தேவர்களை வணங்காள்; கடவுண்மாமன்னராகிய சிவபெருமான்பால் ஒருவர் மாலுடையராதலும் இவ்வாறு போலும்; இம்முறையில் இவளை அடிமை கொள்ளும் திறமையுள்ள ஒருவர் யாரோ, அச்சிவபெருமானின் திருவடிகளை; நாம் வாய்நிறையப் பாடிக் கொண்டு; அழகிய தோற்றமுள்ள தாமரை மலர் நிறைந்த புனலில் மூழ்கி நீராடுவோம்.

இத்திருப்பாடலை, "எம் பாவாய்! வார் உருவப் பூண் முலையீர்; ஓர்; ஏல்; ஒரு கால் எம்பெருமான் என்று என்றே; நம்பெருமான் சீர் ஒருகால் வாய் ஓவாள்; சித்தம் களி கூற, கண் நீர் ஒருகால் வந்தனையாள்; விண்ணோரைத் தாள் பணியாள்; பேர் அரையற்கு ஒருவர் பித்து ஆமாறும் இங்ஙனே; இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் ஒருவர் ஆர்; தாள்

வாயார நாம் பாடி; ஏர் உருவப் பூம்புனல் பாய்ந்து ஆடு-என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

(வி - ரை)

9-ம் திருப்பாடல் முதல் நீராடச் செல்லும் குழுவில் வரும் ஏனைய பெண்களை "எம்பாவாய்" என்று முதலில் விளித்துப் பேசும் பெண், ஈண்டு "உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்த நாம் மேலும் இச்செந்நெறிச் செலவில் எய்யாமல் முன்னேறிச் சிவாநுப நிலையெய்துவோமாகில் நம் மெய்ப்பாடுகள் எவ்வாறு இருக்கும்" என்று கற்பனை செய்து பார்க்கின்ருள். அவள் நெஞ்சில் அவை ஓர் திரைப்படத்தின் காட்சிகள்போல் புலனுகின்றன. அவற்றை அவள், தங்கள் குழுவிற் சேராத வேறொருத்தியின் மெய்ப்பாடுகளாகச் செந்தமிழ்ச் சொற்களாகிய தூரிகை கொண்டு ஒருயிரோவியமாகத் தீட்டிக் குழுவினருக்கு வழங்குகின்ருள். அவ்வோவியம் இத்திருப்பாடல் வழி நாமும் கண்டு களிக்க நிற்கின்றது.

வார் உருவப் பூண் முலையீர் - வார் - மகளிர் அணியும் மார்புக் கட்சு. **உருவம்** - அழகு. **பூண்** - அணிகலன்கள். இவையனைத்தும் கொங்கைகளுக்கு அடை. உருவ என்பதற்கு நழுவ என்று பொருள் கொண்டு, *வார் உருவ* - கச்சினை நழுவச் செய்யும் என்றுரைத்தார், திரு. தேசிகர் அவர்கள். *வார்* - கச்சினுல் காக்கப்படுவதையும், **உருவ** - வீறுண்மையையும் குறிப்பதால் இயற்கை அழகையும், **பூண்** - செயற்கை அழகையும் குறிப்பதால் இளம் கன்னியர் என்ருர் திரு. பாரதியாரவர்கள். இது மகளிரின் திருமணப் பருவம் குறித்தலின் சிவநெறிச் செலவில் முன்னேறும் ஆன்மா சிவாநுப நிலையை எய்தியுள்ள பக்குவ காலத்தைக் குறிப்பாலுணர்த்துவது காண்க. *முலையீர்* - விளி.

ஓர் ஒருகால் எம்பெருமான் என்று என்றே - இச் சிவாநுபூதி கைவரப் பெற்ற இவள் தன் பேச்சிடையே ஒவ்வொரு சமயம் "எம்பெருமான்" என்பாள். ***எம்பெருமான்*** - எமக்கே உரிய இறைவன். இஃதவள் கூற்று. ***என்று என்றே*** - அடுக்கு பன்மைப் பொருட்டு.

கால் - என்பதைக் "காரைக்கால்" என்பதன் தலைக்குறை விகாரமாகக் கொண்டு. இப்பெண் "காரைக்காலம்மையார்" என மயங்கி,

இத்திருப்பாடலின் ஆங்கில மொழிபெயர்ப்பின் கீழ் அடிக்குறிப்பாக அம்மையார் சரிதத்தை அழகு நடனமிடும் ஆங்கிலத்தில் தந்துள்ளார் Dr.G.U.Pope. M.A. அவர்கள். அச்சரிதச் சுருக்கத்திலும் திருவாலங்காடு பற்றிய குறிப்புக்களில் இரு பிழைகள் காணப்படுகின்றன. திருவாசகமணி திரு. K.M. பாலசுப்பிரமணியம் B.A. B.L. தம் திருவாசக ஆங்கில மொழிபெயர்ப்பில் உரிய இடத்தில் டாக்டர் அவர்களின் குறிப்புரையை முழுவதும் மறுத்துள்ளார். அம்மறுப்பே அமையும். நாம் மேற்செல்வோம்.

நம்பெருமான் சீர் ஒரு கால் வாய் ஓவாள் - *நம் பெருமான்* - குழுவில் முதலிற் பேசியவளாதலின் ஏனைய தோழியரையும் உட்படுத்தி நம் என்ருள். *பெருமான்* - பெருமைக்குரிய நம் இறைவன். *சீர்* - சிவபெருமானின் பொருள் சேர் புகழ்கள். *ஒருகால்* - ஒரு காலத்தினும் என உம்மை விரித்துக் கொள்க. *வாய் ஓவாள்* - இறைவன் புகழ்களைக் கூறும் வாய்க்கு ஓய்வு தராமல் இடைவிடாமல் கூறிக் கொண்டே இருப்பாள். *ஒரொருகால் எம்பெருமானே* என்று முன்னம் கூறியது இடையிற் கூறியதாயிற்று எனின் இறைவன் எல்லா உயிர்களுக்கும் பெருமாஞய் நின்ற நிலையில் மாருமல் இவளுக்கு "எம்பெருமாஞய்" உள்ளதும் அவன் சீர்களுள் ஒன்றே என்க.

சித்தம் களி கூர - *சித்தம்* - ஈண்டு "உள்ளம்" என்ற பொருளில் நின்றது.

கண் நீர் ஒரு கால் ஓவா நெடுந்தாரை பனிப்ப - *கண்* - விழிகள். வினைமுதல். *நீர்* - கண்ணீர். *ஒருகால்* - *கால்* என்றது காலத்தின் மேற்று. *ஒருகாலும்* என உம்மை விரித்துக் கொள்க. *ஓவா* - நீங்காத; இடையீடின்றி என்றவாறு. *நெடுமை* - கண்ணீரின் மிகுதியையுணர்த்திற்று. அது பல காலும் சிறிது சிறிதாகத் திரண்டிருந்த களிப்பு ஒரே சமயம் நுகர எய்தியதால் வந்தது. "உடம்பெல்லாம் கண்ணு யண்ணு வெள்ளம்" (25) என்ருர் முன்னரும். *பனிப்ப* - அரும்ப. முதலில் சிறு சிறு துளிகளாகத் தோன்றிய கண்ணீர் தொடர்ந்து நிகழும் இன்பானுபவத்தால் இடைவிடாத நீண்ட தாரைகளாகப் பெருக்கெடுத்தன. இது சிவனடியார்களின் அகத்திலக்கணம் பத்தில் ஒன்ருவது நினைக. முன்னம் போற்றித் திருவகவல் 61-ல் "உடல் கம்பித்து" என்றதன் கீழுரைத்தவை காண்க.

பார் ஒருகால் வந்தனையாள் - *பார்* - தரை. *ஒருகால் வந்தனை* - ஒரே விதமாக்கிக் கைக்கொள்ளப்படும் வணக்கம். அது பெண்களுக்கு

விதிக்கப்பட்டுள்ள ஐந்துறுப்பு வணக்கம். இதைப் பஞ்சாங்க வணக்கம் என்றும் கூறுவர். அஃது இரண்டு முழந்தாள்கள், இரு உள்ளங்கைகள். நெற்றி ஆகிய ஐந்து உடலுறுப்புக்கள் மட்டும் தரையைத் தீண்டும்படி வணங்குதல். ஆடவர் ஐந்துறுப்பு வணக்கம், எட்டுறுப்பு வணக்கம், உருள் தண்டம் முதலிய மூன்றும் கைக்கொள்ளலாம். எட்டுறுப்பு வணக்கம் அட்டாங்க வணக்கம் என்றும்; உருள் தண்டம், அங்கப் பிரதட்சிணம் என்றும் வழங்கப்படுகின்றது. மகளிர் நிலத்தில் படிந்து வணங்குங்கால் அவர்கள் மார்பகங்கள் தரையைத் தீண்டலாகா என்பது விதி. இன்று சைவத்திருக்கோயில்களில் பெண்கள் திருக்கோயிலைச் சுற்றிப் புரண்டு வணங்கும் நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. அவை மரபுக்கு மாறுன செயல். புறச்சமயங்களினின்றும் இங்குப் புகுந்த இஃது உடனே கைவிடப்பட வேண்டிய ஒன்று.

இப்பகுதிக்கு இவ்வாறன்றி; **ஒருகால்** - ஒரே நியமம். அஃதாவது "சிவ வணக்கம் ஒன்று மட்டுமே" என்றும் "ஒருமுறை நிலத்தில் வீழ்ந்தவள் எழாது கிடக்கின்ருள்" என்றும்; "ஒருமுறை பூமிக்கு வந்த தெய்வப் பெண் போன்றவள்" என்றும் பலவாறுரைத்தனர் முன்னுரையாளர்கள். **வந்தெனை ஆள்** - என்று பாடங்கொண்டு "விண்ணுலகினின்றும் பூமிக்கு இறங்கி வந்து என்னை ஆட்கொள்கின்றவனை ஒத்தவள்" என்ருரும் உண்டு. இவையனைத்தையும் சிறப்பின்மை கருதி ஒதுக்குக.

விண்ணோரைத் தாள் பணியாள் - விண்ணோர் - மண்ணுலகுக்கு மேலும் திருக்கயிலைக்குக் கீழும் உள்ள மேல் உலகங்களின் தலைவர்களாகிய இந்திரன் முதல் திருமால் வரையுமுள்ளவர்கள். அவர்கள் பசு புண்ணியங்களின் பயன்களை நுகர்ந்து கழித்தற்காக அவ்வப் பதங்களில் உள்ள சகலர்களாகிய ஆன்மாக்களேயன்றி, வினையினீங்கி விளங்கிய அறிவினனாகிய முழுமுதற் கடவுள் என்று கொள்ளத்தக்கவரல்லர். முன்னரும "உள்ளேன் பிற தெய்வம் முன்னை யல்லா தெங்க ளுத்தமனே" (6) என்றும்; "போகம் வேண்டி வேண்டிலேன் புரந்தராதி யின்பமும்" (76) என்றும் அருளிச் செய்தமை காண்க.

"சிவபக்தியைத் தவிர எனக்குப் புகலளிப்பது வேறேதுமில்லை; நீயே எனக்குப் புகலளிப்பவன்" எனவரும் சிவ மகாபுராண வசனம் காண்க. முன்னம் 6-ம் திருப்பாட்டுரையில் "பிற தெய்வம்" என்றதன்

கிழுரைத்தவையும் நினைக. பணியாள் - ஏக நாயக வழிபாட்டை உணர்த்தியது காண்க. மேலும்,

திருச்சிற்றம்பலம்

"என்றுநாம் யாவர்க்கு மிடைவோ மல்லோம்
இருநிலத்தி லெமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் றிருவடியே சேரப் பெற்ளும்
ஒன்றினுற் குறையுடையோ மல்லோ மன்றே
உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனர்
பொன்றினர் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-98-5)

என்று நம் அரசுகள் ஆற்றுப் படுத்துதலும் மனங் கொள்க.

ஈண்டு, வாயோவாள் என்றதனுல் மொழியும்; சித்தம் களி கூர என்றதனுல் மனமும்; வந்தனையாள் என்றதனுல் மெய்யும் ஆகிய முக்கரணங்களும் சிவபெருமான்மாட்டு ஈடுபட்டமை கூறுவது காண்க. மன ஈடுபாடில்வழி நிகழும் சொற்களும் செயல்களும் பயனிலவாதல் கருதிச் "சித்தம் களி கூர்" என்பது முன்னும் பின்னும் ஏதுவாக இயையுமாறு இடையில் வைக்கப்பட்டுள்ள நயம் நுணித்தும் நுனித்துமுணர்க. பேர் அரையற்கு ஒருவர் பித்து ஆமாறும் இங்ஙனே - பேர் அரையன் - அண்டங்கள் அனைத்தையும் தன் உடைமைகளாகவும் அவற்றிலுள்ள உயிர்களைத் தன்னுட்சிக் குட்பட்டவைகளாகவும் கொண்டுள்ளமையின் சிவபெருமானைப் பேர் அரையன் என்ருர். பேரரையன் - மாமன்னன். அரையன் - அரசன் என்றதன் மொழியிடைப் போலி.

ஒருவன் - மிகப் பெரிய கடவுட் பேரரசனுக்கு மானிடச் சிறுமி ஒருத்தி மையல் கொள்ளுதல் வியப்புக்குரியது என்பார்; அச்சிறுமியை ஒருத்தி

என்னும் பொருளில் இலேசாகக் கூறினர். *பித்து* - அதனையுடைய பெண்ணின் மேல் நின்றது. **ஆமாறும்** என்பதிலுள்ள சிறப்பும்மையை ஈண்டும் புணர்த்துப் **பித்தும்** என்க. **இங்ஙனே** - இத்தன்மைகொல் என வியந்தவாறு. ஈண்டு, முன்னம் 25-ம் திருப்பாடலில் "வேட்ட" என்றதன் உரையில் எடுத்தாண்ட திருமுறை 6-25. 7-ம் திருப்பாடல் நினைக.

இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் ஒருவர் - ஆர் - இவ்வண்ணம் - மொழி மனம் மெய் ஆகிய மூன்று கரணங்களும் சிவன்பால் ஈடுபடும்படி. *ஆட்கொள்ளும்* - இப்பெண்ணைத் தன் அடிமையாக ஏற்றுக்கொண்டுள்ள. *வித்தகர்* - உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் இப்பெண்ணும் எய்யாமல் உய்யுமாறு படிமுறையில் மலபரிபாகம் வருவித்து இவளைத் தன் அடிமையாகக் கொண்ட சதுரப்பாடுடையவன். *வித்தகம்* - சதுரப்பாடு. *ஒருவர்* - ஒப்பற்றவர். முன்னம் திருவண்டப் பகுதி 43-ல் "ஒருவன்" என்றதும் ஆண்டுரைத்தவையும் அப்பக்க அடிக்குறிப்பும் காண்க. *ஆர்* - வேறு யாருளர்? ஒருவருமிலர் என்றவாறு. *ஆர்* - யார் என்பதன் மரூஉ.

தாள் வாயார நாம் பாடி - தாள் என்பதன் முன் **அவர்** என்ற ஒரு சொல் வருவிக்க. "ஆட்கொள்ளும் வித்தகர் ஒருவர் யார் அவர் தாள்" என்றவாறு. *தாள்* - வீடுபேறு. ஈண்டு அதை உயிர்கட்கு நல்கும் திருவருளைக் குறித்து நின்றது. *வாயார* - வாய் நிறைய. மனம் மகிழும் வண்ணம் மந்திரங்களைக் கூறி "இறைவனைத் துதிக்குங்கால் அவற்றை முழுமையாகக் கூற வேண்டும்" என்பது விதி. அதிற் குறைவுண்டாயின் அதை "மந்திரலோபம்" என்பர். அவ்வாறே துதி இசைக்கும்பொழுதும் குறைவின்றி இசைக்க என்றவாறு. *நாம்* - குழுவினராகிய நாம் அனைவரும். *பாடி* - பாடிக் கொண்டே.

ஏர் உருவப் பூம் புனல் பாய்ந்து - அழகே வடிவமான இத்தாமரைப் பொய்கையில் தாவி மூழ்கி எனலுமாம். *ஏர்* - அழகு. அது தாமரை முதலிய புதிய நீர்ப்பூக்கள் மலர்ந்துள்ளதாலும், பொய்கைக்குப் புதிதாக அருவி நீர் வந்து கொண்டிருப்பதாலும் மடை வழியே கழிவு நீர் நீங்கிப் பாசம் முதலிய மாசுகள் இன்றி விளங்குவதாலும் உண்டாவது. *உருவம்* - தோற்றம், வடிவம் என இரு பொருள்களும் கொள்ள நின்றது. *பாய்ந்து* - தாவி மூழ்கி. இது மகிழ்ச்சியால் நிகழ்வது. சிவநேசச் சேயிழையார்

பலருடன் கூடி இறை புகழைப் பாடும் பேறு கிட்டியதே என்றது மகிழ்ச்சிக்குக் காரணம்.

ஆடு - முன்னிலை ஏவலை ஈண்டு "ஆடுவோம்" என உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகப் பொருள் கொள்க. ஒருமை பன்மை மயக்கம். இட வழுவமைதி.

இத்திருப்பாடலில் *"வித்தகர்தாள்"* என இறைவன் திருவடிகளாகிய திருவருள் வழுத்தப்படுகின்றது. சத்தி, திருவருளின் உருவகமாதலின் *"சத்தியை வியந்தது"* புலனுதல் காண்க.

170. முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய் கசு

(இ - ள்)

"எங்கள் பாவை போன்ற பெண்களே! நான் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வீர்களாக. முகிலே! நீ கடலை எய்தி அது குறையும்படி நிறைய முகந்து கொண்டு விண்ணில் எழுந்து, எம்மை அடிமை கொண்டுள்ள உமையம்மை போல நீலநிறம் கொண்டு விளங்கி; எங்களை ஆட்கொண்டருளிய அவ்வம்மையின் சிற்றிடையை ஒத்து மின்னல் காட்டித் திகழ்ந்து; எங்கள் தலைவியின் திருவடி மேலுள்ள அழகிய சிலம்பைப் போல ஒலித்து; அவ்வன்னையின் அழகிய புருவம் என்று கூறும் வகையில் வில் விளங்கச் செய்து; நம்மை அடிமையாகவுடைய பெருமாட்டியை விட்டுப் பிரிதலில்லாத எம்பெருமானின் அன்பர்க்கும்; எளியோமாகிய எங்களுக்கும்; அவ்வன்னை முற்படத் திருவுள்ளம் பற்றிச் சுரந்தருளும் இனிமை மிக்க அருட் பெருக்கை ஒத்துப் பொழிவாயாக"

(வி - ரை)

இத்திருப்பாடலே, "எம் பாவாய்! ஓர் ஏல்; மழை; கடலே முன்னிச் சுருக்கி எழுந்து; உடையாள் என்னத் திகழ்ந்து; எம்மை ஆளுடையாள் இட்டு இடையின் மின்னிப் பொலிந்து; எம் பிராட்டி திருவடி மேல் பொன் அம் சிலம்பின் சிலம்பித்; திருப்புருவம் என்னச் சிலே குலவி; நம் தம்மை ஆளுடையாள் தன்னில் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கும்; நமக்கும்; அவள் முன் முன்னிச் சுரக்கும் இன் அருளே என்னப் பொழியாய்" என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

மழை - அண்மை விளி. ஈண்டுக் கார்மேகம் குறித்து நின்றது. காரியப் பெயர் அதன் காரணமாகிய மேகத்துக்காயிற்று. சிவவழிபாடு பரார்த்த பூசை, ஆன்மார்த்த பூசை என இருவகைத்து. திருக்கோயில்களில் செய்யப்படுவது பரார்த்த வழிபாடு. அது நாடு முழுதுமுள்ள உயிர்கள் பசியும் நோயுமின்றிச் செங்கோலரசின்கீழ் செழித்து வாழ வேண்டும் என்ற விண்ணப்பத்துடன் புரியப்படுவதும் அச்செழிப்புக்குப் போதிய பருவமழை இன்றியமையாததாகலின் மழைவளம் வேண்டப்படுவது. இதனே,

திருச்சிற்றம்பலம்

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை *3-54-1*)

என்று திருப்பாசுரப் பதிகத்தில் முதற் பாசுரமே மொழிதல் காண்க. திருக்குறளில் "வான் சிறப்பு" என்ற அதிகாரம் முழுவதும் காண்க. மாகேசுர பூசைகளிற் கூறும் ஆசிர்வாதத்திலும் பருவமழை போதிய அளவு பொழிய வாழ்த்துதல் காண்க. ஆன்மார்த்த பூசை, ஒவ்வொருவரும் இல்லங்களில் நாள்தோறும் புரியும் வழிபாடு. இதன் நோக்கம் பூசை புரிபவர் மலபரிபாக மெய்தித் திருவருள் பெற்று வீடுபேறெய்த வேண்டுமென்பதாம். ஈண்டு, இத்திருப்பாடலில் திருவருள் மழைக்கு உவமையாகின்றது. பாவை உற்சவத்தில் நீராடும் பகுதி, இப்பாட்டுடன்

முடிந்து இனிப் பிரார்த்தனைக்குத் தோற்றுவாய் செய்யும் இவ்விடத்தில் மழையை உலக நலன் பொருட்டும், அம்மழைக்கு உவமை காட்டுமுகத்தான் திருவருளை ஆன்ம உய்திப்பொருட்டும் வேட்டு நிற்கும் நிலை காட்டும் நம் அடிகளின் தெய்வக் கவிநயம் கண்டின்புறுக.

கடலை முன்னிச் சுருக்கி எழுந்து - வெண்ணிற மேகம் கடலையடைந்து நீரைப் பருகிச் சூல்கொண்டு கருமேகமாக விண்ணில் எழுந்து நானிலங்களிலும் பரவிச் சென்று மழை பொழியும் என்பது கவிமரபு. *முன்னி* - அடைந்து. "முன்" என்னும் வினைப் பகுதியின் அடியாகப் பிறந்த வினையெச்சம் நெருங்கி "விரும்பி" எனலுமாம். *முன் இக்கடலை* என்று பிரித்து முன்னதாக இந்தக் கடலை எனலுமொக்கும். *சுருக்கி*- நீரை முகத்தலால் கடல் நீரின் அளவு சுருங்கும்படிச் செய்து. *எழுந்து* - சூல்கொண்ட கார்மேகமாகக் கடற்பரப்பினின்றும் எழுந்து விண்ணில் பரவி.

உடையாள் என்னத் திகழ்ந்து - *உடையாள்* - உயிர்களாகிய எங்களை அடிமைகளாக உடையவள். வீடுபேறாகிய செல்வத்தையுடையவள் எனலுமாம். இச்சொல் அடைமொழியின்றி வழங்கின் உமையம்மையையே குறிக்கும். "உடையாளுன்றன் நடுவிருக்கும்" (376) என்று நம் அடிகளே பின்னர் அருளிச் செய்தல் காண்க. *என்னத் திகழ்ந்து* - உமையம்மை போல நீல நிறங் கொண்டு விளங்கி. வெண்ணிற மேகம் திருவருளாகிய கடலிற் படிந்து நீருண்டது. அதனால் நீல நிறங்கொண்டு திருவருளாகிய உமையம்மை போல விளங்கிற்று என்றவாறு.

எம்மை ஆளுடையாள் இட்டு இடையின் மின்னிப் பொலிந்து - *எம்மை*- உயிர்களாகிய எங்களை. *ஆளுடையாள்*- அடிமைகளாகக் கொண்டுள்ளவள், உமையம்மை. *இட்டு*- சிறிய. இச்சொல் இப்பொருளில் வருவதை;

> *"ஆகா றள விட்டி தாயினுங் கேடில்லை*
> *போகா றகலாக் கடை"* (திருக்குறள் 478)

எனும் பொதுமறைக்கு, "ஆகு ஆறு அளவு **இட்டி** தாயினும் கேடு இல்லை. அரசர்க்குப் பொருள் வருவாய் நெறி *சிறிதாயிற்றாயினும்* அதனாற் கேடில்லையாம்; போகு ஆறு அகலாக் கடை - போகின்ற நெறியளவு அதனிற் பெருகாதாயின்" என்று பரிமேலழகர் விளக்குவதிற் காண்க.

இட்டு - நுணுக்கத்தை உணர்த்தும் உரிச்சொல் என்பது கவியரசு அவர்களின் உரைக்குறிப்பு. *இடையின்* - உமையம்மையின் இடுப்பைப் போல. சிற்றிடை இளமைப் பருவம் குறிப்பது. உமையம்மை காலதத்துவத்தைக் கடந்து நிற்பவளாகலின் அவள் என்றும் மாருத இளம் பருவத்தினள் என்பது குறித்து நின்றது. "தருணி" என்பது அவள் திருநாமங்களுள் ஒன்று. *மின்னி*- மின்னல் இளம் பெண்களின் சிற்றிடைக்கு உவமை கூறல் கவிமரபு. ஆனுல் ஈண்டு, மின்னலுக்கு உமையம்மையின் சிற்றிடை உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் வருவதைப் "பொருளே உவமம் செய்தல்" என்பர் தொல்காப்பியர்.

"பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்
மகளறு சிறப்பினஃ துவம மாகும்"

(தொல்காப்பியம் - பொருளதிகாரம் உவமையியல் சூத். 280)

என்பது சூத்திரம். இதனை விபரீத உவமை என்று தண்டியலங்காரம் கூறும். எதிர்நிலை உவமை என்றும் வழங்குவர். அம்பிகையின் நீலவண்ணங் கொண்ட மேகம் அவள் இடையையொத்த மின்னல்களை வெளிப்படுத்தியது. *பொலிந்து* - அம்பிகையின் சிற்றிடையை ஒப்பதால் மின்னல் பொலிவெய்தியது. *எம்பிராட்டி திரு அடிமேல் பொன் அம் சிலம்பில்* - *சிலம்பி* - அம்பிகையின் பாதங்களிலுள்ள சிலம்புகள் ஒலிக்கும் ஒலியையொத்து இடியோசை செய்து. *திரு அடி* - வீடுபேருகிய செல்வம் நல்கும் பாதங்கள். ஈண்டுத் திருவடி தீட்சையைக் குறிப்பாலுணர்த்திற்று. *பொன்னம் சிலம்பு* - *பொன்* - அழகு. *அம்* - சாரியை. புளியங்காய் என்பது போலக் கொள்க. பொன்னுலாகிய அழகிய சிலம்பு எனலுமாம். *சிலம்பு* - பாதத்தில் அணியும் அணிகளுள் ஒன்று. *சிலம்பி* - ஓசை எழுப்பி. *சிலம்புதல்* - ஓசையெழுப்புதல். அது சிலம்புகளுட் பெய்யப்பட்டுள்ள பரல்கள் குலுங்குவதால் எழுவது. ஈண்டு இடியோசைக்கு உவமை. ஈண்டு உபதேச தீட்சையையும் சாத்திர தீட்சையையும் குறிப்பாலுணர்த்தியவாறு காண்க.

இடி, மழை வருதற் கறிகுறிபோல சிலம்பொலி உமையம்மை எழுந்தருளி வந்து அருள் பாலித்தற்கு அறிகுறி என்பர் கவியரசு அவர்கள்.

திருப்புருவம் என்னச் சிலை குலவி - *திருப்புருவம்* - அம்பிகையின் இரண்டு புருவங்கள். அழகிய புருவங்களுக்கு வில்லை உவமை கூறுவர்.

சிலை - வில். ஈண்டு மேகத்தில் விளங்கும் வானவில்லைக் குறித்தது. கதிரவன் ஒளி முகில்களின் வழியே ஊடுருவிச் சென்று வானத்தில் எதிர்த் திசையில் செங்கதிரோனின் வடிவின் மேற்பகுதி வில் போன்று காட்சி தரும். அவ்வில்லொளி மேலும் முகிலுள் நுழைந்த சென்று மற்றொரு வானவில்லைத் தோற்றுவிக்கும். இவ்விரு வானவிற்களுக்கும் ஈண்டு உமையம்மையின் இருபுருவங்கள் உவமை. புருவம் கண்ணாகிய உறுப்பின் ஒரு பகுதி. ஆதலின் ஈண்டு சட்சு தீட்சை குறிப்பாலுணர்த்தப்படுகின்றது. அது வீடுபேறாகிய செல்வத்தில் செலுத்துவதால் திரு என்ற அடை புணர்த்தார்.

நம் தம்மை ஆளுடையாள் தன்னில் பிரிவு இலா எம்கோமான் அன்பர்க்கும் - *நம் தம்மை* - நம்மை. சிவனடியார்கள் அனைவரையும் உளப்படுத்திக் கூறியவாறு. *ஆள் உடையாள்* - அடிமைகளாகக் கொண்டுள்ள உமையம்மை. *தன்னில்* - தன்னை விட்டு. *இன்* - நீக்கப் பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமையுருபு. *பிரிவு இலா எம் கோமான்* - நெருப்பும் சூடும் போல உமையம்மையாகிய குணத்தை விட்டுப் பிரிந்திராத எங்கள் சிவபெருமான். இதனை;

"சத்தியுஞ் சிவமு மாய தன்மையிவ் வுலக மெல்லா
மொத்தொவ்வா வாணும் பெண்ணு முணர் குண
குணியுமாகி
வைத்தன னவளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையு மறியார் பீட லிங்கத்தி னியல்பு மோரார்"

(சிவஞான சித்தியார் - சுபக்கம் சூத். 1 - அதி-3. செய் 69)

என்று நம் ஞானசாத்திரம் நவில்வது காண்க.

எம்கோமான் அன்பர் - ஈண்டுச் சீவன்முத்தர்களைக் குறித்து நின்றது. *அன்பர்க்கும்* - உம்மை உயர்வு சிறப்பு.

நமக்கும் - சிவபெருமான் திருவருட்கு ஆளாகி மலபரிபாகம் இரு வினையொப்பு முதலியன எய்தாதுள்ள ஏனைய அடியார்களாகிய நமக்கும் நீராடும் குழுவிலுள்ள பெண்களாகிய நமக்கும் எனவுமமையும். உம்மை இழிவு சிறப்பு. *அன்பர்க்கும் நமக்கும்* - என உம்மைகள் எண்ணும்மைகள் எனவுமாம்.

அவள் முன் முன்னிச் சுரக்கும் இன் அருளே என்னப் பொழியாய் - ***முன்***- முற்பட்டு. ***முன்னி*** - முதலடியில் "முன்னி" என்றதன் கீழுரைத்தவை அனைத்தும் ஈண்டும் கொள்க. ***சுரக்கும்*** - சுரந்து கொண்டிருக்கும், சுரக்கவுள்ள; மேலும் மேலும் பெருகும். ***இன் அருளே***- ஆன்மாக்களுக்கு இன்பம் தரக்கூடிய திருவளே என்ன. ***அருளே*** - ஏகாரம் தேற்றம். அதிசூக்கும பஞ்சாட்சரத்தில் "சி" கரத்துக்கு முற்பட்டு "வ" கரம் ஆன்மாவாகிய "ய" கரத்தை அணுகி அதனைச் "சி" கரத்துடன் ஒன்றுவிக்கும் நிலையை மீண்டும் நினைக. ***என்ன*** - போல. உவம உருபு. ***பொழியாய்***- போதிய அளவு பெய்வாயாக.

இத்திருப்பாடலில் நம் உமையம்மையை ***"உடையாள்"; "எம்மை ஆளுடையாள்"; "எம் பிராட்டி"; "நம் தம்மை ஆளுடையாள்"; "அவள்"*** என ஐந்து விதங்களிற் குறிப்பிடுகின்றார். உயிர், கேவல நிலையில் தலைவனையும், தன்னையும் மறைக்கும் இருளையும், தன்னையும் அறியாது கிடக்கும் நிலையிலும், திருவருள் அவ்வுயிரை அடிமையாகக் கொண்டுண்மையின் ***"உடையாள்"*** என்றார். அந்நிலையில் அதற்குத் தனு கரண புவன போகங்களை நல்கி, இயக்கி, வினைப் பயன்களை நுகரச் செய்து, சகல நிலையில் படிப்படியாக அறிவு விளக்கம் செய்தலின், ***"எம்மை ஆளுடையாள்"*** என்றார். பின் மலபரிபாகம் வருவித்து சிவத்தை நோக்கி உய்த்தலின் ***"எம் பிராட்டி"*** என்றார். முடிவில் சீவன்முத்த நிலையை எய்தச் செய்து ஏனைய சீவன்முத்தர்கள் கூட்டத்தில் இருத்தி, எடுத்த பிறப்பின் இறுதியில் வீட்டுலகில் சேர்த்தலின் ***"நம் தம்மை ஆளுடையாள்"*** என்றார். கேவலம் முதல் வீடுபேறு ஈறாக எல்லா நிலைகளிலும் உயிரை விட்டு நீங்காது நின்று வீட்டின்பமும் நுகர்விப்பவள், முதலிற் குறித்த உடையாளாகிய உமையம்மையே என்பார், ***அவள்*** என்று சுட்டிக் காட்டினார்.

இத்திருப்பாடலில் உமையன்னை மேற்கண்டவாறு ஐந்து விதங்களில் வழுத்தப்படுதலின் ***"சத்தியை வியந்தது"*** பெற்றும்.

171. செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்

செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய் கஎ

(இ-ள்)

"எங்கள் பாவை போன்ற பெண்களே! நான் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்பீராக; நறுமணம் தங்கிய கரிய கூந்தலுடைய உமையம்மை; நம் மலங்களைக் கழுவியதும்; திருமாலிடத்தும் நான்முகனிடத்தும் இந்திரன் முதலிய தேவர்களிடத்தும்; மற்று எவ்விடத்தும் உள்ளார் மாட்டும் இல்லாத ஒப்பற்ற பேரின்பம் எளியோமாகிய நம்மிடத்ததாக; இவ்வுடலிலுள்ள நம் இதயங்கள் தோறும் எழுந்தருளிச் செந்தாமரை போன்று அழகிய திருவடிகளை எளிமையில் நல்கியருளும் வீரனை; அழகிய அருள் நோக்கம் கொண்ட கோமானை; அடியவர்களாகிய நமக்கு எய்துதற்கரிய அமுதமாக உள்ளவனை; நம் தலைவனைப் புகழ்ந்து இசையால் துதித்து; நம்மனோர்க்கு நன்மை சிறக்கத் தாமரை மலர்களால் பொலிகின்ற இந்நீர்ப்பரப்பில், தாவி மூழ்கி நீராடுங்கள்.

(வி - ரை)

இத்திருப்பாடலை, "எம் பாவாய்! ஓர் ஏல்; கொங்கு உண் கரும் குழலி நம் தம்மைக் கோது ஆட்டி; செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்; எங்கும் இலாதது ஓர் இன்பம் நம்பாலதாக; இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி; செங்கமலப் பொற்பாதம் தந்து அருளும் சேவகனை; அம்கண் அரசை; அடியேம்கட்கு ஆர் அமுதை; நங்கள் பெருமானைப் பாடி; நலம் திகழப்; பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடு" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

கொங்கு உண் கரும் குழலி - இயல்பாகவே நறுமணமுள்ள கரிய கூந்தலுடைய உமையம்மை. மானிடப் பெண்களுக்கும் உத்தம சாதிப் பெண்களின் கூந்தல் இயல்பாகவே நறுமணமுள்ளதென்பதும் பதிப்பொருள் மலர்களுக்குள் அமர்ந்து அவற்றுக்கு மணம் நல்கும் என்பதும் அறிக. தருமிக்குப் பொற்கிழியளித்த திருவிளையாடல் பார்க்க. முன்னம் சிவபுராணம் (44-ல்) "நாற்றத்தின் நேரியாய்" என்றதன் உரையில்

எடுத்தாண்ட திருமுறைப் பாடல்கள் காண்க. ***கொங்கு*** - நறுமணம். ***உன்*** - உள்ள. "உண்ட" எனப் பொருள் கொண்டு "நறுமணம் உண்ட கரிய கூந்தல்" என உரைப்பினும் அமையும்.

"உண்டற் குரிய அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே"

(தொல்காப்பியம் - பொருளதிகாரம்-பொருளியல் - சூத். 210)

என்பது இலக்கணம். ***கரும்குழலி*** - காலதத்துவம் கடந்து நிற்கும் உமையம்மையின் மாருத இளமை பற்றிய குறிப்பு. இதன் பின் "***இங்கு இல்லங்கள் தோறும் எழுந்து அருளி***" என்பதை இங்கும் கூட்டுக. ***இங்கு*** - இப்பொழுது நாம் தாங்கியுள்ள உடல்களில் உள்ள. ***நம் இல்லங்கள் தோறும்*** - "***இல்லங்கள்***" - உடம்பின் உள்ளே இருக்கும் வீடுகள்; அஃதாவது இதயங்கள். கோயில் - இறைவனின் வீடு. இறைவன் நினைப்பவர் மனம் கோயில் கொள்வதாலும்; தியானம் அந்தரியாக பூசை முதலியவற்றில் அவன் இதயத்தில் எழுந்தருளுவதாலும் இதயம் அவன் இல்லமாயிற்று. சிவநெறிக்குப் புறம்பானர் இதயங்களை விலக்க; ***நம் இல்லங்கள்*** என்றருளினர். ***தோறும்*** - ஒவ்வொருவர் இதயத்துள்ளும். ***எழுந்தருளி*** - வந்திருப்பதாகிய அருளைப் புரிந்து. பின்னரும் "நின்னடியார் பழங்குடில் தோறுமெழுந்தருளிய பரனே" *(373)* என்றருளுவது காண்க. அவன் அவ்வாறு எழுந்தருளுவது பின்னர் இறைவன் அவ்விதயங்களில் தன் செங்கமலப் பொற்பாதம் கொண்டு எழுந்தருளுவதற்குத் தகுதியாகும்படி மலமாசு கழுவித் தூய்மை செய்தற் பொருட்டு.

நம் தம்மைக் கோது ஆட்டி - ***நம் தம்மை*** - நம்மை. ***தம்*** - சாரியை. ***கோது ஆட்டி*** - "கோது ஆட்ட" என்று திரித்துக் கொள்க. ***கோது ஆட்டுதல்*** - மல மாசுகளாகிய குற்றங்களை நீக்கித் தூய்மைப்படுத்துதல். இதனை "மலபரிபாகம்" என்பர். இதனையடுத்து உடனே நிகழ்வது அருட்சத்தி பதிதல். அதனைச் "சத்திநிபாதம்" என்பர். கோதாட்டியதன் காரணமாக இறைவன் எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதம் தந்தான் என்றவாறு.

செங்கணவன் பால் திசைமுகன் பால் தேவர்கள்பால் எங்கும் இலாதது ஓர் இன்பம்நம்பாலது ஆக - ***செங்கணவன்*** - திருமால். விழிகளின் மேற்பரப்பில் மிக

மெல்லிய குருதிக் குழாய்கள் உள. அவற்றில் நிகழும் குருதியோட்டம் செந்நிறமாகச் சிலருக்கு வெளியில் தெரியும். அத்தகைய விழிகளைச் செவ்வரி படர்ந்த கண்கள் என்பர். அவ்வரிகள் கண்களுக்கு அழகைச் செய்வன. திருமால் அழகுமிக்க ஆடவரிற் சிறந்தவன். ஆதலின் அவனைப் "புருடோத்தமன்" என்றும், "செந்தாமரைக் கண்ணன்" என்றும் கூறுவர். காத்தல் தொழிலுக்குக் கண்ணோட்டம் இன்றியமையாததாகலின் ஈண்டு அவனைச் **செங்கணவன்** என்றார். **திசைமுகன்** - பிரமன். திசைக்கொன்றாக நான்கு திசைகளையும் நோக்கும் நான்கு முகங்களையுடையவன். அவை நான்காலும் இறைவனை மறைபாடி வழுத்துபவன். **தேவர்கள்** - பசு புண்ணிய மிகுதியால் ஒளியுடம்பு பெற்று விண்ணுலகில் வாழ்பவர்கள். ஈண்டு அவர்கள் தலைவனான இந்திரனையும் உள்ளிட்ட கூட்டத்தினரைக் குறித்து நின்றது. **எங்கும்** - இட ஆகு பெயராக விண்ணுலகமன்றிப் பிற இடங்களில் உள்ள முனிவர் முதலியோரிடத்தும் என்றவாறு.

இலாதது ஒர் இன்பம் - திருமால், தன் கண்ணையிடந்து சிவபரஞ்சுடரை அருச்சித்தான். அது காமிய தவம்; அதனால் அவன் பெற்றது சக்கரப் படையே யன்றி சிவானந்தப் பேறன்று. நான்முகன், இறைவனை மறைபாடி வழுத்தியதால், திரிபுர தகனத்தில் இறைவனின் தேர்ப்பாகனாகும் பேறுமட்டுமே பெற்றான். அத்தேரும் அவன் அமர்க்களத்தில் செலுத்தும் வாய்ப்பின்றி இறைவன் இவருமுன்பே அழிந்து விட்டது. ஆதலில் நான்முகன் பெற்றதும் சிவானந்தப் பேறன்று. இந்திரன் உள்ளிட்ட இமையவர் பெற்றது நரை திரை மரணம் என்பவற்றை நெடுங்காலம் தள்ளிப் போடும் அமுத வுண்டியும் அரம்பை முதலியோர் மாட்டு நுகரும் சிற்றின்பங்களுமேயன்றிச் சிவானந்தப் பேறன்று. அவர்கள் எய்தாததும் அடியார்கள் அடைவதுமாகிய இன்பத்தை ***ஒர் இன்பம்*** என்றார். ***ஒர் இன்பம்*** - ஒப்பற்ற இன்பம். சிவானந்தப் பேறு.

நம் பாலது ஆக - அந்த ஒப்பற்ற பேரின்பம் வேட்டுத் திருமால் முதலியோர் ஏங்கி நிற்க, அவர்களை விட்டு அவ்வின்பம் எளியோமாகிய நம்மிடத்து நண்ணும் வகையில் என்றவாறு. இந்நிலை கண்டு நிலையற்ற இன்பம் துய்க்கும் திருமாலாதியோர் "நாம் பூவுலகிற் பிறந்து அந்த அந்தமிலா ஆனந்தம் துய்க்காமல் ஈண்டு வீண்காலம் கழிக்கின்றோமே" என்று ஏங்குவதை நம் அடிகளே பின்னர்க் கூறுவது காண்க (375).

இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்து அருளி - இதற்கு முன்னம் உரைத்தாங்கன்றி "நம் வீடுகள் தோறும் எழுந்தருளி" என்று கொண்டு திருவெம்பாவை உற்சவத்தின் நிறைவு நாளாகிய திருவாதிரை நாளில் அம்பலவாணனையும் சிவகாமியம்மையையும் மனைகள் தோறும் விக்கிரகம், படம்; மஞ்சள் முதலியவற்றில் நிறுவி வழிபட்டு நிறைவு செய்யும் நிகழ்ச்சியைக் குறிப்பிட்டனர் முன்னுரையாளர்களில் பலர்.

செங்கமலப் பொற் பாதம் தந்து அருளும் சேவகனை - நம் இதயங்கள் தோறும் ஏற்கெனவே உமையம்மை எழுந்தருளி நம் குற்றங்களை நீக்கி சிவபரஞ் சுடர் எழுந்தருளத் தகுதியாக்கியுள்ளாள். அதன் காரணமாக இறை இப்பொழுது அவற்றில் எழுந்தருளுகின்றான். அவன் எழுந்தருளுவதற்குக் காரணம் தன் செங்கமலப் பொற்பாதம் தந்தருளுவது. அவற்றைப் பெற்றதால் நாம் "***எங்கும் இலாததோர் இன்பம் எய்துவோம்***" என்றவாறு. செம்கமலப் ***பொற்பாதம்- செம்கமலம்*** - செந்தாமரை மலர். வண்ணத்தாலும், வடிவாலும் இறைவன் திருவடிகளுக்கு உவமை. "செங்கமலம் போன்ற பொற்பாதம்" என்றதில் உவம உருபு தொக்கு நின்றது. ஆணவ மலத்தை நீக்கி ஆன்மாக்களைச் செம்மை செய்யும் பாதம். அது கமலம் போன்றது எனலுமொக்கும். ***பொன்*** - தங்கம் போன்ற எனலுமாம். தங்கம் இயல்பாகவே களிம்பற்றதாகலின் இயல்பாகவே பாசங்களினீங்கியவன் திருவடிகளுக்கு உவமையாயிற்று. இறைவன் திருவடி வீட்டின்பம் தருவதாகும். வீடாகவே உள்ளதுமாம். ***செங்கமலம் பொற்பாதம் தந்து அருளுதல்***-ஈண்டுத் திருவடி தீட்சையைக் குறிப்பாலுணர்த்தி நின்றது. ***சேவகன்*** -பிறர் படைத்துணையின்றித் தான் ஒருவனே வலிமை மிக்க எதிரியை வெல்பவன். திரிபுர தகனம் முதலியன நினைக. இறைவனின் எண்குணங்களுள் ஒன்றான "முடிவிலாற்றலுடைமை"யை மனங்கொள்க. ஈண்டு, அடியவர்களின் மல மாயா கன்மங்களை அறை கூவி அழைத்து ஒடுக்கி அடியார்களைக் காக்கும் வீரம் குறித்து நின்றது.

அம் கண் அரசை - அம்கண் - அழகிய கண். கண்ணுக்கு அழகு கண்ணோட்டமுடைமை. தன்பால் மிகை செய்த இராவணன், காமன், தண் கதிரோன் ஆகியோரை ஒறுத்து மிகை செற்ற பின்பும் அவர்களுக்கு வாழ்வளித்த பேரருளுடைமை நினைக. "பேரருளுடைமை" அவன்

இறைமைக் குணங்கள் எட்டனுள் ஒன்றுவது மனங் கொள்க. **அரசன்** - தன் அடிமைகளாகிய ஆன்மாக்கள்மாட்டுக் கண்ணோட்டம் கொள்ளும் இயல்பினன் என்றவாறு. **அம்கண் அரசு** - ஈண்டுச் சட்சு தீட்சையைக் குறிப்பாலுணர்த்தி நின்றது.

அடியோம் கட்கு ஆர் அமுதை - திருமால் முதலிய பெருந்தேவர்களும் கயிலையில் இறைவனைத் தொழக் காலம் பார்த்துக் காத்துக் கிடக்க, அவன், அவர்களுக்கு அருளாமல் நம் இல்லங்கள் தோறும் தானே வந்து தன் செங்கமலப் பொற்பாதம் தருதலின், அடியார்களாகிய நமக்கு ஆர் அமுது ஆயினன். **ஆர் அமுது** - நிறைந்த அமுது. **அமுது** - மரணத்தையும் தொடர்ந்து வரும் பிறப்பையும் நீக்கிப் பேரின்பம்தரும் சிவானந்தம்.

நங்கள் பெருமானைப் பாடி - பெருந்தேவர்கள் பேழ்கணித்து நிற்க, இறைவன், தானே நம்மைத் தேடி வந்ததால் **நங்கள் பெருமான்** என உரிமை பாராட்டியவாறு. **பாடி**- பாடுவதனால்.

நலம் திகழ - உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்து எய்யாமல் சிவனடிமைத் திறத்தில் நிற்பதனால் நமக்கு **நலம்** உண்டாயிற்று. அந்த நலம் அவன் தானே நம்மில்லங்கள் தோறும் எழுந்தருளித் தன் செங்கமலப் பொற்பாதம் தந்தது. அது மேலும் சிறந்து விளங்க அவனைத் துதித்து இசைபாடுவோமாக என்றவாறு. **திகழ்தல்** - சிறந்து விளங்குதல்.

பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடு - அவ்வாறு துதியிசை பாடியவாறே இந்தத் தாமரைப் பொய்கையில் மூழ்கி நீராடு என்றவாறு. **பங்கயம்** - காரணப் பெயர் 167-ம் திருப்பாட்டில் பக்கஜம் என்றதன் கீழுரைத்தவை காண்க. **பூ** - அல்லி, குவளை முதலிய பிற நீர்ப்பூக்கள். **பூ** - அழகிய எனக்கொண்டு தாமரை மலர்ந்துள்ள அழகிய நீர்ப்பரப்பு எனலுமொக்கும். **பாய்ந்து** - தாவி நீரில் மூழ்கி.

இத்திருப்பாடலின்கண் கொங்குண் கருங்குழலி அடியார்களின் இதயங்கள் தோறும் எழுந்தருளிக் கோதாட்டும் அருளிப்பாடு வழுத்தப் படுதலின் **"சத்தியை வியந்தது"** பெற்றும்.

172. அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்
கஅ

(இ - ள்)

"எங்கள் பாவை போன்ற பெண்களே! நான் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வீர்களாக; திருவண்ணாமலையாகிய சிவபெருமானின் திருவடித் தாமரைகளைச் சார்ந்து வணங்கும்; விண்ணுலக வாசிகளின் மகுடங்களிலுள்ள பலவகை மணிகளின் கூட்டங்களும் பொலிவிழந்து ஒளிமங்கி யொழிந்தாற் போல; உயிர்களின் விழிகளில் நிறைந்து நிற்கும் செங்கதிரவனின் ஒளி வருதலின் இருள் மறைந்தபின் விண்மீன்கள் தங்கள் மெல்லிய ஒளி பொலிவிழந்து மழுங்கி மறைய; (இந்நிலையில்) பெண்ணாகியும், ஆணாகியும், அலியாகியும் ஒளி விளங்கும் ஆகாயமாகியும் நிலமாகியும்; இத்துணைப் பொருள்களினின்றும் வேறு பொருளாகியும்; நிலை பெற்று நிற்கும் சிவபெருமானின் திருவடிகளைப் புகழ்ந்து இசையால் துதித்து; பெண்களே! இந்த அழகிய நீர்ப்பரப்பில் தாவி மூழ்கி நீராடுங்கள்"

(வி - ரை)

இத்திருப்பாடலின் ஈற்றிலுள்ள பகுதியை, "எம் பாவாய்! ஓர்:ஏல்" என மாற்றிப் பாடலின் முதலில் அமைத்துக் கொள்க. நான்காமடியில் "தாரகைகள் தாம்" என்பதை அவ்வடியில் முதலில் அமைத்துக் கொள்க. பிறகு பாடலுக்குப் பொருள் காண்க.

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும் - அண்ணாமலையான் *- அண்ணாமலையே தானான இறைவன். மாலும்*

அயனும் தேட இறைவன் பேரொளிப் பிழம்பான அண்ணுமலையாக நின்ற வரலாறு நினைக. செந்தீ மலையின்பேரொளியே சிவபெருமானின் திருமேனி வண்ணமாதல் நினைக. இறைவன் அண்ணுமலையாக நின்ற பின்பே அந்த இடம் திருவண்ணுமலை என்ற பதியாயிற்று என்பதும் மனம் கொள்க. இந்தத் திருவெம்பாவை அந்தப் பகுதியில் அருளிச் செய்யப்பட்டதாகும். அண்ணுவின் கண் உள்ள மலை. "அண்ணு"-இடத்தின் பெயர்; "மலை" - அங்குள்ள மலை. "மலையான்" - இறைவன் எனவும் கொள்க. ***அடிக்கமலம்*** - திருவடியாகிய தாமரை மலர்கள். இறைவன் திருமேனி வண்ணமே அவன் திருவடியின் வண்ணமுமாம். ***அடி*** - திருவடிகள். ஆன்மாக்களின் மலத்தைக் கழுவிப் பேரின்பம் தந்து வீட்டுலகில் உய்ப்பன. ***கமலம்*** - ஈண்டுச் செந்தாமரை மலரை உணர்த்திற்று. அஃது உள்ளத்தாலும் வடிவாலும் இறைவன் திருவடிகளுக்கு உவமை. ***அடிக்கமலம்*** - ஈண்டுத் திருவடிகளையே கமலம் என்ருர். ஆதலின் உருவக அணியாயிற்று. **சென்று** - இறைவன் எழுந்தருளியுள்ள திருவண்ணுமலையாகிய பதிக்குச் சென்று. ***இறைஞ்சும்*** - அவன் திருவடித் துணையில் தங்கள் முடிகள் தோயுமாறு வீழ்ந்து வணங்கும். இது, திருவடி தீட்சை பெறும் குறிப்பு.

விண்ணோர் முடியின் மணித் தொகை வீறு அற்ருற் போல் - ***விண்ணோர்*** - பூவுலகுக்கு மேலும் திருக்கயிலைக்குக் கீழும் உள்ள உலகங்களில் வசிப்பவர்கள். அவர்கள் தேவர்கள் முதல் திருமால் முடியவுள்ள மேலுலகவாசிகளும் அவர்கள் தலைவர்களுமாவர். ***முடியின் மணித்தொகை*** - அவர்கள் அணிந்துள்ள மௌலிகளில் பொதியப்பட்டுள்ள செம்மணி முதலிய நவமணிகளின் கூட்டம். அவை தனித்த நிலையில் மிக்க ஒளிகாலுவன. அம்முடிகள் அவர்கள் பெற்றுள்ள பதங்களையும் ஆளும் உலகங்களின் தலைமை உரிமைகளையும் குறிக்கும் சின்னங்கள். அம்முடிகளை நீங்காமல் அவை இறைவன் திருவடிகளில் தோயும் வண்ணம் வீழ்ந்து வணங்குதல், அத்தலைமைப் பதங்களனைத்தும் இறைவன் திருவடித் தொண்டால் தாங்கள் பெற்றவை என்பதும், அவனே தங்கள் வாயிலாக அவற்றை ஆளும் மாமன்னன் என்ற குறிப்பும் கொண்டது. ***வீறு*** - பொலிவு. இச்சொல் இப்பொருளில் வருவதை "சாறயர் களத்து ***வீறு*** பெறத் தோன்றி" (திருமுருகாற்றுப் படை 283) என்பதற்கு "விழாவெடுத்த களத்தே தாங்கள் **பொலிவு** பெறத் தோன்றி" என்று நச்சினுர்க்கினியர் உரைவகுத்தலிற் காண்க. ***அற்ருர் போல்*** - இழந்து மறைவது போல.

கண் ஆர் இரவி கதிர் வந்து கார் கரப்ப - ***கண் ஆர் இரவி கதிர்*** - ஆன்மாக்களின் விழிகளில் நிறைந்து நின்று பொருள்களைக் காட்டும் இரவியின் கதிர்கள். ***வந்து*** - வருதலினால். காரணப் பொருளில் வந்த வினையெச்சம். இதைக் காட்டுவியஞ்சகம் என்பர். ***ஆர்தல்*** - நிறைதல். ***இரவிகதிர்*** - ஞாயிற்றின் ஒளிக்கதிர்கள். "இரவிக் கதிர்" எனற்பாலது "குழவிகை" என்றாற் போல வல்லொற்று மிகாது வந்தது. ***கார்கரப்ப*** - இருள், வலிகுன்றி உயிர்களின் கட்புலன்களுக்கு மறைய.

தாரகைள் தாம் தண் ஆர் ஒளி மழுங்கி அகல - ***தாரகைகள்*** - விண்மீன்கள். கோள்கள் செங்கதிரவனின் ஆட்சிக்குட்பட்டு அவனிடமிருந்து ஒளி பெற்று விளங்குவன. அவனைச் சுற்றி வருவன. விண்மீன்கள் சுயமாக ஒளியுள்ளன; கதிரவனைத் தாண்டி மிக நெடுந்தொலைவில் உள்ளன. ஆதலின் அவற்றின் ஒளி மென்மையானதும் விட்டு விட்டு ஒளிர்வதாகவும் புலனாகின்றது. ஆதலின் ***தண் ஆர் ஒளி*** என்றார். ***தண்மை*** - மென்மை. இச்சொல் இப்பொருளில் வருவதை;

> *" முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற*
> *பேதை பெருமழைக் கண்"* **(திருக்குறள் 1239)**

என்ற திருக்குறளுக்கு உரைவகுத்த பரிமேழலகர், "***தண்மை*** ஈண்டு மென்மை மேனின்றது" என விளக்குதலாலறிக. இதற்கு இவ்வாறன்றித் ***தண்*** என்பதை வெண்கதிர்ச் செல்வனாகக் கொண்டு The Cool moon's rays are paled என ஆங்கில மொழியாக்கம் செய்தார் டாக்டர் G.U. போப் அவர்கள். பகற்பொழுதில் சில நாட்கள் வெண்கதிரோன் ஒளி மட்டுமே மழுங்குவன். "***போய் அகல்வதிலன்***" பிற்பகல் நேரத்தில் வானில் தென்படுவன். ஆதலின் அஃதுரையன்று என விலக்குக.

மழுங்கு - ஒளி மடங்கி. ***அகல*** - கட்புலனுக்குத் தெரியாமல் கதிரவன் ஒளியுள் அடங்க. ***தாம்*** - அசை.

நீராடும் பெண்கள், இறைவனைச் சென்று இறைஞ்சும் காலம் வைகறைப்பொழுது. அப்பொழுதில் இருள் வலி குன்றிக் கட்புலனுக்குத் தெரியாமல் மறைகின்றது. விண்மீன்கள் ஒளி மழுங்குகின்றன. இந்த நிலை, உரிய பக்குவம் வந்த பொழுது ஆன்மா, தான் இறைவனுக்கு அடிமையென்றுணர்ந்து பணிகின்றது. அப்பொழுது ஆன்மாவைப் பற்றி

நிற்கும் ஆணவ மலம் வலி மடங்குகின்றது. ஆன்மா, தானே முதல் என்று எண்ணும் பசு ஞானமும், மாயேயமாகிய பாச ஞானமும் முனைத்துத் தோன்றுமல் ஒடுங்குகின்றன- என்ற உண்மைகளை குறிப்பால் உணர்த்துதல் காண்க. இவ்வாறு பொருள் கொள்ளுங்கால் **அகல** என்பதைக் காரணப் பொருளில் வந்த வினையெச்சம் **ஆடு** என்ற ஏவல் வினைமுற்றைக் கொண்டு முடிந்ததாகக் கொள்க.

பக்குவமுற்ற உயிர்கள் சிவபெருமானின் இறைமைக் குண வியாபகத்துள் அடங்கி நிற்றலை,

திருச்சிற்றம்பலம்

"நாவார நம்பனையே பாடப் பெற்றோம்
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவாவென் றெமையாள்வா னமரர் நாதன்
அயனெடுமாற் கறிவரிய வனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான் தென்றிசைக்கோன் தானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலும்
குணமாகக் கொள்ளோ மெண் குணத்து ளோமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-98-10)

என்று நம் அரசுகளின் அமுத வாக்கிற் காண்க.

பெண் ஆகி ஆண் ஆய் அலி ஆய்ப் பிறங்கு ஒளிசேர் விண் ஆகி மண் ஆகி - ***பெண் ஆண் அலி ஆய்*** என்றது இறைவன் சித்துப் பொருள்கள் எல்லாமாய் நிற்றலைக் குறிக்கும். ஆன்மாக்கள் சித்துப் பொருள்கள். இறைவன், தன் அட்டமூர்த்தங்களுள் ஒன்றாக ஆன்மாவைக் கொண்டு ஆன்மாவாகவே நின்று அதனை இயக்குதலின் இவ்வாறுரைத்தார். உயிர்களை உய்த்து உய்விப்பது திருவருள். அதனை உமையம்மையாக உருவகம் செய்தலின் "*பெண்ணாகி*" என முதலிற் கூறினார். மாதொருபாக மூர்த்தத்தில்

அம்மையுடன் இணைந்துள்ளது அப்பனின் வடிவாகலின் அடுத்து "**ஆணகி**" என்ருர். பெண்ணும் ஆணும் அல்லாதது ***அலி.*** அஃது ஆண்மை மிகுந்தும் பெண்மை குறைந்தும் உள்ள பிறவி, **பேடி.** அதை ஈண்டு அலியுள் அடக்கிக் கூறினர். ***அலி***க்கும் ஆன்மாவுண்டாகலின் அவ்வான்மாவினுள்ளும் இறைவன் அஃதாகவே உளனுதலின் ***அலியாகி*** என்ருர். முன்னம் திருவண்டப் பகுதி 57-ல் "பெண் ஆண் அலியெனும் பெற்றியன்" என்றருளியதும் அதன் கீழுரைத்தவையும் காண்க. "***பிறங்கு ஒளிசேர் விண் ஆகி மண் ஆகி*** - இஃது இறைவன் சடப்பொருள்கள் எல்லாமாய் நிற்கும் நிலை வழுத்தப்பட்டதாகும். ***விண் ஆகி*** என்றது மண்ணுலகுக்கு மேலுள்ள எல்லா உலகங்களையும், அவற்றில் வாழும் உயிர்களை "***பெண் ஆண் அலி***" என்று மேலே கூறிவிட்டதால் இவை அவ்வுயிர்கள் வாழும் உலகங்களையே குறித்தன. இனி "***விண்***" என்றது ஆகாயத்தையும், ***மண்*** என்றது மண்ணுகிய பூதத்தையும் குறிக்கும் எனக் கொண்டு ஒரு குணமுள்ள விண்ணையும், ஐந்து குணங்களுள்ள மண்ணையும் கூறவே இடைப்பட்ட காற்று, நெருப்பு, நீர் என்பனவற்றையும் கொண்டு ஐம்பூதங்களையும் கூறினர் எனலுமாம். அவை இறைவனின் அட்ட மூர்த்தங்களில் ஐந்து மூர்த்தங்களாகலின் இறைவன் அவற்றுள் அவையாகவே நின்று அவற்றை இயக்குகின்ருன் என்றவாறு. ஒளி மண்டலங்களாகிய இரு சுடர்களும் விண்ணில் இயங்குதலின் விண்ணுக்குப் "***பிறங்கொளி சேர் விண்***" என அடைமொழி புணர்த்தார். அட்ட மூர்த்தங்களில் ஏனைய இரண்டும் இரு சுடர்கள். அவற்றை "***பிறங்கொளி***" என்றதாற் பெற வைத்தார்.

மணி, பொன், கல், மரம் முதலிய பொருள்களில் இறைவன் திருவுருவம் அமைத்து வழிபடுவோர்க்கு அத்திருவுருவங்களில் எழுந்தருளி இறைவன் அருள்பாலித்தலின் அப்பொருள்களுக்கு மூலமாகிய பூதங்களாகவும் இறைவனைக் குறிப்பிட்டார் எனலுமொக்கும்.

பிறங்கொலி என்பது திரு.மு. அருணசலம் M.A. அவர்கள் கொண்ட பாடம். இப்பாடத்துக்கு ஒலியாகிய தன் மாத்திரையில் ஒடுங்கும் ஆகாயம் எனப் பொருள் கொள்க. "ஓசை" என்பது பொருளில்லாத அரவம். "ஒலி" என்பது பொருளுடன் கூடியது. இவை ஒன்றன் பொருளில் மற்ருென்று மயங்கி வருதலை இலக்கியங்களில் காணலாம். எடுத்துக்காட்டாக;

திருச்சிற்றம்பலம்

“தேரொலிக்க மாவொலிக்கத் திசையொலிக்கும்
புகழ்க்காஞ்சி
ஊரொலிக்கும் பெருவண்ணா ரெனவொண்ணா
வுண்மையினர்
நீரொலிக்க வராவிரைக்க நிலா முகிழ்க்குந் திருமுடியார்
பேரொலிக்க வுருகுமவர்க் கொலிப்பர்பெரு
விருப்பினொடும்”

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் 113)
என வரும் சேக்கிழார் பெருமான் செம்மொழி காண்க.

இத்தனையும் வேறு ஆகி - இறைவன், அட்டமூர்த்தங்களில் கலப்பினால் அவையேயாகி நிற்கின்றான். ஆனால் பொருட்டன்மையால் அவற்றினின்றும் வேறுபட்டு நிற்கின்றான். அது கண்ணிற் கலந்துள்ள செங்கதிரோன் ஒளி போல என்றவாறு. இதனை;

திருச்சிற்றம்பலம்

“பற்றுமாகி வானுளோர்க்குப் பல்கதிரோன் மதிபார்
எற்றுநீர்தீக் காலுமேலை விண்ணியமா னனோடு
மற்றுமாதோர் பல்லுயிராய் மாலயனும் மறைகள்
முற்றுமாகி வேறுமானான் மேயதுமு துகுன்றே”

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 1-53-2)

எனவரும் நம் பிள்ளையார் திருவாக்கிற் காண்க. சிவபுராணம் 61-ல் “***யாவையுமாய் அல்லையுமாம்***” என்றருளியதும் அதன் கீழுரைத்தவையும் காண்க.

கண் ஆர் அமுதமுமாய் - நாவால் ஆரும் அமுதம் போலன்றிக் கண்ணால் ஆரும் அமுதமுமாய் என்றவாறு. கண் என்பதை ஆன்ம அறிவு எனக் கொண்டு, ஆன்ம அறிவில் நிறைந்து அமுதம் போல் இன்பமும்

அழிவின்மையும் பயப்பவன் எனலுமாம். முன்னம் போற்றித் திருவகவல் 150-ல் "கண்ணு ரமுதக் கடலே" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க. **அமுதமும்** - என்பதில் உள்ள உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. பெண், ஆண், அலி, விண், மண் இத்தனையும் ஆகி, இவற்றின் வேறுமாகிக் கண்ணார் அமுதமுமாய் நின்றான் என்று கூட்டுக.

நின்றான் கழல் பாடி - *நின்றான்*- எல்லாக் காலத்தும் நிலைபெற்றுள்ளவன். அழிவற்றவன் என்றவாறு. **கழல்** - ஆணவமலத்தை வெற்றி கொண்ட சின்னம். சிவபெருமானின் "முடிவிலாற்றலுடைமை" யைக் குறித்து நின்றது. ஈண்டுத் தானியாகு பெயராக இறைவனின் வலது பாதம் குறித்து, இனம் பற்றி, இடது பாதத்தையும் கொண்டு இரு திருவடிகளையும் குறித்து நின்றது. **பாடி** - திருவடிகளை இசையால் பரவி.

பெண்ணே - பெண்களே! ஒருமைச் சொல் பன்மைப் பொருளில் வந்துள்ள ஒருமை பன்மை மயக்கம். உடன் நீராட வந்துள்ள பெண்களை விளித்தவாறு.

இப்பூம்புனல் பாய்ந்து - **பூம்புனல்** - தாமரைக் குளத்தின் நீர்ப்பரப்பு. "இ"கரம் அண்மைச் சுட்டு. **எம்பாவாய்** என்று தொடக்கத்தில் விளித்தது "**ஏல்**" என்ற ஏவல் வினைமுற்றுக் கொண்டு முடிந்தது. **பெண்ணே!** என்று ஈண்டு விளித்தது. **ஆடு** என்ற ஏவல் வினைமுற்றுக் கொண்டு முடிந்தது. "*தாரகைகள் தாமகலக் கழல்பாடி ஆடு*" என இயைத்துக் கொள்க. **அகல** - அகலும் இந்தக் காலைப் பொழுதில். குறிப்புப் பொருள் கொள்ளுங்கால் "அகலும் பொருட்டு" எனக் காரணப் பொருளில் வந்த வினையெச்சம் என்று கொள்க. இத்திருப்பாடலுடன் பெண்கள் அனைவரும் பொய்கையில் நீராடுதல் நிறைவுற்றது.

கழல், ஈண்டுத் திருவடிகளாகிய சத்தியைக் குறித்து நின்றது. இத்திருப்பாடலில் *கழல்பாடி* என்றமையால் "*சத்தியை வியந்தது*" பெற்றாம்.

173. உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க;

எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய் கக

(இ - ள்)

"எங்கள் பாவை போன்ற பெண்களே! நான் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வீர்களாக; எங்கள் இறைவனே! "உன் கையில் சேர்ப்பிக்கப்பெறும் இப்பெண் உனக்கே அடைக்கலப் பொருளாவாள்" என்று, திருமண நாளில் பண்டைக்காலம் முதல் வழங்கிவரும் சொல்லே; புதுப்பிக்குங்கால் எழும் எம் அச்சம் காரணமாக; உனக்கு ஒரு விண்ணப்பம் செய்து கொள்வோம்; கேட்டருள்வாயாக; எங்கள் கொங்கைகள் உன் அன்பரல்லாதார் தோள்களைத் தழுவாதொழிக; எம் கைகள் நினக்கன்றி வேறு யாருக்கும் எத்தகைய தொண்டும் செய்யாதொழிக; எங்கள் விழிகள் இரவும் பகலும் நின்னையன்றி வேறு எப்பொருளையும் காணாதொழிக; இவ்வுலகில் இவ்வாறே எங்களுக்கு எங்கள் தலைவனாகிய நீ அருள் பாலிப்பாயாகில்; செங்கதிரவன் கீழ்த்திசையிலன்றி வேறு எத்திசையில் தோன்றினாலும் எமக்கு வரக் கடவது யாது?" (ஒன்றுமில்லை).

(வி - ரை)

இத்திருப்பாடலின் ஈற்றிலுள்ள பகுதியை, "எம் பாவாய்! ஓர்:ஏல்" என மாற்றிப் பாடலின் முதலில் வைக்க. அடுத்து "எங்கள் பெருமான்" என்பதை வைக்க. ஆறும் அடியிலுள்ள "எம்கண்" என்பதைக் "கங்குல்" என்பதன் முன் வைக்க. பிறகு பாடலுக்குப் பொருள் காண்க.

எங்கள் பெருமான் - விளி. எங்களுக்கு சிறப்பாக உரிமையுள்ளவனும் பெருமையை ஆள்பவனுமாகிய தலைவனே.

உம் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று - இஃதோர் பழமொழி. மிகத் தொன்மைக் காலத்திலிருந்து வழங்கி வருவது. பெண் ஒருத்தி திருமணப் பருவம் எய்தியதும் இரு முதுகுரவர் முதலானோர் அவளுக்குத் தக்க மணமகன் ஒருவனைத் தேர்ந்தெடுத்துத்

திருமணம் செய்து கொடுக்க அவளை, அவன் தன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கோடலே பண்டு தொட்டு தம் தமிழ் மண்ணில் நிகழ்ந்து வரும் வழக்கமாகும். இன்று நமக்குக் கிடைத்துள்ள தமிழ் நூல்களில் மிகத் தொன்மையானது தொல்காப்பியம். அஃது இத்திருமணத்துக்கு விதி வகுத்துள்ளது. அதனை;

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவோன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே"

(தொல்காப்பியம் - பொருளதிகாரம் - கற்பியல் - சூத். 140)

என்பதிற் காண்க.

அவ்வாறு நிகழும் திருமணச் சடங்குகளில் மணமகளை, அவள் பெற்றோர் மணமகனுக்குக் கொடைப் பொருளாக நீர் வார்த்தளித்தல் ஒரு முக்கிய நிகழ்ச்சி. அதைத் "தாரை வார்த்தல்" என்பர். அஞ்ஞான்று அவ்வாறு நல்குவோர் மணமகனை நோக்கி ஓம்படுத்தற் பொருட்டு "இப்பெண்ணை உன் கையில் உன் அடைக்கலப் பொருளாக ஒப்படைக்கின்றோம்" என்று மொழிந்து நீர் வார்ப்பர். அதன்பின் அவன் அவளுக்கு மங்கல நாண் அணிவிப்பன். பின் அவள் அவனுக்கு உரிமைப் பொருளாவள். ஒருவன் தன் உரிமைப்பொருள், தன் மாட்டு அடைக்கலமாக வைக்கப்பட்ட பொருள் என்னும் இரண்டனுள் உரிமைப்பொருளினும் பாதுகாக்கத்தக்க பெருமையுடையது தன்பால் வைக்கப்பட்ட அடைக்கலப் பொருளாகும் என்று ஒழுகல் வேண்டும். இம்முறையை நம் பழந்தமிழ் நூல்களில் காணலாம். சிலப்பதிகாரத்தில் நாம் "கவுந்தியடிகள்" என்ற தவச்செல்வியைக் காண்கின்றோம். அவள், "மாதரி" என்ற பெண்ணிடம் கண்ணகியை அடைக்கலப் பொருளாக வைக்கின்றாள். அடைக்கலப் பொருளாகிய கண்ணகிக்கு நேர்ந்தவற்றை பொறாது மாதரி உயிர் நீத்தாள் என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது. இதை "அடைக்கலமிழந் துயிரிழந்த விடைக்குலமகள்" என்று சிலப்பதிகாரம்-29 "வாழ்த்துக்காதை உரைப்பாட்டு மடை"யில் உரைத்தல் காண்க.

"உன் கையில்" என்பது எதுகை நோக்கி உங்கையில் என வந்தது. உனக்கே - ஏகாரம் பிரிநிலை. மணமகன் குடும்பத்தாரில் ஏனையோரைப்

பிரித்து நீ ஒருவனே அவளை உன் அடைக்கலப் பொருளாக ஓம்பும் கடமையுள்ளவன் என்றவாறு.

அங்கு அப்பழம் சொல் - ***அங்கு*** - தாரைவார்க்கும் திருமணச் சடங்கு நிகழும் மணமேடையில் எனலுமாம். ***அப்பழம் சொல்*** - தொன்று தொட்டு வழங்கிவரும் அந்தப் பழமொழி. "அ" கரம் முன்னறி சுட்டு.

புதுக்கும் எம் அச்சத்தால் - ***புதுக்கும்*** - தொன்று தொட்டு வரும் அந்தப் பழமொழியை எம் இரு முதுகுரவர் மீண்டும் மொழிந்து புதுப்பிக்கும் பொழுது. ***அச்சத்தால்*** - திருமண மேடையில் தாரை நீரை ஏற்கும் மணமகன் ஒருவேளை நம் சிவநெறிக்கு மாறானவனாக அமைந்து விடுவானோ என முகிழ்க்கும் ஐயத்தினால் ஏற்படும் அச்சம் காரணமாக.

இந்நாளில் மணமகள் இல்லத்தினர் மணமகனைத் தேர்ந்தெடுக்குங்கால் முதலில் அவன் செல்வ நிலைக்கே கருத்துச் செலுத்துவர். அதனை அடுத்து நிற்பன அவன் கல்வியும் தொழிலும். அவையனைத்தும் மன நிறைவளிப்பின் அவன் கடவுள் நெறி பற்றிக் கவலையே கொள்ளாது மணம் பேசி முடித்து விடுவர். ஆனால் நம் முந்தையோர் கண்ட நிலை வேறு. அவர்கள் கடவுள் கொள்கை பற்றியே முதலில் சிந்திப்பர். இதை நம் ஆளுடைய அரசுகள் சரிதம் நமக்குக் காட்டுகின்றது. திலகவதியம்மையாருக்கு மணமகனாராகக் கலிப்பகையாரைத் தேர்ந்தெடுத்த முறையைச் சேக்கிழார் பெருமான் நமக்கு அறிமுகப்படுத்துகின்றார்.

திருச்சிற்றம்பலம்

"அந்நாளிற் றிலகவதி யாருக்காண் டாறிரண்டின்
முன்னாக வொத்தகுல முதல்வேளாண் குடித்தலைவர்
மின்னார்செஞ் சடையண்ணல் மெய்யடிமை விருப்புடையார்
பொன்னாரு மணிமௌலிப் புரவலன்பா லருளுடையார்"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - திருநாவுக்கரசு நாயனார் புராணம். 22)

என்பது அவ்வறிமுகம். சிவனடிமைத்திறம் முதலிலும் சேனாதிபதிப் பதவி முதலியன பின்னரும் இடம் பெறல் காண்க.

இத்துணை விழிப்புணர்வுடன் மணமகனைத் தேர்ந்தெடுப்பினும் அவன் உலக அனுபவம் குறைந்த இளமைப் பருவத்தினன் என்பதை நாம் மனம் கொள்ளல் வேண்டும். அப்பருவம் புறச்சமயங்களின் தாக்குதல்களுக்கு எளிதில் இரையாகிச் சிவனடிமைத் திறத்தினின்றும் திறம்பியும் அதனை மறந்தும் கெட்டொழிதற்கு இடந்தரும் பருவம். நம் அரசுகளின் இளமைப் பருவம் அவ்வாறு அமைந்த ஒன்றாகும். எங்கள் பெற்றோர் தேர்ந்தெடுக்கும் மணமகனும் அவ்வாறு மாறிவிடுவனோ என்ற அச்சமாகும்.

உனக்கு ஒன்று உரைப்போம் கேள் - இவர்கள் கேட்க உள்ளன சிவனடியார் அல்லார் தோள் சேராமை, சிவத் தொண்டன்றிப் பிற செய்யாமை, சிவத்தையன்றிப் பிறவற்றைக் காணாமை ஆகிய மூன்றாகும். பெரியார்மாட்டு விண்ணப்பம் செய்யுழி காலச் செலவும், வேண்டுவனவற்றின் எண்ணிக்கை மிகுதியும் கேட்போர் மனங் கொள்ளாமைப் பொருட்டு "ஒரு வார்த்தை விண்ணப்பம் செய்து கொள்கின்றேன், அதைச் செவிமடுத்தருளல் வேண்டும்" என்று, தொடங்குவதை ஒத்து இங்கு மூன்றையும் ஒன்றாக அடக்கி **ஒன்று** என்று கூறி, அந்த ஒன்று **இப்பரிசு** என விண்ணப்பம் செய்து, *பரிசு* என்ற ஒன்றனுள் அம்மூன்றையும்அடக்கும் சதுரப்பாடு கண்டின்புறுக. **கேள்** - செவி மடுத்தல் வேண்டும் என்றவாறு.

எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க - மேற்குறித்த அச்சம் நிகழ்வதற்கான காரணங்களுள் ஒன்று கூறியவாறு. விண்ணப்பம் செய்து கொள்ளும் மகளிர் பலராதலின் "*எம் கொங்கை*" என்றும், ஒவ்வொருத்திக்கும் தனித்தனியே நல்ல கணவன் அமைய வேண்டுதலின் "*நின் அன்பர்*" என்றும் பன்மையிற் பகர்ந்தார். இஃது இம்மையின்பம் வேட்டலைக் குறித்து நின்றது.

எம்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க - செய்யும் தொழில்கள் அனைத்தும் சிவன் பணியாகில் அவை பதி புண்ணியங்களாகி, வரும் பிறவிகளில் ஆன்ம முன்னேற்றம் அளிக்கும். ஆதலின் இது மறுமையின்பம் வேட்டலைக் குறித்து நின்றது.

எம் கண் கங்குல் பகல் மற்று ஒன்றும் காணற்க - இரவும் பகலும் சிவபெருமான் திருவுருவன்றி வேறு ஒன்றும் காணாத நிலை எய்தின் அது சீவன் முத்த நிலையாகும். இஃது இம்மையிலேயே வீட்டின்பம் வேட்டு

உடல் வீழ்ந்தபின் முத்தியெய்தலே வேட்டவாறு. முன்னம் போற்றித் திருவகவல் 150-ல் "**கண்ணார் அமுதக் கடல்**" என்றதன் உரையில் எடுத்தாண்ட திருக்கழுமல மும்மணிக்கோவை; சிவஞான சித்தியார் பாடல்கள் பார்க்க, முன்னம் 163-ம் திருப்பாட்டில் "அன்னவரே எம் கணவர் ஆவார்; அவர் உகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்" என்று உடன்பாட்டில் அருளிச் செய்தவற்றையே ஈண்டு எதிர்மறையில் அருளிச் செய்வது, இவ்வரங்கள் மிக இன்றியமையாதவை என்று வலியுறுத்தற் பொருட்டு. கண்ணுக்குக் கூறியதை இனம் பற்றி ஏனைய பொறி புலன் கரணங்களுக்கும் புணர்ந்து அவையனைத்தும் நின் தொண்டுக்கே பயன்படுவனவாக அருளவேண்டும் எனக்கொள்க. **காண்டல்** - நுகர்தல் என்று பொருள் கொண்டு "இரவும் பகலும் நாங்கள் சிவானந்தத்தையே நுகரும்படி அருள் பாலிக்க வேண்டும்" எனக் கொள்ளலுமொக்கும். இச்சொல் இப்பொருளில் வருவதை சிவஞான போதம் சிறப்புப் பாயிரத்தில் "பெரும் பெயர்க் கடவுளிற் கண்டு" என்ற பகுதிக்கு மாபாடியம் உரை வகுப்பதிற் காண்க.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"நனவிலுங் கனவிலு நாளுந் தன்னொளி
நினைவிலு மெனக்குவந் தெய்து நின்மலன்
கனைகடல் வையகந் தொழுக ருக்குடி
அனலெரி யாடுமெ மடிகள் காண்மினே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 3-21-1)

என்பது நம் பிள்ளையார் திருவாக்கு நினைக.

இவ்வாறு காண்பன எல்லாம் சிவதரிசனமாயும் கைகள் செய்வன எல்லாம் சிவன் பணியாயும் அமையின் அஃது ஏக நாயக வழிபாடேயாம். அதனையே, "சம்ஸார துக்க நாச முத்திப் பேற்றின் பொருட்டு விஷ்ணு முதலான எல்லாத் தேவர்களையும் விட்டுத் தியானயோயனாகவுள்ள சிவனையே தியானிக்க வேண்டும்" என்று சரபோபநிஷத் கூறுவதும் காண்க.

இங்கு இப்பரிசே எமக்கு எம்கோன் நல்குதியேல் - **இங்கு** - இவ்வுலகில்; இந்தப் பிறப்பில்; **இப்பரிசே** - நாங்கள் வேண்டிக் கொண்ட "எம் கொங்கை நின் அன்பரல்லாதார் தோள் சேராமையும்; எம் கைகள்

உனக்கல்லாது எப்பணியும் செய்யாமையும்; எம் கண்கள் கங்குல் பகல் மற்றொன்றும் காணாமையுமான இவ்வண்ணமே." *பரிசே* - ஏகாரம் தேற்றம். **எம்கோன்** - நீ எங்களை அடிமை கொண்ட அரசனாதலின் நாங்கள் உன்னையன்றிப் பிறரிடம் வேண்டும் உரிமையற்றவராவோம் என்ற உரிமையையும் அடிமைகளின் வேண்டுகோளைச் செவிமடுத்தல் தலைமைப் பண்பாகும் என்பதையும் குறிப்பில் செய்தவாறு காண்க. **நல்குதியேல்** - அடிமைகள் தங்கள் குறைகளைத் தலைவனிடம் கூறி முறையிட்டுக் கொள்ளும் உரிமை மட்டும் உள்ளவர்கள். அக்குறைகளைக் களைவதும் களையாது விடுவதும் தலைவனின் விருப்பம். ஆதலின் ஈண்டு **நல்குதி** என்னாது **நல்குதியேல்** என்றருளினார். துன்பத்தால் வருந்தும் உயிர்கள் துன்ப நீக்கம் பொருட்டு இறைவனிடம் வேண்டிக் கொண்ட பின்பும் அவ்வுயிர்களின் மலபரிபாகம் கருதி மேலும் சிலகாலம் துன்புறும் பொருட்டு இறைவன் அப்பொழுது அருள்புரியாது விடுதல் அவ்வுயிர்கள் மாட்டுள்ள அருள் காரணமாக என்பது மனங்கொள்க. ஈண்டு அவ்வாறன்றி மலபரிபாகம் எய்தி விட்டோம் என்று திருவுள்ளம் பற்றி நாங்கள் கேட்ட வண்ணம் அருள் பாலிப்பாயாகில்-என்றவாறு.

ஞாயிறு எங்கு எழில் என் எமக்கு - இது, கவலையற்றோர் கூறும் ஒரு சொற்றொடர். கதிரவன் திசைமாறித் தோன்றுதல் முதலியன இயற்கைக்கு மாறான செயல்கள். அவை நிகழின் உலகிற் பெருங்கேடுகள் நிகழுவது திண்ணம். அத்தகைய கேடுகள் நிகழினும் நாங்கள் சீவன்முத்த நிலையை எய்தி விடுதலின் அவை எம்மைப் பாதியா என்றவாறு. இந்நிலையை;

திருச்சிற்றம்பலம்

"வெம்பவரு கிற்பதன்று கூற்ற நம்மேல்
வெய்ய வினைப்பகையும் பைய நையும்
எம்பரிவுந் தீர்ந்தோ மிடுக்க ணில்லோம்
எங்கெழிலென் ஞாயி றெளியோ மல்லோம்
அம்பவளச் செஞ்சடைமே லாறு சூடி
அனலாடி யானஞ்சு மாட்டு கந்த
செம்பவள வண்ணர்செங் குன்ற வண்ணர்
செவ்வான வண்ணரென் சிந்தை யாரே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-95-2)

"புண்ணியமே னேக்குவிக்கும் பாவங்கீ ணூக்கும்
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தி னலே
நண்ணியஞா னத்தி விரண்டினையு மறுத்து
ஞாலமொடு கீழ்மேலு நண்ணு னகி
எண்ணுமிக லோகத்தே முத்திபெறு மிவன்ருன்
எங்கெழிலென் ஞாயிறெமக் கென்றுகுறை வின்றிக்
கண்ணுதற னிறைவதனிற் கலந்து காயங்
கழிந்தக்கா லெங்குமாய்க் கருதரன்போ னிற்பன்"

(சிவஞானசித்தியார் - சுபக்கம் சூத்-8. அதி.2- செய் - 31)

"பிட்டுவிற் றுண்டு வாழும்
பேதையே னிடும்பை யென்ப
தெட்டுணை யேனு மின்றி
இரவியெங் கெழுகென் றிந்நாள்
மட்டுநின் னருளா லிங்கு
வைகினேற் கின்று வந்து
விட்டதோ ரிடையூ றைய
மீனவ னூணை யாலே"

(திருவிளையாடற் புராணம் மண் சுமந்த படலம் - 11)

என்பவற்றிற் காண்க.

இத்திருப்பாடலின் இப்பகுதியை, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த Dr. G.U. Pope M.A. அவர்கள். "Our King, if here this boon Thou grant, to us the sun in perfect beauty shines (எங்கள் அரசே இங்கு எங்களுக்கு இவ்வரம் நல்குவாயாகில் கதிரவன் முழு அழகில் ஒளிர்வன்) என்று மொழிபெயர்த்தார். எழில் என்ற சொல்லை "அழகு" என்ற பொருளில் கொண்டதால் இப்பிழை நேர்ந்தது. அதிலும் இறைவன் இம்மகளிர்க்கு இவ்வரங்களை நல்குவதற்கும் செங்கதிரோன் குறைவற்ற அழகுடன் ஒளிர்வதற்கும் என்ன தொடர்பு என்பதை மனங்கொண்டாரல்லர். நீராடியபின் திருக்கோயிலுள் வந்து வழிபடும் பெண்கள் திருவெம்பாவை உற்சவத்தில் வழிபட்டதன் பயனாக இறைவனிடம் வரம் வேட்டலாக இத்திருப்பாடல் அமைந்துள்ளது.

இத்திருப்பாடலில்; பெண்கள், கங்குலும் பகலும் சிவபெருமான் திருவுருவம் ஒன்றை மட்டுமே காணவேண்டும் என்று வரம் வேண்டுகின்றனர். சிவபெருமானுக்குத் தனியாக ஒரு வடிவமில்லை. அவன் அடியார்களுக்குக் காட்சிதரத் தாங்கும் வடிவங்களனைத்தும் அவன் பேரருளே. அவ்வருள் உமையம்மையாக உருவகம் செய்யப்படுவது. ஆதலின் ஈண்டுச் "*சத்தியை வியந்தது*" பெற்றும்.

174. போற்றி யருளகநின் ஞதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி யெல்லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கு மீறு மிணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணுத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய் உ௦

(இ - ள்)

எங்கள் பாவை போன்ற பெண்களே! நான் கூறுவனவற்றை ஆராய்ந்து ஏற்றுக் கொள்வீர்களாக; "எங்கள் அரசனே; எங்களைப் பாதுகாத்து எப்பொருட்கும் முதலாகிய நின் திருவடிகளை அருள்வாயாக; எங்களைப் பாதுகாத்து எப்பொருட்கும் முடிவாகிய நின் திருவடிகளை அருள்வாயாக; எல்லா உயிர்களும் படைப்புக்கு வர ஏதுவாகிய பொன் போன்ற திருவடிகள் எங்களைக் காத்தருள்க; எல்லா உயிர்கட்கும் நுகர்தற்குரிய காப்பாகும் அழகிய திருவடிகள் எங்களைக் காத்தருள்க; எல்லா உயிர்கட்கும் ஒடுக்கத்துக்கு ஏதுவாகிய இரண்டு திருவடிகளும் எங்களைக் காத்தருள்க; திருமாலும் அயனும் காண இயலாத திருவடிகள் எங்களைக் காத்தருள்க; நாங்கள் அனைவரும் உய்யும் வண்ணம் அடிமை கொண்டு இன்பம் நல்கும் பொற்றாமரை போன்ற திருவடிகள் எம்மைக் காத்தருள்க; நாங்கள் மேற்கொண்டுள்ள இந்த மார்கழி நீராடலைக் காத்தருள்க!

(வி - ரை)

இத்திருப்பாடலே, "எம் பாவாய்! ஓர்:ஏல்; (எங்கோன்); போற்றி ஆதியாம் நின் பாதமலர் அருளுக; போற்றி அந்தமாம் நின் செம்தளிர்கள் அருளுக; எல்லா உயிர்க்கும் தோற்றம் ஆம் பொன்பாதம் போற்றி; எல்லா உயிர்க்கும் போகமாம் பூம்கழல்கள் போற்றி; எல்லா உயிர்க்கும் ஈறு ஆம் இணையடிகள் போற்றி; மால் நான்முகனும் காணுத புண்டரிகம் போற்றி; யாம் உய்ய ஆட்கொண்டு அருளும் பொன்மலர்கள் போற்றி; யாம் ஆடும் மார்கழி நீர் போற்றி" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

எங்கோன் - விளி. இத்திருப்பாட்டில் சிவபெருமானின் திருவைந் தொழில்கள் கூறப்படுதலின், அவற்றுக்கேற்ப 173-ம் திருப்பாட்டில் கூறிய ***எங்கோன்*** என்பதை ஈண்டும் வருவித்துக் கொள்க.

போற்றி நின் ஆதியாம் பாதமலர் அருளுக - போற்றி - "போற்றி" என்னும் சொற்கள் இத்திருப்பாடலில் எட்டுமுறை வந்துள்ளன. முதலிரண்டுமுறை வரும் சொற்களே வினையெச்சங்களாகக் கொண்டு "பாதுகாத்து அருளுக" என முடித்துக் கொள்க. ஏனைய ஆறிடங்களிலும் இகர வீற்று வியங்கோள் வினைமுற்றுக்களாகக் கொள்க. ***ஆதியாம் - ஆதி*** - பேரூழியின் பின்னர் நிகழும் புனருற்பவத்தில் சிவபெருமான் சுத்த மாயையிலுள்ள புவனங்களேயும், ஆங்குள்ள ஆன்மாக்களுக்கான தனு கரண போகங்களேயும் தான் நேரே தோற்றுவிக்கின்றுன். ஆதலின் அவை அனைத்துக்கும் முன்னிருப்பவன். எனவே ***ஆதியாம்*** என்றுர். ***நின் பாதமலர்*** - அவ்வாறு தோற்றுவிப்பது இறைவனின் திருவருட் சத்தியாகும். அஃதீண்டு திருவடிகளாக உருவகம் செய்யப்பட்டது. பேரூழியின் பின் மாயேயங்கள் அனைத்தும் மாயையுள் ஒடுங்க, மாயை இறைவன் திருவடிகளின் அவன் வைப்புச் சத்தியாக நிற்கும். புனருற்பவத்தில் அம்மாயையினின்றும் அனைத்தும் தோன்றும். ***அருளுக*** - அத்துணைப் பெருமை வாய்ந்த நின் திருவடிகளே எங்களுக்கு வழங்க வேண்டும் என்றவாறு. புவனுதிபதிகளின் ஆட்சிக்குட்பட்டு பிரகிருதி மாயையில் உழலும் சகலர்களாகிய எங்களேச் சோபான முறையில் சுத்த மாயாபுவன வாசிகளாக நின் திருவருளின் நேர்முக ஆட்சிக்கு உயர்த்திக் காலப்போக்கில் வீடருள்க என்பது குறிப்பு.

இத்திருப்பாடலில் ***போற்றி*** என்ற சொல் எட்டுமுறை வருவது சிவபெருமானின் அட்ட மூர்த்தங்களை அருச்சித்தவாறு என்றும் அட்டபுட்பாஞ்சலி என்றும் கொண்டனர் முன்னுரையாளரில் சிலர்.

அந்தமாம் நின் செந்தளிர்கள் - அந்தம் ஆம் - ஈறுகவுள்ள; முடிவைச் செய்கின்ற. பேரூழியைக் குறிப்பதன் வழி மேற்குறித்த சுத்த மாயா புவனங்களையும் ஆண்டுள்ளோர் தனு கரண போகங்களையும் சிவபெருமான் நேரேநின்று ஒடுக்குவது குறித்தது. ***செம் தளிர்கள்*** - செம்மை; ஈண்டுத் திருவடிகளின் வண்ணமும் திருத்தமும் குறித்தது. செடியின் தளிர்கள் செம்மையும் பசுமையும் கலந்த வண்ணமுள்ளமையும், இறைவன் திருவடிகள் இனித் திருத்தம் வேண்டாது செம்மையாக உள்ளமையும் நினைக. தம்மை அடைந்த ஆன்மாக்களை மாசு நீக்கிச் செம்மையாக்கும் திருவடிகள் எனலுமாம்; ஒரு செடியில் முதலில் தளிர்கள் தோன்றும் பின்னர் மலர்கள் தோன்றும். ஈண்டு, பேரூழியைச் செய்யும் திருவடிகளைத் ***தளிர்கள்*** என்றது அடுத்துப் புனருற்பவம் நிகழவுள்ள குறிப்புமாம். ***அந்தம்*** - வீடுபேறு எனலுமாம்.

இறைவன் திருவடிகளே ஆதியும் அந்தமுமாயுள்ள உண்மையை;

திருச்சிற்றம்பலம்

" ஓதிய ஞானமும் ஞானப் பொருளு மொலி சிறந்த
வேதியர் வேதமும் வேள்வியு மாவன விண்ணுமண்ணும்
சோதியுஞ் செஞ்சுடர் ஞாயிறு மொப்பன தூமதியோ
டாதியு மந்தமு மானவை யாற னடித்தலமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4-92-17)

எனவரும் நம் அரசுகளின் அமுத வாக்கிற் காண்க. சிவஞான போதம் முதற் சூத்திரம் நினைக.

எல்லா உயிர்க்கும் தோற்றம் ஆம் பொற்பாதம் - ஆன்மாக்கள் அனைத்தும் படைப்புக்கு வர அருள்பாலிக்கும் பொன் போன்ற திருவடிகள். ***எல்லா உயிர்க்கும்*** என்றதனால் சுத்த மாயா புவனங்களில் உள்ள ஆன்மாக்களை மேற்கூறியவாறு இறைவன் தானே நேரில் நின்று படைத்தல்

முதலியன செய்தும்; அசுத்தமாயா புவனங்கள், பிரகிருதி மாயா புவனங்களிலுள்ள ஏனைய உயிர்களை அனந்த தேவர் முதல் புவனாதிபதிகளாகிய நான்முகன் முதலியோர் முடியவுள்ளவர்களை நேரேயும், பரம்பரையாக அதிட்டித்து நின்றும் படைத்தல் தொழில் முதலியன செய்தல் குறித்தது. *பொற்பாதம்* - பொன் போன்ற திருவடிகள். உவமைத் தொகை. *பொன்*- இயல்பாகவே களிம்பற்றுள்ளது, இயல்பாகவே பாசங்களினீங்கிய இறைவன் திருவடிகளுக்கு உவமையாயிற்று.

போகம் ஆம் பூம் கழல்கள் - ***போகம்*** - வினைப்பயன் நுகர்ச்சி. ஆன்மாக்கள் தாங்கள் எடுத்த ஒரு பிறவியில் நுகர்வதற்காக முகந்து வந்த பிராரத்த வினை முழுவதையும் நுகர்ந்து கழிக்கும் வரை அவ்வவ்வுயிர்கள் தத்தம் உடல்களை விட்டுப் பிரிந்து விடாமல் காப்பது இறைவனின் திருவருட்சக்தி. ஆதலின், ஈண்டும் **போகம்** காத்தல் தொழிலைக் குறித்து நின்றது. ***பூம்கழல்கள்*** - அழகிய பாதங்கள்; தாமரை மலர் போன்ற பாதங்கள் எனலுமாம். ***கழல்கள்*** ஈண்டுத் தானியாகு பெயராகத் திருவடிகளை உணர்த்தி நின்றன. ***கழல்கள்*** - வெற்றியின் சின்னங்கள். ஈண்டு, ஆன்மாவை அதன் ஆயுள் முடியுமுன் அழிக்கவரும் ஏனைய நிகழ்ச்சிகளுக்கு எதிராக நின்று அவற்றைப் புறங்காணும் வெற்றி.

ஈறு ஆம் இணையடிகள் - ***ஈறு ஆம்*** - பிறவியின் ஆயுள் முடிந்தபின் எய்தும் மரணத்தையும், பேரூழி தவிர ஏனைய ஊழிகளையும் குறித்து நின்றது. ***இணை யடிகள்*** - தங்களுள் ஒன்றுக்கு மற்றொன்றே இணையாக உள்ள இரண்டு திருவடிகள். முன்னம் போற்றித் திருவகவல் 9-ல் "அடியிணைகள்" என்றதன் கீழுரைத்தவை காண்க.

மால் நான்முகனும் காணாத புண்டரிகம் - *மால்* - *திருமால்* - மாலும் என உயர்வு சிறப்பும்மை விரித்துக் கொள்க. *நான் முகனும்* - அயனும். நான்கு திசைகளிலும் தன் தலையைத் திருப்பாமல் ஒரே சமயத்தில் காண நான்கு முகங்களைக் கொண்டிருந்தும், இருளிலும் காணத்தக்க ஒளி மலையாக நின்ற இறைவனைக் காண முடியாத அயனும். உம்மை- இழிவு சிறப்பு. *காணாத*- இருந்த இடத்திலேயே பார்க்க நிற்கும் ஒளியோங்கலைப் பன்றியாய் அகழ்ந்தும் பறவையாய் உயர்ந்தும் பல்லூழி முயன்றும் காண இயலாத.

திருவைந் தொழில்களில் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றும் மாயேயங்கள் மாட்டு நிகழ்வன. "மறைத்தலும்", "அருளலும்" உயிர்கள் மாட்டு நிகழ்வன. அவற்றுள் "மறைத்தல்" உயிர்கள், தங்கள் வினைகள் முடியும் வரை உண்மையை அவை அறியாமல் மறைத்து வினைப்பயனுகர்ச்சியில் ஈடுபடச் செய்து மயங்க வைத்தல். அம்மயக்கம் திருமால், அயன் முதலியோர்க்கும் உண்டு என்பதை உணர்த்த வேண்டி "***போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்***" என்று மறைத்தல் தொழிலை வலியுறுத்தினர். ***புண்டரிகம்*** - "புண்டரீகம்" எனும் வடசொல்லின் தமிழ்வடிவம். அது வெண்டாமரையின் பெயர். செந்தாமரைக் கண்ணனைப் "புண்டரீகாட்சன்" என்பது போல ஈண்டுச் செந்தாமரை என்ற பொருளில் இறைவன் திருவடிகளைக் குறித்து நின்றது. உருவக அணி.

யாம் உய்ய ஆட்கொண்டு அருளும் பொன் மலர்கள் - திருவைந்தொழிலில் ஈற்றினதாகிய "அருளல்" ஈண்டு வலியுறுத்தப் படுகின்றது. ***யாம்*** - திருவெம்பாவை உற்சவத்தில் கலந்து கொண்ட பெண்களாகிய நாங்கள். ஈண்டு, வீடுபேறு அவாவி நிற்கும் ஆன்மாக்களனைத்தையும் குறித்து நின்றது. ***உய்ய*** - மலங்களின் கட்டு ஒழிந்து இனிப் பிறப் பிறப்புக்களில் செல்லாது வீடு பேறெய்தும் வண்ணம். ***ஆட்கொண்டு*** - அடிமையாகக் கொள்ளும் வழியில் தவநெறியில் நிறுத்தி ***அருளும்*** - வீடுபேறு நல்கும். ***பொன் மலர்கள்*** - பொன்னாலாகிய தாமரை மலர்கள் போன்ற திருவடிகள். ***பொன்*** - அழகிய எனலுமாம்.

இத்திருப்பாடலில், திருவைந் தொழில்கள் வலியுறுத்தப்பட்டன. அவை சிவபெருமான் ஒருவனுக்கே உரியன. அவ்வுண்மையை, "ஸர்வஜ்ஞ: பஞ்சக்ருத்ய ஸம்பந்நஸ் ஸர்வேச்வர ஈச: பசுபதி - (இதன் பொருள்:- முற்றுணர்வினனும் திருவைந் தொழிற் றிருவினனும் முழுமுதற் கடவுளும் ஈசனுமான பசுபதி) என்று ஜாபாலிய உபநிடதம் அறுதியிட்டுரைப்பது காண்க.

இத்தொழில்கள் ஐந்தையும் இறைவன் உயிர்கள் மாட்டுள்ள பேரருளால் ஓயாமல் இயற்றிக் கொண்டுள்ளான். இவற்றுள் அருளல் ஒழிந்த ஏனைய நான்கும் உயிர்களைப் பிறப்பிறப்புக்களிற் செலுத்தித் துன்புறுத்துவன. அவன் அவற்றை இயற்றுதல் அருளாமாறு யாங்ஙனம் எனின்; உரைத்தும்.

கேவல நிலேயில் கிடந்த உயிர்களுக்குத் தனு கரண புவன போகங்களே நல்கி, வினைகளைச் செய்வித்து அவற்றின் பயனாக இன்ப துன்பங்களை நுகர்விப்பதால் சிறிது சிறிதாக அறிவு விளக்கம் பெற்று மல பரிபாகம் வரச்செய்யும் படைத்தல் அருளாகும். பிறவிக்கு வந்த உயிர், பிராரத்த வினைப்பயன் முழுவதும் நுகருமுன் மரணமெய்தின் அந்தப் பிறவியில் மீதமிருக்க வேண்டிய காலத்தின் பயன் அவ்வுயிருக்கு இன்றாம். அவ்வாறாகாமல் விதிக்கப்பட்ட ஆயுள் எல்லை வரையும் மரணம் வராமல் காப்பதும் அருள். பிறப்பிறப்பில் ஓயாது உழலும் உயிரை ஊழிக்காலத்தில் ஒடுக்கிப் புனருற்பவம் வரையில் இளைப்பாறச் செய்வதும் அருள். உயிர், வினைப் பயன்களை நுகர்வுழி வருங்கால நிகழ்ச்சிகளால் எய்தவுள்ள துன்பங்களை முன்பாகவே அறிந்து துன்புறாமல் அவற்றை மறைத்துவைத்துப் பின் நுகர்வித்துக் கழியச்செய்வதும் அருள் என்க. இவ்வுண்மையை,

"அழிப்பிளைப் பாற்ற லாக்கம்
அவ்வவர் கன்ம மெல்லாங்
கழித்திட நுகரச் செய்தல்
காப்பது கன்ம வொப்பில்
தெழித்திடன் மலங்க ளெல்லா
மறைப்பருட் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு
பார்த்திடி னருளே யெல்லாம்"

(சிவஞான சித்தியார் சுபக்கம் சூ.1-அதி - 2-செய் - 37)

என நம் ஞான சாத்திரம் நவில்வது காண்க.

யாம் ஆடும் மார்கழி நீர் போற்றி - திருவெம்பாவை உற்சவம் வைகறையில் துயிலுணர்தலும், ஒத்த கருத்தினர் ஒருங்கிணைந்து ஒப்பற்ற இறைவன் புகழ்களைப் பாடியவாறு சென்று பொய்கையில் நீராடுதலும், பின்னர் திருக்கோயிலினுட் சென்று இறைவனை இறைஞ்சி இம்மை, மறுமைப் பயன்களும், வீட்டின்பமும் வேண்டுதலுமாம். இவற்றுள் முடிமணியாக ஒளிர்வது நடுவணுள்ளதான நீராடலேயாம். அங்ஙனம் நீராடற்காக வைகறையில் துயிலுணர்ந்து உன் பொருள்சேர் புகழ்களைப் பாடிப் பரவினோம்; அஃதோர் சிவபுண்ணியம். ஒத்த கருத்துள்ள பலர்

ஒருங்கிணைந்து உன்னை இசையால் பரவியவாறே ஏனைய தோழியரையும் துயிலுணர்த்தி எங்களுடன் இணைத்துக்கொண்டு பொய்கையை நண்ணினோம்; இஃது அடியார் கூட்டமணைவதாகிய மற்றோர் சிவபுண்ணியம். பொய்கையின் புனற்பரப்பை நீயும் நின் திருவருளுமாகிய அம்மையப்பனாகவே கண்டு பாடியவாறு நீராடினோம்; இஃது இன்னுமோர் சிவபுண்ணியம்; நீராடிக் கரையேறியபின் சீவன்முத்தர்களை உன் கோயிற் பிணாப்பிள்ளைகள் வடிவிற் கண்டு உன்னை எய்தும் வழியை உசாவி நெறிப்படுத்தப்பட்டோம்; இது மிக மேலான சிவ புண்ணியம். இப்புண்ணியங்களின் பயனாக உன் திருமுன் நின்று போற்றி வரம் வேண்டுகின்றோம். இத்துணைச் சிவபுண்ணியங்களையும் எளியோம்களாகிய எங்கட்கு ஒருங்கே நல்குவது, இந்த மார்கழி நீராடலாகிய உண்மைச் சரியையே. இனிப் பிறக்க உள்ள உயிர்களில் சிவநெறிச் செலவாகிய நல்லூழ் பெற்ற உயிர்கள் அனைத்தும் இம் மார்கழி நீராடலை மேற்கொண்டு நற்கதியடைதல் வேண்டும்; அதற்காக இம்மார்கழி நீராடல் நிகழ்ச்சி சைவ உலகில் என்றென்றும் நிலை பெற்றிருக்கும்படி நீ அதனைக் காத்தருள்வாயாக- என்று பிரார்த்தனை செய்தவாறு.

திருவெம்பாவை உற்சவ நிகழ்ச்சிகளை விளக்கிப் பரவும் திருவாசகத்தில் இப்பகுதி மேற்குறித்தவாறு ஐந்து பிரிவுகள் கொண்டது. அவற்றுள் முதற்பாடல் தோற்றுவாயாக அமைந்துள்ளது. அதில் - “ஆதியும் அந்தமும் இல்லாளை”ப் பாடிக் காப்புச்செய்துகொள்ளல் காண்க.

பாடல் இரண்டு முதல் எட்டு முடிய உள்ள பகுதிகள் இறைபுகழை இசைத்தவாறே வீதியில் நடந்து சென்று ஒத்த கருத்துடையோரையும் துயிலுணர்த்தித் தங்களுடன் இணைத்துக் கொண்டு பொய்கையை அடைதல்.

பாடல் 9 முதல் 18 முடிய உள்ள பகுதிகள் பொய்கையிற் புனலாடலும் புனலாடி முடித்த கோயிற் பிணாப்பிள்ளைகள்மாட்டுப் பிஞ்ஞகன் பெற்றியும், அவனை ஏத்தி உய்யும் நெறியும் உசாவுதல்.

பாடல் 19 - இறைவன் திருமுன்னர் நின்று வரம் வேண்டுதல்.

பாடல் 20 - வழிபாடு முற்றிய வழி மங்களம் பாடி நிறைவு செய்தல் - என அமைந்திருத்தல் கண்டின்புறுக.

இத்திருப்பாடலில் உள்ள எட்டு அடிகளில் ஏழு அடிகளில் இறைவன் திருவடிகளைப் பாதமலர்; செந்தளிர்கள்; பொற்பாதம்; பூங்கழல்கள்; இணையடிகள்; புண்டரிகம்; பொன்மலர்கள் என வழுத்தினர். இறைவன் திருவடி அவன் சத்தியேயாகும்; எட்டாம் அடியில் மார்கழி நீராடலைப் பாதுகாத்தருளும்படி வேண்டி நிறைவு செய்கின்றார். அவ்வாறு காப்பதும் சத்தியேயாகும். எனவே, இவ்விறுதிப் பாடல் முழுவதும் "*சத்தியை வியந்தது*" காண்க.

தொகுப்புரை:

ஒவ்வோராண்டும் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளை அந்தமாகக் கொண்டு பத்து நாள் நிகழும் திருவெம்பாவை விழாவில் சிவ நெறியாளர் நாள்தோறும் வைகறையில் துயிலுணர்ந்து சிவபெருமானின் பொருள்சேர் புகழ்களை இசையால் பரவுதல் வேண்டும். சிவனடிமைத் திறத்தில் தோய்ந்தோர், பாடுவோருக்கு முன் பழக்கமில்லாதவராயினும் அவ்விசையால் பரவசமாதல் இயல்பு. பாடுவோர் இறைவனை இன்னிசையால் பரவியவாறே நீராடும் பொய்கை முதலிய நீர்நிலைகளை நோக்கித் தெருவழியே செல்வர். வழியில் ஒத்த கருத்துடையோர் இல்லங்களில் உள்ளோரையும் துயிலுணர்த்தி உடன் கொண்டு செல்வர். சைவநெறியில் புதிதாக வந்து சேர்ந்தோரின் குறைகளைக் களைந்து அணைத்துச் செல்லல் பழைய சிவனடியார்களின் பண்பு. சிவ வழிபாட்டில் ஈடுபட்டுள்ள நேரத்தில் பரிகாசம், எள்ளி நகையாடல் முதலியன முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியன. சிறந்த சிவனடியார்கள், அடியார்களின் அக இலக்கணம் பத்தும், புற இலக்கணம் பத்தும் கொண்டு திகழ்வர். வைகறையில் துயிலுணரினும் மார்கழித் திங்கள் குளிரும் உடற்சோர்வும் மேலும் சிறிது நேரம் மஞ்சத்தில் படுத்திருக்கத் தூண்டும். அவ்வுணர்வை உதறிவிட்டு எழுதல் வேண்டும். சிவபெருமான், திருமாலும் அயனும் காணாத பெருமையன். அவன் புகழ்களை ஒலிக்கும் சின்னங்களே அடியார் உள்ளங்களை உருக்குவன. அவன் எப்பொருட்கும் முற்பட்டவன். இனி வரவுள்ள பொருள்களின் புதுமைக்கும் புதியவன். அவன் சொரூப நிலை சொல்லொணாதது. அவன் அணுக்கத் தொண்டர்கள், அவனை அடையும்வழி காட்ட வல்லவர். நீராடும் பொழுது இறைவன் புகழ்களை இன்னிசையால் பரவிய வண்ணம்

நீராடும் புனல்பரப்பை அவனுகவும் அவன் திருவருளாகவும் பாவித்து நீராடல் மேலோர் செய்கை. மழை உலக வாழ்வுக்கும், திருவருள் உயிரின் உய்திக்கும் இன்றியமையாதவை. திருமால், அயன் முதலிய பெருந்தேவர்கள் பெருத பேரின்பத்தைச் சிவபெருமான், தானே அடியார்களைத் தேடிவந்து அவர்கள் இதயங்களில் கோயில் கொண்டு அவர்களுக்கு நல்கி அருள் பாலிப்பன். சிவநெறிச் சேயிழையர் சிவநேசச் செல்வர்களையே திருமணம் செய்து கொள்ள விரும்புவர். சிவபெருமான் திருவடிகளே திருவைந் தொழில்கள் புரிவன.

திருவெம்பாவை விழாவின் ஓர் அங்கமாகத் திகழும் மார்கழி நீராடல் இவ்வுலகில் என்றும் நிலைத்திருக்கும் வண்ணம் அத்திருவடிகள் காத்தருள வேண்டும் என்று பிரார்த்தனை செய்வது சைவப் பெருமக்களின் கடமை.

தலவி சேடம் - திருவண்ணுமலை - முன்னம் போற்றித் திருவகவல் *149-ல் "அண்ணுமலை எம் அண்ணு"* என்றதன் கீழுரைத்தாம்.

- திருச்சிற்றம்பலம் -


உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

7. திருவம்மானை


திருவண்ணாமலையில் அருளியது
(ஆனந்தக்களிப்பு)

அம்மானை என்பது மகளிர் விளையாட்டுக்களுள் ஒன்று. இதிற் பாடப்படும் இசை தழுவிய பாட்டு அம்மானைப் பாட்டு. இஃது அரசர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் போன்றோரைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு அமையும் சிற்றிலக்கியம். நாம் காணும் இந்தச் சிற்றிலக்கியத்தில் மிகத் தொன்மையானது சிலப்பதிகாரம் 29 வாழ்த்துக் காதையில் உள்ள "அம்மானை வரி" என்ற பகுதியாகும். அம்மானை அமைப்புக்கள் முழுவதும் பொருந்த இதனை இயற்றிய பெருமை இளங்கோவடிகளுக்காகும். பின்னாட்களிற் பெண்பாற் பிள்ளைத் தமிழ் நூல்களில் "அம்மானைப் பருவம்" என ஒரு பகுதியமைத்து இரட்டையாசிரிய விருத்தங்களாகவும் அவற்றுள் சில சந்த விருத்தங்களாகவும் புலவர் பெருமக்கள் பாடலாயினர். ஈண்டுச் சிவபெருமானை வழுத்தும் பாடல்களாக இருத்தலின் "திரு" என்றும் அடை புணர்க்கப்பட்டது.

வெண்கலம் அல்லது வெள்ளியால் உள்ளீடில்லாது செய்யப்பட்ட மூன்று பந்துகளுள் பரல்களை இட்டுச் செய்யப்பட்ட அம்மானைக் காய்களை ஒருத்தி தன் கையிலேந்தி அமர்ந்து, பாடியவண்ணம் ஒரு காயைத் தன் நெற்றியளவு உயரம் மேலே செல்லும்படி வீசி, அது கீழே வரும் பொழுது தன் கைகள் ஒன்றிலுள்ள காயை மேலே செலுத்தி விட்டு முதலிற் செலுத்திய காயைத் தன் கையில் ஏற்பள். இவ்வாறு ஒவ்வொன்றாக மேலும், மற்றவை இருகைகளிலும் உள்ளவாறு மாறி மாறிச் சுழன்று வரும் வகையில் ஒரு குறிப்பிட்ட நேரம் வரை ஆடுவள். பின் அவள், அவற்றை அடுத்தவளிடம் தர, அவள் ஆட்டத்தைத் தொடர்வள்.



திருஅண்ணாமலை வெற்பு



திருவண்ணுமலை - திருக்கோயில் முழுத்தோற்றம்

அண்மைக்காலம் வரை இவ்விளையாட்டு அந்தணர், சைவர் இல்லங்களில் திருமண நிகழ்ச்சிகள், நவராத்திப் பண்டிகை முதலியவற்றில் இடம் பெற்றுவந்தது. இன்று சில இல்லங்களில் அம்மானைக் காய்கள் மட்டும் நினைவுச் சின்னங்களாக உள்ளன. சிவ வழிபாடாகிய இவ்விளையாட்டு மீண்டும் புதுப்பிக்கப்பெறல் வேண்டும்.

நம் அடிகள், தலயாத்திரையாகத் திருப்பெருந்துறையினின்றும் தில்லை செல்லும் செலவில், திருவண்ணமலையில் வழிப்பட்டுத் திருவெம்பாவையை அருளிச் செய்து அங்குச் சில நாள் தங்கியிருந்த காலத்தில் இளம் பெண்கள் தங்கள் இல்லங்களில் இவ்வம்மானை விளையாட்டில் ஈடுபட்டிருந்ததைக் கண்டு, அவர்கள் பாடுவனவாக இப்பாடல்களை அருளிச் செய்தார்.

அந்தணர்கள், சைவர்கள் வாழும் இல்லங்களில் இளம் பெண்கள் இவ்விளையாட்டில் ஈடுபட்டு அம்மானைப் பாடல்களில் புரிசடையோன் பொருள் சேர் புகழ்களையே அமைத்துப் பாடும் வழக்கம் நம் அடிகள் காலத்துக்குப் பின் தேவார காலத்திலும் தொடர்ந்தது. அதனை;

திருச்சிற்றம் பலம்

“பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுடைய
மலைச்செல்வி பிரியாமேனி
அருந்தகைய சுண்ணவெண்ணீ றலங்கரித்தா
னமரர்தொழ வமருங்கோயில்
தருந்தடக்கை முத்தழலோர் மனைகடொறு
மிறைவனது தன்மைபாடிக்
கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப்
பாட்டயருங் கழுமலமே”

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 1-129-2)

எனவரும் பிள்ளையார் திருவாக்காலறிக.

இப்பகுதிக்கு நம் முன்னோர் "*ஆனந்தக்களிப்பு*" என்று கருத்துரை அமைத்தனர். முந்தைய பகுதியில் நீராடிய பெண்கள் தாங்கள் வேட்டவண்ணம் விரிசடையோன் அருளில் "எங்கெழில் ஞாயிறு" என்று தாங்கள் எய்தும் பேரானந்த நிலை குறித்தனர். அவ்வானந்தத்தால் வரும் பெருங்களிப்பே "*ஆனந்தக்களிப்பு*" என அமைந்தது.

ஈண்டு;

"தேனுந் துஞ்சொற் றிருவம் மானை
ஆனந் தயோகக் களிப்பது வாகும்"

- என்பது அகத்தியர் சூத்திரம்.

"நலமுறு மந்தணர் வடிவாய் நாரணன் காண்பரிய பத
நிலமதில் வந்தாள் கருணை நினைந்தாட லம்மானை"

- என்பது பழைய திருப் பெருந்துறைப்புராணம்.

தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

175 செங்க ணெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொண்டு
தெங்கு திரள் சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கண னந்தணனா யறை கூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய் க

(இ-ள்)

"தென்னை மரங்கள் மிகுந்துள்ள சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறையிலுள்ள சௌந்திரபாண்டியனாகிய சிவபெருமான்; கண்ணோட்டமுள்ள அந்தண வடிவம் கொண்டு; செந்தாமரைக் கண்ணனாகிய நெடிய திருமாலும் நிலத்தை அகழ்ந்து கீழே சென்றும் காண்பு அரியனவாக; மேலும் மேலும் கீழே சென்ற திருவடிகள், இந்நிலவுலகில் பொருந்தும் வண்ணம் அருள்கொண்டு எழுந்தருளிவந்து, அறை கூவித் தகுதியற்ற எங்களையும் ஆட்கொண்டு எங்கள் பிறவிகளை அறுத்து வீடுபேறு

நல்கும், அவனுடைய அழகிய பேரருளாகிய நீண்ட திருவடிகளையே அம்மானைப் பாட்டின் பொருளாக அமைத்துப் பாடுவோம்".

(வி-ரை)

இத்திருப்பாடலை; தெங்கு திரள் சோலைத் தென்னன் பெருந்துறையான்; அங்கணன்; அந்தணன் ஆகிச் செங்கண் நெடுமாலும் இடந்து சென்றும் காண்பு அரிய; பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்து அருளி; அறை கூவி; எம் தரமும் ஆட்கொண்டு எங்கள் பிறப்பு அறுத்து இட்டு; வீடு அருளும்; அம்கருணை வார்கழலே; அம்மானைப் பாடுதும்காண்; - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

தெங்குதிரள் சோலைத் தென்னன் பெருந்துறையான் - தெங்கு - தென்னை மரங்கள். *திரள்சோலை* - மிகுதியாகத் திரண்டுள்ள சோலை. தென்னை மரங்கள் தங்களுக்குப் பாய்ச்சப்பட்ட தண்ணீரை வேர்ப்பகுதிகளில் ஏற்றுக் கொண்டு அதனினும் பன் மடங்கு சுவையுள்ளதும், உடல் நலம் பயப்பதும், உணவாக உட்கொள்ளக் கூடியதுமான இளநீரைத் தருவன. இதனை;

"நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்"

(வாக்குண்டாம் - 1)

- என ஔவைப் பிராட்டியார் அறிவுறுத்துகின்றார். இஃது இப்பதியிலுள்ள பெருந்துறையான் உள்ளன்புடன் தன்னை வழிபடும் அடியவர்களுக்கு பெரும்பேறுகளை அருளுவன் என்ற குறிப்பு.

ஈண்டு;

"குடங்கை நீரும் பச்சிலையு
மிடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையும்
தருவாய் மதுரைப் பரமேட்டி

படங்கொள் பாயும் பூவணேயும்
தருவாய் கையில் படுதலேகொண்
டிடங்க டோறு மிரப்பாயென்
றேசு வார்க்கென் பேசுவனே"

(திருவிளேயாடற் - புராணம் இசை வாது வென்ற படலம் - 34)
- என்பது நினேக.

தென்னன் - சௌந்திர பாண்டியனுகத் தென்னுட்டை ஆண்டவன். முன்னம் சிவபுராணம் 90-ல் "தென்பாண்டி நாட்டானே" என்பதன் கீழுரைத்தவை காண்க. இப்பகுதியில் இனிவரும் இச்சொல்லுக்கு இவ்வாறே பொருள் கொள்க. இதற்கு இவ்வாறன்றித் "**தென்நன்**" என்று பிரித்து "அழகிய நல்ல" என்றுரைத்தார் திரு. முதலியாரவர்கள். "**பெருந்துறையான்**" இறைவன் நம் அடிகளே அந்தணவடிவில் வந்து ஆட்கொண்ட இடம் திருப்பெருந்துறை. ஐந்தாம் அடியில் "அங்கணன் அந்தணனுய்" வந்த வரலாறு குறிப்பதால் அவன் ஆட்கொண்ட பதியையும் அவனுக்குரியதாகக் கூறினுர்.

அம்கணன் அந்தணன் ஆகி - அங்கணன் - அம் + கண்+அன் = அம்கண்ணன். அழகிய கண்களேயுடையவன். கண்ணுக்கு அணிகலம் கண்ணேட்டம் ஆகலின், ஈண்டு நம் அடிகளே ஆட்கொள்ளவந்த கோலத்தில் அருள் பொழியும் கண்களே விதந்தோதினுர். அங்கணன் என்பது சிவபெருமனின் திருப்பெயர்களுள் ஒன்று என்பதும் நினேக. **அந்தணன் ஆகி** - நம் அடிகளே ஆட்கொள்ள வந்த கோலம் அந்தண வடிவம் என்ற சரிதக் குறிப்பு நினேக. **ஆய்** - என்றதனுல் அடிகள் பொருட்டே குருவடிவம் தாங்கி வந்தான் என்ற சரிதக் குறிப்பை உணர்தியவாறு.

செங்கண் நெடு மாலும் இடந்து சென்றும் காண்பு அரிய - செங்கண்-171-ம் திருப்பாடலில் "செங்கணவன்" என்றதன் கீழுரைத்தவை காண்க. **நெடுமாலும்** - திரி விக்கிரமனுக மூன்று உலகங்களேயும் தன் இரண்டு அடிகளால் அளந்த பேருருவுடையவனும். உம்மை உயர்வு சிறப்பு. **சென்று இடந்தும்** என உம்மை பிரித்து **இடந்து சென்றும்** என மாற்றிக் கூட்டிக்கொள்க. பாதள உலகை அவன் தான் நின்ற இடத்திினின்றே

தன் ஓரடியால் அளந்தவன். ஈண்டுப் பன்றி வடிவெடுத்து நிலத்தை அகழ்ந்து இறைவன் பாதம் செல்லும் வழியில் கீழே இறங்கிச் சென்றும் அப்பாதங்கள் காண்பதற் கரியவாயின். ***காண்பு அரிய*** - காண்பதற்கே அரிய வாயின வாயின் எய்துதல் இயலாதென்பது பெற்றும்.

பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்து அருளி. பொங்கும்- அழகு மிகுகின்ற. ***மலர்ப்பாதம்*** - தாமரை மலர் போன்ற திருவடிகள். வடிவாலும் வண்ணத்தாலும் தாமரை மலரை ஒத்திருக்கினும் அம் மலர் போன்று மென்மையாக இராமல் பாதாளம் ஏழினும் ஊருவி அப்பாலும் சென்ற வலிமையுடைய திருவடிகள். "மதனுடைநோன்றாள்" என்பது திருமுருகாற்றுப்படை. ***பொங்குதல்*** - ஒளிமிகுதல். விளங்குதல்; என்று பொருள் கொண்டனர் முன்னுரை யாசிரியர்கள்.

அத்துணை அரிய திருவடிகள் அடியார்கள் பொருட்டுத் தாமே வலிய மண்ணுலகம் வந்து அருளின என்றவாறு. ***பூதலம் - பூ*** - மண்ணுலகம். ***தலம்***- உள்ளிடம். உள்ளங்கையைக் கைத்தலம் என்பது போலக் கொள்க. ***போந்தருளி***- எழுந்து அருளி. மண்ணுலகை அத்திருவடிகள் தீண்டியது ஓர் அருளிப்பாடு. அது நம்மை உய்விக்க வேண்டும் என்ற பேரருளால் நிகழ்ந்தது.

அறைகூவி - ஆன்மாக்களைப் பகைத்து அவை வீடுபேறெய்தாமல் தடுப்பது ஆணவமலம். அஃது இறைவன் பூதலத்தே போந்தருள, அவன் முன் நிற்க இயலாது கதிரவன் முன் இருள் போன்று வலிகுன்றி மறைந்து நிற்கும். அதை அவன் அறைகூவி அழைத்து வென்றான் என்றவாறு.

எம் தரமும் ஆட் கொண்டு - தரம் - தகுதி. எங்களைப்போன்ற வீடு பேற்றுக்குத் தகுதியற்றவர்களையும் அடிமைகளாக் கொண்டு. ***தரமும்*** உம்மை இழிவு சிறப்பு.

எங்கள் பிறப்பு அறுத்து இட்டு - பிறப்பை அறுத்து என்பதனால் பிறந்தபின் வரும் இறப்பையும் அறுத்துவாறு பெற்றும். பிறப்பிறப்பு இரண்டும் நீங்கியதால் துய்க்க வேண்டிய பிராரத்த கன்மங்களும் இனி வரவுள்ள ஆகாமிய கன்மங்களும் இல்லையாயின. அவன் அடிமை

கொண்டதால் சஞ்சித கன்மங்கள் ஏற்கனவே அவனுல் எரித்து அழிக்கப்பட்டமை நினைக. இட்டு - துணை வினை; உணர்ந்திட்டான் என்பது போல.

வீடு அருளும் - முத்தியில் உய்க்கும். வினைகள் முற்றிலும் நீங்கிய பின் உயிர் எய்தவுள்ளது வீடுபேருகும். எனவே பிறப்பு அறுத்திட்டபின், "*வீடு அருளும்*". என்றுரைத்தார். இறைவன் திருவடி இரண்டு அருளிப்பாடுகளைச் செய்தன. ஒன்று "*பூதலத்தே போந்தது*", மற்ருென்று பிறப்பு அறுத்திட்டு "*வீடு*" நல்கியது. *வீடு* - ஆன்மா, கட்டுக்களினின்றும் விடுதலை பெறுவதைக் குறித்தது. முதனிலை நீண்ட தொழிற் பெயர். ஈண்டு முத்தியின்பம் குறித்து நின்றது.

அம்கருணை வார்கழலே : "*அவனுடைய*" என்னும் ஒரு தொடர் அவாய் நிலையால் வருவித்துக்கொள்க. *அம் கருணை* - அழகிய திருவருள். அஃதே ஈண்டு வீடு அருளியது. *வார்கழல்* - *வார்* - நீண்ட. முன்னம் 155-ம் திருப்பாடல் உரையில் எடுத்தாண்ட தொல்காப்பிய சொல்லதிகாரம் உரியியல் சூத் - 317 காண்க. செங்கண் நெடுமாலும் இடந்து சென்றும் காண இயலாதவாறு நீண்டு சென்ற. *கழலே* - *கழல்* - வெற்றியின் சின்னமாகிய அணி. வெற்றி, ஆணவமலத்தை அறைகூவி அழைத்து வலியடக்கிய வீரச் செயல். *கழல்* - ஈண்டுத் தானியாகு பெயராகத் திருவடிகளை உணர்த்திற்று. *கழலே* என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலை. ஏனைய தேவர்களை விட்டுச் சிவபெருமான் ஒருவனையே வழிபட வேண்டும் என ஏகநாயக வழிபாட்டை வலியுறுத்தியவாறு.

"*தஸ்மாத் ஸர்வாந் பரித்யஜ்ய த்யேயாந்*
விஷ்ணு வாதி காந் சுராந்
சிவ ஏவ ஸதாத்யேயஸ் ஸர்வ ஸம்ஸாரே மோசக"

(பொருள் - இடைவிடாது வரும் துக்க நாச முத்திப் பேற்றின் பொருட்டு விஷ்ணு முதலான எல்லாத் தேவர்களையும் விட்டுத் தியாயேயனுகவுள்ள சிவனையே தியானிக்க வேண்டும்.)

- எனவரும் சரபோப நிடத வசனம் காண்க.

அம்மானாய் பாடுதும் காண் - "அம்மானையாய்" என்பது ***அம்மானாய்*** எனத்திரிந்தது. ***ஆய்*** என்பதை "***ஆக***" எனத்திரித்து "***அம்மானையாய்ப் பாடுதும்***" எனக் கொள்க. அம்மானை ஆடும் பொழுது பாடும் பாடல்களாகப் பாடுவோம் என்றவாறு. ***காண்***- அசை

இத்திருப்பாடல் இறைவன் குருவடிவில் வந்து ஆட்கொண்ட அருளிப்பாட்டின் பெருமையைக் கூறியது.

இத்திருப்பாடல், இறைவன் திருவடிகள் நல்கிய இன்பத்தை நுகரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தலின், "***ஆனந்தக் களிப்பு***" இயம்பியது காண்க.

176. பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார்
ஆரா லுங் காண்டற் கரியா னெமக்கெளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் னுளம்புகுந்த
ஆரா வமுதா யலை கடல்வாய் மீன்விசிறும்
பேரசை வாரியனைப் பாடுதுங்கா ணம்மானாய் உ

(இ-ள்)

பூவுலக வாசிகளும் விண்ணுலக வாசிகளும் கீழுலக வாசிகளும் இவர்களுக்குப் புறம்பாகவுள்ள அசுத்த மாயா புவனங்களிலும் சுத்தமாயா புவனங்களிலும் உள்ளவர்களும்; ஆகிய எத்தகையோரும் தங்கள் முனைப்பால் காண்பதற்கு அரியவனும், எங்களுக்கு எளிமையாகத் தானே வந்தருளும் பெருமையுடையவனும், சௌந்திரபாண்டியனும் திருப்பெருந்துறையினனும்; தன்பால் ஞானப்பித்துண்டாக்கி மீண்டும் பிறவிக்கு வாரா வழியை அருளி; வலியவந்து என் நெஞ்சுள் புகுந்து எவ்வளவு நுகரினும் போதும் என்ற மனநிறைவேற்படுத்தாத அமுதமாகவுள்ளவனும்; அலைகின்ற கடலின்கண் மீன் பிடிக்க வலை வீசியவனுமாகி அடியார்களின் பேரன்பாகிய கடலையுடையவனுமானானை அம்மானைப் பாடலின் பொருளாக அமைத்துப் பாடுவோம்.

(வி-ரை)

இத்திருப்பாடலின் ஈற்றிரு சீர்களையும் "அம்மானாய் பாடுதுங்காண்" என மொழிமாற்றிக்கொண்டு பின் ஆற்றொழுக்காகப் பொருள் கொள்க. இப்பகுதியில் வரும் எல்லாப் பாடல்களிலும் ஈற்றிரு சீர்களையும் இவ்வாறே மொழிமாற்றிக்கொண்டு பிறகு உரியவாறு பொருள் காண்க.

பாரரர் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார் - ***பாரார்*** மண்ணுலகில் வாழும் மக்களின் மிகச்சிறந்த தவநெறி தாங்கும் முனிவர்களைக் குறித்து நின்றது. ***விசும்புள்ளார்*** - மேலுலகவாசிகளில் மிகச்சிறந்த திருமால், நான்முகன் முதலியோரும். ***பாதாளத்தார்*** - கீழுலகவாசிகளில் மிகச்சிறந்த காலாக்கினியுருத்திரர், ஆடகேசுரர் முதலியோரும். ***புறத்தார்*** - மேற்கூறிய பாரும் விசும்பும் பாதளமும் பிரகிருதி மாயையிலுள்ள புவனங்களிலிருப்பன. அவற்றுக்குப் புறம்பாக அசுத்தமாயையிலும் சுத்தமாயையிலுமுள்ள புவனங்களில் இருப்பவர்களை இங்குப் ***புறத்தார்*** என்றார்.

ஆராலும் காண்டற்கு அரியான் - ***ஆராலும்*** - ஆன்ம கோடிகளில் மிகவும் பக்குவமுடையவர்களாய் நாதத்துவத்தில் உள்ள புவனத்தில் தங்கி அதிகாரமல வாசனையும் நீங்கி முத்தராய்ச் சூக்குமலய வாசனை மாத்திரமுள்ள ஆன்மாக்களாலும். ***காண்டற்கு*** - பசுபாச ஞானங்களால் கட்புலனால் காணவும் அறிவினால் உணரவும். ***அரியான்*** - அரியவனாயுள்ளவன். நாததத்துவத்திலுள்ளோர் அதிகார மலவாசனையுமற்றவர்கள். அவர்கள் கரணங்கள் சிவகரணங்களாகவே மாறி, அவற்றில் திருவருள் தங்கித் தொழிற்படத் தகுதி பெற்றிருக்கும். அப்பொழுது திருவருளே அவர்களுக்கு இறைவனைக் காட்டக் காண்பார். இவ்வாறே சகலர்கள் வரையுள்ள ஏனையோரும் திரிபுடியற்ற தியான நிலையில் தன்முனைப்பற்று இறைவனைக் காண்பர். ஆதலின் காண்டற்கு இயலான் என்னாது ***அரியான்*** என்றார்.

எமக்கு எளிய பேர் ஆளன் - ***எமக்கு*** - அடியார்களாகிய எளிய எங்களுக்கே. ***எளிய பேர் ஆளன்*** - எளிதில் தானே எங்களைத் தேடிவரும் பெருமையை ஆள்பவன். ***பேர்*** - புகழ் எனக்கொண்டு அடியார்களுக்கு எளிவருவதாய் எய்தும் புகழை ஆள்பவன் எனலுமொக்கும். பிட்டுக்கு மண்

சுமத்தல், விறகு விற்றல், பிச்சையேற்று வந்து அடியாரை உண்பித்தல் போன்ற சரிதங்களில் இறைவனின் எளிவந்த இயல்பு காண்க.

பிச்சு ஏற்றி வாரா வழி அருளி - *பிச்சு ஏற்றுதல்* - தேவுமால் கொள்ளச் செய்தல். இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு கண்ணப்ப நாயனர் காளத்தியப்பரைத் தரிசித்த பின் முத்தியெய்தும் வரையுள்ள ஆறுநாட்களில் அவர் புரிந்த செயல்களேயாம். முன்னம் 25-ம் திருப்பாட்டில் "வேட்ட" என்றதன் கீழுரைத்தவை காண்க. நம் அடிகளே பின்னர்.

திருச்சிற்றம்பலம்

"மான மழிந்தோம் மதி மறந்தோம் மங்கை நல்லீர்
வானந் தொழுந்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
ஆனந்தக் கூத்த னருள்பெறினும் அவ்வணமே
ஆனந்த மாகிநின் ருடாமோ தோணோக்கம்"

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 320)

என்றருளுவது காண்க. முன்னரும் "மத்த மனத்தொடு மாலிவனென்ன" *(7)* என்றும் "நின் கோயில் வாயிற் பிச்சனுக்கினுய்" *(100)* என்றும் அருளியவை நினைக. "*பித்து*" என்பது "*பிச்சு*" என வினையாலணையும் பெயராகக் கொள்ளினுமமையும். *வாராவழி* - மீண்டும் பிறவிக்கு வராத வழி வீடுபேறு. பிறவிக்கு வருவதே இயல்பாக இருந்த எனக்கு "வராவழியருளினுன்" என்றவாறு. *வாராவழி* என்பது இப்பொருளில் வருவதை முன்னம் 40-ம் திருப்பாட்டில் "போதரவு இல்லதும்" என்றதன் கீழ் விளக்கினும்.

வந்து என் உள்ளம் புகுந்த ஆரா அமுதாய் - *வந்து* - உன்னை எய்துதற்கு எவ்விதத் தகுதியும் தவமும் அற்ற என்னை நீயே வலியத் தேடிவந்து. *என் உள்ளம்* - நீ மானிடச்சட்டை தாங்கி என் கண்முன் வந்து நின்றது மட்டுமன்றி என் உள்ளத்தினுள்ளும். *புகுந்த* - வலிதிற் நுழைந்த. முன்னம் 14-ம் திருப்பாட்டில் "புகுதல்" என்றதன் கீழுரைத்தவை காண்க. *ஆரா அமுதாய்* - தெவிட்டாத அமுதமாய். *அமுதம்* - நரை திரை மூப்பு சாக்காடு இவற்றை ஒழித்து கழிபெருஞ் சுவையோடு உறுதிபயப்பது. ஈண்டு வீடுபேறு குறித்து நின்றது.

அலைகடல்வாய் மீன் விசிறும்* - *அலைகடல் - அலைகள் வீசுகின்ற கடல் எனினுமொக்கும். *மீன்*- மீன்பிடித்தற் பொருட்டு. "மீனுக்கு" எனக் கோடற் பொருளில் வந்த நான்கனுருபு தொக்கி நின்றது. *விசிறும்*- வலை வீசும். "வலை" என்ற செயப்படுபொருள் தொக்கு நின்றது. பிறப்பிறப்புக்களாகிய அலைகளால் மாறி மாறி ஏற்றித் தன்பாற்பட்டோரை அலைத்து அவர்கள் தவவாழ்வை அழிக்கும் கடலாகிய உலகவாழ்வில் பட்டு விடுபட விரும்பாத மீனாகிய உயிரைத் தன் அருளாகிய வலையை வீசி அது மீண்டும் கடலிற்புகாது கரையேற்றும் இறைவன் திருவருளை வழுத்தும் குறிப்பு உய்த்துணர்க. ஈண்டு வெளிப்படையாகக் கூறும் சரிதம் திருவிளையாடற் புராணத்தில் காணும் வலைவீசிய திருவிளையாடலாகும். அவ்வரலாற்றைக் கீர்த்தித் திருவகவல் *(17-18)* - ல் "கேவேடராகிக் கெளிறது படுத்து மாவேட்டாகிய ஆகமம் வாங்கிய" வரலாறு என்றதன் கீழுரைத்தாம்.

***பேராசை வாரியனை*- *பேராசை*-** அடியார்களின் பெரும்பக்தி. *வாரி*- கடல் அடியவர்களின் பத்தியாகிய பேராறுகள் வந்து சங்கமாகி நிற்கும் பெரிய கடலைத் தன்னுடைமையாகக் கொண்டுள்ளவன்.

இறைவன் மெய்யடியார்களின் பேரன்பாகிய பத்தியைத் தன்னுடைமையாகக் கொண்டுள்ளவன் என்பதை;

திருச்சிற்றம்பலம்

"என்பலாற் கலனு மில்லை
யெருதலா லூர்வ தில்லை
புன்புலா னறு காட்டிற்
பொடியலாற் சாந்து மில்லை
துன்பிலாத் தொண்டர் கூடித்
தொழுதழு தாடிப் பாடும்
அன்பலாற் பொருளு மில்லை
யையனை யாற னார்க்கே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை4-40-6)

- எனவரும் நம் அரசுகளின் அமுதவாக்காலறிக.

இத்திருப்பாடல் - இறைவனின் எளிவந்த பெருமையை வழுத்தியது காண்க.

இத்திருப்பாடல் - யாவரும் காண்டற்கரிய இறைவன் தானே வந்து உள்ளம்புகுந்து பிறப்பறுத்து வீடுதருவதால் வந்தபேரின்பம் குறித்து மகிழ்தலின் "*ஆனந்தக்களிப்பு*" இயம்பியதாயிற்று.

177. இந்திரனு மாலயனு மேனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமு மாட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பரியப் பரிமேற்கொண் டான்தந்த
அந்தமிலா வானந்தம் பாடுதுங்கா ணம்மானாய் ரு

(இ-ள்)

இந்திரன் திருமால் நான்முகன் ஏனைய தேவர்கள் மற்ற உலகினர் ஆகியோர்; ஆகாயத்திற் நிற்கவும்; பூவுலகிவ் எழுந்தருளி; எங்கள் தகுதிக்குறைவையும் பொருட்படுத்தாது அடிமை கொண்டு; திருத்தோள்களில் திருநீறு அணிந்த கோலமுடன். எங்கள் உள்ளத்தில் எழுந்தருளி அதனை உருகும்படி செய்த பெருமையினனும்; திருப்பெருந்துறையினனும்; என் பாசக்கட்டுக்கள் அறும் வண்ணம் குதிரையேறி வந்தவனுமாகிய சிவபெருமான்; அருளிய முடிவில்லாத இன்பத்தை; அம்மானைப் பாடலின் பொருளாய் அமைத்துப் பாடுவோம்.

(வி-ரை)

இத்திருப் பாடலை; இந்திரனும்மால் அயனும் ஏனோரும் வானோரும்; அந்தரமே நிற்க; அவனி வந்து அருளி; எம் தரமும் ஆட்கொண்டு; தோட் கொண்ட நீற்றனாய்; வந்து சிந்தனையை உருக்கும்; சீர் ஆர் பெருந்துறையான்; பந்தம்பரியப் பரிமேல் கொண்டான்; சிவன்; தந்த அந்தம் இலா ஆனந்தம்; அம்மானாய்ப் பாடுதுங்காண்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

இந்திரனும்மால் அயனும் ஏனோரும் வானோரும் - ***இந்திரன்*** - அரசன். இச்சொல் இராசேந்திரன், நரேந்திரன்; நாகேந்திரன், மிருகேந்திரன் என்பன போலன்றி அடையின்றி வழங்கின் தேவேந்திரனையே குறிக்கும். ***மால்*** - திருமால், ***அயன்*** - நான்முகன். இவர்கள் அவரவர் உலகங்களின் அரசராக உள்ள பெருந்தேவர்கள். ***ஏனோர்*** - அவ்வாறு அரசர்களாயல்லாமல் தேவ உலகில் இந்திரனின் குடிகளாக உள்ளவர்கள். ***வானோரும்*** - பதினெண் கணங்களில் தேவர்கள் தவிரவுள்ள பதினேழு கூட்டங்களான விண்ணுலக வாசிகள். இவர்கள் அனைவரும் நிலவுலகினரைக் காட்டிலும் பன்மடங்கு மிகுதியாகப் பசுபுண்ணியங்களைச் செய்தவர்கள்.

அந்தரமே நிற்க - விண்ணுலகங்களிலேயே நிற்க. "நாம் பூவுலகில் சென்று பிறந்தால் சிவபூசை முதலிய சிவ புண்ணியங்களைச் செய்யலாம். இறைவன் நம் உள்ளம் புகுந்து அதனை உருக்கி, பந்தம் பரிய அருளி அந்தமிலா ஆனந்தம் நல்குவன்" என்று அவர்கள் ஆசைப்படினும் விண்ணுலக போக நுகர்ச்சி இன்னும் மீதமிகுத்தலின் அவர்களால் விண்ணுலகை விட்டு விலக இயல்வதில்லை. ஆகவே அவர்கள் விருப்பத்துக்கு மாறாக அங்குத் தங்குவதால், ***நிற்க*** என்றார். மனநிறைவற்று அங்குத் தங்கியிருத்தலின் போகங்களை முழுமனதுடன் நுகராமலும் விரும்பிய பூவுலகுக்கு வர இயலாமலும் இரண்டும் கெட்ட நிலையில் திரிசங்கு மன்னன் போல் நிற்றலின் ***அந்தரமே*** என்றார். பூவுலகினின்றும் பிரித்து அந்தரத்தைக் கூறலின் ஏகாரம் பிரிநிலை.

அவனி வந்து அருளி - இது சிவபெருமனின் செயல் ***அவனி*** - பூவுலகம். ***வந்து*** - மானிடச்சட்டை தாங்கிக் குரு வடிவில் எழுச்தருளி. ***அருளி*** திருக்கயிலையினின்றும் மண்ணுலகுக்கு வரும் வழியில் மேற்குறித்த பதினெண்கணங்களும் அவர்கள் வாழும் உலகங்களும் உள்ளன. அவர்கள் பூவுலக வாசிகளை காட்டிலும் பசுபுண்ணியம் மிகுதியாகச் செய்த தகுதியும் உள்ளவர்கள். அவர்களை விடுத்து இறைவன் பூவுலகம் போந்ததால் அவன் செயல் ஓர் அருளிப்பாடாயிற்று.

எம்தரமும் ஆட்கொண்டு - ***தரம்*** - தகுதி. அது விண்ணுலக வாசிகளின் தரங்களை விடத் தாழ்ந்தவை என்பதை மேலே விளக்கினும். எனவே ***தரமும்*** என்பதிலுள்ள உம்மை இழிவு சிறப்பு. ***ஆட் கொண்டு*** - தரம் தாழ்ந்திருந்தும் கூட ஆட் கொண்டது ஓர் அருளிப்பாடு.

தோள் கொண்ட நீற்றனாய் - இறைவன் ஞானாசிரியனாக வந்து ஆட்கொண்ட ஞான்று பேரொளிகாலும் அவன் திருமேனியில் அணிந்திருந்த நீற்றுக்கோலம் நம் அடிகளின் நெஞ்சில் நிலையாக இடம்பெற்றிருந்தது. திருநீற்றைத் திரிபுண்டரமாக உடம்பில் பதினாறு இடங்களில் அணிவர். அவை உச்சி, நெற்றி, மார்பு, உந்தி, இருமுழந்தாள்கள், இருதோள்கள், இருமுழங்கைகள், இருமணிக்கட்டுக்கள், இடுப்பின் பின் பாகம், இரு செவிநுனிகள், கழுத்து என்பன. இவற்றில் இரு செவி நுனிகளை நீக்கி முதுகில் இருதோள்களின் பின்புறம் அணிதலும் உண்டு. இவை தீட்சை அருளும் ஞானகுருமார்கள் ஆற்றுப்படுத்தும் வகையில் மாறும். திருநீறு, சிவபெருமானாகவும் உமையம்மையாகவும் உள்ளது. சிவவேடங்களில் தலையாயது. சிவபெருமானாகவே வழிபடப் பெறுவது. முன்னம் 37-ம் திருப்பாடலுரையில் "திரள் தோள் மேல்"; "நீறு"; "நின்றது கண்டனை" என்பவற்றின் கீழுரைத்தவை காண்க.

வந்து சிந்தனையை உருக்கும் - *வந்து* - பேரருள் காரணமாகத் தானே வலிய எங்கள் உள்ளத்துள் எழுந்தருளி. *சிந்தனையை உருக்கும்* - அவன் எழுந்தருளியதன் காரணமாக, கற்போலும் இருந்த நெஞ்சம் உருகிற்று. திருமால் முதலிய தேவர்கள் அந்தரத்தில் நிற்க; தகுதியற்ற நம்மைத்தானே தேடிவந்தானே என்ற நினைவால் உருக்கம் விளைந்தது.

சீர் ஆர் பெருந்துறையான் : சீர் ஆர் - பெருமை நிறைந்த. இதைப் பெருந்துறை, பெருந்துறையான் என ஈரிடத்தும் கூட்டுக. இறைவன், எழுந்தருளியதால் பெருந்துறை பெருமை நிறைந்ததாயிற்று. திருமால் முதலியோரும் அணுகி அருள் பெற இயலாமையால் பெருந்துறையானும் பெருமை நிறைந்தவனானன்.

பந்தம் பரியப் பரிமேல் கொண்டான் - பந்தம் - மலங்களால் பற்றப்பட்டுள்ள பிணிப்புக்கள்; *பரிய* - அறும் வகையில் *பறிய* என்பதும் பாடம். இப்பாடத்துக்கு "ஓடிப்போக" என்று பொருள் செய்து கொள்க. *பரி மேல் கொண்டான்* - நம் அடிகள் பொருட்டு இறைவன், நரிகளைக் குதிரைகளாக்கி அவற்றைப் பாண்டியனுக்கு அளிக்க வணிகச்சாத்துடன் தான் மறையாகிய குதிரைமேல் இவர்ந்து வந்த வரலாறு. பாண்டிய மன்னன் முன் இறைவன் அவ்வாறு வந்துழி அக்காட்சியால் நம் அடிகளின்

பந்தங்கள் அனைத்தும் அறுபட்டன. இவ்வுண்மையைத் திருப்பாண்டிப் பதிகம் முழுவதிலும் நம் அடிகள் வாக்காலேயே காணலாம். ஈண்டு;

“ பாய்பரியே றந்தப் பரமானந் தப்பயனை
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து - மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தே”

(திருக்களிற்றுப்படியார் 73)

- என்று நம் ஞானசாத்திரம் நவில்வதும் நினைக.

இதற்கு இவ்வாறன்றி; பாண்டிய மன்னனும் மதுரை மக்களும் இறைவனைப் பரிமேற் கண்டதால் தங்கள் பந்தம் பரிய என்றுரைத்தாரும் உண்டு. இறைவனைப் பரிமேற் கண்ட மன்னவன் நிலையை;

“ சுட்டுதற் கரிய சோதி
சுருதிவாம் புரவி யோடு
மட்டவிழ் தாரி ஞன்முன்
வருதலுங் கருணை நாட்டம்
பட்டுள மயங்கித் தன்னை
மறந்தெழீஇப் பாண்டி வேந்தன்
தட்டவிழ் கமலச் செங்கை
தலைமிசைக் கூப்பி நின்ருன்”

(திருவிளையாடற் புராணம் - நரிபரியாக்கிய படலம் - 70)

என்று பரஞ்சோதி முனிவர் படம் தீட்டுகின்ருர். அந்நிலையில், வந்தவன் வனிதைபாகனே என்று தெரிந்தவர் நம் அடிகள் ஒருவரே. அவர் பந்தமே பரிந்தது. அரசன் எழுந்து சிரமேல் கைகூப்பியது வந்தவன் இறைவன் என்று அறிந்ததாலன்று. அவன் கருணை நோக்கால் மயங்கித் தன்னை மறந்து செய்த செயல். இக்கருணை மறக்கருணை. திரோதானசத்தியின் ஆட்சியால் அவன் இறைவனை அறியக் கூடவில்லை. அவன் பந்தமும் பரியவில்லை. பந்தம் நீங்கியிருந்தால் அடுத்தநாள் குதிரைகளனைத்தும் நரிகளாக மாறி ஓடியதற்காக நம் அடிகளை ஒறுத்திருக்க மாட்டான். மதுரை மக்களின் நிலையும் இவ்வாறே. ஆதலின் அஃதுரையன்று என ஒதுக்குக.

சிவன்- அவனி வந்தருளி; எந்தரமும் ஆட் கொண்டு; தோட் கொண்ட நீற்றனாய் வந்து சிந்தனையை உருக்கும் சிவன் - என்று வரிசைப்படுத்திக் கொள்க. இவனே சீரார் பெருந்துறையனாய்; நம் பந்தம் பரியப் பரிமேல் வந்தவனுவன். *சிவன்* மங்கலமானவன். மங்கலத்தைத் தருபவன். அந்த மங்கலம் முடிவில்லாத ஆனந்தம் என்று இனிக் கூறி முடிக்கின்றார். தந்த **அந்தமிலா ஆனந்தம்** - *தந்த* - நாம் வேண்டாமலே நல்கிய. **அந்தமில் ஆனந்தம்**- முடிவில்லாத இன்பம். அது வீடுபேறேயாகும். வீடுபேற்றினும் பெரிய இன்பம் வேறு இல்லை என்று ஞானநூல்கள் அனைத்தும் நவிலும். இதை "மாநுட ஆனந்தம் பல கூடி ஒன்றாயுள்ளது எதுவோ அஃதொரு மானுடனாயிருந்து தவசு முதலியவற்றால் கந்தருவனாய்ச் சென்றானது மாநுட கந்தருவானந்தமாம். அது பல கூடி ஒன்றாயுள்ள தெதுவோ அஃதொரு தேவ கந்தருவானந்தமாம். அதனின் மேம்பட்டது பன்னாள் உறுதியாயிருக்கும் பிதிர் தேவானந்தமாம். அதனின் மேம்பட்டது தேவானந்தமாம். இவ்வானந்தமே வைதிக கன்மங்களாற் தேவர்கள் அடையும் கன்ம தேவானந்தமெனப்படும். இதனின் மேம்பட்டது. தேவலோகத்தில் தேவதைகளாய்ப் பிறந்ததுள்ளோரின் தேவானந்தமாம். அதனின் மேம்பட்டது இந்திரனது ஆனந்தம். அதனின் மேம்பட்டது பிரகற்பதி ஆனந்தம். அதனின் மேம்பட்டது பிரஜாவதி ஆனந்தம் அஃது ஒரு பிரமானந்தம்" என்று தைத்திரீயோப நிஷத் ஆனந்த வல்லி கூறும் *(பரிபூரணானந்த போதம் பாயிரம் பாடல் 11 உரை)*

இந்தப் பிரஜாபதி ஆனந்தத்தைவிட நூறுமடங்கு மேம்பட்டது பிரமானந்தம். ஈண்டுப் *பிரமம்* என்பது சிவமே. அதை "சச்சிதானந்த ரூபியாய் சத்து அசத்துப் பிரபஞ்சத்துக்கு வேறாகி எங்கும் நிறைந்துள்ள **சிவம், *பிரமம்*** என்ற சொல்லாற் பேசப்படுகின்றான்" என வரும் அஜிதாகம வசனத்தாலறிக. இந்தச் சிவமே வீடுபேறாகும்.

இத்திருப்பாடலில், திருமால் முதலிய பெருந்தேவர்களுக்கும் கிடைக்காதபேறு, இறைவனின் பேரருளாலும் எளிவந்த தன்மையாலும் அடியார்களுக்குக் கிட்டுதல் வழுத்தப்பட்டது.

இத்திருப் பாடலில்; வீடுபேற்றில் கிட்டும் எல்லையில்லாத இன்பத்தை நுகரும் மகிழ்ச்சியை அம்மானையாய்ப் பாடுவம் என்று கூறப்படுதலின் "**ஆனந்தக்களிப்பு**" இயம்புதல் பெற்றாம்.

178. வான்வந்த தேவர்களு மாலயனே டிந்திரனுங்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போற் றலையளித்திட்
டூன் வந்து ரோமங்க ளுள்ளே யுயிர்ப் பெய்து
தேன்வந் தமுதின் றெளிவி ளொளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய் ௬

(இ-ள்)

விண்ணுலகங்களை நீத்து மண்ணுலகுக்கு வந்த தேவர்களும் திருமாலும் நான்முகனும் இந்திரனும்; காடுகளில் தங்கித் தவமுயன்று; உடல் வற்றியும் மேனிமேல் புற்று எழுந்து மூடப்பட்டும் அவர்களாகக் காண்பதற்கு இயலாதவனான சிவபெருமான்; தானே வலிய எழுந்தருளி இழிந்த எனக்கு அன்னைபோல மேலான அருளை நல்கி; உடலினுள்ளே புகுந்து; மயிர்க்கால்கள்தொறும் உள்ளுள்ள இன்பம் துளிர்க்கும் வண்ணம்; தேனாகி; அமுதத்தின் தெளிவாகி; ஞானமயமாய் நின்றதும் மேன்மை பொருந்தியதும்; நீண்டதும் கழலணிந்ததுமான திருவடிகளையே அம்மானைப் பாடலின் பொருளாக அமைத்து பாடுவோம்.

(வி-ரை)

இத்திருப்பாடலுக்கு ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

வான் வந்த தேவர்களும் மால் அயனோடு இந்திரனும் - **வான் வந்த** - **வான்** - பூவுலகுக்கு மேல் வைகுந்தம் வரையுள்ள விண்ணுலகங்கள். வானினின்றும் வந்த என நீக்கப்பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமை யுருபு விரித்துக் கொள்க. மால் அயன் இந்திரனோடு தேவர்கள் என்னும் வரிசை செய்யுளாதலின் மாறித் தேவர்கள் முதலில் வைக்கப்பட்டனர்: இவர்கள் அனைவரும் ஆன்மாக்களே. பசுபுண்ணியங்களை மிகுதியாகச் செய்து அவற்றின் பயனாக விண்ணுலகங்களில் வசிப்பவர்களாகவும் அவ்வுலகங்களை ஆள்பவர்களாகவும் உள்ளனர். அவர்கள் தங்கள் வாழ்வில் நேரும் இடையூறுகளை நீக்கிக்கொள்ளவும் வேறு சில போக மேம்பாடுகள் குறித்தும் இறைவனை நோக்கித் தவமுயல விரும்புகின்றனர். போக நுகர்ச்சிக்கே தகுதியான அவர்கள் உலகங்கள் அத்தகைய தவங்கள் செய்யத் தகுதியான இடங்களல்ல. அத்தவங்களுக்குத் தக்க இடம் பூவுலகமே.

ஆதலின் அத்தவங்கள் புரிய அவர்கள் பூவுலகுக்கு வந்தனர். எனவே **வான்வந்த தேவர்களும்** என்றருளினர். சூரபதுமனால் அலைப்புண்ட இந்திரன் பூவுலகு போந்து சீகாழிப் பதியில் தவமுயன்ற வரலாற்றைக் கந்தபுராணத்தில் காண்க. திருமால் அயன் ஏனைய தேவர்களும் இவ்வாறு மண்ணுலகில் வந்து தவம் புரிந்த எண்ணற்ற நிகழ்ச்சிகளைத் தல புராணங்களில் ஆங்காங்குக் காண்க.

கான்நின்று வற்றியும் புற்று எழுந்தும் காண்பு அரிய: ***கான் நின்று வற்றியும்*** - ***கான்*** - காடுகள். கானம் என்பதிலுள்ள ஈற்றுயிர்கெட்டு மெய் ஈற்றயல் மேலேறிற்று. காடுகளில் தங்கி உணவு நீர் முதலிய இன்றித் தவம் புரிதலினாலும் காற்று, மழை, வெயில் முதலியவற்றாலும் இவர்கள் உடல் செழுமை குன்றி வற்றி விடுகின்றது என்றவாறு. "என்பெழுந்தியங்கும் யாக்கையர்" என்று இவர்களைத் திருமுருகாற்றுப்படை கூறுவது காண்க.

இனிக் கால் நின்று வற்றியும் - என்று பிரித்து ஒரு காலை மட்டும் நிலத்தில் ஊன்றி நின்று மற்றொரு காலை மடக்கிய நிலையில் பல ஆயிரம் ஆண்டுகள் தவம் முயன்றபின் மடக்கியகாலை ஊன்றி நின்று ஊன்றியிருந்த காலை மடக்கிப் பல ஆண்டுகள் தவம்புரிவர்; உணவும் நீரும் இன்மையுடன் உடல் வருத்தத்தாலும் மேனிவற்றியும் என்றுரைக்கினுமொக்கும்.

கால் - காற்று. உணவும் நீரும் தவிர்த்துக் காற்றையே உணவாகக் கொண்டு பல்லாண்டுகள் தவம் புரிந்தும் அருள் கைகூடாவிடில் சுவாசிப்பதையும் தவிர்த்துத் தவம்புரிந்து உடல் வற்றியும் எனலுமாம். இவர்கள் அனைவரும் தேவர்களாதலின் மனித ஆண்டில் பல்லாண்டுகாலம் தவம்புரிதல் இயல்வதாயிற்று.

புற்று எழுந்தும் - இவ்வாறு மிகநெடுங்காலம் இவர் ஓரிடத்திலேயே அமர்ந்தோ நின்றோ அசையாமல் தவம் செய்தலில் பலபருவங்களில் வீசும் காற்று முதலிய இயற்கை நிகழ்ச்சிகளால் இவர்கள் மீது மண் படிந்து அதில் கரையான்கள் புற்றுக்கள் வைத்து விடுகின்றன. இவர்கள் அப்புற்று மேடுகளுள் இருப்பதே வெளியுலகுத் தெரியாமற் போகின்றது.

காண்பு அரிய - இத்துணைக் கடுந்தவத்தை இவர்கள் மிக நெடுங்காலம் இயற்றினும் சிவபெருமானைக் கண்டாரல்லர். இவர்கள் இயற்றுவது காமிய தவம். இவர்களுக்கு நேர்ந்துள்ள இடையூறுகளும் இவர்கள் அவாவும் போக நலன்களாகும். இவர்கள் பிராரத்த வினையின் நுகர்வு தீரும் வரையும் தொடரும். அதுவரை இவர்கள் தவத்தின் நோக்கம் கை கூடாது. அவ்வாறு

கைகூடும் அமயத்தும் இறைவன் இவர்களுக்குக் காட்சி தருவதில்லை. இவர்கள் அனைவரும் பிரகிருதி மாயா புவனங்களில் உள்ள உலகினர். சீகண்டருத்திரரின் ஆட்சிக்குட்ட புவனுபதிகள்; மும் மூர்த்திகள். அவர்களில் ஒருவராகிய உருத்திர மூர்த்தியே இவர்களுக்குக் காட்சி தந்து வரமளிப்பவர். ஆதலின் **காண்பு அரிய** என்றார். **அருமை,** ஈண்டு இன்மைப் பொருளில் வந்தது. திருக்குறள் 7, 210-ல் பரிமேலழகர் இவ்வாறு பொருள் கொள்தல் காண்க.

தான் வந்து - "தானேவந்து" என்று தேற்றேகாரம் புணர்த்துரைக்க. எளிய அடியார்களாகிய நாங்கள் வான்வந்த தேவர்களைப் போலக் கடுந்தவம் முயலாதிருந்தும் அவன் தானே எங்களைத் தேடி, வலிய வந்து என்றவாறு.

நாயேனைத் தாய் போல் தலையளித்து இட்டு : நாயேனை - முன்னம் சிவபுராணம் 60-ல் "நாய்" என்றதன் கீழ் விரித்து விளக்கினும். ***தாய் போல் தலை அளித்து*** - கைக்குழந்தை, தன் உள்ளத்துயரை இன்னதென்று கூற இயலாது துன்புறும். ஈன்றாள் அதன் துயரைத் தானே உணர்ந்து தவிர்த்து நலமுற வைப்பள். அவ்வாறே தவமொன்றும் முயலாத என்னை நீ தானே தேடி நண்ணிய பின்பும் நின்னிடம் நான் எனக்கு வேண்டுவனவற்றைக் கேட்கவும் அறியாதிருந்தேன். எனக்கு வேண்டியவற்றை நீயே அறிந்து தலையாய அருளை நல்கினாய் என்றவாறு. ***தலை அளித்து இட்டு*** - இட்டு துணைவினை.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

" கனத்தகத்துக் கடுஞ்சுடராய் நின்றாய் நீயே
கடல் வரைவா னாகாய மானாய் நீயே
தனத்தகத்துத் தலைகலனாக் கொண்டாய் நீயே
சார்ந்தாரைத் தகைந்தாள வல்லாய் நீயே
மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே
மலர்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
சினத்திருந்த திருநீல கண்டன் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-38-3)

எனவரும் நம் அரசுகளின் அமுதவாக்கு நினைக

ஊன் வந்து - மானிட உடம்பு தாங்கிக் குரு மூர்த்தியாய், புறத்தேயும் என் ஊன் உடம்பினுள் உள்ள மனத்தின் கண் அகத்தேயும் நீயே வலிய எழுந்தருளி.

"உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக்
கெள்ளுந் திறமேது மில்" திருவருட்பயன் (96)

என்று நம் ஞான சாத்திரம் நவில்வது நினைக.

உரோமங்கள் உள்ளே உயிர்ப்பு எய்த - நீ உன் உள்ளத்தினுள்ளே எழுந்தருளியதால் எய்திய பேரின்பம், உள்ளம் உடம்பு இரண்டிலும் முற்றிலும் நிறைந்து இடம் போதாமையின் மயிர்க்கால்கள் தோறும் புறம்பே கசிய. *உரோமம்* - மயிர். ரோமம் என்ற வடசொல்லின் தமிழ் வடிவம். *உயிர்ப்பு எய்தல்* - வெளிப்படுதல். *எய்த* - எய்துதற்குக் காரணமான.

தேன்வந்து அமுதின் தெளிவின் ஒளி வந்த வான்வந்த வார்கழல் - தேன் அமுது தெளிவு இவைபோன்ற இன்பம் வருவதற்குக் காரணமாகிய வான் வந்த வார்கழல். *வந்த* - வருவதற்குக் காரணமாகிய. *ஒளி*-பேரானந்தம் பெற்றதனுல் உடம்பின் கண் வந்த பிரகாசம். ஒளி வந்த கழல். *வான் வந்தவான்கழ* - மேன்மையான கழல். *தெளிவு* - கனிச்சாறு; கருப்பஞ்சாறு முதலியவற்றைக் கசடு நீங்க வடித்தெடுத்த பகுதி. "ஞானக்கரும்பின் தெளியை" (209) என்று பின்னரும் உரைத்தல் காண்க. தேன் அமுது தெளிவு என்பன சிவானந்தத்துக்கு உவமையாகப் பல இடங்களில் காட்டப்படுள்ளன.

வார்கழல் - வார் - நீண்ட முன்னம் 155-ம் திருப்பாடலுரையில் மேற்கோள் காட்டிய தொல்காப்பியம் சொல்லதிகாரம். உரியியல் சூத்திரம் 317 பார்க்க. *கழல்* - ஈண்டு அடையடுத்த தானியாகு பெயராகத் திருவடிகளை உணர்த்திற்று.

இத்திருப்பாடலில் இறைவன் காமிய தவமுயலும் பெருந்தேவர்களுக்கும் காண இயலாதவனுயினும் ஏழையடியார்களின் மெய்யன்புக்கு எளிவரும் இயல்பு வழுத்தப்பட்டது.

இத்திருப்பாடலில்; இறைவன் மெய்யடியார் நெஞ்சுள் புகுந்து நல்கும் இன்பம், உள்ளமும் உடலும் நிறைந்து மேலும் இடமின்றி மயிர்க்கால் தொறும் கசியும் மகிழ்ச்சி கூறப்படுதலின் **"ஆனந்தக்களிப்பு"** வெளிப்படல் காண்க.

179. கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலமன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்கா ணம்மானாய் ரு

(இ-ள்)

கல்லைப் போன்றுள்ள வலிய மனமுடைய இழிந்த என்னை; வல்லமையை ஆள்கின்றவனும் சௌந்திர பாண்டியனும் திருப் பெருந்துறையினனுமாகிய சிவபெருமான்; கல்லைப் பிசைந்து கனியாகச் செய்தது போல என் நெஞ்சைக் கனிவித்து; பித்துண்டாக்கி; தன் அருள்வெள்ளத்தில் மூழ்குவித்து; என் வினைகளை எல்லாம் நீக்கினான்; அத்தகைய மறையவனும் தில்லைத் திருநகரில் புகுந்து சிற்றம்பலத்தில் நிலையாக உள்ளவனுமாகிய; விரைந்த செலவுள்ள ஆனூர்தியனை; அம்மானைபொருளாய் அமைத்துப் பாடுவம்.

(வி-ரை)

இத்திருப்பாடலில் "பிச்சேற்றி" என்பதைக் "கனியாக்கி" என்றதன் பின் அமைத்துக்கொண்டு பிறகு பாடல் முழுவதுக்கும் ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை : கல்- மனம், இறைவன் செய்த உதவியை நினையாமையால் திண்மையுற்றது. ஆம் "ஆகும்" என்பது "ஆம்" எனவாயிற்று. ஆக்கச் சொல் உவம உருபில் வந்தது. "ஆள்வாரிலி மாடாவேனோ" (382) என்பது நம் அடிகள் திருவாக்கு. கடைப்பட்ட நாயேனை "நாய்" பற்றி முன்னம் சிவபுராணம் 60-ல் "நாய்" என்பதன் கீழுரைத்தாம். அந்த நாய்க்குத் தன் தலைவன்மாட்டு "நன்றியுணர்வு" என்னும் ஒரு உயர் குணமுள்ளது. நான் உன்னிடம் அந்த நன்றியுமில்லேன்; ஆதலின் நான் நாய்களினும் கடைப்பட்டவன் என்றவாறு.

வல்லாளன் - திண்மை செறிந்த கல்லைக் கைகளாற் பிசைவது எத்துணை உடல் வலிமையுடையோருக்கும் இயலாத செயல். இவன் கல்லையொத்த என் மனத்தைப் பிசைந்தது மட்டுமின்றி அதை மிகவும்

குழைவுள்ள கனியாகவும் ஆக்கிவிட்டான். ஆதலின் இவன் வன்மையை ஆள்பவனானான்.

கல்லைப் பிசைந்து கனியாக்கிப் பிச்சு ஏற்றி - வல்லவனொருவன், கல்லைப் பிசைந்து கனியாக்குவது போல இவன் என் திண்ணிய நெஞ்சைக் கனிவித்தான். அத்துடன் நில்லாது பிச்சும் ஏற்றினான் என்றார். இப்பழமொழியை நம் அடிகள் "கண்ணுருரித்தகனி" (போற்றித் திருவகவல் - 97) "கல்லை மென்கனியாக்கும் விச்சை" (திருவாசகம் 98); "கண்ணுருரித்தென்ன" (திருவாசகம் 243) எனப் பிற விடங்களிலும் கையாள்கின்றார். இதுபற்றி முன்னம் 98 - ம் பாடலில் மேற்குறித்த பகுதி உரையில் விரிவாக விளக்கினோம். *பிச்சு ஏற்றி* - கடவுள்மால் கொள்ளச் செய்து. பிசைந்து, ஆக்கி, ஏற்றி, அழுத்திக் கடிந்த வேதியன் என்று முடித்துக் கொள்க.

"*கல்லைப்பிசைந்து மென்கனியாக்கி*" - என்பதற்குப் பசு போதத்தைப் பதிபோதமாக மாற்றி என உரைத்தார் திரு. தேசிகர் அவர்கள்.

கல்லாமனம் என்பதற்கு "நின்னை எய்துதற்கான தவ நெறியில் நிற்கக் கற்றுக் கொள்ளாத மனம்" என்றுரைத்தனர் முன்னுரையாளரில் சிலர். "*கல்லைப்பிசைந்து கனியாக்கி*" என்ற உவமையினாலும், தவநெறியில் நில்லாது உலகியலில் உழல்பவர்களிலும் மென்மையான மனமும் அன்பும் காணப்படுதலினாலும் தவநெறியில் நிற்போருள்ளும் சிலர் சாபம் முதலியன தரும் வன்நெஞ்சம் கொடிருந்தமை காணப்படுவதாலும் அவ்வுரையின் பொருத்தம் மேலும் ஆய்வுக்குரித்து.

தன் கருணை வெள்ளத்து அழுத்தி - உண்ணும் பக்குவத்திலுள்ள ஒரு கனி சில நாட்களில் அழுகிக் கெட்டுவிடும். அக்கனியை உண்ணும் நிலையிலுள்ள போதே தேனில் பெய்து மூடிவைக்கின் பல நாட்கள் சென்ற பின்பும் கெடாமல் உட்கொள்ளும் பக்குவத்தில் இருக்கும். ஈண்டு இறைவன் கல்லையொத்த என் மனத்தைப் பிசைந்து கனியாக்கியதுடன் அதைக் அருளாகிய வெள்ளத்தில் நன்கு மூழ்கும்படி அழுத்தி வைத்தான். ஆதலின் என் மனம் மீண்டும் உலகியலில் சிக்கிச் சிவநெறிச் செலவுக்குத் தகாமல் மாறுவதின்று என்றவாறு. *கருணை*- ஈண்டுக் கருணையால் வரும் இன்பம் குறித்து நின்றது.

வினைகடிந்த வேதியனை- வினை- சஞ்சிதம், பிராரத்தம் ஆகாமியம் என மூன்று பிரிவாகவுள்ள கன்மங்கள். இவை உள்ளவரை ஆன்மாவுக்கு பிறப்பிறப்பு நீங்கா. *கடிந்த* - அழித்த. திருப்பெருந்துறையில் குருந்த

மரத்தடியில் இறைவன் ஆட்கொண்டபோது அவன் அருள் நோக்காகிய சட்சு தீக்கையால் சஞ்சிதம் எரிந்து அழிந்தது. இப்பொழுது அவன் கருணை வெள்ளத்துள் என்னை அழுத்தியுள்ளான். கடலின் அடியில் ஒரு குடம் கிடந்தால் அதன் உள்ளே கடல் நீர் நிரம்பியிருக்கும். வெளியே எல்லாப்பக்கங்களிலும் கடல் நீர் சூழ்ந்திருக்கும். கடல் நீரின் வியாபகத்துள் அடங்கியிருக்கும் அக்குடத்தை "ஊமைத்த சும்பு" என்று உபநிடதம் கூறும்★

அவ்வாறு இறைவன் அருள் வெள்ள வியாபகத்துள் அழுந்தியுள்ள என் பிராரத்த கன்மங்கள், என் செயலின்றி உடலூழாகக் கழியும்; கடல் நீருள் கிடக்கும் குடம் தன் செயலால் அசைவதின்று. அசைப்பது கடல் நீரே. அவ்வாறே அருள் வியாபகத்துள் ஆழ்ந்துள்ள எனக்கு ஆகாமிய கன்மங்களும் ஏறுவதில்லை. இவ்வாறு என் வினைகள் கடியப்படுதலின் இனி எனக்குப் பிறவியில்லை என்றவாறு.

வேதியனை - வேதித்தல் தாழ்ந்த ஒருபொருளை உயர்ந்த மற்றொரு பொருளாக மாற்றுதல். கல்லைக் கனியாக்கியது போல என் பசு போதத்தைப் பதிபோதமாக மாற்றியவர். முன்னம் போற்றித் திருவகவல் 92-ல் "வேதி" என்றதன் கீழுரைத்தவை காண்க.

தில்லை நகர்புக்குச் சிற்றம்பலம் மன்னும் - எல்லா இடங்களிலும் தன் சொரூப நிலையில் வியாபித்துள்ள சிவபெருமான் தில்லை மாநகரில் உள்ள கோயிலினுள் புகுந்தார். புகுந்த காரணம் தடத்த நிலையில் அம்பலவாணனாகத் தானியற்றும் திருவைந் தொழில் கூத்தை உயிர்கள் கண்டு வழுத்தி உய்யும் பொருட்டு. *சிற்றம்பலம்* - சிறிய ஆடாங்கு. தில்லையிலுள்ள ஐந்து ஆடரங்குகளில் பேரம்பலத்தினின்றும் பிரித்துக் காட்டச் சிற்றம்பலம் என்றார். இஃதே அம்பலவாணன் எழுந்தருளியுள்ள இடம். திருக்களிற்றுப் படிவழியாக அடைய உள்ளது. *மன்னும்* - நிலைபெற்றிருக்கும். தில்லைநகர் புக்கவன் சிற்றம்பலத்தில் ஒருகால் எழுந்தருளியபின் மீண்டும் வெளிப்போந்து சொரூப நிலையில் மறையாமல் சிற்றம்பலத்திலேயே நிலைபெற்றிருக்கக் காரணம், இனிப் படைப்புக்கு வரும் உயிர்கள் உட்பட சகல நிலையிலுள்ள எண்ணற்ற ஆன்மாக்கள் தன்னைக் கண்டு வழிபட்டு வீடுபேறெய்தும் பொருட்டு என்க.

★ *ஊமைத்த சும்பு* - இதற்குக் கவியரசு அவர்கள் கொடுத்த விளக்கத்தை மேலே தந்துள்ளேன். இந்தச் சொல் ஞானாமிர்தம் அகவல் 17,54. உரைகளிலும் காணப்படுகின்றது. அவ்விடங்களில் பெரும்புலவர் ஔவை. சு.துரைசாமி பிள்ளை அவர்கள் தரும் உரைவிளக்கம் வேறு விதமாக உள்ளது. அதைக் கீழே காண்க.

"வளைவா யமையா மணி மருள் குடத்தும்" (அகவல் 17 வரி 12) உரை - "இரத்தினங்களின் ஒளியை மழுங்கச் செய்யும் வளைந்த வாயையில்லாத ஊமைக் குடத்தும்.

தில்லை - தலவிசேடம் - கீர்த்தித்திருவகல் உரையின் ஈற்றில் உரைக்கப்பட்டது.

ஒல்லை விடையானை- ஒல்லைவிடை - விரைந்து செல்லும் இயல்புடைய ஆனூர்தி. "இறைவனை அன்பால் நினைபவர் உள்ளத்தில் விரைந்து சென்று இறைவனைச் சேர்க்கும் விடை" என்பர் கவியரசு அறவர்கள். அறத்தின் உருவகமாகிய இந்த விடை அன்பர்களின் ஆன்மபக்குவத்துக்கேற்ப அவர்கள்மாட்டு விரைந்தும் மெதுவாகவும் செல்லும் இயல்பினது. இதனை;

திருசிற்றம்பலம்

"தூண்டு சுடர்மேனித் தூநீ றாடிச்
சூலங்கை யேந்தியோர் சுழல்வாய் நாகம்
பூண்டு பொறியரவங் காதிற் பெய்து
பொற்சடைக ளவைதாழப் புரிவெண் ணூலர்
நீண்டு கிடந்திலங்கு திங்கள் சூடி
நெடுந் தெருவே வந்தெனது நெஞ்சங் கொண்டார்
வேண்டு நடைநடக்கும் வெள்ளே *றேறி*
வெண்காடு மேவிய விகிர்த னாரே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-35-1)

எனவரும் நம் அரசுகளின் அருந்தமிழிற் காண்க.

(உரை விளக்கம்)

ஊமைக்குடம் - பேசுதற்கேற்ற வாயில்லாரை ஊமை யென்பவாகலின், தன்னுள் இருப்பதை வெளிப்படுத்தற் கேற்ற வாயில்லாக் குடத்தை ஊமைக் குடம் என்றார்; எனவே, இஃது ஏனைக்குடம் போலக் கழுத்தும் வாயும் இன்றி வறிதே குடுக்கைபோற் புழையுடையதாகிய குடமாம். வாயுடைய ஏனையவற்றைப் போலப் பயன்படாமையின் ஊமைக் குடம் எனப்பட்டது.

"குவிவா யமையாக் குடம்" (அகவல் 54-வரி 22) (உரை) - குவிந்த வாயில்லாத ஊமைக்குடத்து. உரைவிளக்கம். "இறைவன் மோன முத்திரை யத்தனாய்தானே யிருந்து காட்ட ஊமைத் தசும்புள் நீர் நிறைந்தாற் போல ஆனந்த மயமான ஒளி மாணாக்கர்க்கு (முருகு-நச் 111-2 உரை)

(ஞானமிர்தம் பக்கம் 99, 337 - அண்ணாமலைப் பல்கலைக் கழகம் திருபனந்தாள் அறக்கட்டளை வெளியீடு.)

இப்பகுதி, அடியார்களாகிய நாம் "தில்லை நகரில்புகுந்து அங்குச் சிற்றம் பலம் மன்னும் ஒல்லை விடையானைப் பாடுதும்". என உரைக்கவும் நின்றது.

இப்பாடல், இறைவன் ஆன்மாக்களின் பசுபோதத்தை பதிபோதமாக மாற்றி வீடளிக்க வல்லவன் என்பதைக் கூறிற்று.

இத்திருப்பாடலில் இறைவன், தன் மெய்யடியார்களுக்கு மலபரிபாகம் வருவித்துக் கடவுள் மாலேற்றிப் பிறப்பறுத்து நல்கும் இன்பம் நினைந்து மகிழ்வது கூறப்படுகின்றது. இதனால் "ஆனந்தக் களிப்பு" இயம்பியவாறு காண்க.

180. கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடை சூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த
ஆட்டான் கொண்டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய் ௬

(இ-ள்)

தோழி; ஒருவன் மாயம் செய்த விதத்தைக் கேட்டனையோ; சுதைதீட்டப் பட்டதும் பகைவர்களாற் கடத்தற்கரியதுமான மதில்கள் எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்துள்ள திருப்பெருந்துறையையுடைய சௌந்திர பாண்டியன்; நமக்குக் காட்டக் கூடாதனவற்றை எல்லாம் காட்டித் தாமரை மலர் போன்ற திருவடிகளைக் காட்டி; தன் அருளாகிய தேனைக் காட்டி; மங்கலமாகிய தன்னைக்காட்டி; உலகமக்கள் எள்ளி நகையாடவும்; நாம் உயர்ந்த வீட்டுலகையடையவும்; நம்மை அடிமை கொண்டு ஆண்டது மாவன அவன் செய்த மாயச் செயல்கள்; அவற்றை அம்மானைப் பாடலின் பொருளாக அமைத்துப் பாடுவோம்.

(வி-ரை)

இத்திருப்பாடலை:- தோழி; ஒருவன் கிறிசெய்தவாறு கேட்டாயோ; தீட்டார்மதில் புடை சூழ் பெருந்துறையான்; தென்னன்; அறிவியாதனவற்றை இப்பொழுது அறிவித்து அனுபவப்படுத்தி, தாள் தாமரை காட்டி;

தன்கருணைத் தேன் காட்டி; சிவம் காட்டி; நாட்டார் நகை செய்ய நாம் மேலை வீடு எய்த; தான் ஆட் கொண்டு ஆண்டவா அம்மானாய்ப் பாடுதும் - என்று அன்னுவயம் செய்துகொண்டு பொருள் காண்க.

ஆட்கொண்டு - அடிமையாகச் கொண்டு *ஆண்டவா* - அடிமைக்கு வேண்டுவவைற்றைத்தந்து. *தான்* - அசை.

தோழி - திருவம்மானை மகளிர் விளையாட்டு அதில் ஈடுபடும் பெண்கள் பாடுவதாக அருளிச் செய்யப்பட்டவை இப்பகுதியில் வரும் பாடல்கள் அம்மானை விளையாடும் பெண் ஒருத்தி மற்றொருத்தியை விளித்து முன்னிலைப் படுத்துப் பாடுவதாக அமைந்துள்ளது இப்பாடல். அவ்வாறு அவன் தோழி என்று விளித்தான். இதற்கு இவ்வாறன்றித் தலைவி கூற்றாகக் கொண்டு, "தலைவன் நம்மை மறந்தொழிந்தானல்லன்" என்ற கபங்கிக்குர் தலைவி வன்புறை எதிரழிந்து அவனை இயற்பழித்ததாம் - என அகப்பொருள் விரிந்தனர் முன்னுரையாளரில் சிலர். அவையெல்லாம் வலிந்து பொருள் கோடலாம். நம் அடிகள் இப்பகுதியை அருளில் செய்த சூழ்நிலையைத் தோற்றுவாயில் விரித்தாம். அதனையே தொடர்ந்து கடைப்பிடிப்பாம்.

ஒருவன் கிறிசெய்த ஆறு கேட்டாயோ - ஒரு முக்கியச் செய்தியைக் கூற விரும்புவோர் கேட்போர் ஆவலைத்தூண்டி, தம் கூற்றை அவர் மனத்தை ஒரு முகப்படுத்திச் செவிகொள்ளும் பொருட்டுச் செய்தியைக் கூறுமுன் "ஒரு செய்தி கேட்டனையோ?" என்று தொடங்குவர்; செவிமடுப்போரும் "என்ன என்ன" என்று விழைவொடு கேட்கத் தொடங்குவர். நம் அடிகள் அந்த உத்தியை ஈண்டுக் கையாள்கின்றார். ஒருவன் - எவனோ ஒருவன் என்று இலேசாகத் தொடங்குகின்றார். ஆனால் அவன் "ஒப்பற்றவன்" "பதி ஒருவனே" அவனுக்கு மிக்காருமிலர் என்ற கருத்துக்கள் காண்க.

"ஒன் றென்ற தொன்றேகா ணொன்றே பதிபசுவா
மொன் றென்ற நீபாசத் தோடுளைகா - ணென்றின்று
லக்கரங்க னின்று மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு"

(சிவஞானபோதம் சூ.1. அ.1. உதா. 2)

என்பது நம் ஞான சாத்திரம்.

அவன் திருப்பெருந்துறையினனும் தென்னனுமாகிய சிவபெருமானே என்றவாறு. முன்னம் திருவண்டப்பகுதி 43-ல் "ஒருவன் என்னும் ஒருவன்"

என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் அடிக்குறிப்பும் காண்க. "அவன் மாயம் செய்த வழியைக் கேட்டனையோ" என்றவாறு. *கிறி*- மாயம். *ஆறு*- முறைமை, தன்மை இயல்பு.

திட்டார் மதில்புடை சூழ் : திட்டார்மதில் - திட்டு+ஆர்+மதில். *திட்டுதல்*- சுதை பூசுதல். *ஆர்மதில்* - பகைவர்களாற் கடத்தற்கரிய மதிலரண். *ஆர்* - அரிய. *புடைசூழ்* - நகரின் எல்லாப் பகுதிகளையும் புறத்தே சூழ்ந்துள்ள மதிலரண். பகைவர், ஈண்டு மும்மலங்களையும், *மதில்* - திருவருளையும் குறிப்பாலுணர்த்தி நின்றன. ஆன்மாக்களின் பகையாகிய மலம் திருப்பெருந்துறையினுள் புகாது திருவருள் அரண்கோலியுள்ளது என்றவாறு.

பெருந்துறையான் தென்னன் - மதில்கள் சூழ்ந்துள்ளது திருப்பெருந்துறை நகரம். அந்நகரத்தையுடைய பெருந்துறையான் முன்னம் சௌந்திரபாண்டியனாகப் பாண்டிய நாட்டை ஆண்ட சிவபொருமான் என்றவாறு.

காட்டாதன எல்லாம் காட்டி - காட்டாதன - உரியபக்குவம் எய்தாத நமக்குக் காட்டக்கூடாதன. *காட்டாதன* என்றதால், "காட்டக்கூடியன" வும் உள என்பது பெற்றும். அவையாவன; உலகிலுள்ள பொருள்கள் பலவற்றை நாம் காண்கின்றோம். கண்கள் ஊனமின்றி ஒளியுடன் நன்கு அமைந்திருப்பினும் ஆன்ம அறிவு கண்ணுடன் கலந்து நின்று கண்டால் மட்டுமே காணப்படும் பொருள் உள்ளத்தில் பதியும். இதனையே, காணுங்கண்ணுக்குக் காட்டும் உளம்போல்" என்று சிவஞான போதம் பதினோராம் சூத்திரம் செப்புகின்றது. இவ்வாறு நாம் காண்பன இறைவனால் அனைவருக்கும் காட்டக் கூடியன. காட்டாதன என்றவை யாவை? ஆன்மதத்துவங்கள் இருபத்து நான்கு. அவற்றின் தனித் தனிச் செயல்களையும் இயல்புகளையும் அறிதல் "*தத்துவரூபம்*" என்பர். அவை அனைத்தும் ஒன்றை ஒன்று அறியாத சடப்பொருள்கள் என்று அறிவது "*தத்துவதரிசனம்*". இச்சடப் பொருள்கள் நித்தியமானவை அல்ல; காலப் போக்கில் அழியும் மாலையன என்றறிதல் *தத்துவசுத்தி*. இவ்வுண்மையை;

> "*தத்துவ மனைத்து நோக்கித்*
> *தனித் தனிச் செயல்கள் காண்ட*
> *லொத்ததன் னுருவ மாகு*
> *மொன்றையொன் றுணரா தீது*

சத்தியஞ் சடமே யென்னத்
தானறிந் திடுதல் காட்சி
நித்திய மன்று சின்னு
ணீங்குத லென்றல் ***சுத்தி*** *"*

(தவத்திரு. அம்பலவாணதேசிகர் தசகாரியம் 25)

என்று பண்டார சாத்திரம் விளக்குதல் காண்க.

தத்துவங்கள் அனைத்தும் சடங்கள் என்றும், ஆன்மாவாகிய தான் அவற்றின் வேறாகிய சித்துப் பொருள் என்றும் உயிர் அறிதல் **ஆன்மரூபம்.** இவ்வாறு உணர்ந்த உயிர் சித்துப் பொருளாகிய தன்னையே பதியாக எண்ணும். அஃது ஏகான்மவாத நிலை. அஃதே "**ஆன்மதரிசனம்**". பின்னர் உயிர், தான் அறிவிக்க அறியும் சிற்றறிவுள்ள சதசத்து. தனக்கு அறிவிக்கும் பொருளாகிய பதிப்பொருள் தானன்று என்று உணர்தல் "**ஆன்மசுத்தி**" இவ்வுண்மைகளை;

" பாசவடி வேபகுப்பி லறிவதுவே ரூபகமாம்
பார்க்கிலதி லொரு செயலு மறநிற்ற றெரிசனமாந்
தேசுளநா மிதிலணைந்தோ முன்னுளி லிந்நாட்
டீண்டாதே நிற்றலது சுத்தியதாந் தேர்ந்திடு நீ
ஆசறவே தன்னறிவாய் மூன்றுமுண்டாய்த் தோன்றுங்கால்
அதுரூப *மாங்கவற் றுனைக்காண்ட* ***றெரிசனமாம்***
ஏசறவே காட்டியதை யெப்போது மிது காட்டே
இகழ்ந்திருந்தோ மிந்நாளு மென வழுத்தல் ***சுத்தியதே*** *"*

(தவத்திரு. தட்சிணு மூர்த்தி தேசிகர் தசகாரியம் 7)

என்று பண்டார சாத்திரம் பகர்கின்றது காண்க.

இவ்வாறு "*காட்டாதன எல்லாம் காட்டி*" என்றதன் கீழ் "தத்துவரூபம்" "தத்துவதரிசனம்" "தத்துவசுத்தி" "ஆன்மரூபம்" "ஆன்மதரிசனம்" "ஆன்மசுத்தி" - என்ற ஆறும் அடங்கியுள்ளமைகாண்க.

தாள் தாமரை காட்டி - தாமரைமலர்கள் போன்ற திருவடிகளைத் தாமரை என்றே கூறியது உருவகஅணி. "சேவடி படரும் செம்மல் உள்ளமொரு" -

திருமுருகாற்றுப்படை (62) என்ற பகுதிக்கு நச்சினார்க்கினியர் உரைகாண்க. ஆணவமலத்தின் பிணிப்பு மெலிந்ததும் ஆன்மா, ஞானத்தை அறிய முனைந்து நிற்கும். திருவருளினால் ஆன்மா சிவத்தைத் தன்னுணர்வுடன் காணும் - இது *சிவரூபம்*. இதையே ஈண்டுத் *தாள் தாமரைகாட்டி* என்றார்.

தன் கருணை காட்டி - ஆன்மா, திருவருளின் வயப்பட்டுத் திரிபுடியின்றி அனைத்தையும் திருவருளின் செயலாகவே காணும். இது *"சிவதரிசனம்"* என்னும் நிலை. இதனையே ஈண்டுத் *தன்கருணைகாட்டி* என்றார். *தன் கருணைத் தேன் காட்டி* என்பதைத் "தன் கருணைகாட்டி" "தேன் காட்டி" என்று பிரித்துக் கொண்டு இவ்வாறு தசகாரியப் பொருள் காண்க.
இவ்வுண்மைகளை;

"பித்ததா யுளத்தி னின்ற
பிரிவிரு ளகல ஞான
வித்ததாய் நிற்கும் வீரம்
விட்டரு ளிச்சை மேவ
வைத்தது ***ரூப மாகும்***
வருமருட் செயல தாக
ஒத்தது ***காட்சி யாகும்***
உயர்சிவ மதற்குத் தானே"

(தவத்திரு. அம்பலவாண தேசிகர் தசகாரியம் 33)
என்று பண்டார சாத்திரம் கூறுவது காண்க.

தேன்காட்டி - தேன் ஒரு சுவை தரும் பொருள். நாக்கு அதைச் சுவைப்பது. தேனும் நாவும் ஒன்றுபட்டு நிற்கும் பொழுது சுவையின்பம் நுகரம் படும். அவ்வாறே சத்தியின் செயல்கள் அனைத்தும் சிவத்துக்கு இல்லை என்ற நிலையில் ஏகமாக நின்று பரஞானத்தை உயிருக்கு நல்குதல் அஃதாவது, சத்திபேதங்கள் அனைத்தும் இறைவனுள் ஒடுங்க இறைவன் தற்சொரூப சிவமாக நிற்கும் நிலையில் ஆன்மா அஃதுடன் சேர்தல் *"சிவயோகம்"* என்ற நிலை. இதையே ஈண்டுத் **தேன் காட்டி** என்றருளிச் செய்கின்றார்.

சிவம்காட்டி - சிவம் - மங்கலம்; பேரின்பம்; *காட்டி* - மங்கலமாகிய பேரின்பத்தை நுகரச் செய்து. அஃதாவது, தற்சொரூப சிவத்தைச் சேர்ந்த ஆன்மா, எல்லையற்ற சிவானந்தத்தை எப்பொழுதும் நுகர்ந்து

கொண்டிருந்தல். இது "*சிவபோகம்*" என்ற நிலை. இதனை ஆன்மலாபம் என்றும் கூறுவர் இவ்வுண்மைகளை;

"சத்தியின் செயல்க ளெல்லாந்
தற்சிவ மதனுக் கின்றாய்
ஒத்திட லுணர்வ ளித்த
லுயர் ***சிவ யோக மாகும்***
பித்தது வாகிச் சற்றும்
பின்னம தற்றுத் தன்னுள்
வைத்துயிர்ப் போக மாக
வளர்தலா ராமை தானே"

(தவத்திரு. அம்பலவாண தேசிகர் தசகாரியம் 34)

என்று பண்டார சாத்திரம் சாற்றுதல் காண்க.

திருவாவடுதுரை ஆதீனத்தில் குருமகா சந்நிதானங்களாகப் பட்டத்தில் எழுந்தருளியிருந்தவர்களும் இளையபட்டத்தில் எழுந்தருளியிருந்தவர்களும் சங்காபிடேகம் செய்யப் பெற்றவர்களுமாகிய பெருமக்கள் அருளிய சாத்திர நூல்கள் பண்டாரசாத்திரம் என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. இவர்களுள் தவத்திரு. அம்பலவாண தேசிகர்; தவத்திரு. தட்சிணாமூர்த்தி தேசிகர்; தவத்திரு. சுவாமிநாத தேசிகர் ஆகியோர் தசகாரியம் என்ற தலைப்பில் தனித்தனியே மூன்று நூல்கள் அருளிச் செய்துள்ளனர். அவற்றில் வரும் பாடல்களே மேலே காட்டப்பட்டுள்ளன. தசகாரியங்களை மெய்கண்ட சாத்திர நூல்களிலும் காணலாம். பண்டார சாத்திர நூல்கள் அனைத்தும் மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர் அவர்கள் உரையுடன் ஆதீன வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளன.

நாட்டார் நகை செய்ய - *நாட்டார்* இவ்வருமை பெருமைகளை அறியும் சிறப்பான அறிவு வாய்க்கப் பெறாத உலகமக்கள். *நகை செய்ய* - நாட்டார்கள் நோக்கில் சீவன்முத்தர்களின் செயல்கள் பித்தரின் செயல்களாகத் தெரிதலின் அவர்கள் எள்ளி நகையாடினர்.

நாம் மேலை வீடு எய்த - *நாம்* - மெய்யடியார்கள் அனைவரையும் உளப்படுத்திக் கூறியவாறு. *மேலை வீடு* மேலானவற்றுக்கெல்லாம் மேன்மையான வீட்டுலகம். அதன் சிறப்பு நோக்கி அதை "ஸ்ரேயஸ்" என்பர் வட மொழியாளர். சாயுச்சியம் என்னும் பரமுத்தி நிலை இஃதேயாகும்.

இந்நிலையை நாத பிந்து உபநிடதம்; "ஆறுவது இந்திர சாயுச்சியம்; ஏழாவது விஷ்ணுவின்பதம்" என்று பலவும் சொல்லிவந்து, "பன்னிரண்டாவது பிரஹ்ம சாச்வதம்; அதன் மேல்; மேலான வற்றின் மேலானது, தூயது, எங்கும் நிறைந்தது, மலமற்றது; சிறப்புள்ளது; இந்திரியங்களுக்கு எட்டாதது; குணங்கடந்தது; மனம் இறந்தால் வெளிப்படுவது; ஒப்பற்றது; சிவம்" - என்று கூறுகின்றது.

தாம் ஆட் கொண்டவா- ஆணவத்தோடு அத்துவிதமாக நின்ற உயிரை, ஆணவத்தினின்றும் பிரித்துப் பதியாகிய தன்னுடன் அத்துவிதமாக நிற்கும் படி செய்து, பரமுத்தி எய்தும் உறுதிபற்றி இறந்தகாலத்திற் கூறினர். **ஆட் கொண்டவாறு** - என்பதில் ஈறு கெட்டது.

ஈண்டு;

"தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகியெங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப் - போக்கும்
வரவு நினைப்பு மறப்பும் பகலும்
இரவுங் கடந்துலவா வின்பம் - மருவுவித்து."

(கந்தர் கலிவெண்பா 28-29)

என்ற குமர குருபர முனிவர் திருவாக்கு நினைக.

இத்திருப்பாடலில் நம் அடிகள், இறைவன் தமக்குப் பர முத்தியருளவுள்ள நிலையை எண்ணி மகிழ்வதைக் கூறுகின்றார். ஆதலின், "**ஆனந்தக் களிப்பு**" இயம்பியவாறு பெற்றாம்.

181. ஓயாதே யுள்குவா ருள்ளிருக்கு முள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை யாட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே யுலகேழும்
ஆயானை யாள்வானைப் பாடுதுங்கா ணம்மானாய் எ

(இ-ள்)

இடையறுது தியானம் செய்பவர்களின் உள்ளத்தில் இருக்கும் மெய்ப் பொருளே; (அங்ஙனம் தியானம் செய்யாதவர்களுக்கு, அவர்களுக்குப் புறத்தில் அண்மையிலும் நில்லாது) தொலைவில் இருப்பவனே; பெருவீரனே; சௌந்திர பாண்டியனாகத் தான் முன்பு ஆண்ட பாண்டிய நாட்டிலுள்ள திருப்பெருந்துறையில் எழுந்தருளியவனே; அந்தணனே; உமையொருபாகனே; இழிந்த நம்மையும் அடிமையாக ஏற்றுக்கொண்ட தலைவனே; ·ுன்னையாகவுள்ள மெய்ப்பொருளே; தானே ஏழு உலகங்களுமாக ஆனவனே; அவ்வுலகங்களை எல்லாம் ஆட்சி செய்பவனே; அம்மானைப் பாடலின் பொருளாக அமைத்துப் பாடுவம்.

(வி-ரை)

இத்திருப் பாடலை ஆற்றொழுக்காகப் பொருள் செய்க.

ஓயாதே உள்குவார் உள்இருக்கும் உள்ளானை: ஓயாதே - இறைவனை எண்ணும்முறை இருவகை. ஒன்று நீர் சொட்டுவது போல இடையிட்டு எண்ணுதல். திருக்கோயில் வழிபாடு, ஆன்மார்த்த வழிபாடு போன்றவற்றில் சில நாழிகை இறைவனை வழிபட்டுப் பின் உலகியலில் ஈடுபடுதல் இவ்வகை. மற்றொன்று எண்ணெய் ஒழுக்குப் போன்று இறைவனைத் தியானம் செய்வது. பேரடியார்கள் உலகியற் செயல்களில் ஈடுபட்டிருப்பினும் உள்ளத்தில் இறைவனை நிறுத்தியவாறே தொழிற் படுவர். இவர்கள் செய்யும் தியானத்தையே ஈண்டு "*ஓயாதே*" என்றார், இனி; "*உள்குவார் உள்ளில் ஓயாது இருக்கும்*" என இயைத்து, "நுணுகாமல் வெளிப்படையாக இருக்கும்" என உரைப்பினுமாம். "*ஓய்தல்*- உள்ளதன் நுணுக்கம். முன்னம் போற்றித் திருவகவல் 86-ல் "சாய்தல்" என்றதன்கீழ் எடுத்தாண்ட இலக்கண விதி காண்க. *ஓயானை* - மெலியாதவனை; சலிப்பில்லாதவனை என்றுரைத்தார் முன்னுரையாளரில் சிலர்.

உள்குவார் - தியானம் செய்பவர்கள். *உள்இருக்கும்* - தியானப் பொருளாக நெஞ்சில் எழுந்தருளியிருக்கும். *உள்ளானை* - உண்மைப் பொருளாக இருப்பவனை. பதி, என்றும் அழியாத மெய்ப்பொருள் என்பது நினைக. "உள்ளத்தின் உள்ளே நின்ற கருவே" என்றது நம் அரசுகள் வாக்கு.

அதை 149-ம் திருப்பாடல் உரையில் எடுத்தாண்டாம். ஆங்குரைத்தவை காண்க. ★

சேயானை - அவனை நினையாதாருள்ளத்தில் அவன் இருப்பதில்லை. புறத்திலும் அவர்களுக்கு அண்மையில் இருப்பதில்லை. நெடுந் தொலைவில் அவர்கள் அறியாதவாறு உள்ளான் என்றவாறு. முன்னம் 104-ம் திருப்பாடலில் "நின்மெய்யர் மெய்யனே" என்றதன் கீழுரைத்தவை காண்க. *சேயான்*- உலகங்களுக்கு அப்பாற்பட்டவன் எனலுமாம்.

இதனை;

"விஸ்வாதிக்கோ ருத்ரோ மஹர்ஷி"

- என்று நாராயணோப நிடதம் கூறுகின்றது.

சேயான் - செம்மையானவன் எனலுமாம். *சேயான்* - செந்நிறம் பொருந்தியவன் என்றுரைத்தனர் முன்னுரையாளரில் சிலர்

சேவகனை - சேவகம் வலிமை மிக்க பகைவர் பலரை ஒருவனுகவே எதிர்த்து அழிக்கும் பெருவீரம். அச் செயல்களில் சிலவற்றை 212-ம் திருப்பாடலில் நம் அடிகளே கூறுகின்ருர்கள். பதினோராம் திருமுறையில் நக்கீரதேவ நாயனுர் அருளிச்செய்த "கோபப் பிரசாதம்" என்ற பனுவலில் சிவபரஞ்சுடரின் சேவகச் செயல்கள் செவ்வனே தொகுக்கப் பட்டுள்ளவை காண்க. அதர்வணவேத சரபோபநிடத்தில் சிவபெருமானின் சேவகங்கள் பல கூறப்பட்டுள்ளன. அவற்றுட் சில; பேரூழியில் எல்லா உலகங்களையும் நெற்றி விழிப்பொறி ஒன்றினுல் அழித்தல்; யாவரையும் ஒறுத்தல்; உலகை அலைத்த நரசிங்கத்தைச் சரபவடிவங் கொண்டு கிழித்து அதன் தோலை உரித்து அணிதல்; திருமாலை, அவன் மச்சகூர்ம அவதாரங்களில் ஒறுத்தல்; நான்முகனின் ஐந்தாவது தலையைக் கிள்ளிக் களைதல்; இடத்தாளால் கூற்றுவனை உதைத்து ஒழித்தல்; கொடிய நஞ்சை உண்டல், முப்புரங்களை எரித்தல், காமனைக் கனலுள் வைத்தல் என்பன.

சேவகன் - பணியாளன் எனலுமாம். பரவையம்மை மாளிகைக்குத் தூது சென்றது, விறகு விற்றது, மண் சுமந்தது போன்ற எண்ணற்ற

★ The heart of a good man is the sancutury of God in this world

Mad Neckas

திருவிளையாடல்கள் காண்க. "எற் பணியாளா யெனைப் பிரியாதே" (இருபா இருபஃது - 18) என்று நம் ஞான சாத்திரம் நவில்வதும் நினைக.

தென்னன்பெருந்துறையின் மேயானை - தென்னன் - தென் - அழகிய; நன் - நல்ல என்று கொண்டு அழகிய நல்ல திருப்பெருந்துறையில் ஞானசிரியனாக எழுந்தருளியவனை எனலுமொக்கும்.

வேதியனை : வேதியன் - மறைகளை அருளிச் செய்தவன் எனலுமாம். சிவபெருமானே ஆதியில் நான்முகனைப் படைத்து அவனுக்காக மறைகளை அருளிச்செய்து உபதேசம் செய்தவன் - என்று சுவேதாசுர உபநிடதம் கூறுவதும்; கைவல்யோபநிடதத்தில்; "எல்லா மறைகளாலும் சொல்லப் பெறுபவனும் மறைகளைத் தோற்றுவித்தவனும்; மறைகளை அறிந்தவனும் நானே" என்று கூறப்பட்டுள்ளதும் காண்க.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 3-120-1)

என்று நம் பிள்ளையார் திருவாக்கு நினைக.

வேதியன் - "வேதிப்பவன்" என்று பிறவினையாகக் கொண்டு, தாழ்ந்த பொருளை மிக உயர்ந்த பொருளாக மாற்றுபவன் என்ற பொருளில், நாய்

போன்று இழிந்த நம்மைத் தசகாரியங்களால் உயர்த்தி, சிவபோகம் நுகரச் செய்பவன் எனலுமாம்.

மாது இருக்கும் பாதியனே- தன் திருவுருவின் ஒரு பாகத்தில் தடையிலா ஞானமாகிய சத்தியை வைத்தவன் என்பது உட்பொருள்.

தாய் ஆன தத்துவனே- முன்னம் 178-ம் திருப்பாடலில் "தாய் போல் தலை அளித்து" என்றதன் கீழுரைத்தவை காண்க. தாய் எல்லாப் பொருள்களுக்கும் பிறப்பிடம். *தாயானே* என்பதும் பாடம். தத்துவன் - மெய்ப்பொருளாக உள்ளவன்.

தானே உலகு ஏழும் ஆனானே- அட்ட மூர்த்தங்களும் சிவபெருமானுக்கு உருவங்கள், ஆதலின் தானே உலகு ஏழுமாக ஆனான் என்றார். "ஆனான்" என்ற சொல்லாற்றலால், அவையே இறைவன் அல்ல; சொரூப நிலையில் அவன் அவற்றின் வேறாக உள்ளான் என்பது பெற்றாம்.

"எனக்கு வேறாக யாதொன்றுமில்லை; நானே யாவுமாயுள்ளேன்; என்னிடத்தில்யாவும் இருக்கின்றன" என்று சிவபெருமான் வாக்காகப் பஸ்மஜாலோபநிடதம் கூறுவது காண்க.

"ஸர்வோவை ருத்ரஸ் தஸ்மை ருத்ராய நமோ அஸ்து". பொருள் :- "எல்லாம் உருத்திரனே! அத்தகைய உருத்திரனுக்கு வணக்கம்." என்று தைத்திரீயாருணிய சாகை நாராயணம் கூறுவதும் நினைக.

ஆள்வானே- கலப்பால் ஏழு உலகங்களுமாக ஆனவன் தன் சொரூப நிலையில் அவற்றினின்றும் வேறாகி, சடப்பொருள்களாகிய அவ்வுலகங்களைத் தன் உடைமைகளாகவும் அவற்றில் வாழும் உயிர்களைத் தன் அடிமைகளாகவும் கொண்டு ஆட்சி புரிபவன் என்றவாறு. தானே உலகங்களாக நிற்பதால் இறைவனை "விசுவரூபன்" எனவும் அவற்றின் உள் நிற்றலின் "விசுவாந்தர்யாமி" எனவும்; அவற்றை ஆள்வதால், "விசுவநாதன்" எனவும்; அவற்றைக் கடந்து நிற்றலால். "விசுவாதீதன்" எனவும் வழங்கப்பெறுகின்றான். 159-ம் திருப்பாடல் உரையில் மேற்கோள் காட்டிய திருமுறைப்பாடல் (1-62-6-ல்) "கோவியலும் பூவெழுகோற் கோளிலியெம் பெருமானே" எனவரும் நம் பிள்ளையார் திருவாக்கு நினைக.

"அவ்வுருத்திரனுக்கு மேலான பதியுமில்லை; காப்பானுமில்லை; பிறப்பிடமுமில்லை; அவனே காரணன்; அவனே காரணாதிபதிகளுக்கும் அதிபன்; அவனைப் பிறப்பிக்கின்றவனும் அவனுக்கு அதிபனும் இல்லை" எனச் சுவேதாசுர உப நிடதம் கூறுவதும் மனங்கொள்க.

இத்திருப்பாடலில், தாயானதத்துவனான இறைவன், நாய் போன்று இழிந்த நம்மையும் ஆட்கொண்ட நாயகனாக உள்ளதை நினைத்து மகிழ்தலின் "ஆனந்தக்களிப்பு" அறைந்தவாறு பெற்றாம்.

182. பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய் அ

(இ-ள்)

இசையுடன் கூடிய பாடலுக்குப் பரிசை ஆக்கியளிக்கும் உமையம்மையை ஒரு பாகத்திற் கொண்டவனும்; விருப்பத்துக் குரியவனும்; திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ளவனும்; வானளாவிய புகழினனும்; பெரிய மண்டலங்களின் தலைவனும்; நெற்றி விழியினனாகிய இறைவனும்; ஆரவாரமிக்க மதுரை மாநகரில் மண்ணைச் சுமந்து; அதற்குக் கூலியேற்று; அந்த அரசனால் அடிக்கப்பட்டுப் புண்ணுற்றவனுமாகியவனின் பொன்போன்ற திருமேனியை நாம் அம்மானைப்பாடலின் பொருளாக அமைத்துப் பாடுவோம்.

(வி-ரை)

இத்திருப்பாடலுக்கு ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

பண்சுமந்த பாடல் பரிசு படைத்து அருளும் : பண்சுமந்த பாடல்- குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன ஏழு சுரங்கள். இசை பிறக்குமிடத்துத் தாரத்தில் உழையும், உழையிற் குரலும்; குரலில் இளியும்;

இளியில் துத்தமும்; துத்தத்தில் விளரியும்; விளரியில் கைக்கிளையும்; கைக்கிளையில் தாரமும் என ஒன்றினின்று ஒன்று பிறக்கும். இரண்டுக்கு மேற்பட்ட சுரங்களுடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சுரங்கள் கூடிப் பண்கள் பிறக்கும். அவ்வாறு பிறக்கும் பண்கள் எண்ணற்றவையாக விரியும். இன்று பண்டைத் தமிழகத்தில் நிலவிய பண்களில் 104 பண்களுக்குமேல் இசை ஆய்வாளர் இனம் கண்டுள்ளனர். அவை பகற்பண், இராப்பண், பொதுப்பண் என்று பாகுபாடு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் இயல்புகளை இசைவல்லார்வாய்க் கேட்டுணர்க. இன்று தமிழிசை, கர்னாடக சங்கீதம் என்ற வடிவங்களில் பண்கள் இராகங்கள் என்ற பெயரிலும் வழக்கிலுள்ளன.

சுமந்த - ஒருவர் அல்லது ஒருபொருளுக்கு நிலை நிற்கத் தரும் ஆதரவு "தாங்குதல்" எனப்படும். அது தாங்கப்படும் பொருள் அல்லது தாங்கப்படுவோர் நிலைநிற்றற்குச் செய்யும் முயற்சிக்குத் துணை நிற்பதுமட்டுமாகும். எடுத்துக்காட்டாக முதியவர் ஒருவர் பள்ளத்தினின்றும் மேலேற முயல்கின்றார். மேட்டில் நிற்பவர் அவருக்குக் கை கொடுத்து உதவுதல் அவரைத் தாங்கி மேலேற்றலாம். *சுமத்தல்*- என்பது சுமக்கப்படும் பொருளின் முயற்சி சிறிதுமின்றி சுமப்பவர் வலிமையே முழுவதும் பயன்படுவதாம். எடுத்துக்காட்டாக "விறகு சுமத்தல்" என்பது காண்க. இதில் விறகுக்கு ஒரு பயனுமில்லை. சுமப்பவரே பயன்பெறுகிறார். ஈண்டுப் *பண் சுமத்தலில்*- பண்ணின் முயற்சியோ பண்ணுக்குச் சுமந்ததன் பயனோ இல்லை. இரண்டும் சுமக்கும் பாடலுக்கே. பண்ணின் இனிமை முழுவதும் பாடலுக்காகின்றது. பாடல் இசை வளம் பெற்றுக் கேட்போரால் பாராட்டப்படுகின்றது.

பாடல்-"பாடலுக்கு" எனப் பொருட்டுப் பொருளில் வந்த நான்கனுருபு விரித்துக் கொள்க. ★

★ *பாடல் - பாடற்றொழில்களாவன; யாழின்கண் வார்தல் முதலிய வெட்டும், பண்ணல் முதலிய வெட்டும், மிடற்றின்கண் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடில மென்னுமைந்தும். பெருவண்ணம் இடைவண்ணம்; வனப்புவண்ணம் முதலிய வண்ணங்க ளெழுபத்தாறுமாம்.*

(திருக்குறள் 573-க்குப் பரிமேலழகர் உரை)

இவைபற்றிய விரிவுகளைச் சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லாருரையில் காண்க.

பரிசு படைத்து அருளும்- பரிசு- ஒரு பொருளை வாங்குபவன் அதற்கான விலையைப் பணமாகத் தந்து வாங்குவன். அவ்வாறு வாங்குவோன் உள்ளத்தில் அந்தப் பணத்தின் மதிப்பை விட வாங்கும் பொருளின் மதிப்பு சற்றுக் கூடியிருக்கும். விற்பவன் உள்ளத்தில் பொருளின் மதிப்பை விடத் தான் பெறும் பணத்தின் மதிப்பு சற்றுக் கூடி நிற்கும். ஒரு பொருளுக்கு ஒரு பரிசு நல்கும் பொழுது, பரிசின் மதிப்பு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. கொடுப்போன் கொள்வோன் இருவருள்ளத்தும், மீதூர்ந்து நிற்கும் மகிழ்ச்சியே கருதப்படும். ஈண்டுப் பண்சுமந்த பாடல்களுக்குப் படைத்தருளும் பரிசையும் அவ்வாறே மனங் கொள்க. **பரிசு படைத்து அருளும் பெண்** என்று கூட்டிப் பொருள் கொள்க. இத்திருப் பாடலின் முதலடி முற்றுமோனை. *பரிசு-* வெகுமதி.

பெண்சுமந்த பாகத்தன் - பண் சுமந்த பாடலுக்குப் பரிசுகளைப் படைப்பதும் அவற்றை நல்குவதும் திருவருளேயாம். அஃதிங்கு உமையம்மையாக உருவகம் செய்யப்பட்டதால் **பெண்** என்றார். “சிவமும் சத்தியும் இயைந்துள்ளதே பரமான்மா என்று நிச்சயிக்கப்படுகின்றது” என்று சைவ மகா புராணம் கூறுவது நினைக. பெண்சுமந்தபாகன் - திருவருளாகிய உமையம்மையைத் தன் திருமேனியின் இடப்பாகமாகச் சுமந்து கொண்டிருப்பவன் - மாதொருபாகன். முன்னரும் “நந்தம்மை ஆளுடையான் தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு முன்னி யவணமக்கு முன்சுரக்கும் இன்னருள்” *(170)* என்றருளியது காண்க. “பண் சுமந்த பாடல்களுக்குப் படர்சடையோன் அருளும் பரிசின் மதிப்பு அளவிடற் கரியது என்பதை,

திருச்சிற்றம்பலம்

“விளக்கினார் பெற்றவின்ப மெழுக்கினாற் பதிற்றியாகும்
துளக்கினன் மலர்கொடுத்தாற் றூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ஞ்ஞெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகடா மருளுமாறே”

(திருமுறை 4-77-3)

திருச்சிற்றம்பலம்

எனவரும் நம் அரசுகள் வாக்கிற் காண்க.

பெம்மான் - விருப்பத்துக்குரியவன் - *பெருந்துறையான்* - திருப்பெருந்துறையில் எழுந்தருளியவன், "பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளுபவனும், பெண் சுமந்தபாகத்தனும், பெம்மானுமாகிய பெருந்துறையான் என்று கூட்டியுரைப்பர் கவியரசு அவர்கள்.

விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசன் : விண் - வான். அஃது எல்லாப் பொருள்களுக்கும் தன்னுள் இடம் கொடுத்து வியாபித்து நிற்பது. இறைவன் புகழ் அதனுள் வியாப்பியமாக அடங்காமையின் அதைத் தன்மேல் சுமந்து கொண்டுள்ளது என்றவாறு. *வியன் மண்டலம்* - மிகுந்த இடப்பரப்புள்ள பகுதி. *வியன்* - அகலமான. திருக்குறள் 13-க்குப் பரிமேலழகர் உரை காண்க. ஈண்டு மேலுலகங்களைக் குறித்து நின்றது. *மண்தலம்* - நிலவுலகமாகிய இடம் என்று கொண்டு "எல்லா உலகுக்கும் தலைவனாகிய இறைவனை, நிலவுலகுக்கே தலைவன் போல"க் கூறியது இங்குள்ளாரையே தான் வலியவந்து ஆட்கொள்ளுதல் பற்றி என்று அமைதிப்படுத்துவர் திரு.முதலியாவர்கள். *ஈசன்* - அதிகாரமும் செல்வமுமுள்ள தலைவன். அவன் ஏனைய உலகங்களுக்கெல்லாம் தலைவர்களாகிய ஈசர்களுக்கும் தலைவனான மகேசுவரன். இவ்வுண்மையை "தம் ஈஸ்வரணும் பரமம் மஹேஸ்வரம்" - என்று சுவேதாச்வரத உபநிடதம் கூறுகின்றது. பொருள் - ஈஸ்வரர்களுக்கெல்லாம் மேலான மஹேஸ்வரனை.

கண் சுமந்த நெற்றிக் கடவுள் - பேரூழியின் காரணனாகிய முழுமுதல் என்பது குறிப்பு. *நெற்றிக் கண் சுமந்த கடவுள்* என்று மாற்றிக் கொள்ளலும் அமையும். அக்கண் எல்லாவற்றையும் ஒரு நொடியில் எரித்து அழிக்கும் ஆற்றல் பெற்றதாயினும் அதைப் பயன்படுத்திப் பாண்டியனை எரித்தழிக்காமல் பிரம்படி பெற்றதால் அவ்விழியை, வீணே சுமந்துள்ளான் என்பார் *கண்சுமந்த* என்றார். *கடவுள்* - கடவு+உள் = "சீவான்மாக்களின் உள்ளக் குகைதொறும் இருந்து ஞானம், கிரியை என்பவற்றை இயக்கிச் செலுத்தும் பிரமம்" என்பர் தவத்திரு பாம்பன் சுவாமிகள். முன்னம் போற்றித் திருவகவல் (89-ல்) "கடவுள்" என்றதன் கீழுரைத்தவை காண்க. ஈண்டுப் பாண்டியன் உள்ளத்திலிருந்து அவன் சினத்தைத் தூண்டிப் பிரம்பாலடிக்கும்படி கடவியதால் "*கடவுள்*" என்றார்.

கலிமதுரை மண்சுமந்து - கலி ஆரவாரமான ஓசை.

"கம்பலை சும்மை கலியே யழுங்க
லென்றிவை நான்கு மரவப் பொருள்"

(தொல்காப்பியம் - சொல் - உரியியல் சூத் - 349)

என்பது இலக்கணம்.

மதுரை நகரில் ஆண்டின் பன்னிரு திங்களும் திருக்கோயிலில் விழாக்கள் நிகழ்வன. அவ்விழாவில் எழும் குழலொலி, யாழொலி, கூத்தொலி, ஏத்தொலி அடியார்கள் குழுக்கள் தோறும் பெருகி விண்ணளவும் சென்று விம்முவதால் *கலிமதுரை* என்றார். *மதுரையின்கண்* என இடப் பொருளில் வந்த ஏழனுருபு விரித்துக் கொள்க. *மண்சுமந்த* என்பதும் பாடம்.

மண்சுமந்து - மண் முதல் நாதம் முடிய உள்ள தத்துவங்கள் அனைத்தையும் கடந்து நின்று அவற்றை இயக்கும் பரம பதியாக இறைவன் அத் தத்துவங்களிற் கீழ்ப்பட்டதான மண்ணைத் தன் தலையின் மீது சுமந்தானே என்று வந்தியம்மையின் அன்பு நினைந்து மனம் உருகிக் கூறியவாறு.

இறைவன், மண் சுமந்த வரலாறு இவ்வுரை நூலின் முதல்பகுதியில் "வாதவூரடிகள் வரலாறு" என்ற பகுதியில் "மண் சுமந்த திரு விளையாடல்" என்றதன் கீழ்க் காண்க.

கூலிகொண்டு - ஆன்மாக்கள் செய்யும் இருவினைகளுக்கு ஏற்ப இன்பதுன்பங்களைக் கூலியாகக் கொடுக்கும் இறைவன், தானே கூலியாளாக வந்து, அரும்பிட்டுப் பச்சிலையிட்டு ஆட்செய்யும் அன்னைதரும் பிட்டினைக் கூலியாகப் பெற்றுப் பிட்டுப் பிட்டுண்ட எளிமையை இயம்பியவாறு.

அக்கோவால் மொத்துண்டு- "அயனை, அனங்கனை அந்தகனைச் சந்திரனை வயனங்கள் மாளு வடுச் செய்த பெருவீரனாகிய எங்கள் கோமான், பாண்டிய நாட்டின் கோமான் ஒருவனால் அடிபட்டானே" என இரங்கியவாறு. அகரச்சுட்டு இழிபுணர்த்திற்று. *கோ*- அரிமர்த்தன பாண்டியன்.

புண் சுமந்த - காயம் ஒன்றுமில்லாத எங்கள் இறைவன் காயம் ஒன்று தாங்கிவந்து, மண் சுமந்து அக்காயத்தில் பெருங் காயமும் சுமந்தானே!

தனக்கு அன்புபட்ட வந்தியம்மையின் பாரம் தாங்கியது அவன் பண்பு போலும்! என்று மனம் உருகி உரைத்தவாறு.

பொன்மேனி - அருவம், உருவம், அருவுருவம் எனும் முத்திற மேனிகளில் ஒன்றும் இல்லாத இறைவன், வந்தியம்மை பொருட்டுத் தாங்கி வந்த பொன்னிறமான உடம்பு. அழகிய உடம்பு எனலுமாம்.

இத்திருப்பாடல் முழுவதும் இறைவனின் எளிவந்த அருளை நினைந்து மகிழ்வது கூறுகின்றது. அதனால் "*ஆனந்தக் களிப்பு*" புலனுதல் காண்க.

183. துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா வூர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றான்
அண்டமுத லாயினு னந்தமிலா வானந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்கா ணம்மானாய் கூ

(இ-ள்)

ஒற்றைக்கலையுடைய இளந்திங்களை அணிந்தவனும், மறைகளை அருளிச் செய்தவனும், திருப்பெருந்துறையினனும், ஒன்பது கொண்ட முப்புரி நூலினனும், அழகிய குதிரையில் ஏறி வந்தவனும், நீலகண்டனும், செந்நிற உடம்பினனும், வெண்ணீற்றினனும், அண்டங்களின் நிமித்த காரணனும் ஆகிய சிவபெருமான்; தொல்லை முறைப்படியே பழைய அடியார்களுக்கு முடிவற்ற பேரின்பம் நல்கி அருளும்; (அதனை உணர்ந்து) அண்டங்களில் வசிப்பவர்கள் வியப்புறுவர் (அங்ஙனம் வியப்புறுமாற்றை) நம் அம்மானைப் பாடலின் பொருளாக அமைத்துப் பாடுவோம்.

(வி-ரை)

இத்திருப்பாடலை; துண்டப் பிறையான்; மறையான்; பெருந்துறையான்; கொண்ட புரிநூலான்; கோலமா ஊர்தியான்; கண்டம் கரியான்; செம்மேனியான்; வெண்ணீற்றான்; அண்ட முதல் ஆயினான்; பண்டைப் பரிசே பழ அடியார்க்கு அந்தமிலா ஆனந்தம்; ஈந்தருளும் (அதனை உணர்ந்து)

அண்டம் வியப்புறும்; (அங்ஙனம் வியப்புறுமாற்றை) அம்மானாய் பாடுதும்; என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

துண்டப் பிறையான் - பிறைத் துண்டத்தான் என மொழிமாற்றிக் கொள்ளலும் அமையும். சிவபெருமான் சென்னியிற் சேர்த்துள்ள இளம் பிறை தேய்வதும் வளர்வதுமின்றி என்றும் ஒரு பெற்றியதாகும். அஃது அவனையுற்றார் பிறப்பிறப்பின்றிப் பீடுறும் இயல்பு குறித்தது. புரிசடையோன் புகலடைந்தோரைப் புரக்கும் ஆற்றலும் உணர்த்தும். இளம்பிறை வளைந்துள்ளமையில் அதைக் "கோணற் பிறை"; "கோணியபிறை" என்றும் கூறுவர். அஃது இறைவன், கோணிய ஒழுக்க முள்ளாரையும் ஏற்று உய்விப்பது குறிக்கும். வெண்கதிர்ச் செல்வனின் கோணல் அவன்தன் குருவின் மனைவிமாட்டுக் குற்றமிழைத்ததும்; தக்கனுக்குக் கொடுத்த வாக்கைக் காவாது உரோகிணிமாட்டு மட்டும் பெருங்காதல் காட்டியதும்; அனங்கனுக்குத் துணைநின்று இளம் காதலர்களை வருத்துவதும்; தக்கன் வேள்வியில் பங்கு பெற்றதும் போல்வன.

இறைவன் துண்டப் பிறை அணிந்த வரலாறு- 8-ம் திருப்பாடலுரையில் "தக்கன் வேள்வி செய்த வரலாறு" என்றதன் கீழ்க்காண்க.

மறையான் - மன்பதை, விதி விலக்குக்களை அறிந்து வினைகள் செய்து போகங்களைப் புணரவும், தேவதைகளை வழிபட்டு இட்ட சித்திகளை எய்தவும், ஞானம் எய்திக் குருவினால் வழிகாட்டப் பெற்று வீடுபேறெய்தவும் உதவுவன வேதங்கள். அவற்றை இறைவன் அருளிச்செய்தான். வேதங்களாற் சொல்லப்பெறும் பரம்பொருளும் அவனே ஆவன். ஆதலின் அவன் *மறையான்* ஆனான்.

எல்லா மறைகளாலும் அறியப்படுபவன் நானே; மறைகளைச் சொன்னவனும் நானே; மறைகளை அறிந்தவனும் நானே" - என்று சிவ பெருமான் கூறுவதாக உரைப்பது கைவல்யோபநிடதம்.

"இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் ஆகிய மறைகளும் இதிகாசம், புராணம், வித்தை, உபநிடதம் என்பனவும் இந்தப் பரம்பொருளின் சுவாசம்" என்றுரைப்பது பிருஹதாரண்யகோபநிடதம்.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"வானணி மதிபுல்கு சென்னியர் வண்டொடு
தேனணி பொழிற்றிருப் பூவ ணத்துறை
ஆனநல் லருமறை யங்க மோதிய
ஞானனை யடிதொழ நன்மை யாகுமே"

(திருமுறை 3-20-2)

"தொகுத்தவன் னருமறை யங்க மாகமம்
வகுத்தவன் வளர்பொழிற் கூக மேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவ னுரைவிடந் திருவிற் கோலமே"

(திருமுறை 3-23-6)

"ஏறின ரேறினை யேழை தன்னொரு
கூறினர் கூறினர் வேத மங்கமும்
ஆறின ராறிடு சடையர் பக்கமுங்
கீறின வுடையினர் கெடில வாணரே"

(திருமுறை 4-10-2)

திருச்சிற்றம்பலம்

எனவரும் தமிழ் மறைகளும் நினைக.

மறையான்- என்பதை எதிர்மறைப் பொருளில் வந்த வினையாலணையும் பெயராகக் கொண்டு பக்குவம் எய்திய ஆன்மாக்களுக்கு எதனையும் மறைக்காமல் விளக்குபவன் எனலுமாம்.

கொண்ட புரி நூலான் - கொண்ட - ஒன்பது புரிகளாகக் கொண்ட. "ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்" என்று திருமுருகாற்றுப்படை (183) தெருட்டுவது காண்க. மூன்று நூல்கள் கொண்டது ஒருவடம்.

அஃது இல்லத்திலிருக்கும் திருமணமாகாதோர் அணிவது. திருமணமான இல்லறத்தார் இரண்டு வடங்களாக அணிவர். அவர்களுள் மக்கட்பேறுடையார், மூன்று வடங்களாக அணிவர். அவற்றில் வடம் ஒன்றுக்கு மூன்று நூலாக மொத்தம் ஒன்பது நூல்கள் இருக்கும். சிவபெருமான் அணிந்துள்ளது ஒன்பது நூல்கள் கொண்ட மூன்று வடங்களாம்.

இதனை;

திருச்சிற்றம்பலம்

"ஒன்பது போலவர் வாசல் வகுத்தன
ஒன்பது போலவர் மார்பினி நூலிழை
ஒன்பது போலவர் கோலக் குழற்சடை
ஒன்பது போலவர் பாரிடந் தானே"

(திருமுறை 4-18-9)

திருச்சிற்றம்பலம்

எனவரும் நம் அரசுகள் அமுத வாக்காலறிக.

இறைவன் புரிநூல் மார்பினனுதல் ஆன்மாக்களுக்கு அறிவு விளக்கம் தருபவன் என்ற குறிப்பினது என்பர் கவியரசு அவர்கள்.

கோல மா ஊர்தியான் - அழகிய குதிரையில் ஊர்ந்து வந்தவன். இவ்வரலாற்றை இவ்வுரை நூலின் முதற்பகுதியில். "வாதவூரடிகள் வரலாறு" என்ற பகுதியில் "நரிகள் பரிகளான திருவிளையாடல்" என்றதன் கீழ்க்காண்க.

கோலம் + ஆ + ஊர்தியான் எனப் பிரித்து, அழகிய ஆனூர்தியினன் என்றுரைத்தாரும் உளர். *கண்டம் கரியான்* - நீலகண்டன். இஃது இறைவனின் காத்தல் தொழில் குறித்தது. இறைவன் நீலகண்டனான வரலாறு முன்னம் 8-ம் திருப்பாடல் உரையில் "நஞ்சமஞ்சிய வரலாறு" என்றதன் கீழ் உரைக்கப்பட்டது.

செம்மேனியான் - இறைவன் திருமேனியின் வண்ணம் குறித்தது. அது தீயின் வண்ணம். எனவே திருவைந் தொழிலில் அழித்தலைக் குறித்து நின்றது.

வெண்ணீற்றன் -இறைவன் தன் எரிபோல் மேனியில் பரையின் வண்ணமாகிய திருநீற்றைப் பூசி நிற்கும் கோலம் வழுத்தப்படுகிறது. திருநீற்றின் பெருமை முழுவதும் நம் ஆளுடைய பிள்ளையாரின் திருநீற்றுப்பதிகத்திற் காண்க. திருநீற்றுக் கோலம் இறைவனின் நித்தியத் தன்மையைக் குறித்து நின்றது.

"*கரியான்*"; "*செம்மேனியான்*"; "*வெண்ணீற்றன்*" என்பவற்றில் உள்ள முரண் சுவை கண்டின்புறுக.

அண்டமுதல் ஆயினன் - *அண்டங்கள்* - உலகங்களின் தொகுப்பு. *முதல் ஆயினன்* - அண்டங்கள் தோன்றுவதற்கு நிமித்தகாரணமாய் நிற்பவன். *முதல்* - வினைமுதல்; *கருத்தா* - அண்டங்களைத் தன் உடைமைகளாகவும், அவற்றில் வாழும் உயிர்களைத் தன் அடிமைகளாகவும் கொண்டு அவற்றை ஆளும் தலைவனாக உள்ளவன்.

அண்டங்களில் உள்ள சடப் பொருள்களையும் அவற்றில் வாழும் உயிர்களையும் அதிட்டித்து நின்று அவற்றை இயக்குபவன் எனலுமாம்.

"சித்திரமாயும் விசித்திரமாயும், இடமாயும் பலவகையாயும் பிறந்திருக்கின்றனவும்; பிறக்கவுள்ளனவுமான உலகங்கள் எவையோ அவையெல்லாம் உருத்திரனே; அத்தகைய உருத்திரனுக்கு வணக்கம்"

(தைத்திரீயாருணியசாகை நாராயணம்)

பிரமாண்டங்களாகிய பெரியதிருமேனி - (பஞ்சப்ரஹ்மோபநிஷத்) என்பன காண்க.

பண்டைப் பரிசே- கேவல நிலையில் ஆணவ மலத்துடன் அத்துவிதமாக இருளில் மூழ்கிக் கிடந்த உயிரை இறைவன் அந்த நிலையினின்றும் பிரித்து எடுத்துச் சோபான முறையில் மேலேற்றி மலபரிபாகம் செய்து உரிய பக்குவ காலத்தில் தன்னுடன் அத்துவிதமாகச் சாரச் செய்து இன்பம் நுகர்விப்பன். இஃது அநாதி காலமாக நிகழ்ந்து வரும் திருவருட் செயல். அந்த வகையிலே; என்றவாறு. *பரிசே* - ஏகாரம் தேற்றம்.

பழஅடியார்- முற்பிறவிகள் பல வற்றில் மழவிடையார்க்கு வழிவழி ஆளாய்வந்த மெய்யன்பர்கள். இவர்கள் குருவடிவில்வந்த இறைவன்

உணர்த்தியருளிய உண்மையை மறவாது சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடியவர்கள்.

அந்தமிலா ஆனந்தம் ஈந்து அருளும் - முடிவில்லாத பேரின்பத்தைத் தந்து அருள்புரியும். ***அந்தம் இலா*** - சிவானந்தம் நித்தியப் பொருளாதலின் கால, இட எல்லைகளற்றது. ***ஈந்து அருளும்*** கைம்மாறு கருதாது கொடுத்து அருள் பாலிப்பன்.

(அதைக் கண்டு) ***அண்டம் வியப்புறுமா*** - அவ்வாறு இறைவன் ஈந்தருளுதலைக்கண்டு அண்டங்கள் வியப்புறுமாற்றை.

அண்டம் ஈண்டு இடவாகு பெயராக அண்டங்களில் வசிப் போரைக் குறித்து நின்றது, ***வியப்புறுமா*** - அண்டங்களில் உள்ள உலகங்களில் பெரும் பதங்களில் உள்ள நான்முகன் திருமால் முதலிய பெருந்தேவர்கள் அவர்கள் "மிகப்பெரும் பதங்களில் உள்ள நமக்குக்கிட்டாத சிவானுப இன்பம் மண்ணுலக வாசிகளுக்கு இறைவனால் வலியச்சென்று கொடுக்கப்படுகின்றதே என்று வியப்படைய. ***வியப்புறுமாறு*** என்றதன் ஈறு கெட்டது. அத்துடன் இரண்டனுருபு புணர்த்து வியப்புறுமாற்றை என்று உரைத்துக் கொள்க.

இத்திருப்பாடலில் இறைவன் ஈந்தருளும் அந்தமிலா ஆனந்தம் எண்ணி மகிழ்ச்சி மீக்கூர்தலின் "***ஆனந்தக்களிப்பு***" புலனாதல் காண்க.

184. விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்கா ணம்மானாய் கo

(இ-ள்)

விண்ணுலகங்களை ஆட்சிபுரியும் தேவர்களுக்கும் மேம்பட்டவனாகிய மறையவனை. மண்ணுலகை ஆளும் அரசர்களின் இலக்கணங்களுக்

கெல்லாம் பெருமையுள்ள ஓர் எடுத்துக்காட்டாக நிலைபெற்றவனே; குளிர்ந்த தமிழைப் பாதுகாக்கும் குளிர்ச்சி பொருந்திய பாண்டிய நாட்டினனே; உமையம்மையாகிய பெண்ணை ஒரு கூற்றில் ஆள்பவனே; நான் விரும்பிப் போற்றுகின்ற திருப்பெருந்துறையில்; என்விழிகளைப் பிணிக்கும் தன் திருவடிகளைக் காட்டி இழிந்த என்னையும் ஆண்டு கொண்டவனே; திருவண்ணாமலையாக நிற்பவனே; அம்மானைப் பாட்டின் பொருளாக அமைத்துப் பாடுவோம்.

(வி-ரை)

விண் ஆளும் தேவர்க்கு மேலாய வேதியன் - தேவர்கள். இவர்கள் விண்ணுலகங்களில் வசிப்பவர்கள். இவர்களுக்கு மேற்பட்டு அவ்வவ் வுலகங்களை ஆட்சி செய்யும் அரசர்கள் **விண் ஆளும் தேவர்கள்.** அவர்கள் இந்திரன் குபேரன் நான்முகன் திருமால் முதலிய பெருந்தேவர்கள். ***மேலாய*** - மண்ணுலக வாசிகளை விட விண்ணுலக வாசிகள் மேலானவர்கள், அவர்களினும் மேலானவர்கள் அவ்வுலகங்களை ஆளும் பெருந்தேவர்கள். அவர்களுக்கும் மேலானவன் சிவபெருமான் என்றவாறு. 108-ம் திருப்பாடலுரையில் "நாம் மேலை வீடு எய்த" என்றதன் கீழ் எடுத்துக் காட்டிய நாத பிந்து உபநிடதம் கூறுவது நினைக.

வேதியன் - அந்தணன், இவ்வுண்மையை -

"(உருத்திரன்) என்னும், நீ தேவர்களுள் அந்தணன்"

(சாமவேதப் பிராமணம்)

என்பதிற் காண்க.

ஈண்டு;

"திருமார்பன் முதலான தேவருக்கெல்
லாமறையோன் சிவனே யாமென்
றொருவாய்மை மறைகரைந்த துண்மையெனக்
தெளிந்துலக முய்ய முத்தீ
மருவாருங் குழலுமைபத் தினிவளர்ப்ப
விடக்கரத்து வயங்க வேந்திப்

பெருவாழ்வு தரவரசம் பலத்தாடும்
பேரொளியைப் பேணி வாழ்வாம்."

(பேரூர்ப்புராணம் - கடவுள் வாழ்த்து - 2)

என்பதும் நினைக.

மண் ஆளும் மன்னவர்க்கு மாண்பு ஆகி நின்றான் : மாண்பு - நிலவுலகை ஆளும் அரசர்களுக்குரிய இலக்கணங்கள் அனைத்தும் அமைந்து அவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாய் நிற்கும் மாண்பாவது; தான் முறைசெய்து தன் குடிகளைப் பிறர் துன்புறுத்தாது காக்கும் செங்கோன்மை.

இதனை;

முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும் (திருக்குறள் 388)

என்று வள்ளுவப் பெருந்தகை வகுத்துரைத்தல் காண்க. மனுநீதிச் சோழன்; பொற்கைப் பாண்டியன் முதலியோர் சரிதங்கள் நினைக. மனுநீதிச் சோழன் மகன் மீண்டும் உயிர்பெற்று எழவும், பொற்கைப் பாண்டியனின் கை மீண்டும் வளரவும் இறைவன் திருவருள் பாலித்து அம்மன்னர்களின் மாண்புகளை உலகில் நிலைநிறுத்தியது மனம் கொள்க.

தண் ஆர் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டான் : தண் ஆர்தமிழ் - தமிழ் மொழி ஒன்று மட்டுமே ஏனைய எல்லா மொழிகளினும் இனிய மெல்லோசையுடையதாய்க் கற்பாருக்கு எளியதாய், உள்ளம் குளிர்விப்பதாய், அன்பின் ஐந்திணைப் பொருள் நூல் அமைந்ததாய் விளங்கலின் ***தண் ஆர் தமிழ்*** என்றார். ***தண்ஆர்*** - குளிர்ச்சி நிறைந்த.

அளிக்கும் தண்பாண்டி நாட்டானை : அளிக்கும் - பாதுகாக்கும்; கொடுக்கும். பாண்டிய நாடே ஒன்றன்பின் ஒன்றாக மூன்று தமிழ்ச் சங்கங்களை அமைத்துத் தமிழை வளர்த்துப் பாதுகாத்து நமக்கு அளித்து உள்ளம் குளிர் வித்ததாகும். ஆதலின் ***தண்பாண்டி*** நாடாயிற்று. சிவபெருமானே இறையனார் என்னும் புலவனாகத் தமிழ்ச் சங்கத்தில் அமர்ந்து தமிழை ஆராய்ந்து நமக்கு அகப்பொருள் இலக்கண நூல் ஆக்கித் தந்தான். அது

தமிழைக் காத்தலும் தந்ததுமாயிற்று. இவ்வுண்மையை நம் அடிகளே அருளியுள்ளதை முன்னம் போற்றித் திருவகவல் 91-ல் "கூடல்" என்றதன் உரையில் எடுத்துக்காட்டினும். தமிழ் மொழியைச் சிவபெருமானே உலகுக்குக் கொடுத்தான் என்பதைப் புறச்சமயத்தாரும் புகல்வர். ★

தண்பாண்டி நாட்டான் - இறைவன், சௌந்திர பாண்டியனாக மதுரையில் முடிசூடிப் பாண்டிய நாட்டை ஆண்டதால் அவன் பாண்டிநாட்டான் ஆனான்.

பெண் ஆளும் பாகன் - *பெண்* - ஈண்டு உமையம்மையைக் குறித்து நின்றது. அவள் பேரருளின் உருவகம்.

★ *உழக்குமறை நாலினு முயர்ந்துலக மோதும்*
வழக்கினு மதிக்கவிழி னும்மரபி னாடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்"

(கம்பராமாயணம் - ஆரணிய காண்டம் - அகத்தியப்படலம் - 41)

கம்பராமாயணம் முழுவதுக்கும் இதுவரை வெளிவந்துள்ள உரைகளில் மிகச்சிறந்ததாகப் புலவர் பெருமக்களால் போற்றப்படுவது, திருவல்லிக்கேணி; திரு. வை. மு. சடகோப ராமானுஜாசாரியரும் அவர் மாணவர் திரு.வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியரும் இயற்றிய உரைகளே. ஆரணியகாண்ட உரை திரு. வை. மு. சடகோபராமானுஜாசாரியரும் திரு.சே.கிருஷ்ணமாசாரியரும் சேர்ந்து எழுதியது. இதைத் திரு.வை.மு.கோபால கிருஷ்ணமாசாரியர் வெளியிட்டுள்ளார். கம்பர் வைணவர். தம் மாபெரும் காவியத்தில் ஆங்காங்குச் சிவநிந்தனை செய்து செல்வார். மேற் குறித்த உரையாசிரியர்களும் சிறந்த வைணவர்களே. கம்பர் சிவநிந்தனை செய்து பாடாத இடங்களிலும் இவர்கள் சிவநிந்தனையாக உரை வகுத்து மகிழ்வர். அதனால் வைணவ உலகம் இவர்கள் உரையை உச்சிமேற்கொண்டு உவப்பதாயிற்று. ஈண்டு அவற்றை எல்லாம் தொகுத்து மறுக்கப்புகின் மற்றொன்று விரித்தலாக முடியும். ஆதலின் அவ்வளவில் "அவன் மகிழ்க" என விடுத்து, எடுத்துக் கொண்ட பொருளின் ஆய்வுக்குவருவாம்.

(இதன் தொடர்ச்சி அடுத்த பக்கம்)

பேணு பெருந்துறையில் - பேணுதல் - விரும்பிப் பாதுகாத்தல். என்னால் பேணப்படும் பெருந்துறை என்றும், என்னைப் பேணும்

மேற்காட்டிய பாடல் அகத்திய முனிவனை நமக்கு அறிமுகப்படுத்தும் பாடல்களில் ஒன்று இதன் 3,4 - வது அடிகளில் கம்பர் கூறுவது "மழுப்படையினனும் நெருப்புமிழும் நெற்றி விழியினனும் எரிபோல் மேனியனுமாகிய சிவ பெருமான் தனக்குத் தந்த தமிழை அகத்தியமுனிவன் உலகுக்குத் தந்தான்" என்பது.

இப்பகுதிக்கு உரியவாறு உரை யெழுதியபின் உரையாசிரியர்கள். அதை விளக்க அடியிற்கண்ட வரலாறும் கூறுகின்றனர். அது;

தழற்புரை கடவுள் தந்த தமிழ்தந்தான் என்பதி லடங்கிய கதை - "பூர்வத்தில் மகாமுனிவர்களெல்லாம் சேர்ந்து ஸமஸ்கிருத பாஷையை அபிவிருத்தி செய்து காசியில் வட மொழிச் சங்கமொன்று ஏற்படுத்த அச்சங்கத்தில் ஒருவனாகிய அகத்தியன், மற்றைப்புலவர்களோடு பல காலுந் தருக்கம் செய்து கொண்டு வந்து, ஒரு நாள் அவர்களோடுமாறு கொண்டு அவர்கள் இறுமாப்பை அடக்கும் பொருட்டுச் சிவபெருமானிடம் சென்று தன்கருத்தை வெளியிட்டுச் சற்று நேரம் பேசிக் கொண்டிருக்கையில், தான் நின்ற மண்டபம் முழுவதும் திவ்விய பரிமள மொன்று வீச, அகத்தியன் பரமசிவனை நோக்கி, "சுவாமி! இவ்வாசனை ஏது" என்று வினவ, பரமசிவன் அவனை அம்மண்டபத்தின் மூலைக்கு அழைத்துக் கொண்டு போய்க் குவியலாய்ப் போட்டிருந்த சில ஏட்டுப்பிரதிகளைக் காட்டவே; அவற்றைக் கண்ட மாத்திரத்தில் மதுரமென்று அருத்தங்கொள்ளும் "தமிழ்" என்னும் இன்பமான பெயரைச் சொல்ல, உடனே பரமசிவன் அப்பாஷைக்கு ஆதார விதிகள் இவ்வேட்டுப் பிரதிகளிலுள்ளன வென்று எடுத்துக் கொடுத்து உபதேசிக்க, தக்ஷிணத்திலுள்ள பொதியமலைக்குப் போய் தனி வாசம் செய்து அவ்விதிகளைக் கொண்டு, பேரகத்தியம், சிற்றகத்தியமென்னும் இலக்கண நூல்களை இயற்றி, அவற்றைத் தம் மாணாக்கராகிய தொல்காப்பியன் முதலிய பன்னிருவர்களுக்குப் கற்பித்தருளித் தமிழ் பாஷையைத் தழைத்தோங்கச் செய்தா னென்பது. *(பக்கம் கூஎ, கூசு)*

இதை உளங்கொண்டே சென்றநூற்றாண்டில் வாழ்ந்த தேசியகவி திரு. சி. சுப்பிரமணிய பாரதியும்;

" ஆதி சிவன் பெற்றுவிட்டான் - என்னை
ஆரிய மைந்த னகத்திய - னென்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை
மேவு மிலக்கணஞ் செய்து கொடுத்தான்"

(பாரதி பாடல் - தமிழ்த்தாய் - 1)

என்று மனங்கனிந்து பாடினார்.

பெருந்துறை என்றும் உரைக்க நின்றது. திருப்பெருந்துறை நம் அடிகளை ஆட் கொண்டு பேணியதும்; ஆட்கொள்ளப் பெற்றமையால் நம் அடிகளாற் பேணப்படுவதுமாயிற்று.

கும்பகோணத்தினண்மையிலுள்ள நாச்சியார் கோயிலினின்றும் கிழக்கே 3 கிலோ மீட்டர் தொலைவில் பேணுபெருந்துறை என்னும் தேவாரத் தலம் உள்ளது. ஆளுடைய பிள்ளையாரின் பதிகம் பெற்றது. காவிரியின் தென்கரையில் 64-ம் திருத்தலமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. நம் அடிகள் திருப்பெருந்துறையினின்றும் தலயாத்திரையாகத் தில்லை செல்லும் வழியில் இத்தலத்தில் தங்கி வழிபட்டார் என்றும் இறைவன், அங்கு நம் அடிகளுக்கு மீண்டும் திருவடிகள் காட்டினுன் என்றும் கொண்டு இப்பகுதிக்கு உரை வகுத்தார், முன்னுரையாளர்களில் ஒருவர். நம் அடிகள் வரலாறு இதற்கு இடந்தரவில்லை. பேணு பெருந்துறை இந்நாளில் *திருப்பந்துறை* என்று வழங்கி வருகின்றது. அது திருப்பெருந்துறையாக மயங்கி அறியப்பட்டது போலும்.

கண் ஆர் கழல்காட்டி - கண்ணைப் பிணிக்கின்ற கழல் . ஆர் - ஆர்த்தல். முதனிலைத் தொழிற் பெயர். கண்ட கண்களை விட்டு அகலாத காட்சி தரும் திருவடிகள். இறைவன் திருவுருக்கரந்த பின்பும் கழலின் காட்சி உள்ளத்தில் நிலைபெற்றது என்பது கருத்து. *காட்டி* - திருமால், பன்றியாகப் பல்லூழிகாலம் பாரகழ்ந்து சென்றும் காணமுடியாத கழல்களை எனக்கு வலிய வந்து காட்டி - என அருமையில் எளிமை இயல்பை வியந்தவாறு. அவ்வாறு காட்டப்பட்ட திருவடிகளைப் பக்குவமுள்ள ஆன்மா தன் இதயத்தில் நிலையாகப் பொதிந்து வைத்துக் கொள்கிறது.

இதனை;

திருச்சிற்றம்பலம்

"பொருவிடை யொன்றுடைப் புண்ணிய மூர்த்தி
புலியதளன்
உருவுடை யம்மலை மங்கை மணாள னுலகுக்கெல்லாம்

திருவுடை யந்தணர் வாழ்கின்ற ***தில்லைச்சிற் றம்பலவன்***
திருவடியைக் கண்ட கண்கொண்டு *மற்றினிக்*
காண்பதென்னே"
(திருமுறை 4-80-2)

திருச்சிற்றம்பலம்

எனவரும் நம் அரசுகள் தேவாரத்திற் காண்க.

"அவனை எந்தத் தீரர்கள் ஆன்மாவில் இருப்பவ ளுக அறிகின்றுர்களே அவர்களுக்கு நித்தியமான இன்பம் உளது" (கடோப நிடதம்) என்பதும் காண்க.

கண்ணுதல் - எண்ணுதல் என்று பொருள் கொண்டு ஆன்மாக்களால் தியானம் செய்வதற்குரிய கழல் என உரைப்பினுமமையும்.

அண்ணமலை - திருவண்ணமலை என்ற வெற்பாகவே நின்ற சிவபெருமான். முன்னம் 172-ம் திருப்பாடலில் "அண்ணமலையான்" என்றதன் கீழுரைத்தவை காண்க. திருவண்ணமலைத்தலம் திருவாசகத்தின் இப்பகுதி அருளிச் செய்யப்பட்ட பதியாவதும் நினைக.

தலவிசேடம் - திருவண்ணமலை - போற்றித்திருவகவல் 149-ல் உரைக்கப்பட்டது.

இத்திருப்பாடலில் விண் ஆளும் தேவர்களுக்கும் மேலான இறைவன் இழிந்த தமக்குக் கண்ணார்கழல்காட்டி ஆட்கொண்டதால் உற்ற மகிழ்ச்சி மிகப்பெருகுவது கூறப்படுதலின் "***ஆனந்தக் களிப்பு***" புலனுதல் காண்க.

185. செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினன்
அப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த
அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த வுள்ளத்தா ருள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்கா ணம்மானய் கக

(இ-ள்)

கிண்ணம் போன்ற கொங்கைகளுள்ள உமையம்மையைப் பங்கிற் கொண்டவனும்; திருப்பெருந்துறையில் உள்ளவனும்; வழுவிச் செல்லாமல் தன் திருவடிகளைப் புகலடைந்தவர்களின் உள்ளத்தை உருக்கும் இயல்பினனும்; அந்தப் பாண்டிய நாட்டைச் சிவலோகமாகச் செய்தவனும்; கங்கை நீர் முழங்கும் சடையினனும்; தந்தையும்; ஆனந்தமயமான நீண்ட தன் திருவடியே தமக்கு அடைக்கலமாகும் இடமாக கருதித் தம்மை ஒப்புவித்த உள்ளங்கொண்ட தொண்டர்களின் நெஞ்சினுள்ளே வீற்றிருப்பவனும்; ஆன்மாக்களுக்கு அப்பாலுள்ள மாயையைக் கடந்து நிற்பவனுமாகிய தலைவனை; நம் அம்மானைப் பாடலின் பொருளாக அமைத்துப் பாடுவோம்.

(வி-ரை)

இத்திருப்பாடலுக்கு ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

*செப்பார் முலை பங்கன் - செப்பார்முலை - ஆர் -*உவம உருபு. அவள் என்றும் மாறா இளமையுடையவள் என்பது நினைக.

செப்பு என்பதற்குச் "சொல்" என்று பொருள் கொண்டு பரஞானமும் அபரஞானமுமாகிய இரு கொங்கைகள் என்பர் கவியரசு அவர்கள். ★

பங்கன் - மாதொருபாகன் ★★

★ *"தருண மங்கலை யுனது சிந்தை*
தழைத்த பால முதூறினல்
அருண கொங்கையி லதுபெருங்கவி
அலைநெடுங் கடலாகுமே
வருண நன்குறு கவுணியன் சிறுமதலை
யம்புயல் பருகியே
பொருணயம் பெறுகவிதை யென்றொரு
புனித மாரி பொழிந்ததே"

(சௌந்தரிய லகரி தமிழாக்கம் - வீரைக்கவிராச பண்டிதன்)

★★ *"வாகர்த்தன விவசம்ப்ரக் தென்"*

பொருள் - சொல்லும் பொருளுபோல இணைந்தவர்கள்.

- மகாகவி காளிதாசர்

இதனை-

பொருள்:- மந்திரங்களின் எழுத்துக்களாகவும் சொற்களின் பொருளாகவும் பாசஞான பசுஞானத்துக்கு அப்பாற்பட்டவருமான தேவி என்று தேவி உபநிடதம் கூறும்.

அன்னையின் வடிவமே தடையிலா ஞானம் என்பது சாத்திரக்கருத்து. அத்தகைய தேவியைப் பங்கில் கொண்டவன் என்பதால், அவனே, உயிர்களுக்குப் போகமும், ஞானமும், வீடுபேறும் அருள்பவன் என்பது உணர்த்தியவாறு.

தென்னன் பெருந்துறையான் - 181-ம் திருப்பாடலில் உரைத்தவை காண்க.

தப்பாமேதாள் அடைந்தார் நெஞ்சு உருக்கும் தன்மையினன்:
தப்பாமேதாள் அடைந்தார் - இவர்கள் நிலைகளை முன்னம் போற்றித் திருவகவல் அடிகள் 30 முதல் 86 முடிய விரித்துணர்த்தியது காண்க. *நெஞ்சுருக்கும் தன்மை* - இறைவன், தன்னைப் புகலடைந்த அடியவர்களின் உள்ளத்தை உருக்கிய இயல்பை;

திருச்சிற்றம்பலம்

"தேனினுமினியர் பாலன நீற்றர்
தீங்கரும்பனையர்தம் திருவடி தொழுவார்
ஊனயந்துருக வுவகைகடருவார்
உச்சிமேலுறைபவ ரொன்றலாதூரார்
வானகமிறந்து வையகம் வணங்க
வயங்கொள நிற்பதோர் வடிவினையுடையார்
ஆனையினுரிவை போர்த்தவெம்மடிக
ளச்சிறு பாக்கம தாட்சி கொண்டாரே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 1-77-2)

எனவரும் பிள்ளையார் திருவாக்காலறிக. பாடல் 157 உரையில் எடுத்தாண்ட கருவூர்த் தேவர் திருவிசைப்பாவும்; பாடல் 158-உரையில் எடுத்தாண்ட அரசுகள் தேவாரமும் பார்க்க.

அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த: அப்பாண்டி நாடு - அகரச்சுட்டு பழமையும் பெருமையும் உணர்த்தி நின்றது. பெருமை, இறைவன் சௌந்திர பாண்டியனாக முடிசூடி ஆண்டதாலும்; இறையனார் என்னும் புலவனாகத் தமிழ்ச் சங்கத்தில் அமர்ந்து தமிழை வளர்த்ததாலும் எய்தியது.

சிவலோகம் ஆக்குவித்த - சிவபெருமான், தன் கணங்களுடன் எவ்விடத்தில் எழுந்தருளுகின்றானோ அவ்விடமே சிவலோகமாகும். இறைவன், தடாதகைப் பிராட்டியைத் திருமணம் செய்துகொள்ளச் சிவகணங்களுடன் மதுரைக்கு எழுந்தருளியதாலும்; நம் அடிகளை ஆட்கொள்ளச் சிவகணங்கள் சூழ மானிடச்சட்டை தாங்கித் திருப்பெருந்துறையில் எழுந்தருளியதாலும், தானும் சிவகணங்களும் குதிரை வணிகள் வேடத்தில் மதுரைக்கு எழுந்தருளியதாலும். பாண்டிய நாடு சிவலோகமாயிற்று. இவ்வுண்மையை, இறைவன் தன் கணங்களுடன் பரவையம்மையார் திருமாளிகையில் எழுந்தருளிய ஞான்று அம்மாளிகை இருந்த திருவீதியும், பின்னர் அம்மாளிகையும் திருக்கயிலை மலைபோன்று விளங்கியதாகச் சேக்கிழார் பெருமான் செப்புவதாலறிக. அத்திருப்பாடல்கள்:

திருச்சிற்றம்பலம்

"பெருவீ ரையினு மிகமுழங்கிப்
பிறங்கு மதகுஞ் சரமுரித்து
மருவீ ருரிவை புனைந்தவர்தம்
மருங்கு சூழ்வார் நெருங்குதலால்
திருவீ தியினி லழகரவர்
மகிழுஞ் செல்வத் திருவாரூர்
ஒருவீ தியிலே சிவலோக
***முழுதுங் காண** வுளதாமால்"*

"பாரிடத் தலைவர் முன்னும்
பல்கண நாதர் தேவர்
நேர்வுறு முனிவர் சித்தர்
இயக்கர்க ணிறைத லாலே
பேரரு ளாள ரெய்தப்
பெற்றமா ளிகைதான் றென்பால்
சீர்வளர் கயிலை வெள்ளித்
திருமலை போன்ற தன்றே"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - ஏயர் கோன் - 336, 362)

என்பதாகும்.

அப்பு ஆர் சடை அப்பன் - அப்பு - நீர். ஈண்டுக் கங்கையைக் குறித்து நின்றது. ***ஆர்*** - ஆரவாரம் செய்கின்ற. கங்கை இறைவன் சடையில் சிறைப்பட்டு வெளிவர இயலாமையால் ஆரவாரம் செய்கின்றது.

சடை - கங்கையைச் சிறைப்படுத்திய இறைவனின் சடைமுடி. "தேறு நீர் சடைக்கரந்து" (கலித்தொகை-கடவுள் வாழ்த்து) . "பகையென்று தெளிகின்ற கங்கையின் வேகத்தைச் சடையின் ஒரு கூற்றிலே அடக்கி" (நச்சினார்க்கினியர் உரை)

அப்பன் - தந்தை, தலைவன். ***ஆர்*** - என்பதற்கு நிறைந்த என்று பொருள் கொண்டு "இறைவன் சடைமுடியில் நிறைந்து நிற்கும் கங்கை" என்பாருமுண்டு. சடை முடியில் உள்ள ஒரு சடையின் நுனியில் கங்கை வெள்ளம் முழுவதும் ஒரு பனித்துளி போலடங்கச் சிறைப்படுத்தினார் என்பது நம் அரசுகள் வாக்காதலின், கங்கை சடைமுடியில் நிறைந்து நிற்றல் எங்கே? என ஒதுக்குக. இறைவன் கங்கையைச் சடையில் தாங்கியது அவனது "முடிவிலாற்றலை"க் குறிக்கும்.

ஆனந்த வார்கழல் - ஆனந்தம் - வீட்டின்பம். ***வார்கழல்*** - நீண்ட திருவடிகள். உயிர்கள் எப்புவனங்களில் இருப்பினும் அங்கு நீண்டு சென்று

அவற்றை உய்விக்கும் திருவடிகள். *கழல்* - தானியாகுபெயராக வலது திருவடியை உணர்த்தியபின் இனம் பற்றி இரு திருவடிகளையும் உணர்த்தும். ஒருமை பன்மை மயக்கம்.

ஒப்பு ஆக ஒப்புவித்த உள்ளத்தார் - சீவபோதம் முழுதும் கெட்ட மெய்யன்பர்கள் இறைவன் திருவடிகளே தங்களுக்குப் புகலாகும் இடமாகக் கருதித் தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் இறைவன் உடைமைகளாக அவன் திருவடிகளில் ஒப்புவித்த மனப்பக்குவம் கொண்டவர்கள். இதை "உயிர் ஆவணம் செய்து உன்கைத்தருதல்" என்பர் நம் அரசுகள். 158-ம் திருப்பாடலுரையில் எடுத்தாண்ட திருமுறைப் (6-25-1) பாடல்காண்க.

உள்ளத்தார் - மன முடையவர்கள். தற்போதம் தேயும்தொறும் ஆன்மாவிற் சிவம் விளங்கித் தோன்றும் இவ்வுண்மையை;

" *ஆயுந் தொறுந்தொறு மின்பந் தருங்கலை யாங்கறிவு*
மாயுந் தொறுந்தொறு மின்பந் தரும்வள்ளல் வார்கழல்கள்
தேயுந் தொறுந் தொறு மின்பந் தருஞ்சந்து தேங்குழலிற்
றோயுந் தொறுந்தொறு நேராத வின்பஞ் சுரந்திடுமே"

(தணிகைப் புராணம் - களவுப்படலம் - 100)

என்பதிற் காண்க.

உள்இருக்கும் - *உள்* என்பதை உடலினுள் உள்ள ஆன்மாவாகக் கொண்டு, அந்த ஆன்மாவைத் தன் உடலாக ஏற்று அதனுள் எழுந்தருளியுள்ள என உரைப்பினுமொக்கும். ஆன்மா, இறைவனின் அட்ட மூர்த்தங்களுள் ஒன்று என்பது நினைக.

அப்பாலைக்கு அப்பாலை- அப்பால்- பேரூழிக் காலத்தில் ஆன்மாவின் இரு வினைகள் புத்தி தத்துவத்தினின்றும் காரண கன்மத்தில் ஒடுங்கும்; காரண கன்மம் மாயையுள் வியாப்பியமாக நிற்கும்; புத்தி தத்துவம் உட்பட மாயேயங்கள் அனைத்தும் மாயையுள் ஒடுங்கும்; ஆன்மா, மாயையுள் வியாப்பியமாக நிற்கும்; மாயை வியாபகமாக நிற்கும் . இப்பொழுது

ஆன்மாவுக்கு அப்பாலுள்ளது மாயை. அதனையே ஈண்டு **அப்பால்** என்றார். **அப்பாலைக்கு** என்பதிலுள்ள ஐ - சாரியை "கு" எல்லைப்பொருளில் வரும் ஐந்தன் உருபுப் பொருளில் மயங்கிவந்த நான்கனுருபு.

அப்பாலை - மேற்குறித்த நிலையில் மாயை வியாப்பியமாகச் சிவ வியாபகத்துள் அடங்கி நிற்கும். சிவம் யாண்டும் வியாபகமாய்த் தான் மற்றொன்றின் வியாபகத்துள் அடங்காததாய் நிற்கும். அதனையே ஈண்டு. *அப்பாலை* என்றார். ஐகாரம் இரண்டனுருபு.

இதற்கு இவ்வாறன்றி; "பாச அறிவு கடந்தது பசுபோதம்; அதனைக் கடந்தது சிவபோதம்; எனவே சிவபோதமே அப்பாலைக்கு அப்பாலாகும். அந்தச் சிவபோதமே சிவபெருமான் என அறிக என்பர் கவியரசு அவர்கள்.

அப்பாலைக்கு-நின்மலதுரியத்துக்கு.*அப்பாலான்*- நின்மலதுரியாதீதத்தில் உள்ளவன்- என்பர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள்.

ஈண்டு:

திருச்சிற்றம்பலம்

" வனபவள வாய்திறந்து வானவர்க்குந்
தானவனே யென்கின் றாளாற்
சின பவளத் திண்டோண்மேற் சேர்ந்திலங்கு
வெண்ணீற்ற னென்கின் றாளால்
அனபவள மேகலையொ **டப்பாலைக்**
கப்பாலா *னென்கின் றாளாற்*
கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள் கொல்லோ"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4-6-1)

எனவரும் நம் அரசுகளின் அமுதவாக்கு நினைக.

இத்திருப்பாடலில்; "ஆனந்த வார்கழலே ஒப்பாக ஒப்புவித்தல்" கூறுவதால் ஆனந்தமும் "அப்பாலைக்கு அப்பாலை" ப்பாடுவதால் அவ்வானந்தத்தால் எய்தும் களிப்பும் புலனுதல்காண்க.

186. மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்திரனும்
எப்பிறவி யுந்தேட வென்னையுந்த னின்னருளால்
இப்பிறவி யாட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட் கட்டோற்றமாய் மெய்யே நிலைபேருய்
எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளா நஞ்சிவனைப் பாடுதுங்கா ணம்மானுய்
கஉ

(இ-ள்)

மை தீட்டப் பட்டவையும் அழகுள்ளவையுமான விழிகளை யுடையவர்களே; கேட்பீர்களாக; திருமாலும், நான்முகனும் இந்திரனும் தாங்கள் எடுத்த எல்லாப் பிறப்புக்களிலும் தேடியும் எய்துதற்கு அரியவனுக இருந்தும்; ஒரு பொருளாகாத என்னையும், தன் இனிய அருளினுல் இந்தப் பிறவியிலேயே (வலிய) வந்து ஆளாகக் கொண்டு; இனி யான் பிறவி எடுக்காமல் காப்பாற்றுபவனும்; மெய்யறிவில் விளங்குகின்றவனும்; சற்தே தன் உண்மை இயல்பாக உள்ளவனும்; எல்லாப் பொருள்களுக்கும் நிலைக்களன் தானேயாக உள்ளவனும்; எல்லா உயிர்களுக்கும் வீடுபேருக விளங்கும் பெருமை பொருந்திய பதிப்பொருளாகிய நம் சிவபெருமானை நம் அம்மானைப் பாடலின் பொருளாக அமைத்துப் பாடுவோம்.

(வி-ரை)

இத்திருப்பாடலுக்கு ஆற்ருெழுக்காகப் பொருள் காண்க.

மைப் பொலியும் கண்ணி கேள் - இளம் பெண்கள் தங்கள் விழிகளுக்கு மேலும் அழகூட்ட மை தீட்டிக் கொள்வதை இன்றும் காணலாம். **கண்ணி** **கண்** என்னும் சினையடியாக வந்த பெயர். ஈண்டு, உடன் அம்மானை பயிலும் மகளிர் அனைவரையும் உணர்த்தியதால் ஒருமை பன்மை மயக்கமாகக் கொள்க. இதற்கு இவ்வாறன்றி மை அழகு பெறுவதற்குக் காரணமான

கண்களையுடையவள் என்றும்; **மை** என்பதற்குக் குற்றம் என்று பொருள் கொண்டு, இப்பாடலில் வழுத்தப்படும் இறைவன் பெருமைகளை இயல்பாகக் காணவேண்டிய விழிகள் அவ்வாறுகாணுமையாகிய குற்றமுள்ள கண்கள் என்றும் உரை கூறினரும் உண்டு. இவ்விரு உரைகளிலும் **மை** எழுவாயாகக் கொள்ளப்பட்டது. அவ்வாருயின் அடுத்துப் பகரவொற்று வருதல் கூடாது. அவ்வாறு வந்துள்ளது எதுகை நோக்கி என்று அமைதிப்படுத்துதல் வேண்டும். உமையம்மை மட்டுமே அழகின் பிறப்பிடம். அவ்வம்மையின் கண்களுக்கு இவ்வாறு உரைகூறின் அமைவுடைத்தாகும். ஈண்டு இவ்வாறெல்லாம் மானிடப் பெண்களின் விழிகளுக்கு வலிந்து பொருள் கூறுவதன் பொருத்தம் ஆய்வுக்குரியது. **கேள்**- சொல்வனவற்றை மன ஒருமையும் கேட்பதற்காக தொடக்கத்திலேயே விழிப்பூட்டியவாறு. **கேள்**- மகள் எனக்கொண்டு மகளே என்பதன் அண்மை விளி எனலுமாம்.

மால் அயனேடு இந்திரனும் - இவர்கள் பெருந்தேவர்கள். தத்தம் உலகங்களின் தலைவர்களாக ஆங்காங்குள்ளோரை ஆள்பவர்கள். இவர்களைக் கூறியதால் இவர்களினும் கீழ்ப்பட்ட குபேரன், கூற்றுவன், திசைக்காவலர் முதலியோரையும் கூறியவாருயிற்று. இம் மூவருள்ளும் திருமாலும் திசை முகனும் இந்திரனுக்கு மேற்பட்டோராதலின் ஒரு உருபை அவர்களுக்குப் புணர்த்துரைத்தார்.

எப்பிறவியும் தேட எப்பிறவியும் என்றதனுல் அவர்கள் பல பிறவிகள் எடுத்தனர் என்பது பெற்றும். திருமால் பத்துப்பிறவிகள் எடுத்தான். அயன் பட்டிமுனியாகப் பிறந்து திருப்பேரூரில் தவம் செய்தான். இந்திரன் பூவுலகில் மயிலாகப் பிறந்து தவஞ் செய்தான் என்ற உண்மைகளைத் தல புராணங்களில் காண்கின்றேம். இனி அவர்கள் பிறவி எடுக்காமல் தத்தம் தெய்வ வடிவங்களில் இறைவனைக்காண இயலாமையையும் புராணங்களில் காண்கின்றேம். பூமியில் பிறக்க வேண்டும் என்று அவர்கள் ஆசைப்படுவதையும் முன்னர்ப் போற்றித்திருவகவல் 116-117-ல் "வானேர்க் கரியமருந்து ஏனேர்க்கு எளிய இறைவன்" என்றதன் கீழ் விளக்கினும். ஆதலின் இவர்களும் பிறவிவழிச் செல்பவர்களே என்பது நினைக. அவ்வாறு பிறந்துழி இறைவனைக் காணத் தவமுயன்றும், வேள்விகள் வேட்டும் இறைவனைக் கண்டிலர். ஓரொருகால் இறைவனைக் கண்டதாகத் தலபுராணங்களில் கூறப்படுகின்றதே எனின், அவர்கள் கண்டது

சிவபெருமானை அன்று; புவனாதி பதிகளில் ஒருவராகிய உருத்திரையேயாம். அவர் ஆன்ம வருக்கங்களில் ஒருவரேயாவர். சிவபெருமானைக் கண்டிருந்தால் அவர்கள் வீடுபேறெய்தியிருப்பர். மாறாகப் புல்லிய போகப் பயன்களைக் கேட்டுப் பெற்றதாக நூல்களில் காண்கின்றோம். ஆதலின் **தேட** என்றார். பாடல் 178- ல் "காண்பு அரிய" என்றதன் கீழுரைத்தவை காண்க.

என்னைத் தன் இன் அருளால் இப்பிறவி ஆட்கொண்டு :- **என்னை - என்னையும்** என இழிவு சிறப்பும்மை விரித்துக் கொள்க. பெருந்தேவர்கள் போன்றோர் அவர்கள் ஆட்சியிலுள்ள ஏனைய விண்ணுலக வாசிகள் போன்றோ, மண்ணுலகில் வாழும் மெய்யடியார்கள் போன்றோ தவ முயற்சியும் சிவபுண்ணியப் பேறுமற்ற இழிந்தவனாகிய என்னையும் என்றவாறு. ***இன் அருளால்*** - அவ்வாறு அவன் ஆட்கொண்டதன் காரணம் உயிர்களுக்கு இன்பம் செய்யும் அவனது பேரருளால் என்றவாறு. ***இப்பிறவி*** - அவ்வாறு நான் ஆட்கொள்ளப் பெறுவதற்கு இன்னும் பலபிறவிகள் எடுத்து இருவினைப்பயன்களை நுகர்ந்து மலபரிபாகம் எய்துதல் வேண்டும். அவ்வாறு நிகழாமல் நான் எடுத்த இந்தப் பிறவியிலேயே என்முன் ஞானாசிரியனாக நண்ணி நயன தீட்சை நல்கினான். அதனால் நான் இப்பொழுதே பக்குவம் எய்தினேன்; அவன் ஆட்கொண்டான். இஃதும் அவன் ***இன் அருளால்*** எய்தியதென்றவாறு. ***இப்பிறவிக்கண்*** என ஏழனுருபு விரித்துக் கொள்க. இகரச்சுட்டு இழிவு குறித்து நின்றது.

இனிப் பிறவாமே காத்து - மெய்யுணர்வெய்திய மேன்மக்கள் எடுத்த இப்பிறப்பிலேயே வீடுபெறு எய்த விரும்புவர். பின்னும் பிறப்பில், வினைப் பயன்களை நுகரும் பொழுது ஆகாமியம் ஏறும்; அவற்றின் பயன்களை நுகருங் காரணமாக மேலும் மேலும் பிறவிகள் வரும். முன்பே பெற்றிருந்த பக்குவம் பயனின்றி மீண்டும் தவமுயலுதல் வேண்டும்.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

" வெம்மை நமன்றமர் மிக்கு விரவி விழுப்பதன்முன்
இம்மையுன் றாளென்றன் னெஞ்சத் தெழுதிவை
யீங்கிகழில்

அம்மை யடியேற் கருளுதி யென்பதிங் காரறிவார்
செம்மை தருசத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே"
(திருமுறை 4-96-6)

திருச்சிற்றம்பலம்

எனவரும் அரசுகள் தேவாரமும், "மீண்டு வாரா வழியருள் புரிபவன்" - (கீர்த்தித் திருவகவல் - 117) எனும் நம் அடிகள் வாக்கும் காண்க.

ஆதலின் இனிப் பிறவிகள் வராமல் அருள்புரிவது ஆன்மாவை வினைப்பயன் நுகர்ச்சிகளினின்றும் காப்பதாகும். ***காத்து*** என்ற வினையெச்சம் ஐந்தாமடி ஈற்றிலுள்ள **ஆகும்** என்பதுடன் முடியும்.

மெய்ப்பொருட்கண் தோற்றம் ஆம் :- மெய்ப் பொருள் - மெய்யறிவாவது சிவஞானம். கருவியாகு பெயர். ***தோற்றம்*** தோன்றுவதாகிய பொருள் குறித்து நின்றது. ***மெய்*** - உண்மை. ஒரு வாற்ருனும் திரிபின்றி என்றும் ஒரு பெற்றித்தாய் இருத்தல். இதனைச்"சத்" என்பர் வடமொழியாளர். புறக் கரணங்களாலும் அகக் கரணங்களாலும் யான் பொய்ப் பொருட்காட்சியளுய்த் திரிந்துழி எனக்கு அவன் தோன்ருமல் இருந்தான்; அவனருளாலே மெய்யுணர்வு மேவியபின் தோன்றினன் என்றவாறு.

மெய்யே நிலைபேருய் - சத்தாம் தன்மையில் என்றும் ஒரு படித்தாய் நிற்றலையே ஈண்டு மெய்யே நிலைபேருய் என்ருர். ***நிலைபேறு*** - தன்னியல்பு நீங்காது நிற்றல். இனி ***மெய்*** என்பதை மெய்ப் பொருளாகிய இறைவன் எழுந்தருளி இருக்கும் உடம்பு எனக் கொண்டு. என் உடம்பில் நிலையாக எழுந்தருளியிருப்பவன் எனலுமாம் இதனே;

திருச்சிற்றம்பலம்

" தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைக்
சங்கரா வார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்

சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே!
எந்தையே யீசா! வுடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனொர் கைம் மாறே"

(திருவாசகம் - 395)

திருச்சிற்றம்பலம்

என்று நம் அடிகளே பின்னர் பேசுவதிற் காண்க.

எப்பொருட்கும் தானே ஆய் - ***எப்பொருட்கும்*** - உயிர்கள், சடப்பொருள் ஆகிய எல்லாப் பொருள்களுக்கும். ***எப்பொருட்கும்*** என்றதன்பின் "முதல்" என ஒரு சொல் வருவித்துக் கொள்க. முதல் நிலைக்களம். இதனைத் "தாரகம்" என்பர் வட நூலார். ஆதாரமாகத் தாங்கி நிற்பது. தன் வியாபகத்துள் வியப்பியங்களாகக் கொண்டுள்ளது. இறைவன் யாண்டும் வியாபகமாக உள்ளான். உயிர்களும் மலங்களும் அவன் வியாபகத்துள் அடங்கி அவனை ஆதாரமாகக் கொண்டுள்ளன என்றவாறு.

யாவைக்கும் வீடு ஆகும்: யாவைக்கும் - யாவற்றுக்கும் எனச்சாரிகை விரித்துக் கொள்க. வீடு காரியவாகு பெயராகப் பாசப் பிணிப்பினின்றும் விடுபடுதலைக் குறித்தது. ***யாவை*** என்றது அறிவுடைப் பொருள்களாகிய உயிர்களைக் குறித்து நின்றது. வீடுபெறுவதற்குரியவை அவையே என்பது நினைக. உயிர், பாசத்தையோ அன்றிப் பதியையோ சார்ந்தே நிற்கும். தான் சார்ந்து நிற்றற்குரிய பொருள் பாசமன்று என்று இறைவனால் உணர்த்தப்பட்டபின், பாசத்தைவிட்டு அரன்கழல் செல்வதாயிற்று. இதனை;

"பாசத்தைப் பசுக்கள் விட்டுப்
பதியினை யடைய முத்தி
யாசற்ற வாக மங்க
ளறைந்திட வறிவின் றிங்கே
மாசற்ற மான்மா சாகி
மாயையு முறுவ னென்னிற்

கூசிப்பின் கொள்ளார் நல்லோ
ருனக்காமிக் குழப்பு நூலே"
(சிவஞானசித்தியார் - பரபக்கம் பாஞ்சராத்திரி மதமறுதலை - 23)

என்று நம் ஞானசாத்திரம் நவில்வது காண்க.

அப்பொருளை - அகரச்சுட்டு "*வீடாகும்*" என்பதைக்குறித்து நின்றதாகக் கொள்ளினும் அமையும். முன்னம் 168-ம் திருப்பாடலில் "அப்பொருளா மாபாடி" என்றதன் கீழ் விளக்கியவை காண்க.

நம்சிவனை - மாலயனோடு இந்திரனும் பல பிறவிகளில் தேடியும் காணப்பெறாதவன். இழிந்த என்னையும் இன்னருளால் இப்பிறப்பிலேயே வலிய வந்து ஆட்கொண்டு இனிப் பிறவி வராமல் காத்தமையால் நம் என்று உரிமை பாராட்டினர். *சிவன்* - பக்குவான்மாக்கள் அனைவருக்கும் வீடுபேறாகிய மங்கலம் நல்கலின் *சிவன்* என்றார்.

இத்திருப்பாடலில் இறைவன் தம்மை இப்பிறவிலேயே ஆட்கொண்டதால் வந்த மகிழ்ச்சி, இனிப் பிறவாமற்காத்து வீட்டின்பம் நல்கவுள்ள நிலைகுறித்து மேலும் மிகுவதால் "**ஆனந்தக் களிப்பு**" அறைந்தவாறு காண்க.

187. கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை யெங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்கா ணம்மானாய் கங

(இ-ள்)

கைகளில் நிறைய அணிந்துள்ள வளையல்கள் ஒலிக்கவும், காதுகளில் பொருந்திய குழைகள் ஆடவும்; மேகம் போன்ற கூந்தல் புரளவும்; தேன் ஒழுகவும்; வண்டுகள் ஒலிக்கவும்; செந்நிறத்தினனை; வெண்ணீறு

அணிந்தவனே; ஒரு பொருளிலும் தோய்ந்து அறியாத ஒழுக்கமுடையவனே; எல்லா இடங்களிலும் நிறைந்திருப்பவனே; அன்பர்களுக்கு மெய்ப் பொருளாய் உள்ளவனே; அன்பரல்லாதவர்களுக்குப் பொய்யானே; மறையவனே; திருவையாற்றில் எழுந்தருளியுள்ளவனே அம்மானைப் பாடலின் பொருளாக அமைத்துப் பாடுவோம்.

(வி-ரை)

இத்திருப்பாடலுக்கு ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

கை ஆர் வளை சிலம்ப - மகளிர் அம்மானையாடுங்கால் தரையில் அமர்ந்து அம்மானைக் காய்களை மேலே வீசியும் அவை விழும் பொழுது கைகளில் தாங்கியும் ஆடுவர். அஞ்ஞான்று அவர்கள் இருகைகள், தோள்கள், கழுத்து, கண்கள், தலை முதலியவை அசையும். அவற்றிலுள்ள அணிகலன்களும் அசையும். அந்நிகழ்ச்சிகளையே ஈண்டு வளைசிலம்ப, குழை ஆட, குழல் புரள, தேன்பாய, வண்டுஒலிப்ப என்று கூறுகின்றார். ***கை ஆர் வளை*** - கைகளில் அணிந்துள்ள வளையல்கள். சிறுமியரும் இளம் பெண்களும் ஒவ்வொரு கையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட வளையல்களை அணிதல் இன்றும் காண உள்ளது. அவை ஒன்றுடனொன்று மோதி ஒலியெழுப்ப வேண்டிப் பொன் வளையல்களுடன் சங்கு, கண்ணாடி ஆகியவற்றால் ஆன வளைகளையும் அணிவர். இங்கு ***ஆர்*** என்றது நிறைய என்ற பொருளில் வந்தது. அதை ***வளை, சிலம்புதல்*** இரண்டனுடனும் கூட்டி நிறைய வளைகளை அணிந்து அதனால் நிறைய ஒலிகள் எழ ஆடினர் என்க. ***வளை*** - வளைந்துள்ள வடிவம் பற்றி இந்த அணிகலம் வளை என்ற பெயர் பெற்றது. ***சிலம்பு*** - ஒலிக்க.

காது ஆர் குழை ஆட - அம்மானை ஆடும் பொழுது அம்மானைக் காய்களின் போக்குவரவைக் கவனிக்கும் தலை ஆடும்; அதனால் செவிகளில் உள்ள குழைகளும் ஆடும்படி என்றவாறு. ***ஆர்*** - ஈண்டுப் பொருந்திய என்ற பொருளில் வந்தது. காதுகளிற் பொருந்திய குழைகள் என்று கொள்க.

மை ஆர் குழல் புரள: மை ஆர் குழல் - மேகம் போன்று கருநிறம் வாய்ந்த கூந்தல். ***ஆர்*** - ஈண்டு உவம உருபாக வந்தது. அம்மானை ஆடும் பெண்களின் இளமை குறித்து நின்றது. ***மை*** என்பது மகளிர் கூந்தலுக்கு அணியும் கருநிறமுள்ள "தகரம்" முதலிய மயிர்ச்சாந்து என்று கொண்டு மயிர்ச்சாந்து நிறையப் பூசிய கூந்தல் எனலுமாம். அம்மானை ஆடுழி

மேற்கூறிய வண்ணம் அவர்கள் தலைகள் அசைதலின், பின்னிப் பின்புறம் தொங்க விடப்பட்டுள்ள கூந்தலும் முதுகில் புரண்டன என்க.

தேன் பாய வண்டு ஒலிப்ப - கூந்தல் அசைதலின் அதிற் சூடியுள்ள மலர்களும் அசைந்தன. அவ்வசைவினால் மலர்களில் நிறைந்துள்ள தேன் கீழே ஒழுகலாயிற்று. அதுவரை மலர்களில் அமர்ந்து ஓசையின்றி மதுவை நுகர்ந்து கொண்டிருந்த வண்டுகள், மலர்களின் அசைவால் மேலெழுந்து ஆரவார ஒலி எழுப்பின. **தேன்** என்பதை வண்டின் சாதி விசேடமாகக் கொண்டு வண்டுகள் போன்ற விழிகள் அம்மானைக் காய்கள் செல்லும் கதியில் தாங்களும் பாய்ந்து செல்ல எனலுமாம். **ஒலித்தல்**- பொருளுடன் கூடிய ஓசை. ஈண்டு மகளிர் அம்மானைப் பாடல் இசையை யாழில் அமைத்துப் பாடுவதுபோல் வண்டுகள் ஒலித்தன என்க.

“சிலம்ப; ‘ஆட’;‘புரள’;‘பாய’;‘ஒலிப்ப” என்ற வினையெச்சங்கள் பாடலின் ஈற்றடியிலுள்ள “பாடுதும்” என்றதும் மீற்று உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினை முற்றைத் தழுவி முடிந்தன.

செய்யானை வெண்ணீறு அணிந்தானை: ***செய்யான்*** - செந்நிறமுள்ளவன். திருத்தம் வேண்டப்படாத செம்மையுள்ளவன் எனலுமாம். வெண்ணீறு ***அணிந்தானை***- திருநீற்றில் வெண்ணிறமுள்ள நீறே அணியத்தக்கது. இதைப் பேரூர்ப் புராணம் உபதேசப் படலத்தில் விளக்கமாகக் காண்க. இறைவன் திருநீறு அணிந்துள்ள நிலைகள்பற்றி முன்னம் திருவண்டப்பகுதி வரி 33-ல் “நீற்றோன்” என்றதன் கீழ் விளக்கினும். “செய்யான் வெண்ணீறு” முரண்சுவை காண்க.

சேர்ந்து அறியாக் கையானை- ஒரு பொருளிலும் தோய்ந்து அறியாத ஒழுக்கமுடையவன். **கை** - ஒழுக்கம். **கை** - என்பதற்கு “இடம்” என்று பொருள் கொண்டு “அறிந்து சேராக் கையானை” என மாற்றி; “உயிர்கள் தாமே அறிந்து அடைய இயலாத இடத்தையுடையவன்” எனலுமாம்.

இப்பகுதிக்குச் “சிவபெருமான் தனக்கு மேம்பட்ட தலைவன் ஒருவனில்லாதவன் ஆதலின் அத்தலைவனை வணங்க இறைவன் தன் இருகரங்களையும் சேர்த்துக் குவித்தல் இல்லாதவன் என்று கவியரசு அவர்கள் உரை கூறுவர். இதற்கு அவர்கள் எடுத்துக்காட்டும் ஆதாரம்.

திருச்சிற்றம்பலம்

“பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க விருந்தவன்; பேர்நந்தி
என்னாற் றொழப்படு மெம்மிறை மற்றவன்
தன்னாற் றொழப்படு வாரில்லை தானே”

திருச்சிற்றம்பலம்

(திருமந்திரம் 44)

என்பதாம்.

எங்கும் செறிந்தானே - இறைவன் சித்துப்பொருள்கள், சடப் பொருள்கள் அனைத்திலும் நிறைந்துள்ளான் என்பதை மண்சுமந்த திருவிளையாடலில் இறைவன் பாண்டியனிடம் பட்ட பிரம்படி எல்லா உயிர்களின் உடம்புகளிலும் சடப் பொருள்கள் மீதும் பட்டது என்பதாலறியலாம். இவ்வுண்மையை;

“பாண்டியன் முதுகிற் பட்டது செழியன்
பன்னிய ருடம்பிற் பட்ட
தாண்டகை யமைச்சர் மேனி மேற் பட்ட
தரசிளங் குமரர்மேற் பட்ட
தீண்டிய கழற்கால் வீரர்மேற் பட்ட
திவுளிமேற் பட்டது பருமம்
பூண்டவெங் கரிமேற் பட்டதெவ் வுயிர்க்கும்
போதன்மேற் பட்டவத் தழும்பு” (53)

“பரிதியு மதியும் பாம்புமைங் கோளும்
பன்னிறம் படைத்த நாண் மீனும்
இருநிலம் புனல்கா லெரிகடுங் கனல்வா
னென்னுமைம் பூதமுங் காரும்

சுருதியு மாறு சமயவா னவருஞ்
சுரர்களு முனிவருந் தொண்டின்
மருவிய முனிவர் கணங்களும் பட்ட
மதுரைநா யகனடித் தழும்பு" (54)

"வானவர் மனிதர் நரகர்புள் விலங்கு
மாசுணஞ் சிதலெறும் பாதி
ஆனபல் சரமு மலைமரங் கொடிபுல்
லாதியா மசரமும் பட்ட
ஊனடை கருவும் பட்டன தழும்போ
டுதித்தன வுயிரிலோ வியமுந்
தானடி பட்ட சராசர சடங்க
டமக்குயி ராயினோன் றழும்பு" (55)

(பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் - மண் சுமந்த படலம்)

என்பவற்றில் காண்க.

சேர்ந்து அறியா - செறிந்தான் என்பவற்றுள் முரண்சுவை காண்க.

அன்பர்க்கு மெய்யானை - அன்பர் - சித்தத்தைச சிவன்பாலே வைத்த மெய்யடியார்கள். **மெய்யான்** - அனுபவத்துக்குரிய உண்மைப் பொருளாயுள்ளவன். மெய்யடியார் பொருட்டு மானிட உடம்பு தாங்கி வருபவன் எனலுமாம். இதற்கு நம் அடிகள் சரிதமே சான்றாகும்.

அல்லாதார்க்கு அல்லாத வேதியனை: அல்லாதார் - அன்பரல்லாதவர்கள். அவர்கள் புறப்புறசமயத்தாரும் புறச்சமயத்தாரும் ஆவர். **அல்லாதவேதியன்** அனுபவத்துக்குவரும் சத்துப் பொருளல்லாத மறையவன். **வேதியன் -வேதம்** - ஞானம். **வேதியன்** - ஞானத்தின் தலைவனும், ஞானத்தைச் சொன்னவனும், ஞானமே திருமேனியாகக் கொண்டவனும் ஆவன். எனினும் அல்லாதார் அஞ்ஞானத்தை அகற்றாது அவர்கள் உள்ளத்தில் அல்லாதவனாகவே நிற்பவன் எனலுமாம்.

ஐயாறு அமர்ந்தானை - திருவையாறு என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ளவன். இவனே முன்னம் அத்தலத்தில் முப்போதும் திருமேனி தீண்டுவோரில் ஒருவராக வந்து திருக்கோயில் இறைவனை அருச்சித்து அந்த வருமானத்தை அதற்குரிய சிவாசாரியாரின் குடும்பத்துக்கு நல்கி அக்குடும்பத்துடன் ***செறியாமல்*** ஊர்த்திருமடம் ஒன்றில் ***செறிந்திருந்தவன்.*** அவ்வரலாற்றை முன்னம் கீர்த்தித் திருவகவல் 85-ல் "ஐயாறதனிற் சைவனாகியும்" என்றதன் கீழ் உரைத்தாம்.

ஐஆறு அமர்ந்தானை - திருவைந்தெழுத்தின் வழி உயிர்கள் தன்னை அடையும்படி எழுந்தருளியுள்ளவன் எனலுமாம்.

தல விசேடம் - ஐயாறு - முன்னம் கீர்த்தித் திருவகவல் 85-ல் "ஐயாறு" என்றதன் கீழ்க்காண்க.

இத்திருப்பாடலில் இறைவன் "அன்பர்க்கு மெய்யான்" என்றமையால் அவனது எளிவந்த இயல்பு குறித்து மகிழ்ச்சி வெளிப்படலும், அவன் புகழை வளை சிலம்ப, குழை ஆட, குழல் புரள, தேன் பாய, வண்டு ஒலிப்ப அம்மானை ஆடிக்கொண்டு பாடுவதால் அம்மகிழ்ச்சியின் மிகுதியால் எய்தும் களிப்பும் வெளிப்பட்டு, "***ஆனந்தக் களிப்பு***" மேலோங்கல் புலனாயிற்று.

188\. ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
ஊனையு நின்றுருக்கி யென்வினையை யோட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையு மொத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்றொழும்பிற்
கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்கா ணம்மானாய் கசு

(இ-ள்)

யானையாகவும், புழுவாகவும், மனிதராகவும், தேவராகவும், பிற பிறவிகளையுடையனவாகவும் பிறந்தும், இறந்தும் இளைத்த என்னை; என்னுடன் நீங்காது நின்று உள்ளத்தையும், உடலையும் உருகச் செய்து; என்

வினையை ஓட்டுதலே உயர்வாகச் செய்து, இனிய தேனையும் பாலையும், கற்கண்டையும் போன்று (இனிமை நல்கி) ஞானசிரியன் போல என்பால் தானே வலிய வந்து என்னையும் தன் அடியவர் கூட்டத்துக்கு உரியவனுக்கிய சிதாகாசத்தினன் திருவடிகளேயே; நம் அம்மானைப் பாட்டின் பொருளாக அமைத்துப் பாடுவோமாக.

(வி-ரை)

இத்திருப்பாடலில் நான்காம் அடியிற்றிலுள்ள "இனிய" என்பதை அவ்வடியின் முதலிலும், அடுத்த அடியின் முதலிலும் அமைத்தபின் பாடல் முழுவதுக்கும் பொருள் காண்க.

ஆனை ஆய்க் கீடம் ஆய் மானுடர் ஆய் தேவர் ஆய் - ஆனை கீடம் - நாம் காணும் உயிர் இனங்களில் மிகப் பேருடல் கொண்டதும் முதுகெலும்புடன் கூடிய இனத்தைச் சேர்ந்த யானை. மிகவும் சிற்றுடல் கொண்டது எலும்பே இல்லாத இனத்தைச் சேர்ந்த புழு. வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட விலங்கினங்களில் யானையினும் பேருடல் கொண்ட விலங்குகள் இருந்தன என்பது தொல்பொருள் ஆய்வாளர் கண்ட உண்மை. புழுவினும் சிறியனவாகக் கண்ணுக்குத் தெரியா நுண் கிருமிகள் இன்றும் உள்ளன என்பது உயிரியலார் கூறும் உண்மை. ஆயினும் இன்று பெரும்பாலோர் கட்புலனுகக் காணவுள்ள யானையும் புழுவுமே ஈண்டு உடலின் பருமை நுண்மைகளுக்கு எடுத்துக்காட்டுக்களாயின.

மானுடர் ஆய் தேவர் ஆய் - அறிவு ஆற்றல் துய்க்கும் இன்பம் இவற்றின் சிறுமை பெருமைகளுக்கு எடுத்துக்காட்டுகளாக முறையே பருவுடல் கொண்ட மனிதரும், ஒளியுடல் கொண்ட தேவர்களும் கூறப் பெற்றன.

ஏனைப் பிறவாய் - யானைக்கும் புழுவுக்கும் இடைப்பட்ட எல்லா அஃறிணைப் பிறவிகளும், மனிதருக்கும், தேவருக்கும் இடைப்பட்ட எல்லா உயர்திணைப் பிறவிகளும். ***பிறவாய்*** - பிற பிறவிகளாய். ***ஏனை*** - என்றமையில் "பிற" என்று பொருள் கொள்ளல் மிகை. அறிவு, இச்சை, செயல் மூன்றுக்கும் இன்பம் அளித்தலின் மூன்றுவமை கூறினுர்.

பிறந்து எய்த்தேனை - மேற்கூறிய மூவகை உயிர்த்தொகுப்பில் நால்வகைப் பிறவிகளில் எண்பத்து நான்கு நூருயிரம் யோனி பேதங்களில் ஒவ்வொரு யோனியிலும் எண்ணற்ற முறை பிறந்து களைத்து விட்ட என்னை. முன்னம் சிவபுராணம் 26-31 அடிகளில் அருளியவற்றையும் அவற்றின் கீழுரைத்தவற்றையும் காண்க. ***எய்த்தேனை*** - எய்த்த என்னை. ***எய்தல்*** - களைப்படைதல்.

ஊனையும் நின்று உருக்கி - ஊன் - ஊனின் காரியமாகிய உடம்பைக் குறித்து நிற்றலின் காரியவாகு பெயர். ***ஊனையும்*** என்ற எதிரது தழுவிய எச்சவும்மையால் உள்ளத்தையும் உருக்கி என்பது பெற்றும். ***நின்று*** - என்னுடனுய் நின்று உருகுதற்கு இயைபில்லாத உடலையும் உருகச் செய்து. (உம்மை - இழிவு சிறப்பு) உள்ளத்தை உருகச் செய்தலன்றி என்பதை அவாய் நிலையாய் வருவித்து, இறந்தது தழுவிய எச்சமாகவும் கொள்க. உடல், உயிருக்குச் சார்பிடமாக நின்று ஆன்ம அறிவையும், ஆற்றலையும் மறைத்துத் தன்னையே பேணச் செய்வது. இறைவன் அதன் வலிமையை ஒடுக்கித் தவத்துக்கும் நற்சார்புக்கும் துணை நிற்கும் வண்ணம் அன்பினை அருளினுன். உள்ளம் அவ்வருளிப்பாட்டை நினைந்து நினைந்து உருகலாயிற்று. உள்ளத்தால் பேணப்படாமையால் உடம்பும் இளைத்தது என்க.

என்வினையை ஒட்டு உகந்து - ஆவின் பாலை ஒரு பாத்திரத்தில் ஏற்றுப் பருகி இன்புற வேண்டின் முதலில் பாத்திரம் தூய்மை செய்யப்படல் வேண்டும். அவ்வாறே சிவானந்தத்தை நுகர்ந்து இன்புற வேண்டின் ஆன்மா தூய்மைசெய்யப் பெறுதல் வேண்டும். எனவே, ஆன்மாவின் மாசாக உள்ள இரு வினைகளை நீக்குதல் கூறுகின்றுர். ***வினை*** - நல்வினை, தீவினை என்ற இரண்டனையும்; அவை பசுதருமங்களும் பசுத் தீவினைகளுமாம். ***ஒட்டு*** - ஓடு என்பது முதனிலை அது பிறவினைப் பொருள் தரும் வகையில் ஒற்று இரட்டித்து ஒட்டு எனத் திரிந்து முதனிலையாயிற்று. ***உகந்து*** - உயர்வாகச் செய்து. ***உகப்பு*** - உயர்வு. முன்னம் கீர்த்தித் திருவகவல் 68-ல் எடுத்துக்காட்டிய தொல்காப்பியம்-சொல்லதிகாரம் உரியியல் சூத்-10 காண்க. ஒட்டுதலை உயர்வாகச் செய்து - என்றவாறு.

இனிய தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்து - ***இனிய*** - நாவுக்கு மதுரமும் உடலுக்கு நலனும் பயக்கும் இன்னியல்புள்ள. ***இனிய*** - என்பதைத் தேன், பால், கன்னல் என்ற மூன்றுக்கும் தனித்தனியே கூட்டுக. தேனின் இனிய இயல்புகள் பற்றி முன்னம் நூற்சிறப்பில் "திருவாசகம் என்னும் தேன்" என்றதன் கீழுரைத்தவை காண்க. ***பாலையும்*** - ***பால்*** - ஈண்டு அப்பொழுது கறந்து காய்ச்சிய புதிய ஆவின்பால் குறித்து நின்றது. அஃதே உடல் நலமளிப்பது. ***கன்னல்*** - கரும்பு. ஈண்டுக் கற்கண்டு குறித்து நின்றது. அது கரும்பை ஆலையில் இட்டுப் பிழிந்து எடுத்த கருப்பஞ்சாற்றினின்றும் பெறப்படுவது. இறைவன் மண் சுமந்து பிரம்படி பட்டு வந்தியம்மைக்கு இன்பம் நல்கிய குறிப்பு.

இனிய கோன் அவன்போல்வந்து - இனிய - என்பதை இடைநிலை விளக்காகக் கொண்டு ஈண்டும் கூட்டியுரைக்க. ***கோன்*** - தலைவன். ஈண்டு ஞானசிரியனைக் குறித்து நின்றது. ***கோன் அவன் போல்*** - மானிட வடிவில் ஞானசிரியனாக வந்தவன் உண்மையில் மானிடனல்லன்; மாதொருபாகனே மானிடன் போல் வந்தான் என்றவாறு. ***அவன்*** - பகுதிப் பொருள் விகுதி. அவன், தேனையும் பாலையும் கற்கண்டையும் ஒத்து இனிமை பயக்கும் அருள் நல்கியதால் ***இனிய கோன்*** என்றார். ***வந்து*** - அவன் வருதற்குரிய தவத்தில் ஈடுபடாதிருந்தும், அவன்தானே என்னைத் தேடி என்பால் வந்து என்றவாறு.

என்னைத் தன் தொழும்பிற் கொண்டு அருளும் - என்னை - "என்னையும்" என இழிவு சிறப்பும்மை விரித்துக் கொள்க. தவநெறியில் நின்று உரிய தகுதியெய்தாத இழிந்த என்னையும் என்றவாறு. ***தொழும்பு*** - அடிமைகள் செய்யும் பணி; தொண்டு, ஈண்டுத் தொழிலாகு பெயராகச் சீவன்முத்தர் திருக்கூட்டத்தை உணர்த்திற்று. அது திருப்பெருந்துறையில் நம் அடிகளுடன் கலந்திருந்த அடியார்கள் திருக்கூட்டம். அது வாசனா மலம் மீண்டும் வளர்ந்து இருவினைகள் பெருகாமல் தடுப்பதாகும்.

வானவன் பூங்கழலே - வானவன் - சிதாகாயத்தில் எழுந்தருளியுள்ளவன். ***பூங்கழல்*** - தாமரை மலர் போன்று பொலிவு பெற்ற திருவடிகள். ***கழல்*** - தானியாகு பெயராகத் திருவடித்துணையை உணர்த்திற்று. ***ஏகாரம்*** - பிரிநிலை. ஏகநாயக வழிபாடு குறித்து நின்றது. இவ்வழகிய திருப்பாடல் பின்னர் வரும்.

திருச்சிற்றம்பலம்

"இன்பம் பெருக்கி யிருளகற்றி யெஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய் - அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையின் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டா னுவந்து."

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 625)

நம் அடிகள் திருவாக்கைப் பெரிதும் ஒத்திருத்தல் காண்க.

இத்திருப்பாடல், இறைவன் நம் அடிகளின் பிறவிகளை அறுத்து, வினைகளைக் களைந்து, அவரைச் சிவானந்தம் நுகரச் செய்ததால் எய்திய ஆனந்தத்தையும், பின்னர் அவ்வானந்தம் நிலைபெறுமாறு அவரைச் சீவன்முத்தர் கூட்டத்தில் சேர்த்ததால் மீதூரும் களிப்பையும் கூறுதலின் "**ஆனந்தக் களிப்பு**" வெளியாதல் பெற்றும்.

189. சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினில்
இந்திரனைத் தோணெரித்திட் டெச்சன் றலையரிந்
தந்தரமே செல்லு மலர்கதிரோன் பற்றகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை யோட்டுகந்த
செந்தார்ப் பொழிற்புடைசூழ் தென்னன்
பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்கா ணம்மானாய். கரு

(இ-ள்)

சிவபெருமானை அவமதித்து இந்திரன் செய்த ஒரு வேள்வியில் அவன் தோள்களை முறித்தவனும்; தக்கன் செய்த வேள்வியில் வீரபத்திர மூர்த்தியை ஏவி, அவரால் வெண்கதிர்ச் செல்வனைக் காலால் தரையில் தேய்ப்பித்தவனும்; எச்சன் தலையைத் துண்டிக்கச் செய்தவனும்; வானில் செல்லும் செங்கதிரோனின் பற்களைச் சிதறும்படி உகுவித்தவனும்; ஏனைய தேவர்கள் பல திசைகளில் சிதறி ஓடும்படி செய்வித்தவனும்; குற்றமற்ற போதுகள் நிறைந்த சோலைகள் சூழ்ந்துள்ள அழகிய நல்ல திருப்பெருந்துறையினனுமாகிய இறைவனின் மந்தார மாலையையே நம் அம்மானைப் பாடலின் பொருளாக அமைத்துப் பாடுவோம்.

(வி-ரை)

இத்திருப்பாடலை, "இந்திரனைத் தோள் நெறித்திட்டு; தக்கன் தன் வேள்வியினில் சந்திரனைத் தேய்த்து அருளி; எச்சன் தலை அரிந்து; அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல் சிந்தத் தகர்த்து; தேவர்களைத் திசைதிசையே ஓட்டுகந்த; செந்தார்ப் பொழில் புடைசூழ்; தென்னன் பெருந்துறையான் மந்தாரமாலையே அம்மானாய்ப் பாடுதும் காண்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

இந்திரனைத் தோள் நெரித்திட்டு - தக்கன் தோன்றுமுன் ஒரு கற்பத்தில் இந்திரன் ஒருவன் அமரருலகை ஆண்டு வந்தான். அவன், சிவபெருமானை அவமதித்து ஒரு வேள்வி செய்தான். அங்குச் சிவபெருமான் தோன்றி இந்திரனின் தோள்களை முறித்தான். இச்செய்தியை;

" பண்டை மகவான் பரிசுணராத் தக்கனைப் போல்
அண்டர்பிரான் நின்னை யறியாதோர் வேள்விசெயத்
துண்டமது செய்து சுரரரையவன் தோள்முரித்தாய்
தண்ட மதனையின்று தானவர்பாற் காட்டாயோ?"

(கந்தபுராணம் - மகேந்திரகாண்டம் - சயந்தன் புலம்புறு படலம் - 70)

என்பதில் காணலாம்.

இந்திரனைத் தோள் நெரித்த வரலாறு வேறு சில வடமொழி நூல்களிலும் காணப்படுகின்றது. அவற்றை இங்குக் காண்போம்.

"ஒருமுறை இந்திரன் கயிலை சென்ற ஞான்று ஆங்கு வேற்றுருவில் நின்ற சிவபெருமானை நீ யாவன் என்று வினவினன். இறைவன் விடைகூருது நின்றான். சினங்கொண்ட இந்திரன் இறைவனை நோக்கித் தன் வச்சிரப் படையை ஓங்கினன். தோள்கள் செயலற்று நின்றன. வாதநோயால் வருந்தினன் என்பது ஒரு வரலாறு.

இதை ,

" ஜடீ க்ருதத்நியம்பக வீ க்ஷனேன வஜ்ரம்
முமூ க்ஷந்நிவ வஜ்ரபாணி "

இதன் பொருள் - 'வச்சிரப் படையை ஏவவேண்டியவனாகி, முக்கண்ணனுடைய நோக்கினால் செயலற்றவனாகிய இந்திரன்'

(காளிதாசர் - ரகுவம்சம் 2-42)

"பாஹும் ஸவஜ்ரம் க்ருத்ஸ்யாஸ் தம்யத் பிரபு"

இதன் பொருள் - "பிரபுவாகிய மகாதேவர் இந்திரனது வஜ்ஜிரத்தோடு உள்ள கையை முற்றிலும் ஸ்தம்பிக்கச் செய்தார்.

(மகாபாரதம்)

என்பவற்றால் அறியலாம்.

இதற்கு இவ்வாறன்றி இதுவரை வெளிவந்த திருவாச உரை அச்சுப் பிரதிகளிலெல்லாம் இறைவன் வீரபத்திரரால் தக்கன் வேள்வியிற் கலந்து கொண்ட இந்திரனை ஒறுத்த நிகழ்ச்சியாகவே கொண்டனர்; அது வேறு நிகழ்ச்சி. அந்த இந்திரனும் வேறொருவன். அவன் குயில் வடிவம் கொண்டு தப்பி ஓட முயன்றான்; அவனை வீரபத்திர மூர்த்தி ஒறுத்தார். அதை நம் அடிகளே பின்னர், 302-ம் திருப்பாடலில் கூறுகின்றார். அதுபற்றி அப்பாடல் உரையில் விளக்குவாம்.

தக்கன்தன் வேள்வி - முன்னம் 8-ம் திருப்பாடலில் "என்ன பாவம்" என்றதன் உரையில் "தக்கன் வேள்வி செய்த வரலாறு" என்றதன் கீழ் உரைத்தவை காண்க.

சந்திரனைத் தேய்த்து அருளி- தேவர்கள் அனைவரும் இறைவன் ஆலகால நஞ்சுண்டது முதலிய பல அருட் செயல்களால் காக்கப் பெற்றவர். அவருள் சந்திரனும் அடங்குவன். தேவர்கள் அவற்றுக்காகச் சிவபெருமான் பால் என்றும் நன்றிகாட்டக் கடமைப்பட்டவர்கள். ஆனால், சந்திரன் உட்பட அவர்கள் அனைவரும் அவற்றை மறந்து சிவநிந்தகனாகிய தக்கன் வேள்வியிற் கலந்து கொண்டு சிவாபராதம் செய்தனர்; இதிற் சந்திரன் மேலும் இரு படிகள் முன்னேறிச் சென்றான். தக்கன் சாபத்தால் தன் கலைகளை இழந்து முற்றும் அழியும் நிலைக்கு வந்த தன்னைப் புகலாக ஏற்றுத் தக்கன் சாபத்தை நீக்கிக் கலைகள் மீண்டும் வளர அருளியதுடன், சிவபெருமான் தன் சென்னியிலும் அணிந்துகொண்டு சிறப்புச் செய்தார். அது சந்திரனுக்குத் தனிப்பட்ட முறையில் செய்த அருளிப்பாடு. சந்திரன் இதையும் மறந்தது அவனது இரண்டாவது சிவாபராதம். மறந்தவன் மகாதேவனின் பகைவனாகிய தக்கனுடனேயே சேர்ந்துகொண்டது மூன்றாவது சிவாபராதம். ஆதலின் ஒறுப்புண்ட சிவாபராதிகளில் சந்திரனை முதலில் வைத்தார்.

ஏனையோரை வீரபத்திரமூர்த்தி ஒறுத்துழி அவர்கள் தலை பல் முதலிய ஒவ்வோருறுப்பை மட்டும் துண்டித்தார். அவை அவ்வவர் செய்த சிவாபராதங்களாகிய வேள்விக்கு அறிவினால் உதவியது; தக்கன் சிவநிந்தனை செய்த பொழுது மகிழ்ந்து சிரித்தது முதலியவற்றுக்கு விதிப்படி அமைந்த ஒறுப்புக்கள்.

இதனை,

திருச்சிற்றம்பலம்

"தக்கனது பெருவேள்விச் சந்திரனிந்
திரனெச்ச னருக்கனங்கி
மிக்கவிதா தாவினொடும் **விதிவழியே**
தண்டித்த விமலர்கோயில்
கொக்கினிய கொழும்வருக்கை கதலிகமு
குயர்தெங்கின் குவைகொள் சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றமே."

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 1-131-3)

எனவரும் நம் ஆளுடைய பிள்ளையார் திருவாக்காலறிக.

ஆனால் சந்திரன் செய்த சிவாபராத மிகுதி கருதி, அவன் உடலுறுப்புகள் அனைத்துமே அழியும்படி அவனைத் தரையிற் கிடத்திக் காலால் தேய்த்தார். வெண்ணெயாற் செய்த ஒரு பதுமை போல் அவன் முற்றிலும் அழிந்தான்.

இதனை;

"இன்னதோர் காலையி லிரிந்து போவதோ
மெய்ந்நின்ற **மதியினை** வீரன் காணுறாத்
தன்னொரு பதங்கொடே தள்ளி மெல்லெனச்
சின்னம துறவுடல் தேய்த்திட் டானரே"

(கந்தபுராணம் - தட்ச காண்டம் - யாக சங்காரப் படலம் - 24)

"நிழற்கடவுட் சுடர்த் தொகையைத் திரைத்து நிலத்தரைத்தே
தழற்கடவுட் டடக்கைகளைத் தறித்து மழுப் பொறித்தே

(தக்க யாக பரணி 487)

என்பவற்றுட் காண்க.

அருளி- சந்திரன் செய்த சிவாபராதத்துக்கு அவன் பல கற்பங்கள் கும்பிபாக நரகில் கிடந்து துன்புற வேண்டியவன். ஆயினும் இந்த ஒறுப்பின் பிறகு அவன் மீண்டும் உயிர்பெற்று எழுந்து முன்னைய நிலையில் சிவபெருமான் சென்னியிற் சேரும் பேறுபெற்றான். ஆதலின் இந்த ஒறுப்பே அவனுக்கு அருளிப்பாடும் ஆயிற்று. ***அருளி*** என்பதை எச்சன், அலர்கதிரோன், தேவர்கள் முதலிய ஒவ்வொருவருக்கும் கூட்டுக. அவர்களும் வேள்வி முடிவில் இழந்த உறுப்புகள் செம்மையாகி மீண்டும் உயிர் பெற்றெழுந்தது அருளிப்பாடாகும்.

எச்சன் தலை அரிந்து - எச்சன் - வேள்வியை நடத்தும் தலைமைப் புரோகிதன். தட்சன், வேள்வியைக் கருத்தாவாக இருந்து நடத்தும்படி ஆணை பிறப்பித்தவன். ***எச்சன்;*** அவன் ஆணைப்படி வேள்வி நடத்துபவன். நான்மறைகளின் கருமகாண்டங்களில் பல்வேறு வகை வேள்விகளை நடத்தும் விதிமுறைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றை எல்லாம் பழுதறக் கற்றுத் தன் மூளையில் இருத்திக் கொண்டு வேள்விகளைச் செய்பவன் எச்சன். அம்முறைகளில் வேள்வியின் பயனாகவும், வேள்வி வடிவமாகவும், வேள்வியின் முதன்மையாக அவியைப் பெறுபவனுமாகக் கூறப் பெற்றவன் சிவபெருமானே ஆவன். அதை நன்கு அறிந்திருந்தும் இந்தச் சிவாபராத வேள்வியை நடத்தும் மூளை ஒறுப்புக்குரிய உறுப்பாகும். ஆதலின் அம்மூளை இருக்கும் அவன் ***தலையை அரிந்தார்.*** எச்சனை வேள்வியின் அதிதேவன் என்றும் கூறுவர். இவனை ஒறுத்த நிகழ்ச்சியை,

*“மணனயர் சாலையின் **மகத்தின் தெய்வதம்***
பிணையென வெருக்கொடு பெயர்ந்து போதலுங்
குணமிகு வரிசிலை குனித்து வீரனோர்
*கணைதொடுத் **தவன்தலை களத்தின் வீட்டினான்**” (37)*

*“இரிந்திடு கின்றதோ **ரெச்ச னென்பவன்***
***சிரந்துணி படுதலும்** செய்கை யிவ்வெலாம்*
அரந்தையொ டேதெரிந்தயன்றன் காதலன்
*விரைந்தவ னெழுந்தனன் வெருக்கொள் சிந்தையான் **(38)***

(கந்தபுராணம் - தட்ச காண்டம் - யாகசங்காரப் படலம்)

என்பவற்றிற் காண்க.

அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல் தகர்த்துச் சிந்தி - விண்ணிற் செல்கின்ற விரிகின்ற கதிர்களைக் கொண்ட செங்கதிரவனின் பற்களை உடைத்துச் சிதறச் செய்து. ***அந்தரமே***- செஞ்ஞாயிறு சேர்ந்திருக்க வேண்டிய இடம் தனக்கு ஒளி தந்து வலக்கண்ணில் வைத்துள்ள சிவபரஞ் சுடரை, அந்தச் சார்பை விட்டு அவன் தக்கனைச் சார்ந்தான். தக்கன் வீரபத்திரமூர்த்தியால் ஒறுப்புண்டதால் அச்சார்பையும் இழந்தான். இரு சார்புமிழந்து வேறு சார்பின்றி அந்தரம் அடைந்தான். அங்கும் திரிசங்கு மன்னன் போல் ஓரிடத்தில் நிலைத்து நின்றானல்லன்; திரிந்து கொண்டுள்ளான் என்பார். செல்லும் என்றார். ***"அந்தரத்தே"*** என்பதிலுள்ள சாரியை தொகுத்தலாயிற்று. ***அந்தரம்***- விண்வெளி. ***அலர்கதிர்***- விரிகின்ற கதிர்கள். *சிந்தி* - தகர்த்த பற்கள் பல திசைகளில் சிதறி வீழும்படி செய்து. இதனை;

திருச்சிற்றம்பலம்

"கல்லினற் பாவையோர் பாகத்தர் காதலித் தேத்திய
மெல்லினத் தார்பக்கல் மேவினர் வீழி மிழலையார்
நல்லினத் தார்செய்த வேள்வி செகுத்தெழு
ஞாயிற்றின்
பல்லனைத் துந்தகர்த் தாரடி *யார்பாவ நாசரே"*

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 3-9-2)

" அடித்தலங் கொடுமதி யதனைத் தேய்த்தபின்
விடுத்தனன்; ***கதிரவன் வெருவி யோடலும்***
இடித்தெனக் கவுளிடை யெற்றி னனவன்
உடுத்திர ளுதிர்ந்தென உகுப்பத் தந்தமே"

(கந்தபுராணம் - தட்ச காண்டம் - யாக சங்காரப் படலம் 25)

என்பவற்றிற் காண்க. இதனையே நம் அடிகளும் பின்னர் 308-ம் திருப்பாடலில் கூறுவதும் காண்க. இவ்வாறு வெறுப்புண்டவன் ஆதித்தர் பன்னிருவரில் பூஷா என்பவனாவன்.

தேவர்களைத் திசையே சிந்தி ஒட்டு உகந்த - வேள்விக்கு வந்திருந்த ஏனைய தேவர்கள் பல்வேறு திசைகளில் சிதறி அச்சத்தினால் ஓடச் செய்தலை விரும்பிய என்றவாறு. அவ்வாறு ஓடிய அமரர்களை வீரபத்திர மூர்த்தியும் அவர் படைவீரரும் பற்றி உரிய முறையில் ஒறுத்தனர். அவற்றின் விவரமெல்லாம் கந்த புராணம் - தட்ச காண்டம் - யாக சங்காரப் படலத்திலும், தக்கயாகப் பரணியிலும் பரக்கக் காண்க.
இதனை நம் அடிகளும்;

திருச்சிற்றம்பலம்

“ வேயின தோளி மெலியல்விண் ணோர்தக்கன்
வேள்வியின்வாய்ப்
***பாயின சீர்த்திய னம்பலத் தானைப் பழித்து** மும்மைத்*
தீயின தாற்றல் சிரங்கண் ணிழந்து திசைதிசைதாம்
***போயின எல்லையெல் லாம்புக்கு** நாடுவன்*
பொன்னினையே”

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் - 234)

என அருளிச் செய்தல் காண்க.

சிந்தி - பல்தகர்த்துச் சிந்தி ஒட்டுகந்து என்க.

செம்தாரப் பொழில் புடைசூழ் - தார் - மலரும் பருவத்திலுள்ள போது. *செம்மை* - போதின் செம்மையாவது நீரின்மை, நோய், பூச்சிகள் இவற்றால் தோற்றம் குலைந்து செழிப்பின்றி இருத்தலும் அளவில் சிறியதாக இருத்தலும் ஆகிய குற்றங்கள் இன்மை. *தார்* - என்பது போது என்னும் பொருளில் வருவதை இலக்கியங்களில் காணலாம்.★

★ *“ கார்கண்ட மஞ்ஞையுஞ் செந்தே னிரம்பக் கடைதிறக்குந்*
தார் கண்ட வண்டுந் திருவெங்கை நாயகர்தாண்மலரிச்
சீர்கண்ட வன்பரும் போலநிற் கண்டு சிறக்குமுளப்
போர்கண்ட வேற்கண் மடவாரை மேவுக பூங்கொடியே”

(திருவேங்கைக் கோவை 65)

பொழில் புடைசூழ்- பொழில்- சோலைகள். ஈண்டுச் செந்தாரப் பொழில் - என்றமையின் மலர்கள் நல்கும் நந்தவனம் குறித்து நின்றது. முற்பிறவிகளில் பெருஞ் சிவபுண்ணியம் செய்த உயிர்கள் திருக்கோயில் வழிபாட்டுக்குரிய மலர், இலை முதலிய நல்கும் நந்தவனங்களில் மரம், செடி, கொடிகளாகப் பிறக்கின்றன. மலர் முதலிய அளித்த சிவபுண்ணியத்தால் மேற்கதிகளில் மேவி இறுதியில் வீடு பேறெய்துகின்றன. ஆதலின் அம்மரங்கள் முதலியவுள்ள நந்தவனங்கள் நம் வழிபாட்டுக்குரியன. இவ்வுண்மைகளை நம் பரம ஆசாரிய மூர்த்திகளான நம்பியாரூரரின் செய்கை வழி நமக்கு உணர்த்தி ஆற்றுப் படுத்துகின்றார் சேக்கிழார் பெருமான். அதனை;

திருச்சிற்றம்பலம்

"வன்னி கொன்றைவழை சண்பக மார
மலர்ப்ப லாசொடு செருந்திமந் தாரங்
கன்னி காரங்குர வங்கமழ் புன்னை
கற்பு பாடலங் கூவிள மோங்கித்
துன்னு சாதிமரு மாலதி மௌவ
றுதைந்த நந்திகர வீர மிடைந்த
பன்ம லர்ப்புனித நந்தவ னங்கள்
பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான்"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - தடுத்தாட் கொண்ட புராணம் - 94)

என்பதிற் காண்க.

மாதவம் செய்த தென்திசையில் எத்தனையோ பதிகள் உள்ளன. அவற்றை எல்லாம் விடுத்து இறைவன் தான் ஞானாசிரிய வடிவில் வந்து நம் அடிகளை ஆட்கொள்ளத் திருப்பெருந்துறையைத் தேர்ந்தெடுத்தான். அவனுடன் அவன் கணங்களும் மானிட வடிவில் ஆங்கு அவனைச் சூழ்ந்திருந்தன. யாவரும் பொய்கை நடுவில் தோன்றிய பேரொளியில் புகுந்து மறைந்த பின்னும் எண்ணற்ற அடியார்கள் ஓடி வந்து அப்பொய்கைக் கரையில் கூடியதை முன்பு கீர்த்தித் திருவகவல் 132-முதல் 139 முடியவுள்ள பகுதியிற் பார்த்தோம். ஆதலின் அத்துணைச் சிறப்புள்ள திருப்பெருந்துறையில்

பக்குவமுள்ள உயிர்களையும் பிறகு அங்குள்ள நந்தவனத்தில் தோன்றியுய்ய அருளினன் என்பது மனங்கொள்க.

புடைசூழ் - நந்தவனம் திருக்கோயிலின் புறத்தே ஒரு திசையில் இருப்பின் அத்திசையினின்று வருவோரே அதைப் பணிந்து வர வசதியாக அமையும். திருப்பெருந்துறைக்கு எட்டுத் திசைகளிலிருந்தும் வருவோர் எளிதிற் பணிந்து வர அப்பதியைச் சுற்றிலும் நந்தவனம் அமையத் திருவுள்ளம் பற்றினன் என்பார் *புடைசூழ* என்றருளினர்.

தென்னன்- ஈண்டு, அழகிய நல்ல என்று பெருந்துறைக்கு அடையாக்கினும். *தென்னன்*- பாண்டியன் எனக்கொண்டு "பொழில் புடை சூழ் பெருந்துறை" "தென்னன் பெருந்துறை" எனக் கூட்டியுரைத்தலு மொக்கும்.

மந்தாரமாலை - அமரருலகத்திலுள்ள ஐந்தருக்களுள் ஒன்று - *மந்தாரம்* கற்பகம், பாரிசாதம், சந்தானம், அரிச்சந்தானம் என்பன ஏனைய நான்கு. *மந்தாரம்* முதற்பொருளாகிய மந்தார மரத்தின் பெயர் ஈண்டு அதன் மலராகிய சினைக்கு ஆனதால் முதலாகு பெயர். மந்தார மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை. விண்ணுலகினின்றும் தேவர்கள் தங்கள் மந்தார மரத்திற்பெற்ற மலர்களை, மாலைகளாகத் தொடுத்துக் கொண்டு திருப்பெருந்துறைக்கு வந்து இறைவனுக்குச் சாத்தி வழிபட்டனர் என்க.

இத்திருப்பாடலில், திருக்கயிலையில் இருந்தவாறே; வீரபத்திர மூர்த்தியால் தக்கன் வேள்வியைத் தரைமட்டமாக்கிய பெருவீரன் நம் தலைவன் என்பது பெறப்படுவதால் உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பிற்று. ஒறுப்புண்ட தேவர்களே தங்கள் உலகில் மந்தார மாலையை அவனுக்கு வாகை மாலையாகச் சூட்டிப் பணிந்தனர் என்பதால் அம்மகிழ்ச்சி மேலும் பொங்கிற்று. இதனால் "*ஆனந்தக் களிப்பு*" வெளியாதல் பெற்றும்.

190. ஊனா யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனா யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளுந்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா வறிவா யளவிறந்த பல்லுயிர்க்கும்
கோனாகி நின்றவா கூறுதுங்கா ணம்மானாய் கசூ

(இ-ள்)

என் உடலாயும், உயிராயும், உணர்வாயும் என்னுள்ளே உடனாகி நின்று; கொம்புத்தேன், அமரரமுதம், இனிய கற்கண்டு இவைபோல இன்பமளித்து; விண்ணுலகினரும் அறிய இயலாத பேரின்ப நெறியாகிய சிவஞானத்தை எமக்குக் கொடுத்து அருள் பாலிப்பவனும் தேன் நிறைந்த கொன்றை மலர் மாலையை அணிந்தவனுமாகிய பெருவீரனின், நல்லொளி பொருந்தியும், நீங்காத ஞானமாயும் எண்ணற்ற உயிர்கள் எல்லாவற்றுக்கும் தலைவனாக நின்றதுமான இயல்புகளை நம் அம்மானைப் பாடலின் பொருளாக அமைத்துப் பாடுவோம்.

(வி-ரை)

இத்திருப்பாடலுக்கு ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

ஊன் ஆய் உயிர் ஆய் உணர்வு ஆய் என்னுள் கலந்து - *ஊன்* - மாமிசம். காரண ஆகுபெயராக, அதனாலாகிய உடலை உணர்த்தி நின்றது. *உயிர்* - மூச்சுக் காற்று. *உணர்வு* - அந்தக் கரணங்கள்; *உள்* - உள்ளம்; ஆன்மா. *கலந்து* - வடிவமற்ற இறைவன் எங்கும் நிறைந்து நிற்றலாலும், ஆன்மாக்களுக்கு உடல், கருவிகள், வாழுமிடம் ஆகியவற்றைக் கொடுத்து அவற்றால் உயிர்கள் வினைப்பயன்களை நுகருங்கால் உடனாய் நின்று நுகர்விப்பதாலும் கலந்து என்றார். உடல், மூச்சுக் காற்று, உணர்வு, உயிர் என்பன ஒன்றினொன்று நுண்மையாக அமைத்து மேலும் மிக நுண்ணியனாகிய சிவபெருமானுக்கு இருக்கைகளாக அமைந்துள்ளன. இதனையே;

திருச்சிற்றம்பலம்

"ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
ஆனாயுனக் காளாயினி யல்லேனென லாமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 7-1-7)

என்று நம் நம்பிகள் கூறுவது காண்க. நம் அடிகளும் பின்னர் "ஒன்று நீயல்லை யன்றி யொன்றில்லை" (392) என்று அருளுவதும் பார்க்க.

தேன் ஆய் அமுதமும் ஆய்த் தீங்கரும்பின் கட்டியும் ஆய் - இறைவனால் உயிரெய்தும் பேரின்பத்துக்கு மாயேயங்களாகிய பொருள் தரும் இன்பம் ஒப்பாகாது. எனினும் உலக மக்கள் அறிந்தவற்றுட் சிலவற்றை இங்கு ஒப்பாகக் கூறினார்.

வானோர் அறியா வழி எமக்குத் தந்து அருளும் - வானோர் அறியா வழி - விண்ணுலக வாசிகள் போக உலகில், போக உடல் கொண்டு பசு புண்ணியப் பயன்களான போகங்களை நுகர்பவர்கள். பேரின்பம் நல்கும் சிவஞானத்தை வீடுபேறு எய்துதற்கான வழி என்று அறிய இயலாதவர்கள். *எமக்கு* - எமக்கும் என இழிவு சிறப்பும்மை விரித்துக் கொள்க. சிற்றறிவும் சிறு தொழிலும் உள்ள எங்களுக்கும் என்றவாறு. தம்மோடு ஒத்த அடியார்களையும் உளப்படுத்திப் பன்மையிற் கூறினார். *தந்து அருளும்* - தகுதியற்ற எங்களுக்குத் தந்தது அவன் அருள் காரணமாக. என்க.

தேன் ஆர் மலர்க் கொன்றைச் சேவகனார் - தேன் ஆர் மலர் - தேன் நிறைந்துள்ள மலர் என்றும், வண்டுகள் நிறைந்துள்ள மலர் என்றும் உரைக்க. தேன் வீட்டின்பத்தையும், வண்டுகள் அவற்றை நுகரும் பக்குவான்மாக்களையும் குறிப்பாலுணர்த்தி நின்றன. *கொன்றை* - இது மஞ்சள் நிறமுள்ள மலர். அந்த நிறம் செம்மையும், பசுமையும் தம்முள் அளவொத்துக் கலந்த கலப்பு நிறம். செம்மை, சிவத்தின் வண்ணத்தையும், பசுமை, உமையம்மையின் வண்ணத்தையும் குறிப்பன. இரண்டும் கலந்த மஞ்சள் வண்ணம் அம்மையப்பனைக் குறித்து நின்றது. கொன்றை மலர் பிரணவ வடிவமாயுள்ளது. அது சமட்டித் திருவைந்தெழுத்து. இறைவன் திருவைந்தெழுத்தைத் தன் வடிவமாகவும் பெயராகவும், மந்திரமாகவும் கொண்டு, தானே திருவைந்தெழுத்தாகவும் உள்ளான். இதுபற்றி முன்னம் சிவபுராணம் 1-ல் "நமச்சிவாய" என்றதன் கீழுரைத்தவை காண்க. *சேவகனார்* - *ஆர்* - உயர்வுப் பன்மை.

சீர் ஒளி சேர் - சீர் - சிறப்பு. உயிரறிவு போல் அறிவித்தால் மட்டும் அறியும் சிற்றறிவாயன்றி எப்பொழுதும் வேறு துணையின்றி விளங்கும் சிறப்பு. *ஒளி* - விளக்கம். *சீர்ஒளி* - புகழால் விளைந்த தேசு எனலுமாம்.

ஆரு அறிவு ஆய் - ஆரு - குறையாத; நீங்காத. இறைவன், புகழால் விளங்கும் சிறப்புடன் என்றும் குறையாத அறிவாகி விளங்குகின்ருன் என்றவாறு.

ஈண்டு;

"ஆரு வறிவா யகலா னடியவர்க்கு
வாருடர் காணுத மன்"

(திருவருட்பயன் 1-7)

எனவரும் ஞான சாத்திரம் நினைக.

அளவு இறந்த பல்லுயிர்க்கும் கோன் ஆகி - அளவு இறந்த - உயிர்கள் எண்ணற்றவை. ஆதலின் அளவிறந்த என்ருர். ***பல்லுயிர்*** - நால்வகைப் பகுப்பில் எழுவகைப் பிறப்பில் எண்பத்து நான்கு நூருயிரம் யோனி பேதத்தில் ஒவ்வொரு யோனியிலும் பல பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் பன்முறை பிறக்கும் உயிர்கள் மிகப் பலவாதலின் அவற்றை பல்லுயிர் என்ருர்.

கோன் ஆகி - தலைவனுகி. எண்ணற்ற உயிர்கள் அனைத்துக்கும் பசுபதியாகிய தலைவன் இறைவனுகிய பதிப்பொருள் ஒன்றே என்பது நினைக.

நின்றவா - நின்ற இயல்பை. நின்றவாறு என்பதன் கடைக்குறை. நிற்றல் - அநாதியாகவே இருத்தல். இத்திருப்பாடலின் எதிரொலியாக;

திருச்சிற்றம்பலம்

"ஊனினுள் ளுயிரை வாட்டி
யுணர்விஞர்க் கெளிய ராகி
வானினுள் வான வர்க்கு
மறியலா காத வஞ்சர்
நானெனிற் ருனே யென்னு
ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்
தேனுமின் னமுது மாஞர்
திருச்செம்பொன் பள்ளி யாரே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4-29-1)

எனவரும் நம் அரசுகளின் அமுத வாக்கு அமைந்துள்ளது காண்க.

இத்திருப்பாடலில் நம் அடிகள், தம் உள்ளத்தில் இறைவன் கலந்து நின்று கற்கண்டு போல் இன்பந்தருதலைக் கூறுவதால் மனம் மகிழ்ச்சியால் நிரம்பியவாருயிற்று. அவ்வின்பம் விண்ணுலகரும் அறியாத ஒன்று என்றமையால் அம்மகிழ்ச்சி மேலும் மிகுவது பெற்ரும். இதனுல் "ஆனந்தக் களிப்பு" வெளியாதல் காண்க.

191. சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்றிரடோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றூடுவேன் செவ்வாய் குருகுவே னுன்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வே னனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்கா ணம்மாணய் கஎ

(இ-ள்)

சிவ நின்மாலியமாகிய அழகிய கொன்றை மாலையை என்குழலிற் சூட்டிக் கொள்வேன்; சூட்டிக் கொண்டு சிவனுடைய திரண்ட தோள்களைக் கூடுவேன்; கூடித்தழுவி அவ்வின்பத்தால் என் வயமிழந்து நிற்பேன்; அன்பின் மிகுதியால் அவனுடன் ஊடல் கொள்வேன்; எனினும் அவன் சிவந்த வாய் நீரைவேட்டு உள்ளம் உருகுவேன்; அவ்வுருக்கத்தால் அவனைத் தேடுவேன்; அவ்வாறு தேடிக் கிட்டாமையால் அவன் திருவடிகளையே நினைப்பேன்; உடல் வாடி இளைப்பேன்; பின்னர் மகிழ்ந்து உடல் பூரிப்பேன் (இவ்வாறு எனக்கு இன்றியமையாதவனுகிவிட்ட) எரியைக் கரத்தில் தாங்கிக் கூத்தியற்றுவோனின் செம்மையான திருவடிகளையே நம் அம்மானைப் பாட்டின் பொருளாக அமைத்துப் பாடுவோம்.

(வி-ரை)

இத்திருப்பாடலின் முதலடியில் உள்ள இரு சீர்களையும், பூங்கொன்றை சூடுவேன் என்று மொழி மாற்றிக் கொண்டு, பின்பு பாடல் முழுவதுக்கும் ஆற்ரெழுக்காகப் பொருள் காண்க.

நம் செந்தமிழ் மொழியில் பொருளைப் "புறம்", "அகம்" என இரண்டாகப் பிரித்துக் கொண்டு அகப்பொருளில் அன்பின் ஐந்திணைகளை

வகுத்து அவற்றைத் தனி மனிதரின் இல்வாழ்வு நிகழ்ச்சிகளாக இலக்கணம் அமைத்துள்ளார்கள். இஃது உலகில் வேறு எம்மொழியிலும் காணக் கிட்டாத சிறப்பு. இவை நிகழும் இடங்களை நான்கு நிலங்களாகப் பிரித்தனர். வசதி கருதிக் குறிஞ்சியை முதலில் வைத்தாம். அவை குறிஞ்சி (மலையும், மலை சார்ந்த இடங்களும்); முல்லை (காடும் காடு சார்ந்த இடங்களும்); மருதம் (வயலும் வயல் சார்ந்த இடங்களும்); நெய்தல் (கடலும் கடல் சார்ந்த இடங்களும்) ஆம்.

இதனை;

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

(தொல்காப்பியம் - பொருளதிகாரம்.
அகத்திணை இயல் சூ.5)

என்று இலக்கணம் இயம்புவது காண்க.

இவற்றுள் குறிஞ்சியும் முல்லையும் வான் பொய்த்துப் பஞ்சம் நிலவுழித் தங்கள் இயல்பு திரிந்து பாலை என்ற நிலமாகும். இவ்வைந்துக்கும் உரிய நிகழ்ச்சிகளாவன. குறிஞ்சிக்கு கூடலும், பாலைக்கு பிரிதலும், முல்லைக்கு ஆற்றி இருத்தலும், மருதத்துக்கு ஊடலும், நெய்தலுக்கு இரங்கலுமாம்.

இதனை,

"புணர்தல் பிரித லிருத்த லிரங்கல்
ஊட லவற்ற னிமித்த மென்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே"

(தொல்காப்பியம் - பொருளதிகாரம் -
அகத்திணை இயல் - சூ.16)

என்றதிற் காண்க.

இவ்வன்பின் ஐந்திணைக்குரிய உரிப்பொருள்களை மானிடப் பெண் ஒருத்தி திருப்பெருந்துறை இறைவனை நயந்ததாகக் கொண்டு அவள் மீது வைத்துப் பாடுவார் போன்று நம் அடிகள் சிவநெறிச் செலவில் மிக முன்னேறிய ஒருயிரின் ஐந்து அவத்தைகளைக் குறிப்பால் பெற வைக்கின்றார். அதைப் பின்பு காண்போம்.

பூங்கொன்றை சூடுவேன்- தலைவன், தன்னைப் பிரிந்து சென்ற பின்பு அவன் தோளைத் தழுவி இன்புறும் செவ்விபெறாத காலத்து அவன் அணிந்திருந்த மாலை அவன் உடலின் பரிசம் பெற்றதால் அவனாகவே கருதி முகர்ந்து தன் கூந்தலில் அணிந்து கொள்ளல் தலைவிக்கு ஆறுதல் அளிக்கும். ஆதலின் அவன் சாத்திக் கழித்த நின் மாலியமான கொன்றை மாலையைச் சூடுவேன் என்றார். இதில் பாலைத் திணைக்கு உரிய பிரிவு உணர்த்தியவாறு காண்க. சிவ நின்மாலியம் சண்டீச நாயனார் வழி, நம்பன் அடியார்களே பெற உரிமையும் தகுதியும் உள்ளவர் என்பது நினைக. *கொன்றை* - 190-ம் திருப்பாடலில் "தேனார் மலர்க்கொன்றை" என்றதன்கீழ் விளக்கியவை காண்க.

சிவன் திரள் தோள் கூடுவேன் - திரள் தோள் - திரண்ட தோள்கள் இளைஞருக்கு வலிமையையும் வனப்பையும் தருவன. இளம் பெண்களின் கொங்கைகளை இளைஞர் விரும்புவது போல, அவர்கள் திரண்ட தோள்களை இளம்பெண்கள் விரும்புவர். ஈண்டுக் கூடுவேன் என்றது குறிஞ்சித் திணையை உணர்த்தி நின்றது.

கூடி முயங்கி மயங்கி நின்று ஊடுவேன் - *முயங்கி* - இறுகத் தழுவி.

இதனை,

> "வீழு மிருவர்க் கினிதே வளியிடை
> போழப் படாஅ முயக்கு"
>
> (திருக்குறள் 1108)

என்பதிற் காண்க.

மயங்கி - அம்மயக்கம் தரும் இன்பத்தால் என்வயம் இழந்து நிற்பேன். *ஊடுவேன்* - அவ்வின்பத்தை மேலும் மிகுதிப்படுத்த அவனுடன் பிணங்குவேன் என்றவாறு.

இதனை;

"ஊடுதல் காமத் திற்கின்ப மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்"

(திருக்குறள் 1330)

என்றதிற் காண்க.

ஈங்கு ஊடுவேன் என்றது மருதத் திணையை உணர்த்தி நின்றது.

செவ்வாய்க்கு உருகுவேன் - அவனுடன் ஊடல் கொண்டேன். எனினும் அவனைப் பிரிந்துள்ள இந்நிலையில் அவன் சிவந்த வாயில் ஊறும் உமிழ் நீரை விரும்பி, மனம் உருகுவேன் என்றவாறு. *செவ்வாய்* - இடவாகு பெயராக உமிழ்நீரை உணர்த்திற்று. இவ்வாறு தலைவி இரங்கலின் இது நெய்தற்றிணையை உணர்த்திற்று.

உள் உருகித் தேடுவேன் - அவன் பிரிவால் உள்ளம் உருகி அதன் காரணமாக அவன் சென்ற திசையை நோக்கி அவன் திரும்பி வருவானோ என்று என் கண்களால் தேடுவேன்.

தேடிச் சிவன் கழலே சிந்திப்பேன் - *தேடி* - அவ்வாறு புறத்தே தேடி அவன் கிட்டாமையால் *சிவன் கழலே சிந்திப்பேன்* - என் தலைவனாகிய சிவபெருமானின் திருவடிகளை அகத்தே தேடுதலாகிய தியானத்தில் திளைப்பேன். இத்தேடுதலில் அவன் கிடைப்பான் என்ற நம்பிக்கையில் ஆற்றி இருத்தலின் இது முல்லைத்திணை குறித்து நின்றது.

வாடுவேன் - அவன் பிரிவாலுற்ற மனத்துன்பத்தால் உள்ளம் வாடி உடல் இளைப்பேன். *பேர்த்தும் மலர்வேன்* - பேரன்பினனாதலின் அவன் எப்படியும் திரும்பி வருவான் என்ற நம்பிக்கையால் வாடிய உள்ளமும் உடம்பும் மீண்டும் பூரிப்படைவேன். *பேர்த்தும்* - மீண்டும். பெயர்த்தும் என்பதன் மரூஉ.

அனல் ஏந்தி ஆடுவான் - அனல் அழித்தலையும், *ஆடுதல்* புனருற்பவத்தையும் குறித்து நின்றன. அவனே முழுமுதற் கடவுள் என்றவாறு. "சங்கார காரணனாயுள்ள முதலையே முதலாவுடைத்து இவ்வுலகம்" என்பது சிவஞானபோதம் முதற் சூத்திரத்தின் கருத்துரை.

இனி, இத்திருப்பாடலில் அன்பின் ஐந்திணைகள் என்ற வடிவில் பொதிந்து நம் அடிகள் நல்கும் விழுமிய பொருள்களைக் காண்போம்.

உயிர், உடலில் பொருந்தியுள்ள பொழுது உடலில் உள்ள ஐந்து இடங்களில் ஏதேனும் ஒன்றில் நிலை கொள்ளும். இதனை உயிர் ஐந்தவத்தைப் படும் என ஞான நூல்கள் நவிலும். "அவத்தை" என்னும் சொல் "நிலை" என்னும் பொருளதாம். அவ்வைந்திடங்கள் நெற்றியில் இரு புருவங்களின் நடு; கழுத்தின் முன் பகுதி; இதயம்; நாபி; மூலாதாரம் என்பன. விழிப்பு நிலையில் உயிர், நெற்றியில் இரு புருவங்களின் நடுவில் நிலைக்கும் பொழுது முப்பத்தைந்து கருவிகளுடன் கூடி வெளியுலகத் தொடர்புடன் நிற்கும். இதனைச் "சாக்கிராவத்தை" என நூல்கள் நவிலும். இது கேவல சாக்கிராவத்தை கனவு நிலையில் உயிர் கண்டத்தை இடமாகக் கொள்ளும்; அப்பொழுது அது தச வாயுக்கள் பத்து, சந்தாதி விடயங்கள் ஐந்து, வசனாதி விடயங்கள் ஐந்து, அந்தக் கரணங்கள் நான்கு ஆக இருபத்து நான்கு கருவிகளுடன் கூடியிருக்கும். இந்நிலையைச் "சொப்பனாவத்தை" என்று நூல்கள் கூறும். கனவற்ற ஆழ்ந்த உறக்க நிலையில் உயிர் இதயத்தை நிலைக்களனாகக் கொள்ளும். அப்பொழுது அஃது உயிர் வளி (பிராண வாயு); சித்தம் என்ற இரு கருவிகளுடன் மட்டும் பொருந்தியிருக்கும். இந்நிலையை ஞான சாத்திரங்கள் "சுழுத்தி அவத்தை" என வழங்கும். உயிர் இன்னும் கீழே இறங்கி "நாபி"யை இடமாகக் கொள்ளும் பொழுது பிராண வாயு ஒன்றுடன் மட்டுமே கூடியிருக்கும். இதனைத் "துரியாவத்தை" என்று நூல்கள் கூறும். உயிர் இன்னும் கீழே சென்று மூலாதாரத்திற் நிற்புழிப் பிராண வாயுவுமின்றித் தனியே நிற்கும். இந்நிலை "துரியாதீத அவத்தையாம்" இவ்வாறு உயிர் நெற்றியிலிருந்து மூலாதாரம் வரையும் கீழிறங்கி வரும்நிலைகளைக் "கீழாலவத்தைகள்" எனப் பிரித்தனர் மேலோர். உயிர் துரியாதீதத்தினின்றும் மேல் நோக்கிச் சென்று சாக்கிர நிலையை அடைவது மேலாலவத்தை.

உயிர், நெற்றியின் நடுவில் நின்றவாறே ஏதேனும் உலகியல் பொருளை ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது இவ்வாறே கருவிகள் நீங்கி ஐந்து நிலைகளை எய்தும். அவற்றை "மத்தியாலவத்தைகள்" என வகுத்தனர்.

உயிர் நெற்றி நடுவில் நின்றவாறே இறைவனைத் தியானத்தில் கண்டு திளைக்கும் பொழுதும் இவ்வாறே கருவிகள் படிப்படியாக நீங்கி ஐந்தவத்தை எய்தும். அவற்றை "நின்மலாவத்தைகள்" எனக் கொண்டனர்.

ஈண்டு,

"அந்தக் கரண மவற்றினென் றன்றவை
சந்தித்த தான்மா சகசமலத் துணரா
தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே"

(சிவஞான போதம் சூ.4)

என்றதும், அதற்கு மூன்றுமதிகரணத்தில் "**அஞ்சவத்தை**" என்ற தலைப்பின் கீழ் சிவஞான மாபாடியம் கூறுவதும்,

"எண்ணவொன் றிலாததீத மெய்திய துரியத் தொன்று
நண்ணிடுஞ் சுழுத்தி தன்னின் நயந்துள தொன்று பின்னும்
அண்ணிடுங் கனவு தன்னி லாறேழாஞ் சாக்கி ரத்தின்
கண்ணுறு மஞ்சா றுய கருவிகள் காணுந் தானே"

(சிவப்பிரகாசம் 60)

என்றதும், அதற்கு மதுரைச் சிவப்பிரகாசர் உரையும் காண்க.

இத்திருவாசகப் பாடலில் இரண்டாம் அடியில் "*முயங்கி*" என்றது தலைவனும், தலைவியும் கூடியுள்ள நிலையில் தலைவி அவனை இறுகத் தழுவிய நிலை கூறி, அம்முயக்கம் அவ்விருவரையும் "காற்றும் இடையிட்டுப் பிளக்க இயலாத ஒன்று" எனப் பொருள்தரும் திருக்குறளை எடுத்துக் காட்டினும். ஈண்டுத் தலைவியாக உருவகம் செய்யப் பெற்ற ஆன்மா ஒன்று மட்டுமே உள்ளது. அஃதுடன் பிராண வாயுவுமின்று என்பதால் இந்த முயக்கம் "நின்மல துரிய தீதத்தை" குறிப்பினுல் உணர்த்திற்று.

சிறிது நேரத்தில் தலைவனின் தழுவிய கரங்கள் சற்று நெகிழ இருவரிடையும் காற்றுப் புகுந்து உலவும்நிலை யெய்திற்று. அந்நிலையில் தலைவனுக்குத் தன் மாட்டுள்ள அன்பு குறைந்தது என்று கொண்டு தலைவி ஊடினுள். அதை இத்திருப்பாடலின் மூன்றுமடியில் "ஊடுவேன்" என்று கூறினுர். இப்பொழுது தலைவியாகிய ஆன்மாவும் அதற்குக் கருவியாகப் பிராண வாயுவும் இருத்தலின் இந்நிலை "நின்மல துரியாவத்தை"யைக் குறிப்பாலுணர்த்திற்று.

இத்திருப்பாடலில் இதே அடியில் *மயங்கி* என வரும் சொல்லுக்கு "என் வயமிழந்து" எனப் பொருள் கொண்டாம். இது கனவற்ற ஆழ்ந்த உறக்க நிலையாகும். இந்நிலையில் உயிருடன் கூடியுள்ள இரு கருவிகள் பிராண வாயுவும் சித்தமுமேயாம்; மயக்க நிலையிலும், தலைவி பிராண வாயுவை உயிர்த்துக் கொண்டிருந்தாள்; விழிப்பு நிலை எய்தியதும் தான் மயங்கி இருந்ததைக் கூறுகின்ருள். ஆதலின் அம்மயக்கத்தை அப்போதுமிருந்த சித்தம் அறிந்திருந்தது. ஆகவே இது "நின்மல சுழுத்தியவத்தையை" குறிப்பாலுணர்த்திற்று.

இனி, *உருகுவேன், தேடுவேன், கழலே சிந்திப்பேன்* என்றவை எல்லாம் புறத்தே தேடிக் கிட்டாத தலைவனை அகத்தே தேடுதலும், உள்ளம் உருகுதலும் தியானம் செய்தலுமாகிய செயல்கள் அனைத்தும் புறவுலகின் தொடர்பின்றி நெஞ்சினுள் நிகழ்வன. அந்நிலையில் உயிர் இருபத்து நான்கு கருவிகளுடனும் கூடியுள்ளது தேற்றம். ஆதலின் இச்செயல்கள் "நின்மல சொப்பனவத்தையை"க் குறிப்பாலுணர்த்தின.

"*சேவடியே பாடுதும்காண் அம்மானய்*" என்றது விழிப்பு நிலையில் புற உலகில் உடனிருக்கும் தோழியரை நோக்கிக் கூறியது. ஆதலின் இது "நின்மல சாக்கிராவத்தை" யைக் குறிப்பாலுணர்த்திற்று.

இவ்வாறு சைவ சித்தாந்தம் சாற்றும் ஐந்தவத்தைகளை, நம் செந்தமிழ்ச் செம்மொழிக்கே உரிய அன்பின் ஐந்திணைப் பொருள்களுள் பொதிந்து அவற்றைக் குறிப்பாலுணர்ந்துய்யும் வண்ணம் நமக்கு நல்கியருளும் நம் அடிகளின் தெய்வ நலம் சார்ந்து பழுத்த தமிழ்ப் புலமைத் திறம் கண்டுவக்க.

இத்திருப்பாடலில், சிவானந்தம் எய்தியதால் மயங்கி நின்று உள்ளுருகும் வண்ணம் மனம், மகிழ்ச்சியால் நிறைந்தது. "மலர்வேன்" என்றதால் அம்மகிழ்ச்சி மேலும் ஓங்கிற்று. இவற்ருல் "*ஆனந்தக் களிப்பு*" வெளியாயிற்று.

192. கிளிவந்த மென்மொழியாள்கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்

எளிவந் திருந்திரங்கி யெண்ணரிய வின்னருளால்
ஒளிவந்தென் னுள்ளத்தி னுள்ளே யொளிதிகழ
அளிவந்த வந்தணனைப் பாடுதுங்கா ணம்மானாய் கஅ

(இ-ள்)

கிளி, தன் மொழிக்கு மென்மை கற்றுக் கொள்ளும் பொருட்டு அண்மையில் வந்த, மெல்லிய சொற்களைப் பேசும் உமையம்மையின் நிறம் விளங்கும் பாதி வடிவையுடையவனை; புறத்தே தேடிய திருமாலும் நான்முகனும் காண அரிய வித்தகனை; தெளிந்த தேன் போன்றானை; சிறப்பு மிக்க திருப்பெருந்துறையில் எளிமையுடன் எழுந்தருளி, இரக்கம் கொண்டு, நினைக்கவும் அரிய திருவருளினால் தூய்மை பெற்ற உயிரின் உள்ளே ஞானம் திகழும் வண்ணம் அருள் கனிந்து நின்ற மறையவனை; நம் அம்மானைப் பாட்டின் பொருளாக அமைத்துப் பாடுவோம்.

(வி-ரை)

இத்திருப்பாடலுக்கு ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

கிளிவந்த மென் மொழியாள் கேழ்கிளரும் பாதியனை - கிளி - கிளிகள் மென்மையும் இனிமையுமான குரல்வளங் கொண்டவை. அவற்றின் குரலை மகளிரின் இன்குரலுக்கு உவமை கூறுதல் கவிமரபு. ஈண்டு அம்பிகை, ஓசை ஒலியெலாமாய் நிற்பவள். ஆதலின் அவள் மாட்டு, மேலும் மென்மையும் இனிமையும் கொண்ட குரல்வளம் பெறும் பொருட்டு, கிளிகள் அவள் அண்மையில் வந்தன என்பார் *கிளிவந்த மென்மொழியாள்* என்றார். இன்றும் திருக்கோயில்களில் உமையம்மையின் மூர்த்தங்களுக்கு ஒப்பனை செய்யும்பொழுது பொன்னாலாகிய கிளியை அம்மையின் கரத்தில் இருத்துதல் காண்க. இதற்கு இவ்வாறன்றி வந்த என்பதை உவம உருபாகக் கொண்டுரைத்தனர் முன்னுரையாளரில் பலர். *இன்மொழியாள்* - என்பது திரு. மு.அருணாசலம் அவர்கள் கொண்ட பாடம். *மென்மொழி* - இன்மொழி. இஃது இன்னா மொழியாகிய வன்மொழிக்கு மறுதலை.

கேழ்கிளரும் பாதியன் - இறைவனுக்குத் தனியாக ஓர் உடம்பு இன்று. அவன் தாங்கும் மூர்த்தங்கள் அனைத்தும் அம்பிகையின் வடிவங்களே. ஈண்டு மாதொருபாகம் வழுத்தப்படுகின்றது. இம்மூர்த்தத்தில் இடது கூற்றில் உமையம்மையின் பச்சை நிறம் விளக்கமாகத் தோன்றுகின்றது.

கேள் கிளரும் பாதி என்றமையால் மற்ருெரு பகுதியாகிய வலது கூற்றில் அன்னேயின் வண்ணம் விளக்கமாகத் தோன்ருமல் பொன்னிறத்துள் அடங்கியுள்ளது என்பதை அருத்தா பத்தியாற் பெற்ரும். ***கேழ்*** - நிறம். இச்சொல் இப்பொருளில் வருவதை,

> “ *சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ்*
> *நூற்றித ழலரி னிரைகண் டன்ன*
> ....
> *கெடாத துப்பினின் பகையெதிர்ந் தோரே*”
>
> (புறநானூறு-27)

என்றதன் உரையிற் காண்க.

கிளர்தல்- விளங்கித் தோன்றுதல். *பாதியன்*- பாதி உடம்பையுடையவன்.

வெளிவந்த மால் அயனும் காண்பு அரிய வித்தகன் - *வெளிவந்த*- அகத்தே எழுந்தருளியுள்ள இறைவனேப் புறத்தே தேடுவதற்கு வந்த. *வெளி* - வெண்மை எனக்கொண்டு வெள்ளறிவுடைய எனலுமமையும். *வெளிவந்த* என்ற பெயரெச்சத்தை *வித்தகனுக்கும்* புணர்த்து மாலயன், உள்ளத்தில் எழுந்தருளியிருந்தவன் அவர்கள் தன்னேத் தேடித் தோற்கும் பொருட்டு வெளியில் வந்து நெருப்பு மலேயாக நின்ற வித்தகன் எனலுமாம்.

இதற்கு இவ்வாறன்றி ஊழிக் காலத்தில் ஒடுங்கியிருந்து பிறகு புணருற்பவத்தில் வெளிவந்த மாலும் அயனும் என்னும் பொருள்பட உரைப்பர் சீகாழித் தாண்டவராயர்.

காண்பு அரிய- தன் முனேப்பால் தேடிக்காண இயலாதவனேப் பின்னர்த் தவத்தாற் கண்டார்களாதலின் “காணு” என்ஞது ***“காண்பு அரிய”*** என்ருர். *வித்தகன்* - சதுரப்பாடுடையவன், பேரறிவே வடிவானவன். யாண்டும் வியாபகமாக நின்றும் அவர்கள் காணுமல் ஒளிந்திருக்கும் திறமை கண்டு *வித்தகன்* என்ருர். பேரூழிக் காலத்தில் உலகங்கள் அனேத்தையும் தன்னுள் அடக்கிக் கொள்ளும் மாயை, பின்னர் புனருற்பவத்தில் விதையினின்றும் மரம், செடி, கொடிகள் தோன்றல் போல உலகங்கள் அனேத்தும் மாயையினின்றும் தோன்றும். விதை போன்ற இந்த மாயையை, இறைவன் தன் வைப்புச் சத்தியாகத் தன்பால் வைத்துள்ளான். ஆதலின் ***வித்தகன்*** என்ருர் எனலுமாம்.

தெளிவந்த தேறல்- கொம்புத் தேனேயாயினும் பிழிந்து நெய்யரியால் வடிகட்டியே பின்பே தெளியும். இறைவனுகிய தேன், கோது யாதுமின்றி இயல்பாகவே தெளிந்துள்ளதாகும். தேன் பருகினூர்க்கு மயக்கம் தரும். இத்தேன், மாயை தரும் மயக்கத்தையும் நீக்கித் தன்னைப் பருகினூர்க்குத் தெளிவு தருவது எனலுமாம்.

சீர் ஆர் பெருந்துறையில் எளிவந்து இருந்து - சீர்ஆர் - இறைவன், சிவகணங்களுடன் மானிட வடிவில் எழுந்தருளியிருந்ததாலும், பொய்கைக் கரையில் அடியார் பலர் வீடுற்றதாலும் திருப்பெருந்துறை சிறப்பு நிறைந்த பதியாயிற்று. *பெருந்துறை*- அச்சிறப்புக்களால் பெருமை பொருந்திய தலம். *எளிவந்து* - திருக்கயிலையில் மாதொரு பாகனுக "அயில் கொள்வேற்படை அமரரும் அணுகுதற்கும் அரியனுகவும்;" திருவண்ணுமலையில், திருமாலும், திசைமுகனும் காண்பதற்கும் அரியனுகவும், நின்ற நிலையினின்றும் இறங்கித் திருப்பெருந்துறையில் தானே வலிய வந்து நம் அடிகள் காணும் வகையில் மானிட வடிவில் அமர்ந்திருந்த எளிமையை நினைந்து **எளிவந்து** என்ருர். *இருந்து* - முன்னதாகவே வந்து நம் அடிகளுக்காகக் காத்திருந்து.

இரங்கி எண் அரிய இன் அருளால்- ஆன்மா செய்த தவத்தின் பயனுக இறைவன் குருவாக வந்து உண்மையை உணர்த்துவான் என்று சிவஞான போதம் எட்டாம் சூத்திரம் இயம்புதல் உண்மையே. எனினும் ஆன்மாவின் தவம் இறைவன் இன்னருளுக்கு ஈடாகாது. அவ்வருளால் அவன் என் மாட்டு இரக்கம் கொண்டான். அவ்வின்னருள் எண்ணுதற்கும் அரியது என்றவாறு.

ஒளிவந்த என் உள்ளத்தின் உள்ளே- ஒளிவந்த என்றதன் ஈற்றகரம் கெட்டது. *ஒளி* - தூய்மை. உள்ளம் தூய்மை பெற்ற பின்பே அஃது இறைவன் எழுந்தருளத் தகுதியாகின்றது. அவன் எழுந்தருளவேண்டி உள்ளம் தூயதானது அவன் இன்னருளால் என்றவாறு. **உள்ளம்,** ஈண்டு உயிரைக் குறிக்கும். இதனை, "கட்டு முறுப்புங்" எனத் தொடங்கும் சிவஞான போதம் இரண்டாம் சூத்திரம் முதல் அதிகரணம் ..உதாரண வெண்பாவுக்குச் சிவஞான மாபாடியம் கூறும் உரையாலறிக.

ஒளி திகழ அளிவந்த அந்தணன்- *ஒளிதிகழ*- ஞானம் விளங்கும்படி. *அளி*- கனிந்த அருள். *வந்த*- பொருந்திய; ஆட்கொள்ளும் பொருட்டு

உயிரினுள் வந்து பொருந்திய என்றவாறு. **அந்தணன்** - அழகிய தன்மையையுடையவன். ஞானசிரியனாக எழுந்தருளித் தன்குளிர்ந்த நோக்கால் சட்சு தீட்சை அருளியவன் என்ற சரிதக் குறிப்பு. சிவபெருமான் தேவர்களில் அந்தணன்.

" த்வம் தேவேஷு ப்ராஹ் மனோஸி;
அஹம் மநுஷ்யேஷு ப்ராஹ்மனோவை
ப்ராஹ்மண முபதாவத் யுவத் வாதா மிவா!!"

இதன் பொருள்: நீ தேவர்களுக்கு அந்தணன்; யான் மனிதர்களுக்கு அந்தணன்; பிராமணனைப் பிராமணன் பூசிக்கின்றான்; என்று கூறி நான்முகன் சிவபெருமானை வணங்கினான் என்று வேதம் கூறுகின்றது.

இத்திருப்பாடலில், திருமாலும் நான்முகனும் காணாத வித்தகன் நம் அடிகள் பொருட்டு எளிவந்து திருப்பெருந்துறையில் முன்னதாகவே எழுந்தருளிக் காத்திருந்து ஆட்கொண்டதை நினைவதால் உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பிற்று. பின்னர் அவன் தன் எண்ணரிய இன்னருளால் உயிரினுள்ளே ஞானம் திகழ எழுந்தருளிய நிகழ்ச்சியால் அம்மகிழ்ச்சி மேலும் ஓங்கிற்று. இவற்றால் **"ஆனந்தக் களிப்பு"** வெளியாதல் புலனாயிற்று.

193. முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனை
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்ப னென்பார்கட் கின்னமுதை
அன்னானை யம்மானைப் பாடுதுங்கா ணம்மானாய் கசு

(இ-ள்)

மும்மூர்த்திகளுக்கும் முற்பட்டவனாக உள்ளவனும்; எல்லாமாய் எல்லாவற்றுக்கும் பின்னாக உள்ளவனும்; தலைக்கோலம் கொண்டவனும்; விரும்பப்படுகின்ற திருப்பெருந்துறையில் நிலைபெற்றிருப்பவனும்; கயிலாயபதியும்; மங்கைபங்கனும்; அழகிய திருவானைக்காவில்

எழுந்தருளியுள்ளவனும்; அழகிய பாண்டி நாட்டினனும், "என் ஆனையே; என் தந்தையே" என்று துதிப்பவர்களுக்கு இனிய அமுதமாக உள்ளவனும்; அழகிய தலைவனுமாகிய இறைவனை; நம் அம்மானைப் பாடலின் பொருளாக அமைத்துப் பாடுவோம்.

(வி-ரை)

இத்திருப்பாடலின் முதலிரு சீர்களை "மூவர்க்கும் முன்னானை" என மொழி மாற்றிக் கொண்டு, பிறகு பாடல் முழுவதுக்கும் ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

மூவர்க்கும் முன்னான் - *மூவர்* - நான்முகன், திருமால், உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகள். இவர்கள் சீகண்ட உருத்திரர்க்குக் கீழ்ப்பட்டுப் பிரகிருதி மாயையில் உள்ள புவனங்களில் அடங்கிய உலகங்களுள் சிலவற்றின் தலைவர்கள். ஆன்ம கோடிகளில் அடங்கிய இவர்களுக்குத் தோற்றமும் நிலைபேறும் ஒடுக்கமும் உண்டு. சிவபெருமான் அனாதி மூர்த்தியாகிய பதிப்பொருள். மும்மூர்த்திகளும் தோன்றுவதற்கு முன்பே உள்ளவனாதலின் ***முன்னான்*** என்றார். இஃது அவன் காலத்தால் முற்பட்டவனானதை உணர்த்தியது.

இதுபற்றி முன்னம் போற்றித் திருவகவல் 102-ல் "முதல்வா" என்றருளியதும் அதன் கீழுரைத்தவையும் காண்க. மேலும்;

திருச்சிற்றம்பலம்

"முன்னவ னெங்கள்பிரான் முதல் காண்பரி தாயபிரான்
சென்னியி லெங்கள்பிரான் திருநீல மிடற்றெம்பிரான்
மன்னிய வெங்கள்பிரான் மறை நான்குங்கல் லால்நிழற்கீழ்ப்
பன்னிய வெங்கள்பிரான் பழ மண்ணிப் படிக்கரையே"

(திருமுறை 7-22-1)

" பிரசந் திகழும் வரைபுரை
யானையின் பீடழித்தார்
முரசந் திகழு முருகியம்
நீங்கு ***மெவர்க்குமுன்னும்***

அரசம் பலத்து நின்றுடும்
பிரா னருள் பெற்றவரிற்
புரைசந்த மேகலே யாய்துயர்
தீரப் புகுந்துநின்றே"

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் 299)

"அகர முதல வெழுத் தெலா மாதி
பகவன் முதற்றே யுலகு"

(திருக்குறள் 1)

"ஸதேவ ஸோம்யே தக்ர ஆஸீத்"

இதன் பொருள்: "சோமியனே சத்து ஒன்று அதற்கு முன்னே இருந்தது"

(தைத்திரியோபநிஷத்)

என்பன காண்க.

இனி, சிவபெருமான் காலத்தால் மட்டுமன்றிச் சிறப்பாலும் எல்லார்க்கும் முன்னே வைத்து எண்ணப்படுபவன் என்பதும் மனம் கொள்க. ஆதலின், அவனே "முதல் மரியாதைக்குரியவன்" என்ற பொருளில் "அக்ரகண்யன்" என்பர் வட நூலார். சிவபெருமானே வேள்விகளில் முதலில் அவி பெறுபவன் என்பதும் நினைக.

முற்றும் ஆய் - படைப்பில் காணப்படும் உயர்திணை, அஃறிணைப் பொருள்கள் எல்லாம் தானேயாகி. இதனை;

திருச்சிற்றம்பலம்

*"**தானலா துலகமில்லே** சகமலா தடிமை யில்லே*
கானலா தாட லில்லே கருதுவார் தங்க ளுக்கு
வானலா தருளு மில்லே வார்குழன் மங்கை யோடும்
ஆனலா தூர்வ தில்லே யையனே யாற ளுர்க்கே"

(திருமுறை 4-40-1)

"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப்
புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ"

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 317)

என்பன காண்க. முன்னம் 33-ம் திருப்பாடலில் "அச்சன் ஆண் பெண் அலி" என்றதன் கீழுரைத்தவை காண்க.

முற்றுக்கும் பின் ஆனானை - முற்றுக்கும் - தோற்றம் நிலை இறுதிகளையுடைய பொருள்கள் முழுவதுக்கும், "முன்னான்", "பின்னான்" என்றமையால் இடைக்காலத்தும் உள்ளவன் என்பது பெற்று, எப்பொழுதும் உள்ளவன் என அவன் நித்தியத் தன்மையை நிலைநிறுத்தியவாறு. "*முற்றுக்கும்*" என்பதை இடைநிலை விளக்காக் கொண்டு "முற்றுக்கும் முன்னான்"; "முற்றுக்கும் பின்னான்" எனக் கூட்டிப் பொருள் காண்க. *பின்னான்* - இனித் தோன்ற உள்ளவற்றுக்கும் இளையவன்.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"முன்னு மொருவ ரிரும்பொழில்
மூன்றற்கும் முற்றுமிற்றாற்
பின்னு மொருவர்சிற்றம்பலத்
தார்தரும் பேரருள்போல்
துன்னுமொ ரின்பமென் றோகைதந்
தோகைக்குச் சொல்லுவ போல்
மன்று மரவத்த வாய்த்துயில்
பேரும் மயிலினமே"

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் - 160)

என்று நம் அடிகளே கூறுவது காண்க.

பிஞ்ஞகன் - கொக்கிறகு, கங்கை, திங்கள், நகுதலை, பாம்பு, கொன்றை முதலியவை பொலியும் தலைக்கோலம் கொண்டவன். **பேணுபெருந்துறையின் மன்னனை**- **பேணு பெருந்துறை**- 184-ம் திருப்பாடலில் உரைத்தவை காண்க. ***மன்னனை*** - ***மன்*** - அரசன். ***ஆன்+ஐ*** - உயிர்களின் தலைவனாகிய பசுபதி என உரைத்தலும் ஒக்கும். ***முடி***- அரசனின் அடையாளங்களில் ஒன்று. அது மேலே ***பிஞ்ஞகம்*** என்ற தலைக்கோலமாகக் குறிப்பிடப்பட்டது.

வானவன் - மேலுலகினன். ஈண்டு உலகங்கள் எல்லாவற்றுக்கும் மேலுள்ளதாகிய திருக்கயிலையைக் குறித்தது. ***வானவன்***- கயிலாயபதி.

மாது இருக்கும் பாதியன் - இறைவன் உடம்பு முழுவதும் அவன் குணங்களில் ஒன்றான பேரருளே. அவன் இடப்பாகத்தில் உமையம்மையாக வெளிப்படத் தோன்றுவது அவனது அறக்கருணை; வலப்பாகத்தில் அவன் வடிவில் மறைந்து நிற்பது அவனது மறக்கருணை. இரண்டும் திருவருளே. அஃதே ஈண்டு பாதியும் பாதியனுமாக வழுத்தப் படுகின்றது.

தென் ஆனைக்காவான்- ***தென்***- இந்திய நாட்டின் தென் பகுதியிலுள்ள எனலுமாம். ***ஆனைக்கா*** - ***திருவானைக்கா*** - மாதிருக்கும் பாதியனை வழுத்தியவர், அம்மாதினால் வழிபடப் பெற்ற திருத்தலத்தை நினைவு கூர்கின்றார்.

தலவிசேடம்-

திருவானைக்கா - சோழ நாட்டில் காவிரிக்கு வடகரையில் 60-வது திருத்தலமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மூவர் பெருமக்களாலும் பாடப்பெற்ற ஏழு தேவாரப் பதிகங்களுடையது. வெள்ளானை வழிபட்டு வீடு பெற்றதால் ***ஆனைக்கா*** எனும் பெயர் பெற்றது. தலமரம் வெண்ணாவல். அதன் கீழ் இறைவன் எழுந்தருளியுள்ளமையால் சம்புகேசுரம் என்று வடமொழியில் வழங்குகின்றது. ***சம்பு*** - நாவல்மரம். ஐம்பூதத் தலங்களுள் இஃது அப்புத்தலம். சிவலிங்க மூலத்தினின்று நீர் பெருகி வருவதை இன்றும் காணலாம். இறைவனைச் ***செழுநீர்த்திரள்*** என்று திருத்தாண்டகம் வழுத்துகின்றது. சிலந்தி ஒன்று இறைவன் திருமேனி மேல் சருகுகள் விழாமல் மேற்கட்டிபோல் தன் வாய் நூலால் வலயமிட்டு வழிபட்டுழி, மேற்குறித்த வெள்ளானை அதை அநுசிதம் என்று கருதி அழித்து நீராட்டி மலர் தூவி வழிபட்டது. அதனால் பகைமை கொண்ட

சிலந்தி, யானையின் துதிக்கையுட் புகுந்து மேற்சென்று அதைக் கடித்தது. யானை தரையில் துதிக்கையை அறைந்தது. யானை சிலந்தி இரண்டும் இறந்தன. யானை, வீடுபேறுற்றது. சிலந்தி முற்பிறவி நினைவுடன் கோச்செங்கட் சோழ மன்னராகப் பிறந்தது. அம்மன்னர் தமிழக முழுவதும் ஆண்டார். சிவபெருமானுக்கு எழுபத்தெட்டுத் திருத்தலங்களில் யானை புக இயலாத மாடக் கோயில்கள் எடுத்தார். இதைப் "பெருங்கோயில்கள் எழுபதினோடெட்டும்" என்று நம் அரசுகள் தாண்டகம் கணக்கிடுகின்றது. தில்லை வாழந்தணர்களுக்கு மாளிகைகள் அமைத்தார். இவரை நாயன்மார்களுள் ஒருவராக வைத்துப் பெரியபுராணம் வழுத்துகின்றது. உறையூர்ச் சோழரில் ஒருவர் விலைமதிப்பற்ற மணியாரம் ஒன்றை அணிந்திருந்தார். அதனை ஆனைக்கா அண்ணலுக்கு அளிக்க விரும்பியிருந்தார். ஒருநாள் காவிரியில் நீராடுழி அம்மாலை ஆற்று நீருடன் போய் விட்டது. வருந்திய மன்னர் அதனை ஆனைக்கா அண்ணலுக்கு மானசீகமாக அளித்து ஏற்றுக் கொள்ள வேண்டினார். ஆற்றின் கீழ்ப் பகுதியில் இறைவன் திருமுழுக்குக்காக நீர் முகந்து கொண்டிருந்தனர். அக்குடங்கள் ஒன்றில் மாலை புகுந்தது. திருமுழுக்காட்டும் பொழுது இறைவர் திருவுருவில் வீழ்ந்து அணியாகத் திகழ்ந்தது. இவ்வரலாறு நம்பிகள் தேவாரம் (திருமுறை 7-75-7) -ல் வழுத்தப்படுகின்றது. இத்திருத்தலப் பணியில் இறைவன் சித்தமூர்த்திகளாக எழுந்தருளி வெளித் திருமதிலை அமைக்க அருளினார். நாள்தோறும் திருமதிலை எழுப்பிவந்த கூலியாட்களுக்குத் திருநீற்றைக் கூலியாகத் தந்து வந்தார். கூலியாட்கள் இல்லம் திரும்பியதும் அவ்வவர் உழைப்புக் கேற்ற அளவு பொன்னாக விபூதி மாறியது. இத்திருமதில் இன்றும் *திருநீறிட்டான் திருமதில்* என்று வழங்கி வருகின்றது. உமையம்மை இத்தலத்தில் இறைவனைப் பூசனை புரிந்தாள்; அதன் நினைவாக இன்றும் உச்சிக்கால பூசையில் சிவாசாரியார் புடவை அணிந்து பூசை புரிகின்ற வழக்கமுள்ளது. அம்பிகைக்கு இறைவன் இங்கு உபதேசம் செய்தார். நந்தி தேவரும் சம்பு முனிவரும் உடனிருந்து கேட்டுய்ந்தனர்.

இறைவர் - *சம்புகேசுவரர், நீர்த்திரள்நாதர்.* அம்பிகை - ***அகிலாண்ட நாயகி.*** தீர்த்தங்கள் - *காவிரி, இந்திர தீர்த்தம், சந்திர தீர்த்தம்* முதலியன. திருக்கோயில் மேற்கு நோக்கிய சந்நிதி. அம்பிகையின் சந்நிதி மிக விளக்கமுள்ளது. பஞ்சப் பிரகார உற்சவம் மிகச் சிறந்த திருவிழா. கச்சியப்ப முனிவர் பாடிய தலபுராணமும், கமலை ஞானப் பிரகாசர் பாடிய தந்திவன புராணமும், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள்

இயற்றிய அகிலாண்ட நாயகி மாலையும் புலவருலகில் மிக உயர்வாகப் போற்றப்படுவன.

ஐயடிகள் காடவர் கோனுயனுர் தம் க்ஷேத்திரத் திருவெண்பாவில், இத்தலத்தைக் குறித்து,

திருச்சிற்றம்பலம்

" குழீஇயிருந்த சுற்றம் குணங்கள்பா ராட்ட
வழீஇயிருந்த அங்கங்க ளெல்லாம் - தழீஇயிருந்தும்
என்னானைக் காவா விதுதகா தென்னுமுன்
தென்னானைக் காவடைநீ சென்று"

திருச்சிற்றம்பலம்

(11-ம் திருமுறை க்ஷேத்திரத் திருவெண்பா 11)

என்று ஆற்றுப்படுத்துகின்றுர்கள்.

திருச்சிராப்பள்ளி கோட்டைப் புகைவண்டி நிலையத்தினின்றும் வடக்கே 6 கிலோ மீட்டர் தொலைவில் சீரங்கம் தீவிலுள்ளது. நகரப் பேருந்துகள் வழியே அடையலாம்.

என் ஆனை என் அப்பன் - "*ஆனை*" "*அப்பன்*" என்பன காதற் கிளவிகள். ***ஆனை*** - யானை என்பதன் மரூஉ. என் + ஆன் + ஐ என்று பிரித்து "ஆன்" என்பதைச் சாரியையாக ஒதுக்கி என் தலைவனை என உரைக்கவும் நின்றது.

யானை, தன் அடியடைந்த பாகனைத் தன் தலையில் ஏற்றிச் சுமத்தல்போல இறைவன் தன் அடியெய்திய தொண்டர்களுக்கு தலையாய இடம் நல்கலாலும்; பாகன், தன்னைக் கட்டச் சங்கிலியைத் தானே தூக்கி வந்து கட்டுத் தறியை அணைந்து நிற்பது போலத் தொண்டர்கள் தன்னைப் பிணிக்க அன்பு என்னும் சங்கிலியை உதவி, அவர்கள் உள்ளம் என்னும் கட்டுத் தறியை அணைந்து நிற்பதாலும், இறைவனை ***ஆனை*** என்றுர் என்பது திரு. தேசிகர் அவர்களின் விளக்கம்.

என்னானை - என்பதில் "ஆனு" என்பது "இனிமை" என்னும் பொருட்டாய ஒரு சொல். அஃது "ஆன்" என நின்று ஐயுருபு பெற்றது - என்பது திரு. கா.சு. பிள்ளை அவர்கள் உரைக்குறிப்பு.

இன் அமுது - பேரின்பம் நல்கிப் பிறப்பிறப்புக்களை ஒழிப்பது.

இத்திருப்பாடலில் 1,2,5 அடிகள் முற்று மோனை.

அன்னுனை - அகரம், முதல் நான்கடிகளில் கூறப்பட்ட இயல்புகளையுடையவனை எனச் சுட்டி நின்றது. ஆன் + ஐ = பசுபதி எனலுமாம்.

அம்மான்- அந்தப் பெரியோன் எனலுமாம். மான் = மகான் என்னும் வடசொல்லின் மரூஉ.

மான்- என்பது இப்பொருளில் வருவதை;

"தன்னை யறிவித்துத் தான்றுனுச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது - முன்னவனே
தானேதா னுச்செய்துந் தைவமென்றுந் தைவமே
மானே தொழுகை வலி"

(சிவஞான போதம் சூ. 12 - 4ம். அதி. வெண்பா 3)

என்றதற்கு சிவஞான மாபாடியம் கூறும் விளக்கத்தாலறிக.

இத்திருப்பாட்டில் முன்னைப் பழம் பொருட்கும், முன்னைப் பழம் பொருளாயும் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனுயும் உள்ள இறைவன், துதிக்கும் என் உள்ளத்துள் இன்னமுதாய் உள்ளான் என்றதால் மனம் மகிழ்ச்சியால் நிரம்பியதும்; அத்துணைப் பெரியோனைப் பாடும் நற்பேறு நமக்குக் கிட்டிற்று என்றதால் அம்மகிழ்ச்சி மேலும் பொங்குதலும் பெற்றும். இதனுல் ***"ஆனந்தக் களிப்பு"*** வெளியாவது காண்க.

194. பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்க ணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றியிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்கா ணம்மானுய் ௨௦

(இ-ள்)

பிறருக்கு எய்த வொண்ணுத இயல்புடைய பெருந்தலைவனும் திருப்பெருந்துறையினனும்; வெற்றியுடைய குதிரையூர்ந்து வந்தருளித் தன் அடியார்களின் குற்றங்களைக் களைந்து, அவர்கள் குணங்களை ஏற்றுப் பெருமைப்படுத்தி; அவர்களைச் சூழ்ந்து பிணித்துள்ள கட்டுக்களை அறுப்பவனுமாகிய சிவபெருமானின் பழைமையாகிய புகழ்களையே துணையாகப் பற்றி; இந்தப் பாசப் பற்றை நீக்கிக் கொள்ளும் பொருட்டு நாம் பற்றியுள்ள பேரானந்தத்தையே நம் அம்மானைப் பாடலின் பொருளாக அமைத்துப் பாடுவோம்.

(வி-ரை)

இத்திருப்பாடலின் முதலடியிலுள்ள முதலிரு சீர்களையும், "பிறர்க்கரிய பெற்றி" என மொழிமாற்றிக் கொண்டபின் பாடல் முழுவதுக்கும் ஆற்றெழுக்காகப் பொருள் காண்க.

பிறர்க்கு அரிய பெற்றிப் பெம்மான் - பிறர்க்கு - அடுத்த அடியில் அடியார்கள் பற்றிக் கூறுவதால் ஈண்டுக் குறிப்பது அடியார்களல்லாத பிறர். அவர்கள் உலகாயதர் முதல் திருமால் முடிய உள்ளோர். *அரிய* - அவர்கள் முயன்றும் கிட்டா இயல்புகள். *பெற்றி* - நல் இயல்புகள். அவை அவன் எண் குணங்கள் எனலுமாம். சிவபெருமானின் இயல்பு "இன்னது" அல்லது "இன்னதன்று" என்று அறுதியிட்டுக் கூற இயலாதது என்பதை;

திருச்சிற்றம்பலம்

" குயிலிதன் றேயென்ன லாஞ்சொல்லி
கூறன்சிற் றம்பலத்தான்
இயலிதன் றேயென்ன லாகா
இறைவிறற் சேய்கடவும்
மயிலிதன் றேகொடி வாரணங்
காண்கவன் சூர்தடிந்த
அயிலிதன் றேயிதன் றேநெல்லிற்
றேன்று மவன்வடிவே"

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் - 285)

என்று நம் அடிகளே கூறுவதிற் காண்க.

கொற்றக் குதிரையின் மேல்வந்து அருளி - நரி பரியாக்கிய திருவிளையாடலில் இறைவன் இவர்ந்து வந்தது வேதமாகிய குதிரை. வேதம், ஞானம் நல்குவது; ஞானமாகவும் இருப்பது. அஃது அறியாமையை வெல்வதாகலின் வெற்றியுடைய குதிரையாயிற்று. ***கொற்றம்*** - வெற்றி. ***மேல்வந்து அருளி***- ஞானசத்தியை இயக்கி. அவ்வாறு அவன் ஞானத்தின் மேல் இவர்ந்து, அதை இயக்கி வந்தானாயினும் பாண்டியன் முதலியோர் அவனை அறிந்திலர். நம் அடிகள் மட்டும் வந்தவன் இறைவனே என்றறிந்தார். இஃது, இறைவன் அவருக்கு மட்டும் நல்கிய திருவருள். ஆதலின் ***அருளி*** என்றார்.

தன் அடியார் குற்றங்கள் நீக்கி - மலத் தொடர்பால் அடியார்கள் குற்றங்கள் செய்யினும் அவற்றின் பயன்களை நுகர்வித்துக் கழித்தும் பின்னர் அவர்கள் உரிய பக்குவம் எய்தியதும் அவர்கள் புரியும் ஆகாமிய வினைகளைத் தானே ஏற்றுக் கொண்டும், அவர்களை மலமாசுகளினின்றும் விடுவித்தும்; தன்முனைப்பின்றிச் சிவநினைவாகவே அவர்கள் செய்யும் குற்றங்களைக் குணமாகக் கொண்டும்.

குணங் கொண்டு - அடியார்களின் நல்லியல்புகளை ஏற்றுக் கொண்டு. அவ்வியல்புகள் அடியார்களின் அகத்திலக்கணம் பத்தும், புறத்திலக்கணம் பத்தும் ஆகிய இருபதுமாம். அவற்றை முன்னம் போற்றித் திருவகவல் 61-ல் "உடல்கம்பித்து" என்றதன்கீழ் விளக்கியவற்றிற் காண்க.

கோதாட்டி - ஒரு சொல் நீர்மைத்தாய் பெருமைப் படுத்தி என்ற பொருளில் நின்றது. அது குற்றங்களை நீக்கிக் குணங் கொண்டதாலாயிற்று. ***கோது ஆட்டி*** - எனப் பிரித்துக் குற்றங்களை நீக்கி என உரைத்தாரும் உண்டு. மேலே குற்றங்கள் "*நீக்கி*" என உரைத்துள்ளமையால் இவ்வுரை பொருந்தாமையறிந்து ஒதுக்குக. முன்னம் 171-ம் திருப்பாடலில் "கோது ஆட்டுதல்" என்பதற்கு நாமும் அவ்வாறு கொண்டாம். அந்நிலை வேறு. இங்குக் கூறிய நிலையை;

திருச்சிற்றம்பலம்

"கத்துங் கழுதைகள் போலுங் கலதிகள்
சுத்த சிவனெங்குந் தோய்வற்று நிற்கின்றான்

குற்றந் தெரியார்; குணங்கொண்டு கோதாட்டார்;
பித்தேறி நாளும் பிறந்திறப் பார்களே.”

திருச்சிற்றம்பலம்

(திருமந்திரம் -1518)

என்பதிற் காண்க.

சுற்றிய சுற்றத் தொடர்பு அறுப்பான் - பல பிறவிகளில் ஈட்டிய வினைகள் சூழ்ந்து கட்டியுள்ள கட்டுக்களை அறுப்பவன். இதற்கு இவ்வாறன்றிச் “சுற்றமென்னுந் தொல்பசுக் குழாங்கள்” (போற்றித் திருவகவல் 48) என்பதை மேற்கோள் காட்டி “உறவினர்” என உரைத்தாரும் உண்டு. உறவினரும் வினைப் பயனுய் வந்து சுற்றுவராகலின் அவர்களும் ஈட்டிய வினைகளில் அடங்குவர்.

தொல்புகழே பற்றி - இறைவன் என்று உள்ளானே அன்றே அவன் புகழும் உள்ளது. தோற்றக் கேடின்மையின் அது தொல்புகழாயிற்று. பற்றி - துணையாகப் பற்றிக் கொண்டு.

இப்பாசத்தைப் பற்று அற - இப்பாசப் பற்று நீங்கும் பொருட்டு. இகரச் சுட்டு, சுற்றிய சுற்றத் தொடர்பான பாசத்தைக் குறித்தது. அத்தும் ஐயும் சாரியைகள்.

நாம் பற்றுவான் பற்றிய பேரானந்தம் - நாம் பற்றிக் கொள்ளும் பொருட்டு இறைவனைப் பற்றியுள்ள பேரானந்தம். இறைவன், ஆனந்த வடிவினன் என்பதை நூல்கள் கூறும். பேரானந்தம் இறைவனைப் பற்றியுள்ளது என்பது உபசாரம். அவ்வாறு அது பற்றியுள்ளதன் காரணம், இறைவனைப் பற்றும் உயிர்கள் பேரானந்தம் பெறுதல் வேண்டும்; அவை இறைவனைப் பற்றுழிப் பேரானந்தத்தையும் பற்றி இன்புறும் என்பதாம். பற்றுவான் என்ற வினையெச்சம், பற்றிய என்ற பெயரெச்சத்தைத் தழுவி முடிந்தது.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

“ பற்ருங்கவை யற்றீர்பற்றும் பற்ருங்கது பற்றி
நற்ருங்கதி யடைவோமெனிற் கெடுவீரோடி வம்மின்

தெற்ருர்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை
யிறைசீர்
கற்ருங்கவன் கழல்பேணின ரொடுங்கூடுமின் கலந்தே"

திருச்சிற்றம்பலம்

(திருவாசகம் 508)

"பற்றுக பற்றற்ருன் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" (திருக்குறள் 350)

என்பன நினைக.

இத்திருப்பாடலில், "பேரானந்தம் பாடுதும்" என்றமையால் "*ஆனந்தக் களிப்பு*" வெளியாதல் காண்க.

தொகுப்புரை:


இந்திய நாட்டின் தென் பகுதியிலுள்ள பாண்டிய நாட்டைச் சௌந்திர பாண்டியனுக முடிசூட்டி ஆண்டவனும் சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறையினனுமாகிய சிவபெருமான், திருமாலும் காண அரிய தாமரை மலர் போன்ற தன் பாதங்கள் எங்கள் பொருட்டுப் பூமியில் பொருந்த மறையவன் வடிவில் வந்து, எங்களைக் கூவியழைத்து ஆட்கொண்டு வீடுபேறருளியவன்; எனக்குப் பித்து ஏற்றி என்னுள்ளம் புகுந்த மீன் வலையன்; எங்கள் மலக் கட்டுக்கள் நீங்கக் குதிரையேறி வந்தவன்; தலையாய அருளை அளித்தவன்; கற்போன்ற என் மனத்தை மென் கனிபோல மாற்றிய தில்லைச் சிற்றம்பலவன்; விடையூர்பவன்; எங்களுக்குக் காட்டக் கூடாதனவற்றை எல்லாம் காட்டி, வீட்டுலகில் உய்த்தவன்; இழிந்த நம்மையும் ஆட்கொண்ட மங்கை பங்கன்; மண் சுமந்து, வழுதி பால் பிரம்படி பட்டவன்; முடிவில்லாத ஆனந்தத்தைப் பழைய அடியார்களுக்கு ஈந்தருளுபவன்; திருவண்ணுமலையாகவே நிற்பவன்; மாயைக்கு அப்பாலுள்ளவன்; நம்மை இனிப் பிறவாமல் காப்பவன்; திருவையாற்றில் எழுந்தருளியுள்ளவன்; என்னைச் சீவன்முத்தர் கூட்டத்தில் சேர்த்தருளியவன்; தக்கன் வேள்வியில் பங்கு பெற்ருேர் அனைவரையும் முறைப்படி ஒறுத்து வெற்றிமாலை சூடியவன்; அழியாத அறிவாகி எண்ணற்ற உயிர்களுக்குத் தலைவனுகி நிற்பவன்; அன்பின் ஐந்திணை வடிவிலான நின்மலாவத்தைகளில் என்னை நிறுத்துபவன்; என்

உயிரினுள் ஞானம் விளங்கும்படி அருள்கனிந்து பொருந்திய அந்தணன்; யாவர்க்கும் யாவைக்கும் மூத்தவனாய், இனித் தோன்றவுள்ள யாவர்க்கும் எவற்றுக்கும் இளையவனாய் உள்ளவன்; திருவானைக்காவினன்; பிறரால் அறியப்படாத இயல்பினன். இவையனைத்தும் அவன் பெருமைகள். இவற்றை நம் அம்மானைப் பாடல்களின் பொருள்களாக அமைத்துப் பாடுவோம்.

திருச்சிற்றம்பலம்



தில்லை - கிழக்குக் கோபுரவாயில்
நம் அடிகள் முதன்முதலாக
உட்புறம் சென்ற திருவாயில்



தில்லை - சிவகங்கைத் தீர்த்தமும்
இராச சபை என்னும் ஆயிரக்கால் மண்டபமும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

8. திருப்பொற்சுண்ணம்

தில்லையில் அருளியது
(ஆனந்தமனோலயம்)

பொற்சுண்ணம் என்பது பொன் போலும் வண்ணமுள்ள துகள் என்னும் பொருளது. பொன்- அழகுமாம் *சுண்ணம்* என்பது "சூர்ணம்" என்னும் வட சொல்லின் திரிபு. கத்தூரி மஞ்சள்,கோரைக் கிழங்கு, உலர்ந்த பின்னும் நறுமணம் காலும் சில மலரிதழ்கள், மகரந்தம், வேர்கள், அரிதாரம் முதலிய நறுமணப் பொருட்களை உரலிலிட்டு நன்கு இடித்து மெல்லிய துணியில் வடித்தெடுத்துக் கொள்ளும் நுண்துகள்களையே ஈண்டுப் பொற்சுண்ணம் என்றார். இது சிவபெருமான் திருமுழுக்குக்குப் பயன்படுவதாலும், அவன் புகழ்களைப் பொருளாக அமைத்துப் பாடியவாறு இடிக்கப்படுவதாலும் **திரு** என்னும் அடை புணர்த்தார். '*சுண்ணம்*' என்பது ஈண்டு இடிப்புழி பாடும் பாட்டுக்காயிற்று.

இளமகளிர் பலர் கூடி இருவர் இருவராக ஆளுக்கு ஓர் உலக்கை கொண்டு இடிப்பர். அவர்கள் சோர்வுற்றதும் வேறு இருவர் அவ்வுலக்கைகளை வாங்கி இடிப்பர். அவ்வாறு தொடர்ந்து இடிப்புழி உடற்சோர்வு தோன்றாமைப் பொருட்டுப் பாடிக்கொண்டே இடிப்பர். பாடல்கள் உலக்கை வீச்சுக்களைத் தாளமாகக் கொண்டு சந்தப் பாடல்களாக அமையும். இடிப்பதற்காக வந்துள்ள மற்ற பெண்களும் தொடர்ந்து அப்பாடலை வழி மொழிந்து இசைப்பர். இப்பாடல்களை உலக்கைப் பாட்டு, உரற்பாட்டு, வள்ளைப்பாட்டு என்னும் பெயர்களால் வழங்குவர்.

இந்நிகழ்ச்சி சங்க இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ள சிறப்பை, "பலர்தொகு பிடித்த தாதுகு சுண்ணத்தர்" (இடிக்க வல்லார் பலரும் திரண்டு இடித்த பூந்தாதுகள் போலப் பரக்கும் சுண்ணத்தை யுடையாரும்." நச்சினார்க்கினியர் உரை - மதுரைக் காஞ்சி - 399) என வருதல் கொண்டு அறியலாம். இப்பாடல்கள் புறப்பாட்டுள் பகைவரை வென்ற தங்கள் மன்னன் புகழ்களைப் பாடுவனவாகவும்; அகப்பாட்டுள் தலைவியும் தோழியும் தலைவனைப் பற்றிப் பாடுவனவாகவும் அமையும்.

ஆனந்த மனேலயம் என்பதை இப்பகுதியில் கருத்துரையாகக் கொண்டனர் நம் முன்னேர். "பெருமகிழ்ச்சியால் எய்திய இன்பப் பெருக்கில் மூழ்கிய மனம் தன்னுணர்விழந்து அவ்வின்ப மயமாகவே நிற்றல்" என்பது அதன் பொருள்.

" மோனந்த மாக மொழிதிருச் சுண்ணம்
ஆனந்த மனேலய மாமென மதிப்பர் "

- என்பது அகத்தியர் சூத்திரம்.

" சத்தி களாற் றனுகரண புவனபோ கங்கடமை
அத்தனுக்குச் சுண்ணமவை யிடிக்கக் கூவுதலே
ஒத்ததிருச் சுண்ணம்.......... "

- என்பது பழைய திருப்பெருந்துறைப் புராணம்.

திருப்பெருந்துறையினின்றும் தலயாத்திரையாகத் தில்லையெய்திய நம் அடிகள் ஆங்கு ஒரு தவச்சாலை அமைத்துக் கொண்டு அம்பலவாணனை வழிபட்டும் தவத்தில் ஈடுபட்டும் வாழ்ந்திருந்து அப்பகுதியிலேயே வீடுபெற்ருர் என்பதை முன்னம் அவர் வரலாற்றில் கண்டாம். அக்கால எல்லையில் அப்பகுதியில் இளம்பெண்கள் பாடிக்கொண்டே சுண்ணம் இடித்தலைக் கண்ணுற்ருர். அவர்கள் கூற்றாக இப்பகுதியை அருளிச் செய்தார் என்பதைத் திருவாதவூரர் புராணம் திருவம்பலக் சருக்கம் 63,64 பாடல்களாலறிகின்ருேம்.

பெரும்பாலான பதிப்புகளில் இப்பகுதியில் வரும் பாடல்கள் அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு கொள்ளின் இப்பகுதியில் வரும் இருபது பாடல்களில் பதினுறு பாக்களில் சில அடிகளில் நான்கு அசைகள் கொண்ட சீர்களாக அமைகின்றன. அவ்விதம் அருகிவரின் அச்சீர்களில் வரும் மெல்லொற்றுக்களை நீக்கி அலகிடுதல் முதலியவற்றில் ஒருவாறு அமைதி கொள்ளலாம். இங்கு அவ்வாறு அருகி வரவில்லை. எனவே இப்பகுதியில் வரும் பாடல்களை எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தங்களாகக் கொண்டாம். அங்ஙனம் கொள்ளினும் கரு;கஎ(209,211) பாடல்களில் முறையே 2,1 அடிகள் ஏழு சீர்கள் கொண்டவையாக அமைகின்றன. மேலும் சில பாடல்களிலும் அடிகள் அளவொத்து அமையவில்லை. இப்பகுதியில் வரும் பாடல்கள் சந்த விருத்தங்களாக அமைந்திருத்தலின் ஓசை நயங்கருதி அவற்றைப் புற நடையாகக் கொள்ளலாம். தேவாரப் பாசுரங்களில் திருநேரிசை,

திருவிருத்தம், திருத்தாண்டகம் தவிர ஏனையவை பண்ணடைவு செய்யப்பட்டுத் தாளத்துடன் பாடவுள்ள இசைப் பாடல்கள். அவற்றுள் பல பாடல்களில் அடிகள் அளவொத்தமையால், இங்ஙனம் சீர்கள் மிகுந்தும் குறைந்தும் வருவன காணலாம்.

எண்சீர் ஆசிரிய விருத்தம்

195. முத்துநற் றாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சத்தியுஞ் சோதியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டி சைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தனை யாறனம் மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே க

(இ - ள்)

தோழியரே! நன்முத்துக்களாலான மாலைகளையும் நறுமணமுள்ள மலர் மாலைகளையும் உரிய இடங்களில் தொங்க விட்டு, முளைக்குடம், நறும்புகை, நல்விளக்கு முதலியவற்றையும் உரிய இடங்களில் அமையுங்கள். சத்தி, சோமி, பார்மகள் மூவரும் நாமகளுடன் கூடிப் பல்லாண்டு பாடுங்கள். சித்தி, கௌரி, பார்ப்பதி, கங்கை முதலியோர் கவரி வீசுங்கள். நாம், நம் தலைவனும் திருவையாற்றினனுமான இறைவனைப் பாடி அவன் திருமுழுக்காடப் பொற்சுண்ணம் இடிப்போம்.

(வி - ரை)

பொற்சுண்ணம் இடிக்கத் தொடங்குமுன் இடிக்கும் இடத்தை அட்டமங்கலப் பொருள்களால் ஒப்பனை செய்து, திருத்தொண்டின் தொடக்கத்தில் யார் யார் எவ்வெத்தொழில்களை ஏற்றுத் தொடங்க வேண்டும் என்ற நியதியை அமைத்துக் கொண்டு ஆயத்தமாதல் முதல் ஐந்து பாடல்களில் கூறப்படுகின்றது.

நல் என்பதைப் பூமாலைக்கும் தூபத்துக்கும் புணர்க்க. ஈற்றடியில் "இடித்தும் நாமே" என்பதை "நாமே இடித்தும்" என மொழி மாற்றிக் கொள்க. பிறகு பாடல் முழுவதற்கும் ஆற்றொழுக்காகப் பொருள் காண்க. ஈற்றடியை இவ்வாறே இனி வரும் ஏனைய பாடல்களிலும் மொழி மாற்றிக் கொள்க.

முத்து நல் தாமம் நல்பூமாலை தூக்கி - முத்து- நவமணிகளில் தலையாயதான முத்தைக் கூறினார். இனம் பற்றி ஏனைய எட்டுமணிகளையும் கொள்க. முத்தின் சிறப்பை முன்னம் போற்றித்திருவகவல் 122-ல் "முத்தன்" என்றதன் கீழுரைத்தவற்றில் காண்க. **நல் தாமம் - நல்-** நல்ல, குற்றங்கள் இல்லாத முத்துக்களைக் கோத்த. **தாமம்** - மாலை. **நல் பூமாலை** - புட்ப விதிகளில் கூறப்பட்டுள்ள குற்றங்கள் இல்லாதவையும் சிவ வழிபாட்டுக்கு ஏற்பனவாகவும் உள்ள மலர்கள் தொடுத்த மாலை. **தூக்குதல்** - ஒரே அளவு நீளமுள்ளவையும் நீளம் மிக்கும் குறைந்தும் உள்ளவையுமான மாலைகளை உரிய இடங்களில் விதானத்தினின்றும் தொங்க விடுதல். " துணையுற வறுத்துத் தூங்க நாற்றி" (திருமுருகாற்றுப்படை 237) என்றது காண்க.

முளைக்குடம் நல்தூபம் நல்தீபம் வைம்மின் - முளைக்குடம் - மங்கிண்ணங்களில் நிகழ்ச்சிக்கு ஏழுநாட்கள் முன் செம்மண்ணிட்டு நவதானியங்களைப் பெய்து நீர்வார்த்து வருவர். நிகழ்ச்சி நாளில் அவை நன்கு முளைத்திருக்கும். அவற்றை "முளைப்பாரி" என்றும் "முளைப் பாலிகை" என்றும் கூறுவர். அவற்றைப் புதிய மண்தட்டுக்களில் அமைத்துப் பக்கங்களில் சுண்ணம்பு, செம்மண் முதலியவற்றால் ஒப்பனை செய்யப்பட்ட புதிய மண்குடங்கள் , கலயங்கள் இவற்றைக் குவிந்த உச்சியுள்ள மூடிகளுடன் வைப்பர். மங்கலப் பொருள்களாகிய இவற்றின் தொகுப்பை ஈண்டு **முளைக்குடம்** என்றார்.

நல்தூபம் - குங்குலியம், தசாங்கம், சாம்பிராணி, சந்தனம், அகில் ஆகியவற்றைப் புகைப்பதால் பரப்பும் நறுமணத்தூபம். நன்மணம் பரப்புவதாலும் சிவ வழிபாட்டுக்கு உதவுவதாலும் **நல்** என்ற அடைப்புணர்ந்தார். "**நறும்புகை** - எடுத்து" (திருமுருகாற்றுப்படை 239) என்றது காண்க. **நல்தீபம்**- ஐந்து முகங்களுடன் கூடிய குத்து விளக்குக்களில் தாமரை நூல் திரியிட்டு ஆவின் நெய் வார்த்து ஏற்றப்படும் இரட்டை விளக்குக்கள். **வைம்மின்** - பொற்சுண்ணம் இடித்தற்குத் திரட்டிய பொருட்கள் சிவ வழிபாட்டுக்குரியன. ஆதலின் அவை சிவபெருமானாகவே கருதி வழிபடத்தக்கன. திரட்டி வைத்த அவற்றின் இருபுறமும் நல் தீபங்கள் ஏற்றித் தூபமிட்டு மங்கலப் பொருள்களாகிய முளைக்குடம் அமைத்துக் கவரி வீசிப் பல்லாண்டிசைத்து வழிபடல் கூறப்பட்டது. இந் நற்றீபங்கள் செல்வ வசதிக்கேற்ப வெள்ளியாலும் பொன்னாலும் அமைவன. ஈண்டு பொற்றீபங்கள் குறித்து நின்றன.

சத்தியும் சோமியும் பார்மகளும் நாமகளோடு பல்லாண்டு இசைமின் - சத்தி, சோமி, பார்மகள், நாமகள்- இவை, பொற்சுண்ணம் இடிக்க வந்துள்ள

இளம் பெண்கள் சிலரின் பெயர்கள். தெய்வங்களின் பெயங்களைத் தங்கள் மக்களுக்கு இட்டு வழங்குவது இந்நாட்டில் தொன்று தொட்டு வரும் நல்வழக்கம். ஈண்டுச் *சத்தி* - உருத்திராணியின் திருப்பெயர். ***சோமி*** - திருப்பாற் கடலில் சோமனுகிய வெண்கதிர்ச் செல்வனுக்குப் பின் வந்தவள்; திருமகள். *பார்மகள்*- பூமாதேவி. *நாமகள்*- கலைமகள். இவர்கள் மும்மூர்த்திகளின் தேவியராதல் நினைக. இவர்களுள் நாமகள் இசையில் வல்லவளாகலின் உடனிகழ்ச்சிப் பொருளில் வந்த மூன்றனுருபை அவளுக்குப் புணர்த்தார். 112 - ம் திருப்பாடலில் "அஞ்சொடு" என்றதன் உரையில் எழுதாண்ட இலக்கணவிதி காண்க.

பல்லாண்டு- "பல்லாண்டு வாழ்க" எனும் வாழ்த்தை "பல்லாண்டு" என முதற்குறிப்புப் பெயராக வழங்குவர். ஆயுள் எல்லையுடைய ஏனையோரை இவ்விதம் வாழ்த்துதல் பொருந்தும். என்றும் உள்ளவனுகிய சிவபெருமானை இங்ஙனம் வாழ்த்துதல் அடியார்களுக்கு அவன் மாட்டுள்ள அன்பின் செயலால் நிகழ்வதாகும். அவ்வாழ்த்தின் பயன் வாழ்த்தியோரையே சார்ந்து நலம் பயக்கும் என்பது ஆன்றோர் துணிபு. இவ்வுண்மையை -

திருச்சிற்றம்பலம்

"சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்டகன கத்திரள் மேரு
விடங்கன் விடைப் பாகன்

" பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல கோடி நூறுயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணுஉன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு "

(நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்-பெரியாழ்வார்-திருப்பல்லாண்டு1)

பல கோடி நூறுயிரம் ஆண்டுகள் வாழினும் அதன்பின் திருமாலின் வாழ்வு முடியும். ஆனுல் சிவபெருமான் நித்தியன் என்பதை "பல்லாண்டு என்னும் பதம் கடந்தான்" என்பதிற் காண்க.

பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 9-292)

என்றது காண்க.

இசைமின் - இசைப்பாடலால் துதியுங்கள். நாமகளுடன் அவள் தலைமையில் சத்தியும், சோமியும், பார்மகளும் முதலிற் பாட ஏனைய மகளிர் வழிமொழிந்து பின்பாடுங்கள் என்றவாறு.

சித்தியும், கௌரியும், பார்ப்பதியும் கங்கையும் வந்து கவரி கொண்மின்: *சித்தி* - ஞானவடிவினள். *கௌரி* - செந்நிறமுள்ளவள். *பார்ப்பதி* - மலைமகள். இவையனைத்தும் உமையம்மையின் பெயர்கள் . *சித்தி* -என்பதை "சித்தி", "புத்தி", "வல்லபை", எனும் விநாயகப் பெருமானின் சத்திகள் மூவரில் ஒருத்தியாகக் கொண்டார். திரு. கா. சு. பிள்ளையவர்கள். *கௌரி* - உமையம்மை கருநிறத்தாளாயினும், கச்சியேகம்பனை நோக்கித் தவம் புரிந்து செம்பொன் வண்ணம் பெற்றுப் பங்காரு காமாட்சி (பொன் வண்ணமுள்ள காமாட்சி) எனப் பெயர் பெற்றதைக் காஞ்சிப்புராணத்திற் காண்க. "சித்தி", "கௌரி", "பார்ப்பதி", "கங்கை" ஆகியோர் ஈண்டு தெய்வங்களின் பெயர்களைப் பூண்ட மானிடப் பெண்கள். திருப்பொற்சுண்ணம் இடிக்க வந்து கூடிய குழுவைச் சார்ந்தவர்கள்.*வந்து* - எழுந்து வந்து. கவரி கொண்மின் வெண்சாமரம் வீசும் பணியை மேற்கொள்ளுங்கள். திருப்பொற்சுண்ணம் இடிக்கத் திரட்டி வைத்த பொருட்களுக்குப் பின்புறம் இருவரும் முன்புறம் இருவருமாக நான்கு பக்கங்களினின்று வெண்சாமரம் வீசுங்கள் என்றவாறு.

அத்தன் ஐயாறன் ஆட - ***அத்தன்*** - தந்தை. இதன்பின் " ஆகிய" என ஒரு சொல் வருவித்து அத்தனாகிய ஐயாறன் என்க. ***ஐயாறன்*** - ஐந்து ஆறுகள் பாய்கின்ற திருவையாறு என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ளவன். ***ஆட*** - நெய் பூசிக் கொண்டு அவன் திருமுழுக்காடும் பொழுது நெய்யின் பசை நீங்கி நறுமணம் கமழும்படி பொற்சுண்ணம் கலந்த நீரில் திருமுழுக்காட என்றவாறு.

திருவையாறு - தலவிசேடம் முன்னம் கீர்த்தித் திருவகவல் 85-ல் *ஐயாறு* - என்றதன் கீழுரைத்தாம்.

பொற்சுண்ணம் நாமே இடித்தும் - நாமே இடித்தும் என மாற்றிக் கொள்க. நாமே- பொற்சுண்ணத்தைக் கடையில் விலைக்கு வாங்காமலும், பணிப் பெண்களை ஏவி இடிக்கச் செய்யாமலும், நாமே இடிப்போம் என்றவாறு. ஏகாரம் - பிரிநிலை. சரியைத் தொண்டுகளை அடியார்கள் தாங்களே புரிதல் வேண்டும் என்ற விதி நினைக. இப்பகுதியில் இனி வருமிடங்களிலும் இவ்வாறே கொள்க.

இத்திருப்பாடலில், இறைவனுக்குத் திருப்பொற்சுண்ணம் இடிக்கும் சரியைத் தொண்டு வாய்த்தலால் வரும் பெருங்களிப்பில் மனம் ஒன்றித் தோழியரை ஏவுதலும் தாமே விரைதலும் நிகழ்வதால் **"ஆனந்த மனோலயம்"** புலனாதலறிக.

196. பூவியல் வார்சடை யெம்பி ராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்க வேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடு மின்கள்
கூவுமின் தொண்டர் புறநி லாமே
குனிமின் தொழுமி னெங் கோனெங் கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித் துநாமே. உ

(இ - ள்)

பிளந்த மாவடுவைப் போன்ற விழிகளுடைய பெண்களே! மலர்கள் அழகுபெறுவதற்கு வந்து பொருந்திய நீண்ட சடைகளையுடைய நம் இறைவன் திருமுழுக்காடப் பொற்சுண்ணம் இடித்தல் வேண்டும்; வாருங்கள்; வந்து உடனே பாடுங்கள்; தொண்டர்கள் வெளியில் நில்லாமல் அழையுங்கள்; களிப்புடன் ஆடுங்கள்; வணங்குங்கள்; தலைவனாகிய அம்பலவாணன் சிவகாமியம்மையுடன் எழுந்தருளி எங்களை ஆட்கொள்ளும் பொருட்டுச் செம்பொன் போன்ற வண்ணம் செய்யப்படும் சுண்ணத்தை நாமே இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலில் இரண்டாம் அடியிலுள்ள "மாவின் வடுவகிர் அன்ன கண்ணீர்" என்பதைப் பாடலில் முதலில் அமைத்துக் கொண்டு மூன்றும் அடியிலுள்ளதை, "தொண்டர் புறம் நிலாமே கூவுமின்" என மாற்றிக் கொள்க. பிறகு பாடல் முழுவதுக்கும் பொருள் காண்க.

மாவின் வடுவகிர் அன்ன கண்ணீர் - *மாவின் வடு* - மாம்பிஞ்சு. இதை நீளவாக்கில் இரண்டாகப் பிளந்தால், உள்ளே பருப்புள்ள பகுதி கண்ணின் கருவிழி போலும் ஏனைய பகுதிகள் கண்ணின் பிறவடிவம் போலும் காட்சி தரும். ஆதலின் இளமகளிர் கண்களுக்கு வடிவம் பற்றி உவமையாயிற்று. இக்கண்கள் முதுமையில் சுருக்கமேற்பட்டு அழகு குன்றும். சரியைத் தொண்டுகள் இளமையிலேயே தொடங்கிச் செய்தல் வேண்டும் என்பது குறிப்பு. ***கண்ணீர்*** - சிவபெருமான் திருப்பணியில் கண்ணோட்ட முடையீர் என்பது குறிப்பு.

பூ இயல் வார்சடை எம்பிராற்கு: பூ - அழகு - அழகு, வார்சடையாக வந்து பொருந்தியுள்ள எம்பெருமான் மாட்டு மலர்கள் தாங்கள் அழகு பெறுதற்காக வந்து பொருந்தியுள்ள சடை என்க. இறைவன், அழகே வடிவானவன் என்பதும் சுந்தரன், நிரம்ப அழகியன், அழகன் என்பன அவன் பெயர்களாகவதும் நினைக. *வார்* - நீண்ட. *155-ம்* திருப்பாடல் உரையில் எடுத்துக்காட்டிய தொல்காப்பியம் - சொல்லதிகாரம் உரியியல் சூ. *317* பார்க்க.

இயல் - பொருந்துகின்ற. ***பிரான்*** - ஆன்மாக்களை விட்டுப் பிரியாதவன். ***எம்*** - அடியார்களின் உரிமை குறித்து நின்றது.

பொன் திருச் சுண்ணம் இடிக்க வேண்டும் : பொன் - மஞ்சள் முதலிய பொருள்களின் கலப்பால் சுண்ணம் பொன்னிறமாயுள்ள குறிப்பு. **வேண்டும்** - வேண்டப்படும் என்றும் பொருள் தந்து இன்றியமை யாமையைக் குறித்து நின்றது. இச்சொல் சொல்வார்க்கும் கேட்பார்க்கும் உள்ள தகுதி வேறுபாடுகளால் இரத்தற் குறிப்பையும், விதித்தற் குறிப்பையும் உணர்த்தி நிற்கும். ஆதலின் ஏனைய வினைச் சொற்கள் போல வரும். "வேண்டும்" என்பதனின் வேறுபட்டதாகும்.

வேண்டும் - என்பது தேற்றப் பொருளில் வந்தது. நாம் பிறராலும் சுண்ணம் இடித்தல் தக்கது. ***இடிக்க*** என்பது "இடித்தல்" என்னும் பொருளில் வந்தது.

"நீவிர் உரைத்தல் வேண்டும்" என்பதிற் போலக் கொள்க. இரத்தற்குறிப்பும் விதித்தற் குறிப்பும் ஏனைய வினை போல வரும்.

"வேறில்லை யுண் டியார் வேண்டு தகும்படும
வினைபெய ரெச்சம் **வியங்கோள்** *பத்துந்*
திணைபா லிடமெலாஞ் செல்லு மென்ப"

(இலக்கணக் கொத்து வினையியல் சூ. 2)

என்றதும் அதன் உரையும் பார்க்க. ★

வம்மின்; வந்து உடன் பாடுமின் - திருப்பொற்சுண்ணம் இடிக்க விருப்புடன் வந்து, முன்னரே இருவர் உலக்கைகளைக் கைக் கொண்டுள்ளதால் விலகி நிற்கும் பெண்களை விளித்து, "நீங்கள் இறைவன் புகழைப் பாடும் எங்களுடன் கலந்து கொள்ளுங்கள்; அஃதும் திருத்தொண்டே, சுழல் முறையில் இடிக்கும் பணி பிறகு உங்களுக்கும் கிட்டும்" என்று தெருட்டியவாறு.

தொண்டர் புறம் நிலாமே கூவுமின்- சுண்ணம் இடிக்கும் திருப்பணியை மேற்கொள்ள வேண்டி உங்களைப் போலவே, சுழல் முறையில் தங்களுக்கு அப்பணி கிட்டும் காலத்தை எதிர்நோக்கி இத் திருப்பணி நிகழும் இடத்துக்கு வெளியில் நிற்கும் மகளிரையும் கூவி உள்ளே வரும் வண்ணம் அழையுங்கள். அவர்களும் காலத்தை வீணாக்காமல் இறைபுகழைப் பாடுதலில் ஈடுபடட்டும். *கூவுமின்* - அவர்கள் வெளியில் நிற்றலின் செவியுறுமாறு உரைத்துக் கூவியழையுங்கள்.

குனிமின்; தொழுமின் - பாடுவதுடன் களிப்பின் மிகுதியால் ஆடுவதையும், வணங்குவதையும் செய்யுங்கள். குனித்தல் - ஆடுதல். இச்சொல், இப்பொருளில் வருவதை,

திருச்சிற்றம்பலம்

*" கூம்பலங் கைத்தலத் தன்பரென் பூடுரு க**க்குனிக்கும்***
பாம்பலங் காரப் பரன்தில்லை யம்பலம் பாடலரின்
தேம்பலஞ் சிற்றிடை யீங்கிவள் தீங்கனி வாய்கமழும்
ஆம்பலம் போதுள வோஅளி காள்நும் அகன்பணையே"

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் 11)

என்பதிற் காண்க.

★ நன்னூல் வினையியல் சூத்திரம் 20-ம் அதற்குச் சிவஞான முனிவர் விருத்தியுரையும் காண்க.

வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன (நன்னூல் சூத். 339)

என்பதும் அதற்குச் சிவஞான முனிவர் விளக்கமும் காண்க.

குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ-(217) என்று பின்னரும் வருதல் காண்க. **தொழுதல்** - வழிபடுதல். அது திருப்பொற்சுண்ணம் இடிக்கும் தொழில் முட்டின்றி முடிதற் பொருட்டு,

எம் கோன் எம் கூத்தன் - **கோ** - கண் என்று கொண்டு. **எம் கோன்** - எங்கள் கண் போன்றவன் எனலுமாம். **கோ** - என்ற சொல் "கண்" என்ற பொருளில் வருவதை,

திருச்சிற்றம்பலம்

"மாலானை மத்தகத்தைக் கீண்டார் போலும்
மான்தோ லுடையா மகிழ்ந்தார் போலும்
*கோலானைக் **கோவழலாற்** காய்ந்தார் போலும்*
குழவிப் பிறைசடைமேல் வைத்தார் போலும்
காலனைக் காலாற் கடந்தார் போலும்
கயிலாயந் தம்மிடமாக் கொண்டார் போலும்
ஆலானந் தாட லுகப்பார் போலும்
ஆக்கூரில் தான்றோன்றி யப்ப னாரே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-21-7)

கூத்தன் - திருவைந் தொழில் கூத்தியற்றுபவன். ஈண்டு, எம்மை ஆளத் தேவியுடன் வரவுள்ளான் ஆதலின் இஃது அருட்கூத்துக் குறித்தவாறு.

தேவியும் தானும் வந்து எம்மை ஆள - **தேவி** - சிவகாமியம்மை. ஆட்கொள்ள எழுந்தருள்கின்றானாகலின் அருள் செய்ய வரும் குறிப்பை உணர்த்தத் திருவருளின் உருவகமாகிய தேவியுடன் தானும் வந்தான் என்றார். ஆள - ஆளுதல் காரியம்; இடித்தல் காரணம்; செயவெனெச்சம் காரணப் பொருள் கொண்டு முடிந்தது.

செம்பொன் செய் சுண்ணம் நாமே இடித்தும் - சுண்ணம் இடித்தல் காரியம். அதன் பயன் கூத்தன் தேவியும் தானுமாக வந்து எம்மை ஆட்கொள்ளுதல் என்று முடித்துக் கொள்க. **செம்பொன் செய்** - செம்பொன்னைப் போன்ற வண்ணத்ததாகச் செய்யப்படுகின்ற.

இத்திருப்பாடலில் பத்தி மிகுந்த களிப்பினுல் பாடுதலும் அக்களிப்பில் மனம் ஒன்றுவதால் தன்வயமிழந்து ஆடுதலும் கூறப்படுதலின் "ஆனந்த மனோலயம்" புலனுதலறிக.

197. சுந்தர நீறணிந்து தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பக நாட்டி யெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றம்பெருமான்
ஆழியா னுதனல் வேலன் றுதை
எந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்து நாமே ௩

(இ - ள்)

அழகிய சுண்ணும்பைச் சுவர்களுக்குப் பூசித் தரையைச் சந்தனக் குழம்பினுல் மெழுகி, மாற்றுயர்ந்த பொற்றுகள்களால் கோலமிட்டு, இடைவெளிகளில் நவமணிகளாகிய நிதிகளைப் பரப்பி, தேவேந்திரனின் கற்பக மரத்தைப் போன்ற வாழை மரங்களைக் கம்பங்களிற் கட்டி; எல்லா இடங்களிலும் அழகிய விளக்குக்களை வரிசையாக வைத்து, விடைக்கொடியை உயர்த்துங்கள்; விண்ணுலகவாசிகளின் அரசனுகிய தேவேந்திரன், நான்முகன் ஆகியோரின் பெருமானும், திருமாலின் தலைவனும்; முருகவேளின் தந்தையும், எங்கள் பக்குவ நிலைக்கேற்ப எங்களை ஆட்கொள்ளும் உமையம்மையின் கணவனும் ஆகிய சிவபெருமானுக்குத் தகுதியுள்ள பொற்சுண்ணத்தை நாமே இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலுக்கு ஆற்றெழுக்காகப் பொருள் காண்க.

சுந்தர நீறு அணிந்தும் மெழுகி - சுந்தரநீறு - நவமணிகளில் ஒன்றுன முத்தை நீற்றுச் செய்த மிக வெண்ணிறமுள்ள சுண்ணும்பு; ஆதலின் சுந்தர நீறு என்றுர். அணிந்தும் - அணிந்து - சுவர்களுக்குப் பூசி. அணிந்தும் - மகர வொற்று விரித்தலாயிற்று. மெழுகி - நறுமணமும் தோற்றப் பொலிவும் கருதித் தரையைப் பொதிகைச் சந்தனக் குழம்பால் மெழுக்கிட்டு. சந்தனக் குழம்பு, பச்சைக் கருப்பூரம் குங்குமப்பூ பன்னீர் கொண்டு செய்ததென்க.

தூய பொன் சிந்தி நிதி பரப்பி - *தூயபொன் சிந்தி* - மாற்றுயர்ந்த பொற்றுகளால் கோலமிட்டு. *தூய பொன்* - மாற்றுயர்ந்த பொன். *சிந்தி* - ஈண்டுக் கோலமிடுதல் குறித்தது. *நிதி* - நவமணிகள். அவை வைரம், வைடூரியம், மாணிக்கம், நீலம், கோமேதகம், மரகதம், புட்பராகம், பவளம், முத்து என்பன. *பரப்பி* - கோலங்களின் இடைவெளியில் தரை தெரியாவண்ணம் இவற்றைப் பரவலாக அமைத்து. ★

இந்திரன் கற்பகம் நாட்டி - சிவபெருமான் தேவியும் தானும் எழுந்தருள உள்ள இடமாதலின் அவன் தகுதிக்கேற்ப ஈண்டுத் தேவ உலகில் இந்திரனுக்கு உரியதாக உள்ள கற்பக மரத்தின் கிளைகளை மலர்களுடன் கொண்டு வந்து கம்பங்களில் கட்டுதல் வேண்டும். ஆனால் மண்ணுலகவாசிகள் அவ்வாறு கற்பக மரத்தின் கிளைகளை இவ்வுலகுக்குக் கொண்டு வருதல் இயலாது. தென்னை மரமும், பனை மரமும் பூவுலகக் கற்பக மரங்கள் என்பர். இவற்றை இந்திரன் கற்பகங்களாகப் பாவனை செய்து தென்னை மரத்தின் பச்சை மட்டைகளை வெட்டிக் கொண்டு வந்து ஓலைகளைப் பின்னி வாயில் முகப்பின் பந்தல்களுக்கு மேல் விதானமாகவும் பக்கங்களில் அமைக்கவும் பயன்படுத்துவர். இளநீர், தேங்காய்களைக் குலையுடன் கொண்டு வந்து பந்தல் முகப்பில் கட்டுவர். பாளைகளைத் தொங்கவிட்டு ஒப்பனை செய்வர். பனை மரத்தினின்றும் கொய்து கொண்டு வந்த நுங்கின் குலைகளையும் தொங்கவிடுவர். கூந்தற்பனை என்ற ஒருவகைப் பனை மரத்தின் விழுதுகள் போன்ற இலைப் பகுதிகளையும் தொங்க விட்டு ஒப்பனை செய்வர். பூவுலகக் கற்பகம் என்று பெயர் பெறுவிடினும் வாழை மரத்தின்

★ *“ வேரி யின்மெழுக் கார்ந்தமென் பூநிலத்*
தாரி யாகவஞ் சாந்தந் தனித்தபின்
வாரி நித்திலம் வைப்பொற் பூவொடு
சேரி தோறிது செல்வத் தியற்கையே”

(சீவக சிந்தாமணி- நாமகளிலம்பகம் - 100)

(அரி - ஐம்மை; விகாரம். ஆரி - அழ கென்றுமாம் மேலும் தனிச் சுண்ணம் என்ப (பதுமையாரிலம்பகம் 165) வேரி - இருவேரியுமாக.

(இ - ள்)

நாற்றமும் தோற்றமும் இனியவற்றால் மெழுகிய மெழுக்கார்ந்த வேரியையுடைய பூநிலத்தே ஐதாகத் தொழில்படச் சாந்தைப் பூசின பின்பு பொற்பூவொடு நித்திலத்தை வைப்பார்கள்; ஆதலின் சேரிதோறுஞ் செல்வத்தியற்கை இத்தன்மைத்தென்க.

நச்சினார்க்கினியர் உரை.

காய், கனி, பூ, தண்டு முதலிய பகுதிகள் மக்களுக்கு உணவாகின்றன. இலேயும், மட்டையும் உண்கலன்களாகப் பயன்படுகின்றன. பால் முதலியவற்றை மக்களுக்கு நல்கும் ஆனினம், எருமை முதலியவற்றுக்கு மட்டையும் தண்டும் கூடிய வாழை மரத்தின் பகுதி தீவனமாகின்றது. இச்சிறப்புக்களேக் கருதி வாழை மரங்களே குலேகளுடன் கொண்டு வந்து பந்தல் முகப்புகளில் கட்டி ஒப்பனே செய்யும் வழக்கம் நிலவுகின்றது. இனம் பற்றி மேலே கூறிய தென்னே, பனே மரங்களின் பகுதிகளுடன், குலேகளுடன் கூடிய வாழை மரங்களேயும் கட்டினர் என்று கொள்க.

ஆன்மார்த்த சிவபூசை புரிவோர், நாள்தோறும் தங்கள் வழிபாட்டில் இறைவனுக்குச் சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல், புளியோதரை, பால் பாயசம், பண்ணியங்கள், தேங்காய், பழம், வெற்றிலே, பாக்கு முதலியவற்றைப் படையலாக அமைத்து உண்பிப்பர். நடுத்தரக் குடும்பத்தினருக்கு நாடோறும் இத்தனே அன்னங்களே அமைக்க வசதி இருக்காது. ஆதலின் அவர்களுக்குச் சிவ பூசை நல்கும் தீட்சாகுரு ஒரு வழி சொல்வார். பழமும் வெற்றிலேப் பாக்கும் மட்டும் தினமும் அமையுங்கள்; ஏனேய ஒவ்வொன்றுக்கும் பச்சிலேகளேக் கிள்ளி வைத்து ஒவ்வொரமுதாக அன்பினுல் பாவித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆன்ம நாயகன் அவற்றை உண்மையான படையல்களாகவே ஏற்றுக்கொள்வான்; சிறப்பு நாட்களில் தேங்காயும் ஏதேனும் ஒரு பொங்கலும் வைத்தால் போதும் என்று அவர் ஆற்றுப்படுத்துவார். இதனேயே நம் சேக்கிழார் பெருமான் "தேடாதன அன்பினில் நிரம்பி" என்று நமக்கு அறிவித்து ஆற்றுப்படுத்துகின்ருர். அவர் திருவாக்கு:

திருச்சிற்றம்பலம்

"பெருமை பிறக்குஞ் சேய்ஞலூர்ப்
பிள்ளே யார்த முள்ளத்தில்
ஒருமை நினேவா லும்பர்பிரா
னுவக்கும் பூசை யுறுப்பான
திருமஞ் சனமே முதலவற்றிற்
றேடா தனவன் பினினிரப்பி
வருமந் நெறியே யர்ச்சனேசெய்
தருளி வணங்கி மகிழ்கின்ருர்"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - சண்டேசுர நாயனுர் புராணம் - 37)

என்பதாகும்.

ஈண்டுத் தேடிப் பெற இயலாத இந்திரன் கற்பகத்துக்கு மாற்ருகக் குலேயுடன் கூடிய வாழை மரங்களேக் கட்டி அன்பினில் நிரப்பிக் கொண்டார்கள் என்க.

எங்கும் எழிற்சுடர் வைத்து* - *எங்கும்* -** பொற்சுண்ணம் இடிக்கும் பொருட்டுத் திரட்டி அமைத்த பொருள்களின் இருக்கையின் இருபுறமும் மட்டுமன்றி,இல்லத்தின் நுழைவாயிலிலும் இடிக்கும் இடத்தில் ஆங்காங்குப் பல இடங்களிலும். *சுடர்* - ஈண்டுத் தானியாகு பெயராக சுடர் ஒளிரும் விளக்கைக் குறித்து நின்றது. பொன்ஞலாகிய குத்து விளக்குக்களின் ஐந்து முகங்களிலும் தாமரை நூலாலான திரிகளேயிட்டு அன்று கடைந்தெடுத்த வெண்ணெயை அப்பொழுது உருக்கிப் பெற்ற ஆவின் நெய் சொரிந்து ஏற்றப்பட்ட விளக்குக்களாகலின் ***எழிற்சுடர் என்ருர். ***வைத்து*** - வெளிச்சம் கருதியன்றிச் சிறப்புக்காக ஏற்றப்பட்ட பகல் விளக்குக்களான இவை பெருஞ்சிவ புண்ணியத்தை வைப்பு நிதி போல வழங்கலின் ***வைத்து*** என்ருர்.

கொடி எடுமின் - விடைக்கொடியை ஏற்றுங்கள். "கொடி" என்பது ஒரு குறிப்பிட்ட கொள்கையுடைய மக்களேக் குறிக்கோளே எய்துவதற்காக ஒரு குழுவாகத் தன் கீழ் கூட்டுதற்கு ஒரு சின்னம் எழுதிய பதாகை. அம்மக்கள் ஒன்று கூடித் தங்கள் கொடியை உயர்த்தின் "எங்கள் குறிக்கோளே எய்தியே தீருவோம்" என்று தங்களுக்குள் உறுதி செய்து கொண்டு இயங்குவதைக் காட்டும். இன்றும் அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் தங்கள் கோரிக்கைகளே எய்துதற்காகத் தங்கள் கட்சிச் சின்னங்கள் பொறித்த கொடிகளே உயர்த்திக் கிளர்ச்சி செய்தல் காண்க. சிவபெருமானின் கொடி விடைக் கொடி. திருக்கோயில்களில் திருவிழாத் தொடக்கத்தில் விடைக் கொடியை உயர்த்துவது அடியார்களின் ஆணவமல பரிபாகத்தின் பொருட்டு நிகழவுள்ள இத்திருவிழாவை நிகழ்த்தியே தீருவோம் என்னும் உறுதியைக் காட்டுவதாகும். மெய்கண்ட சாத்திர நூல்களில் ஒன்ருன "கொடிக் கவி" பார்க்க. ஈண்டுக் கொடி எடுத்தல் இத்திருச்சுண்ணம் இடிப்பதாகிய சரியைத் தொண்டின் மூலம் மலபரிபாகம் எய்தியே தீருவோம் என்ற உறுதியைக் குறித்து நின்றது.

***அந்தரர் கோன் அயன் தன் பெருமான்; ஆழியான் நாதன்; நல்வேலன் தாதை* - *அந்தரர் கோன்* -** மண்ணுலகில் பிறந்து சிவபுண்ணியங்களேப் புரிந்து உய்யாமலும், சிவதத்துவ புவனங்களில் பத

முத்திகளில் தங்கித் தவமுயன்று பரமுத்தியை எய்தாமலும் இரண்டும் கெட்ட தேவருலகில் உள்ள அமரர் உலகில் திரிசங்கு மன்னன் போல் வாழும் இமையவர்களின் அரசனுகிய தேவேந்திரன். **அயன்** - நான்முகன். **பெருமான்** - தேவேந்திரன் நான்முகன் ஆகிய இருவருக்கும் தலைவனுக உள்ள பெருமையை ஆள்பவன். **ஆழியான் நாதன்** - சக்கரப் படையுடைய திருமாலுக்குத் தலைவன். **ஆழியான்** - வைகுந்தத்திலும் அதற்குக் கீழுள்ள உலகங்களிலும் தன் ஆணையாகிய சக்கரத்தைச் செலுத்துபவன் எனலுமாம். **நாதன்** - கணவன் என்று பொருள் கொண்டு திருமாலைத் தன் தேவியாகக் கொண்டவன் எனலுமொன்று, ஈண்டு,

திருச்சிற்றம்பலம்

எரியலா லுருவமில்லை யேறலா லேற லில்லை
கரியலாற் போர்வையில்லை காண்டகு சோதியார்க்குப்
பிரிவிலா வமரர்கூடிப் பெருந்தகைப் பிரானென்றேத்தும்
அரியலாற் றேவியில்லை யையனை யாறனுர்க்கே.

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4-40-5)

எனும் நம் அரசுகள் அமுதவாக்கு நினைக.

நல்வேலன் தாதை - ***வேலன்*** - ஞான சத்தியாகிய வேற்படையையுடைய முருகவேள். இவன், அறிவு, திரு, அழகு, ஆற்றல், அருள் முதலிய எல்லாவற்றிலும் சிறந்தவனுகித் தன்னை வழிபடுவோர்க்கு அவை அனைத்தையும் நல்கும் வள்ளலாகலின் நல் என்னும் அடை புணர்த்தார். ***தாதை*** - செவ்வேட் பரமனை சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணினின்றும் தோற்றுவித்தான். ஆகலின் அம்முருகனுக்கு தந்தை என்றுர்.

எந்தரம் ஆள் உமையாள் கொழுநற்கு - மலபரிபாகத்தால் பல்வேறு பக்குவ நிலையில் உள்ள எங்களை அவ்வவர் பக்குவத்துக்கேற்ப ஆட்கொண்டு மேல்நிலைகளில் செலுத்தி முடிவில் பரமுத்திக்கு உய்க்கும் உமையம்மையின் கணவன். இனி, ***எந்தரமும் ஆள்*** என இழிவு சிறப்பும்மை விரித்து பக்குவநிலையில் மிகவும் கீழாக உள்ள எங்களையும் பொருட்படுத்தி ஆட்கொள்ளும் உமையவள் எனலுமாம். உமை

"ந"கர, "ம"கரங்களினீங்கிப் பக்குவமுற்ற "ய"கரமாகிய ஆன்மாவைத் திருவருளாகிய "வ"கரம் "சி" கரத்துடன் சேர்த்தல் நினைக. *கொழுநற்கு* - சிவபெருமானுக்கு.

ஏய்ந்த பொற்சுண்ணம் - சிவபெருமானுக்குப் பொருத்தமாகிய பொற்சுண்ணம்.

இத்திருப்பாடலில், இந்திரன், அயன், திருமால், முருகவேள் ஆகியோரின் தலைவனே நம்மை அடிமை கொள்ளும் உமையம்மையின் கணவன் என்றதால் மனம் பெருங்களிப்புடைதாயிற்று. அத்துணைப் பெருமையுடையவனுக்கு பொருத்தமான பொற்சுண்ணம் நாமே இடிப்போம் என்றதால் மனம் அப்பெருங்களிப்பில் மூழ்கிச் சிவநினைவே மேலோங்கிற்று. இதனால் "**ஆனந்த மனோலயம்**" புலனாதல் காண்க.

198. காசணி மின்க ளுலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய வடியவர்கள்
நின்றுநி லாவுக யென்று வாழ்த்தி
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே ௮

(இ - ள்)

உலக்கைகளை எல்லாம் நவமணிகளால் அணி செய்யுங்கள்; கருங்கல் உரலின் அரையில் காம்பு என்னும் பட்டை உடுத்துங்கள்; அன்புடைய அடியவர்கள் என்றும் நிலைபெற்று விளங்குக என்று வாழ்த்தி; நாடுகள் எல்லாம் புகழ்ந்து கொண்டாடும் காஞ்சிபுரத்தில் திருவேகாம்பர நாதன் எழுந்தருளியுள்ள செம்பொன் போன்ற விலைமதிக்க முடியாத திருக்கோயிலைப் பாடி; நம் பற்றுக்களையும் வினைகளையும் வேருடன் அகழ்ந்து நின்று, இறைவன் புகழ்களைப் பாடி நாமே பொற்சுண்ணத்தை இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலின் முதலடியிலுள்ள "உலக்கை எல்லாம்" என்பதைக் "காசணிமின்கள்" என்பதன் முன்பும்; "கறையுரலை" என்பதைக்

"காம்பணிமின்கள்" என்பதன் முன்பும் புணர்த்துப் பிறகு பாடல் முழுவதுக்கும் ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

உலக்கை எல்லாம் காசு அணிமின்கள் - திருப்பொற் சுண்ணம் இடிக்கப் பயன்படுத்தவுள்ள உலக்கைகளை நவமணிகளால் அணி செய்யுங்கள். **காசு** - மணிகள். ஈண்டு நவமணிகள் ஒன்பதும் குறித்து நின்றது. **காசு** - பொற்காசுகள் எனலுமாம். **அணிமின்கள்** - பொற்சுண்ணம் இடிக்க வந்துள்ள பெண்களை ஏவியவாறு.

கறை உரலைக் காம்பு அணிமின்கள் - **கறை** - கறுப்பு. ஈண்டுப் பண்பாகு பெயராகக் கருங்கல் உரலைக் குறித்து நின்றது. **காம்பு** - இந்நாளில் காஞ்சிபுரம், ஆரணி, தருமாபுரம், காசி போன்ற பெயர்களால் விளங்கும் பட்டுப்புடவைகள் போல, அந்நாளில் காம்பு, நேத்திரம் முதலியனவாக வழங்கிய பட்டு வகைகளுள் ஒன்று. இதனை;

திருச்சிற்றம்பலம்

" வேம்பினொடு தீங்கரும்பு விரவியெனைத் தீற்றி
விருத்திநா னுமைவேண்டத் துருத்திபுக்கங் கிருந்தீர்
பாம்பினொடு படர்சடைக ளவைகாட்டி வெருட்டிப்
பகட்டநா னொட்டுவனோ பலகாலு முழன்றேன்
சேம்பினொடு செங்கழுநீர் தண்கிடங்கிற் றிகழுந்
திருவாரூர் புக்கிருந்த தீவண்ணர் நீரே
காம்பினொடு நேத்திரங்கள் *பணித்தருள வேண்டுங்*
கடனாகைக் காரோண மேவியிருந் தீரே."

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 7-46-2)

எனவரும் நம் நம்பிகள் நற்றமிழிற் காண்க. "காம்பு" என்னும் இப்பட்டுப் புடவையைச் "சிறு கரப்பன் சேலை" என்பர் வைணவர்.

197-ம் திருப்பாடலில் திருப்பொற்சுண்ணம் இடிக்கவுள்ள இடத்தை ஒப்பனை செய்தது கூறினர். இத்திருப்பாடலில் இடிக்கப் பயன்படும் கருவிகளாகிய உலக்கைகள், உரல் முதலியவற்றை ஒப்பனை செய்தல் பற்றிக் கூறுகின்றார்.

நேசம் உடைய அடியவர்கள் நின்று நிலாவுக என்று வாழ்த்தி - நேசம் உடைய அடியவர்கள் - சிவபத்தி ஒன்றையே தங்கள் உடைமையாகக் கொண்டுள்ள "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்." ***நேசம்*** - நேயம் என்பதன் இடைப்போலி. ***"நின்று நிலாவுக"*** - இவ்வடியார்களின் சிவபத்திச் செல்வம் இவர்கள் வீடு பெற்ற பின்பும் இவ்வுலகில் நிலைபெற்று விளங்குக. ***நிற்றல்*** - என்று அழியாது நிலைபெறுதல். ***நிலாவுதல்*** - உலகெங்கும் பரவி விளங்குதல். இவ்வாழ்த்தினால் இனி எதிர்காலத்தில் படைப்புக்கு வரும் உயிர்கள் அனைத்தும் உய்தல் கருதுக.

ஈண்டு,

திருச்சிற்றம்பலம்

"என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம் - வெள்ளானைச் சருக்கம் - 53)

எனவரும் சேக்கிழார் பெருமான் திருவாக்கு நினைக.

தேசம் எல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித் திருஏகம்பன் செம்பொன் கோயில் பாடி - தேசம் - மொழியாலும் நாகரிகத்தாலும் வேறுபட்டு இந்திய நாட்டுள் அமைந்துள்ள மாநிலங்கள், இட ஆகு பெயராக அவற்றில் வசிக்கும் சிவ நெறியாளர்களாகிய மக்களைக் குறித்து நின்றது. ***புகழ்ந்து ஆடும் - ஆடும்*** - கொண்டாடும் என்றதன் தலைக்குறை. இதைக் கச்சிநகர்; திருவேகம்பம் செம்பொன் கோயில் என்ற மூன்றுக்கும் தனித்தனியே கூட்டுக.

கச்சி நகரைத் தேசமெல்லாங் கொண்டாடுவதை,

திருச்சிற்றம்பலம்

"செல்வியைப் பாகங் கொண்டார்
சேந்தனை மகனாக் கொண்டார்
மல்லிகைக் கண்ணி யோடு
மாமலர்க் கொன்றை சூடிக்

கல்வியைக் கரையி லாத
காஞ்சிமா நகர்த னுள்ளால்
எல்லியை விளங்க நின்று
றிலங்குமேற் றளிய னாரே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 4-43-8)

எனவரும் நம் அரசுகள் அமுதவாக்கிற் காண்க. வடமொழிவாணரும் காஞ்சியைப் புகழ்வதை அந்நாளில் புகழுடன் விளங்கிய மகாகவி பாரவியின் வாக்கிலும் காண்க. ★

திருவேகாம்பர நாதனைத் தேசமெல்லாம் புகழ்ந்து கொண்டாடுதலைத் தலத்துக்கான மூவர் தேவாரப் பதிகங்களிலும் காஞ்சிப் புராணத்திலும் காண்க. கச்சிச் செம்பொன் கோயிலைத் தேசமெல்லாம் புகழ்ந்து கொண்டாடுவதன் காரணம், உயிர்கள் பிறவிப் பயனாகிய சிவபூசையைச் செய்துய்யும் பொருட்டு அம்பிகையே வழிபட்டு ஆற்றுப்படுத்த இடம் இத்திருக் கோயிலுள்ள ஒற்றை மாமரத்தின் நிழல் என்க.

பாடி - திருக்கோயிலை இசையினால் துதித்து, கச்சியைப் பாடி; ஏகம்பனைப் பாடி என்றும் கூட்டியுரைக்க நின்றது. பாடுதல் மொழித்தொண்டு, சுண்ணம் இடித்தல் உடலின் தொண்டு. மொழி மெய் இரண்டையும் சிவத்தொண்டில் இயக்குவது மனம். ஆதலின் மனத்தாலும் தொண்டு செய்தல் பெற்றாம். முக்கரணங்களும் சிவப்பணியில் ஈடுபட்டவாறு காண்க.

நேசமுடைய அடியவர்களை வாழ்த்தியதால் மாலற நேயம் மலிந்தவர் வேடம் வழுத்தப்பட்டதும், செம்பொற்கோயில் பாடப் பெற்றதால் ஆலயம் வழுத்தப்பட்டதும் பெற்றாம். சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரம் பொருள் நினைக.

ஏகம்பன் - ஏ -பெரிய. கம்பம் - நடுக்கம்; அச்சம். *ஏகம்பன்* - கம்பையாற்றில், பெரு வெள்ளம் வர அருளி அம்பிகைக்குப் பெரிய நடுக்கத்தை வரச் செய்தவன். இத்திருப்பாடலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பெருமகனார் மொழிபெயர்ப்பின் அடிக்குறிப்பாக ஏகம்பன் என்பதை ஏகாம்பரன் என்றதன் மரூஉ எனக் கொண்டு He who has one garment என்று விளக்கம் தந்துள்ளார். ஏகான்ம வாத நெறியின்

★ "புஷ்பே ஸு ஜாதி; புருஷேஸு விஷ்ணு
நாரீஸு ரம்பா; நகரீஸு காஞ்சி "

துறவியர் ஒரே கல்லாடையை அரையில் அணிந்து மீதமுள்ள பகுதியை முதுகிற் போர்த்துப் பின் தலையில் முக்காடிட்டுக் கொள்வர். இதை ஏக வஸ்திரம் என்பர். அப்பொருள் ஈண்டுப் பொருத்தமின்மை வெளிப்படை.

திரு ஏகாம்பரம் - தலவிசேடம் - கீர்த்தித் திருவகவல் 77-ல் "*திரு ஏகம்பம்*" என்றதன் கீழுரைத்தவை காண்க.

பாச வினையைப் பறித்து நின்று பாடி - பாச வினை - கயிறு போன்று பந்தம் செய்யும் வினை எனலுமாம். வினையை "அறுத்து" என்னாது; "*பறித்து*" என்றார். வேருடன் அகழ்ந்து எடுக்கின் பின்னர் ஆகாமிய வினை தோன்றாது என்றவாறு.

நின்று -அடியார் கூட்டத்தை விட்டு அகலாமல் அங்கேயே நிலை பெற்றிருந்து.. புறத்தே செல்லின் வாசனாமலம் மீண்டும் முழுவலிமை பெறும்; உலகியலில் ஈடுபட்டுப் பிறப்பிறப்பில் செல்ல வேண்டும். ஆகலின் அடியார் கூட்டத்திலேயே நிற்போம் என்றவாறு.

பாடி - இறைவன் பொருள் சேர் புகழ்களை இடை விடாமல் இசையால் துதித்து வழிபட்டு. இஃது இருள்சேர் இருவினையும் சேராது உய்யும் பொருட்டு.

இத்திருப்பாடலில், சிவப்பணியாகிய திருப்பொற்சுண்ணம் இடிக்கும் தொண்டால் வரும் சிவ புண்ணியம் நினைந்து மனம் பெருங் களிப்பால் இன்புறத் தொடங்கிற்று; தொடர்ந்து அடியவர்களையும் கச்சியையும் ஏகாம்பர நாதனையும் அவன் திருக்கோயிலையும் இசையால் வழுத்த; மனம் அவ்வின்பத்தில் மூழ்கியது. இதனால் "*ஆனந்த மனோலயம்*" புலனாதல் அறிக.

199. அறுகெடுப் பாரய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதி, லெய்த வில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில் பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்க ணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்து நாமே. ரு

(இ - ள்)

புன்னகை பொருந்திய சிவந்த வாயினையுடையீர், அறுகு எடுப்பவர்களாகிய நான்முகனும் திருமாலும் மட்டுமல்லாமல் தேவந்திரனுடன் தேவர்களும் முணுமுணுக்கின்ற விண்ணுலக வாசிகளின் கூட்டங்களும் எல்லாரும் நமக்கு முன்பாக எடுக்க அனுமதியோம்; உறுதியுள்ள மூன்று புரங்களையும் எய்த வில்லாளனான ஏகாம்பரனின் செம்பொன் போன்ற திருக்கோயிலைப் பாடி மூன்று விழிகளுள்ள தந்தைக்கு; நாமே திருப்பொற் சுண்ணம் இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலின் ஈற்றடியிலுள்ள "முறுவற் செவ்வாயினீர்" என்பதைப் பாட்டின் தொடக்கத்தில் அமைத்துக் கொள்க. பிறகு பாடல் முழுவதுக்கும் ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

முறுவல் செவ்வாயினீர் -இது, திருப்பொற் சுண்ணம் இடிக்க வந்துள்ள பெண்களை விளித்தது. உயர் குடிப்பெண்கள் உரக்கப் பேசலும், வாய் விட்டுப் பெரிதாக நகைத்தலும் செய்யார். மகிழ்ச்சியையும் உடன்பாட்டையும் மென்முறுவலால் புலப்படுத்துவர். இதனால் இச் சிவத்தொண்டில் ஈடுபடும் மகளிரின் நற்பண்பு காட்டியவாறு. வெண்ணகையும் சிவந்த வாயும் என்றது முரண்சுவை.

அறுகு எடுப்பார் -அறுகு எடுக்கும் மங்கலச் சடங்குக்கு உரிமையுடன் வந்துள்ளவர்களாகிய. ***அறுகு*** -அறுகம் புல்.

அறுகு எடுத்தல் - இது, சைவக் குடும்பங்களில் இன்றும் நடைபெற்று வரும் ஒரு மங்கலச் சடங்கு. திருமணம் நிகழச் சில நாட்கள் முன்பு மணமகன், மணமகள் ஆகிய இருவர் இல்லங்களிலும் தனித்தனியே நிகழ்வது. சோதிடர் குறிப்பிடும் ஒரு நன்னாளில் மணமகன் அல்லது மணமகளை ஓர் இருக்கையில் கிழக்கு நோக்கி அமர்த்துவர். அருகில் ஒரு வெள்ளித் தட்டில் திரிதலமாகக் கொய்த அறுகம்புற்களை வைத்து அதனருகில் ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் எண்ணெய் வைப்பர். குடும்பத்தில் மிக மூத்தவர் தொடங்கி ஆண், பெண் இருபாலரும் ஒவ்வொருவராக வந்து ஓர் அறுகை எடுத்து எண்ணெயில் தோய்த்து இருக்கையில் உள்ள மணமகன் அல்லது மணமகள் தலையில் மும்முறை தடவி அறுகைப் புறத்தே போடுவர். இவ்வாறு மூன்று முறை அறுகை எடுத்துச் செயல் புரிவர். திருமணத்தை முன்னிட்டுத் தற்செயலாக நெருங்கிய உறவினர் யாரும் முன்கூட்டியே வந்திருப்பின், பண்பாடு கருதி அவரையும் அறுகெடுக்க அழைப்பர். ஆனால் அவர் உடனே அறுகெடுக்காமல் முன்வந்து

நின்று குடும்பத்திலுள்ள மீதமுள்ளோரையும் உரிமை வரிசைப்படி ஒவ்வொருவராக அழைத்து அறுகெடுக்கும்படி இயக்கி, முடிவில் தாமும் அறுகெடுப்பர். இவ்வாறு உரிமை முறைகளை வரிசைப்படுத்துவதில் சில சமயம் பிணக்கு நேர்தலுமுண்டு. அவற்றைத் தடுப்பதற்காகப் பெரும்பாலான குடும்பங்களில் வெளி உறவினர்களை இச்சடங்குக்கு அழைப்பதில்லை. சடங்கு முற்றுப் பெற்றவுடன் மணமகன் அல்லது மணமகளும் ஏனையோரும் எண்ணெய் தேய்த்து நீராடுவர். முன் காலத்தில் இச்சடங்கிலும் பின் நீராடுதலிலும் எண்ணெயின் இடத்தை ஆவின் நெய் பெற்றிருந்தது.

இச்சடங்கு மிகப் பழங்காலந் தொட்டே நடந்து வந்ததை; முன்னம் போற்றித் திருவகவல் 201-ல் "அறுகு" என்றதன்கீழ் எடுத்தாண்ட பாடல்களாலறிக. ★

அயனும் மரியும் - நான்முகனும், திருமாலும் ஏனைய விண்ணுலக வாசிகளில் தகுதியால் மேம்பட்டவர்கள். ஆதலின் அவர்களுக்கு முன் அறுகெடுக்கும் உரிமையுள்ளவர்கள். ஆயினும் அடியார்களுக்குப் பின்பே இவர்கள் அறுகெடுக்கும் உரிமையினர். அயனும் என்றதிலுள்ள மகரவொற்று விளித்தலாயிற்று.

அன்றி மற்று இந்திரனோடு அமரர் - ***அன்றி*** - அயனும் திருமாலும் அன்றியும். ***இந்திரனோடு அமரர்***-தேவேந்திரனும் அவன் ஆட்சிக்குட்பட்ட முப்பத்து முக்கோடி தேவர்களும். திருமாலையும், நான்முகனையும் அடுத்து அறுகெடுக்கும் உரிமையுள்ளவன் தேவேந்திரன். அவனுக்குப் பின் உரிமையுள்ளவர்கள் அவன் ஆட்சிக்குட்பட்ட முப்பத்து முக்கோடி தேவர்கள். "ஒடு" என்ற மூன்றனுருபு ஈண்டு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது.

நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம் - ***தேவர் கணங்கள்*** - பதினெண் கணங்களில் மேற்குறித்த முப்பத்து முக்கோடி தேவர்களல்லாமல் ஏனைய பதினேழு கணங்கள். அவர்கள் பற்றிய விவரம் முன்னம் சிவபுராணம் 28-ல் "கணங்களாய்" என்றதன் கீழ் காண்க. ***எல்லாம்*** - அனைவரும்.

★ *நாழியுளிழுது நாகான் கன்றுதின் றெழிந்தபுற் **றேய்த்***
தூழிதோ றுவுந் தோழும் போன்றுடன் மூக்க வென்று
தாழிருங் குழலி னாளை ***நெய்தலைப் பெய்து வாழ்த்தி***
மூழைநீர் சொரிந்து மொய்கொ லாய்ச்சிய ராட்டி னாரே.
(சீவக சிந்தாமணி - கோவிந்தையாரிலம்பகம் - 79)

நறுமுறுத்தல் - முணுமுணுத்தல். திருமால் முதல் முப்பத்து முக்கோடி தேவர்கள் முடியவுள்ளவர் மாட்டுத் தகுதி வேறுபாடு தெளிவாக விளங்கலின் அவர்கள் மாட்டு முற்பிற்பாட்டு முறைமை பற்றிய பிணக்கு நிகழ ஏதுவில்லை. ஆனால் இப்பதினேழு கூட்டத்தார் மாட்டு அவ்வேறுபாடு தெளிவாக இன்மையின் இவர்களிடையே அதுபற்றிய பிணக்கு முகிழ்க்கும். ஆயினும் சிவ சந்நிதியில் நிற்றலின் தம் உள்ளத்து முகிழ்க்கும் பிணக்கைத் தெற்றென வெளிப்படுத்த அஞ்சி முணுமுணுப்பர் என்றவாறு.

நம்மிற் பின்பு அல்லது எடுக்க ஒட்டோம் - சிவனடியார்களாகிய நம் சரியைத் தொண்டு முற்பிறவிகளில் ஈட்டிய சிவபுண்ணியங்களின் பயனாக இன்று எய்தியுள்ள சிவபத்தியின் உந்துதலால் நிகழ்வதாகும். மேற்குறித்த திருமால் முதல் பதினேழு கணங்கள் முடிய உள்ளோர் ஈண்டு அறுகெடுக்க முன்வருதல் பசுபுண்ணியங்களின் பயனாக வரும் பதவியின்பங்களை விரும்பியேயாகும். எனவே நமக்கே முதலுரிமையுள்ளது. தகுதி வரையறை செய்யப்பட்டோ அல்லது செய்யப்படாமையால் முணுமுணுத்துக் கொண்டோ நிற்போர் எவரையும் நமக்கு முன்பாக அறுகெடுக்க அனுமதியோம் என்றவாறு.

"எடுக்க ஒட்டோம்" என்றதன் பின் "ஆதலின்" என்னும் சொல்லெச்சம் வருவித்து "சுண்ணத்தை நாமே இடிப்போம்" என உரைத்து முடித்துக் கொள்க.

செறிவுடை மும்மதில் எய்தவில்லி - அனைத்து உலகங்களையும் அலைத்து அழித்த திண்மை பற்றி முப்புரங்களுக்குச் *செறிவுடை* என்ற அடை புணர்த்தார். *எய்த* - சிரிப்பினால் எரித்தழித்த. *வில்லி* - மாமேருவான வில் தன் கையிலிருந்தும் அதைத் திரிபுரங்களை எரிக்கப் பயன்படுத்தாத பெருவீரன். *வில்லி* - வில்லையுடைவன்.

முக்கண் அப்பற்கு ஆட - முச்சுடர்களுக்கு ஒளியும் ஆற்றலும் நல்கும் மூன்று விழிகளுள்ள தந்தை. கதிரவன் ஒளியும் வெப்பமும் நெல் முதலிய பயிர்களுக்கு வளர்ச்சி தருவன. திங்களின் ஒளி அப்பயிர்களுக்கு உள்ளீடு தருவது. நெருப்பு அழிக்கும் தொழில் செய்வது. ஆதலின் இறைவன் உயிர்களுக்குத் தந்தையானான். *ஆட* - அவன் திருமுழுக்கு ஆடும்பொழுது பயன்படுத்தற் பொருட்டு.

உண்மைச் சரியைத் தொண்டாகிய திருப்பொற்சுண்ணம் இடிக்கும் பேறு கிட்டியதால் மனம் பெருமகிழ்ச்சியால் நிரம்பிற்று. அத்தொண்டு

குறித்து வந்து நிற்கும் விண்ணுலக வாசிகள் அனைவரினும் நமக்கு முன்னுரிமை உண்டு என்ற நினைவால், மனம் அம்மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்ந்தது. இதனால் "ஆனந்த மனோலயம்" புலனாதல் காண்க.

200. உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாமுரல் போதா தென்றே
கலக்க வடியவர் வந்து நின்றார்
காணவு லகங்கள் போதா தென்றே
நலக்க வடியோமை யாண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருமகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடித்து நாமே ௬

(இ - ள்)

உலகின் பரப்பு முற்றிலும் பல உரல்கள் கல்லி அமைப்பினும் அவ்வெண்ணிக்கை போதாது என்று கூறும் வண்ணம் பெரியோர்கள் திரளாக வந்து பல உலக்கைகளைச் சுண்ணம் இடிக்க உயர்த்துவார்கள்; அவர்களைத் தொடர்ந்து இப்பணியில் கலந்து கொள்ள வந்து நிற்கும் உண்மை அடியவர்களைப் பார்க்கில் அவர்கள் தங்கி நிற்கப் பல உலகங்கள் போதா என்னும் வண்ணம் பெருங் கூட்டமாக வந்து நிற்கின்றார்கள். அடியோங்களை நலமுற ஆண்டு கொண்டு, நாம் சூடி மகிழும் வண்ணம் அன்றலர்ந்த செந்தாமரை மலர்கள் போன்ற திருவடிகளை நல்கி அருளியவனும், இமயமலையின் மருமகனுமாகிய சிவபெருமானைப் பலகாறும் பாடிக் களித்து, அழகிய பொற்சுண்ணத்தை நாமே இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலை, உலகமெல்லாம் உரல் போதாது என்றே பெரியர் உலக்கை பல ஒச்சுவர்; உலகங்கள் போதாது என்றே காண அடியவர்கள் கலக்க வந்து நின்றார்; அடியோமை நலக்க ஆண்டு கொண்டு சூட நான் மலர்ப் பாதங்கள் தந்த; மலைக்கு மருமகனைப் பாடிப்பாடி மகிழ்ந்து நாமே பொற்சுண்ணம் இடித்தும் என்று அன்னுவயம் செய்து கொள்க. பிறகு பொருள் காண்க.

பொற்சுண்ணம் இடிக்க வந்து கூடியுள்ள இளம் பெண்கள், சிவபெருமான் நினைவே நிரம்பியுள்ள நெஞ்சங்களுடன் தங்கள் பணியைத் தொடங்குகின்றனர். அவர்கள் மனக்கண்ணில் திரைப்படம் ஓடுவது போல

சில காட்சிகள் தெரிகின்றன. அவை வேறு புவனங்களில் வாழும் நுண்ணுடல் கொண்ட பக்குவான்மாக்கள் இங்கு வந்து இத் திருத்தொண்டில் பங்கு பெறக் காத்திருத்திருக்கும் நிகழ்ச்சிகளாம்.

உலகம் எல்லாம் உரல் போதாது என்றே பெரியர் பல உலக்கை ஒச்சுவர் - உலகம் எல்லாம் உரல் போதாது என்றே - சிற்றூர்களில் உள்ள திருக்கோயில் முற்றம், மன்றம், சாவடி முற்றம் போன்ற பொது இடங்களில் உள்ள பாறைகளில் உரல் குழித்து வைப்பர். ஊர் மகளிர் உலக்கையும் தானியமும் கொண்டு வந்து அதிற் குற்றியும் இடித்தும் எடுத்துச் செல்வர். உலக்கையும் இல்லாத வறியோர் பிறர் இல்லங்களில் உலக்கை வாங்கிப் பயன்படுத்திக் கொண்ட பின் திருப்பித் தருவர். மூன்று மாயா புவனங்களில் உள்ள உலகங்களின் பரப்பு முற்றிலும் இவ்வாறு உரல்கள் அமைப்பிலும் அவை போதுமானவையல்ல என்று கூறும்படி. **பெரியர்** - மேற்குறித்த உலகங்களில் உள்ள பக்குவான்மாக்கள். ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

"முற்றலா மையிள நாகமோடேன முளைக் கொம் பவை பூண்டு
வற்றலோடுகல னுப்பலி தேர்ந்தெனதுள்ளங் கவர்கள்வன்
கற்றல் கேட்டலுடை யார்பெரியார்கழல் கையாற் தொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 1-1-2)

என்பது நினைக.

பல உலக்கை ஒச்சுவர் - மேற்குறித்த உரல்களின் எண்ணிக்கைகளை விடப் பன்மடங்கு அதிக அளவில் உள்ள உலக்கைகளை உயர்த்துவார்கள். இப்பெண்களும் பிறரும் இத்திருத்தொண்டில் களைப்புற்ற பின் இப்பெரியர் இடிக்கத் தலைப்படவுள்ளனர். ஆதலின் ஒச்சுவர் என எதிர்காலத்திற் கூறினர்.

உலகங்கள் போதாது என்றே காண அடியவர் கலக்க வந்து நின்றார் - அப்பெரியார்கள் களைப்புற்றால் இப்பணியில் தொடர்ந்து ஈடுபட

அடியவர்கள் பெரும் எண்ணிக்கையில் வந்து நிற்கின்றனர். **காண** - அவ்வாறு வந்து காத்துள்ள அடியவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கின்; **உலகங்கள் போதாது** - அவர்கள் தங்கியிருக்க நில உலகங்கள் பல இருப்பினும் அவற்றிலுள்ள இடப்பரப்பு போதாது என்று கூறும்படி. **என்றே** - என்று கூறும்படி. **கலக்க** - பொற்சுண்ணம் இடிப்போர் சோர்வுறின் தாங்கள் இத்திருத்தொண்டில் கலந்து கொள்ள. **வந்து நின்றார்** - காத்திருக்கின்றார்கள். இவ்வாறு நிற்பவர்கள் இந்நில உலகில் வாழ்ந்து இறந்தபின் சுவர்க்க நரகங்களுக்குச் செல்லுமுன் ஆவியுலகில் வாழும் சிவனடியார்கள்.

அடியோமை நலக்க ஆண்டு கொண்டு சூட நாண் மலர்ப் பாதம் தந்த - **அடியோமை** - ஈண்டுத் தொண்டு செய்யும் இவ்விளமகளிரைக் குறித்து நின்றது. நாண்மலராகிய அடி சூட்டப் பெற்றவர்கள். **நலக்க** - நன்மை பெருகும்படி. "**நலம்**" என்பதனடியாக வந்த வினைச்சொல். மல மாயா கன்ம சம்பந்தமான தீமைகள் அனைத்தும் நீங்கிச் சிவஞானமாகிய நன்மை மிக. **ஆண்டு கொண்டு** - அடிமையாக ஏற்றுக் கொண்டு. **நாண்மலர்** - அன்று காலை மலர்ந்த பூ. **நாள்** - ஈண்டுக் காலைப் பொழுது குறித்து நின்றது. **பாதம்** - செந்தாமரை மலர்கள் போன்ற திருவடிகள். வடிவும் பண்பும் பற்றி வந்த உவமை. "போல" என்ற உவம உருபு தொக்கது. **சூடத் தந்த** - நாண் மலரிலுள்ள தேனையுண்ண வந்து மொய்க்கும் வண்டுகள் போலத் திருமால் முதலிய தேவர்கள் நெருங்க முயல்கின்றனர். இறைவன் அம்மலர்களாகிய திருவடிகளை நாங்கள் சூடிக்கொள்ளும் பொருட்டுத் தந்து விட்டான் என்றவாறு.

மலைக்கு மருமகனைப் பாடிப்பாடி மகிழ்ந்து - **மலை** - இடவாகு பெயராக இமயமலையின் கண்ணுள்ள அம்மலையரசனைக் குறித்தது.

மருமகன் - பார்வதியின் கணவனுகலின் இமவானுக்கு மருமகனுனன். **பாடிப்பாடி** - அடுக்கு பன்முறை குறித்தது. **மகிழ்ந்து** - பாடுவதால் களிப்புற்று.

இத்திருப்பாடலில், இறைவன், தன் நாண்மலர்ப்பாதம் சூடத் தந்தது குறிப்பிடப்படுவதால் மனம் மகிழ்ச்சியால் நிரம்பியது பெற்றும். அவனைப் பன்முறை பாடுவதால் மனம் அம்மகிழ்ச்சியுள் மூழ்கிக் கலந்தது பெற்றும். இதனல் "**ஆனந்த மனேலயம்**" புலனுதல் காண்க.

201. சூடகம் தோள்வளை யார்ப்ப வார்ப்பத்
தொண்டர்கு ழாமெழுந் தார்ப்ப வார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்ப வார்ப்ப
நாமு மவர்தம்மை யார்ப்ப வார்ப்பப்
பாடக மெல்லடி யார்க்கு மங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலை யன்ன கோவுக்
காடப்பொற் சுண்ண மிடித்து நாமே எ

(இ - ள்)

கைவளைகளும் தோள்வளைகளும் பன்முறை ஒலிக்க; அடியார் கூட்டம் எழுந்து ஆரவாரம் செய்ய; பாமர மக்கள் நம்மை ஏளனம் செய்து ஆரவாரம் செய்ய; நாமும் அவர்களை எள்ளி நகையாடி ஆரவாரம் செய்ய; மென்மையான திருவடிகளில் பாடகம் என்னும் அணி கிடந்து ஒலிக்கும் வண்ணம் அணிந்துள்ள உமையம்மையை ஒரு கூற்றிற் கொண்டவனும், எங்கள் மேலான இறைவனும்; பெரிய பொன்மலை போன்ற தலைவனுமாகிய நம் இறைவனுக்குத் திருமஞ்சனம் ஆட; நாமே அழகிய சுண்ணம் இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலுக்கு ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

சூடகம் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்ப - சூடகம் - முன்கைவளை. "இறை" என்றும் கூறுவர். பொன், சங்கு, கண்ணாடி முதலியவற்றால் செய்யப்படுவது. ***தோள்வளை*** - தோளுக்கும் முழங்கைக்கும் இடையில் அணியப்படும் பொன் வளை. இதை, இந்நாளில் சுத்து (சுற்று) வங்கி, நாகமுறி, நெளி என்னும் பெயர்களில் வெவ்வேறு விதமாகச் செய்கின்றனர். பொற்றகட்டை ஒன்றையடுத்து ஒன்றாக மூன்றும் அதற்கு மேற்பட்டும் சுற்றி வரும்படி அமைப்பது சுற்று. வங்கி, ஒரே சுற்றாக உள்ள வளையல், நாகமுறி, படத்துடன் கூடிய நாகப்பாம்பின் வடிவில் அமைப்பது. நெளி, கம்பியாக மேலும் கீழும் இருமுறை நெளிந்து வரும்படி அமைப்பது. இவற்றில் பொன்னாலான சிறு சலங்கைகள், மணிகள், நவமணி வடங்கள் முதலியவற்றை இணைப்பர். ***ஆர்ப்ப ஆர்ப்ப - ஆர்த்தல்*** - ஒலித்தல். உலக்கையை ஓச்சி இடிப்புழி வளையல்கள் ஒன்றுடனொன்று மோதியும், சூடகத்திலுள்ள மணி முதலியவை அசைந்தும், மணிவடங்கள் மோதியும் ஒலி எழுப்பும்.

அவ்வொலி உலக்கை மோதும் ஒலியுடன் ஒன்றிப் பாடலுக்குத் தாளக் கட்டாக அமையும். **ஆர்ப்ப ஆர்ப்ப** என்ற அடுக்கு இடைவிடாமல் வரும் மிகுந்த ஒலி குறித்தது. செயவெனும் வாய்பாட்டு வினையெச்சம் நிகழ்காலத்தில் வந்தது.

தொண்டர் குழாம் எழுந்து ஆர்ப்ப ஆர்ப்ப - ***தொண்டர்*** - 117-ம் திருப்பாடல் உரையில் "விடல் அடியார்" என்றதன் கீழுரைத்தவை காண்க. ***தொண்டர் குழாம்*** - பொற்சுண்ணம் இடித்தலைக் காணவும் பாடுவோருடன் தாமும் கலந்து பாடவும் வந்து கூடியுள்ள அடியார் கூட்டம். ***எழுந்து*** - களிப்பினால் மன எழுச்சி பெற்று. ***ஆர்ப்ப ஆர்ப்ப*** - "நமப் பார்வதி பதயே" "அரஹர மகாதேவா" என்பன போன்ற சிவ நாம முழக்கங்களை எழுப்ப. இவர்கள் ஆர்ப்பது உற்சாகத்தாலும் சுண்ணம் இடிப்போரை உற்சாகப்படுத்தவுமாம்; அஃதோர் தெய்வீகச் சூழ்நிலையைத் தோற்றுவித்தல் காண்க.

நாடவர் நம்தம்மை ஆர்ப்ப - ***நாடவர்*** - அறிவும் பண்பும் குறைந்துள்ள பாமர மக்கள். ***நம்தம்மை*** - நம்மை, பொற்சுண்ணம் இடிக்க வந்துள்ள இளம்பெண்களை. ***ஆர்ப்ப*** - ஏளனம் செய்து ஆரவாரிக்க. இவர்கள் ஆர்த்தல் உலகியல் இன்பங்களை நுகர்தலை விட்டு இளமையை வீணுக்குகின்ற பித்தர்கள் என்ற தங்கள் உள்ளக்கிடக்கையால். இவர்கள் பற்றி முன்னம் போற்றித் திருவகவல் (68-71) லும், 7-ம் திருப்பாட்டிலும் கூறியவையும் அவற்றுக்கான விளக்கங்களிலும் காண்க. ★

நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப - நாம் பாமர மக்களை எள்ளி நகைப்பது "கிடைத்தற் கரிய மானிடப் பேறு பெற்றும் இவர்கள் தவ முயன்று சிவானுபவப் பேற்றை அவாவாது பிறவியை வீணுக்குகின்றனரே என்ற இரக்கத்தாலாகும்.

★" *பேயரே யெனக்கி யாவரும் யானுமோர்*
பேயனே யெவர்க் குமிது பேசியென்
ஆயனே வரங்கா வென்றழைக் கின்றேன்
பேயனா யொழிந்தே னெம்பி ரானுக்கே"

(நாலாயிரதிவ்வியபிரபந்தம் - குலசேகராழ்வார் *3-8*)

"Ignorant and half educated persons everywhere people the world with fools because they are themselves such"

- Sir. John woodroff.

பாடக மெல்லடி ஆர்க்கும் மங்கை பங்கினன் - *பாடகம்* - பாதங்களில் அணியும் கொலுசு போன்று மிகவும் சிக்கலாகப் பின்னப்பட்ட ஓர் அணிகலன். ***மெல்லடி ஆர்க்கும்*** - மென்மையான திருவடிகளில் ஒலிக்கும். ***மங்கை*** - என்றும் மாறு இளமையுடைவள். ***பங்கினன்*** - பேரருளைத் தன் உடலின் ஒரு கூருக உடையவன்.

எங்கள் பராபரனுக்கு - *பராபரன்* - பரம், அபரம் என்ற இரண்டுக்கும் முதல்வனுக இருப்பவன் என்றுரைக்கவும் நின்றது.

ஆடக மாமலை அன்ன கோவுக்கு - ***ஆடகம்*** - மிக உயர்ந்த பொன் வகைகளுள் ஒன்று. இது பற்றி முன்னம் போற்றித் திருவகவல் 90 -ல் "ஆடகம்" என்றதன் கீழுரைத்தவை காண்க. ஆடகப் பொன்னுலான மிகப் பெரிய மலையை ஒத்த தலைவனுக்கு. அம்மலை மேருவரையாகும். மேருமலை வண்ணம், விலைமதிக்க ஒண்ணுமை அளக்கலாக வடிவுடைமை, உலகங்களுக்கெல்லாம் ஆதாரமாய் நிற்றல், சலிப்பின்மை, இயல்பாகவே களிம்பின்மை, வில்லாக நின்றும் தொழிற்படாமலே பகைவர்களை அழித்தல் முதலியவற்றுல் சிவபெருமானுக்கு உவமையாயிற்று. ***கோ*** - அரசன்; தலைவன். கண் என்று கொண்டு எங்களுக்குக் கண் போன்றவனுக்கு எனலுமாம்.

ஆட - திருமுழுக்கு ஆடுவதற்குப் பயன்பட.

திருச்சுண்ணம் இடிக்கும் உண்மைச் சரியை வாய்த்ததால் மனம் மகிழ்ச்சியால் நிரம்பிற்று. அச்சுண்ணத்தால் திருமுழுக்காடுவோனின் தூக்கிய திருவடி நல்கவுள்ள வீட்டின்ப நினைப்பு மனத்தை அம்மகிழ்ச்சிக் கடலுள் ஆழ்த்திற்று. இதனுல் ***"ஆனந்த மனேலயம்"*** புலனுதல் காண்க.

202. வாட்டடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந் திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங் காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மை யிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற் சுண்ணமி டித்து நாமே அ

(இ - ள்)

ஒளியுள்ள அகன்ற கண்களும், இளமையும் நற்குணங்களும் பொருந்திய பெண்களே; கீற்றுக்களுள்ள வளையல்கள் ஒலிக்கவும்; வளவிய கொங்கைகள் விம்மவும், தோள்களில் மூன்று கோடுகளாகத் தீட்டப்பட்டுள்ள திருநீறு பதிந்து விளங்கவும்; "எங்கள் பெருமானே தோத்திரம்" என்று கூறிக் கூறி; காலத்தால் மிகப் பழையதும் செவ்வியால் என்றும் புதியதுமாகிய மலர் போன்ற திருவடிகளைக் காட்டி; நாயினும் இழிந்த நம்மை, இப்பிறப்பிலேயே ஆளாக ஏற்றுக்கொண்ட இயல்புகளைப் பன்முறை பாடி அவன் திருமுழுக்குக்கு நாமே அழகிய சுண்ணத்தை இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலில் இரண்டாம் அடியிலுள்ள "சோத்தெம்பிரான்" என்பதை "எம்பிரான் சோத்தம்" என்று மொழி மாற்றிக் கொள்க. பிறகு பாடல் முழுவதுக்கும் ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

வாள் தடம்கண் மங்கை நல்லீர்- வாள் - ஒளி. 48- ம் திருப்பாடலில் "வாள்" என்றதன் கீழுரைத்த இலக்கண விதி காண்க. இறைவனுக்குச் சுண்ணம் இடிப்பதாகிய உண்மைச் சரியை வாய்த்ததால் வந்த பெருமகிழ்ச்சி, கண்களில் ஒளி வீசச் செய்தது. *வாள்* - வாள் போன்ற கூரிய எனலுமாம். *தடம்கண்* - அகலமான விழிகள். 155-ம் திருப்பாடலுரையில் "தடங்கண்" என்றதன்கீழ் எடுத்துக்காட்டிய இலக்கண விதி காண்க. ஒளியும் கூர்மையும் பெற்ற அலகமான கண்கள் இளம்பெண்களுக்கு அழகு செய்வன. *மங்கை* - இளமைப் பருவம் குறித்தவாறு. *நல்லீர்* - நற்குணங்களுள்ளவர்களே; அழகுடையவர்களே எனலுமாம். பின்வரும் திருப்பாடல்களிலும் இவ்வாறே கொள்க.

வரிவளை ஆர்ப்ப வண் கொங்கை பொங்க - வரிவளை - கீற்றுக்கள் உள்ள வளையல்கள். *ஆர்ப்ப* - ஒலிக்க. முன்பாட்டில் "சூடகம் ஆர்ப்ப ஆர்ப்ப" என்றதன் கீழுரைத்தவை பார்க்க. *வண்கொங்கை* - நல்லமைப்பில் வளர்ந்த நகில்கள். *பொங்க* - பூரிக்க. புளகம் கொள்ள எனலுமாம். அஃது ஏற்றுள்ள பணியின் மகிழ்ச்சியாலெய்தியது.

தோள் திரு முண்டம் துதைந்து இலங்க - "திருநீறு" எனும் வினைமுதல் வருவித்துத் திருநீற்றின் மூன்று கோடுகள் தோள்களில் பதிந்து விளங்க என்று உரைத்துக் கொள்க. *தோள்* - திருநீறு நீரில் குழைத்து மூன்று கோடுகளாக இட்டுக் கொள்ள வேண்டிய இடங்கள் பன்னிரண்டில் இரு தோள்களும் அடங்குவன நினைக. *முண்டம்* - "புன்றம்" என்றதன் திரிபு. புன்றம் - பூச்சு. திரிபுன்றம் என்பது திரிபுண்டரம் எனவாயிற்று.

முண்டம் - ஈண்டுச் சிவச் சின்னமாதலின் "திரு" என்னும் அடை புணர்த்தார். **துதைந்து இலங்குதல்** - பதிந்து விளங்குதல். அணிந்துள்ளோர் தோள்களில் மட்டுமன்றிக் காண்போர் கண்களிலும் கருத்திலும் நிலைபெற்று அருள் விளக்கம் செய்வதுமாம். சரியைத் தொண்டுகளில் ஈடுபடுமுன் அனுட்டானம் முடித்துச் சிவச் சின்னங்கள் தரித்த கோலத்துடன் பணி தொடங்க வேண்டும் என்ற விதி நினைக.

எம்பிரான் சோத்தம் என்று சொல்லிச் சொல்லி - *சோத்தம்* - தாழ்ந்தவன் உயர்ந்தவனுக்குச் செய்யும் வணக்கம் குறிக்கும் மொழி. "தோத்திரம்" என்னும் சொல்லாக இன்று கிருத்துவ சமயத்தாரிடையும் வழக்கிலுள்ளது.

*"புறங்காட்ட லாகாப் பொருண்மையாம் **சோத்தம்***
அறங்காட்டுஞ் செந்நெறிமாண் பஃதாம் - திறங்காட்டும்
மேலோர் திருமுன்னு மேயு மிகத் தாழ்ந்தோர்
பாலாத் தொழலொருக்க ணித்து"

எனும் பழம்பாடல் நினைக. முன்னம் 148-ம் திருப்பாடலில், "சோத்தெம்பிரான்" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

நாட்கொண்ட நாண்மலர்ப் பாதம் காட்டி - *நாட்கொண்ட* - காலத்தால் தொன்மையுடைய எல்லாவற்றுக்கும் தொன்மையான. முன்னம் 163-ம் திருப்பாடலில் "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. *நாண்மலர்* - அன்று காலையில் பூத்த புதிய மலர். *நாள மலர்* - *நாள*- என்பதிலுள்ள அகரம் தொகுத்தலாயிற்று எனக்கொண்டு தாமரை மலர் எனலுமாம். *நாளம்* - தாமரைத்தண்டு. ஈண்டுத் தாமரை மலர் போன்ற பாதம் என்று பொருள் கொள்க. *காட்டி* - ஞானத்தைக் காட்டி எனலுமாம்.

நாயிற் கடைப்பட்ட நம்மை - முன்னம் சிவபுராணம் 60-ல் "நாயிற் கடையாய்க் கிடந்த அடியேன்" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

இம்மை - இப்பிறவிலேயே. பிரிநிலை ஏகாரம் தொக்கது.

ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி - *வண்ணங்கள்* - ஈண்டுத் திருவளின் உருவகமாக நின்றது. *கொழுநன்* - கணவன்.

இயல்புகள். அவை, ஆட்கொள்ளப் பெறும் ஆன்மாக்கள் ஒவ்வொன்றன் பக்குவத்துக்கேற்றவாறு பல்வேருக அமையும். *பாடிப்பாடி* - வண்ணங்கள் பலவாகலின் அவற்றைப் புகழ்ந்து பாடுதலும் பல்வேறு வகைகளாகவும் இடைவிடாமலும் நிகழ்ந்தவாறு.

ஆட - இறைவன் திருமுழுக்காடும் பொழுது பொற்சுண்ணம் ஆடுவதற்காக.

இத்திருப்பாடலில் இறைவன் ஆட்கொள்ளும் வண்ணங்கள் பலவற்றை ஒவ்வொன்ருகப் பாடி வரும்பொழுது மனத்தில் பெருங்களிப்பு முகிழ்த்துப் பெருகிக் கொண்டே வருகின்றது பெற்ரும். பாடும் பணி முடிவின்றித் தொடர மனம் அக்களிப்பினுள் மூழ்கி மறைந்து விடுகின்றது. இதனுல் "*ஆனந்த மனேலயம்*" புலனுதல் காண்க.

203. வையக மெல்லா முரல தாக
மாமேரு வென்னு முலக்கை நாட்டி
மெய்யெனு மஞ்ச ணிறைய வட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொ னுலக்கை வலக்கை பற்றி
ஐய னணிதில்லை வாண னுக்கே
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே கூ

(இ - ள்)

நில உலகம் முழுவதும் ஓர் உரலாகவும், மகா மேருமலை உலக்கையாகவும் கொண்டு; உண்மை எனும் மஞ்சளை நிறையப் பெய்து; மேன்மை தங்கிய அழகிய நல்ல திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ளவனின் செம்மையான திருவடிகளைப் பல கால் பாடிச் செம்பொன்னுலாகிய உலக்கையை வலக்கையில் எடுத்துத் தலைவணுகிய, அழகிய தில்லையில் வாழ்பவன் திருமுழுக்குக்காக, அழகிய பொற்சுண்ணத்தை நாமே இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலுக்கு ஆற்ருெழுக்காகப் பொருள் காண்க.

வையகம் எல்லாம் உரலது ஆக - பொற்சுண்ணம் இடிக்கத் தொடங்கும் தோகையர் உள்ளத்தில் சிவபத்தியின் மிகுதியால் சில எண்ணங்கள் முகிழ்க்கின்றன. அவற்றுக்கு அவர்கள் கற்பனையால் சில அமைதி காண முயல்கின்றனர். சொரூப நிலையில் சிவபெருமான் யாண்டும் நிறைந்து, பிறவனைத்தையும் தன்னுள் வியாப்பியமாக அடக்கிக் கொண்டுள்ளான். உலகங்கள் அனைத்தும் மாயையின் ஒரு பகுதியினின்றும் தோன்றும் காரியங்களே. அத்துணைப் பெரிய மாயையும் சிவ வியாபகத்துள் அடக்கம். அத்துணைப் பேருருவினனான இறைவன் திருமுழுக்குக்கு வேண்டிய சுண்ணம் மிகப் பெரும் அளவில் வேண்டும். அதை இடிப்பதற்கான கருவிகளும் மிகப் பெரியனவாக அமைதல் வேண்டும். ஈண்டு நம் கட்புலனுக்குத் தெரியும் மிகப் பெரிய பொருள் இந்த நில உலகமே. இதன் பரப்பளவு முற்றும் குழிக்கப்பட்டும் விளிம்பாகவும் கொண்ட ஓர் உரலாக அமைக்கப்பட வேண்டும். இது கற்பனையின் தொடக்கம். ***வையகம்*** - நில உலகம். ***எல்லாம்*** - இதன் பரப்பளவு முற்றும். ***உரலது ஆக*** - உரலாக. ***அது*** - பகுதிப் பொருள் விகுதி.

மாமேரு என்னும் உலக்கை நாட்டி - இஃது அடுத்த கற்பனை. இத்துணைப் பெரிய உரலுக்குத் தக்க உலக்கை வேண்டும். அஃது இந்த உலகின் ஆதாரமாகத் திகழும் பெரிய மேரு மலையே. ***மாமேரு*** - ***மா*** - பெரிய. பெருமை மிக்க எனலுமாம். ***உலக்கை*** - இருவர் நின்று இடிப்பதற்கு இரு உலக்கைகள் வேண்டுமன்றோ. மேருமலையாகிய ஓர் உலக்கையும் அதே அளவில் மற்றோர் உலக்கையும் என இரு உலக்கைகள் என்க. ***உலக்கை*** - பால்பகா அஃறிணையாக இரு உலக்கைகள் குறித்து நின்றது. ***நாட்டி*** - நிறுவப்பட்டு. ஐம்பூதங்களில் ஒன்றாகிய மண்ணின் நிறம் பொன். ஆகலின் உரல் பொன்னாலாயது; உலக்கையாகிய மேருமலையும் பொன்மலை. இதனையே பின்னரும் "செம்பொன் உலக்கை" என்றார். பொன்னார் மேனியனுக்குப் பொன்னுரலில் பொன்னுலக்கையால் பொற்சுண்ணம் இடித்தலே பொருத்தமானது என்றவாறு.

மெய் எனும் மஞ்சள் நிறைய அட்டி - சுண்ணம் இடித்தற்கு வேண்டிய மூலப் பொருள்களை உலகமாகிய அவ்வுரல் நிரம்பும்படி மிகுதியாகப் பெய்து. ***மெய்*** - ஈண்டுப் பண்பாகு பெயராக உண்மை அன்பைக் குறித்தது. அது, பதிபுண்ணியப் பயனை உயிர்கள் நுகரும் வழியில் எய்தும் "கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலாகிய" சிவபத்தியேயாகும்.

மஞ்சள் - மங்கலம் பற்றி மூலப் பொருள்களில் ஒன்றான மஞ்சளை மட்டும் கூறினாராயினும் இனம் பற்றி ஏனைய பொருள்களையும் கொள்க.

அவ்வாறே சிவபத்தியுடன் அதன் வெளிப்பாடான அடியார்களின் அக இலக்கணம், புற இலக்கணம் ஆகியவற்றையும் உடன் கொள்க. *நிறைய அட்டி* - திரவிய உலோபமின்றி என்றவாறுமாம்.

மேதகு - இறைவனின் மேன்மைக்குத் தகுந்த வண்ணம் எனலுமாம்.

செய்ய திருவடி பாடிப்பாடி - *செய்ய திருவடி* - செந்நிறமான திருவடி, உயிர்களைச் செம்மை செய்யும் திருவடி; இனிச் செம்மை செய்ய வேண்டாது திருத்தமாக உள்ள திருவடி என உரைக்க நின்றது. *பாடிப்பாடி* - முன்பாட்டில் "ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி" என்றதன் கீழுரைத்தவை காண்க.

செம்பொன் உலக்கை வலக்கை பற்றி - *செம்பொன் உலக்கை* - உயர்ந்த பொன்னுலாகிய உலக்கை என்றும், உயர்ந்த பொன்னணிகளால் ஒப்பனை செய்யப்பட்ட உலக்கை என்றும் உரைக்கநின்ற நயம் காண்க. *வலக்கை பற்றி* - இடித்தற்கு உலக்கையை இருகைகளாலும் பற்றுதல் வேண்டும். ஆயினும் நற்செயல் தொடங்குவோர் முதலில் வலது கையால் எடுத்துப் பின் இருகைகளாலும் பற்றித் தொழில் செய்தல் வேண்டும் என்னும் மரபு நினைக. *வலக்கை* - மாமேருமலையாகிய உலக்கையைத் தூக்கி இடிக்க மிக வலிமை வேண்டும்; ஆதலின் *வலக்கை* - வலிமையுடைய கை என்க. எத்துணை வலிமை வாய்ந்ததாக இருப்பினும், மாமேரு மலையைத் தூக்கி தொழில் செய்தல் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகும். ஆதலின் ஈண்டு வலக்கை என்றது இறைவனின் வலக்கை. அதனால் பற்றி எடுத்துப் பின்பு அவன் வலம், இடம் ஆகிய இருகைகளாலும் இடித்தல் என்பது கற்பனை. இடிப்பவர்கள், சிவோகம் பாவனையால் சிவமாகவே நின்று இடிக்கின்றனர் என்றவாறு. இஃது உலகமாகிய உரல் மேருமலையாகிய உலக்கை, அளவிட முடியாததாகிய சிவபக்தி முதலியவற்றுக்கும் பொருந்த அமைதல் காண்க. இறைவனின் வலக்கை ஞானமும், இடக்கை ஆற்றலும் குறித்து நின்றன. ஞானம் நெறிப்படுத்த ஆற்றல் தொழிற்படும் என்றவாறு. சிவவழிபாட்டுக்கு வேண்டிய சுண்ணத்தைச் சிவபெருமானே இடித்தல் என்ற கற்பனை "அவனருளாலே அவன்றாள் வணங்கி" (சிவபுராணம் 18) என்று முன்னம் அருளியதுடன் பொருந்துவது நினைக.

வலக்கை - *வலம்* - வெற்றி. *கை* - ஒழுக்கம். செய்யும் செயல் வெற்றி பெற வேண்டும் என்ற ஒழுக்கம் பற்றி எனலுமாம்.

ஐயன் அணிதில்லை வாணனுக்கே ஆட - ***ஐயன்*** - தந்தை, தலைவன், அழகுள்ளவன்; நுண்ணியன். ***அணிதில்லை*** - ஐயன் எழுந்தருளியுள்ளதால் தில்லை அணி பெறுகின்றது. ***வாணன்*** - வாழ்நன்; வாழ்பவன். ***வாணனுக்கே*** - ஏனையோரினின்றும் பிரித்துத் தில்லைவாணன் ஒருவனே வழிபடத் தக்கவன் என ஏகநாயக வழிபாட்டை வலியுறுத்தலின் ஏகாரம் பிரிநிலையாயிற்று.

மகாதேவனின் மாண்புக்குத்தகச் சுண்ணம் இடிக்கும் தொழிற் கருவிகளும் மூலப் பொருள்களும் மிகப் பெரியனவாக அமைதல் வேண்டும் என்ற கற்பனையில் மனம் மகிழ்ச்சியால் நிரம்பிற்று. இடிக்கும் தங்கள் சிவோகம் பாவனையால் மனம் அம்மகிழ்ச்சியுள் ஆழ்ந்து மறைந்தது. இதனால் "***ஆனந்த மனோலயம்***" புலனாதல் காண்க.

204. முத்தணி கொங்கைக ளாட வாட
மொய்குழல் வண்டின மாட வாடச்
சித்தஞ் சிவனொடு மாட வாடச்
செங்கயற் கண்பனி யாட வாடப்
பித்தெம்பி ரானொடு மாட வாடப்
பிறவி பிறரொடு மாட வாட
அத்தன் கருணையொ டாட வாட
ஆடப்பொற் சுண்ண மிடித்து நாமே கo

(இ - ள்)

முத்துமாலையணிந்த நம் கொங்கைகள் பலமுறை குலுங்கவும்; நம் நெருங்கிய கூந்தலின்கண் வண்டின் கூட்டம் பன்முறை சுழலவும்; நம் மனம் சிவபெருமானொடும் தொடர்ந்து பொருந்தி நிற்கவும்; செவ்வரி படர்தவையும் கயல் மீன்கள் போன்றவையுமான நம் விழிகளில் கண்ணீர் தொடர்ந்து சிந்தவும்; நம் பேரன்பு நம் பிரானுடன் தொடர்ந்து பொருந்தி நிற்கவும்; சிவநெறிக்கு மாறானவருக்குப் பிறப்பிறப்பு தொடர்ந்து நிகழவும்; நம் தந்தையாகிய சிவபெருமான் உயிர்கள் மாட்டு வைத்துள்ள பேரருளினால் இயற்றும் திருவைந்தொழிற் கூத்து தொடர வேண்டிக் கொண்டு அவன் திருமஞ்சனம் ஆடுதற்கு அழகிய சுண்ணத்தை நாமே இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலுக்கு ஆற்றொழுக்காகப் பொருள் காண்க.

முத்து அணி கொங்கைகள் ஆட ஆட - முத்து - சிப்பி முத்துக்களாலான மாலைகள். முத்தின் சிறப்புக்கள் பற்றி முன்னம் போற்றித் திருவகவல் 122-ல் "முத்தன்" என்றதன் கீழுரைத்தவை காண்க. ***அணி*** - அணிந்துள்ள. முத்து மாலைகள் அணிந்துள்ள கொங்கைகள் குலுங்க. முத்து மாலைகளும் கொங்கைகளும் ஆட எனலுமாம். இவற்றின் அசைவு சுண்ணம் இடிக்கும்பொழுது நிகழும் உடலசைவுகளால் நிகழ்வன. ***ஆட ஆட*** - அடுக்கு பன்முறை நிகழ்வது. பின்வருவனவற்றிலும் இவ்வாறே கொள்க.

மொய்குழல் வண்டு இனம் ஆட ஆட - மொய் குழல் - நெருங்கிய கூந்தல். சுண்ணம் இடிக்கும் மகளிரின் இளமை குறித்து நின்றது. ***வண்டு இனம்*** - வண்டுகளின் கூட்டம்; வண்டு, தேன், சுரும்பு, ஞிமிறு முதலிய பல்வேறு பிரிவுகளுள்ள வண்டுகளின் கூட்டம். அவை கூந்தலின் இயற்கை மணத்தாலும் மலர்கள் மயிர்ச்சாந்து முதலியவற்றின் மணத்தாலும் ஈர்ப்புண்டு வந்து மொய்த்தவை. சுண்ணம் இடிக்கும் பொழுது நிகழும் தலை அசைவால் அவை மேலெழுந்து சுழன்று ஆரவாரம் செய்தன. இடிக்கும் பணி தொடர்தலின் அவற்றின் ஆரவாரமும் தொடர்வதாயிற்று. முன்னம் 168 -ம் திருப்பாடலில் "கோதை குழலாட வண்டின் குழாமாட" என்றருளியதும் ஆண்டுரைத்தவையும் காண்க.

சித்தம் சிவனொடும் ஆட ஆட - சித்தம் - ஈண்டு மனம் என்ற பொருளில் வந்தது. அது நொடிப்பொழுதில் பல்வேறு பொருள்களைப் பற்றியும் விட்டும் பல்வேறிடங்கள் திரிவது. ஈண்டு அவ்வாறன்றிச் சிவபெருமானுடன் மட்டும் தொடர்ந்து பொருந்தி நின்றது என்றவாறு. "சித்தம் சிவபெருமானைத் தீண்டி மகிழ" என்பது கவியரசு அவர்களின் உரைக்குறிப்பு.

செம் கயல் கண் பனி ஆட ஆட - செம் கயல் கண் - செவ்வரி படர்ந்தனவும் கயல் மீன்கள் போன்ற வடிவினவுமான விழிகள். அழகிய விழிகளின் அமைப்புக் குறித்தவாறு. ***பனி*** - பனித்தல் - சிந்துதல். கண்களில் கண்ணீர் தொடர்ந்து முத்து முத்தாகச் சிந்த என்றவாறு. இஃது ஆனந்தக் கண்ணீர்.

பித்து எம்பிரானொடும் ஆட ஆட - பேரன்பு நம்மைப் பிரியாத நம் இறைவனுடன் தொடர்ந்து பொருந்தி நிற்கவும்; ***பித்து*** - கடவுள் மால். மிக உயர்ந்த சிவபக்தி.

முத்து, கொங்கைகள், மொய்குழல், சித்தம், செம்கயல்கள், பித்து - என்ற ஒவ்வொன்றன் முன்பும் "நம்" என்ற சொல்லைப் புணர்க்கவும்.

பிறவி பிறரொடும் ஆட ஆ -*பிறர்* -சிவநெறிக்குப் புறம்பானவர்கள். அவர்கள் புறம் புறப்புறம் என்ற சமயநெறியினர். அவர்களும் அகப்புறம், அகம் என்ற நெறியினரும் பன்முறை பிறந்து இறந்து இளைப்பர். முடிவில் சித்தாந்த சைவ நெறியில் நின்று வீடுபெறுவர். முன்னம் போற்றித் திருவகவல் 42-ல் "தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி" என்ற பகுதியின் விளக்கத்தில் எடுத்தாண்ட சிவஞான சித்தியார் சுபக்கம் சூத் 8 - அதி.2 - செய்யுள் 11 - பார்க்க.

அத்தன் கருணையொடு ஆட ஆட - *அத்தன்* - தந்தை. *கருணையொடு* - அவன் ஆடுவதற்குக் காரணம் அநாதி கேவல நிலையிலுள்ள உயிர்கள் முதல், நாத தத்துவத்திலுள்ள புவனங்களை விரும்பிச் சிவதீக்கை பெற்று நாத மூர்த்தியை வழிபட்டு அதிகார மல வாசனையு நீங்கிச் சூக்கும மலவாசனை மாத்திரமுள்ள உயிர்கள் வரை நிலவும் எண்ணற்ற உயிர்கள் படிமுறையில் மலபரிபாக முற்று முன்னேறி வீடுபேறெய்த வேண்டும் என்ற பேரருளேயாம். *ஆட ஆட* - இவ்வாறு அவன் இயற்றும் திருவைந் தொழிற் கூத்துத் தொடர்ந்து நிகழ.

கருணை என்பது அவனது பேரருள். அவன் ஆடுவது பேரருளினுல் என்க.

கொங்கைகள் குலுங்கலும், வண்டு எழுந்து சுழன்று ஆரவாரம் செய்தலும் பொற் சுண்ணம் இத்தலால் தோன்றும் நிகழ்ச்சிகள். சித்தத்தைச் சிவன்பால் வைத்தலும் கண்ணீர் அரும்பலும் சிவபத்தியின் முதிர்ச்சியால் நிகழ்வன என்று காரண காரிய முறையாக அமைந்துள்ளமை காண்க.

ஈற்றடியில், "*ஆட ஆட ஆட*" என்று மும்முறை அடுக்கி வருவதில் "*ஆட ஆட*" என்பதைத் திருவைந் தொழில்கள் தொடர்ந்து நிகழ என்றும்; அடுத்து வரும் "*ஆட*" என்பதை "இறைவன் திருமுழுக்காடுவதற்கு" என்றும் பொருள் கொள்க.

இத்திருப்பாடல், உண்மைச் சரியைத் தொண்டில் திளைக்கும் மனத்தில் மகிழ்ச்சி தோன்றிப் படிப்படியாகப் பெருகி உள்ளத்தில் நிறைவதையும், அடுத்துச் சித்தம் சிவனொடும் பொருந்துவதால் மனம் அம்மகிழ்ச்சிப் பெருக்கில் மூழ்கி மறைந்து விடுவதையும் கூறுகின்றது. இதனுல் "*ஆனந்த மனோலயம்*" புலனுதல் காண்க.

205. மாடு நகைவா ணிலாவெ றிப்ப
வாய்திறந் தம்பவ ளந்து டிப்பப்
பாடுமின் நந்தம்மை யாண்ட வாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமி னெம்பெரு மானைத் தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமி னம்பலத் தாடி னுக்
காடப்பொற் சுண்ண மிடித்து நாமே கக

(இ - ள்)

இறைவன், நம்மை ஆளாகக் கொண்ட முறைமையையும்; நம் தொண்டுகளை ஏற்றுக் கொண்ட வகையையும்; அழகிய பவளம் போன்ற உதடுகள் துடிக்கும் வண்ணம்; வாய்திறந்து பற்களின் ஒளி உதடுகளின் பக்கத்தில் தண்கதிர் வீசும் வண்ணம் பாடுங்கள்; அவ்வாறு இடைவிடாது பாடி நம் இறைவனைத் தேடுங்கள்; தேடியும் அவன் கிட்டானாயின் திகைப்படைந்து பிறகு தேற்றமுற்று மனத்தில் களிப்பு சிறந்து விளங்கும் படி கூத்தாடுங்கள்; ஆடரங்கில் திருவைந்தொழில் நடனம் புரிந்தானுக்குத் திருமுழுக்காடும் பொருட்டு அழகிய சுண்ணத்தை நாமே இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலை, "நம் தம்மை ஆட்கொண்டவாறும்; பணி கொண்ட வண்ணமும்; அம்பவளம் துடிக்க வாய் திறந்து; நகைவாள் மாடு நிலா எறிப்பப் பாடுமின்; பாடிப்பாடி எம் பெருமானைத் தேடுமின்; தேடித் திகைத்துத் தேறிச் சித்தம் களிப்ப ஆடுமின்; அம்பலத்து ஆடினுக்கு ஆடப் பொற்சுண்ணம் நாமே இடித்தும்" - என்று அன்னுவயம் செய்து கொண்டு பிறகு பொருள் காண்க.

நம் தம்மை ஆட் கொண்டவாறும் - *நம் தம்மை* - திருமால் முதலிய பெருந்தேவர்கள் காணவும் முடியாமல் ஏங்கி நிற்க. ஒன்றுக்கும் பற்றாத நம்மை. *நம் தம்மை* - நம்மை; *தம்* - சாரியை. *ஆட்கொண்டவாறும்* - தானே நம்மைத் தேடி வந்து அடிமைகளாகக் கொண்ட வழியையும். *உம்மை* - எதிரது தழுவிய எச்சம்.

பணி கொண்ட வண்ணமும் - நம் பக்குவங்களுக்கேற்ற உண்மைச் சரியை முதலிய தொண்டுகளில் நம்மை ஈடுபடுத்தி அவற்றைப் பதி புண்ணியங்களாக ஏற்றுக் கொண்ட வகையையும்.

அம்பவளம் துடிப்ப வாய் திறந்து - பவளம் - பவளம் போன்ற உதடுகள். உவமையாகு பெயர். ***அம்*** - அழகிய. இதைப் பவளம், உதடுகள் என்ற இரண்டுக்கும் அடையாக்குக. ***துடிப்ப*** - துடிக்கும் வகையில். பாடுவற்காக வாய் திறக்க முயலுமுன்பே உள்ளம் பரவசமடையத் தொடங்கும் நிலை குறித்தது. "இதழ்கள் துடித்தல்" அடியார்களின் அகத்திலக்கணங்களில் ஒன்று என்பதை முன்னம் போற்றித் திருவகவல் 61-ல் "உடல் கம்பித்து" என்றதன் கீழ் விளக்கினும். *"வாய் திறந்து"* - இறைவன் புகழைப் பாட வேண்டும் என்ற உந்துதல் பரவச நிலையை ஒருவாறு மீதூர்ந்து நிற்கப் பாடத் தொடங்கினமை குறித்தவாறு. பரவச நிலையில் ஐம்பொறிகள் உலகியலை ஒதுக்கினும் சிவ சம்பந்தமான செயல்களில் ஈடுபடும்என்பதைக் காளத்தியப்பருக்குக் கண்ணப்ப நாயனுர் புரிந்த ஆறுநாள் திருத்தொண்டுகளிற் காண்க.

நகை வாள் மாடு நிலா எறிப்ப - அவ்வாறு பாட வாயைத் திறந்ததும் பற்களின் ஒளி வீசுதல் முதலில் நிகழ்வதாகும். ***நகை*** - ஈண்டுத் தொழிலாகு பெயராக நகைக்கும் பற்களை உணர்த்திற்று. ***வாள்*** - ஒளி. அது பற்களினின்றும் வெளியில் வீசுவதாகும். ***மாடு*** - பற்களை அடுத்துள்ள உதடுகளின் பக்கங்களிலும் வெளியிலும். ***மாடு*** - பக்கம். ***நிலா எறிப்ப*** - தண்கதிர்ச் செல்வனின் கதிர்கள் போன்று குளிர்ந்த ஒளியைப் பரப்ப.

பாடுமின் - இறைவன் புகழ்சேர் பொருளைப் பண்ணுடன் கூடிய இசையால் பாடுங்கள். பரவச நிலையில் நிகழும் இதழ்கள் துடிப்பதினின்றும் மீண்டு பவளம் போன்ற உதடுகளைத் திறந்து பற்கள் குளிரொளி கால இறைவன் புகழைப் பாடித் துதியுங்கள் என்றவாறு.

பாடிப்பாடி எம்பெருமானைத் தேடுமின் - இறைவனின் எண்ணற்ற புகழ்களைப் பல்வேறு பண்களில் இடைவிடாது பாடுங்கள். ***பாடிப்பாடி*** - அவ்வாறு இடைவிடாமல் பாடுவதையே இறைவனை எய்தும் நெறியாகக் கொண்டு. ***எம்பெருமானை*** - இறைவன் தானே வலிய வந்து ஆட்கொண்டமையின் ***எம்*** - என்ற உரிமை பாராட்டியவாறு. ***தேடுமின்*** - புறத்தே "காடும் காவும் கவின் பெறு துருத்தியும்" நாடும் நகரும் நற்றிருக் கோயில்களிலும் அகத்தே சிதாகாயத்திலும் எம்பெருமான் இருப்பைக் காணத் தவமுயலுங்கள்.

தேடித் திகைத்துத் தேறி - தேடித் திகைத்து - எண்ணற்ற வழிகளில்அவனைத் தேடிய முறை முன்னம் திருவண்டப் பகுதி 125 முதல் 141 வரையுள்ள பகுதிகளில் அருளிச் செய்தார். ஆண்டுரைத்தவை பார்க்க. ***திகைத்து*** - அத்தேடுதல் முயற்சிகளில் வெற்றி பெருமையால் என் செய்வது என்று அறியாமல் திகைப்படைந்து. ***தேறி*** - தொடர்ந்து பல காலம்

தேடிக்கொண்டிருப்பின் ஒரு நாள் அவனை நாம் காண்பது உறுதி என்ற முடிவுக்கு வந்து திகைப்பினின்றும் மீண்டு மனம் தேறி. ஈண்டு, 13-ம் திருப்பாடல் உரையில் எடுத்தாண்ட அரசுகள் தேவாரம் நினைக.

இறைவனைக் காண மேற்கொள்ளும் தவத்தால் உடனே அவனைக் காண இயலாது போயினும் அத்தவம் வீணுவதில்லை. அஃதும் அதனை தொடர்ந்து செய்யும் தவங்களிலும் உள்ள ஒவ்வொரு சிறு பகுதியும் மலப் பிணிப்பைச் சிறிது சிறிதாகத் தளர்த்தி வரும். அஃது இறுதியில் மலம் முற்றும் நீங்கும் நிலையில் உய்க்கும். அப்பக்குவம் எய்தியதும் இறைவனைக் காணலாம் என மனம் *தேறி* என்றவாறு.

சித்தம் களிப்ப - இவ்வாறு தேடுவதால் என்றேனும் ஒரு நாள் இறைவனைக் காணலாம் என்ற உறுதியாலும், இப்பொழுது நாம் மேற்கொண்டுள்ள **தேடுதல்** அந்நிலைக்கு ஏறிச் செல்லும் படிகளாதலின் அவனை நோக்கி முன்னேறுகின்ரேம் என்ற நினைவாலும் "மனம் களிப்ப" என்றவாறு.

ஆடுமின் - அவ்வாறு வந்த மகிழ்ச்சியால் கூத்தாடுங்கள். இது பெருங்களிப்பால் நிகழ்வது. முன்னர் 35-ம் திருப்பாடலில் ***ஆடுகின்றிலை கூத்து*** - என்றருளியதும் அதன் கீழுரைத்தவையும் காண்க.

அம்பலத்து ஆடினனுக்கு - ***அம்பலம்*** - தில்லையிலுள்ள ஆடரங்கு. ***ஆடினன்*** - திருவைந் தொழிற் கூத்தியற்றுபவன். ***ஆடினன்*** - என இறந்த காலத்திற் கூறினரேனும் முக்காலத்துக்கும் கொள்க. திருவைந் தொழில் அநாதியாகவே என்றும் முடிவின்றி நிகழ்வதாம் என்பது மனம் கொள்க.

இத்திருப்பாடலில், இறைவனைத் தேடும்பணியில் மனம் மகிழ்ச்சியால் நிரம்புதல் பெற்ரும். பின்னர் நேர்ந்த திகைப்பினின்றும் மீண்டு பரவசமாகி ஆடுதல் கூறப்படுதலின் மனம் அக்களிப்பில் ஆழ்ந்து மறைதல் பெற்ரும். இவற்ருல் "**ஆனந்த மனோலயம்**" புலனுதல் காண்க.

206. மையமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
ஐயனை யையர்பி ரானை நம்மை
அகப்படுத் தாட்கொண் டருமை காட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொ டித்தோட்
பையர வல்குன் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே. கஉ

(இ - ள்)

மலர்கள் போன்றவையும், செவ்வரி படர்ந்தவையுமாகிய இரு விழிகளையும்; பொன்னாலாகிய வளையல்களை அணிந்த தோள்களையும் பாம்பின் படத்தை ஒத்த அல்குலையும் நற்குணங்களையும் கொண்ட இளம் பெண்களே; நீல வண்ணம் பொருந்திய கண்டனை; விண்ணுலகவாசிகளின் அமுதத்தை; செம்மணிமன்றில் நடனம் புரிபவனை; அழகனை; தலைவர்களுக்கெல்லாம் தலைவனாகிய பிரானை; நம்மைத் தன் திருவருளில் பொதியவைத்துத் தன் ஆளாக்கித் தன் அருமையை உணரச் செய்பவனை; பொய்யர்களுக்குப் பொய்யனை; மெய்யர்களுக்கு மெய்யனை இசையால் வழுத்தி அழகிய திருச்சுண்ணத்தை நாமே இடிப்போம்.

(வி - ரை)

இதிருப்பாடலிலுள்ள, "போதரிக்கண்ணினைப் பொற்றொடித் தோள் பையர வல்குன் மடந்தை நல்லீர்" என்பதைப் பாடலின் முதலில் அமைத்துக் கொள்க. "அதில்" "பைரவல்குல்" என்பதை "அரவுப்பை அல்குல்" என மொழி மாற்றிக் கொள்க. பிறகு பாடல் முழுவதுக்கும் பொருள் காண்க.

போது அரிக்கண் இணை பொற்றொடித் தோள் - போது - ஈண்டுச் செந்தாமரை மலரைக் குறித்து நின்றது. அது, வண்ணத்தாலும், வடிவாலும் இளமகளிர் கண்களை ஒத்தது. ***அரி*** - கண்களில் படர்ந்துள்ள செந்நிற இரேகைகள். செந்நிறம், விழிகளில் படர்ந்துள்ள மிக மெல்லிய குருதிக் குழாய்களின் புறத்தே புலனாகும் குருதியின் நிறத்தாலயது. அது மிகச்சிறந்த அழகுள்ள இளம்பெண்களின் உறுப்பிலக்கணங்களுள் ஒன்று. ***இணை*** - ஒரு கண்ணுக்கு மற்றொரு கண்ணே ஒப்பாக உள்ள எனலுமாம். ***பொன்தொடி*** - பொன்னாலாகிய வளையல். ஈண்டுத் தோள்வளை குறித்து நின்றது. முன்னர் 201-ம் திருப்பாடலில் "தோள்வளை" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

அரவுப்பை அல்குல் மடந்தை - அரவு - ஈண்டு, நாகப் பாம்பு குறித்து நின்றது. ***பை*** -பாம்பின் படம். நஞ்சு இருக்கும் பைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளமையின் பாம்பின் படம் ***பை*** என்று குறிக்கப்பட்டது. ஆறும் வேற்றுமைத் தொகை. ***அல்குல்*** - மனித உடலில் ஆண் பெண் இருபாலர்க்கும் இடுப்பின் வலப்புறமிருந்து இடப்புறம் வரையும் சென்று பின்னர் இருபுறங்களிலுமிருந்து கீழிறங்கி முழந்தாளில் கூடும் முக்கோண வடிவமான பகுதி. இதற்கு முக்கோண வடிவமான பாம்பின் படத்தை வடிவு பற்றி உவமை கூறுதல் கவிமரபு. ***மடந்தை*** - பதினான்கு வயது முதல் பத்தொன்பது வயது முடிய உள்ள இளம்பெண்.

மை அமர் கண்டனை வான நாடர் மருந்தினை - மை - பண்பாகு பெயராக ஈண்டு ஆலகால நஞ்சின் கருநிறம் உணர்த்திற்று. ***அமர்*** - அருந்திய நஞ்சு உள்ளும் செல்லாமல் புறத்தும் உமிழப்படாமல் கழுத்திலேயே நிலையாகப் பொருந்தி இருக்கும். ***கண்டனை*** - கழுத்துடையவனை. நீலகண்டம் இறைவனின் பேரருளையும் வரம்பிலாற்றையும் உணர்த்தி நிற்பது. அவற்றை நினைந்து உயிர்கள் வழிபட்டுய்யுமாறு இறைவன் நஞ்சைக் கழுத்திலேயே நிலை பெறச் செய்தான். திருநீலகண்ட நாயனாரும் அவர் துணைவியாரும் உய்ந்தவாறு பெரிய புராணத்துட் காண்க. ***மை*** - பண்பாகு பெயராகக் கருமேகத்தை உணர்த்திற்று எனலுமாம். நீலகண்டம் உயிர்களை ஓம்புவது போல மைந்நிறங் கொண்ட முகிலும் வானினின்று மழையாகப் பெய்து உலகுயிர்களை ஓம்புதல் நினைக.

வான நாடர் மருந்தினை - வான நாடர் - தேவர்கள். ***மருந்து*** - உண்டார்க்குப் பிணியை நீக்கி நீண்ட ஆயுளைத் தருவது; இனிமை பயக்கும் உணவுமாம். இறைவன், ஆலகால நஞ்சைத் தான் உண்டான். அதனல் தேவர்கள் அனைவரும் அந்நஞ்சால் ஒரு நொடியில் இறந்தொழிதலினின்றும் தப்பினர். அவர்களை அமுதம் உண்ணச் செய்தான்; அதனல் அவர்கள் அசுரர்களால் அடிக்கடி நேரும் துன்பங்களாகிய பிணியினின்றும் விடுபட்டனர். அமுதம், அவர்களுக்கு உண்ண உண்ணத் தெவிட்டாத இனிய உணவுமாயிற்று. முன்னம் 122-ம் திருப்பாடலில் "மிக்க நஞ்சமுதா அருந்தினனே" "மருந்தினனே" என்றும் 132-ம் திருப்பாடலில் "விண்ணு மண்ணுமெல்லாங் கலங்க முந்நீர் நஞ்சமுது செய்தாய்" என்றும் அருளியவை காண்க. ஈண்டு,

"வளரு மகளுக் காறிரட்டி
வருட மடுத்த பருவத்தின்
அளவி றவத்துச் சிறுவிதிநஞ்
சயின்று மிடற்றுக் கணியாக்கித்
தளரு மமரர் மடமாதர்
தங்கண் மிடற்றுக் கணிநிறுவு
மிளிர்பொற் சடில வேதியர்க்கு
விதியிற் புனல்வார்த் தளித்திட்டான்"

(பேரூர்ப்புராணம் - கௌரி தவம்புரி படலம் 2)

என்பது நினைக.

மாணிக்கக் கூத்தன் தன்னை - அரசருள் சிறந்தவனை "இராச ரத்தினம்" "இராசாமணி" என்றெல்லாம் குறித்தல் போலக் "கூத்தர் மாணிக்கம்" "கூத்தர் மணி" எனலுமொக்கும். இறைவன் செம்மணி போன்ற திருமேனியன். அவன் கூத்தியற்றுழி மேனியின் ஒளி மாணிக்க மணியின் ஒளிபோல, நாற்புறமும் வீசிற்று என்னும் பொருளில் விளக்குவர் திரு. பாரதியாரவர்கள். *கூத்தன்தன்னை* - கூத்தனை. *தன்* - சாரியை.

ஐயனை; ஐயர் பிரானை - *ஐயன்* - ஆசாரியன், குருமூர்த்தி எனலுமாம்.

நம்மை அகப்படுத்து ஆட்கொண்டு அருமை காட்டும் - *நம்மை* - அடியார்களை. *அகப்படுத்து* - ஆணவமலத்தில் அகப்பட்டிருந்த நம்மை அதன் பிடியினின்றும் விடுவித்து எடுத்துத் திருவருளின் உள்ளே அகப்படும்படி பற்றி. *அகப்படுத்தல்* - வளைத்துப் பிடித்தல் என்பது கவியரசு அவர்களின் உரைக்குறிப்பு.

அருமை காட்டும் - நிழலின் அருமை, கோடை நாளில் நண்பகலில் வெட்ட வெளியில் குடையும் செருப்புமின்றி நிற்கும் பொழுதுதான் நன்கு தெரியும். அவ்வாறு, திருமால் முதலிய பெருந்தேவர்களும் எய்தவொண்ணு இறைவன் மானிடச் சட்டை தாங்கி இம்மண்ணுலகுக்கு வந்து திருப்பெருந்துறையில் நமக்காகக் காத்திருந்து ஆட்கொண்டான். அவன் அருமையை அப்பொழுது நாம் முழுமையாக அறிந்து கொள்ளவில்லை. "மழக் கையிலங்கு பொற்கிண்ணம்" (96) என்று எளிதாகக் கருதிவிட்டோம். அவன் அருமையை நமக்குப் புலப்படுத்துதற்காக நம்மைப் பிரிந்தான். இப்பொழுது அவன் அருமையை அறிகின்றோம் என்றவாறு. இது, நம் அடிகளின் சரித நிகழ்ச்சியாயினும், ஒவ்வோருயிரின் ஆன்ம வழிச்செலவிலும் நிகழ்வதாகும். ஆதலின் இவ்வுண்மையைப் பொற்சுண்ணம் இடிக்கும் பூவையர் வாய்மொழியாகப் பன்மையிற் பகன்றார்.

அருமை காட்டல் - அனுக்கிரம் செய்தல் என்பர் கவியரசு அவர்கள்.

பொய்யர்தம் பொய்யனை - *பொய்யன்* - காரியப் பிரபஞ்சம் உள்ளது போலத் தோன்றிப் பின் இல்லையாதல் போல இறைவனும் பொய்யர்களுக்கு உள்பொருள் போலத் தோன்றிப் பின் உண்மை இயல்பு அறியாமையின் இல்பொருள் போல் நிற்பன். கடவுள் உண்மை இயல்பினை உணராதவர்களும் கடவுளை நம்புகிறார்கள். அவர்கள் கருதியது கைகூடாத பொழுது கடவுள் இல்லை என்கிறார்கள். ஈண்டு,

" பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் போதமா
மெய்யிரண்டுங் காணுர் மிக"

(திருவருட்பயன் 44)

என நம் ஞானசாத்திரம் நவில்வது நினைக.

மெய்யர் மெய்யை - மெய்யர் - உலகியற் பொருள்களை விடுத்து உண்மைப் பொருளாகிய இறைவனையே பற்றி நிற்கும் மெய்யடியார்கள். *மெய்யை* - உள் பொருளாகிய இறைவனை.

பொய்யினை என்பது பேராசிரியர் திரு. அ.ச. ஞான சம்பந்தம் M.A. அவர்கள் கொண்ட பாடம். மூலமாயும் மூலமும் உரையுமாக இதுவரை நான் பார்த்த எந்தப் பதிப்பிலும் இப்பாடம் காணப்படவில்லை. மேலும் இதே பகுதியில் இறுதிப்பாடலில் *(214)* "பொய்மையும் ஆயினுர்க்கு" என்று வருதல் காண்க. ஈண்டுப் "*பொய்யினை*" எனப் பாடங் கொண்டால் அங்கும் "பொய்மனம்" என வருதலின் கூறியது கூறலாக முடியும். ஆதலின் ஈண்டுப் "*பொய்யனை*" என்றே கொள்வாம்.

இத்திருப்பாடலின் ஈற்றடி நான்காம் சீராகப் "போற்றி" என வருவது பிழையான பாடம்.

இத்திருப்பாடலில், இறைவன், நம்மை அகப்படுத்து அருமை காட்டுகின்ருன் என்பதால் மனதில் பெருங்களிப்பு நிரம்பியது பெற்ரும். அவன் "மெய்யரின் மெய்" என்றதனுல் அவனை மெய்யாகக் கொண்ட நாமும் மெய்யடியார் குழுவைச் சேர்ந்தவர் ஆனேம் என விம்மிதமுற்று மனம் அப் பெருங்களிப்பில் மூழ்கி மறைதல் பெற்ரும். இவற்ருல் "*ஆனந்த மனேலயம்*" புலனுதல் காண்க.

207. மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்க ளப்பன்
எம்பெரு மானிம வான்மகட்டுத்
தன்னுடைக் கேள்வன் மகன்றகப்பன்
தமையனெம் மையன் ருள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே கஎ

(இ - ள்)

மின்னல் போன்ற இடையினையும் மிகச் சிவந்த வாயினையும்; கரிய கண்களையும் வெண்பற்களையும் பண்களும் விரும்பி வந்து பொருந்துகின்ற மென்மையான சொற்களையுமுடையோராய்; தேமல் கொண்டவையும் அணிகலன்கள் மேவியவையுமான கொங்கைகளையும், இளமைப் பருவத்தையுங் கொண்ட நற்குண நங்கையீர்; என்னை அடிமையாக உடையவனும் பெறுதற்கரிய அமுதம் போன்றவனும், எங்கள் தந்தையும், எங்கள் தலைவனும் பனிமலைமன்னன் மகளுக்குக் கணவன், மகன், தந்தை, தமையன் முதலிய எல்லாருமானவனுமான எங்கள் குருவின் திருவடிகளை இசையால் துதித்து அழகிய திருச்சுண்ணத்தை நாமே இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலை, மின் இடைச் செம்துவர் வாய்க் கருங்கண் வெண்ணகைப் பண் அமர் மென் மொழியீர்; பொன்னுடைப் பூண் முலை மங்கை நல்லீர்; என்னுடை ஆர் அமுது; எங்கள் அப்பன்; எம்பெருமான் இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன்; மகன்; தகப்பன்; தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப் பொன் திருச் சுண்ணம் நாமே இடித்தும் - என்று அன்னுவயம் செய்து கொண்டு பொருள் காண்க.

மின் இடைச் செந்துவர் வாய்க் கருங்கண் வெண்ணகைப் பண் அமர் மென் மொழியீர் - பண் அமர் மென் மொழியீர் - மொழி - உரையாடும் பொழுது தோன்றும் சொற்கள். அவை மென்மையாகவும் இனிமையாகவும் இருத்தல் சிறப்பு. அவை பெண்களின் சொற்களுக்கு அமைதல் மேலும் சிறப்பு. இசை பாடும்பொழுது பண்கள் அவற்றுடன் கூடுவதால் செவிப்புலனுக்கு இன்பம் பயந்து மனத்தை கவரும். அது, பண்களின் சேர்க்கையால் சொற்கள் பெறும் பயனுள்ள பெருமை. ஈண்டுப் பண்கள் தாம் பெருமையும் பயனும் பெறுதல் வேண்டி இம்மகளிரின் சொற்களில் சேர்ந்து அங்கேயே நிலையாக அமர்ந்து விட்டன என்பது நயம். ஈண்டு ஒரு சிவ கதை நினையத் தக்கதாகின்றது. அது,

"இறைவன், உமையம்மையுடன் ஒருநாள் திருக்கயிலையில் வீற்றிருந்தான். கலைமகள் அவர்கள் திருமுன் அமர்ந்து வீணை வாசித்தாள். முடிவில் அவ்வாசிப்பு எவ்வாறு இருந்தது என்று வினவினள். இறைவி, "நன்றாக இருந்தது" என்றாள். இறைவன் அம்பிகையை நோக்கியவாறு, "மிக நன்றாக இருந்தது" என்றான். "அம்மையின் குரலொலி தன் வீணை இசையொலியை விட மிக நன்றாக இருந்தது" என்று இறைவன் கூறியதாக உணர்ந்த கலைவாணி நாணம் கொண்டு வீணையை உறையிலிட்டாள்" என்பது அவ்வரலாறு.

"*மென்மொழியீர்*" என்பதன்முன் ஒவ்வோரடையையும் கூட்டி "*மின் இடை மென்மொழியீர்*" "*செந்துவர் வாய் மென் மொழியீர்*" "*கருங்கண் மென்மொழியீர்*" "*வெண்ணகை மென் மொழியீர்*" என உரைக்க. ***மின் இடை*** - கொடி போன்று மிக மெல்லியதாக இருப்பதாலும்; உண்டோ இல்லையோ என ஐயுறும் வண்ணம் தோன்றி மறைவதாலும் மின்னல் இளம்பெண்கள் இடைக்கு உவமை. இது வடிவமும் தொழிலும் பற்றி வந்தது. "போலும்" என்ற உவம உருபு தொக்கு நின்றது. மகளிரின் இளமைப் பருவம் குறித்தவாறு. ***செம்துவர் வாய்*** - செம்மை+துவர்+வாய் - ***செம்*** - செம்மை நிறம். ***துவர்*** - சிவப்பு. ஒரு பொருள் பன்மொழி மிகுதி குறித்தது. மிக்க சிவப்பு என்ற பொருளில் நின்றது. ***துவர்*** - பவளம் எனக் கொண்டு பவளம் போன்று சிவந்த வாய் எனலுமாம். ***வாய்*** ஈண்டு இதழ்களைக் குறித்து நின்றது. ***கரும்கண்*** - மை தீட்டுதல் வேண்டாது இயல்பாகவே கருநிறமுள்ள கண்கள். இது பெண்களுக்கு அழகு செய்வன. ***வெண் நகை*** - வெண்ணிறமான பற்கள். இவையும் இளமையும் அழகும் குறித்து நின்றன "கள்ளமற்ற சிரிப்பு" எனலுமாம்.

பொன்னுடைப் பூண்முலை மங்கை - ***பொன்*** - பொன்னிறமுள்ள தேமல். இஃது இளம்பெண்கள் கொங்கைகளில் படர்ந்து வனப்பூட்டுவன. இதைப் பூணுக்கு அடையாக்கிப் பொன்னாற் செய்த அணிகலன்கள் பூண்ட கொங்கை என உரைத்தனர் முன்னுரையாசிரியர்கள். ***மங்கை*** - பன்னிரண்டு வயது முதல் பதின்மூன்று வயது முடியவுள்ள பருவப் பெண்.

என்னுடை ஆர் அமுது - ***என்னுடை*** - ***என்*** - என்னை என இரண்டனுருபு விரித்துக் கொள்க. ***உடை*** - உடைய என்றதன் ஈறு கெட்டது. அடிமையாக வுடைய. ***ஆர் அமுது*** - நிறைந்த அமுதம் போன்றவன் எனலுமொக்கும்.

எங்கள் அப்பன்; எம்பெருமான் - பன்மை அடியார்கள் அனைவரையும் உளப்படுத்தியவாறு காட்டிற்று.

இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன் - ***இமம்*** - பனி. ***இமவான்*** - பனிமலையின் அரசன் பார்வதியம்மையின் தந்தை. ***தன் உடை*** - பார்வதியை உடைமைப் பொருளாகக் கொண்ட. ***கேள்வன்*** - கணவன். ***தன்*** என்றது ஈண்டு மலைமகளை. மனைவி, கணவனின் உடைமைப் பொருள் என்பதை;

> "*பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்*
> *தறம்பொருள் கண்டார்க ணில்*"
>
> *(திருக்குறள் 141)*

என்ற வள்ளுவர் வாய்மொழியும் அதில் பிறன் பொருளாள் - பிறனுக்குப் பொருளாந் தன்மையுடையாளை" எனப் பரிமேலழகர் விளக்கியுரைப்பதும் கொண்டறிக.

இறைவன், போக அவத்தையினின்று தன் சத்தி பேதங்களில் ஒன்ருகிய கிரியா சத்தியைச் சிறப்பு வகையால் சங்கற்பித்துக் காரியங்களைத் தோற்றுவிக்கின்ருன். ஆதலின் ஈண்டு உமையம்மையின் கணவன் என்ருர். இதனையே,

திருச்சிற்றம்பலம்

"வாயும் மனமுங் கடந்த மனேன்மணி
பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயு மறிவுங் கடந்த **அரனுக்குத்**
தாயு மகளுநற் **ருரமு மாமே"**

திருச்சிற்றம்பலம்

(திருமந்திரம் 1161)

என்ருர் திருமூல நாயனர்.

மகன் - சத்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றும். இறைவன் அத்தத்துவத்தை அதிட்டித்து நிற்பன். அத்தத்துவமும் அவன் பெயரால் வழங்கும் ஆதலின் அவனை உமையம்மையின் **மகன்** என்ருர்.

தகப்பன் - நாதம் என்னும் சிவத்தத்துவத்தினின்றும் விந்து தத்துவம் தோன்றும். அது சத்தி தத்துவம் என்று பெயர் பெறும். அதனைச் சிவபெருமான் அதிட்டித்து நின்று "சத்தி" என்று ஓதப் பெறுவன். சிவனிடத்தினின்றும் இது தோன்றலின் இறைவன் உமையம்மைக்குத் **தகப்பன்** என்ருர்.

ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

" தவளத்த நீறணி யுந்தடந்
தோளண்ணல் தன்னொருபால்
அவளத்த ஞம்மக ஞந்தில்லை
யானன் றுரித்ததன்ன
கவளத்த யானை கடிந்தார்
கரந்தகண் ணூர்தழையுந்

துவளத் தருவன வோசுரும்
பார்குழல் தூமொழியே"

திருச்சிற்றம்பலம்

(திருக்கோவையார் - 112)

என்று நம் அடிகளே கூறுவதற்குச் சிவதத்துவத்தினின்றும் சத்தி தத்துவம் தோன்றலின் **அவளத்தனு** மென்றும், சத்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றலின் **மகனும்** என்றும் கூறினர்- என்று பேராசிரியர் உரை விரித்தல் காண்க.

தமையன் - இறைவன், சுத்தமாயையினின்றும் சிவ தத்துவத்தைத் தோற்றுவித்துப் பிறகு சத்தி தத்துவத்தையும் தோற்றுவிப்பன். இவ்விரு தத்துவங்களும் முறையே "சிவன்", "சத்தி" என வழங்கப்பெறும். சிவத்தின் பின் சத்தி தோன்றியதால் சிவபெருமானை உமையம்மையின் ***தமையன்*** என்றார்.

இதனையே;

" கனகமார் கவின்செய் மன்றில்
அனகநாட கற்கெம் மன்னை
மனைவிதாய் தங்கை மகள்"

(சிதம்பரச் செய்யுட் கோவை - 33)

என்றார் குமர குருபர முனிவர். ★

இவை பற்றிச் சிவஞான மாபாடியம் சூத்திரம் 2. அதிகரணம் 2-ல் "சிவ தத்துவம்", "சத்தி தத்துவம்", "சதாசிவ தத்துவம்" என்ற தலைப்புகளின் கீழ் விளக்கியவை காண்க.

எம் ஐயன் தாள்கள் பாடி - ***ஐயன்*** - மானிட வடிவில் ஞான குருவாய் வந்தவன். ***எம்*** - தேடிவந்து ஆட்கொண்டதால் உரிமை பாராட்டியவாறு. ***தாள்கள்*** - திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் அமைக்கப்பட்ட

★ *பூத்த வளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணங்*
காத்த வளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்த வளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்த வளேயுன்னை யன்றிமற்றோர்தெய்வம் வந்திப்பதே

(அபிராமியந்தாதி 13)

தெய்வ பீடத்தில் நிறுவப்பட்டுள்ள ஞானசிரியரின் திருவடிகள்: உரையின் முதற்பகுதியில் "வாதவூரடிகள் வரலாற்றில்" "மீண்டும் திருப்பெருந் துறையில்" என்றதன் கீழுரைத்தவை காண்க.

ஐயன் - என்பது திரு.மு. அருணாசலம் M.A. அவர்கள் கொண்ட பாடம்.

இத்திருப்பாடலில், இறைவன், இமவான் மகட்டுக் கேள்வன், மகன், தகப்பன், தமையன் என்றமையின், அவன், நம்மை நம் எண்ணற்ற பிறவிகளில் நம் பல்வேறு பக்குவங்களுக்கேற்பப் பல்வேறு நிலைகளில் நின்று படிப்படியாகப் பக்குவம் செய்து வந்து நம் உயிரினுள் நின்று அமுதம் போன்று தித்திக்கின்றான் என்ற நினைவு நெஞ்சைப் பெருங்களிப்பால் நிரப்பிற்று. அத்துணை மேலானவனே தன் திருவடிகளை நமக்கு நல்கினான் என்ற உண்மையால் நெஞ்சம் அக்களிப்பில் ஆழ்ந்து மறைந்தது. இதனால் "*ஆனந்த மனோலயம்*" புலனாதல் பெற்றாம்.

208. சங்க மரற்றச் சிலம்பொ லிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலை யாடச்
செங்கனி வாயித ழுந்து டிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம் பாடிக்
கங்கையி ரைப்பவ ராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே கஈ

(இ - ள்)

செம்மையான அணிகலன்கள் பூண்ட பெண்களே; நம் சங்கு வளையல்கள் ஆரவாரிக்கவும்; சிலம்புகள் ஒலிக்கவும்; பின்புறம் தாழ்ந்து தொங்கும் கூந்தலைச் சுற்றி அணிந்துள்ள மாலை ஆடவும்; செந்நிறமான கொவ்வைக் கனி போன்ற வாய் உதடுகளும் துடிக்கும் வண்ணம் சிவபுரத்தின் பெருமையை இசையால் வழுத்திக் கங்கையும் பாம்பும் மகிழ்ச்சியால் ஒலிக்கும், தொகுதியாகிய சடைமுடியானின் திருவடிகளுக்கே மீதூரும் அன்பினால் கொங்கைகள் பூரிக்க அழகிய திருச்சுண்ணத்தை நாமே இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலிலுள்ள "சேயிழையீர்" என்பதைப் பாடலின் முதலில் அமைத்துக் கொண்டு பிறகு பாடல் முழுவதுக்கும் பொருள் காண்க.

சேயிழையீர்- குற்றமில்லாத அணிகளை அணிந்துள்ளவர்களே. குற்றம், மணிகளில் உள்ள குறைபாடுகளுடன் பொன்னில் மாற்றுக் குறைவுமாம். ***சே***- என்பதற்கு செம்மணிகள் என்று பொருள் கொண்டு மாணிக்கத்தாலான அணிகளை அணிந்துள்ளவர்களே எனலுமொக்கும். அவை சடைவில்லை, இராக்கிடி, சந்திரபிறை, சூரியன், சுட்டி முதலிய தலையில் தரிக்கும் அணிகளும் தோடு, அட்டிகை முதலியனவுமாம். இவை சுண்ணம் இடிக்கும் பொழுது ஒலி செய்யா. ஒலிக்கும் அணிகளைப் பின்பு கூறுவார்.

சேயிழை - செம்மை + இழை. **இழை** - நூல் எனக் கொண்டு செம்மையான நூல்களை அறிந்தவர்களே- என உரைப்பினுமொக்கும். இதனை,

" *அருவுருவந் தானறித* ***லாயிழையா*** *யான்மா*
வருவுருவ மன்றுகு முண்மை - யருவுருவாய்த்
தோன்றியுட னில்லாது தோன்றுது நில்லாது
தோன்றன் மலர்மணம் போற் றெக்கு"

எனவரும் சிவஞான போதம் 7-ம் சூத்திரம் 3-ம் அதிகரணம் உதாரண வெண்பாவுக்குச் சிவஞான மாபாடியத்தாலறிக.

சங்கம் அரற்ற சிலம்பு ஒலிப்ப - சங்கம் - சங்கினால் செய்யப்பட்ட கைவளைகள். ***சிலம்பு*** - பாதத்தில் அணியும் அணிகலன். இவை சுண்ணம் இடிக்கும் பொழுது இடிப்பவரின் உடலசைவால் இயங்கி ஒலிப்பன. ***அரற்ற - ஒலிப்ப*** - பொற் சுண்ணம் இடிக்கும் உண்மைச் சரியை வாய்த்த மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தன என்க. உடன் நிகழ்ச்சியாகிய நிகழ் காலத்தின்கண் வந்தன.

தாழ்குழல் சூழ்தரு மாலை ஆட - தாழ்குழல் - பின்புறம் நீண்டு தாழ்ந்து தொங்கும் கூந்தல் உத்தம இலக்கணமும் இளமையும் குறித்து நின்றன. ***தாழ்தல்*** - விரும்புதல் எனக் கொண்டு பெண்களுக்கு அழகு செய்தலின் யாவராலும் விரும்பப்படுகின்ற குழல் என்லுமாம். ***சூழ்தரு*** - தாழ்ந்த கூந்தலில் சூழ்ந்துள்ள. ***சூழ்*** - மாலையைக் கூந்தலிற் சுற்றி அணிதல்.

தரு - பகுதிப்பொருள் விகுதி. *மாலை ஆட* - சுண்ணம் இடிக்கும் பொழுது உடலசைவால் கூந்தலில் அணிந்துள்ள மலர் மாலை அசைய என்றவாறு. *தாழ்தல்* - பணிதல் எனக் கொண்டு சுண்ணம் இடிக்கும் மகளிர் இறைவன் திருவடிகளிற் பணிந்தனர். அப்பொழுது அவர்கள் கூந்தலும், கூந்தலிற் சூடியுள்ள மலர் மாலைகளும் இறைவன் திருவடிகள் முன்பு தாழ்ந்தன. அதனால் அப்பெண்களுக்கு மட்டுமன்றி அம்மலர் மாலைகளுக்கும் சிவ புண்ணியம் கிட்டிற்று. அதன் பயனாக இன்று அப்பெண்கள் சுண்ணம் இடிக்கும் உண்மைச் சரியை ஆற்றும் பேறு பெற்றனர். அப்பொழுது அவர்கள் கூந்தலில் சூடப்பட்டிருந்ததால் மலர் மாலைகளுக்கும் அப்புண்ணியம் வாய்த்தது. அம்மகிழ்ச்சியால் அவை கூத்தாடின என்பார் **மாலை ஆட** என்றார்.

செங்கனிவாய் இதழும் துடிப்ப - *செம்கனிவாய்* - சிவந்த கொவ்வைக் கனி போன்ற வாய். **இதழும்** - உதடுகளும். இவையும் செந்நிறமானவை. **துடிப்ப** - இறைவன் புகழைப் பாடும் பொழுது வாய் திறந்தும் மூடியும் இயங்குவதால் வாயுதடுகள் அசைந்தன. அதையே **துடிப்ப** என்றார். **இதழும்** என்றதிலுள்ள உம்மை சங்கம், சிலம்பு, மாலை முதலியவற்றுடன் இதழ்களும் எனப் பொருள் பட்டு இறந்தது தழுவிய எச்ச உம்மையாக நின்றது. சுண்ணம் இடித்தலாகிய உண்மைச் சரியைத் தொண்டு நிகழும் பொழுது இறைவன் புகழைப் பாடுவதாகிய பேறு பெற்று நாமும் அவ்வுண்மைச் சரியையில் பங்கு பெறுகின்றோம் என்ற மகிழ்ச்சியில் கூத்திடல் போல் உதடுகள் துடித்தன என்க.

சிவலோகம் பாடி - ஈண்டுச் சிவலோகம் என்றது சுத்த வித்தியா புவனங்களை. அஃது உண்மைச் சரியை புரிந்தோர் சாலோக பதமுத்தி பெற்று வாழும் இடம். இதுபற்றி முன்னம் 9-ம் திருப்பாட்டில் "தவம்" என்றதன் கீழ் விளக்கினும். *சிவலோகம்பாடுதல்* - அப்புவனங்களின் சிறப்பையும் பதமுத்தி பெற்று ஆண்டுள்ளோர் பெருமைகளையும் இசையால் வழுத்துவது. அவ்வழிபாடு முடிவில் மாதொருபாகன் மலரடிகளையே மருவிமன்னும் என்பது உளம் கொள்க.

கங்கை இரைக்க அரா இரைக்கும் - "இறைவன் தன் திருமுடியில் கங்கையையும் பாம்பையும் அணிந்துள்ளான். கங்கையின் அலைகள் இடியோசை போன்று முழங்குகின்றன. பாம்பு, அம்முழக்கத்தை இடி என்றே கருதி அச்சத்தினால் பெருமூச்சு விடுகின்றது. **இரைத்தல்** - ஓசை செய்தல்.

இதனை;

திருச்சிற்றம்பலம்

"தேரொலிக்க மாவொலிக்கத் திசையொலிக்கும் புகழ்க்காஞ்சி
யூரொலிக்கும் பெருவண்ண ரெனவொண்ண வுண்மையினர்
நீரொலிக்க வராவிரைக்க நிலாமுகிழ்க்குந் திருமுடியார்
பேரொலிக்க வுருகுமவர்க் கொலிப்பர்பெரு விருப்பி னெடும்"

திருச்சிற்றம்பலம்

(பெரியபுராணம்-திருக்குறிப்புத்-தொண்ட நாயனர் புராணம் - 113)

என்பதிற் காண்க. மூச்சிறைத்தல் என்று இதை மயக்க வணியாகக் கொண்டு, "இறைவன் நம்மை ஆட்கொண்ட பின், தன் அருமை காட்ட நம்மைப் பிரிந்தான். ஆனல் அவன் நம்மை முற்றும் துறந்து சென்று விட்டான் என்று நம் அடிகள் தம் கருத்தை ஈண்டுக் குறிப்பாக தெரிவிக்கின்றுர் என்று பொருள்பட உரை விரித்தார் முன்னுரையாசிரியர்களில் ஒருவர்.

இறைவனின் சடை, ஞானத்தின் சின்னம். ஞானம் அமைதியும் தெளிவும் தருவது. தீயவற்றை நீக்கி நன்மை பயப்பது. வேகமும் கலக்கமும் கொண்டு விண்ணினின்றும் இழிந்த கங்கை, சங்கரன் சடையையுற்றதும் அமைதியும், தெளிவும் பெற்ருள்; தாருகவன முனிவர்களால் ஏவப்பட்ட நாகங்கள் கொல்லும் எண்ணத்துடனும் சினத்துடனும் நஞ்சு கான்றவாறு வந்தன. இறைவன் சடையிலும் திருமேனியிலும் தங்கிய பின் நல்லனவாயின. ஆதலின் இவ்வுரைப் பொருத்தம் ஆய்வுக்குரியது. இறைவன், ஆட்கொண்டு பின்னர் தன் அருமை காட்டுதற்காகப் பிரிந்த நிலே வேறு. அது பற்றி முன்னம் 206 - ம் திருப்பாடலில் விளக்கினும். ஈண்டுக் கங்கையும் அரவும் இரைத்தல் இறைவன் திருமுடியில் நிலேயான இடம் பெற்ற மகிழ்ச்சியால் என்க.

கழற்கே பொங்கிய காதல் - என இயைக்க பிரிநிலே ஏகாரம் சிவ பரத்துவத்தை வலியுறுத்தி நின்றது. *பொங்குதல்* - ஒருகாலேக் கொருகாலே மிகுந்து வருதல். நுகருந்தோறும் சிவபுண்ணியத்தின் இருப்பு மேலோங்கி வளரும் என்பது நினைக. *காதல்* - சிவபத்தி. *காதலில்* - சிவபத்தி காரணமாக.

கொங்கை பொங்க - மேலும் மேலும் வளரும் சிவபத்தியால் மகிழ்ச்சி மீதூர்ந்தது; அதனுல் உடல் பூரித்தது; உடம்பின் உறுப்பாகிய கொங்கைகளும் பூரித்தன.

இத்திருப்பாடலில், பொற்சுண்ணம் இடிக்கும் உண்மைச் சரியைத் தொண்டு கிட்டியதால் உள்ளம் நிரம்பிய மகிழ்ச்சி நிலை கூறப்பட்டது. அம்மகிழ்ச்சியால் சிவ உலகின் சீர்களைப் பாடும் பொழுது சிவபுண்ணியம் மேலும் வளர்ந்து, ஏனையவற்றை விலக்கிச் சிவபெருமான் கழற்கே அன்பு பொங்கும் நிலை கிட்டியது. அந்நிலை தந்த பெருமகிழ்ச்சியில் மனம் ஆழ்ந்து மறைந்தது. இதனுல் "ஆனந்த மனோலயம்" புலனுதல் பெற்றும்.

209. ஞானக் கரும்பின் தெளியைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயி னானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே கரு

(இ - ள்)

கருங்குவளை மலர் போன்ற வண்ணமுள்ள பெரிய விழிகளும், இளமையும், நற்குணங்களுமுள்ள பெண்களே; ஞானமே வடிவாயுள்ள கரும்பினின்றும் பெற்ற சாற்றின் தெளிவு போன்றவனும்; அதைக் காய்ச்சிப் பெற்ற பாகு போன்றவனும்; நினைத்தற்கும் அரிய நலமுயுள்ளவனும்; கெடாத தேன் போன்றவனும்; கனியின் சுவை போன்றவனும் ஆகிய சிவபெருமானை; மனத்துள் தானே வலிய நுழைந்து இனிக்கவல்ல தலைவனை; நம் பிறவியை ஒழித்து அடிமையாக ஏற்றுக் கொண்ட அருட்கூத்து இயற்றுபவனை; நாவில் வடு நிலைபெறுமாறு துதியிசைத்து அழகிய சுண்ணத்தை நாமே இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலிலுள்ள "பானற் றடங்கண் மடந்தை நல்லீர்" என்பதைப் பாட்டின் தொடக்கத்தில் அமைத்துக் கொள்க. பிறகு பாடல் முழுவதுக்கும் பொருள் காண்க.

பானல் தடம் கண் மடந்தை நல்லீர் - *பானல்* - கருங்குவளை மலர். மகளிர் விழிகளுக்குப் பண்பு பற்றி வந்த உவமை. அம்மலர் வெண் கதிரோனின் தண்ணொளியால் மலர்ந்து கள்ளாகிய நீரைச் சொரிவது. ஈண்டு இம்மடந்தை நல்லாரும் சிவபெருமானின் திருவருள் தண்மை நினைந்து இன்பக் கண்ணீர் துளி சிந்தும் விழியினராயினர். இதற்கு, இவ்வாறன்றிப் பால் போன்ற இனிய மொழியையும் விசாலமான கண்களையும் கொண்ட பெண்கள் என்றுரைத்தார் சீகாழித் தாண்டவராயர் அவர்கள்.

ஞானக் கரும்பின் தெளியை - *ஞானக் கரும்பு* - சிவபெருமான் பற்றிய தொடக்க உணர்வு, உருவகம். *தெளியை* - கரும்பைப் பிழிந்து எடுக்கப்பட்ட சாற்றில் நுரை, கரும்பின் சிறு துகள்கள் முதலிய கலந்து நிற்கும். அச்சாற்றை வடித்து எடுத்துக் கொண்ட கோதற்ற சாற்றை ஈண்டுத் *தெளி* என்றார். தெளிந்த சாறு.

பாகை - அவ்வாறு எடுக்கப்பட்ட தெளிவிலும் திரவ வடிவில் மாசுகள் இருக்கும். தெளிந்த கருப்பஞ் சாற்றை அடுப்பிலேற்றிக் காய்ச்சினால் அம்மாசுகள் நீங்கிப் பாகு கிடைக்கும். அது கருப்பஞ்சாற்றில் நின்ற புளிப்பு முதலிய நீங்க மேலும் சுவையுள்ளதாகும்.

நாடற்கு அரிய நலத்தை - *நாடற்கும்* - என உயர்வு சிறப்பும்மை விரித்துக் கொள்க. *நாடல்* - நினைத்தல். எய்துதற்கு அரியதாக மட்டுமின்றி நினைப்பதற்கும் அரிய என்க. *நலம்* - நலத்தையுடை சிவபெருமானுக்குப் பண்பாகு பெயராய் நின்றது.

நந்தாத் தேனை - தேனை நீண்ட காலம் வைத்திருப்பின் புளிப்புற்று இறுகி விடும். அவ்வாறு கெட்டுப் போகாது என்றும் இனிமை தரும் தேன் போன்றவனை என்றார். *நந்துதல்* - கெடுதல். குன்றாத என்று பொருள் கொண்டு எண்ணற்ற உயிர்கள். எண்ணற்ற ஊழிகள் துய்ப்பினும் குறைவுறாத தேன் போன்றவன் எனலுமாம்.

தெளி, பாகு, நலம், தேன் என்ற இவை நான்கும் முறையே உண்மை ஞானத்திற் சரியை, உண்மை ஞானத்திற் கிரியை, உண்மை ஞானத்தில் யோகம், உண்மை ஞானத்தில் ஞானம் என்பவற்றைக் குறிப்பாலுணர்த்தி நின்றன. இவற்றையும் இவற்றால் எய்தும் பல்வேறு வகைப்பட்டு விரியும் சிவபுண்ணியங்களின் பயன்களையும் சிவஞான போதம் 8-ம் சூத்திரம் முதல் அதிகரணத்துக்கு "ஞானத்திற் சரியை முதலியன" என்ற தலைப்பில் சிவஞான மாபாடியம் கூறியுள்ளது காண்க.

பழச்சுவை ஆயினனை - பழம் இனிய சுவையுள்ளதாயினும் தோல், கொட்டை, நார் முதலியன உள்ளது. மக்கள் அவற்றைக் கழித்து விடுவர். மீதமுள்ள கனிச்சாற்றை மட்டும் சுவைத்து விழுங்குவர். இறைவன் அக்கனிச் சாறும் ஆகாமல் அச்சாற்றில் விரவியுள்ள இனிய சுவையாக மட்டும் உள்ளவன் என்றார். கனியின் சாறு ஐம்பூதங்களுள் ஒன்றான மாயேயம். இறைவன் மாயைக்கு அப்பாற்பட்டவன். மாயையை இயக்குபவன், எனினும் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு ஐம்பூதங்களை அதிட்டித்து நிற்கின்றான். ஈண்டு அவன் பழச்சுவையை உயிர்கள் பொருட்டு அதிட்டித்து நிற்றலின் **ஆயினனை** என்றார்.

சித்தம் புகுந்து தித்திக்க வல்லானை - கரும்பின் தெளி, பாகு, பழம் முதலியவற்றை நாமே எடுத்து வாயிற் பெய்த பின்பே அவை தித்திக்கும். அத்தித்திப்பும் தொண்டையைத் தாண்டிச் செல்வதில்லை. ஆனால் சிவம், தானே வலிந்து நம் சித்தத்துட் புகுந்து அங்கும் தித்திக்கும். அத்தித்திப்பு நம் ஞானேந்திரியமாகிய நாக்கு உட்பட உடம்பும் சித்தம் உட்பட அந்தக் கரணங்களும் நீங்கிய முத்தி நிலையிலும் நீங்காது நிலை பெறும். இவ்வுண்மையை முன்னம் சிவபுராணம் (96-ல்) "சிவனடிக்கீழ்" என்தன் விளக்கத்தில் எடுத்தாண்ட உண்மை விளக்கம் 46-ம் திருப்பாட்டிற் காண்க.

பிறப்பு அறுத்து ஆண்டு கொண்ட கூத்தனை - பிறப்பு என்றதனால் அதனைத் தொடர்ந்து வரும் இறப்பையும் உடன் கொள்க. தானே வலிய வந்து சித்தம் புகுந்தவன் நம் பிறப்பிறப்புக்கட்குக் காரணமான சஞ்சித பிராரத்த ஆகாமிய கன்மங்களில் பிணிப்பை அறுத்தான். இனிப் பிறவி இன்மையின் மாயா மலப்பிணிப்பும் இல்லையாயிற்று. மீதமுள்ளது ஆணவ மலம். அது நம் பிறப்பிறப்புக்களுக்குக் காரணமான கன்மமும் மாயையும் மீண்டும் நம்மைப் பற்றச் செய்யும். அவ்வாறு செய்யாமல் நம்மை ஆண்டு தன் அருள் வியாபகத்துள் இருத்திக் கொண்டான். ஆங்கு ஆணவமலம் முளைத் தெழாமல் வலிகுன்றி நிற்கும் என்பதறிக. ***கூத்தன்*** - திருவைந் தொழிற் கூத்துக்களுள் இப்பொழுது குறிப்பிடப்படுவது அருட்கூத்து. அதை இயற்றுபவன்.

நா தழும்பு ஏற வாழ்த்தி - முன்னம் "போற்றித் திருவகவல் 47-ல்", "நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்" என்றதன் கீழுரைத்தவை காண்க. ஆண்டு நாவில் வடு ஏறுவது நாத்திகக் கொள்கைகளையே பலகாலும் இடைவிடாது கூறுவது குறித்தது. ஈண்டு அதற்கு மாறாக இறைவனைப் பலகாலும் இடைவிடாது வாழ்த்திப் பாடுதல் குறித்தது.

இத்திருப்பாடலில், "தித்திக்க வல்ல கோன்" என்பது மனம் பெருங்களிப்பில் நிரம்பி நிற்றல் குறித்தது. "நாத்தழும் பேற வாழ்த்தி" என்றதனுல் மனம் அக்களிப்பு வெள்ளத்தில் ஆழ்ந்து மறைதல் குறித்தது. இவற்றுல் "ஆனந்த மனேலயம்" புலனுதல் பெற்றும்.

210. ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர்க ளுவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவக மேந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவக ஞமங்கள் பாடிப் பாடிச்
செம் பொன்செய் சுண்ண மிடித்து நாமே கசு

(இ - ள்)

நமக்கு ஆக்கம் உண்டாகும் வகையில் அடியார்களுடன் நாமும் சென்று; இறைவனுக்கு அடிமைப் பணிகள் புரியும் தன்மைகளே இசையினுல் வழுத்திக் கொண்டு; விண்ணுலக வாசிகள் கனவிலும் பார்த்தறியாத அருமை வாய்ந்தவையும் சிவந்த தாமரை மலர்கள் போன்றவையுமான திருவடிகளே நமக்கு எளிதிற் காட்டுகின்றவனும்; ஆனேற்றைத் தன் நடுவில் தாங்கியுள்ள வெற்றித் திருக்கொடியை யுடையவனுமாகிய சிவபெருமானும்; முப்புரங்களே அழித்த வெற்றி வீரனுமாகியவனின் பெயர்களேப் பொருளாகக் கொண்ட; இசைப் பாடல்களே இடைவிடாது பாடித் துதித்துக்கொண்டே செம்பொன் வண்ணங் கொண்ட சுண்ணத்தை நாமே இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலிலுள்ள "நாமும் வந்து" என்பதை "வந்து நாமும்" என மொழி மாற்றி "அன்பர் தம்மொடு" என்பதன்பின் புணர்க்க. "செல்வ" என்பதை "கொடியான்" என்பதன் முன்வைக்க. பிறகு பாடல் முழுவதுக்கும் பொருள் காண்க.

ஆவகை அன்பர் தம்மொடு வந்து நாமும் - ஆவகை - ஆகும் வகை. வினைத்தொகை. நம்மால் இயன்ற அளவில் எனலுமாம். பசு நிலேயிற் பிரிந்து சிவ ஞானியாய் ஆகும் வகை என்பர் திரு. தேசிகர் அவர்கள்.

அன்பர் தம்மொடு - மெய்யடியார்களொடு. ஒடு - மூன்றனுருபு தலைமைப் பொருளில் உடனிகழ்ச்சியாக வந்தது. அன்பர்களின் சிறப்பு நோக்கியவாறு. ***வந்து*** - சென்று. ***நாமும்*** - மெய்யடியார்களுக்கு ஒப்பாகாத நாமும். ***உம்மை*** - இழிவு சிறப்பு.

ஆட் செய்யும் வண்ணங்கள் பாடி - நாம் பசுபோதம் நீங்கிச் சிவபோத மிகுந்து மெய்யடியார்கள் திருக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் தகுதி பெறும் வகையில் நம்மை அடிமைகளாகக் கொண்டு தொண்டு செய்யும் பேறு தந்தான். அவ்வாறு அவன் திருவருள் பாலித்த வகைகளைப் பாடி.

விண்மேல் தேவர் கனவிலும் கண்டு அறியா - ***விண்மேல் தேவர்கள்*** - விண்ணுலக வாசிகள். இவர்கள் இறைவன் திருவடிகளைக் கனவிலும் கண்டு அறியார் என்றலின்; மண்மேல் வந்து இறைவனை வழிபடுவார்களாயின் இங்குக் கனவிலன்றி விழிப்பு நிலையிலேயே திருவடிக் காட்சி பெறுவர் என்பது பெற்றும். ***கனு*** - கனவில் வரும் காட்சிகள் மூவகைப்படும். அவை, இடைவிடாது நிகழும் தியானத்தால் விளைவதும், பின்வரும் நன்மை தீமைகளை முன்கூட்டியே அறிவிப்பதும்; தொல்லை வினைகளில் மெல் வினைகளாயவை நனவில் பயன்தர வல்லன அல்லவாய்க் கனவிற் பயனைத் தந்து கழிவனவாயும் உள்ளன. விண்ணுலக வாசிகள் இறைவன் திருவடிகளைத் திரிபுடியின்றித் தியானம் செய்யும் தவமின்றி என்றும் போகத்தில் புரள்பவர்கள். கண்களை மூடி உறங்கும் தொழிலும் இல்லாதவர்கள். ஆதலின் அவர்களுக்கு இறைவன் திருவடிகளைக் கனவிலேனும் காணும் பேறில்லை.

செம்மலர்ப் பாதங்கள் காட்டும் - ***செம்மலர்ப் பாதங்கள்*** - ஆன்மாக்களைச் செம்மை செய்யும் தாமரை மலர் போன்ற திருவடிகள் எனலுமாம். ***காட்டும்*** - விண்ணுலக வாசிகளுக்குக் கனவிலும் காண இயலா அத்துணை அருமை வாய்ந்த திருவடிகளை நமக்கு நனவிலேயே வலிய வந்து காட்டும்.

சேவகம் ஏந்திய செல்வ வெல் கொடி - ***சேவகம் ஏந்திய*** - ஆனேற்றின் ஓவியத்தைத் தன் நடுவில் தாங்கியுள்ள. ஆனேறு, அறத்தின் சின்னம். அதைத்தன் இதயமாகக் கொண்டு உயர்த்திய கொடி. ***செல்வக் கொடி*** - ***வெல் கொடி*** - என்று பிரித்துக் கூட்டுக. ***செல்வம்*** - அறமாகிய திரு. அஃது இறைவனால் என்றும் உயர் நிலையில் நிறுத்திப் பேணப்படுவது என்பதறிக. ***வெல் கொடி*** - ***வெல்*** - மூன்று காலத்துக்கும் பொருந்திய வினைத்தொகை. அறம் என்றும் வெல்வது என்பது நினைக. ***வெல் கொடி*** - போர் நிகழாமலே

வெற்றி கொண்ட கொடி என்க. "சேவார் வெல் கொடிச் சிவனே போற்றி" (போற்றித் திருவகவல் 95) என்றதும் ஆண்டுரைத்தவையும் காண்க. *சேவலன்* - என்பது திரு.மு. அருணசலம் M.A., அவர்கள் கொண்ட பாடம்.

· *சிவபெருமான்; புரங்கள் செற்ற கொற்றச் சேவகன்* - வெற்றியுடையவன். *சேவகம்* - வெற்றி. இதனை;

" *பூமன் சிரங்கண்டி யந்தகன் கோவல் புரமதிகை*
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காமன் குறுக்கை யமன்கட வூரிந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் **சேவகமே**"

என வரும் தனிப் பாடலாலறிக. முன்னம் திருவண்டப் பகுதி 158-ல் "ஏற்ருர் மூதூர் எழில் நகை எரியின் வீழ்வித்த" என்றதன்கீழ் விளக்கியவை காண்க.

நாமங்கள் பாடிப்பாடி - சிவபெருமான் திருப்பெயர்கள் மிகப் பலவாதலின் மனேலயம் உண்டாகும் வரை அவை அனைத்தையும் பல காலும் இடைவிடாது பாடுக என்பார், *பாடிப்பாடி* என்ருர்.

இத்திருப்பாடலில் வெற்றித் திருக்கொடியை உயர்த்தியவன் திருவடிகளைக் கண்டமையால் மனம் பெருங் களிப்பால் நிரம்பிற்று; இறைவனின் எண்ணற்ற திருப்பெயர்களை இடைவிடாது இசையால் வழுத்துவதால் மனம் அப்பெருங்களிப்பில் மூழ்கி மறைந்தது. இதனுல் "*ஆனந்த மனேலயம்*" புலனுதல் பெற்ரும்.

211. தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடை மேல்
வானக மாமதிப் பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம் பாடி
உம்பரு மிம்பரு முய்ய வன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே கள

(இ - ள்)

தேனைத் தன்னுட் கொண்ட பொன்நிற மலர்கள் நிறைந்த கொன்றை மரத்தைப் பாடி; சிவ நகரத்தைப் பாடி; ஞானச் செல்வமாகிய சடை முடி மேலுள்ளதும் விண்வெளியை இடமாகக் கொண்டிருந்ததுமான பெருமை பொருந்திய பிறை நிலவைப் பாடி; பெருமை பொருந்திய ஆனேற்றைப் பாடி; வலது திருக்கையில் ஏந்தியுள்ளதும் பகைவனின் ஊன் பொருந்தியதும் பெருமை மிக்கதுமாகிய சூலத்தைப் பாடி; பெருமை மிக்க மழுவைப் பாடி; விண்ணுலக வாசிகளும் மண்ணுலக வாசிகளும் உய்தி பெறும் பொருட்டுத் திருப்பாற் கடலைக் கடைந்த நாளில் எழுந்த நஞ்சை உணவாக உண்ட அருட் செயலைப் பாடி; அழகிய சுண்ணத்தை நாமே இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலில் வரும் "மாமழு" என்பதைச் "சூலம்" என்பதன் பின் அமைத்துக் கொள்க; "போனகமா" என்பதை "நஞ்சு" என்பதன்பின் வைக்க; பிறகு பாடல் முழுவதுக்கும் பொருள் காண்க.

தேனக மாமலர்க் கொன்றை பாடி - தேனகம் - தேனைத் தன்னுள்ளே பொதிந்து வைத்திருக்கின்ற. ***மாமலர்*** - பொன் வண்ணமுள்ள மலர். ***கொன்றை*** - ஈண்டுக் கொன்றை மரத்தைக் குறித்து நின்றது. தேன் பற்றி முன்னம் நூற் சிறப்பின் கீழுரைத்தவை காண்க. ஈண்டுச் சிவானந்தத்தைக் குறிப்பாலுணர்த்தி நின்றது. ***மாமலர் - மா*** - பொன். கொன்றை மலரின் நிறம் பொன் நிறமாவது நினைக. ***மா*** - பெருமை; சிறப்பு எனலுமாம். கொன்றை மலர் பிரணவ வடிவமாக அமைந்து சமட்டித் திருவைந்தெழுத்தை உணர்த்துவதும், அம்மந்திரம் சிவானந்தத்தை தன்னுட் பொதிந்துள்ளதும், மலர் மாலை வடிவிலேயே மலர்வதும், இறைவனுக்கு அடையாள மாலையாக உள்ளதுமான சிறப்புக்கள். திருவைந் தெழுத்து இறைவன் வடிவமும், திருப்பெயரும் மந்திரமும் இறைவனுமாகவே உள்ளது நினைக.

கொன்றை - ஈண்டுக் கொன்றை மரமாகக் கொண்டாம். மரத்தின் சாம்பல் நிறம் இறைவனின் திருநீறு படிந்த கோலத்தையும், இலை, இறைவனின் இடப்பாக வண்ணத்தையும், மலர்த்தேன் சிவானந்தத்தையும் மலரின் பொன்னிறம் அவன் வலப்பாக வண்ணத்தையும் காய்கள் அவன் சடைகளின் வடிவத்தையும் நினைவூட்டுவன.

இது பற்றி முன்னம் 16-ம் திருப்பாட்டில் "தேனேயும் மலர்க்கொன்றை" என்றதன் கீழுரைத்தவை காண்க. கொன்றை மரத்தைச் சிவபுரத்தின் "காவல்மரம்" என்று கொண்டார் திரு. பாரதியாரவர்கள்.

சிவபுரம் பாடி - சிவபெருமான் எழுந்தருளியுள்ள நகரம். அது சிவலோகம். திருப்பெருந்துறை என்றுரைத்தாருமுண்டு. இறைவன் தன் மெய்யடியார்களின் காயமே கோயிலாகக் கொண்டுள்ளவனுகலின் "அடியார்களின் உடம்பு" எனக் கொண்டார் சீகாழித் தாண்டவராயர் அவர்கள்.

திருச்சடை மேல் வானக மாமதிப் பிள்ளைபாடி - *திருச்சடை* - *திரு* - செல்வம். ஈண்டு ஞானமாகிய செல்வம் குறித்தது. *சடை* - ஞானத்தின் சின்னம். *வானக மாமதி* - விண்வெளியைத் தன் இடமாகக் கொண்டிருந்த பிறைமதி. *மா* - பெருமை. ஞானமாகிய சடையில் தங்கியுள்ள பெருமை. *பிள்ளை* - பிறைமதி. ஞானத்தின் தொடர்பால் பின்னர் வானகத்தில் நின்று முழுமதியாக வளரவுள்ள பிள்ளைப் பிறை. *வானகம்* - ஈண்டு, இறைவன் முடியின் வண்ணம் கொண்டுள்ள அந்தி வானத்தைக் குறித்து நின்றது.

மால் விடை பாடி - *மால் விடை* - பெருமை பொருந்திய விடை. அஃது அறம். இறைவன் இவர்ந்திருப்பதும், அவனுல் வழிநடத்தப் படுவதும் உயர்த்தப்படுவதும் அதற்குள்ள பெருமைகள். திருமாலாகிய விடை எனலுமாம்; அது திரிபுர தகனத்தை நினைப்பித்து எல்லா உலகங்களிலுமுள்ள உயிர்களைக் காத்த பேரருளை வழுத்தியவாறு.

வலக்கை ஏந்தும் ஊனகச் சூலம் பாடி - *வலக்கை* - வலிமையுள்ள கை எனலுமாம். அந்தகாசுரனைச் சூலத்திற் கோர்த்து உயர்த்தித் தாங்கிய வலிமை குறித்தது. *ஊனகச் சூலம்* - அவன் உடம்பின் ஊன் தன் மாட்டுப் படிந்த சூலம். இதனை;

திருச்சிற்றம்பலம்

"அந்தகனை அயிற்சூலத் தழுத்திக் கொண்டார்
அருமறையைத் தேர்க்குதிரை யாக்கிக் கொண்டார்
சுந்தரனைத் துணைக்கவரி வீசக் கொண்டார்
சுடுகாடு நடமாடு மிடமாக் கொண்டார்
மந்தரநற் பொருசிலையா வளைத்துக் கொண்டார்
மாகாளன் வாசல்காப் பாகக் கொண்டார்
தந்திரமந் திரத்தரா யருளிக் கொண்டார்
சமண் தீர்த்தென் றன்னையாட் கொண்டார்தாமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-96-5)

எனவரும் நம் அரசுகள் வாக்கிற் காண்க.

அந்தகாசுரன் வரலாறு:

ஒரு முறை உமையம்மை விளையாட்டாக இறைவனின் பின்புறம் வந்து அவன் விழிகளை மூடினாள். இரு சுடர்களின் இருப்பிடமான விழிகள் மூடப்பட்டமையின் எல்லா உலகங்களையும் நெடுங்காலம் இருள் மூடியது. உயிர்கள் வருந்தின. அவ்வருத்தம் நீக்க இறைவன் நெற்றிக் கண்ணைத் திறந்தான். நெருப்பின் ஒளியால் இருள் நீங்கிற்று. அதன் வெப்பத்தால் அம்மையின் கைத்தலங்களில் வியர்வை பெருகிற்று. அப்பெருக்கமும் வெப்பமுற்று மூடிய கைகளிலேயே சூலுண்டாகி அசுரன் ஒருவன் பிறந்தான். அவன் அந்தகாசுரன் என்னும் பெயருடன் வளர்ந்து நான்முகனை நோக்கித் தவம் புரிந்தான். எவராலும் வெல்லப்படாத பெருவலிமை பெற்றான். செருக்கினால் சிவபெருமான் மீது போருக்கு எழுந்தான். சிவபெருமான் அவனைச் சூலத்திற் குத்தி உயர்த்தினான். அந்தகன் நெடுங்காலம் சூலத்தின் மேல் தொங்கிய நிலையில் துன்புற்றான். முடிவில் இறைவனைத் துதிக்கத் தொடங்கினான். இறுதியில் இறைவன் அருள் பெற்றுச் சிவகணங்களுள் ஒருவனாகி உயர்ந்தான். இவ்வரலாறு சிவ மகா புராணத்தில் காணப்படுகின்றது.

மாமழு பாடி - வலக்கை என்பதை ஈண்டும் கூட்டி வலது கையில் ஏந்தியுள்ள பெருமை பொருந்திய மழுவைப் பாடி என்றுரைக்க. மழுவுக்குப் பெருமையாவது பகைவர் எவர்மீதும் எய்யப்படாமல்* இறைவன் திருக்கரத்தில் சாங்கமாக மட்டும் நின்று திருவருளாகவே உயிர்களை ஓம்புவது. இது பற்றி முன்னம் கீர்த்தித் திருவகவல் (2-ல்) உரையில் மேற்கோள் காட்டிய சிவஞான சித்தியார் சுபக்கம்-சூத்திரம் 1 - செய்யுள் 47-ன் குறிப்புரையில் கூறியவை காண்க.

மான் மழு என்று பாடம் கொண்டு, திருவலக்கையில் ஏந்தும் அறம் பொருள் இன்பம் வீடான நாற்பாத மானை - என்றுரைத்தார் சீகாழித் தாண்டவராயர். மான் இடக்கரத்தில் ஏந்தப்படுவது ஆதலின் இப்பாட பேதத்தின் பொருத்தம் ஆய்வுக்குரியது.

உம்பரும் இம்பரும் உய்ய அன்று நஞ்சு போனகமா உண்டல் பாடி - *உம்பர்* - விண்ணுலக வாசிகள். இறைவன் நஞ்சுண்டமையால் அவர்கள்

---

* "*தொடர்த்து ளைக்கைவெண் மருப்புரற் காற்கருந் தோற்றோ*
லுடுத்த **மெய்ப்பரன் கொலைகுறித் தெடாமழு வொப்ப**
அடைத்த லைக்குறித் திடாதசெம் மணிக்கத வடுத்த
கடைத்த லைக்கண்மா தவர்குழா நெருங்குதல் கண்டார்"
(பிரபுலிங்க லீலை - வசவண்ணர் கதி 22)

அந்நஞ்சினால் இறந்தொழியாமல் உய்ந்தனர். **இம்பர்** - மண்ணுலக வாசிகள். இறைவன் நஞ்சுண்டமையால் நீலகண்டனானான். திருநீலகண்டத்தைத் துதித்து மண்ணுலக வாசிகள் உய்ந்தனர். **அன்று**- திருப்பாற்கடலில் ஆலகால நஞ்சு எழுந்த அக்காலத்தில். **போனகமா**- போனகமாக என்பதின் ஈறு கெட்டது. **போனகம்** - உணவு.

இத்திருப்பாடலில் வரும் தேனகமாமலர் தன் மாட்டுள் சிவானந்தத்தை உயிர்கள் துய்க்க ஏந்துதலையும்; சிவபுரம் அந்தச் சிவானந்தத்தின் நிலைக்களனையும்; மதிப்பிள்ளை, புகலடைந்தாரைப் புரத்தலையும்; விடை அறத்தை ஓம்புதலையும், மழு, திருவருளே இறைவன் வடிவமும் சாங்கமும் என்பதையும், சூலம் உயிர்களின் மாசறுத்தலையும் நஞ்சுண்டல் கண்ணோட்டத்தையும் குறிப்பாலுணர்த்தி நின்றன.

இத்திருப்பாடலின்கண் இறைவனின் மாலை, நகர், அணி, ஊர்தி, படை முதலியவற்றையும் பாடுவது கூறப்படலின் மனம் மகிழ்ச்சியால் நிரம்பியது பெற்றும். அவன் நஞ்சுண்டமையால் விண்ணுலக வாசிகள் இறப்பதினின்றும் தற்காலிகமாகவேனும் தப்பினர். ஆனால் அந்நஞ்சு நிற்கும் நீல கண்டத்தை வழுத்துவதால் நாம் பிறப்பு இறப்புக்களின்றும் நிரந்தரமாக விடுபட்டு வீடுபேறு அடையவுள்ளோம் என்று பெறப்படுதலின் நெஞ்சம் அம்மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்ந்து மறைதல் பெற்றும். இவற்றால் "**ஆனந்த மனோலயம்**" புலனாதல் காண்க.

212. அயன்றலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்க னெயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலா லுதைத்தல் பாடி
இயைந்தன முப்புர மெய்தல் பாடி
ஏழை யடியோமை யாண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ண மிடித்து நாமே கஅ

(இ - ள்)

நான்முகனின் தலையைப் பந்தாகக் கொண்டு செண்டினால் விளையாடிதை இசையாற் பரவி; செங்கதிரவனின் பற்களை உகுத்ததை இசையாற் பரவி; யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்துக் கொண்ட செயலை இசையாற் பரவி; கூற்றுவனைக் காலால் உதைத்து ஒறுத்த செயலை இசையாற் பரவி; ஒன்று கூடிய மூன்று புரங்களை அழித்த செயலை

இசையாற் பரவி; ஒன்றுக்கும் பற்றுத அடியோங்களை ஆளாக் கொண்ட திருவருளை இசையாற் பரவி; மகிழ்ச்சியில் நிலை பெற்று; இடைவிடாது கூத்தியற்றித் தலைவற்கு நாமே சுண்ணம் இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலுக்கு ஆற்றெழுக்காகப் பொருள் காண்க.

அயன்தலை கொண்டு செண்டு ஆடல் பாடி - ***அயன்தலை*** - கிள்ளிக் களையப்பட்ட நான்முகனின் தலை. ***கொண்டு*** - பந்தாகக் கொண்டு.

அயன்தலை கொண்ட வரலாறு - நான்முகன் முன்னம் சிவபெருமானைப் போன்றே ஐந்து தலைகளைக் கொண்டிருந்தான். நாம் சிவனைப் போன்று ஐந்து தலைகள் கொண்டுள்ளோம். மேலும் படைத்தல் தொழில் நமக்குரியது. ஆதலின் சிவபெருமானை விட உயர்ந்த நிலையினம் என்று செருக்குற்றுன். இறைவன் வயிரவமூர்த்தியை ஏவினுன். அவரைக் கண்ட நான்முகன் "என் மகனே! வா" என்று செருக்குடன் அழைத்தான். அவ்வாறு அழைத்த ஐந்தாவது தலையை வயிரவ மூர்த்தி கிள்ளிக் களைந்தான். இவ்வரலாற்றை;

திருச்சிற்றம்பலம்

"**ஆதிக்கண் ணுன்முகத்தி லொன்று** *சென்று*
அல்லாத சொல்லுரைக்கத் **தன்கை வாளால்**
சேதித்த *திருவடியைச் செல்ல நல்ல*
சிவலோக நெறிவகுத்துக் காட்டு வானை
மாதிமைய மாதொருகூ றுயி ஞனை
மாமலர்மே லயனெடு மாலுங் காணு
நாதியை நம்பியை நள்ளாற் றுனை
நானடியே னினைக்கப் பெற் றுய்ந்த வாறே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-20-1)

எனவரும் நம் அரசுகள் தேவாரத்தில் காண்க. காஞ்சிப் புராணம் வயிரவேசப்படலத்துள்ளும் காண்க. மேற்கண்ட தாண்டகத்தில் "ஆதிக் கண்ணுன்" 'ஆதிக்கண்ணுன்' - என வருவது நான்முகனின் பெயர்களில் ஒன்று. "அல்லாத சொல்" "என் மகனே வா" என்ற தகுதியற்ற சொல்.

செண்டு - தலைப் பகுதியில் இருபிளவாக வளைந்து ஒவ்வொரு பிளவின் நுனியும் சுருண்டுள்ள நீண்ட கம்பு. இதனால் பந்தை அடித்து விளையாடுவர். அஃது இந்நாளில் காணும் "ஹாக்கி", "கிரிக்கெட்" போன்ற விளையாட்டு. நகரின் எல்லையில் இத்தகைய விளையாடல்கள் நிகழும் வெளியிடங்கள் இருந்தன என்பதும்; "அவ்விடங்கள் செண்டணை வெளி" என வழங்கின என்பதும் இலக்கியங்களில் காணவுள்ளன. பெரிய புராணம் - திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் 82-ம் பாடல் பார்க்க.

அருக்கன் எயிறு பறித்தல் பாடி - இதுபற்றி முன்னம் 189-ம் திருப்பாடலில் "அலர் கதிரோன் பல் தகர்த்து" என்றதன் கீழ் விளக்கினும்.

கயம்தனைக் கொன்று உரி போர்த்தல் பாடி - முன்னம் 123-ம் திருப்பாடலில் "கரியுரித்த வரலாறு" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

காலனைக் காலால் உதைத்தல் பாடி - காலால் உதைத்தல் - உதைத்தல் என்றாலே அமையும்; "*காலால்*" என்றது எற்றுக்கு எனின், வேறு சேனைகள், படைக்கலங்கள் முதலிய துணைகளின்றிக் கைகளையும் பயன்படுத்தாமல் ஒரு காலால் மட்டும் வென்றான் என்னும் எளிமை தோன்றற் பொருட்டென்க. முன்னம் 49-ம் திருப்பாடல் உரையில் "கூற்றுவன் எதிர் ஏற்று வந்து தாமரைத் தாளுற்ற வரலாறு" என்றதன் கீழுரைத்தவை பார்க்க.

இயைந்தன முப்புரம் எய்தல் பாடி - இயைந்தன - பன்னெடுங்காலத்துக்கு ஒருமுறை சில நொடிகள் மட்டும் விண்ணில் ஓரிடத்தில் ஒரு நேர்கோட்டில் இணைந்து நிற்கும் முப்புரங்கள். இதுபற்றி முன்னம் திருவண்டப் பகுதி 158-ம் உரையில், "ஏற்றார் மூதூர் எழில் நகை எரியின் வீழ்வித்த வரலாறு" என்றதன் கீழுரைத்தவை காண்க.

ஏழை அடியோமை ஆண்டு கொண்ட நயம் தன்னைப் பாடி - அவன் தலை கொண்டது; அருக்கன் எயிறு பறித்தது; கயம்தனைக் கொன்று உரி போர்த்து; காலனை உதைத்தது, முப்புரம் எரித்தது ஆகிய ஐந்தும் தீயவரை ஒடுக்குதல். ஏழை அடியோமை ஆட்கொண்டது அடுத்து நிகழ்த்த வேண்டிய அருளிப்பாடு. இதைச் சிஷ்ட பரிபாலனம் என்பர். இவை முறையே பிரதாபம் (வீரம்) என்றும் கீர்த்தி என்றும் வழங்குவன. இவ்விரண்டையும் இணைத்துக் கோபப்பிரசாதம் என்று திருமுறையில் வழங்கினர். ஐம்பொறிகள் வழிச் செல்லும் பாசத்தை நீக்கிய பின்பே திருவருள் பாலிக்கப்படுவதைக் குறிப்பால் உணர்த்திற்று.

நயம் - விருப்பம். ஈண்டுத் திருவருளை உணர்த்தி நின்றது.

நின்று - இவ்வாறு இறைவன் வீரத்தையும் திருவருள் பாலித்தலையும் தொடர்ந்து இசையால் வழுத்துவதில் பெருகிய பெருமகிழ்ச்சியில் நிலை பெற்றிருந்து.

ஆடி ஆடி - அம்மகிழ்ச்சிப் பெருக்கால் தன் வயமிழந்து எழுந்து தொடர்ந்து கூத்தியற்றி.

இத்திருப்பாடலின்கண் இறைவனின் வீரச் செயல்களை இசையால் பரவி வழுத்துதல் கூறப்பட்டது. அதனால் உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பியது பெற்றும். அம்மகிழ்ச்சியின் மிகுதியாதல் தன் வயம் இழந்து இடைவிடாது கூத்தாடுதல் கூறப்பட்டது. அந்நிலையில் மனம் அம்மகிழ்ச்சிப் பெருக்கில் மூழ்கி மறைதல் பெற்றும். இவற்றால் "ஆனந்த மனோலயம்" புலனுதல் காண்க.

213. வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லை பாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டுநின் றாடு மரவம் பாடி
ஈசற்குச் சுண்ண மிடித்து நாமே கக

(இ - ள்)

வட்ட வடிவமான கொன்றைப்பூ மாலையை இசையால் வழுத்தி; உன்மத்த மலரையும் இசையால் வழுத்தி; பிறை நிலவையும் இசையால் வழுத்தி; ஒழுக்கத்தால் திருத்தமாக உள்ளவர்கள் வாழும் அழகிய தில்லை நகரை இசையால் வழுத்தி; சிறிய ஆடரங்கில் எழுந்தருளியுள்ள எங்கள் திருவை இசையால் வழுத்தி; அரையிற் கட்டியுள்ள பாம்பாகிய கச்சையினை இசையால் வழுத்தி; கையில் அணிந்துள்ள பாம்புக் காப்பை இசையால் வழுத்தி; முன்கையில் அணியப்பட்டுள்ளதும் படம் விரித்து ஆடுவதுமான பாம்பை இசையால் வழுத்தி; இறைவனுக்குச் சுண்ணம் நாமே இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலின் முதலடியிலுள்ளவற்றை "கொன்றை மலர் வட்ட மாலை" என மாற்றிக் கொண்டு பாடல் முழுவதுக்கும் உரை காண்க.

கொன்றை மலர் வட்டமாலை பாடி - கொன்றை மலர்களால் வட்டமாக அமைக்கப்பட்ட மாலை. தலையைச் சுற்றி வரும் வகையில் தொடுக்கப்படுதலின் இது வட்டமாயிற்று. மாலை வகைகளில் இதைக் "கண்ணி" என்றும் "இண்டை" என்றும் வழங்குவர். திருவைந் தொழில்களில் இது படைத்தலின் சின்னமாகக் கொள்ளப்படுவது. கொன்றை இறைவனின் அடையாள மாலையாதலை முன்னம் 53-ம் திருப்பாடலுரையில் "ஏற்றினே" என்றதன் விளக்கத்தில் எடுத்தாண்ட புறநானூறு - கடவுள் வாழ்த்துப் பாடலாலறிக.

மத்த மும் பாடி - இறைவன் சென்னியிற் சூடியுள்ள உன்மத்த மலரைப் பாடி. இதை ஊமத்தம்பூ என்றும் வழங்குவர். அது முதலெழுத்துக் கெட்டு "*மத்தம்*" என நின்றது. "உன்மத்த சேகரன்" சிவ சகத்திர நாமங்களுள் ஒன்று. இம்மலரை அழித்தல் தொழிலின் சின்னமாகக் கூறுவர்.

மதியும் பாடி - இறைவன் திருமுடியில் உள்ள பிறை நிலாவை இயைால் வழுத்தி. பிறைநிலாவை காத்தல் தொழிலின் சின்னமாகக் கூறுவர். உம்மைகள் இரண்டும் எண்ணும்மைகள். **மத்தம் மதி** என்ற முரண் காண்க.

சிட்டர்கள் வாழும் தென்தில்லை - சிட்டர்கள் - மறையாகமங்களைக் கற்று ஒழுக்கத்தால் இனித் திருத்த வேண்டியதில்லாது திருத்தமாக உள்ளவர்கள்; ஈண்டு தில்லை வாழந்தணர்களைக் குறித்து நின்றது. **சிட்டம்** - செப்பம் என்றதன் அடியாகத் தோன்றிய சொல். ஈண்டு;

திருச்சிற்றம்பலம்

" பட்டைத் துவராடை படிமங் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
***சிட்டர்** வாழ்தில்லைச் சிற்றம் பலமேய*
நட்டப் பெருமானை நாளும் தொழுவோமே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 1-80-10)

என்பது காண்க. **வாழும்** - நிலையாக வசித்து வரும்.

சிற்றம்பலத்து எங்கள் செல்வம் - செல்வம் - அடியார்களின் சொத்தாக உள்ளவன் அம்பலவாணன். சிவபுராணம் 94 உரையில் எடுத்தாண்ட திருமுறை (1-80-5) பாடல் பார்க்க.

கட்டிய மாசுணக் கச்சை - கட்டிய - அரையைச் சுற்றி அணிந்த. ***மாசுணக் கச்சை*** - பாம்பாகிய அரைக்கச்சு. இதனை "உதர பந்தம்" என்பர் வட நூலார். இதனை குண்டலினி என்றும் திரோதான சத்தி என்றும் கூறுவர். இது திருவைந் தொழிலில் ***மறைத்தலைக்*** குறிப்பாலுணர்த்திற்று. முன்னம் 135-ம் திருப்பாடலில் "பட அரவக் கச்சையனே" என்றதன் கீழுரைத்தவை காண்க. திருவண்டப் பகுதி (அடி 96)ல் "கரும்பணக் கச்சைக் கடவுள்" என்றருளியதும் ஆங்கு விளக்கியவையும் காண்க.

கங்கணம் பாடி - "கட்டிய" என்பதை ஈண்டும் புணர்த்துக் "கட்டிய கங்கணம்" என்றுரைக்க. ***கட்டிய*** - அணிந்த. ***கங்கணம்*** - காப்பு.

கவித்த கைம்மேல் இட்டு நின்று ஆடும் - கவித்தகை - அம்பல வாணனின் தூக்கிய திருவடியைச் சுட்டிக் காட்டும் இடது முன்கரம். ***இட்டு*** - அணியாக இடப்பட்டு. ***"நின்று"*** - ஆங்கே நிலைபெற்று. ***ஆடும்*** - படம் விரித்து ஆடுகின்ற. இது திருவைந்தொழிலில் "அருளலை"க் குறிப்பாக உணர்த்திற்று.

இத்திருப்பாடலில் காணும் கொன்றை மாலை, மத்தம், மதி, கங்கணம் என்பன இறைவனின் உபாங்கங்கள். கவித்தகை பிரத்தியங்கம். அரவம் - சாங்கம். இவையனைத்தும் திருவருளேயாம். இவை பற்றி முன்னம் கீர்த்தித் திருவகவல் (1-ல்) "திருவடி" என்றதன் கீழெடுத்தாண்ட சிவஞான சித்தியார் சுபக்கம் சூத்திரம் 1. செய்யுள் 47-ம் பாடலும் விளக்க உரையும் காண்க.

இங்ஙனம் சிவபெருமானின் உபாங்கம், பிரத்தியங்கம், சாங்கம் என்பவற்றை இசையால் வழுத்த மனம் மகிழ்ச்சியால் நிரம்பிற்று. அவ்வாறு இடைவிடாது பாடி வழுத்தும் சிவபுண்ணியத்தால் இறைவனின் வீசிய கரம் வீட்டுலகம் காட்டும் பேறு கிட்டியது. அதனால் மனம் அம்மகிழ்ச்சிப் பெருக்கில் மூழ்கி மறைந்தது. இதனால் ***"ஆனந்த மனோலயம்"*** புலனாதல் காண்க.

214. வேதமும் வேள்வியும் மாயி னார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயி னார்க்குச்
சோதியு மாயிரு ளாயி னார்க்குத்
துன்பமு மாயின்ப மாயி னார்க்குப்
பாதியு மாய்முற்று மாயி னார்க்குப்
பந்தமு "மாய்வீடு" மாயி னார்க்கு
ஆதியு மந்தமு மாயி னார்க்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே உ௦

(இ - ள்)

"மறைகளும் அவற்றின் வழி வேட்கும் வேள்விகளும் ஆனவரும்; மெய்ப் பொருளும் பொய்ப் பொருமானவரும்; ஞானப் பேரொளியும் அஞ்ஞான இருளும் ஆளவரும்; துன்ப உணர்வாகவும் இன்ப உணர்வாகவும் ஆனவரும்; பாதிப் பங்காகவும்; முற்று முதலாகவும் ஆனவரும்; கட்டாகவும் அதனின்று விடுதலையும் ஆனவரும்; முதலும் முடிவுகளுமான இறைவனுக்குத் திருமுழுக்காடற் பொருட்டு அழகிய சுண்ணம் நாமே இடிப்போம்.

(வி - ரை)

இத்திருப்பாடலுக்கு ஆற்றெழுக்காகப் பொருள் காண்க.

***வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு* - வேதம்** - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களாக உள்ளவர். பேரூழியில் உலகங்கள் அனைத்தும் மாயையுள் ஒடுங்கும். மீண்டும் புனருற்பவத்தின் பொருட்டு இறைவன் சுத்த மாயையின் ஒரு பகுதியைக் கலக்குவன். அவ்வாறு கலகுண்ட பாகம் நாததத்துவமெனப் பெயர் பெறும். இறைவன் அதை, அதித்திட்டு நிற்பன். அங்கு சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் எழுத்தோசைகள் ஒன்றற் கொன்று காரணமாய்த் தோன்றும். அவற்றை நால்வகை வாக்குக்கள் என்பர். அவற்றினின்றும் உலகிலுள்ள எல்லா மொழிகளும் தோன்றும். அவ்வாறு தோன்றியவையே எழுதாக் கிளவியாகிய நான்மறைகள். அவற்றின் காரணமான நாததத்துவ வழி இறைவன் நான் மறைகளிலும் அதிட்டித்து நிற்பன். ஆதலின் "வேதமுமாயினார்க்கு" என்றான்.

வேள்வி - மறைகளின் கன்மகாண்டத்தில் சொல்லப்பட்ட வேள்விகள். இறைவன் வேள்வித் தீயில் எழுந்தருளி அவிகளை ஏற்றுக் கொள்வதாலும் அவனை "வேள்வியு **மாயினூர்**" என்றூர்.

மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினூர்- **மெய்ம்மை** - எக்காலத்தும் அழியாமல் நிலைத்திருக்கும் பொருள். அது பதி ஒன்றே. ஆகலின் இறைவனை **மெய்ம்மையும் ஆயினூர்** என்றூர். **பொய்ம்மை** - ஒரு காலத்தில் தோன்றிக் குறிப்பிட்ட காலம் வரை நிலைபெற்றுப் பின்னர் அழிந்து விடும் பொருள்கள். அவை மாயையின் காரியங்களாகிய மாயேயங்கள். இறைவன் சுத்த மாயா காரியங்களில் எழுந்தருளி இருந்து இயக்குதலின் அவனைப் பொய்ம்மையும் ஆயினூர் என்றூர். இறைவன் மெய்யடியார்களுக்கு மெய்யாயும் அல்லாதார்க்குப் பொய்யாயும் உளன் எனலுமாம். 206-ம் பாடலில் உரைத்தவை காண்க. ஈண்டு,

திருச்சிற்றம்பலம்

"**மெய்யானைத்** தன்பக்கல் விரும்பு வார்க்கு
விரும்பாத வரும்பாவி யவர்கட் கென்றும்
பொய்யானைத் புறங் காட்டி லாட லானைப்
பொன் பொலிந்த சடையானைப் பொடிகொள் பூதிப்
பையானைப் பையரவ மசைத்தான் தன்னைப்
பரந்தானைப் பவளமால் வரைபோல் மேனிச்
செய்யானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிக்கட் சேரா தாரே"

திருச்சிற்றம்பலம்

(திருமுறை 6-66-5)

என வருவன காண்க.

சோதியுமாய் இருள் ஆயினூர்க்கு - அடியவர்களுக்கு ஞானப் பேரொளியாயும் அல்லாதவர்களுக்குப் பேரிருட் பிழம்பான அஞ்ஞான மாயும் ஆயினவர்க்கு. இருள் - ஈண்டு திரோதான சத்தியைக் குறித்து நின்றது. "சோதியனே துன்னிருளே தோன்ருப் பெருமை யனே (சிவபுராணம் 72) என்றூர் முன்னரும்.

துன்பமுமாய் இன்பம் ஆயினூர்க்கு - மறை ஆகமங்களில் விலக்கியவற்றைக் கைக்கொண்டு ஒழுகியவர்களுக்குத் துன்பமாயும்

விதித்தவற்றைக் கைக்கொண்டு ஒழுகியவர்களுக்கு இன்பமாயும் ஆனவருக்கு.

பாதியுமாய் முற்றும் ஆயினார்க்கு - பாதியுமாய் - இறைவியைத் தன்னுள் ஒரு கூறு வெளிப்படுத்தி நிற்றலின் பாதியாயிற்று. *முற்றும்* - அவ்விறைவியைத் தன்னுள் ஒடுக்கி நிற்றலின் முற்றும் ஆயிற்று.

"பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்"

(புறநானூறு - கடவுள் வாழ்த்து 7-8)

என்பது நினைக.

பந்தமும் வீடும் ஆயினார்க்கு - பந்தம் - என்றது திரோதன சத்தி வாயிலாக ஆணவத்தின் சத்தியை இயக்கி உயிர்களைப் பிறவிக் கடலுள் அலைத்து மலபரிபாகம் வருவித்தல். *வீடு* - மலபரிபாகம் பெற்ற உயிர்களை முத்தியின்பத்தில் உய்த்தல். வீடாவான் இறைவனே என்றவாறு. முன்னம் திருவண்டப் பகுதி 52-ல் "பந்தமும் வீடும் படைப்போன்" என்றதன் கிழுரைத்தவை காண்க. ★

ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு - ஆதியும் - பேரூழிக் காலத்தில் சடப்பொருள்கள் அனைத்தும் மாயையுள் ஒடுங்கிவிடும். உயிர் போதிய அளவு ஓய்வு பெற்றபின் அவை மலபரிபாகம் பெறும் பொருட்டுப் புனருற்பவத்துக்காக இறைவன் மீண்டும் படைத்தல் தொழிலைத் தொடங்குவான்; உயிர்களுக்குத் தனு கரண புவன போகங்கள் கிட்டும். அவை உயிர்களுக்கு ஒரு தொடக்கமாக அமையும். அவை "*ஆதியாம்*". ஈண்டு அப்படைத்தல் தொழிலைச் செய்பவனை "*ஆதி*" என்றார். *அந்தமும்* - பேரூழிக் காலத்தில் சடப்பொருள்கள் அனைத்துக்கும் முடிவாகிய *அந்தத்தை* செய்வான். அவ்வாறு அந்தம் செய்பவனை "*அந்தமும்*" என்றார். உம்மைகள் இரண்டும் எண்ணும்மைகள். ஈண்டு, முன்னம் 26-ம் திருப்பாடலுரையில் "முதல் அந்தம் ஆயினனே" என்றதன் கிழுரைத்தவை நினைக.

★ It can never be that while the Judge will order imprisonment the Jailor will give release. Just as the Judge's order is necessary for imprisonment, so it is also necessary for the release.

- Sir John woodroff

இறைவன் அநாதியானவன் அந்தமும் இல்லாதவன். அவனே ஈண்டு "**ஆதியும் அந்தமும் ஆயினர்**" என்றது நயம். **ஆயினர்** என்ற சொல்லாற்றலால் அவ்வாறு ஆவதன்முன் அவன் அநாதியாயும் அந்தம் இல்லாதவனுக இருந்தான் என்பது போதரும்.

இத்திருப்பாடலில் சிவபரஞ்சுடரின் இயல்களை உடன்பாடாகவும் எதிர்மறையாகவும் அமைத்துப் பாடி வருதல் கூறப்படுகின்றது. அதனுல் மனம் மகிழ்ச்சியால் நிரம்பிற்று. இறுதியில் வீடு பேருகவும் உள்ள அவன் இயல்பைப் பாடுங்கால் மனம் அம்மகிழ்ச்சியுள் ஆழ்ந்து மறைந்தது. இதனுல் "**ஆனந்த மனேலயம்**" புலனுதல் காண்க.

தொகுப்புரை:

தோழியரே! நாம், நம் இறைவன் திருமுழுக்குக்குப் பொற்சுண்ணம் இடித்தல் வேண்டும். சுண்ணம் இடிக்கும் இடத்தைத் தூய்மை செய்து சுண்ணத்துக்கான திரவியங்களை அங்கு வையுங்கள். அவ்விடத்தில் முத்து மாலை மலர்மாலை முதலியவற்றைத் தொங்கவிடுங்கள். சத்தி, சோமி, பூதேவி, நாமகள் ஆகியோர் இறைவனுக்குப் பல்லாண்டு பாடுங்கள். சித்தி, கௌரி, பார்வதி, கங்கை ஆகியோர் வந்து கவரி வீசுங்கள்.

நம் தலைவனும் ஐயாறப்பனும் மலர்களணிந்த சடையை யுடையவனும் கூத்தியியற்றுபவனும் உமையம்மையுடன் வந்து நம்மை ஆட்கொள்பவனும்; இந்திரன், திருமால் முதலியவர்களின் நாயகனும்; செவ்வேட் பரமனின் தந்தையும்; ஏகாம்பர நாதனும்; நாயினும் இழிந்த நம்மை ஆட்கொண்டவனும்; தில்லைவாணனும்; நீலகண்டனும்; விண்ணுலக வாசிகளுக்கு அமுதம் போன்றவனும்; மாணிக்கக் கூத்தனும், பொய்யர்கட்குப் பொய்யாயும்; மெய்யடியார்கட்கு மெய்யாயும் உள்ளவனும்; உமையம்மைக்குக் கணவன், மகன், தந்தை, தமையன் என்ற முறையினனும்; கங்கையும் நாகமும் பொருந்திய சடைமுடியினனும்; ஞானக் கரும்பின் தெளியும்; வெல்லப் பாகும் தேனும் கனியின் சுவையுமாக உள்ளவனும்; நம் உள்ளம் புகுந்து மதுரச்சுவை நல்குவோனும்; தேவர்களுக்குக் கனவினும் காண்டற்கரிய திருவடிகளை, நமக்குக் காட்டியவனும்; ஆனேற்றுக் கொடியினனும்; மறைகளும் வேள்வியும் மெய்ம்மையும் பொய்ம்மையும்; ஒளியும் காரிருளும், துன்பமும் இன்பமும்; மாதொருபாக மூர்த்தத்தில் பாதியாயும் ஏனைச் சிவ மூர்த்தங்களில் முற்றுமாயும்; ஆதியும் அந்தமுமானவன் நம் சிவபெருமான். அவன் திருமுழுக்குக்குப் பொற்சுண்ணம் இடித்தல் வேண்டும்.

பிளந்த மாவடு போன்ற விழியினரே! வந்து பாடுங்கள். புறத்தே நிற்கும் தொண்டர்களையும் உள்ளே அழையுங்கள்.

திருநீறு அணிந்து கொள்ளுங்கள். இவ்விடத்தை மெழுகிப் பொற்றுகளாற் கோலமிட்டு, வாழை மரங்கள் கட்டி ஒப்பனை செய்யுங்கள்; பொன்னாலும் மணிகளாலும் ஒப்பனை செய்து விளக்குக்கள் ஏற்றி விடைக் கொடியை உயர்த்திச் சுண்ணம் இடிக்கத் தொடங்குங்கள்.

அயன் திருமால் இந்திரன் தேவர்கள் முணுமுணுக்கும் விண்ணுலக வாசிகள் முதலிய எவரும் நமக்கு முன் அறுகெடுக்க இசையாதீர்கள். பெரியோர்கள் பலர் சுண்ணமிடிக்கப் பல உலக்கைகளைக் கைக்கொண்டு வந்தனர். இந்நிகழ்ச்சியைக் காண அடியவர்கள் பலர் வந்துள்ளனர். அவர்கள் இருக்க இவ்வுலகின் பரப்பு முழுவதும் போதாது என்னும்படி வந்துள்ளனர்.

நம் கைவளையல்களும், தோள்வளைகளும் ஒலிக்கவும்; மெய்யடியார்கள் சிவநாம முழக்கம் எழுப்பவும்; பாமர மக்கள் நம்மைப் பரிகாசம் செய்யவும்; நாம் அவர்களை எள்ளி நகையாடவும்; திருநீற்றுப் புண்டரம் நம் தோள்களில் விளங்கவும்; உலகை உரலாகவும், மேருமலையை உலக்கையாகவும் கொண்டு மெய் என்னும் மஞ்சளை நிறையப் பெய்து; நம் கொங்கைகள் விம்மவும் கூந்தலில் மலர்மாலையும் வண்டுகளும் ஆரவாரம் செய்து ஆடவும் இறைவனைப் பாடிச் சுண்ணம் இடியுங்கள்.

சிவபெருமானின் வீரத்தையும் புகழ்களையும், அவன் அணிந்துள்ள அணிகள் மாலைகள் முதலியவற்றையும் பாடல் பொருள்களாகக் கொண்டு, மறைகளும் வேள்வியும்; மெய்ம்மையும் பொய்ம்மையும்; ஒளியும் இருளும்; இன்பமும் துன்பமும்; மாதொருபாக மூர்த்தமும் ஏனைய சிவமூர்த்தங்களும்; கட்டும் வீடு பேறுமாயுள்ளவனின் புகழ்களைப் பாடிக் களி நடம் புரிபவர்களாகப் பரவசமாகி நாமே அவனுக்குப் பொற்சுண்ணம் இடிப்போம்.

தலவிசேடம் :

தில்லை : கீர்த்தித் திருவகவல் உரையின் ஈற்றிற் காண்க.

திருச்சிற்றம்பலம்

அன்பர் ஒருவரின் ஐய வினுக்களும் உரையாசிரியரின் தெளிவுரைகளும்.

கடிதம்:

திருவாசகம் சிவக்குடில் விளக்க உரை படித்தேன். தோத்திர நூல்களில் மட்டுமன்றிச் சாத்திர நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டி எழுதியிருப்பது மனத்தை மிகவும் கவர்ந்தது.

அதில் அடியேனுக்கு ஒரு சிறு ஐயம். தயவு செய்து விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வினு 1

முதற்பகுதி பக்கம் 34-35-வரி 28-ல் "*கல்லாய்*" என்பதற்கு விளக்கம் எழுதும் பொழுது கற்களுக்கும் உயிருள்ளது என்று எழுதியுள்ளீர்கள். அடிக்குறிப்பிலிருந்து நாம் கண்ணுல் காணும் "*கல்லே*"யே தாங்கள் குறிப்பதாகத் தோன்றுகின்றது.

நாம் கண்ணுல் காணும் கல்லுக்கு உயிருண்டு என்ருல் நமது சைவ சித்தாந்த மரபுப்படி அது "நால்வகைத் தோற்றம் எழுவகைப் பிறப்புக்களில்" ஒன்ருகத் தானே இருக்க வேண்டும்? ஆகவே, இந்தக் கல் நால்வகைத் தோற்றத்தில் எந்தத் தோற்றம் என்றும் எழுவகைப் பிறப்புக்களில் எந்தப் பிறப்பு என்றும் எனக்குத் தெளிவு இல்லே; தயவு செய்து என் ஐயத்தைப் போக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

வினு 2

பக்கம் 35-ல் "*அகலிகை கல்லதானுள்*" எனவரும் சிவஞான சித்தியார் பாடலே மேற்கோள் காட்டியுள்ளீர்கள். இந்த இடத்தில் அடியேனுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அதில் உள்ள தவறையும் சுட்டிக் காட்டும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மேற்கூறப்பட்ட மேற்கோள், கன்ம மலத்தின் காரணமாக உயிர்கள் அச்சு மாறிப் பிறக்கும் என்ற பகுதியில் வருகின்றது.

அகலிகை கல்லானது சாபத்திஞலேயே என்றும், அஃது எவ்வாறு கன்ம மலத்திஞல் வரும் என்றும், எழும் ஆசங்கைக்கு விடை கூறும் முறையில் அருண நந்தி சிவாசாரியார் "சாபமும் அருளும்

அவரவர் செயலுக்கு ஏற்பவே நிகழும்" என்று விளக்குமிடத்தில் இவ்வாறு விளக்குகின்ருர்.

இதற்கு அடியேன் பின்வருமாறு கருதுகின்றேன்.

இந்தப் புவனம் திதிக் காலத்தில் இருக்கும் பொழுது உயிர்கள் கேவல அவத்தையிலிருந்து சகல அவத்தைக்கு வந்து, தனு கரண புவன போகங்களைப் பெற்றுச் சிறிது அறிவு விளக்கம் பெற்றுப் பிறவா நிலைக்கு முயல வேண்டும், இந்த உலகத்தில் ஓர் உயிர் ஓர் உடம்பிலிருந்து பிரிந்து விட்டால் அது மற்ருெரு உடம்புக்குள் புக வேண்டும். அவ்வாறு புகுவதற்குக் கால தாமதம் ஏற்படுமாளுல் அந்த இடைப்பட்ட காலத்தில் அந்த உயிருக்குத் தனு கரணங்கள் இரா. எனவே அந்த உயிருக்கு அறிவு விளக்கமும் அசைவும் இரா. அந்த ஆன்மா கேவல அவத்தையிலிருந்து சகல அவத்தைக்கு வந்து விட்டதாலும், புவனம், திதிக் காலத்தில் இருப்பதாலும் அந்த ஆன்மாவானது சூட்சும உடலுடன் "கல்" போல் கிடக்கும்.

இரா. முருகேசன்
சேக்கிழார் நிலையம்
8, கிழக்குத் தெரு,
நித்தியானந்தபுரம்,
திருச்சிராப்பள்ளி - 620 008.

விளக்க விடைகள் :

விடை எண் 1

எழுவகைப் பிறப்புக்களில் தாவரமும் ஒன்று. அதற்குப் பொதுவாக மரம், செடி, கொடி, புல் பூண்டுகள் என்று மட்டும் பொருள் கொள்கின்ருேம். ஆளுல் அதற்கு நேரான பொருள் "தன் முயற்சியால் இடம் பெயராதவை" என்பதாகும். ஆங்கிலத்தில் Immovables என்பர். தமிழில் "நிலையியற் பொருள்கள்" எனலாம். Movables என்பன தன் முயற்சியால் இடம் பெயர்வன. இவற்றைச் "சங்கமம்" என்பர். தமிழில் "இயங்கியற் பொருள்கள்" எனலாம். அந்த முறையில் "கல்" எழுவகைத் தோற்றங்களுள் "*தாவரம்*" என்ற பிரிவில் அடங்கும்.

நால்வகைப் பிறப்புக்களில் "வியர்வை", "விதை", "முட்டை" என்ற மூன்றினின்றும் உயிர்கள் வெளிப்பட்டதும், அவை வெளிப்படக்

காரணமாய் நின்ற "வியர்வை" முதலிய மூன்றும் அழிந்து விடும். நான்காவதான கருப்பை, அன்னை உடலின் ஓர் உறுப்பாக உள்ளது. அதனினின்றும் ஓர் உயிர் உடலுடன் பிறந்த பின்பும் கருப்பையுடன் கூடிய அன்னையின் உடல் அழிவதில்லை. காலப் போக்கில் மூத்துத் தளர்ந்து மரணமுற்று அழிகின்றது. அவ்வாறே கல்லில் நிற்கும் உயிர், அந்தக் கல்லை விட்டு நீங்கி மேற்கதி எய்திய பின்பும், கல் உடனே அழிவதில்லை. காலப்போக்கில் உடைந்து துகள்களாகி அழிகின்றது. மரம், செடி, கொடி, புல், பூண்டுகளிலும் இவ்வாறே கொள்க. எனவே "கல்" நால்வகைப் பிறப்புகளில் *சராயுசம்* என்னும் "கருப்பையுள்" தோன்றுவனவற்றுள் அடங்கும்.

அகலிகை பற்றிக் கேட்டுள்ளீர்கள். அவள் சாபத்தால் அடைந்த கல் வடிவம் மேற்குறித்த கல்லைப் போன்று படைப்புக் காலத்தில் தோன்றி, தன்னுள் தங்கியிருந்து உயிர் வெளியேறிய பின்பும் இருந்து காலப் போக்கில் அழிந்ததன்று. அவளுடைய அந்தக் கரணங்களுடன் கூடிய பருவுடலே முனிவன் சாபத்தால் கல் வடிவானது. அவள் உயிர் அதனுள் உணர்வும் செயலுமற்று கிடந்தது. இராமன் திருவடி தீண்டியதால் சாப விமோசனம் பெற்று மீண்டும் அந்தக் கரணங்களுடன் கூடிய அவள் உடம்பாயிற்று. அவள் எழுந்த பின்பு அந்தக்கல் அங்கு இல்லை. அவள் உடம்பும் அவன் அன்னையின் கருப்பையில் தோன்றியதாகும்.

விடை எண் 2

இறந்த உடலை விட்டுப் பிரிந்த உயிர் அடுத்த பிறவியில் நுகர்தற்கான பிராரத்த வினை பக்குவமாக ஆயத்த நிலையில் இல்லாவிடில், அது பக்குவமாகும் வரை, புரியட்டக உடலுடன் கல் போலக் கிடக்கும் என்ற தங்கள் கருத்து சரியானதே. சிவஞான சித்தியார்-சுபக்கம்-சூத்திரம் 2- அதிகரணம் 2-ல் "உடல் விடா யோனி பற்றி" எனத் தொடங்கும் 37-ம் செய்யுளை இருவர் உரைகளுடன் தாங்கள் மனங் கொண்டுள்ளீர்கள் என்பது புலனாகின்றது.

திருவாசக விளக்க உரையைத் தாங்கள் ஆழ்ந்து படித்து வருகின்றீர்கள் என்பது தெரிகின்றது. மிக்க மகிழ்ச்சி.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

இந்தப் பகுதியில் வரும் திருவாசகப் பாடல்களின் முதற்குறிப்பகராதி

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவாசக உரையில் இப்பகுதியில் வரும் மேற்கோள் பாடல்களின் முதற்குறிப் பகராதி

திருவாசகம் - விளக்கவுரை (சிவக்குடில் விளக்கம்) - பகுதி 3.
பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
5	14	கபர்த்திகே	கபர்த்திணே
12	6	வோறோர்	வேரூர்
15	9	வகையெழுத்	வகையெடுத்
15	16	முன்னூற் சிறப்பு	நூற்சிறப்பு
16	15	பொருத்தருள்	பொறுத்தருள்
17	6	செவிலிநகர்	செவிலியர்
17	12	பல்வசி	பல்வரி
18	4	பரதியாரவர்கள்	பாரதியாரவர்கள்
25	4	மாறுட்டொழுகும்	மாறுபட்டொழுகும்
29	14	ஙீகாழி	சீகாழி
33	16	வியலென்	வியனென்
33	24	அவன்	அவன் எடுத்த
34	3	வின்னரு	லின்னரு
46	27	னருலாவடு	னருளாவடு
48	6	நிறைநீ	நிறையநீ
53	23	துகர்ச்சியால்	நுகர்ச்சியால்
69	12	றென்பார்	ரென்பார்
71	21	போராயிரமுடைப்	பேரயிரமுடைப்
74	13	வரவாறு	வரலாறு
80	18	யாறிகின்றது	மாறிநின்றது
81	15	குளிர்சி	குளிர்ச்சி
84	25	பொரோ	பொரௌ
85	2	மிகீ இத்தன்	மிகீஇத்தன்
93	3	உணர்தி	உணர்த்தி
97	29	நாலாயிற	நாலாயிர
100	24	ஐம்புலன்காளாலு	ஐம்புலன்களாலும்
103	9	பெருளாக	பொருளாக
105	6	அன்றுவயம்	அன்னுவயம்
107	25	கூநினார்	கூறினர்.
108	3	போல்.	போதும்.
108	6	வேண்டும்	வேண்டும்.

திருவாசகம் - விளக்கவுரை (சிவக்குடில் விளக்கம்) - பகுதி 3.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
124	3	தருனென்ப	தருளென்ப
134	9	இத்திரசால	இந்திரசால
149	8	களிவித்து	கனிவித்து
171	21	பனைத்துணையாகக்	பனைத்துணையாக்
172	8	மலைத்த்தலை	மலைத்தலை
174	12	லோரா	லோரார்
174	29	பிற	பிறரைக்
175	9	அஃறினை	அஃறிணை
175	11	அஃறினை	அஃறிணை
185	15	செய்வீர்	செய்யீர்
211	14	சீரடியால்	சீரடியார்
230	9	கூறுகின்றது	உறுகின்றது.
230	11	முத்தியின்	முத்தியில்
233	8	வெண்டலையான்	வெண்டளையான்
235	13	வடைந்த	வடைத்த
239	27	கம்மித்து	கம்பித்து
253	11	றுண்டோ	றுண்டே
254	5	உறக்ககம்	உறக்கம்
267	15	கோவிலும்	கோவியலும்
269	2	பிறகிருதி	பிரகிருதி
271	11	அரிய இயலான்	அறிய இயலான்
280	25	முந்தூறூஉங்	முந்துறூஉங்
298	8	ஆருருவ வுள்குவா	ஆரொருவ ருள்குவா
301	18	முகேரன்ன	முகேரென்ன
307	18	விண்ணுல கத்தவர்	விண்ணுல கத்தவர்கள்
311	15	இகரச்சாட்டைப்	இகரச்சுட்டைப்
311	15	முன்புணர்க	முன்புணர்க்க.
313	16	வெங்கையர்க்கே	ரெங்கையர்க்கே
315	10	இத்திருப் டலில்	இத்திருப்பாடலில்
325	14	மூத்தர்களைப்	முத்தர்களைப்
325	23	யுடைந்தையாய்ச்	யுடந்தையாய்ச்
331	16	கட்சு	கச்சு

திருவாசகம் விளக்கவுரை (சிவக்குடில் விளக்கம்) - பகுதி 3.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
333	27	முன்னே	உன்னே
339	12	மகளறு	மருளறு
340	5	நுழைந்த	நுழைந்து
346	22	பக்கஜம்	பங்கஜம்
382	23	எழுச்தருளி	எழுந்தருளி
384	26	தீரோதான	திரோதான
390	15	அம்மானேபொருளாய்	அம்மானேப் பாடற்பொருளாய்
391	7	கண்ணுருரித்தகனி	கன்ணுருரித்த கனி
391	9	கண்ணுருரித்த கனி	கன்ணுருரித்த கனி
392	7	ஊமைத சும்பு	ஊமைத்தசும்பு
392	22	ஆடாங்கு	ஆடரங்கு
393	6	அறவர்கள்	அவர்கள்
394	27	அறியாதாவற்றை இப்பொழுது அறிவித்து	காட்டாதன எல்லாம் காட்டி
395	12	கபங்கிக்குர்	பாங்கிக்குத்
395	16	அருளில்	அருளிச்
395	27	ளின்ரு	ளின்று
396	14	சிவபொருமான்	சிவபெருமான்
396	16	காட்டாதள	காட்டாதன
397	29	உள்ளமொரு	உள்ளமொடு
398	24	நுகரம்படும்.	நுகரப்படும்.
399	14	திருவாவடுதுரை	திருவாவடுதுறை
402	30	sancutury	sanctuary
403	10	கைவல்யோபநிடத்தத்தில்	கைவல்யோபநிடதத்தில்
407	26	மலர்கொடுத்தாற்	மலர்தொடுத்தாற்
408	25	கடவு+உன்	கடவு+உள்
417	18	தன் ஆர் தமிழ்	தண் ஆர் தமிழ்
419	10	வடங்கிய	வழங்கிய
429	19	ஒரு உருபை	ஒடு உருபை
432	16	எனச்சாரிகை	எனச்சாரியை
443	17	செயலற்து	செயலற்று

திருவாசகம் - விளக்கவுரை (சிவக்குடில் விளக்கம்) - பகுதி 3.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
447	28	வெறுப்புண்டவன்	ஒறுப்புண்டவன்
448	29	திருவேங்கைக்கோவை	திருவெங்கைக்கோவை
454	9	செவ்வாய்	செவ்வாய்க்
454	9	னுன்ளுருகித்	நுள்ளுருகித்
456	11	நின் மாலியமான	நின்மாலியமான
458	13	சந்தாதி	சத்தாதி
479	4	அளவொத்தமையால்	அளவொத்தமை யாமையால்
498	31	றூழிதோ	தூழிதோ
507	31	திருவளின்	திருவருளின்
517	13	இதிருப்பாடலிலுள்ள	இத்திருப்பாடலிலுள்ள
517	13	"போதரிக்கண்ணினைப்"	"போதரிக்கண்ணிணைப்

சிவத்தொண்டில் ஸ்ரீ சித்தர் ஞானபாடசாலை

தவத்திரு. சர்வோத்தம சச்சிதானந்த நாதேசுவர சுவாமிகளை ஆளாக்கொண்ட மகாயோகியாகிய வியோமரூப சிவசித்தர் பெருமான் அருளாணையின் வண்ணம் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் கோவைப்புதூரில் ''சிவக்குடில்'' அமைக்கப்பட்டது. தவத்திரு. சர்வோத்தம சச்சிதானந்த நாதேசுவர சுவாமிகளின் தவக்குடிலாக இருந்த சிவக்குடிலின் பணிகள், அன்பர்களின் பெருக்கத்திற்கேற்பப் பலநிலைகளிலும் விரிவடைந்தது. சுவாமிகளின் ஆன்ம நாயகராகிய அருள்மிகு ஞானும்பிகை உடனமர் ஞானமூர்த்தி சந்நிதியில் நாள்தோறும் காலையும், மாலையும் நடைபெறும் ஆன்மார்த்த வழிபாட்டில், பரார்த்த பூசைபோல் அன்பர்கள் திரளாகப் பங்குகொண்டு பயன்பெறுகிறுர்கள்.

மாதந்தோறும் முழுநிலவின்போது கூட்டுவிளக்கு வழிபாடு, ஆடித்திங்கள் முழு நிலவன்று ஸ்ரீ சித்தர் பெருமான் குருபூசை, கந்தர்சஷ்டி விழா, நவராத்திரி, கிருத்திகை, சதுர்த்தி, நால்வர் குருபூசைகள், குருதேவர் அவர்கள் முதன்முதலாக திருக்கயிலையைத் தரிசித்ததன் நினைவாக ஒவ்வொரு ஆங்கிலத் திங்கள் 23-ம் நாளும் பத்தி சிரத்தையுடன் கொண்டாடப்படுகின்றன. திருநெறிய தமிழைக் கூட்டாக ஓதும் பயிற்சியும், புண்ணியமும் அன்பர்கள் பெறுகிறுர்கள். 'சைவத்தின்மேற் சமயம் வேறில்லை, அதிற்சார் சிவமாம் தெய்வத்தின்மேல் தெய்வம் இல்லை' என்ற உறுதிப்பாடு சாத்திர தோத்திர வழிபாட்டின் வழி ஊட்டப்படுகின்றது. ஸ்ரீ சித்தர் ஞானபாடசாலையில் ஞாயிற்றுக்கிழமைகளில் மெய்கண்ட சாத்திர வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் மேத்திங்களில் பத்து நாட்கள் சிவஞானவேள்வி நடத்தப்படுகின்றது. சிவநெறி விளக்கமான நூல்கள் சிவக்குடில் வாயிலாக வெளியிடப்படுகின்றன. அன்பர்கள் சுவாமிகளிடம் சமய, விசேட தீக்கை பெற்றும் ஆன்மார்த்த சிவபூசை ஏற்றும் சிவக் குடும்பத்தினராக சிவநெறியில் வாழ்ந்து வருகிறுர்கள்.

ஸ்ரீ சித்தர் ஞான பீடம் டிரஸ்ட் (பதிவு செய்யப்பட்டது) 'குருகுலம்' என்னும் தொடக்கப்பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளை நடத்தி வருகிறது. இதில் 400க்கும் மேற்பட்ட குழந்தைகள் பயின்று வருகின்றனர். இவர்களின் கல்வியோடு தனிப்பட்ட ஒழுக்கமும், பண்பாடும் பேணப்படுகின்றது. சமஸ்கிருத அறிவு பெற மாலை நேர வகுப்புகள் நடத்தப்படுகின்றன. விரைவில் மருத்துவமனையும், முதியோர் இல்லமும் அமைக்கப்பட உள்ளன.